ஸ்ரீ [illegible] நம:

T.8569

—:0:—

[illegible] பெரியாழ்வார் முதலானோர்

அருளிச்செய்த

முதலாயிரம் மூலமும்,

[illegible]

பெரியவாச்சான்பிள்ளை

அருளிச்செய்த

வியாக்கியானமும்,

வ. 40145
1988

ஸ்ரீரங்கம் கந்தாடை - திருவேங்கடாசார்யர்,

[illegible]

பரிசோதித்து,

[illegible]

சென்னபட்டணம்:

[illegible] மெமோரியல் அச்சுக்கூடத்தில்

[illegible]

1882.

Registered Copy-right.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பிள்ளைலோகஞ்சீயரருளிச்செய்த வ்யாக்யாநம்.

அ.—(இன்னமுதமூட்டுகேன்) இதில் - திவ்யதேசத்திலே வர்த்திக்கும் திர்யக்குக்கள்தான் திருநாமங்களைச் சொல்லவற்றாயிற்றேயிருப்பது. ஆகையால் "[illegible]" "ஶுகாநுஜிதப்ரம்ஹகோஷாம்" என்றும், "பூமருவிப்புள்ளினங்கள்புள்ளரையன் புகழ்குழறும்புனலரங்கமே" என்றும், "அறுகால்வரிவண்டுகளாயிரநாமஞ்சொல்லிச் சிறுகாலைப்பாடும்" என்றும், "எல்லியம்போதிருந்து சிறைவண்டெம்பெருமான் குணம்பாடி" என்றும்" "அள்ளியம்பொழில்வாயிருந்து வாழ்குயில்கள் அரியரியென்றவை யழைப்ப" என்றும், "செவ்வாய்க்கிளி நான்மறைபாடும்" என்றும் சொல்லுகையாலே - ராமபக்தரான குலசேகரர் ராமன்திருநாமத்தை அவற்றுக்குக் கற்பித்துக் கேட்குமாப்போலே குலசேகர பக்தரானவர்களும் அவர்திருநாமங்களை யவற்றின் வாயாலேகேட்க விச்சிக்கிறபடியைச் சொல்லுகிறதாகவுமாம். அன்றிக்கே, "ராமாயணமென்னும் பத்தி வெள்ளங்குடிகொண்ட கோயிலிராமாநுசன்" என்றும், "பொன்னரங்கமென்னில் மயலேபெருகுமிராமாநுசன்" என்றுமிறே ஸ்ரீராமாயணத்திலும் ஸ்ரீரங்கநாமத்திலும் எம்பெருமானார் மண்டியிருப்பது; ஸ்ரீகுலசேகரப்பெருமாளும், "எல்லையில் சீர்த்தயரதன்றன் மகனாய்த்தோன்றிற்றது முதலாத்தன்னுலகம் புக்கதீறா" என்றும், "எம்பெருமான்றன் சரிதை செவியால் கண்ணால் பருகுவோம் இன்னமுதமதியோமன்றே" என்றும், "[illegible]" "ரங்கயாத்ரா திநே திநே" என்றும், "அணியரங்கன்திருமுற்றம்" என்றும், "அரங்கனடியிணைத் தங்குசிந்தைத் தனிப்பெரும்பித்தனும்" என்றும் இரண்டையுமாதரித்துக்கொண்டிறே போருவது. ஆகையால், "கொல்லிகாவலன்சொல் பதிக்கும் கலைக்கவி பாடும் பெரியவர்பாதங்களே துதிக்கும் பரமனிராமாநுசன்" என்னும்படி ராஜாவான ஸ்ரீகுலசேகரப்பெருமாளிடத்திலே யதிராஜரான எம்பெருமானார் மண்டியிருப்பது. * அம்பத்தரபிமாநத்திலே யொதுங்கிப்போருகிற ஆழ்வான்போல்வாரை யாய்த்து "இன்னமுதமூட்டுகேன் இங்கேவாபைங்கிளியே" என்கிறாராகவுமாம். கிளியுங்கற்பித்ததே சொல்லும்; இவரும் * கற்பியாவைத்தமாற்றமிறே சொல்லுவது; மேல்சொல்லுமவரன்றே. சொன்னத்தைச் சொல்லுமவரிறே. ஆகையால், கூரத்தாழ்வான்போல்வாரைக்கொண்டு குலசேகராழ்வார் வைபவத்தைக் கூறுவிக்கிறார். "இன்னமுதமூட்டுகேன் - கூறு" என்கிறது.

இன்னமுதமூட்டுகேனிங்கேவாபைங்கிளியே
தென்னரங்கம்பாடவல்லசீர்ப்பெருமாள்
பொன்னின்சிலைசேர் நுதலியர்வேள்சேரலர்கோன்
எங்கள்குலசேகரனென்றேகூறு.

வ்யா.—(இன்னமுதமூட்டுகேன்) இன்னடிசிலொடுபாலமு தூட்டி யெடுத்த வென்கோலக்கிளியை என்னக்கடவதிறே. இங்கு "தேனும்பாலுமமுதுமாய திருமால் திருநாமத்தையிறே ஊட்டி வளர்த்தது; அதுதோன்ற ஆழ்வான் வலத்திருச்செவியிலே முன்பு ப்ரஸாதித்த த்வயத்தை மீளவும் ப்ரஸாதித்தருளிற்று. "இங்கே வா" என்று - திருநாமஞ்சொல் என்றதால் வடிவில் பிறந்த ஹர்ஷத்தைக் கண்டு வரவழைக்கிறது. (பைங்கிளியே) பசுத்துமாக தம்போலே யிருக்கிற மடக்கிளியே. இத்தால் - "என்னுருயிர்க்கா குத்தன் நின்செய்யவாயொக்கும் வாயன்கண்ணன் கைகாலினன் நின்பசுஞ்சாம நிறத்தனன்" என்னும்படியான ரூபஸாம்யத் தைச் சொல்லுகிறது. * ஸர்வம் ஸாம்யமுபைதி - பரமஸாம்யமுபைதி யிறே. எதுக்காக வென்னை யழைக்கிறதென்னில்; (தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் பொன்னின் சிலைசேர் நுதலியர் வேள் சேரலர்கோனெங்கள் குலசேகரனென்றே கூறு) என்கிறது. தென்னரங்கம்பாடவல்ல சீர்ப்பெருமாளாவது – "இருளிரிய" "தேட்டருந் திறல்தேன்" "மெய்யில்வாழ்க்கை" என்கிற மூன்று திருமொழி யிலும் பாடி, முடிவிலும் "யாவரும் வந்தடிவணங்க வரங்கநகர்த் துயின்றவனே" என்றும், மற்றும் திருமலை முதலாயிருக்கிற ஆராமங்களான திருப்பதிகளையும் "காகுத்தாகண்ணனே" என்றும் அர்ச்சாவதாரத்துக் கடியான அவதாரங்களையு மருளிச்செய்து தலைக்கட்டுகையாலும், அவர் தாம், * செருவிலேயரக்கர்கோனைச்செற்ற நஞ்சேவகனாராகையாலும், * வெண்ணெயுண்ட வாயனுகையாலும், எல்லாம் திருவரங்கத்திருப்பதி விஷயமாகலாமிறே. * பொன்னின் சிலைசேர் நுதலியர் வேளாகையாவது - ஸ்ப்ருஹணீயமானவில்லுக்கு ஸத்ருசமான புருவத்தை முகத்திலேசேர்ந் துடைய ஸ்த்ரீகளுக்கு ரஞ்சநீயரா யிருக்கிறவர். வேள் – காமன். "கந்தர்ப்ப இவ மூர்த்திமாந்" "கந்தர்ப்பஇவமூர்த்திமாந்" "காமர்மானேய்நோக்கியர்க்கு" என்னக்கடவதிறே. இத்தால் - ஜ்ஞாநத்துக்கு மேலான ஸ்வரூபகாந்தி யையுடையவர்களுக்கு தர்ஸநீயமாயிருக்குமவரென்றபடி. (சேரலர்கோன்) சேரவம்சத்திலவர்கட்கெல்லாம் ராஜாவென்கை. "ராஜாதிராஜஸ் ஸர்வேஷாம்" "ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம்" கோன-ராஜா. குடிக் குளிர்வாழுகவென்றபடி (எங்கள்குலசேகரன்) ப்ரபந்நகுலசேகர னென்கை. "இராமாநுச னெங்குலக்கொழுந்து" என்னுமாப்போலே. (குலசேகரனென்றே கூறு) * நான்வளர்த்த சிறுகிளிப்பைய

தலே, இன்குரல் நீயிமுற்றாதே, குலசேகரனென்றே கூறு, கூறின வாய்க்கு * அமுதமாய திருமால் திருநாமமான * இன்னமுதமூட்டு கேன்; ஆகையாலே குலசேகரனென்றே கூறு. "𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑍈𑌭𑌵𑌮𑍍" "வக்தவ்யம்ஆசார்யவைபவம்" என்னக்கடவதிறே.

அ.—(ஆரங்கெட) இதில்-அவர் ஸ்ரீவைஷ்ணவர்கள் திறத்தில் பக்ஷபதித் திருக்கிறபடியைச் சொல்லுகிறது.

> ஆரங்கெடப்பரனன்பர்கொள்ளாரென்றவர்களுக்கே
> வாரங்கொடுக்குடப்பாம்பிற்கையிட்டவன்மாற்றலரை
> வீரங்கெடுத்தசெங்கோற்கொல்லிகாவலன்வில்லவர்கோன்
> சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே.

வ்யா.—(ஆரங்கெடவென்றுதொடங்கி) ஸ்ரீவைஷ்ணவர்கள் திறத்தில் அவர்க்குண்டான ப்ராவண்யத்தைக் குலைக்கவேணுமென்று மந்த்ரிகள் அவர் திருவாரத்தை யெடுத்து மறையவைத்து அவர்கள்பேரிலே ஆரோபிக்க; அத்தைக்கேட்டு (பரனன்பர்கொள்ளாரென்று) பரவஸ்துவிலே பக்திபண்ணுமவர்கள் பரவஸ்துவைக் கொள்ளாரென்று ப்ரதிஜ்ஞைபண்ணி. பரனன்பரல்லாதவர்களிறே * பிறர் நன்பொருள் தன்னை நம்புவது. இப்படியாகையால் (அவர்களுக்கே வாரங்கொடு) அவ்வளவன்றிக்கே அவர்கள்விஷயத்திலே பக்ஷபதித்தது. "பாம்பார்வாய்கை நீட்டல்பார்த்தி" என்கிறபடியே பாம்புக்குடத்திலே அதின்படத்திலேபடக் கையிட்டு "அவர்கள் ஆபரணமெடார்கள்" என்று பணத்திலே கையிட்டவர். அப்படி செய்தவர்தான் அல்பரோவென்னில்; ஶத்ருக்களை நிரஸிக்கும் ஸார்வபௌமரென்கிறது (மாற்றலரைவீரங்கெடுத்த) என்று. ஶத்ருக்களை வீர்யத்தை நிர்வீர்யமாகப் பண்ணினவிது எத்தாலேயென்னில்; செங்கோல் - ஆஜ்ஞையாலே. "இருளார்வினை கெடச்செங்கோல் நடாவுதிர்." (கொல்லிகாவலன்) "குருகைகாவலன்" என்னுமாப்போலே. "கொல்லி" என்கிற நகரத்துக்குநிர்வாஹகரென்கை. (வில்லவர்கோன்) அவாந்தரராஜர்களுக்கும் அதிராஜனென்கை. அன்றிக்கே, "வில்லவர்கோன்" என்று - வில்லவரென்றுபேர். "கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" என்றாரிறே. கோழி-உறையூர். உறையூருக்கும் இறையவரென்கிறது. அது சோழன் ராஜதானி. (சேரன்குலசேகரன்) சேரனுடைய குலத்துக்கு ஶேகரன். குலஶேகரர் - திருநாமம். இப்படி ராஜாதிராஜராகையாலே (முடிவேந்தர்ஶிகாமணி) என்கிறது. முடிவேந்தர் ஶிகாமணியாவது - * மணிமகுடந்தாழத் துளங்கு நீண்முடியரசர், அடியிலே வணங்குகையாலே. "மாலடிமுடிமேல் கோலமாங்குலசேகரன்" என்று தமக்கிருக்குமாப்போலே தாமும் அவர்களுக்கு ஶிகாமணிபோ

லே ஶேகரிக்குமவராய் அலங்காராவஹராயிருக்கை. "பெருமணி வானவ ருச்சிவைத்த" "ஆஸ்யாநாம் ச்ரேணிமௌளிஸ்பீதஶேகரம்" "ஈஶ்வராணாம்ஶ்ரீமத்கிரீடதடபீடிதபாதபீடம்" என்னக்கடவதிறே இவர் பெருமாளை. குலஶேகரப்பெருமாளான விவர்பெருமையும் அப்படியே. இப்படி முடிவேந்தர் சிகாமணியான இவரும் ஒருவரோ யென்னுதல்; இப்படி பெரியவேண்டப்பாட்டை யுடையவரோ குடப்பாம்பில் கையிடுவதே! என்று ஈடுபாடாதல். இத்தால் – அரங்கன் மெய்யடியார்கள் தம் எல்லையி லடிமைத்திறத்தினி லென்று மேவு மநத்தனும்" என்றத்தை அநுஷ்டாந பர்யவஸாயியாம்படி அநுஷ்டித்த ப்ரகாரத்தைச் சொல்லித்தாய்த்து.

குலஶேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

பிள்ளைலோகம்ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநாவதாரிகை.

அ.—ஸ்ரீய:பதியாய் ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் உபயவிபூதியுக்தனாய் ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேஶ்வரன் அடியாகப் பெருமாள் பெற்றது பக்திரூபாபந்நஜ்ஞாநமாகையாலே க்ரமத்தாலே காண்கிறோமென்று ஆறியிருக்கலாவது தந்தலையாலே வந்ததாகிலிறே; அவன்றானே காட்டக்காண்கிறவராகையாலே அப்போதே காணவேண்டும்படி விடாய் பிறந்தது. பரமபதத்திலும் அநுபவிப்பது குணாநுபவமாகையாலே அந்த ஶீலாதிகுணங்கள் பூர்ணமான கோயிலிலே யநுபவிக்க ப்ரார்த்திக்கிறார். இங்கநுபவிக்கக் குறையென்? ப்ரார்த்தனை யென்னென்னில்; ஸ்வாதந்த்ர்யம் பிறப்பேயுடைய ராகையாலே, மநுஷ்யர் விரோதிப்பார்பலருமுண்டாகையாலே, இங்குவந்தநுபவிக்கமாட்டாதே "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ" என்றும், "அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை" என்றும்-நம்மாழ்வார் ப்ரார்த்தித்துப் பெற்றபேற்றை இங்கே யநுபவிக்க வாசைப்படுகிறார். ... ...

வ்யா.—முதற்பாட்டு.(இருளிரியவித்யாதி) பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியேயிறே முமுக்ஷு-மநோரதிப்பது; அத்தையிங்கே திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்துகிடக்கிறவிடத்திலே யநுபவிக்க மநோரதிக்கிறார். ஸம்ஸாரிமுக்தனாய்ச்சென்றால் "పాదేనాధ్యారోహతి" "பாதேநாத்யாரோஹதி" இத்யாதிப்படியே – எழுந்தருளியிருக்கிற பர்யங்கத்திலே மிதித்தேறினால் "நீயார்" என்றால், "நான் ராஜபுத்ரன்" என்பாரைப்போலே, "అహం బ్రహ్మాస్మి" "அஹம்ப்ர்ம்ஹாஸ்மி" என்றிறே இவன்சொல்லுவது.

இருளிரியச்சுடர்மணிகளிமைக்குநெற்றியினத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த, அரவரசப்பெருஞ்சோதி யநந்தனென்னுமணிவிளங்குமுயர்வெள்ளையணையைமேவித், திருவரங்கப்பெருநகருட்டெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும், கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டென் கண்ணிணைகளென்றுகொலோகளிக்குநாளே. .... (க)

ப-ரை. திருவரங்கப்பெருநகருள் - திருவரங்கமாகிற மஹாநகரத்திலே, இருள் இரிய - இருள் சிதறிப்போம்படியான, சுடர் - ஜ்யோதிஸ்ஸையுடைத்தான, மணிகள் மாணிக்கங்கள், இமைக்கும் - விளங்காநின்றுள்ள, நெற்றி-

நெற்றியையும், இனத்துத்தி - இரண்டாய்ச்சேர்ந்த திருவடிநிலையென்று சொல்லுகிறவற்றை, அணி - உடைத்தான, பணங்களாயிரம் - ஆயிரம்பணங்களையும், ஆர்ந்த - பூர்ணமாகவுடையனாய், அரவரசன் - நாகராஜாவென்னும், பெருஞ்சோதி - மஹாதேஜஸ்ஸையுடையனாய், அநந்தனென்னும் - திருவநந்தாழ்வானாகிற, அணிவிளங்கும்-அழகுமிக்கு, உயர் - ஓக்கத்தையுடைத்தாய், வெள்ளை - வெளுத்த, அணையை திருப்படுக்கையை, மேவி - பொருந்தி, தெள்-தெளிந்த, நீர் - நீரையுடைத்தான, பொன்னி - காவேரியானது, திரை - அலைகளாகிற, கையால் - கைகளாலே, அடி-திருவடிகளை, வருட - தடவ, பள்ளிகொள்ளும் - கண்வளர்ந்தருளுகிற, கருமணியை - நீலரத்நம்போன்றவனாய், கோமளத்தை - ம்ருதுஸ்வபாவனானவனை, என் கண்ணிணைகள் - என்னுடையகண்களானவை, கண்டுகொண்டு - இடைவிடாமல் ஸேவித்து, களிக்குநாள் - ஆநந்திக்குங்காலம், என்றுகொலோ - என்றோவென்கிறார்.

வ்யா.—(இருளிரியச் சுடர்மணிகளிமைக்கும் நெற்றி) இருள் சிதறிப்போம்படி ஜ்யோதிஸ்ஸையுடைய மணிகள் விளங்குகிறநெற்றியையும். (இனத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த)இனமானதுத்தி; அதாவது - இரண்டாய்ச்சேர்ந்த திருவடி நிலையென்று சொல்லுகிறவற்றையுடைத்தான பணங்களாயிரத்தையும் பூர்ணமாகவுடையனாய். (அரவரசப்பெருஞ்சோதி) நாகராஜாவென்னும் மஹாதேஜஸ்ஸையுடையவனாய். (அநந்தனென்னும்) எல்லாவற்றையும் வ்யாபித்து நிற்கிற ஸர்வேச்வரனை விளாக்குலை கொள்ளுகிற ஸ்வரூப குணங்களை யுடையனாகையாலே அநந்தனென்று சொல்லப்படுகிற. (என்னும்) ஸுமுகந், வாஸுகி, தக்ஷகன்என்று மூண்டிறே; அவர்களிற் காட்டில் பகவத் ப்ரத்யாஸத்தியை யுடையனென்னும் ப்ரஸித்தியையுடையவன். (அணிவிளங்குமுயர் வெள்ளையணையைமேவி) அழகுமிக்கு ஓக்கத்தையுடைத்தாய் மறுவற்ற வெள்ளைப்படுக்கையாகிற திருவநந்தாழ்வானைமேவி. (திருவரங்கப்பெருநகருள்) "वैकुण्ठे तु परे लोके" "வைகுண்டேது பரேலோகே" என்று சொல்லுமது அங்கேகாணும்; இவர்க்குத் திருவரங்கமாகிற மஹா நகரத்திலே. (தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையா லடிவருட) தெளிந்த நீரையுடைய காவேரி, திரையாகிறகைகளாலே திருவடிகளைவருட. (பள்ளிகொள்ளும் கருமணியை) திருவநந்தாழ்வான்மேலே ஒரு நீலரத்நம் சாய்ந்தாப்போலே கண்வளர்ந்தருளுகிறவனை. (கோமளத்தை) கண்ணாரத்து கைக்கவொண்ணாத ஸௌகுமார்யமுடையவனை. (கண்டுகொண்டு) களியர், "சோற்றைக் கண்டுகொண்டு" என்னுமாப்போலே. (என் கண்ணிணைகள்) பட்டினிவிட்ட வென்கண்கள். (என்றுகொலோகளிக்கும் நாளே) அங்கேகண்டு. "अहमन्नमहमन्नमहमन्नम्" "அஹமந்நமஹமந்நமஹமந்நம்" என்று களிக்கும் களிப்பை இங்கேகண்டு களிப்பதென்றோ. ... ... (க)

வாயோரீரைஞ்ஞூறுதுதங்களார்ந்தவளையுடம்பிலழல்நாகமுமிழ்ந்தசெந்தீ, வீயாதமலர்ச்சென்னிவிதாநமேபோல்மேன்மேலும்மிகவெங்கும்பரந்ததன்கீழ்க், காயாம்பூமலர்ப்பிறங்கலன்னமாலைக்கடியரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும், மாயோனைமணத்தூணேபற்றிநின்றென்வாயாரவென்றுகொலோவாழ்த்துநாளே. ... ... (உ)

ப-ரை.—துதங்கள்-ஸ்தோத்ரம்பண்ணுகைக்கிடாக, ஆர்ந்த-பொருந்தின, ஓர் ஈராயிரவாய் - ஆயிரம்வாயையும், வளை - வெளுத்த, உடம்பில் - திருமேனியையும், சர்ருக்கள் அணுகவொண்ணாதபடி, அழல் - அழலாநின்றுள்ள, நாகம் - திருவநந்தாழ்வான், உமிழ்ந்த - வாயால் இடைவிடாதே உமிழுகிற; எங்கும் - மேற்பக்கமெங்கும், மேன்மேலும் மிகப்பரந்த-மிகவும் அதிகமாகப் பரந்த, விதானமேபோல் - மேற்கட்டியையொத்த, செந்தீக்கீழ் - அக்நிஜ்வாலைகளின் ஜ்யோதிஸ்ஸின்கீழ், மலர்வீயாத - பூமாறாத, சென்னி - திருமுடியையுடையனுமாய், காயா - காயாவின், பூ - அழகிய - மலர் - மலர்களாலாகிய, பிறங்கல் - மாலைபோலேயிருக்கிற, மாலை - ஸர்வேச்வரனாய், கடி - அரணாகப்போரும் மதிளையுடைய, அரங்கத்து - கோயிலிலே, அரவணையில் - திருவநந்தாழ்வானாகிற பங்க்கையிலே, பள்ளிகொள்ளும் - கண்வளர்ந்தருளுகிற, மாயோனை - ஆச்சர்யபூதனை, மணத்தூணே பற்றிநின்று - ஆமோதஸ்தம்பத்வயங்களைப் பற்றி நின்று, என் - என்னுடைய, வாயார—, வாழ்த்தும்நாள்-ஸ்தோத்ரம்பண்ணுங்காலம், என்றுகொலோ - என்றோ.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வாயோரீரைஞ்ஞூறு துதங்களார்ந்த) யசோதைப்பிராட்டி க்ர்ஷ்ணஸ்பர்சத்தால்வந்த ஸுகத்துக்குப் போக்குவிட்டேத்துமாப்போலே பகவதநுபவஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே வந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டேத்துகைக்காக ஆயிரம் வாயையும்; துதங்களாவது - ஸ்தோத்ராதிகளைப் புறப்படவிடுகை. ஸ்துதமிறே. (வளையுடம்பிலழல்நாகம்) வெளுத்த நிறத்தையுடையனுமாய், ப்ரதி பக்ஷத்துக்கு வந்தணுகவொண்ணாதபடி அநபிபவநீயனாயிருக்கிற திருவநந்தாழ்வான். (உமிழ்ந்தசெந்தீ வீயாதமலர்ச்சென்னி விதாநமேபோல் மேன்மேலும் மிகவெங்கும் பரந்ததன்கீழ்) அவன்வாயாலே யிடைவிடாதே யுமிழ்கிற அக்நிஜ்வாலைகளின் ஜ்யோதிஸ்ஸாகிற மேற்கட்டியின் கீழே, வீயாதமலர்ச்சென்னி-பூமாறாத திருமுடியை யுடையனுமாய். (காயாம்பூமலர்ப் பிறங்கலன்னமாலை)காயாவின்அழகியபூவாலேசெய்யப்பட்டமாலைபோலேயிருக்கிற ஸர்வேச்வரனை. (கடியரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்)அரணாகப்போரும்மதிளையுடையகோயிலிலேஅப்படிபரிவனான திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந் தருளுகிற. (மாயோனை) "ஸமயாபோதிதஶ்ஶ்ரீமாந்" "ஸமயாபோதிதஸ் ஸ்ரீமாந்" என்னும்படி கண்வளர்ந்தருளுகிற ஆச்சர்யபூதனை. (மணத்தூணேபற்றிநின்று) ஆமோத ஸ்தம்பத்வயங்களைப்பற்றி நின்று. அழகிலே அகப்பட்ட ஹர்ஷத்தாலேதன்னுண்ணாமே இரண்டு ஸ்தம்பங்களைப்பற்றிநின்று.

(வாயார என்றுகொலோ வாழ்த்துநாளே) கண்டால் சொல்வது வேறொரு ப்ரயோஜநமில்லையிறே; "பல்லாண்டு பல்லாண்டு" என்னுமித்தனையிறே. ... ... (௨)

எம்மாண்பிலயனான்குநாவினாலுமெடுத்தேத்தியீரிரண்டுமுகமுங்கொண்டு, எம்மாடுமெழிற்கண்களெட்டினோடுந் தொழுதேத்தியினிதிறைஞ்சநின்றசெம்பொன், அம்மான்றன்மலர்க்கமலக்கொப்பூழ்தோன்றவணியரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும், அம்மான்றனடியிணைக்கீழலர்களிட்டங் கடியவரோடென்றுகொலோ வணுகுநாளே. ... ... (௩)

ப-ரை.—எம்மாண்பில்-எப்படிப்பட்ட மாட்சிமையையுடைய, அயன்-ப்ரஹ்மாவானவன், நான்குநாவினாலும் - ஸ்தோத்ராதிகளுக்கு பரிகரமான நாலு நாக்காலும், எடுத்து - தன்ஸ்வரத்தைக்குத்தக்கபடி யெடுத்து, ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, ஈரிரண்டுமுகமுங்கொண்டு-நாலுவேதத்துக்குஞ்சமைந்த நான்கு முகங்களைக்கொண்டு, எம்மாடும் - நாற்புறத்திலும், எழில் - அழகிய, கண்களெட்டினோடும் - எட்டுக்கண்களோடே, தொழுது - அஞ்சலிபத்தனாய்க்கொண்டு, ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, இனிது-ஸாஷ்டாங்கமாக, இறைஞ்சநின்ற-ஸேவிக்கும்படி நின்றவனாய், செம்பொன் - ஸ்ப்ருஹணீயனாய், அம்மான்றன்-இவ்வருக்குண்டான கார்யவர்க்கத்துக்கெல்லாம் காரணபூதனானவனுடையதாய், கமலமலர் - தாமரைப்பூவையுடைய, கொப்பூழ்தோன்ற-திருநாபிதோன்றும்படி, அணி - ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான, அரங்கத்து - கோயிலிலே, அரவணையில் - திருவநந்தாழ்வான்மேலே, பள்ளிகொள்ளும் - கண்வளர்ந்தருளுகிற, அம்மான்றன் - ஸர்வேச்வரனுடைய, அடியிணைக்கீழ் - திருவடிகளின்கீழ், அலர்களிட்டு - புஷ்பம்முதலியவைகளைப் பணிமாறி, அங்கு - அங்கே, அடியவரோடு - அந்தரங்கவ்ருத்திபண்ணுமவர்களோடே, அணுகும்நாள் - கிட்டுங்காலம், என்றுகொலோ - என்றோ.

வ்யா.—மூன்றாம்பாட்டு. (எம்மாண்பிலயன்) எப்படிப்பட்ட மாட்சிமையுடைய ப்ரஹ்மா. அதாவது - ஸ்தோத்ராதிகளைப்பண்ணுந் தன்மை குறைவற்றிருக்கை. (நான்குநாவினாலும்) ஸ்தோத்ராதிகளுக்கு பரிகரமான நாலுநாக்காலும். (எடுத்தேத்தி) தன் ஸ்வரத்தைக்குத் தக்கபடி எடுத்தேத்தி. (ஈரிரண்டு முகமுங்கொண்டு) நாலுவேதத்துக்குச் சமைந்த நாலுமுகமுங்கொண்டு. (எம்மாடும்) பின்னும் முன்னும் மட்டங்களாகிற பர்யந்தங்களெங்கும். (எழில் கண்களெட்டினோடும்) அழகை யநுபவிக்கைக்குப் பல கண்படைத்த ப்ரயோஜநம்பெற்றான். (தொழுதேத்தி யினி திறைஞ்சநின்ற) ப்ரீதி ப்ரேரிதனாய்க் கொண்டுதொழுது ஸ்தோத்ராதிகளைப் பண்ணுவது தண்டனிடுவ தாம்படிநின்ற. (செம்பொனம்மான்றன் மலர்க் கமலக் கொப்பூழ்தோன்ற) ஸ்ப்ருஹணீயமாய் இவ்வருக்குண்டான கார்யவர்க்கத்துக்கெல்லாம் காரணமென்னும் மஹத்வம் தோற்றும்படியாயிருக்கிற தாமரைப் பூவையுடைய தன் திருநாபிதோன்ற.

(அணியரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளுமம்மான்றன்) ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான கோயிலிலே திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய. (அடியிணைக்கீழலர்களிட்டு) அவன்திருவடிகளின்கீழே புஷ்பாத்யுபகரணங்களைப் பணிமாறி. (அங்கடியவரோடென்றுகொலோ வணுகுநாளே) அங்கு அந்தரங்க வ்ருத்திசெய்யுமவர்களோடே ஸஜாதீயனானநானும் கிட்டுவதென்றோ. "அடியார்கள் குழாங்கள்" இத்யாதி. ... (ங)

மாவினைவாய்பிளந்துகந்தமாலை வேலைவண்ணனை யென்கண்ணனைவன்குன்றமேந்தி, ஆவினையன்றுய்யக்கொண்டவாயரேற்றையமரர்கடந்தலைவனையந்தமிழின்பப், பாவினையவ்வடமொழியைப்பற்றற்றார்கள் பயிலரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும், கோவினைநாவுறவழுத்தியென்றன்கைகள் கொய்மலர்தூயென்றுகொலோகூப்பு நாளே. ... ... (ச)

ப-ரை.—மாவினை-கேசியெனுமஸுரனுடைய, வாய்-வாயை, பிளந்து-பிளந்துபோகட்டு, உகந்த-ஆச்ரிதவிரோதிபோகப் பெற்றோமென்றுஉகந்த, மாலை-ஆச்ரித வ்யாமுக்தனாய், வேலைவண்ணனை-கடலோடொத்த திருநிறத்தையுடையனாய், என்கண்ணனை - எனக்குபவ்யனான க்ருஷ்ணனாய், அன்று - இந்த்ரன் கல்மழை பெய்வித்த அக்காலத்திலே, வன் - பலிஷ்டமாயிருப்பதொரு, குன்றம்-கோவர்த்தநபர்வதத்தை, ஏந்தி - கையால்தாங்கி, ஆவினை - பசுக்களை, உய்யக்கொண்ட - ரக்ஷித்தவராய், ஆயர் ஏற்றை - * தன்னேராயிரம் பிள்ளைகளிற்காட்டில் மேனாணித்திருக்குமவராய், அமரர்தம் - நித்யஸூரிகளிற்காட்டில், தலைவனை - ப்ரதாநரானவராய், அம் - அழகிய, தமிழ் - தமிழாலாகிய, இன்பப்பாவினை - பாட்டுப்போலே யினியராய், அவ்வடமொழியை - ஸ்ரீமந்நாராயணம்போலே இனியவராய், பற்றற்றார்கள் - தன்னையே பற்றிப் புறம்புள்ளவற்றை விட்ட அநந்யப்ரயோஜநர்கள், பயில் - நித்யவாஸம்பண்ணுகிற, அரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்—, கோவினை - நாதனை, நாவுற - நாத்தழும்பேறும்படி, வழுத்தி - ஸ்தோத்ரங்களைப்பண்ணி, என்றன்கைகள்-என்னுடைய கைகளானவை, கொய் - காலத்தில் பறிக்கப்பட்ட, மலர்-புஷ்பங்களை, தூய்-பணிமாறி, கூப்பும்நாள் - அஞ்சலிபண்ணும்காலம், என்றுகொல் - என்றோ.

வ்யா.—நாலாம்பாட்டு. (மாவினை வாய்பிளந்து கந்தமாலை) கேஶியை அநாயாஸேநப்பிளந்து, "ஆஶ்ரிதவிரோதி போகப்பெற்றோம்" என்று உகந்த ஆஶ்ரித வ்யாமுக்தனை. (வேலைவண்ணனை) ஆஶ்ரித விரோதிகளை வளர்த்தாலும் விடவொண்ணாத வடிவழகையுடையவனை. (என் கண்ணனை) வெறும் வடிவழகே யன்றியே எனக்கு பவ்யனானவனை. (வன்குன்றமேந்தி யாவினையன்றுய்யக்கொண்டவாயரேற்றை) இந்த்ரன் வர்ஷிக்கிற கல்வர்ஷத்திலே வர்ஷிக்கிற கல்வர்ஷத்துக்குச் சலியாத மலையை யென்னுதல்; ஶ்ரமஹரமான குன்றமென்னுதல். (ஆவினையன்றுய்யக்கொண்ட) உபகாரஸ்ம்ருதியுமில்லாத பசுக்களை ரக்ஷித்த. (ஆயரேற்றை) தன்பருவத்தில் பிள்ளை

களைக்காட்டில் தான்மேனுணிப்புடையவனை. (அமரர்தந்தலைவனை) தன்னோடு ஸாம்யாபத்தி பெற்றிருக்கிற நித்ய ஸூரிகளைக் காட்டில் தலைவனானவனை. (அந்தமிழின்பப்பாவினை) * இருளிரியச்சுடர்மணி களிமைக்கும் நெற்றிபோலே இனியவனை. (அவ்வடமொழியை) ஸ்ரீமந்நாராயணம்போலே இனி யவனை. (பற்றற்றார்கள் பயிலரங்க த்தரவணையில் பள்ளிகொள்ளுங்கோவினை) தன்னையேபற்றிப் புறம் புள்ளவற்றைவிட்ட அநந்ய ப்ரயோஜநர் நித்யவாஸம் பண்ணுகிற கோயிலிலே திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந் தருளுகிறநாத னை. (நாவுறவழுத்தி) நாத்தழும்பேறும்படி ஸ்தோத்ரங்களைப்பண் ணி. (என்றன் கைகள் கொய்மலர் தூயென்று கொலோ கூப்புநா ளே) கைதழும் பேறும்படி புஷ்பாத் யுபகரணங்களைப் பணிமாறி அஞ்சலி பண்ணப் பெறுவதென்றோ. ... ... (௪)

இணையில்லாவின்னிசை யாழ்கெழுமி யின்பத்தும்புருவுநாரத னுமிறைஞ்சியேத்தத், துணையில்லாத்தொன்மறைநூற்றோத்திரத் தாற்றொன்மலர்க்கணயன்வணங்கியோவாதேத்த, மணிமாடமாளி கைகள் மல்கு செல்வமதி ளரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும், மணிவண்ண னம்மானைக்கண்டுகொண்டென்மலர்ச்சென்னியென்று கொலோவணங்குநாளே. ... ... (௫)

ப-ரை.—இன்பம்-பாட்டால்வந்த ஆநந்தத்தையுடைய, தும்புருநாரதன்-தும்புருநாரதனென்பவர்கள், இணையில்லா - உபமாநரஹிதமான, இன்-இனிய, இசை-இசையையுடைய, யாழ்-வீணையை, கெழுமி-மீட்டி, இறைஞ்சி - திருவடி களிலேவிழுந்து, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ண, துணையில்லா - ஒப்பில்லாததாய், தொல் - பழையதான, மறைநூல் - வேதசாஸ்த்ரமாகிற, தோத்திரத்தால்-ஸ்தோத்ரத்தாலே, தொல் - அநாதிஸித்தமான, மலர்க்கண் - திருநாபீகமலத் திலிடத்திலிருக்கிற, அயன் - ப்ரஹ்மாவானவன், வணங்கி - திருவடிகளிலே ப்ரணாமம்பண்ணி, ஓவாது - இடைவிடாதே, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ணும்படி, மணி - ரத்நமயமான, மாடம் மாளிகைகள் - மாடமாளிகைகளையும், மல்குசெ ல்வம் - மிக்க ஐச்வர்யத்தையு முடைத்தாய், மதிளரங்கத்தரவணையிற் பள்ளி கொள்ளும்—, மணி - அழகிய, வண்ணன் - வடிவையுடையனான, அம்மானை-ஸர்வேச்வரனை, கண்டுகொண்டு-இடைவிடாமல் ஸேவித்து, என்-என்னுடைய, மலர் பூச்சூடின, சென்னி - தலை, வணங்கும்நாள்-அவன்திருவடிகளிலே வணங்கும்காலம், என்றுகொலோ—.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (இணையில்லா வின்னிசை யாழ்கெழு மி) உபமாநரஹிதமான இனிய இசையையுடைய யாழைநெருங்கி. (இன்பத்தும் புருவும் நாரதனு மிறைஞ்சியேத்த) பாட்டால் வந்த ஆநந்தத்தையுடைய தும்புருவும் நாரதனும் திருவடிகளிலே விழு ந்து ஸ்தோத்ரங்களைப்பண்ண. (துணையில்லாத் தொன்மறைநூல் தோத்திரத்தால்) ஒப்பில்லாத பழைய வேதசாஸ்திரமாகிற ஸ்தோ த்ரத்தாலே. (தொன்மலர்க்க ணயன்வணங்கி யோவாதேத்த)

திருநாபிகமலத்தினிடத்திலேயிருக்கிற ப்ரஹ்மா, திருவடிகளிலேப்ர ணாமம்பண்ணி விடாதேஸ்தோத்ரம்பண்ணி. (மணிமாடமாளிகை கள் மல்குசெல்வம்) மணிமயமான மாடங்களையும் மிக்கஐஶ்வர்யத் தையுமுடைய. (மதிளரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்) மிக்க அரணான பெரிய மதிளையுடைய பெரியகோயிலிலே திருவநந் தாழ் வான் மேலே பள்ளி கொண்டருளும். (மணிவண்ண னம்மானை கண்டுகொண்டு) அழகிய வடிவையுடைய ஸர்வேஶ்வரனைக் கண்டு கொண்டு. (என் மலர்ச்சென்னி யென்றுகொலோ வணங்குநாளே) நான் பூமுடி சூடினதலை என்றோ அவன் திருவடிகளிலே வண ங்குவது. ... ... (ரு)

அளிமலர்மேலயனரனிந்திரனோடேனையமரர்கடங்குழுவுமரம் பையரும்மற்றும், தெளிமதிசேர்முனிவர்கடங்குழுவு முந்தித்திசை திசையின்மலர்தூவிச்சென்றுசேரும், களிமலர்சேர்பொழி லரங்கத் துரகமேறிக்கண் வளருங்கடல்வண்ணர்கமலக்கண்ணும், ஒளிமதிசே ர்திருமுகமுங்கண்டுகொண்டென் னுள்ளமிகவென்று கொலோவுரு குநாளே. ... ... (சு)

ப-ரை.—அளி-வண்டுகள் படிந்திருந்துள்ள, மலர்மேல் - திருநாபீசமலத் திலிருக்கிற, அயனோடு - ப்ரஹ்மாவும், அரனோடு - ருத்ரனும், இந்திரனோடு- இந்த்ரனும், ஏனை - மற்ற, அமரர்கள் தம்குழுவும் - தேவஸமூஹங்களும், அரம் பையரும் - ரம்பைமுதலான அப்ஸரஸ்ஸுக்களும், மற்றும் - இன்னும், நாரா யணனே ஸர்வஸ்மாத்பரனென்று, தெளிமதிசேர் - தெளிந்தஜ்ஞாநத்தை யுடையரான, முனிவர்கள் தம்குழுவும் - ஸநகாதிபரமரிஷிகளின் ஸமூஹமும், உந்தி - ஒருவர்க்கொருவர் நெருக்கித்தள்ளி, திசைதிசையில் - பார்த்த பார்த்த விடமெல்லாம், மலர்தூவி - புஷ்பவர்ஷடியைப் பண்ணிக்கொண்டு, சென்று சேரும் - சென்று கிட்டும், களி - தேன்மாறாத, மலர்சேர் - மலர்களையுடைத் தான, பொழில் - பொழிலையுடைய, அரங்கத்து - கோயிலிலே, உரகமேறி- திருவநந்தாழ்வான்மேலே யேறி, கண்வளரும்-பள்ளிகொண்டருளுகிற, கடல் வண்ணர் - நீர்வண்ணருடைய, கமலக்கண்ணும் - தாமரைமலர்போன்ற கண் களையும், ஒளி - புகரையுடைத்தான, மதிசேர்-சந்த்ரனையொத்த, திருமுகமும்- திருமுகத்தையும், கண்டுகொண்டு—, என் உள்ளம் - என்மநஸ்ஸானது, மிகவு ருகுவது - மிகவும் உருகிப்போருவது, என்றுகொலோ—.

வ்யா.—ஆறும்பாட்டு. (அளிமலர்மே லயனரா னிந்திரனோடு) வண்டுகள்படிந்த அரவிந்தத்தின் மேலே யிருக்கிற ப்ரஹ்மாவும், அவன் மகனான ருத்ரனும், அவர்களோடே ஸஹபடிக்கப்பட்ட இந்த்ரனும் இவர்களுடனே. (ஏனையமரர்கள்தங் குழுவும்) அவர் கள் மூவரையு மொழிந்த தேவர்கள் திரளும். (அரம்பையரும்) ரம்பை முதலான அப்ஸரஸ்ஸுக்களும். (மற்றுந் தெளிமதிசேர் முனிவர்கள்தங் குழுவும்) ப்ர்ம்ஹ பாவனையாய்ச் சொல்லும் ஸந காதிகள்திரளும். (உந்தி) ஒருவர்க்கொருவர்நெருக்கித்தள்ளி. (திசை

திசையில் மலர்தூவிச் சென்றுசேரும்) பார்த்தபார்த்த விடமெல்லாம் புஷ்ப வர்ஷத்தைப் பண்ணிக்கொண்டு சென்றுகிட்டும். (களிமலர் சேர்பொழி லரங்கத்துரகமேறி) மதுமலரை யுடைத்தான பொழிலையுடைய அரங்கத்திலே திருவநந்தாழ்வான் மேலேயேறி. (கண்வளருங் கடல்வண்ணர் கமலக்கண்ணும்) பள்ளிகொள்ளுகிற நீர்வண்ணர் கமலக்கண்ணும். (ஒளிமதிசேர்திருமுகமுங் கண்டுகொண்டு) குளிர்த்திமிக்குப் புகரையுடைய சந்த்ரனை யொப்புச்சொல்லலான அழகிய திருமுகத்தையுங் கண்டுகொண்டு. (என்றுள்ள மிக வென்றுகொலோ வுருகுநாளே) என்னெஞ்சு குளிர்ந்து உருகுவதென்றோ. ... ... (௬)

மறந்திகழுமனமொழித்துவஞ்சமாற்றி யைம்புலன்களடக்கியிடர்ப்பாரத்துன்பம், துறந்திருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்கணிலைநின்றதொண்டரான, அறந்திகழுமனத்தவர் தங்கதியைப்பொன்னியணி யரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும், நிறந்திகழுமாயோனைக்கண்டென் கண்கள்நீர்மல்கவென்றுகொலோ நிற்குநாளே. ... ... (௭)

ப-ரை.—மறம் - கொலை முதலியவற்றால், திகழும் - விளங்காநின்றுள்ள, மனம் - மனஸ்ஸை, ஒழித்து - வாஸனையோடேபோக்கி, வஞ்சம - பொய்யை, மாற்றி - போக்கி, ஐம்புலன்கள் - ஐம்புலன்களையும், அடக்கி - பட்டிபுகாமே கட்டி, இடர் - துக்கத்தை விளைப்பதான, பாரத்துன்பம் - * பாரமானபழவினையை, துறந்து - பற்றறுத்து, இருமுப்பொழுது - ஐந்துகாலங்களிலும், ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, எல்லையில்லாத் தொலநெறிக்கண் - மிகப் பழையமாயாதையிலே, நிலைநின்ற—, தொண்டரான - தாஸபூதராய், அறம்திகழும்-அருளாலே விளங்குகின்ற, மனத்தவர்தம் - மனஸ்ஸையுடையரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, கதியை - பரமப்ராப்யனானவனாய், பொன்னி - காவேரியால் சூழப்பட்டு, அணி - லீலாவிபூதிக்காபரணமான, அரங்கத்து - கோயிலிலே, அரவணையில் - திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே, பள்ளிகொள்ளும் - கண்வளர்ந்தருளுமவனாய், நிறந்திகழும் - அழகுவிளங்காநின்றுள்ள, மாயோனை - ஆச்சர்யபூதனானவனுடைய வடிவழகை, என் கண்கள்—, கண்டு - கண்டுகளித்து, நீர்மல்க - ஆநந்தாச்ருப்ரவஹிக்கும்படி, நிற்கும்நாள் - நிற்கும்காலம், என்றுகொலோ—.

வ்யா.—ஏழாம்பாட்டு. (மறந்திகழு மனமொழித்து) மறம்-கொலையும், சினமும், கொடுமையும். இவற்றால் விளங்காநின்ற மனஸ்ஸை வாஸனையோடே போக்கி. (வஞ்சமாற்றி) பொய்யைப்போக்கி. (ஐம்புலன்களடக்கி) * வன்புலச் சேக்கைளைப் பட்டிபுகாமே கட்டி. (இடர்ப்பாரத் துன்பந்துறந்து) மிக்க துக்கத்தை விளைப்பதான * பாரமாய பழவினையைப் பற்றறுத்து. (இருமுப்பொழுதேத்தி) பஞ்சகாலமென்னுதல்; பெரியமுப்பொழுதென்னுதல். இக்காலங்களிலேயேத்தி. (எல்லையில்லாத் தொன்னெறிக் கண்நிலை நின்ற

தொண்டரான) அளவிறந்த பழையமர்யாதையிலேசிலவரால் கலக்கவொண்ணாதபடி நிலைநின்ற வைஷ்ணவர்களான. (அறந்திகழும் மநத்தவர்தங்கதியை) ஆந்ர்ஸம்ஸ்ய ப்ரதாநராயிருக்கு மவர்களுக்கு பரமப்ராப்யனானவனை. (பொன்னி யணியரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்) * பொன்னி சூழரங்கத்திலே திருவநந் தாழ்வானாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளும். (அணி அரங்கம்) லீலாவிபூதிக்கு ஆபரணமான கோயில். (நிறந்திகழுமாயோனைக் கண்டு) அழகுவிளங்காநின்ற ஆஸ்சர்ய பூதனைக்கண்டு. (என்கண்கள் நீர்மல்கவென்று கொலோநிற்குநாளே) அவனுடைய வடிவழகைக்கண்டு களித்து ஆநந்தாஸ்ரு ப்ரவஹிக்கநிற்கும் நாள் என்றோ. ... ... (எ)

கோலார்ந்தநெடுஞ்சார்ங்கங்கூனற்சங்கங்கொலையாழி கொடுந்தண்டு கொற்றவொள்வாள், காலார்ந்தகதிக்கருடனென்னும்வென்றிக்கடும்பறவையிவையனைத்தும்புறஞ்சூழ்காப்பச், சேலார்ந்தநெடுங்கழனிசோலைசூழ்ந்த திருவரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும், மாலோனைக்கண்டின்பக் கலவியெய்திவல்வினையேனென்றுகொலோ வாழுநாளே... ... ... (அ)

ப-ரை.—கோல் ஆர்ந்த - திருச்சரங்களோடுகூடி, நெடும் - பெரிதாயிருக்குள்ள, சார்ங்கம் - ஸ்ரீசார்ங்கமும், கூன் - பகவதநுபவத்தாலே வளைந்திருக்கிற, நல்-தன்னோசையாலே ஆச்ரிதவிரோதிகளைப்போக்கும்நன்மையையுடைத்தான, சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யமும், கொலை - சத்ருக்களைக் கொல்லுமவனான, ஆழி - திருவாழிபாழ்வானும், கொடும் - பார்க்கும்போதே பகைவர்மண்ணுண்ணும்படியிருக்கிற, தண்டு - ஸ்ரீகௌமோதகியென்னும் கதையும், கொற்றம்-ஜயத்தைத்தருமதாய், ஒள் - ப்ரகாசமிருநத, வாள் - ஸ்ரீநந்தகமென்னும் வாளும், கால் - காற்றின் வேகம்போலே, ஆர்ந்த-பொருந்தின, கடும்கதி-மிகவும் வேகமானசெலவுகைளை யுடைய, கருடனென்னும்-பெரிய திருவடியென்கிற பேரையுடையனாய், வென்றி - ஜயப்ரதனான, பறவை இவையனைத்தும் - பக்ஷிராஜனும்ஆகியஇவர்களெல்லாரும், புறம்சூழ் - நாற்புறமும் சூழ்ந்து, காப்ப - காத்துக்கொண்டிருக்க, சேல் - சேல் மத்ஸ்யங்களாலே, ஆர்ந்த-நிரம்பின, நெடும்-பெரிய, கழனி - கழனிகளும், சோலை - சோலைகளும், சூழ்ந்த-சூழ்ந்திருக்கிற, திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் மாலோனை—, வல்வினையேன் - மஹாபாபியானநான், கண்டு - கண்ணாரக்கண்டு, இன்பம் - நிரதிசய ஆநந்தயுக்தனாகும்படி, கலவியெய்தி-ஸம்ச்லேஷித்து, வாழும்நாள்-அநுபவித்து வாழப்பெறுங்காலம், என்றுகொலோ—.

வ்யா.—எட்டாம்பாட்டு. (கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம்) திருச்சரங்களோடேகூடின ஸ்ரீஸார்ங்கம். "எப்போதுங்கைகழியான்" என்னுமாப்போலே எப்போது இவனையுண்டாமென்றறி யாமையாலே திருச்சரங்களைத்தொடுத்தபடியே யாய்த்து ஸ்ரீஸார்ங்கமிருப்பது.(கூன்நல்சங்கம்) பகவதநுபவஜநிதத்தால்வந்த செருக்காலே

கூனியா யாய்த்து ஸ்ரீபாஞ்சஜந்ய மிருப்பது. (கொலையாழி) இவர்களநுபவத்தில் இழியப்போதின்றியே ப்ரதிபக்ஷத்தை இரு துண்டமாகவிடுகைபணிப்போருமாய்த்து திருவாழியாழ்வானுக்கு. (கொடுந்தண்டு) பிடித்தபிடியிலே உகவாதார் மண்ணுண்ணும்படி யாயிருக்கிறகதை. (கொற்றவொள்வாள்) ஐஶ்வர்ய ப்ரகாஶகமான திருக்கொற்றவாள். கொற்றம் - வெற்றி. (காலார்ந்த கதிக்கருடனென்னும் வென்றிக்கடும் பறவை) காற்றினுடைய மிக்கவேகம் போலே யிருக்கிற கதியை யுடையனாய் பெரியதிருவடி யென்கிற பேரையுமுடையனா யிருக்கிற பறவை. (இவையனைத்தும் புறஞ்சூழ்காப்ப) "ராமலக்ஷ்மணகுப்தா" "ராமலக்ஷ்மண குப்தாஸா" என்னுமாப்போலே கடற்கரைவெளியில் ஸ்ரீஸேனையெல்லாம் குழைச்சரக்காய், தாமும் தம்பியாருங் காக்குமாப்போலே பெரிய பெருமாள் கண்வளர்ந் தருளுகையாலே பெரியதிருவடி முதலாகஸ்ரீபஞ்சாயு தாழ்வார்கள் சுற்றுங் காத்துக் கொண்டாய்த்து நிற்பது. (சேலார்ந்த நெடுங்கழனிசோலை சூழ்ந்த திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் மாலோனை) சேலாலே நிரம்பின கழனிகளும் சோலைகளும் சூழ்ந்தகோயிலிலே திருவநந்தாழ்வான் மேலேகண்வளர்ந் தருளுகிற ஸர்வாதிகனை. (கண்டின்பக் கலவியெய்தி) கண்டு நிரதிஶயாநந்த யுக்தனாம்படி ஸம்ஶ்லேஷித்து.(வல்வினையேனென்றுகொலோவாழுநாளே) லோகாந்தரத்திலே போய்க்காணவேண்டும்வஸ்து இங்கேஸந்நிஹிதமாயிருக்கச்செய்தே அநுபவிக்கவொண்ணாத மஹாபாபத்தைப்பண்ணின நான் அநுபவித்துவாழப்பெறுவதென்றோ. பகவதநுபவத்துக்கு விரோதியாயுள்ளவையெல்லாம் பாபமாயிருக்குமிறே. ... ... (அ)

தூராதமநக்காதற்றொண்டர் தங்கள்குழாங் குழுமித்திருப்புகழ்கள்பலவும்பாடி, ஆராதமநக்களிப்போடழுதகண்ணீர்மழைசோர நினைந்துருகியேத்திநாளும், சீரார்ந்தமுழுவோசைபரவைகாட்டுந் திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும், போராழியம்மானைக்கண்டு துள்ளிப்பூதலத்திலென்றுகொலோ புரளுநாளே... ... (கூ)

ப-ரை.—தூராத - ஒருக்காலும் ஆராதிருக்கிற, காதல் - ஆசையையுடைத்தான,மநம்-மநஸ்ஸை யுடையராய், தொண்டர்தங்கள் குழாம்-தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸமூஹத்திலே, குழுமி - கலந்து, திருப்புகழ்கள் பலவும்பாடி - அவனுடைய குணங்களுக்கு வாசகமான திருநாமங்கள் பலவற்றையும்பாடி, அத்தாலே, ஆராத - ஆராதிருக்கிற, மநக்களிப்போடு - மநக்களிப்பாலே, அழுத—, கண் கண்களினின்றும்,நீர் - ஆநந்தாச்ருக்கள், மழை-மழைபோலே, சோர-ப்ரவஹிக்க,நினைந்து-அவனைநினைத்து, உருகி-அத்தாலேயுருகி, ஏத்தி - ஸ்தோத்ராதிகளைப்பண்ணி, நாளும் - நாள்தோறும், சீர்ஆர்ந்த - ஐச்வர்ய ப்ரகாசகமான, முழவோசை - வாத்யகோஷங்கள், பரவை - ஸமுத்ர

கோஷத்தை, காட்டும்-காட்டாநிற்கிற, திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்—, போர் - யுத்தோந்முகமான, ஆழி - திருவாழியைக்கையிலேயுடைய, அம்மானைக்கண்டு - ஸர்வேச்வரனைக்கண்டு, துள்ளி - ஸஸம்ப்ரம ந்ருத்தம் பண்ணி, பூதலத்தில்-பூமியிலே, புரளும்நாள்-புரளுங்காலம், என்றுகொலோ—.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (தூராதமநக்காதல் தொண்டர்தங்கள்குழாங்குழும்) "தூராக்குழி தூர்த்தெனைநாளகன்றிருப்பன்" என்று - ஸம்ஸாரிகள் ஶப்தாதிவிஷயங்களிலே அநுபவித்தாலும் இந்த்ரியங்களை த்ருப்தியாக்கப் போகாதாப்போலே, பகவதநுபவம் ஒருக்காலும் ஆராதிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் குழாத்திலே யென்னையுங்கூடக் கலசி. (திருப்புகழ்கள் பலவும்பாடி) அவனுடைய கல்யாண குணங்களுக்கு வாசகமான திருநாமங்கள் பலவற்றையும் பாடி. (ஆராதமநக்களிப்போடழுதகண்ணீர்மழைசோர) திருநாமங்களைச் சொன்னபடியாலே மநஸ்ஸுக்கு ஆராமையாலே ஹ்ருஷ்டனாய் அத்தாலே ஆநந்தாஶ்ருப்ரவஹிக்க. (நினைந்துருகியேத்தி) இவர்கள் திரளிலே கூடி திருநாமத்தைச் சொன்னபடியாலே திருநாமத்வாராவிஷயத்தை நினைத்து அத்தாலேயுருகி, "உருகிவழிந்து புறப்பட்டசொல்" என்னும்படி ஸ்தோத்ராதிகளைப் பண்ணி. (நாளும் சீரார்ந்த விழ்யாதி) ஐஶ்வர்யப்ரகாஶகமான வாத்யகோஷங்கள் ஸமுத்ரகோஷத்தைக் காட்டாநிற்கிற கோயிலிலே திருவநந்தாழ்வான்மேலே நித்யவாஸம்பண்ணுகிற யுத்தோந்முகமான திருவாழியைக் கையிலேயுடைய ஸர்வேஶ்வரனை. (துள்ளி) ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணி. (பூதலத்திலென்றுகொலோ புரளுநாளே) ஸிம்ஹாஸநத்திலே இருமாந்திருக்கு மிருப்பொழிந்து ஹ்ருஷ்டனாய் பூமியிலே புரளுவதென்றுகொலோ. ... ... (கூ)

வன்பெருவானகமுய்ய வமருய்ய மண்ணுய்ய மண்ணுலகின் மனிசருய்யத், துன்பமிகுதுயரகலவயர்வொன்றில்லாச் சுகம்வளர வகமகிழுந்தொண்டர்வாழ, அன்பொடுதென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளுமணியரங்கன்திருமுற்றத்தடியார்தங்கள், இன்பமிகுபெருங்குழுவு கண்டியானு மிசைந்துடனே யென்றுகொலோ விருக்குநாளே. ... ... (கO)

ப-ரை.—வல்-நைமித்திகப்ரளயத்திலழியாததாய், பெரு - பெருமைதங்கிய, வானகம் - ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள், உய்ய - உய்யும்படியாகவும், அமரர் - தேவர்கள், உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாகவும், மண் - பூலோகம், உய்ய - உய்யவும், மண்ணுலகில் - பூலோகத்திலுண்டான, மனிசர் - மநுஷ்யர், உய்ய - உஜ்ஜீவிக்கவும், மிகுதுன்பம் - மிக்க து:கத்தைவிளைப்பதான, துயர் - பாபங்கள், அகல - நீங்கவும், அயர்வொன்றில்லா - து:கம் கலவாத, சுகம் - நித்யமான ஸுகமானது, வளர - வளரவும், அகம்மகிழும் - நிரதிசயாநந்தயுக்தரான, தொண்டர் - ஸ்ரீவைஷ்ணவர்கள், வாழ - வாழவும்,

அன்பொடு - ஸ்ரீவிபீஷணாழ்வான் பக்கலுண்டான அன்பாலே, தென்றிசை நோக்கி - "தென்றிசையிலங்கைநோக்கி" என்கிறபடியே - லங்கையைப்பார்த்தவண்ணமாக, பள்ளிகொள்ளும் - கண்வளர்ந்தருளுகிற, அணியரங்கன்-பெரியபெருமாளுடைய, திருமுற்றத்து - உள்ளில் திருமுற்றத்திலே, மிகுஇன்பம்-நிரதிசயாநந்தயுக்தரா யிருக்கிற, அடியார் தங்கள் பெருங்குழுவுகண்டு - ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பெரியதிரளைக்கண்டு, யானும் - நானும், இசைந்து-அவர்களிலே ஒருவனாகவிசைந்து, இருக்குமநாள் - இருக்குங்காலம், என்றுகொலோ—.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வன்பெருவானகமுய்யவமரருய்ய) நைமித்திகப்ரளயாபத்துக்கு இளையாத ப்ரஹ்மலோகம் முதலாக மேலுண்டான லோகங்களுய்ய, அங்குண்டான ப்ரஹ்மாதிகளுஜ்ஜீவிக்க வாய்த்து ப்ரஹ்மலோகத்தில் கோயிலாழ்வார் எழுந்தருளியிருந்தபடி. (மண்ணுய்ய மண்ணுலகில் மனிதருய்ய) ஸ்ரீவிபீஷணாழ்வானுக்காக அங்கு நின்றும் இங்கேற வெழுந்தருளுகையாலே பூமியும் பூமியிலுண்டான சேதநருமுஜ்ஜீவிக்க. (துன்பமிகுதுயரகல) நித்யதுக்கத்தை விளைப்பிப்பதான பாபங்கள் அகல. (அயர்வொன்றில்லாச்சுகம் வளர) துக்கம் விஸ்ரமியாத நித்யமானஸுகம்வளர. (அகமகிழுந்தொண்டர்வாழ) பகவதநுபவத்தாலே நிரதிசயாநந்தயுக்தரான ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழ. (அன்பொடு தென்றிசைநோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கன் திருமுற்றத்து) ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து அத்திக்கைப்பார்த்துக் கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுடைய உள்ளில் திருமுற்றத்திலே. (அடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழுவுகண்டு) நிரதிசயாநந்த யுக்தரா யிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளைக்கண்டு. (யானுமிசைந்து) "அபிஷிக்தக்ஷத்ரியன்" என்று என்னை நினையாதே அவர்களிலே யொருவனாக விசைந்து. (உடனே யென்றுகொலோ இருக்குநாளே) என்னைச் சிலர் ஸேவிக்க நான்நியாமகனாயிருக்குமிருப்பையொழிந்து ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலே ஸேவித்திருப்பதென்றோ. ... ... (க0)

திடர்விளங்குகரைப்பொன்னிநடுவுபாட்டுத் திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும், கடல்விளங்குகருமேனியம்மான்றன்னைக்கண்ணாரக்கண்டுகக்குங்காதல்தன்னால், குடைவிளங்கு விறற்றானைக்கொற்றவொள்வாள் கூடலர்கோன் கொடைக்குலசேகரன் சொற்செய்த, நடைவிளங்குதமிழ்மாலைபத்தும்வல்லார் நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. ... ... (கக)

ப-ரை.—விளங்கு - விளங்காநின்ற, திடர் - மேடான, கரை - திருக்கரையையுடைத்தான, பொன்னி - காவேரீசூழ்ந்த, நடுவுபாட்டு - மத்ய ப்ரதேசத்திலே, திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்—, கடல் - கடல்போலே, விளங்கு - ப்ரகாசிக்குமதாய், கரு - ச்யாமளமான, மேனி - திருமேனியையுடைய

யுடைய, அம்மான்றன்னை - ஸர்வேச்வரனை, கண் ஆர - கண்கள் நிறையும்படி, கண்டுக்கும் காதல் தன்னால் - கண்டநுபவிக்க வேணுமென்னு மாசையாலே, விளங்க - விளங்குகிற, குடை - வெண் கொற்றக்குடையையும், விறல்-வெற்றியையுடைய, தானை - ஸேனையையும், கொற்றம் - ஐச்வர்ய ப்ரதமான, ஒள்-ஒளி பொருந்திய, வாள் - வாளையுமுடையராய், கூடலர் - மதுரையிலுள்ளார்க்கு, கோன - நிர்வாஹகருமாய், கொடை - கொடையையு முடையானரான, குல சேகரன் - ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சொற்செய்த - அருளிச்செய்த தாய், நடைவிளங்க - நடையால்விளங்குகிற, தமிழ்மாலைபத்தும் வல்லார் - தமிழ்த் தொடையான இப்பத்துப்பாட்டையும் சொல்லவல்லவர்கள், நலம்திகழ்-சீலாதிகுணபூர்ணராய், நாரணனடிக்கீழ் - வத்ஸலராயிருக்கும் பெரியபெருமாள் திருவடிகளின்கீழ், நண்ணுவார்-கிட்டப்பெறுவர்கள்.

† அ.—திருநாமப்பாட்டு. "భూవో భూత్యై భూభుజాం భూసురాణాం దివ్యో గుప్త్యై శ్రేయసే దేవతానామ్ । శ్రియై రాజ్ఞాం చోళవంశోద్భవానాం శ్రీమద్రఙ్గం సహ్యజామాజగామ" "பூவோ பூத்யை பூபுஜாம்பூஸுராணாம் திவ்யோகுப்த்யைச்ரேயஸேதேவதாநாம் । ச்ரியைராஜ்ஞாம்சோள வம்சோத்பவாநாம் ஸ்ரீமத்ரங்கம் ஸஹ்யஜாமாஜகாம."

வ்யா.—(திடர்விளங்குகரைப் பொன்னிநடுவுபாட்டு) விளங்காநின்ற திருக்கரையை யுடைத்தாய்க்காவேரிசூழ்ந்த. (திருவரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும் கடல்விளங்கு கருமேனியம்மான் றன்னை) கோயிலிலே திருவநந்தாழ்வான் மேலே கண் வளர்ந்தருளுகிற கடல்போலே ச்யாமஹரமான திருமேனியையுடைய ஸர்வேச்வரனை. (கண்ணாரக்கண்டு உகக்கும்காதல்தன்னால்) கண்ணாலே கண்டநுபவிக்கவேணுமென்னும் ஆசைப்பாட்டோடே. (குடைவிளங்கு விறல்தானைக் கொற்றவொள்வாள்கூடலர்கோன்) விளங்குகிற வெண்கொற்றக்குடையையும் வெற்றியையுடைய ஸேனையையும், ஐச்வர்யப்ரகாசகமான ஆனையையுமுடையராய் மதுரைக்கு நிர்வாஹகருமான. (கொடைக்குலசேகரன் சொற்செய்த) கொடைமாறாதே கொடுக்கும் பெருமாள் அருளிச்செய்த. (நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும்வல்லார்) உள்ளில் அர்த்தத்திலிழியவேண்டாதே, பதங்கள் சேர்ந்த சேர்த்திகள் பார்க்கவேண்டாதே, இதுதானே ஆகர்ஷகமாயிருக்கிற தமிழ்த்தொடை பத்தும்வல்லார். (நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே) சீலாதிகுணபூர்ணராய், ஸர்வஸ்வாமிகளாய், வத்ஸலராயிருக்கும் பெரிய பெருமாள் திருவடிகளின்கீழே யநுபவிக்க ஆசைப்பட்டாப்போலே கிட்டப்பெறுவர்கள். ... ... (கக)

அடிவரவு-இருள், வாய், எம்மா, மாவினை, இணை, அளி, மறம், கோல், தூரா, வன், திடர், தேட்டு.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

ஆக திருமொழி - க - ற்கு பாட்டு - கo

† "பதிகநாமம்பாட்டு" என்றும் சில ஸ்ரீகோசங்கள்.

இரண்டாந்திருமொழி தேட்டரும் ப்ரவேசம்.

———:O:———

அ.—பகவத்விஷயத்திலே கைவைத்தார்க்கு ஸம்பவிப்பன சில ஸ்வபாவங்களுண்டு; - "𑌆𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍂𑌲𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌜𑌨𑌮𑍍" "ஆநுகூல்யஸ்யஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்யவர்ஜநம்." ஆநுகூல்யமாவது-பாகவதவிஷயத்திலும் பகவத்விஷயத்திலும் பண்ணுமவை. பகவத்விஷயம் பூர்ணமாகையாலே இவனுக்கு ஆநுகூல்யம் பண்ணுகைக்குத் துறையில்லையிறே. இப்படி துறையில்லையென்று இவன் கைவாங்காமைக்கிறே இவனுகந்தத்ரவ்யமே தனக்குத் திருமேனியாகவும் இவன் திருமஞ்சநம்பண்ணினபோது அமுதுசெய்து அல்லாதபோது பட்டினியுமாம்படியிறே அவர்களுக்குத் தன்னை யமைத்து வைப்பது; இப்படியாய்த்ததில்லையாகில் பரிபூர்ணவிஷயத்தில் இவனுக்கு கிஞ்சித்கரிக்கைக்குத் துறையில்லையிறே. "𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍" "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" என்றும் "𑌮𑌮 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌹𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃" "மமப்ராணாஹிபாண்டவா:" என்றும், "பத்தராவி" என்றும்-ததியவிஷயத்திலே பண்ணும் ஆநுகூல்யமும் பகவத்விஷயத்திலே பண்ணிற்றாமிறே. ஆகையாலே இவரும் தமக்கு இவையிரண்டும் பிறந்த தென்கிறார். பகவத்விஷயத்தில் பிறந்த ஆநுகூல்யம் சொன்னார் - கீழில் திருமொழியில்; ததியவிஷயத்தில் ஆநுகூல்யம் பிறந்தபடி சொல்லுகிறார் - இத்திருமொழியில். ...

வ்யா.—முதற்பாட்டு. (தேட்டருமித்யாதி) முடியபாகவதவிஷயமுத்தேஶ்யமாகிறதும் பகவத்விஷயத்திலே அவகாஹித்தாரென்றுமதிறே. "இன்னான் அர்த்தமுடையன், க்ஷேத்ர முடையன்" என்று ஆஶ்ரயிப்பாரைப்போலே, பகவத்ப்ரத்யாஸத்தி யுடையாரென்றிறே இவர்களைப்பற்றுகிறது. பகவத்விஷயத்திலே ஸ்தோத்ரம்பண்ண இழிந்தவர் ஆசார்யவிஷயத்தை ஸ்தோத்ரம்பண்ணப் புக்கு அவர்க்கு நிறமாகச்சொல்லிற்று பகவத் விஷயத்தில் ஜ்ஞாந பக்திகளையிறே; "𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌰𑌾𑌶𑌯𑍇" "ஜ்ஞாநவைராக்யராஶயே."

தேட்டருந்திறற்றேனினைத்தென்னரங்கனைத்திருமாதுவாழ்
வாட்டமில்வனமாலைமார்பனைவாழ்த்திமால்கொள்சிந்தையராய்
ஆட்டமேவியலர்ந்தழைத்தயர்வெய்துமெய்யடியார்கள்தம்
ஈட்டங்கண்டிடக்கூடுமேலதுகாணுங்கண்பயனாவதே. (௧)

ப-ரை.—தேட்டு-ஸ்வயத்நத்தால் தேடுகைக்கு, அரும் - அரிதாய், திறல்-தன்னை அநுபவிக்கைக்குத் தக்க பலத்தைக்கொடுக்கும், தேனினை - தேன்போலே பரமபோக்யனாய், தென் - ஸ்ப்ருஹணீயமான, அரங்கனை - திருவரங்கத்திலே நித்ய வாஸம் பண்ணுமவனாய், திருமாது - பெரியபிராட்டியார், வாழ்-நித்யவாஸம்பண்ணுமதாய்; வாட்டம்இல்-ஒருக்காலும்வாடாமல்,வனம்-அழகு

பெற்றிருக்கிற, மாலை - திருமாலை சாத்தியருளின, மார்பனை - திருமார்புடையவனை, வாழ்த்தி - அவனும் அவளுமானசேர்த்திக்கு மங்களாசாஸநம் பண்ணி, மால்கொள் சிந்தையராய் - பித்தேறின மநஸ்ஸையுடையராய், அத்தாலே, ஆட்டம்மேவி - ஆடுகையிலே ஒருப்பட்டு, அலர்ந்து - ஆடலின் மிகுதியால்வருந்தி, அழைத்து - வாய்படைத்த ப்ரயோஜநம் பெறக்கூப்பிட்டு, அயர்வெய்தும் - மெய்ம்மறந்து நிற்கிற; மெய் - அநந்ய ப்ரயோஜநரான, அடியார்கள் தம் ஈட்டம் - அடியார்கள் குழாங்களை, கண்டிடக்கூடுமேல் - காணக்கூடுமாகில், கண்பயனாவது-கண்படைத்த ப்ரயோஜநமாகிறது, அதுகாணும்-அதுவே யாம்.

வ்யா.—(தேட்டரும்) தாமே வந்து ஸ்வலபராமித்தனை யல்லது ஸ்வயத்நத்தால் காணவொண்ணாதென்கை. (திறல்தேனினை) "ஸஶ்ருதிஸாவ்ய" "ய ஆத்மதாபலதா" என்னுமாப்போலே தன்னையுங்கொடுத்து த்தன்னையநுபவிக்கைக் கீடானபலத்தையுங்கொடுக்கும்தேன். (தேனினைத்தென்னரங்கனை) ஸ்ப்ருஹணீயமான திருவரங்கத்திலே நித்யவாஸம்பண்ணுமவனாய், திருமேனியின் ஸ்பர்ஶத்தாலே ஒருக்காலைக்கொருக்கால்செவ்விபெறுமாய்த்து இட்டதிருமாலை. (வாழ்த்தி) "வடிவாய் நின்வலமார்பினில்வாழ்கின்றமங்கையும் பல்லாண்டு" என்கிறபடியே அவளும் இவனும் சேர்ந்த சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணி. (மால்கொள் சிந்தையராய்) பித்தேறின மநஸ்ஸையுடையராய். (ஆட்டமேவி) ஆடவேணுமென்னும் கார்யபுத்யாவன்றி யிலேப்ரேமம் ஓட்டாமையாலே ஆட்டமேவி. (அலர்ந்தழைத்து) அலர்ந்து கார்யப்பாடறக் கூப்பிட்டு. (அயர்வெய்தும் மெய்யடியார்கள்தம்) க்ரமப்ராப்தி பொறாமையாலே அறிவுகுடிபோய் பரவஶராய் அநந்யப்ரயோஜநருடைய. (ஈட்டம்) இப்படியிருப்பார் உமக்கு எத்தனைபேர்வேணுமென்ன; * அடியார்கள் குழாங்களைக்காணப்பெறில். (கூடுமேல் அதுகாணுங்கண் பயனாவதே) இதுகூடிற்றாகில் ப்ரயோஜநங் கண்ணுக்கிதல்ல தில்லை. த்ருஷ்டப்ரயோஜநமிது. ... ... (க)

தோடுலாமலர்மங்கைதோளிணைதோய்ந்ததுஞ்சுடர்வாளியால்
நீடுமாமரஞ்செற்றதுந்நிரைமேய்த்ததும்மிவையேநினைந்
தாடிப்பாடியரங்கவோவென்றழைக்குந்தொண்டரடிப்பொடி
ஆடநாம்பெறிற்கங்கைநீர்குடைந்தாடும்வேட்கையென்னாவதே(உ)

ப-ரை.—தோடுஉலாம்-இதழ்மிக்கிருந்துள்ள, மலர் - தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடைய, மங்கை - பெரியபிராட்டியாருடைய, தோள்இணை-திருத்தோள்களோடு, தோய்ந்ததும் - அணைந்தருளினதும், சுடர் - புகரையுடைய, வாளியால் - அம்பாலே, நீடு - உயர்ந்த, மாமரம் - மராமரங்களேழையும், செற்றதும் - ஒருக்காலே துளையாம்படி எய்ததும், நிரைமேய்த்ததும் - பசுநிரையை மேய்த்ததும், ஆகிய, இவையேநினைந்து-இந்த சீலாதிகுணங்களையே நினைத்து, ஆடி-ப்ரீதிப்ரகாஷத்தாலே இருந்தவிடத்திலிருக்கமாட்டாதேயாடி,

பாடி - அதுக்குப்போக்குவிட்டுப்பாடி, ஓ அரங்க என்று அழைக்கும் - ஓ அரங்கனே என்று கூப்பிடுகிற, தொண்டர் - தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, அடிப்பொடி - பாதரேணுக்களிலே, நாம்—, ஆடப்பெறில் - அவகாஹிக்கும்படியான பாக்யத்தைப்பெற்றால், கங்கைநீர் - கங்காஜலத்திலே, குடைந்து - அவகாஹித்து, ஆடும் - நீராடுதலில் உண்டாகும், வேட்கை - ஆசையானது, என் ஆவது - என்னப்ரயோஜநத்தை யுடையது.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (தோடுலாமலர்மங்கைதோளிணை தோய்ந்ததும்) இதழ்மிக்கிருந்த தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடைய பெரியபிராட்டியார் திருத்தோள்களிரண்டையும் தோய்ந்ததும். தனியன் பெருவெள்ளத்திலேயிழிந்து அநுபவிக்கத்தேடுமாப் போலே தோய்ந்ததும். (சுடர்வாளியால்) புகரையுடைய அம்பாலே. (நீடுமாமரம்செற்றதும்) ஓக்கத்தையுடைத்தான மராமரங்களேழையும், பண்டேதுளையானவற்றிலே ஓட்டினாப்போலேயாய்த்து, அந்தமாய் பலவத்தரமான ஸப்தஸாலத்தை நிரஸித்ததும். ஆஸ்ரிதரை விஸ்வஸிப்பிக்கும் செயலிறே. (நிரைமேய்த்ததும்) உபயவிபூதிநாயகனாயிருந்துவைத்து கையிலே யொருகோலையுங்கொண்டு பசுமேய்த்ததும். (இவையே நினைந்து) இந்தஸீலாதிகுணங்களையே நினைந்து. இவற்றை நினைக்குமதொழிய வேறொரு ப்ரயோஜநத்தையும் கணிசியாதே. (ஆடிப்பாடி) ப்ரீதிப்ரகர்ஷத்தாலே யிருக்கமாட்டாதே ஆடிப்பாடி. (அரங்கவோ என்றழைக்கும்) பெருமாள் திருநாமத்தைச் சொல்லி யாற்றமாட்டாதே கூப்பிடும். (தொண்டரடிப்பொடியாட நாம்பெறில்) பகவத்குணவித்தரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பாதரேணுக்களிலே அவகாஹிக்கப்பெறில். (கங்கைநீர்குடைந்தாடும் வேட்கையென்னாவதே!) எப்போது மொக்க பகவத்ஸம்பந்தமுடைய ராகையாலே தீர்த்த பூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பாதரேணுக்களிலே அவகாஹிக்கப்பெறில் கங்கைநீர்குடைந்தாடும் வேட்கை யென்னாவதே. காதாசித்கஸம்பந்தமே யாய்ப்பலசிக்குத்தலைகளிலே புக்கு உபகதிப்பட்ட கங்கையாடினால் என்ன ப்ரயோஜநமுண்டு. [நலந்திகழ்சடையான்] (இத்யாதி) பொதுவானதிறே அது. ... ... (௨)

ஏறடர்த்ததுமேனமாய்நிலங்கீண்டதும்முன்னிராமனாய்
மாறடர்த்ததுமண்ணளந்ததுஞ்சொல்லிப்பாடிவண்பொன்னிப்பேர்
ஆறுபோல்வருங்கண்ணநீர்கொண்டரங்கன்கோயிற்றிருமுற்றம்[னே
சேறுசெய்தொண்டர் சேவடிச்செழுஞ் சேறென் சென்னிக் கணிவ

ப-ரை.—நப்பின்னைப்பிராட்டிக்காக, ஏறு - ரிஷபங்களேழையும், அடர்த்ததும் - ஒருக்காலேகொன்றதும், ஸ்ரீபூமிப்பிராட்டிக்காக, ஏனமாய் - மஹாவராஹமாய், நிலம் - அண்டபித்தியிலே சேர்ந்தபூமியை, கீண்டதும் - ஒட்டுவிடுவித்தெடுத்ததும், முன் - இராவணன் பிராட்டியைப் பிரித்தவன்று, இரா

மனாய் - சக்ரவர்த்தித் திருமகனாகத் திருவவதரித்தருளி, மாறு - எதிரியான ராவணனை, அடர்த்ததும் - கொன்றதும், ஆச்ரிதனான இந்த்ரனுக்காக, மண் - மஹாபலி கைக்கொண்ட பூமியை, அளந்ததும் சொல்லி - அளந்து அவனுக்குக் கொடுத்ததும் ஆகிய சரிதங்களைச் சொல்லி, பாடி - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பாடி, வண் - பெருவெள்ளத்தையுடைய, பெரு - பெரிய, பொன்னியாறு - காவேரிபோலே, வரும் - வருகிற, கண்ணீர்கொண்டு - கண்ணீராலே, அரங்கன் - அழகிய மணவாளருடைய, கோயில் - கோயிலின், அலங்கரிக்கப்பட்டிருக்கிற, திருமுற்றம் - உள்ளில் திருமுற்றத்தை, சேறுசெய் - சேறாக்கிவிடுகிற, தொண்டர் - தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, சேவடி - திருவடிகளால் துகையுண்ட, செழுஞ்சேறு - அழகிய சேற்றை, என்சென்னிக்கு அணிவன் - என் சிரஸ்ஸிலே தரிப்பேன் என்கிறார்.

வ்யா.—மூன்றாம்பாட்டு. (ஏறடர்த்ததும்) நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு இடைச்சுவரான ரிஷபங்களேழையுமடர்த்ததும். (ஏனமாய்நிலங்கீண்டதும்) ஸ்ரீபூமிப்பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்குஇடைச்சுவரான விரோதியாய் அவர்களுக்கு ப்ரகாரமான பூமியை ப்ரளயங்கொள்ள உதவிற்றிலனென்னும் அவத்யம்வாராதபடி மஹாவராஹமாய் அண்டபித்தியிலேபுக்குஒட்டினபூமியைஒட்டுவிடுவித்து. (முன்னிராமனாய்மாறடர்த்ததும்) பிராட்டியைப் பிரித்த பையலை எதிரியாக்கிக் கொன்றதும்.(மண்ணளந்ததும்) பிராட்டியோட்டைஸம்ஶ்லேஷ விரோதியைப் போக்கினாப்போலே இந்த்ரனோடு விரோதித்த மஹாபலி கைக்கொண்ட பூமியைமீட்டு எல்லைநடந்து கொடுத்ததும். (சொல்லிப்பாடி) இவ்வபதாநங் களைச்சொல்லி ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பாடி. (வண்பொன்னிப்பேராறுபோல்வருங்கண்ணநீர்கொண்டு) காவேரி, பெருவெள்ளமாய் மலைப்பண்டங்கொண்டுவருமாப்போலே அமைக்கநில்லாதே கடல்குடமாக வெள்ளமிடுகிற கண்ணீரைக் கொண்டு. (அரங்கன்கோயில் திருமுற்றம் சேறுசெய்தொண்டர்) அங்குப்பாங்காநத் திருவலகு திருப்பணிசெய்து வைத்தால் இவர்கள்அத்தைக் கண்ணநீராலேசெறாக்குவர்களாய்த்து. (சேவடிச்செழுஞ்சேறென் சென்னிக்கணிவனே) அமங்கலமான புழுகுநெய்யாலே அலங்கரித் துள்ளதோஷந்தீர மங்களார்த்தமான ஸ்ரீவைஷ்ணவர்களின் திருவடிகளில் அழகியசேற்றை யணிவன். ... (௩)

தோய்த்ததண்டயிர்வெண்ணெய்பாலுடனுண்டலுமுடன்றாய்ச்சிக
டார்த்ததோளுடையெம்பிரானென்னரங்கனுக்கடியார்களாய் [ண
நாத்தழும்பெழநாரணாவென்றழைத்துமெய்தழும்பத்தொழு
தேத்தியின்புறுந்தொண்டர்சேவடியேத்திவாழ்த்துமென்னெஞ்ச [மே

ப-ரை.—தோய்த்த - தடாக்களில் தோய்க்கப்பட்டிருப்பதாய், தண் - குளிர்ந்த, தயிர் - தயிரையும், வெண்ணெய் - உறியில் சேமித்துவைத்த வெண்ணெயையும், பால் - குடங்களில் நிறைத்துவைத்த பாலையும், உடன் - ஒரே காலத்

திலே, உண்டலும் - அமுது செய்தவாறே, ஆய்ச்சி - தாயாரான யசோதைப் பிராட்டி, கண்டு-பார்த்து, உடன்று - கோபித்து, ஆர்த்த - பிடித்துக்கட்டின, தோள்உடை - தோளையுடையனாய், எம்பிரான் - என்னை அநந்யார்ஹனாக்கின வனாய், என் அரங்கனுக்கு - எனக்கு சேஷியான அழகிய மணவாளனுக்கு, அடியார்களாய்-சேஷபூதராய், நாத்தழும்பெழ-நாவானது தழும்பேறும்படி, நாரணா என்று அழைத்து - அவன் திருநாமத்தை அடைவுகெடச் சொல்லி, மெய்தழும்ப - மெய்தழும்பேறும்படி, தொழுது - ப்ரணாமம்பண்ணி, ஏத்தி-ஸ்தோத்ரம்பண்ணி, இன்புஉறும் - ஆநந்தயுக்தராயிருக்கிற, தொண்டர்-ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, சேவடி - ஸ்ரீபாதங்களை, என்மனம் - என்மநஸ்ஸானது, ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, வாழ்த்தும்-மங்களாசாஸநம்பண்ணும் என்கிறார்.

வ்யா.—நாலாம்பாட்டு. (தோய்த்த தண்டயிர் வெண்ணெய் பால்) கடைந்து பிரித்தவெண்ணெய், அதுக்குறுப்பாகத்தோய்த்த தயிர், அதுக்கடியானபால். (உடனுண்டலும்) இவையடங்கலும் நிஶ்ஶேஷமாக ஒருக்காலே யமுதுசெய்தவாறே. (உடன்று)உடைக்கொணுவிட்டவாறே கோபித்தாள். [நீராவெகுளியளாய்] ஸ்நேஹத்துக்கு அவதியுண்டாகிலிறே கோபத்துக்கு அவதியுண்டாவது. (ஆய்ச்சிகண்டு) வாயதுகையது வாகக்கொண்டு அடியோடே கண்டு பிடித்தாளாய்த்து. (ஆர்த்ததோளுடையெம்பிரான்) கண்டவாறே பிடித்துக்கொண்டு கட்டினாள். (எம்பிரான்) ஆஸ்ரிதஸ்பர்ஶமுள்ளத்ரவ்யத்தா லல்லது செல்லாமைகாட்டி என்னையநந்யார்ஹனாக்கினவன். (என்னரங்கனுக்கடியார்களாய்) அவதாரகாலத்தில் இழந்தாரிழவுதீரவந்து ஸுலபரான பெரிய பெருமாளுடைய செயலாலே யெழுதிக்கொடுத் தவர்களாய்த்து. (நாத்தழும்பெழ) நாவானது தழும்பேறும்படி. (நாரணாவென்றழைத்து) "அம்மே" என்பாரைப்போலே திருநாமத்தை அடைவுகெடச்சொல்லி. (மெய்தழும்பத்தொழுது) ப்ரணாமம் பண்ணினபடி தோற்ற உடம்பெல்லாம்தழும்பாகச்சிறியாத்தானைப்போலே யேத்தி. இப்படிப்பட்ட செயல்களைச் சொல்லியேத்தி. (இன்புறுந்தொண்டர் சேவடி) மநஸ்ஸிலே வைத்தேத்துகையாலே விஷயத்தைக் கிட்டினால் பிறக்கும் நிரதிஶயாநந்த யுக்தராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீபாதங்களை. (தொண்டர் சேவடியேத்தி வாழ்த்து மென் னெஞ்சமே) அவர்கள்தாங்கள் அகப்பட்ட நவநீதசௌர்யத்தில் போகாது என்னெஞ்சு; அதிலே யகப்பட்டவர்கள்தங்களை ஏத்திவாழ்த்து மித்தனை. (ஏத்திவாழ்த்தும்) இச்செயலுக்கு இவர்கள் நிலவராவதே! என்று ஸ்தோத்ரத்தைப்பண்ணி, இது நித்யமாக வேணுமென்று மங்களாஶாஸநம் பண்ணும் என்னெஞ்சு. ... ... (ச)

பொய்சிலைக்குரலேற்றெருத்தமிறுத்துப்போராவீர்த்தகோன்
செய்சிலைச்சுடர்சூழொளித்திண்ணமாமதிட்டென்னரங்கனும்
மெய்சிலைக்கருமேகமொன்றுதந்நெஞ்சுணின்றுதிகழப்போய்
மெய்சிலிர்ப்பவர்தம்மையேநினைந்தென்மநம்மெய்சிலிர்க்குமே. (ரு)

ப-ரை.—பொய் - க்ர்த்ரிமமாய், சிலை - கோபத்தையுமுடைத்தான, குரல்-த்வநியையுடைய, ஏறு - ரிஷபங்களினுடைய, எருத்தம் - கழுத்துக்களை, இறுத்து - முறித்தும், போர்-யுத்தோந்முகமான, அரவு-காளியனாகிற ஸர்ப்பத்தை, ஈர்த்த - நிரஸிக்கையாலே, ஸ்ரீதிருவாய்ப்பாடியிலுள்ளார்க்கு, கோன்-நாதனானவனாய், சிலை - கல்லினாலே, செய் - செய்யப்பட்டு, சுடர் ஒளி- மிக்க ஜ்யோதிஸ்ஸையுடைத்தாய், திண்-திண்மையையும், மா-உயர்த்தியையுமுடைய, மதிள் - மதிள்களாலே, சூழ் - சூழப்பட்டு, தென் - ஸ்ப்ர்ஹணீயமான, அரங்கன் ஆம் - ஸ்ரீரங்கத்தில் நித்யவாஸம் பண்ணும் அழகியமணவாளராகிய; மெய் - சரீரத்தில், சிலை - இந்த்ரதநுஸ்ஸோடுகூடின, கரு - கறுத்த, மேகம் ஒன்று - ஒருமேகமானது, என்நெஞ்சுள் - என்மநஸ்ஸில், நின்று - நிலைபெற்று, போய்த்திகழ - மிகவும் விளங்கும்படி, மெய்சிலிர்ப்பவர்தம்மையேநினைந்து - புளகிதகாத்ரராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களையே நினைத்து, என்மநம்-என்மநஸ்ஸானது, மெய்-மெய்யே, சிலிர்க்கும் - புளகியாநின்றது என்கிறார்.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பொய்சிலைக் குரலேற்றெருத்தமிறுத்து) பொய் - க்ர்த்ரிமம். சிலை - கோபம். அஸுராவேஶத்தாலே க்ர்த்ரிமமாய் கோபத்தையு முடைத்தாயிருந்துள்ள ஏறுமுறியப் பொருது. நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு விரோதியானவையுமாய்ப் பொருகிறவையுமாய்ச் சிலைபோலேகோரமான த்வநியையுடைத்தா யிருந்துள்ள ரிஷபங்களைக் கழுத்தை முறித்து. (போரரவுஈர்த்தகோன்) திருவாய்ப் பாடியில் பசுக்களும் இடையரும் தண்ணீர் குடிக்கவொண்ணாதபடி ஜலத்தை தூஷித்துக்கிடந்த காளியன், யுத்தோந்முகனாய்ப் புறப்படும்படி கலக்கிப் பொய்கையில்நின்றும்போகவிட்டு, அத்தாலேதிருவாய்ப்பாடியிலுள்ளார்க்குநாதனானவனை. (செய்சிலைச்சுடர்சூழொளித்திண்ணமாமதிள் தென்னரங்கனாம்) கல்லாலே செய்யப்பட்டுப்பிறரால் அபிபவிக்கவொண்ணாதபடியான மதிப்பை யுடைத்தான திண்மையையும் ஓக்கத்தாலும்விஞ்சின திருமதிள்கள் பலவுஞ் சூழ்ந்திருக்கிறகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற. (மெய்சிலைக் கருமேகம்) உடம்பிலே வில்லையுடைய மேகமென்னுதல்; மெய்யேவில்லோடே கூடின மேகந்தானென்னுதல். (ஒன்றுதன்னெஞ்சில் நின்றுதிகழப்போய்) "ஶோபயந் ஜநஸ்தாநம்" "ஶோபயந் தண்டகாரண்யம்" என்னுமாப்போலே மாணிக்கக்குப்பியில் உள்ளுநின்றநிலை புறம்பேதெரியுமாப்போலே பெரியபெருமாளைத் தங்கள் நெஞ்சிலே எழுந்தருளுவித்து வைக்கையாலே நிழலிடாநிற்குமிறே. (மெய்சிலிர்ப்பவர்) உள்ளேயெழுந்தருளி யிருக்கிறபடியை யநுஸந்தித்து புளகித காத்ராராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள்தம்மை நினைத்து. (என்மநம் மெய்சிலிர்க்குமே) பெரிய பெருமாளை யநுபவித்து அவர்களுடம்புபடும்பாட்டை, அவர்களை யநுபவித்து என்னெஞ்சு படாநின்றது. ஸ்பர்ஶத்ரவ்யம் பட்டதெல்லாம் படாநின்றது அமூர்த்த த்ரவ்யம். (ரு)

ஆதியந்தமநந்தமற்புதமானவானவர்தம்பிரான்
பாதமாமலர்சூடும்பத்தியிலாதபாவிகளுய்ந்திடத்
தீதில்நன்னெறிகாட்டியெங்குந்திரிந்தரங்கனெம்மானுக்கே [மே.
காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலுங் காதல்செய்யுமென்னெஞ்ச

ப-ரை.—ஆதி - ஜகத்காரணபூதனுய், அந்தம்-ப்ரளயகாலத்திலும் ஓரசையின்றியிருக்குமவனுய், அநந்தம் - காரணகாரியங்களிரண்டிலும் வ்யாபித்து நிற்குமவனுய், அற்புதம் - ஆச்சர்யபூதனுய், ஆன - எப்போதுமொக்க உளராயிருக்கும், வானவர்தம்பிரான் - நித்யஸூரிகளுக்கு நாதனுன ஸர்வேச்வரனுடைய, பாதம் - திருவடிகளிலே, மா - ச்லாக்யமான, மலர் - தாமரைமலர்களை, சூடும் - ஸமர்ப்பிக்கிற, பத்தி இலாத - பக்தியில்லாத, பாவிகள்-பாபிகளானவர்கள், உய்ந்திட - உஜ்ஜீவிக்கும்படி, எங்கும் - தேசமெங்கும் புக்கு, திரிந்து - ஸஞ்சரித்து, தீதுஇல் - குற்றமில்லாத, நல்நெறி - நல்வழியேபோம்படி, காட்டி - தாங்கள் அநுஷ்டித்துக் காட்டி, எம்மான் - என்னை அநந்யார்ஹனுக்கின, அரங்கனுக்கு பெரியபெருமாள் திருவடிகளிலே, காதல்செய் - பக்தியையுடையராயிருக்கிற, தொண்டர்க்கு-ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, என்நெஞ்சம்-என் மநஸ்ஸானது, எப்பிறப்பிலும்-அநேக ஜந்மங்களிலே, அவர்களுக்கு அடிமைசெய்யவேணும் என்று, காதல்செய்யும் - ஆசைப்படாநின்றது என்கிருர்.

வ்யா.—ஆரும்பாட்டு. (ஆதி) ஜகத்காரணபூதன். (அந்தம்) ப்ரளயகாலத்திலும் ஸதவஸ்தனுய் நிற்குமவன். (அநந்தம்) காரணுவஸ்தையிலும் கார்யாவஸ்தையிலு மொக்க வ்யாபித்து நிற்குமவன். (அற்புதம்) காரணுவஸ்தையோடு ஸதாவஸ்தனுய் நிற்குமதோடு வாசியற நிற்குமிலைகள் வேறோரிடத்தில் காணவொண்ணுதென்னும்படியிருக்கும் ஆஶ்சர்யபூதன். (ஆனவானவர்தம்பிரான்) ஆனபோதும் அமர்ந்தபோதும்எப்போதுமொக்க உளராயிருக்கும் நித்யஸூரிகளுக்குநாதன். உபயவிபூதிநாதனென்றபடி. (பாதமாமலர்சூடும்பத்தியிலாத) அவன் † திருவடிகளாகிற செவ்வித்தாமரையைச்சூடும் பக்தியையுடையரா யிருக்கையாய்த்து கர்த்தவ்யம்; அதில்லாத. (பாவிகளுய்ந்திட) பக்தியில்லாத மஹாபாபத்தைப் பண்ணி, "அஸந்நேவ" "அஸந்நேவ" என்னும்படி யிருக்கிற தேஶமெங்கும் புக்கு ஸஞ்சரித்து அவர்களை பக்தியுண்டாக்கி யுஜ்ஜீவிப்பிக்கைக்காக. (தீதில்நன்னெறிகாட்டி) தீமையோடே கூடின நெறியன்றிக்கே, சேதநர்நல்வழிபோம்படி தாங்களாசரித்துக் காட்டி. (எங்குந்திரிந்து) புகக்கடவதல்லாத தேஶமெங்கும் புக்கு ஸஞ்சரித்து. (அரங்கனெம்மானுக்கே காதல்செய்தொண்டர்க்கு) என்னையநந்யார்ஹமாக்கின பெரியபெருமாள் திருவடிகளிலே பக்தியுண்டாயிருக்கும ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு. (எப்பிறப்பிலுங்காதல்செய்யுமென்னெஞ்சமே) அநேகஜந்மங்கள் பிறந்து அவர்களுக்கடிமைசெய்யவேணுமென்று ஆசைப்படாநின்றதென்னெஞ்சு. ... (சு)

---

† "திருவடிகளிலே" என்று சில ஸ்ரீகோசங்கள். "திருவடிகளாகிற" என்கிறபாடத்துக்கு "பாதமாம்மலர்" என்று பாடம்.

காரினம்புரைமேனிநற்கதிர்முத்தவெண்ணகைச்செய்யவாய்
ஆரமார்பனரங்கனென்னுமரும்பெருஞ்சுடரொன்றினைச்
சேருநெஞ்சினராகிச்சேர்ந்துகசிந்திழிந்தகண்ணீர்களால்
வாரநிற்பவர்தாளிணைக்கோர்வாரமாகுமென்னெஞ்சமே. (எ)

ப-ரை.—கார் இனம்புரை-மேகஸமூஹத்தையொத்த,மேனி-திருமேனியை யும், நல்-நல்ல, கதிர்-ஒளியையுமுடைய, முத்தம்-முத்துக்களையொத்த,வெள்-வெளுத்த, நகை-திருமுத்துக்களையும், செய்ய-சிவந்த, வாய்-திருப்பவளத்தை யும், ஆரம்-முக்தாஹாரம்பூண்ட, மார்வன் - திருமார்பையுடையராய், அரங்க னென்னும் - பெரியபெருமாளென்னும் திருநாமத்தையுடையராய், அரும்பெ ருஞ்சுடர்-நிரவதிகதேஜோரூபராய், ஒன்றினை - அத்விதீயரானவரை, சேரும்-கிட்டவேணுமென்கிற, நெஞ்சினராகி-மநஸ்ஸையுடையராய்க்கொண்டு, சேர்ந்து-அவனைக்கிட்டி, கசிந்து இழிந்த—,கண்ணநீர்கள்வாரநிற்பவர் - கண்ணீர் ப்ரவஹிக்கும்படி நிற்பவர்களுடைய, தாளிணைக்கு - திருவடிகளுக்கு, என்னெ ஞ்சம்-என்மநஸ்ஸானது, ஓர்வாரமாகும்-ஒப்பற்ற பக்தியடையாநின்றது.

வ்யா.—ஏழாம்பாட்டு. (காரினம்புரைமேனி) "தொக்கமேகப் பல்குழாங்கள்" என்றும், "கார்த்திரளனையமேனி" என்கிறபடியே அழகிய திருமேனியையு முடையராய்.(நல்கதிர்முத்த வெண்ணகை ச்செய்யவாய்) கண்டாரைப் போகாமல் துவக்கவல்ல வொளி யையுடைய முத்துநிரைபோலே யிருக்கும் தந்தபங்தியையும், இது க்குப் பரபாகமான திருவதரத்தில் பழுப்பையுமுடையராய். (ஆர மார்பன்) "பெரிய வரைமார்வில் பேராரம்பூண்டு" என்று ஐஶ் வர்ய ப்ரகாஶகமாம்படி இட்டுப் பூணவேண்டும்படியுள்ள ஹார த்தையும் திருமார்பிலேயுடையரா யிருக்கிற. (அரங்கனென்னும், அரும் பெருஞ்சுடரொன்றினை) பெரியபெருமாளென்று உபய விபூதியிலும் ப்ரஸித்தராய் நிரவதிகதேஜோரூபராய் அத்விதீய ரானவரை. (சேரும்நெஞ்சினராகி) அவர்வந்து கிட்டும்போது விலக்காமை யடியாகப்பிறந்த பக்தியையுடையராய். (சேர்ந்துகசிந் திழிந்த கண்ணீர்களால் வாரநிற்பவர் தாளிணைக்கு) அவனைக்கிட்டி நிரதிஶய பக்தியுக்தராய்க் கண்ணுங் கண்ணீருமாய் நிற்குமவர்க ளுக்கு பக்திபாரவஶ்யத்தாலே யிறே யென்று அங்குத்தைக்கும் இவர்களுக்கு மாய் நில்லாதே இவர்களுடைய திருவடிகளுக்கு. (ஓர் வாரமாகுமென்னெஞ்சமே) அநந்யப்ரயோஜநமாய் நில்லாநின்ற தென்னெஞ்சு. ... ... (எ)

மாலையுற்றகடற்கிடந்தவன்வண்டுகிண்டுநறுந்துழாய்
மாலையுற்றவரைப்பெருந்திருமார்பனைமலர்க்கண்ணனை
மாலையுற்றெழுந்தாடிப்பாடித்திரிந்தரங்கனெம்மானுக்கே
மாலையுற்றிடுந்தொண்டர்வாழ்வுக்குமாலையுற்றதென்னெஞ்சமே.

ப-ரை.—†மாலேஉற்ற - அலேயெறிகிற, கடல்-திருப்பாற்கடலிலே, கிடந்தவன்-கண்வளர்ந்தருளுமவனும்,வண்டு-வண்டுகள்,கிண்டு-குடையாநின்றுள்ள, நறு-நல்ல, துழாய்மாலேயுற்ற-திருத்துழாய்மாலேசேர்ந்து, வரை-மலேபோலே, பெரு-விசாலமான, திருமார்வனே-திருமார்பையுடையராய், மலர்-செந்தாமரை மலர்போன்ற, கண்ணனே - திருக்கண்களேயுடைய பெரியபெருமாள் விஷயத்திலே, மாலேயுற்று - பக்தியையுடையராய், எழுந்து ஆடி - இருந்தவிடத்தில் இருக்கவொட்டாமையாலே எழுந்து ஆடி, பாடி - ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடிக்கொண்டு, திரிந்து - ஸஞ்சரித்து; அரங்கன் - கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிற, எம்மானுக்கு-என்னுடையஸ்வாமிக்கு, மாலேயுற்றிடும் - பித்தேறித் திரியும், தொண்டர் - தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, வாழ்வுக்கு - வைஷ்ணவலக்ஷ்மிக்கு, என்னெஞ்சம்-என்மநஸ்ஸானது, மாலுற்றது-பித்தேறு நின்றதென்கிறுர். † மலே-என்பது மாலேஎன நீட்டிக்கிடக்கிறது.

வ்யா.—எட்டாம்பாட்டு. (மாலேயுற்றகடல்கிடந்தவன்) ஸ்வஸ்பர்ஶத்தாலே அலேயெறிகிற திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவன். (வண்டுகிண்டு நறுந்துழாய் மாலேயுற்றவரைப் பெருந் திருமார்பனே) வண்டுகள் நெருங்கி யிருக்கிற செவ்வித்திருத்துழாய் மாலேசேர்ந்து, வரைபோலே யிருக்கிற பெருந்திருமார்வை யுடையவரை. "மைபோல் நெடுவரைவாய்த்தாழு மருவிபோல் தார்கிடப்ப" என்னக்கடவதிறே. (மலர்க்கண்ணனே) செவ்வித்தாமரைப் பூப்போலே மலர்ந்த திருக்கண்களேயுடையவரை. (மாலேயுற்றெழுந் தாடிப் பாடித்திரிந்து) பக்தியையுடையராய் இருந்தவிடத்திலிருக்க வொட்டாமையாலே எழுந்தாடுவது பாடுவதாய் ப்ரீதிப்போிக்கஇருக்கமாட்டாதே ஸஞ்சரித்து. (அரங்கனெம்மானுக்கே மாலேயுற்றிடுந் தொண்டர்வாழ்வுக்கு) கோயிலிலே ஸுலபரானபடியைக்காட்டி என்னே யெழுதிக்கொண்ட பெரியபெருமாளுக்கே பக்திகார்யமான பித்தேறித்திரியும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய வைஷ்ணவலக்ஷ்மிக்கு. (மாலேயுற்றதென்னெஞ்சமே) பித்தேறுநின்றேனென்கிறுர். (அ)

அ.—ஒன்பதாம்பாட்டு. பித்தேறித்திரிவார்க்கு ஒருநீர் பித்தேறுவதென்ன; ப்ராப்தவிஷயத்தில் பித்தேறுமவர்கள் பித்தரன்றென்கிறுர்.

மொய்த்துக்கண்பனிசோரமெய்கள்சிலிர்ப்பவேங்கியிளேத்துநின்
றெய்த்துக்கும்பிடுநட்டமிட்டெழுந்தாடிப்பாடியிறைஞ்சியென்
அத்தனச்சனரங்கனுக்கடியார்களாகியவருக்கே
பித்தராமவர்பித்தரல்லர்கள்மற்றையார்முற்றும்பித்தரே. (கூ)

ப-ரை.—கண்-இரண்டுகண்களினின்றும்,ஆநந்தக்கண்ணீரானது,பனி-மழைத்தாரைபோலே,மொய்த்துச்சோர-இடைவிடாதேசொரிய,மெய்கள்-சரீரங்கள்,சிலிர்ப்ப-மயிர்க்கூச்செறியவும், ஏங்கி-அவனேநினேத்து ஏங்கி, இளேத்துநின்று-இளேத்துச்சிதிலராய்,எய்த்து - அசைவற்றுநின்று, கும்பிடுநட்டமிட்டாடி - ஸஸம்ப்ரமந்ர்த்தம்பண்ணி, பாடி-ப்ரீதிக்குப்போக்குவிட்டுப்பாடி, இறைஞ்சி

தீர்க்கப்ரணாமம்பண்ணி,என்-எனக்கு, அத்தன்-தந்தையாய், அச்சன்-நாதரான, அரங்கனுக்கு-பெரியபெருமாளுக்கு, அடியார்கள் - தாஸபூதரான ஸ்ரீவைஷ்ண வர்களுக்கு, ஆகி - அடியார்களாகி, அவருக்கே-அவர்கள் விஷயத்திலே, பித்த ராமவர் - பித்தேறித்திரியுமவர்கள், பித்தரல்லர்கள்—; மற்றையார்முற்றும் - அவனுடைய தாஸபூதரிடத்தில்பத்திபண்ணாதாரெல்லாம், பித்தர்-பித்தராவர்க ளென்கிறார்.

வ்யா.—(மொய்த்துக்கண்பனிசோர)இரண்டுகண்ணாலே வர்ஷ தாரைபோலே சொரிய. (மெய்கள் சிலிர்ப்ப) புளகிதகாத்ரராய். (ஏங்கி யிளைத்துநின்று எய்த்துக்கும்பிடு நட்டமிட்டெழுந்தாடிப் பாடி இறைஞ்சி) விஷயத்தை நினைத்தேங்கி யிளைத்து ஶ்ரீதிலராய், அவ்வளவன்றியிலே ஸ்தப்தராய் நின்று. அந்நிலையும் நில்லாதே (கும்பிடு நட்டமிட்டு)ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணி.(இறைஞ்சி) தீர்க் கப்ரணாமத்தைப் பண்ணி. (என்னத்தனச்சன்) எனக்கு ஜநகனு மாய் ஸ்வாமியுமானவன். (அரங்கனுக்கடியார்களாகி) பெரியபெரு மாளுக் கநந்யப்ரயோஜநரா யிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கடியா ராகி. (அவருக்கே பித்தராமவர் பித்தரல்லர்கள்) அவர்க்கு பக்தி மான்களாய் பக்திகார்யமான பித்தேறித்திரிகிறவர்கள். பித்தரல் லர்கள். (மற்றையார் முற்றும்பித்தரே)இந்த பக்திகார்யமான பித்த ரல்லாதவர்களுடைய பித்தரே. ஓக்கலக்கமில்லாதே தெளிந்திருக் கும் ஸநகாதிகளேயாகிலும் அவர்கள் பித்தர். ... ... (கூ)

அல்லிமாமலர்மங்கைநாதனரங்கன்மெய்யடியார்கள்தம்
எல்லையில்லடிமைத்திறத்தினிலென்றுமேவுமநத்தனும்
கொல்லிகாவலன்கூடல்நாயகன்கோழிக் கோன்குலசேகரன்
சொல்லினின்றமிழ்மாலைவல்லவர்தொண்டர்தொண்டர்களாவரே.()

ப-ரை.—அல்லி-அகவிதழையுடைத்தாய், மா-ச்லாக்யமான, மலர்மங்கை-செந்தாமரைமலரைப் பிறப்பகமாகவுடைய பெரியபிராட்டியார்க்கு, நாதன் - வல்லபரான, அரங்கன்-பெரியபெருமாளுடைய,மெய்-மெய்யான,அடியார்கள் தம்-தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, எல்லையில்-அளவில்லாத, அடிமை த்திறத்தினில்-தாஸ்யத்திலே,என்றும்-என்றும் ஒருபடிப்பட,மேவும்-பொருந்தி ன,மநத்தனும்-திருவுள்ளத்தையுடையராய், கொல்லி-கொல்லிநகருக்கு, காவல ன் தலைவராய், கூடல்-மதுரைக்கு, நாயகன்-நாயகராய், கோழி-உறையூர்க்கு, கோன்-ராஜாவான, குலசேகரன்-குலசேகரப்பெருமாள் அருளிச்செய்ததாய், இன்-இனிதான, சொல்-சப்தங்களையுடைய, தமிழ்மாலைவல்லவர் - தமிழ்த்தொ டையை வல்லவர்கள். தொண்டர் தொண்டர்களாவர் - அவனடியார்க்கு அடி யாராவ ரென்கிறார்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (அல்லிமாமலர் மங்கைநாதன் அரங் கன்) ஸ்ரீயப்பதியான பெரியபெருமாளுடைய. (மெய்யடியார்கள் தம்) அநந்யப்ரயோஜநரா யிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய. (எல்லையி லடிமைத்திறத்தினி லென்று மேவுமநத்தனும்)ஆத்மதாஸ் யத்திலேயென்றுமொக்கப்பொருந்தினதிருவுள்ளத்தையுடையராம்.

(கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன்) கொல்லிக்கும் மதுரைக்கும் உறையூர்க்கும் நாயகரான பெருமாள். பெரிய உடையாருடைய இழவால்வந்த வெறுப்பாலே "వనవాసో మహోదయః" "வநவாஸோமஹோதய:" என்றுபோய், "రాజ్యాద్భ్రంశో వనే వాసః" "ராஜ்யாத்ப்ரம்ஶோவநேவாஸ:" என்றுவந்ததுக்குப்போந்து அது ப்ரியமாயிருந்தவர் இவ்விழவாலே அடியில் போந்ததுவும் எல்லாந் தமக்கு வெறுப்புக்குடலாளுப்போலே, "ஊனேறுசெல்வத் துடற்பிறவியான் வேண்டேன்" என்றும், "இவ்வரசும்யான்வேண்டேன்" என்றும் சொல்லுகிறவிவர்க்குத் ததீயஶேஷத்வத்தைத் தந்த ஜந்மமென்று ராஜஜந்மந் தன்னையுங் கொண்டாடுகிறாரிறே. (சொல்லி னின்தமிழ்மாலை வல்லவர்) இனிதான ஶப்தங்களையுடைய தமிழ்த்தொடைவல்லவர்கள். (தொண்டர் தொண்டர்களாவரே) இவராசைப்பட்டுப் போந்த பாகவதஶேஷத்வ பர்யந்தமாகிற புருஷார்த்தத்தை லபிப்பர்கள். ... ...

குலசேகராழ்வார் திருவடிகளே ஶரணம்.

—:0:—

அடிவரவு-தேட்டு தோடு ஏறு தோய்த்த பொய் ஆதி காரினம் மாலை மொய்த்து அல்லி மெய்.

—:0:—

மூன்றாந்திருமொழி - மெய்யில்வாழ்க்கை - ப்ரவேசம்.

அ.—"பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேன்" என்று - பகவத்ப்ராவண்யம் ததீயஶேஷத்வ பர்யந்தமாய், அவர்களல்லது செல்லாமை பிறக்குமளவுமுண்டு, அது சொல்லிற்று - கீழில் திருமொழியில்; "எண்ணுதமானிடத்தை யெண்ணுதபோதெல்லாமினியவாறே" "மானிடவரல்லரென் றென் மநத்தே வைத்தேனே" என்றும், "பித்தரென்றேபிறர்கூற" என்றும் பிறக்கு மவஸ்தையுண்டு; - பகவத்ப்ராவண்யத்தாலே முன்பிலதுக்கு ஸங்கல்பமேயாய்த்துவேண்டுவது; அடிமை அவர்கள் கொள்ளக்கொள்ளவிறேசெய்வது. ப்ராதிகூல்யத்தில் வர்ஜித்தேயிருக்க வேணும் பகவத்குணங்களோபாதி விபூதியும் ததீயத்வாகாரத்தாலே அநுபாவ்யமென்று சொன்ன ஶாஸ்த்ரந்தானே யிறே இத்தை த்யாஜ்யமென்றதும். ஜ்ஞாநகார்யமாயிறே ததீயருத்தேஶ்யமாகிறதும்; தமோகுண ப்ரசுரரோடு ஸஹவாஸம் பொருந்திற்றுகில் அஜ்ஞாநகார்யமிறே. "మత్తస్సర్వమహమ్" "மத்தஸ்ஸர்வமஹம்" என்று - ஸாமாந்ய புத்திபண்ணின ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பூர்வாவஸ்தையில், "మత్పితుః" "மத்பிது:" என்று - அவனை ரக்ஷிக்கப்பார்த்தவன் ப்ராதிகூல்யத்திலேவிஞ்சினவாறே அவனை விட்டுக்காட்டிக்

கொடுத்தானிறே. ஸ்ரீவிபீஷணாழ்வான் ஆந்தனையும் ஹிதம்சொல்லிப் பார்த்துத் தன் ஹிதத்துக்கு மீளாத வவஸ்தையானவாறே, நெருப்புப்பட்டவிடத்தில் விலக்கலொண்ணாதபோது தன்னைக் கொண்டு தான் தப்புவாரைப்போலே, ப்ராதிகூல்யம் அசலிட்டுத் தள்ளவும் வருமென்று தன்னைக்கொண்டு தான் தப்பினானிறே. ப்ராதிகூல்யமாகிறது - தேஹாத்மாபிமாநிகளாகையும், விஷயப்ரவணரா யிருக்கையும், தேஹாத்வ்யதிரிக்தம் வேறொரு வஸ்துவுண்டென்றறியா திருக்கையுமிறே. இப்படி இருப்பாரோடு எனக்குப் பொருந்தாதென்கிறார் - இத்திருமொழியில். ... ...

மெய்யில்வாழ்க்கையைமெய்யெனக்கொள்ளுமிவ்
வையந்தன்னொடுங்கூடுவதில்லையான்;
ஐயனே! அரங்கா! என்றழைக்கின்றேன்;
மையல்கொண்டொழிந்தேனென்றன்மாலுக்கே. (௧)

ப-ரை.—மெய்யில்-பொய்யான, வாழ்க்கையை-இகலோகஸுகத்தை, மெய் எனக்கொள்ளும்-நித்யமென்று நினைக்கிற, இவ்வையந் தன்னொடும்-இந்தலோகத்தாரோடே, யான் - தேஹாத்மாபிமாநமற்றயான், கூடுவதில்லை-சேருவதில்லை; ஐயனேஎன்று-ஸர்வஸ்வாமியானவனே என்றும், அரங்காஎன்று-கோயிலிலேவந்து ஸர்வஸுலபனானவனே என்றும், அழைக்கின்றேன் - கூப்பிடாநின்றேன், என்றன்மாலுக்கு-என்விஷயத்தில் வ்யாமுக்தனான அழகியமணவாளன் விஷயத்திலே, மையல்கொண்டொழிந்தேன்-பித்தேறாநின்றேன் என்கிறார்.

வ்யா.—முதற்பாட்டு. (மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்) மெய்யென்றும் பொய்யென்மது நில்லாமையும், நிலை நிற்குமத்தையும்சொல்லுகிறது. நிலைநில்லாததிலே, நித்யமான ஆத்ம வஸ்துவைப்பண்ணும் ப்ரதிபத்தியைப் பண்ணுமென்னுதல்; மெய்யிலேயுண்டான வாழ்க்கை யென்னுதல். அதாகிறது-ப்ரக்ருதியைப்பற்றிவரும் ப்ராக்ருதபோகங்களிறே. (இவ்வையந்தன்னொடுங் கூடுவதில்லையான்)தேஹாத்மாபிமாநிகளாயிருப்பாரோடுஎனக்கொருசேர்த்தியில்லை. (ஐயனித்யாதி)தேஹாத்வ்யதிரிக்தம் வேறொருவருண்டென் றறிந்தவனென்றாகிர். (ஐயனே) நிருபாதிகபந்துவே. (அரங்கா) அநுஷ்டாநபர்யந்தமாக்கின முதலித்தாப்போலேகோயிலிலே வந்து ஸுலபனானவனே. (என்றழைக்கின்றேன்) காரியப்பாடறக்கூப்பிடாநின்றேன். (மையல்கொண்டொழிந்தேன் என்றன் மாலுக்கே) அவன் எனக்குப் பித்தேறினபடியைக்கண்டு நானும் அவனுக்குப்பித்தனானேன். ... ... ௧.

நூலினேரிடையார்திறத்தேநிற்கும்
ஞாலந்தன்னொடுங்கூடுவதில்லையான்;
ஆலியாவழையாவரங்காவென்று
மாலெழுந்தொழிந்தேனென்றன்மாலுக்கே. (௨)

ப-ரை.—நூலின்நேர்-நூல்போல்நுண்ணிதான, இடையார்திறத்து-இடையையுடையரான ஸ்த்ரீகளவயவத்திலே, நிற்கும் - வைத்தநெஞ்சைவாங்கமாட்டாதேநிற்கிற, ஞாலந்தன்னொடும் - லோகத்தாரோடே, யான்கூடுவதில்லை—; ஆலியா-பெரியபெருமாள் திருநாமங்களைச்சொல்லி, அழையா-அடைவுகெடக்கூப்பிட்டு, என்றன்மாலுக்கு—, மாலெழுந்து ஒழிந்தேன் - பித்தேறுநின்றேன் என்கிறார்.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (நூலினேரிடையார் திறத்தேநிற்கும்) நூல்போலே நுண்ணிய இடையையுடையராயிருக்கும் ஸ்த்ரீகள்திறத்திலேநிற்கும். ஒரு அவயவத்தை யநுபவிக்கப்புக்கால் மற்ற அவயவத்தில் போகமாட்டாதேநிற்கும். (ஞாலந்தன்னொடுங் கூடுவதில்லையான்)ப்ராப்தவிஷயத்திலிருக்கக்கடவவிருப்பை அப்ராப்தவிஷயத்தேயிருக்கு மவர்களோடு எனக்கொரு ஸம்பந்தமில்லை. (ஆலியாவித்யாதி) இவர்கள் அப்ராப்தவிஷயத்திலே படும்பாடெல்லாம் ப்ராப்த விஷயத்தே படுமவன் நானென்கிறார். (ஆலியாவழையாவரங்காவென்று) ப்ரீதிப்ரகர்ஷத்தாலேயிருக்கமாட்டாதே, ஆலியா-பெரியபெருமாள் திருநாமத்தைச்சொல்லி, அடைவுகெடக்கூப்பிட்டு. (மாலெழுந்தொழிந்தேனென்றன்மாலுக்கே) "ஜீவந்தஸ்ஸுவ்ரதா:" "தேநத்தேதமநுவ்ரதா:" என்னுமாப்போலே அவன் என்பக்கல் வ்யாமுக்தனானபடிகண்டு நானும்பித்தேறினேன். ... (௨)

மாரனார்வரிவெஞ்சிலைக்காட்செய்யும்
பாரினாரொடுங்கூடுவதில்லையான்;
ஆரமார்பனரங்கனநந்தநல்
நாரணன்நரகாந்தகன்பித்தனே. (௩)

ப-ரை.—மாரனார் - மன்மதனுடைய, வரி-தர்சநீயமாய், வெம் - யாவரையும் தன்வசமாக்கவல்ல, சிலை-வில்லுக்கு, ஆள்செய்யும்-அடிமை பண்ணிப்போருகிற, பாரினாரொடும் - பூலோகத்தாரோடே, யான்கூடுவதில்லை—; ஆரம்-முக்தாஹாரம் சாத்தியருளின, மார்வன்-திருமார்பையுடையரான, அரங்கன்-அழகியமணவாளராய், இங்கேவந்து ஸுலபராயிருக்கச்செய்தேயும், அநந்தன்-இப்படிப்பட்டவரென்று பரிச்சேதிக்கவொண்ணாதவராய், நல்நாரணன் - குற்றங்களைக்குணமாகக்கொள்ளுமவராய், நரகாந்தகன்-ஆச்ரிதர்நரகத்தில்வீழாதபடி காக்குமவரான பெரியபெருமாள் விஷயத்தில், பித்தன் - நான்பித்தனானேன் என்கிறார்.

வ்யா.—மூன்றும்பாட்டு. (மாரனார்வரி வெஞ்சிலைக் காட்செய்யும்) காமனுடைய தர்சநீயமாய்த் தப்பவொண்ணாதபடி கொடிதாயிருக்கிற வில்லுக்குக்குடிமகனாய்த்திரியும் பாரினாரொடுங்கூடுவதில்லையானென்னுதல். * சார்ங்கமென்னும் வில்லாண்டான் றனக்காட்செய்யுமவன்நான். (ஆரமார்வனரங்கன்) ஆகர்ஷகமான வொப்பனையையுடைய பெரியபெருமாள். (அநந்தன்) மநுஷ்யத்வே பரத்வம் போலே இங்கேவந்து ஸுலபராய்க்கிடக்கச்செய்தே, பரிச்சேதிக்க

வொண்ணாதபடியிருக்கிறவர். (நன்ஞாரணன்) தன்னுடைமையை விடமாட்டாமையாலே அழுக்கை விரும்புமவன். (நரகாந்தகன் பித்தனே) அவன் தன் வாத்ஸல்யத்தாலே மேல்விழாநிற்க நடுவே விரோதியும் போய்க்கொடு நிற்குமிறே. இப்படி யிருக்கிறவனுக்குப் பித்தனே. ... ... ௩.

உண்டியேயுடையேயுகந்தோடுமிம்
மண்டலத்தொடுங்கூடுவதில்லையான்;
அண்டவாணனரங்கன்வன்பேய்முலை
உண்டவாயன்றனுன்மத்தன்காண்மினே. (ச)

ப-உரை.—உண்டி - ஆஹாரத்தையும், உடை - வஸ்த்ரத்தையும், உகந்து - விரும்பி, ஓடும் - கண்டவர்கா[illegible]கின்ற, இம்மண்டலத்தொடும் - இந்த லோகத்தாரோடே, யான் கூடுவதில்லை—: அண்டம் - அண்டாந்தர்வர்த்திகளான தேவர்களுக்கு, வாணன் - நிர்வாஹகராய், வல் - கடிநசித்தையான, பேய் - பூதனையுடைய, முலை - விஷத்தோடு கூடிய முலைப்பாலை, உண்ட - தாய் முலைபோலே அமுதுசெய்த, வாயன் - திருப்பவளத்தையுடையரான, அரங்கன்தன் - அழகிய மணவாளன விஷயத்திலே, உன்மத்தன் - பெரும்பித்தேறுகின்றேன் என்கிறார்.

வ்யா.—நாலாம்பாட்டு. (உண்டியேயுடையே யுகந்தோடும்) உபாஸநத்துக்கு ஶரீரம் வேண்டுகையாலே அது தரிக்கவேண்டுமளவன்றியிலே எல்லாவற்றையும் அழியமாறி உண்டியுமுடையுமாக்கும். (இம்மண்டலத்தொடுங் கூடுவதில்லையான்) "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றிருந்த, ஒருவிபூதியுண்டாளுப்போலே ப்ராக்ருத போகங்களை விரும்புகைக்கொரு விபூதியிறே யிதுவும். (அண்டவாணன்) அண்டாந்தர்வர்த்திகளுக்கு நிர்வாஹகன். (அரங்கன்) இதுக்கு நிர்வாஹகனாயிருக்குமிருப்பொழிய இதினுள்ளேபுகுந்து ஸுலபனாய்க்கோயிலிலே ஸந்நிஹிதனானவன். (வன்பேய் முலையுண்டவாயன் உன்மத்தன் காண்மினே)இங்கேவந்தவதரித்து ப்ரதிபந்தகங்களைத் தானே போக்குமவனுக்குப் பித்தன் நான். (தன் உன்மத்தன்காண்மினே) ஔஷதஸேவை பண்ணினாரையு மிழக்கவொண்ணாதாப்போலே அவனுடைய குணசேஷ்டிதங்களிலே யகப்பட்டுப் பித்தனானவென்னைக் கேவல ஶரீர பரவஶரோடே சேரவிடவொண்ணுமோ. (ச)

தீதில்நன்னெறிநிற்கவல்லாதுசெய்
நீதியாரொடுங்கூடுவதில்லையான்;
ஆதியாயனரங்கனந்தாமரைப்
பேதைமாமணவாளன்றன்பித்தனே. (௫)

ப-உரை.—தீதில் - குற்றமற்ற, நல்நெறி - ஸந்மார்க்கமானது, நிற்க - இருக்கச்செய்தே, அல்லாது செய் நீதியாரோடும் - க்ஷுத்ர புருஷார்த்தங்களை

விரும்புகையைத் தொழிலாக வுடையவர்களோடே, யான் கூடுவதில்லை—; ஆதி - ஜகத்காரணபூதராய், ஆயன் - க்ருஷ்ணனாய் வந்தவதரித்த ஸௌலப்யராய், அம் - அழகிய, தாமரை - செந்தாமரைமலரை இருப்பிடமாகவுடைய, பேதை - பெரியபிராட்டியாருக்கு, மா மணவாளன் - வல்லபரான, அரங்கன் தன் - அழகிய மணவாளன் விஷயத்திலே, பித்தன் - நான் பித்தனேனென்கிறார்—.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (நீதில் நன்னெறிநிற்க) நீதியோடு பிறவாத நல்வழிநிற்க. இவனையொழிந்த பலங்களுக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணிப் பெறும்பேற்றில் இழவே நன்றென்னும்படியிறே யிருப்பது. (அல்லாது செய் நீதியாரொடுங் கூடுவதில்லையான்) இதர புருஷார்த்தங்களை யாசைப்படுகையே யாத்ரையாயிருப்பாரோடும் கூடுவதில்லையான். (ஆதி) ப்ரமாணங்கள் உபாஸ்ய வஸ்துவென்று சொல்லப்படுகிறவன். (ஆயன்) உபாஸ்ய வஸ்துதான் அறிதென்னவொண்ணாதபடி யவதரித்து ஸுலபனானவன். (அரங்கன்) அவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதித்துப் பிற்பாடரிழவாமே கோயிலிலே வந்து ஸந்நிஹிதரானவர். (அந் தாமரைப்பேதை மா மணவாளன் தன் பித்தனே) அழகிய தாமரைப்பூவைத் தனக் கிருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியாருக்கு வல்லபரானவர்க்குப் பித்தனேன் நான். ஓரடி இவன் புகுராநின்றால் அத்தைக் குவாலாக்கி, அவனெஞ்சிலே புண்படும்படி இவன் பண்ணின அபராதத்தை அவன் காணாதபடியிருக்கிற புருஷகாரபூதை. (மாமணவாளன்) [[illegible] ஸம்பந்தீ: — அப்ரமேயம்ஹி தத்தேஜ:] இவளுக்கு வல்லபனானவனாலே வந்த பெருமையையுடையவன். பித்தன் நான். ... (௫)

எம்பரத்தரல்லாரொடுங்கூடலன்;
உம்பர்வாழ்வையொன்றாகக்கருதிலன்;
தம்பிரானமரர்க்கரங்கநகர்
எம்பிரானுக்கெழுமையும்பித்தனே. (௬)

ப-ரை.—எம்பரத்தரல்லாரொடும் - என்னைப்போலே அடிமைசெய்ய விரதர்களோடே, கூடலன் - யான் கூடமாட்டேன்; உம்பர்வாழ்வை - ஸ்வர்க்காதிலோக ஸுகங்களை, ஒன்றாக - ஒருபொருளாக, கருதிலன் - நினைக்கமாட்டேன்; தம்பிரான் - * அமர்வருமமராக ஸந்நிஹிதராய், அரங்கநகர் - கோயிலிலே வந்து, எம்பிரானுக்கு - எனக்கு உபகாரகரான பெரியபெருமாள் விஷயத்திலே, எழுமையும் - காலமுள்ளதனையும், பித்தன் - பித்தனுபத திரியுமவன் என்கிறார்.

வ்யா.—ஆறாம்பாட்டு. (எம்பரத்த ரல்லாரொடுங் கூடலனே) என் யாத்ரையே யாத்ரையா யிராதாரை நாக்கு வளைத்திருப்பன். “இந்நின்ற நீர்மை யினியாமுறாமை” என்றும், “வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்” என்றும் இராதாரோடு ஸம்பந்தமில்லை. (உம்பர் வாழ்வை யொன்றாகக் கருதிலன்) ஸம்ஸாரத்தில் அருசியும்

கைங்கர்யத்தில் ருசியுமில்லையாகில், ப்ரஹ்மாதிகள் ஸம்பத்தே யாகிலும த்ருணவத்கரிப்பன். (தம்பிரானமரர்க்கு) * அயர்வறு மமரர்களதிபதி. (அரங்கநகரெம்பிரானுக்கு) நித்ய ஸூரிகளெல்லாம் அநுபவிக்குமாப்போலே ஸம்ஸாரிகளெல்லா மிழவாதபடி கோயிலிலே வந்து ஸுலபரானவர். (எழுமையும் பித்தனே) இச் செயலுக்கென்றும் பித்தனாய்த் திரியுமவன்.... ... ... ௬

அ.—ஏழாம்பாட்டு. இதரரோடு கூடாத நன்மை உமக்கு வந்தபடியெங்ஙனென்ன; நானடியாக வந்ததல்ல, ஸர்வேச்வரனடியாக வந்ததென்கிறார்.

எத்திறத்திலுமியாரொடுங்கூடுமச்
சித்தந்தன்னைத்தவிர்த்தனன்செங்கண்மால்
அத்தனேயரங்காவென்றழைக்கின்றேன்
பித்தனாயொழிந்தேனெம்பிரானுக்கே. (எ)

ப-ரா.—எத்திறத்திலும் - எப்படிப்பட்ட பொருள்கள் கிடைக்குமென்னிலும், யாரொடும் - அபாகவதரோடே, கூடும் - பொருந்தாநிற்கிற, அச்சித்தந் தன்னை - அப்படிப்பட்ட மநஸ்ஸை. செங்கண்மால் - புண்டரீகாக்ஷனான ஸர்வேச்வரன், தவிர்த்தனன் - நீக்கினான்; அத்தனே என்று - ஸ்வாமியே என்றும், அரங்கா என்று - அழகியமணவாளனே என்றும், அழைக்கின்றேன் - கூப்பிடாநின்றேன்; எம்பிரானுக்கு - இதரவிஷயப்ரவணனாய் பொருந்தாதபடி பண்ணி யுபகரித்த பெரியபெருமாளுக்கு, பித்தனாய் ஒழிந்தேன்—.

வ்யா.—(எத்திறத்திலும்) அபாகவதரோடு சம்பாஷிக்க அபிமத புருஷார்த்தங்களை யெல்லாம் லபிக்கலாமென்னிலும் அத்தையுங் காற்கடைக்கொள்ளும்படியானேன். (அச்சித்தந் தன்னைத்தவிர்த்தனன செங்கண்மால்) கண்ணாலே குளிரநோக்கி தன் வ்யாமோகத்தைக்காட்டி பிறரோடு மநஸ்ஸு பொருந்தாதபடி பண்ணினான். (அத்தனே) எனக்கு ஸ்வாமியானவனே. (அரங்காவென்றழைக்கின்றேன்) அந்தஸ்வாமித்வத்தை நிர்வஹிக்கைக்காக கோயிலிலேவந்து ஸுலபனானவனென்று கூப்பிடாநின்றேன். (பித்தனாயொழிந்தேனெம்பிரானுக்கே) இதரவிஷய ப்ராவண்யத்தோடு பொருந்தபடி பண்ணின வுபகாரகனுக்குப் பித்தனானேன்.

அ.—எட்டாம்பாட்டு. எல்லாரும் விட்டாலும் ஒருவரல்லா ஒருவர் பற்றுவர்களிறே, அவர்களெல்லாரும் விடும்படியானேனென்கிறார்.

பேயரேயெனக்கியாவரும்யானுமோர்
பேயனேயெவர்க்குமிதுபேசியென்;
ஆயனேயரங்காவென்றழைக்கின்றேன்
பேயனாயொழிந்தேனெம்பிரானுக்கே. (அ)

ப-ரை.—யாவரும்-அஸ்திரமான புருஷார்த்தங்களை விரும்புமவர்களெல்லாம், எனக்கு - பரமபுருஷார்த்தத்தை விரும்பிப் போருமெனக்கு, பேயர்-பேயரா யிராநின்றார்கள்; யானும் - அவர்கள் நிலையில் நில்லாதயானும், எவர்க்கும்-எவர்களுக்கும்,ஓர்பேயன்-ஒப்பற்றபேயனாயிராநின்றேன்;இது-இவ்விஷயத்தை, பேசி - விஸ்தரிப்பேசுவதினால், என் - என்னப்ரயோஜநம்; ஆயனே என்றும் - க்ர்ஷ்ணனாயவதரித்து ஸுலபனானவனே என்றும், அரங்கா என்று - பெரியபெருமாளே என்றும், அழைக்கின்றேன் - கூப்பிடாநின்றேன்; எம்பிரானுக்கு-எனக்குபகாரகனான அழகியமணவாளன் விஷயத்திலே, பேயனாயொழிந்தேன் - பித்தேறாநின்றேன் என்கிறார்.

வ்யா.—(பேயரே யெனக்கு யாவரும்) நிலைநின்ற புருஷார்த்தத்தைவிட்டு அஸ்திரமான ப்ராக்ர்த போகங்களை விரும்புவதே! பேயராயிருந்தார்களென்று விட்டேன் நான். (யானு மோர் பேயனே யெவர்க்கும்) கண்ணால் காண்கிற தொழிய வேறே யொன்றுண்டென்று ப்ரமியாநின்றான், பித்தனாயிருந்தானென்று விட்டார்கள் இவர்களும் என்னை. (இது பேசியென்) இத்தைப்பரக்கச் சொல்லுகிறதென். (ஆயனே) கண்ணால் காண்கிறது பொய்யென்றிராதபடி வந்தவதரித்தான் பகுத்தினபடிகளை எனக்குக் காட்டினவன். (அரங்காவென் றழைக்கின்றேன்) அவதாரத்துக்குப் பிற்பாடரிழவோடே தலைக்கட்டாதபடி கோயிலிலே கண்வளர்ந்தருளின பெரியபெருமாள் திருநாமத்தைச் சொல்லி அடைவுகெடக் கூப்பிடாநின்றேன். (பேயனாயொழிந்தே னெம்பிரானுக்கே) ஒரு விஷயத்திலே பித்தேறினவன் நமக் கினியாகான் காண், விடாய்என்று இதரர் என்னை உபேக்ஷிக்கும்படி யானேன். ... ... அ

அங்கையாழியரங்கனடியிணைத்
தங்குசிந்தைத்தனிப்பெரும்பித்தனாய்
கொங்கர்கோன்குலசேகரன்சொன்னசொல்
இங்குவல்லவர்க்கேதமொன்றில்லையே. (௯)

ப-ரை.—அம் - அழகிய, கை - வலத்திருக்கையிலே, ஆழி-திருவாழியாழ்வானை யுடையரான, அரங்கன் - அழகியமணவாளப் பெருமாளுடைய, அடியிணை-திருவடிகளிலே, தங்கு - பொருந்திய, சிந்தை - மநஸ்ஸையுடையராய், தனிப்பெரும் பித்தனாய் - மிகவும் பித்தேறினவராய்க்கொண்டு, கொங்கர்-மேற்றிசையிலுள்ளார்க்கு, கோன் - தலைவரான, குலசேகரன் - ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சொன்ன - அருளிச்செய்த, சொல் - இவ்வொன்பதுபாட்டுகளையும், வல்லவர்க்கு - அப்யஸிக்கவல்லவர்களுக்கு, இங்கு - இந்தலோகத்திலே, ஏதம் ஒன்று - அபாகவத ஸ்பர்சத்தால்வரும் துக்கம், இல்லை - உண்டாகாது.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (அங்கையாழி யரங்க னடியிணை) அழகிய மணவாளப் பெருமாள் திருவடிகளிலே. (தங்குசிந்தை) பெருமாள் திருவடிகளுக் கவ்வருகு கந்தவ்யபூமியில்லாமையாலே

அங்கே தங்கு சிந்தையையுடைய. (தனிப்பெரும்பித்தனாய்) பகவத் விஷயத்தில் இவர்களோ பாதிபித்தேறினார் வேறொருவரில்லாமையும், சிலவரால் மீட்க வொண்ணாமையுமானபித்தனாய். (கொங்கர்கோன்-குலசேகரன் சொன்னசொல்) மேலைத்திக்குக்கு நிர்வாஹகரான ஸ்ரீகுலசேகரப்பெருமா ளருளிச்செய்தது. (இங்கு வல்லவர்க் கேத மொன்றில்லையே) இவற்றை வல்லவர்களுக்கு இங்கேத மொன்றில்லையே. ஏதமாவது – அபாகவத ஸ்பர்ஶமாதல், பகவத் ப்ராவண்யத்தில் குறையாதல்வரும் துக்கம்போமென்றும், இஸ்ஸம்ஸாரத்திலிருக்கும் நாளில்லை, இத்துக்க ப்ரஸங்கமுள்ள திவ்விடத்தேயிறே. இவை கற்றவர்களுக்கு இப்ரஸங்கமுள்ள தேஶத்திலே யில்லை. ௧௧

ஜீயர் திருவடிகளே சரணம்.

அடி வரவு-மெய் நூல் மாறன் உண்டி தீதில் எம்பரத்தர் எத்திறம் பேய் அங்கை ஊன்.

நாலாந்திருமொழி - ஊனேறுசெல்வ ப்ரவேசம்.

அ.—பகவத் ஜ்ஞாநமும் பிறந்து, இதரவிஷயத்யாகமும் பிறந்து, குணாதிகவிஷயத்தை யநுபவிக்கவேணுமென்னும்ருசியும் பிறந்து, அந்த குணம் பூர்ணமாக அநுபவிக்கலாமிடத்தே யநுபவிக்க வேணுமென்று மாசையும்பிறந்து, "அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்று கொலோ" என்னுமாப்போலே "அடியார்கள் தம் மீட்டங் கண்டிக்கூடுமேல்" என்னுமதுவும் பிறந்து; இப்படி பகவத்விஷயத்திலும் பாகவதவிஷயத்திலும் ஆநுகூல்யமும் இதரவிஷயத்யாக பூர்வகமாகக் கண்ணழிவறப் பிறக்கச்செய்தே விரோதியும்போய் அநந்தரம் பகவல்லாபமாகவும் காணாமையாலே, "ஸதேவா: ஸகந்தர்வா:" "யதிவாராவணஸ்ஸ்வயம்" என்றும், "ஆள்பார்த்துழி தருவாய்" என்றும் மேல்விழக்கடவ வவன் பக்கல் குறையில்லை, இதுக்கு வேறேயொரு ஹேதுவுண்டாகவேணுமென்று பார்த்து, ஶரீரஸமநந்தரம் பகவல்லாபமாகில் பரிக்ரஹித்த ஶரீரம் க்ஷத்ரியஶரீரமாய் போகங்களில் குறைவற்றிருந்த பின்பு ஶரீராவஸாநத்தளவும் போகங்களை புஜித்து, பின்னை க்ரமத்தாலே பகவத்ப்ராப்தி பண்ணுகிறோமென்று நினைத்திருக்கிறேனென்று நினைத்து ஆறியிருந்தானாக வேணுமென்னுமத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு, தமக்குக்ரம ப்ராப்தி பொறாமை தோன்ற "ஒன்றியாக்கைப் புகாமலுய்யக்கொள்வான் நின்ற வேங்கடம்" என்றும், "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான்" என்றும் ▪ கீழநுபவித்த

பெரியபெருமாள் தாமே ஸம்ஸார ஸம்பந்தமறுத்துக் கொடுக்கைக்கும் கைங்கர்யம் கொள்ளுகைக்கும் திருமலையிலே நிற்கிறராகையாலே திருவேங்கடமுடையான் திருவடிகளிலே விழுந்து விரோதியில் அருசியும் கைங்கர்யத்தில் ருசியும் பிறந்த த்வரையை யுமாவிஷ்கரிக்கிறார். ... ... *

அ.—முதற்பாட்டு. (ஊனேறித்யாதி) ப்ரக்ருதி புருஷவிவேகம் பண்ணுகைக்கு யோக்யதையுள்ள மநுஷ்யஜந்மமாய், அதிலே பரரக்ஷணத்துக் குறுப்பான க்ஷத்ரியஜந்மம் வேண்டா, கைங்கர்யத்தில் எல்லை நிலத்துக் குறுப்பான திர்யக்காய்ப் பிறக்கவமையும் நானென்கிறார்.

ஊனேறுசெல்வத்துடற்பிறவியான்வேண்டேன்
ஆனேறேழ்வென்றானடிமைத்திறமல்லால்;
கூனேறுசங்கமிடத்தான்றன்வேங்கடத்துக்
கோனேரிவாழுங்குருகாய்ப்பிறப்பேனே. (௧)

ப-ரா.—யான் - அவனை சேஷியென்றறிந்த யான், நப்பின்னைப்பிராட்டிக்காக, ஆன் ஏறு ஏழ் - ரிஷபங்களேழையும், வென்றான் - நிரஸித்த திருவேங்கடமுடையான் விஷயத்திலே. அடிமைத்திறம் அல்லால் - கைங்கர்யம் பண்ணுகையொழிய, ஊன் ஏறு - நாள்செல்ல நாள் செல்ல மாம்ஸம்வளர்ந்து வருமதாய், செல்வம் - அநித்யமான செல்வத்தோடுகூடின, உடல்பிறவி - மநுஷ்யஜந்மத்தை, வேண்டேன் - இச்சியேன் என்ன; பின்னை நீர் விரும்பியிருப்பது என்னென்ன, கூன் ஏறு - சேஷத்வத்தால் வளைந்திருக்கிற, சங்கம்-ஸ்ரீபாஞ்சஜன்யத்தை, இடத்தான் தன் - இடத்திருக்கையிலே யுடையவனுடைய, வேங்கடத்து - திருமலையிலே, கோனேரி - திருக்கோனேரியிலே, வாழும்-வர்த்திக்கிற, குருகு ஆய் பிறப்பேன் - நாரையாகவாகிலும் பிறப்பேன் என்கிறார்.

வ்யா.—(ஊனேறுசெல்வத்துடல் பிறவி யான்வேண்டேன்) இந்த ஶரீரத்துக்குச் சொல்லுகிற குற்றமென்னென்ன; நாள்செல்ல நாள்செல்ல மாம்ஸப்ரசுரமாய் வருகையாலே ஶரீரந்தந்து †ஆத்மாதிகளுக்கு இத்தனை;அத்தாலே வேண்டேனென்கிறார். நம்முடைய ஸ்வரூபமும் நித்யமாயிருக்கச்செய்தே "ஶ்ருண்வ" "அஸந்நேவ" என்கிறது ஜ்ஞாநஸங்கோசத்தைப் பற்றவிறே; அப்படியே ஜ்ஞாந ஸங்கோசத்தைப் பிறப்பிக்குமதுவாகையாலே வேண்டேனென்கிறார். (யான்வேண்டேன்) தலையறுத்துக்கொள்ளுமவர்கள் சந்தநம் பூசித்திரியுமாப்போலே விழுக்காடறியாதான் வேணுமேயென்றிருந்தானுமத்தனை; விவேகஜ்ஞாநமுடையநான்வேண்டேன். ஶரீரத்தினுடைய ஹேயத்தையும், ஆத்மாவினுடைய வைலக்ஷண்யத்தையும், இதுதான்தனக்கே ஶேஷமென்னுமிடத்தையும்அவன்றானே யறிவிக்கவறிந்தநான் வேண்டேன். (ஆனேறேழ்வென்றானடிமைத் திறமல்லால்) அவன்தானே விரோதியைப்போக்கி

† இவ்விடத்துக்குச் சரியான பாடத்தை கோசாந்தரங்களில் கண்டுகொள்க.

கைங்கர்யத்திலே அந்வயிப்பிக்குமவனுன். (ஆனேறேழ்வென்றுன்) நப்பின்னைப்பிராட்டியோட்டைஸம்ஶ்லேஷத்துக்குஇடைச்சுவரானரிஷபங்களேழையும் வென்றவன். மாதாவின் பக்கலிலே ஸ்நேஹத்தைப்பண்ணின பிதாவை யநுவர்த்திக்கும் புத்ரனைப்போலே (அடிமைத்திறமல்லால்) அடிமை யிடையாட்டமென்னுதல்; "अहं सर्वं" "அஹம்ஸர்வம்" என்றும், "வழுவிலாவடிமை" என்றுஞ் சொல்லுகிறபடியே அடிமைத்திறமென்னுதல். (கூனேறுசங்கமிடத்தான்) கைங்கர்யருசியுடையாரை நித்யகைங்கர்யங் கொள்ளுமவன். (கூனேறுசங்கமிடத்தான்) "प्राञ्जलिं प्रह्वमासीनम्" "ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்" என்னுமாப்போலே பகவதநுபவச்செருக்காலே இளையபெருமாளைப்போலே காட்சிக்கு நோக்காயிருக்கிற ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வான். (சங்கமிடத்தான்) இடக்கையிலேகாணில் "சங்கமிடத்தான்" என்கிறார்; வலக்கையிலே திருவாழியாழ்வானைக் கண்டவிராகையாலே "வலக்கையாழி" என்கிறார்; திருமார்விலே பிராட்டியைக்கண்டவாறே "திருவலமார்வினில் வாழ்கின்றமங்கை" என்கிறார். இவர்படியிதிறே. (தண்வேங்கடத்து) அங்கேயடிமை கொள்ளுமைக்குப் பாங்கானதேஶமாகையாலே யென்னதென்று இவன் விரும்பின திருமலையில். (கோனேரிவாழுங் குருகாய்ப்பிறப்பேனே) விரஜையைப்பற்றி அமாநவ ஸ்பர்ஶத்திலே வர்த்திக்குமாப்போலே, கோனேரியைப்பற்றி வர்த்திக்குங் குருகாய்ப் பிறப்பேனென்கிறார். (வாழும்) கோயில் வாஸம்போலேகாணும் திருக்கோனேரியில். வர்த்திக்குமென்கிற விடத்துக்குவேறே வாசகஶப்தங்களுண்டாயிருக்கச்செய்தே "வாழும்" என்கிற ஶப்தத்தை யிட்டபடியாலே அங்குத்தை வாஸந்தான் போகரூபமாயிருக்குமென்கை. (குருகாய்ப்பிறப்பேனே) ப்ரக்ருதி புருஷவிவேகம்பண்ணுகைக் குறுப்பான மநுஷ்ய ஜந்மமுமாய் அதிலே பாரக்ஷணத்துக் குறுப்புமாகையாலே புண்யஶரீரமான க்ஷத்ரியஜந்மம் வேண்டாவென்கிறார். அது துர்மாநஹேதுவாகையாலே ப்ரக்ருதி புருஷவிவேகம் பண்ணவும்மாட்டாதே பாரக்ஷணத்துக் குறுப்புமின்றிக்கே பாபயோநியுமாயிருக்கிற திர்யக்காய்ப்பிறக்கவமையும் திருமலை யெல்லைக்குள்ளே பிறக்கப்பெறிலே என்கிறார். "உடல்பிறவியான்வேண்டேன்" என்கிறார், குருகாய்ப்பிறப்பேனே" என்கிறார். பிறவியன்றுபோலே காணும் அங்கேபிறக்கை. ... ... (௧)

அ.—இரண்டாம்பாட்டு. இந்நித்ய போகங்களிற் காட்டில் நிலைநின்றபோகங்களுமாய் இதுபோலே ஸாவதியன்றியே நிரவதியுமா யிருக்குமிறே ஸ்வர்க்கத்தில் போகம்; அவைபெற்றால் செய்வதென்னீரென்னா; அவையும் கீழில் கழித்த பூமியில் போகமும் இரண்டுங் கூடக்கிடக்கிலும் வேண்டாவென்கிறார்.

ஆனாதசெல்வத்தரம்பையர்கள்தற்சூழ
வானாளுஞ்செல்வமுமண்ணரசும்யான்வேண்டேன்;
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப்பிறக்கும்விதியுடையேனாவேனே. (உ)

ப-உ.—ஆனாத - அழியாத, செல்வத்து - யௌவநமாகிற ஸம்பத்தை யுடையரான, அரம்பையர்கள் - ரம்பைமுதலான அப்ஸரஸ்ஸுக்கள், தன் - தன்னை, சூழ - சூழ்ந்துநிற்க, வான் ஆளும் செல்வமும் - ஸ்வர்க்கத்தை ஆளுகையாகிற செல்வத்தையும், மண்ணரசும் - பூலோகத்தை ஆளுகையையும், யான் வேண்டேன்—; தேன் ஆர் - தேன்மிக்கிருக்குள்ள, பூ - புஷ்பங்களையுடைய, சோலை - சோலைசூழ்ந்த, திருவேங்கடம் - திருமலையிலுண்டான, சுனையில் - சுனைகளிலே, மீனாய்ப்பிறக்கும் விதியுடையன் ஆவேனே - மீனாகவாவது பிறக்கத்தக்க விதியையுடையவனாக ஆவேனென்கிறார்.

வ்யா.—(ஆனாதசெல்வத் தரம்பையர்கள்) கெடாதஸம்பத்து. அதாவது - அழியாதயௌவந ஸ்ரீயையுடைய அப்ஸரஸ்ஸுக்கள். (தற்சூழ)இவன்தான் தப்ப நினைத்தாலும் தப்பவொண்ணாதபடி அவர்கள்மேல்விழ. (வானாளுஞ் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்) ஸ்வர்க்காதிகளநுபவிக்கும் ஸம்பத்தோடேகூட கீழில்கழிந்த ராஜ்யஸ்ரீயையும் கூட்டினாலும் வேண்டேன். வேண்டேனென்கிறது-இவற்றுக்குக் குறையுண்டாயன்று, நான்நினைத்த புருஷார்த்தமல்லாமையாலே வேண்டேனென்கிறார். நீர்வேண்டியிருப்பதென்னென்ன (தேனார்பூஞ்சோலை திருவேங்கடச்சுனையில்) தேன்மிக்கிருந்துள்ள பொழிலென்னுதல்; வண்டுகள்மிக்க பொழிலென்னுதல். பொழில் சூழப்பட்டிருக்கிற திருமலையில் சுனைகளிலே. (மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே) கீழ்ச்சொன்ன குருகாய்ப்பிறக்கில் அதுக்குச் சிறகுண்டாகையாலே திருமலையிலேநல்லனாய்க் கழியப் பறக்கைக்கு யோக்யதையுண்டிறே; அப்படியு மொன்றன்றியேயுத்பத்தி ஸ்திதிலயங்களுக்கு திருமலையிலேயாய் மீனாய்ப்பிறப்பேன் என்கிறார். (பிறக்கும் விதியுடையேன் ஆவேனே)இப்போது மீனாய் பிறக்கவும்வேண்டா, ஒருஸுக்ருதத்தாலே அந்த ஜன்மம் மேல்வருமென்று திண்மைபெறவு மமையுமென்கிறார். ... ... (உ)

அ.—மூன்றாம்பாட்டு. பாரதந்த்ர்யத்துக் குறுப்பாகப்பெறில் கீழில்கழிந்த மநுஷ்யஜந்மமே யாகிலு மமையுமென்கிறார்.

பின்னிட்டசடையானும்பிரமனுமிந்திரனும்
துன்னிட்டுப்புகலரியவைகுந்தநீள்வாசல்
மின்வட்டச்சுடராழிவேங்கடக்கோன்றானுமிழும்
பொன்வட்டில்பிடித்துடனேபுகப்பெறுவேனாவேனே. (௩)

ப-ரை.—பின்னிட்ட - பின்னப்பட்ட, சடையானும் - ஜடையையுடைய ருத்ரனும், பிரமனும் - ப்ரஹ்மாவும், இந்திரனும் - இந்த்ரனும், முன்னேபோக வேணுமென்கிற இச்சையாலே, துன்னிட்டு - ஒருவர்க்கொருவர் நெருக்கி, புகல் அரிய - ப்ரவேசிக்கவொண்ணாதிருக்கிற, வைகுந்தம் - பரமபதத்துக்கொப்பான, நீள் - பெருமை தங்கிய, வாசல் - திருவாசலிலே, மின் - மின்னலை, வட்டம் - வளைத்தாப்போலிருக்கிற, சுடர் - ஜ்யோதிஸ்ஸை யுடைத்தான, ஆழி - திருவாழி யாழ்வானையுடைய, வேங்கடக்கோன்றன் - திருவேங்கட முடையான், உமிழும் - திருப்பவளமாற்றுகிற, பொன் - பொன்னாற்செய்த, வட்டில் - வட்டிலை, பிடித்து - கையிலே பிடித்துக்கொண்டு, உடனே புகப்பெறுவேனாவேனே - கர்ப்பக்ருஹத்திலேபுக்கு அருகு நிற்கத்தக்க பாக்யத்தைப் பெறுவேனாகவேணு மென்கிறார்.

வ்யா.—(பின்னிட்ட சடையானும்) பின்னப்பட்ட சடையானென்னுதல்; பின்னே நாலப்பட்ட சடையானென்னுதல். பின்னே வர்த்திக்கக் கடவனிறே புத்ரன்; அப்படியே ப்ரஹ்மாவின்பின்னே நிற்கும் சடையா னென்னுதல். (பிரமனும்) இவனுக்கு ஜநகனான ப்ரஹ்மாவும். (இந்திரனும்) "ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ:" "ஸப்ரஹ்மாஸஶிவ:" என்றால்இவர்களோடொக்க, "ஸேந்த்ர:" "ஸேந்த்ர:" என்னும்படியானஇந்த்ரனும். (துன்னிட்டுப்புகலரிய வைகுந்தநீள்வாசல்) ஒருவர்க்கொருவர் முன்புபோகவேண்டி யிருக்கையாலேபுகலரிதாயிருக்கிற வைகுந்தநீள்வாசலிலே. (மின்வட்டச்சுடராழி) மின்னைவளைத்தாப்போலே ஜ்யோதிஸ்ஸையு முடைத்தாய்ச் சுற்றும் வாயையுமுடைத்தாயிருக்கிற திருவாழியாழ்வானையுடைய. (வேங்கடக்கோன்றானுமிழும் பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேனாவேனே) ப்ரஹ்மருத்ராதிகள் நெருக்கிப்புகப்பெறாதேநிற்க, பணிக்குக்கடவன் "இவனைப்புகுரவிடு" என்று உள்ளே அந்தரங்க வ்ர்த்திக்குக் கடவவர்களோடே நானும் ஸஜாதீயனாய்ப் புகவேணும். (௩)

அ.—நாலாம்பாட்டு. மநுஷ்யஶரீரம் ராஜாவாகைக்கும் பொதுவாகையாலே அது வேண்டா, திருவேங்கட முடையானுக் குறுப்பாம்படி திருமலையிலே நிற்பதொரு ஸ்தாவரமாக வமையும் நானென்கிறார்.

ஒண்பவளவேலையுலவுதண்பாற்கடலுள்
கண்டுயிலுமாயோன் கழலிணைகள்காண்பதற்குப்
பண்பகரும்வண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துச்
செண்பகமாய்நிற்குந்திருவுடையேனாவேனே. (௪)

ப-ரை.—ஒண் - ஒள்ளிய, பவளம் - பவளங்களை, வேலை-கரையிலேகொடுவந்து, உலவு - கொழிக்கிற, தண் - குளிர்ந்த, பாற்கடலுள் - திருப்பாற் கடலிலே, கண் துயிலும் - கண்வளர்ந்தருளுகிற, மாயோன் - ஆச்சர்யபூதனான

திருவேங்கடமுடையானுடைய, கழலிணைகள் - திருவடிகளை, காண்பதற்கு-ஸேவிக்கைக்காக, பசரும் - தாங்கள் பாடுகிற, பண் - இசைக்கு அநுகுணமாக, வண்டுகளானவை, பண்பாடும் - பண்களைப்பாடாநின்றுள்ள, வேங்கடத்து-திருமலையிலே, செண்பகமாய்நிற்கும்-செண்பகமரமாய் நிற்கத்தக்க, திருவுடையேனாவேனே-ஸம்பத்துடையவனாக வாகிலும் ஆவேனென்கிறார்.

வ்யா.—(ஒண்பவளவேலை யுலவுதண்பாற் கடலுள்) ஒள்ளிய பவளத்தைக் கரையிலே கொடுவந்து கொழிக்கிற பாற்கடலென்னுதல்; ஒள்ளிய பவளங்களைக் கொண்டுஉலாவுகிற திரைகளையுடையஸ்ரமஹாமான திருப்பாற்கடலிலே யென்னுதல். (கண்துயிலுமாயோன்) திருப்பாற் கடலிலே, "கிடந்ததோர் கிடக்கை" என்று சொல்லும்படி கண்வளர்ந்தருளுகிற ஆஸ்சர்யபூதனானவன். (கழலிணைகள் காண்பதற்கு) அங்குச்சென்றுகிட்டிக் காணவொண்ணாத அருமைநீரக்காணலாந் தேசத்திலே காண்கைக்காக. (பண்பசரும்) இயலைக் கற்று ஶிக்ஷாபலத்தாலே இசைவருந்தனையை வார்த்தை சொல்லும்போதும்பண்ணாயிருக்கை. (வண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்து) தாங்கள்பாடுகிற பாட்டுக்குஇசைந்து வண்டினங்களானவை பண் பாடுகிற திருமலையிலே. (செண்பகமாய்நிற்கும் திருவுடையேனாவேனே) திருமலையிலே செண்பகமாய் நிற்கும் ஸம்பத்துண்டாகவேணும். அதாவது - பகவத்ப்ரத்யாஸத்தியிறேப்ராப்யம்; அது கிட்டுமானபின்பு ஸ்தாவரமாய்நிற்கவும் அமையும்; மேலேஏறினசைதந்யத்தாலே கார்யகரமில்லை யென்கிறார். ... ... (௪)

அ.—அஞ்சாம்பாட்டு. செண்பகமானால் பரிமளத்துக்காகஉள்ளேகொண்டு புகுவர்களென்று ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசித்ததாமிறே; அப்படியுமொன்றுமில்லாத தம்பகமாகவுமமையுமென்கிறார்.

கம்பமதயானைக்கழுத்தகத்தின்மேலிருந்து
இன்பமருஞ்செல்வமுமிவ்வரசும்யான்வேண்டேன்;
எம்பெருமானீசனெழில்வேங்கடமலைமேல்
தம்பகமாய்நிற்குந்தவமுடையேனாவேனே. (௫)

ப-ரை.—கம்பம் - கண்டவர்களெல்லாரும் நடுங்கும்படியான, மதம் - மதத்தையுடைய, யானை - யானையுடைய, கழுத்தகத்தின்மேல் - கழுத்தின்மேலே, இருந்து - ராஜாதிராஜன் என்னும் பெருமைதோன்றவிருந்த, இன்புஅமரும்-ஸகலபோகங்களையும் புஜிக்கத்தக்க, செல்வமும் - ஸம்பத்தையும், இவ்வரசும்-இந்த்ராஜ்யமாளுகையையும், யான் - என்னை அத்தலைக்கு சேஷபூதனென்றறிந்த நான், வேண்டேன் - விரும்பமாட்டேன்; எம்பெருமான் - எனக்கு உபகாரகனாய், ஈசன் - ஸர்வஸ்வாமியானவனுடைய, எழில் - அழகிய, வேங்கடமலைமேல் - திருமலையிலே, தம்பகமாய்நிற்கும் - தம்பகமரமாய்நிற்கும்; தவமுடையேனாவேன் - தபஸ்ஸையுடையவனாக ஆவேன்.

வ்யா.—(கம்பமதயானைக்கழுத் தகத்தின்மேலிருந்து) கண்டாரெல்லாம்நடுங்கும்படி மதிப்பையுடையவானை யென்னுதல்; மதத்தாலே கம்பத்தினின்றும் விடவொண்ணாதபடி நிற்கும் யானையென்னுதல். ஒருவராலும் மேற்கொள்ளவொண்ணாதாகிலும் ராஜாக்களை மேற்கொள்ள வொட்டுமிறே யானைகள். எல்லார்க்கும் பயாவஹமான யானையைமேற்கொண்டு தன் கருத்திலே நடத்தி. (இன்பமருஞ்செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்) அங்கேயிருந்து எல்லா போகங்களும் புஜிக்கும் ஸம்பத்தும் அதுக்கடியான ராஜதர்மமும் யான் வேண்டேன். நீர் வேண்டுவதென்னென்னில் (எம்பெருமானீசன்) * अखिलजगत्स्वामिन् अस्मत्स्वामिन्-அகிலஜகத்ஸ்வாமி அஸ்மத்ஸ்வாமி. (எழில்வேங்கடமலைமேல்) எல்லார்க்கும் ஸ்வாமியாயிருந்து வைத்து என்பக்கலிலே விசேஷ கடாக்ஷத்தைப்பண்ணின என்னுதனதான எழிலுடைய திருமலையிலே. (தம்பகமாய் நிற்கும் தவமுடையேனாவேனே) தம்பகமாய் நிற்குந் தவமுடையேனாவேனே. ஒரு ப்ரயோஜநத்துக் காகாதே அங்கே மூத்தற்றுத் தீய்ந்து போவதொரு ஸ்தாவரமாம் தவமுடையேனாவேனே. அநேக ஜந்ம தபஃபலமென்றிருக்கிறார்காணும் இதுதன்னை. ... ... (௫)

அ.—ஆறும்பாட்டு. ஸ்தாவரமானால் ஒருநாள் உண்டாய் ஒருநாள் இன்றியே போமிறே; அங்ஙனன்றியே என்றுமொக்க வுண்டாயிருந்த திருமலையில் ஏகதேசமாக வேணும் நானென்கிறார்.

மின்னனையநுண்ணிடையாருருப்பசியும்மேநகையும்
அன்னவர்தம்பாடலொடுமாடலவையாதரியேன்;
தென்னவெனவண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துள்
அன்னனையபொற்குவடாமருந்தவத்தனாவேனே. (௬)

ப-ரை.—மின் அனைய - மின்போலே, நுண் - நுண்ணிய, இடையார்-இடையையுடையரான, உருப்பசியும் - ஊர்வசியையும், மேநகையும் அன்னவர்தம்- மேநகையையுமொத்த ஸ்த்ரீகளுடைய, ஆடலொடு- நர்த்தநமும், பாடலவை- பாட்டுமாகிற வவைகளை, ஆதரியேன் - விரும்பமாட்டேன்; வண்டினங்கள்- வண்டுக்கூட்டங்களானவை, தென்னென - தெனதெனவென்று ஆளத்திவைத்து, பண்பாடும் - பண்கள் பாடுகிற, வேங்கடத்துள் - திருமலையிலே, அன்னனைய - உபமானரஹிதமான, பொற்குவடாம் - பொன்மலையாயிருக்கத்தக்க, அருந்தவத்தனாவேனே - அரியதபஸ்ஸையுடையவனாக ஆவேனென்கிறார்.

வ்யா.—(மின்னனைய நுண்ணிடையா ரித்யாதி) மின்போலே நுண்ணிய இடையையுடையரான தேவஸ்த்ரீகளைப்போலே அழகியராயிருக்கிற ஸ்த்ரீகளுடைய ஆடல்பாடல்களில் எனக்கு ஆதரமில்லை. (தென்னவென வண்டினங்கள்பண்பாடும் வேங்கடத்துள்). "தெனதென" என்று ஆளத்திவைத்து வண்டினங்கள் பண்பாடுகிற

திருமலையிலே. (அன்னனைய பொற்குவடாம் அருந்தவத்தனுவே னே) அப்படிப்பட்ட பொற்குவடென்னுமத்தனை, வேறு உபமான மில்லை. (அருந்தவத்த னுவேனே) திருவேங்கட முடையானுக் கவ் வருகிருக்கிலிறே; ஆகையாலே, “அருந்தவத்தன்” என்னக் குறை யில்லையிறே. ... ... (௬)

அ.—ஏழாம்பாட்டு. திருமலையில் அதிகாரமானால் ஏறவல்லார் அநுபவித்து, மாட்டாதார்இழக்குமதா யிருக்குமிறே; அப்படியின் றியே, எல்லார்க்கும் அநுபவ யோக்யமாயிருக்குங்கானாறாக வேணும் நானென்கிறார்.

வானாளும்மாமதிபோல்வெண்குடைக்கீழ்மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்துகொண்டாடுஞ்செல்வறியேன்;
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடமலைமேல்
கானாறாய்ப்பாயுங்கருத்துடையனாவேனே. (எ)

ப-ரை.—வான் - ஆகாசப்பரப்பையெல்லாம், ஆளும் - ஆளுகிற, மா - பெ ருமைதங்கிய, மதிபோல் - சந்த்ரனையொத்த, வெண்குடைக்கீழ் - வெண்கொ ற்றக்குடைநிழலிலே, மன்னவர்தம்கோனாகி - ராஜாதிராஜனாய், வீற்றிருந்து- பெருமைதோன்ற விருந்து, கொண்டாடும் - எல்லாஜநங்களும் கொண்டாடத் தக்க, செல்வு - ஸம்பத்தை, அறியேன் - மநஸ்ஸாலும் ஒருபொருளாக நினைத் தறியேன்; தேன்ஆர் - தேன்மிக்கு, பூ - பூத்திருந்துள்ள, சோலை - சோலையை யுடைய, திருவேங்கடமலைமேல் - திருமலையிலே, கானாறாய் - காட்டாறாய், பா யும் - நிலத்தில் சுவறவேணுமென்கிற, கருத்துடையனாவேன் - கருத்தையுடை யவனா யிராநின்றேன்.

வ்யா.—(வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ்)ஆகாசப் பரப்புக்கெல்லாம் சந்த்ரன் ஒருவனுமே யானாப்போலே, லோக மெல்லாம் தன் வெண்கொற்றக் குடைக்கீழே யொதுங்கும்படியாக. (மன்னவர்தம்கோனாகி) நக்ஷத்ரதாராகணங்கள் சந்த்ரனை ஸேவித் திருக்குமாப்போலே, ராஜாக்களெல்லாம் வந்து ஸேவித்திருக்கும் படி ராஜராஜனாய். (வீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன்) வேறுபட விருந்து கொண்டாடும் ஸம்பத்து எனக்கு ப்ரதிபத்தி விஷயமாயிருக்கிறதில்லை. (தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடமலை மேல்) தேன்மிக்கிருந்துள்ள சோலையையுடைய திருமலைமேல். (கானாறாய்ப்பாயுங் கருத்துடைய னாவேனே) ஸஹ்யம் பற்றின தாகில் கீழே போமிறே; அங்கே சுவறிப்போம் காட்டாறாக ளபிஸந் தியை யுடையே னாகவேணும். ... ... (எ)

பிறையேறுசடையானும்பிரமனுமிந்திரனும்
முறையாயபெருவேள்விக்குறைமுடிப்பான்மறையானான்;
வெறியார்தண்சோலைத்திருவேங்கடமலைமேல்
நெறியாய்க்கிடக்கும்நிலையுடையேனாவேனே. (அ)

ப-ரை.—பிறையேறு - மூன்றாம்பிறையை தரித்த, சடையானும் - ஜடையையுடைய ருத்ரனும், பிரமனும் - அவனுக்குத் தமப்பனான ப்ரஹ்மாவும், இந்திரனும் - இந்த்ரனும், முறையாய - தந்தாமுடைய அதிகாராநுகுணமாகப் பண்ணும், பெரு - ச்லாக்யமான, வேள்வி - யாகங்களினுடைய, குறைமுடிப்பான் - குறையைத்தீர்க்குமவனாய், மறையானான் - வேதப்ரதிபாத்யனான ஸர்வேச்வரனெழுந்தருளியிருக்கிற; வெறியார் - பரிமளம்மிக்கு, தண் - குளிர்ந்திருந்துள்ள, சோலை - சோலைசூழ்ந்த, திருவேங்கடமலைமேல் - திருமலைமேலே, எப்போதும் ஸ்ரீவைஷ்ணவர்கள் பாதரேணுபடும்படி, நெறியாய்க்கிடக்கும் - வழியாய்க்கிடக்கும், நிலையுடையனாவேனே - துணிவுடையனாவேனென்கிறார்.

வ்யா.—எட்டாம்பாட்டு. (பிறையேறுசடையானும்) ஸாதகவேஷம் தோற்றும்படி ஜடையோடே யிருக்கச்செய்தே ஸுகப்ரதானனென்று தோற்றும்படி பிறையை தரித்துக்கொண்டிருக்கிறவனும். (பிரமனும்) அவனுக்குஜநகனான ப்ரஹ்மாவும், "ஸ்ரஷ்டா" "ஸேந்த்ர:" என்னும்படியான இந்த்ரனும். (முறையாயபெருவேள்விக்குறைமுடிப்பான்) தந்தாமுடைய அதிகாராநுகுணமாகப் பண்ணும் யஜ்ஞபலமான அதிகாரங்களைக் கொடுக்குமவன். (மறையானான்) ப்ரஹ்மாதிகளுக்கு ஆஸ்ரயணீயமென்னும் வேதைகஸமதிகம்யனானவன். (வெறியார்தண்சோலைத்திருவேங்கடமலைமேல் நெறியாய்க்கிடக்கும்நிலையுடையனாவேனே) பரிமளம் மிக்குக் குளிர்த்தியையுடைய திருமலைமேலே; ஆறானால் ஒருக்கால் பெருகினால் விநியோகப்பட்டு, வற்றினால் விநியோகப்படாதிறே; அங்ஙனன்றியே, எப்போது மொக்க வைஷ்ணவர்கள் ஸஞ்சரிக்கையாலே அவர்கள் பாதரேணு படும்படி வழியாய்க்கிடக்கும் துணிவுடையனாவேனே. "தொண்டரடிப்பொடியாடநாம்பெறில்" என்றிருக்குமவரிறே. (அ)

செடியாயவல்வினைகள்தீர்க்குந்திருமாலே!
நெடியானே!வேங்கடவா!நின்கோயிலின்வாசல்
அடியாரும்வானவருமரம்பையருங்கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே. (௯)

ப-ரை.—செடியாய - பாபபலமான, வல்வினைகள் - ஸம்ஸாரஸம்பந்தத்தை, தீர்க்கும் - அறுக்குமவனாய், திருமாலே - ச்ரிய:பதியாய், நெடியானே - ஸர்வாதிகனாய், வேங்கடவா - திருமலையிலெழுந்தருளியிருப்பவனே, நின் - தேவரீருடைய, கோயிலின் - கோயிலினுடைய, வாசல் - திருவாசலிலே, அடியாரும் - சேஷபூதரும், வானவரும் - தேவதைகளும், அரம்பையரும் - ரம்பாஸ்த்ரீகளும், கிடந்து - கூடி, இயங்கும் - ஸஞ்சரிக்கிற, படியாய்க்கிடந்து - படியாகக்கிடந்து, உன் - தேவரீருடைய, பவளம் - பவளம்போன்ற, வாய் - திருவதரத்தை, காண்பேன் - காணவேணுமென்கிறார்.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (செடியாயவல்வினைகள்தீர்க்கும்) தன்திருவடிகளிலே தலைசாய்த்தாருடைய பாபபலமான ஸம்ஸார

ஸம்பந்தத்தை அறுத்துக்கொடுக்குமவனுய்த்து. செடி-பாபம். (திருமாலை) அதுக்கு நிபந்தநம் கூடவிருந்து செய்விப்பாருண்டாகை. (நெடியானே) அவளாலும் "என்றும்பொறுக்கப்போகாது" என்றபோது "என்னடியாரதுசெய்யார்" என்று - ஆஶ்ரிதவிஷயத்திலோரம் எல்லைகாண வொண்ணுதவன். (வேங்கடவாநின்கோயிலின்வாசல்) தேவரீருடைய திருவாசலிலே. (அடியாரும்வானவரு மரம்பையருங்கிடந்தியங்கும் படியாய்க்கிடந்து) அநந்யப்ரயோஜநரும் ப்ரயோஜநாந்தரபரரும் அந்யபரருங்கிடந்து ஸஞ்சரியாநின்றால் ஒருநினைவற்று அசேதநவத் கிடக்கவேணும். (உன்பவளவாய் காண்பேனே) பாரதந்த்ர்யத்துக்கு அசேதநஸமாதியாகவும் வேணும், அதுபுருஷார்த்தமாகைக்குக் காணவும்வேணும். (கூ)

அ.—பத்தாம்பாட்டு. கிட்டுமளவும் வேண்டாவென்கிறீர், கிட்டினவாறே அநுபவிக்கிறீரென்ன; அவைகிட்டிலும் வேண்டாவென்கிறார்.

உம்பருலகாண்டொருகுடைக்கீழுற்பசிதன்
அம்பொற்கலையல்குல்பெற்றாலுமாதரியேன்;
செம்பவளவாயான்றிருவேங்கடமென்னும்
எம்பெருமான்பொன்மலைமேலேதேனுமாவேனே. (கo)

ப-ரை.—உம்பர் உலகு - மேலுலகங்களையெல்லாம், ஒருகுடைக்கீழ் - தன்னுடைய ஓர்முத்துக்குடை நிழலின்கீழ, ஆண்டு - அரசுசெலுத்தி, உற்பசிதன் - ஊர்வசியுடைய, அம் - அழகிதாய், பொன்கலை - மேகலாபரணமணிந்த, அல்குல் - அல்குலை, பெற்றாலும் - லபித்தாலும், ஆதரியேன் - அவற்றை விரும்பமாட்டேன்; செம் - சிவந்த, பவளவாயான் - பவளம்போன்ற வாயையுடையனுய், எம்பெருமான் - என்நாதனுடைய, பொன் - ச்லாக்யமான, வேங்கடமென்னும் மலைமேல் - திருமலையிலே, ஏதேனும் ஆவேன் - யாதேனுமொரு பதார்த்தமாக ஆவேனென்கிறார்.

வ்யா.—(உம்பருலகாண் டொருகுடைக்கீழ்) உபரிதநலோகங்களெல்லாம் தன்னொருமுத்தின் குடைக்கீழே செலுத்தி. (உற்பசிதன் அம்பொற்கலையல்குல்பெற்றாலு மாதரியேன்) அவற்றைகிட்டுவித்தாலும் எனக்குஆதரம் பிறவாது. (செம்பவளவாயான்) உற்பசியைக்கண்டால் அநாதரிக்கும்படியாய்த்து உள்ளுநிற்கிற விஷயத்தின்படி. (திருவேங்கடமென்னும் எம்பெருமான்பொன்மலைமேல்) என்னுயனுடைய மலைமேல். என்னுயனுடைய ஶ்லாக்யமான திருமலையிலே. (ஏதேனுமாவேனே) அநந்தாழ்வான் இவ்விடத்துக்கு "திருவேங்கடமுடையான் ருனுகவுமமையும்" என்னும்; அதுக்கு பயமென்னென்னில்; ஶேஷபூதர் திரளுக்குப் புறம்பான ஶேஷியாகிலுமமையுமென்கை. அங்ஙனன்றிக்கே பட்டரருளிச்செயயும்படி;-

"நாமறியவேண்டா, திருவேங்கடமுடையானு மறியவேண்டா, கண்டாருமறிந்து ஶ்லாகிக்கவும் வேண்டா, திருமலைமேலே யுள்ள தொரு பதார்த்தமாக வமையும்" என்பர். ... ... (௧0)

மன்னியதண்சாரல்வடவேங்கடத்தான்றன்
பொன்னியலுஞ்சேவடிகள்காண்பான்புரிந்திறைஞ்சிக்
கொன்னவிலுங்கூர்வேல்குலசேகரன்சொன்ன
பன்னியநூல்தமிழ்வல்லார்பாங்காயபத்தர்களே. (௧௧)

ப-ரை.—கொல்நவிலும்-சத்ருக்களை நிரஸிக்கையையே தொழிலாகவுடைய, கூர் - கூரிய, வேல - வேலையுடையரான, குலசேகரன் - ஸ்ரீகுலசேகரப்பெருமாள்; மன்னிய-மாறாத, தண் - குளிர்த்தியொருந்திய, சாரல் - தாழ்வரையையுடைய, வடவேங்கடத்தான்றன் - வடக்கத்திருமலையை யுடையவனுடைய, பொன்இயலும் - ச்லாக்யமாய், சேவடிகள் - செந்தாமரைமலரையொத்த திருவடிகளை, காண்பான் - ஸேவிக்கைக்காக, புரிந்து - ஆசைப்பட்டு, இறைஞ்சி-தலையாலேவணங்கி, சொன்ன - அருளிச்செய்ததாய், பன்னிய - பரம்பின, நூல் - லக்ஷணோபேதமான, தமிழ் - தமிழ்த்தொடையை, வல்லார் - வல்லவர்கள், பாங்காய - அவன்திருவுள்ளத்துக்குப் பாங்கான, பத்தர்கள் - பக்தர்களாவொன்கிருர்.

வ்யா.—பதினொராம்பாட்டு. (மன்னியதண்சாரல்வடவேங்கடத்தான்றன் பொன்னியலுஞ்சேவடிகள் காண்பான்) கண்டால் கால்வாங்கமாட்டாதே பிணிப்படும்படி ஶ்ரமஹரமான பர்யந்தத்தை யுடைய தமிழுக்கெல்லையான திருமலையை யுடையவனுடைய ஶ்லாக்யமான திருவடிகளைக் காண்கைக்காக. (புரிந்திறைஞ்சி) காணவேண்டும்படி பக்தியையுடையராய்த் தலையாலே வணங்கிக் கவிபாடினாராய்த்து. (கொன்னவிலுங்கூர்வேல் குலசேகரன்சொன்ன) ப்ரதிபக்ஷத்தைவெல்லவல்லர்போலேயாய்த்துக் கவிபாடிருக்கும்படியும். (பன்னியநூல்தமிழ்வல்லார்) பரம்பின லக்ஷணோபேதமான தமிழ்த்தொடையை வல்லவர்கள். (பாங்காயபத்தர்களே)இங்கே யிருந்து "அதுவரவேணும், இதுவரவேணும்"என்னுதே அவனுக்கு இஷ்டவினியோகார்ஹமாவர்கள். ... ... (௪௧)

குலஶேகராழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஊன் ஆறுத பின் ஒண் கம்பம் மின் வான் பிறை செடி உம்பர் மன்னிய தரு.

ஆ திருமொழி ௪-க்கு பாட்டு-௪௧.

அஞ்சாந்திருமொழி - தருதுயரம் - பரவேசம்.

அ.—(தருதுயரம்) திருமந்த்ரத்தால் சொல்லிற்றாய்த்து அநந்யார்ஹஶேஷத்வமிறே; இந்த அநந்யார்ஹ ஶேஷத்வப்ரதிபத்திக்கு விரோதிதான் "நான் என்னது" என்றிருக்கும் அஹங்கார மமகாரமிறே; * அநாத்மந்யாத்மபுத்தியும் அஸ்வேஸ்வத்வ புத்தியுமிறே ஸம்ஸாரமாகிற வ்ர்க்ஷத்துக்கு பீஜமென்று ப்ரமாணங்கள் சொல்லுகிறது; அது சேதநர்க்குப் பொதுவானதிறே. அப்படியன்றியே, ராஜாக்களாகையாலே அஹங்கார மமகார வஶ்யராயிறே யிருப்பது. "நிலா, தென்றல், சந்தநம்" என்று சொல்லுகிற இவை பாரார்த்தமாகாதபோது ஸ்வரூபஸித்தியில்லை யாமிறே. அப்படியேயிறே பாரார்த்தமானவஸ்துவுக்கும் அஹங்காரமமகாரத்தாலே ஸ்வரூபஸித்தி யழியுமிறே. இப்படி பாரார்த்தமென்னும்படிக்கு ப்ரமாணமுண்டோவென்னில்; இவனை "யஸ்யாஸ்மி" "யஸ்யாஸ்மி" என்றும் ஓதி, "பதிம்விஶ்வஸ்ய" "பதிம்விஶ்வஸ்ய" என்றும் அவனை ஓதுகையாலே இவனொன்றுக்கும் கடவனல்லன்; உடையவனானவவன் எல்லாவற்றுக்கும் கடவனென்றதிறே. அப்படி ப்ரமாணங்களால் சொன்ன ஶேஷத்வப்ரதிபத்தியாவது - ததீயஶேஷத்வ பர்யந்தமான அநந்யார்ஹ ஶேஷத்வமிறே. அப்படி தமக்குப் பிறந்திருக்கச்செய்தே அது பலப்ரதமாகக்கண்டிலர்; தான் தன்கருமம் செய்கிறானென்றுதல்; நாம் க்ரமத்தால் செய்கிறோமென் றாறியிருந்தானுதல்; நம்முடையத்வரைக்கடியான ருசியுமறியு மவனுகையாலே ருசிபாகமானால் செய்கிறோமென்றுஆறியிருந்தானு மித்தனை. நம்மைப்போலன்றியே, செய்தது அறிந்திருக்கும் ஸர்வஜ்ஞனுகையும், நினைத்தது தலைக்கட்டவல்ல ஸர்வஶக்தியா யிருந்துவைத்து ஆறியிருக்கும்போது சிலஹேதுக்களுண்டாக வேணுமிறே என்று பார்த்து, எனக்கு நானுமில்லை, பிறருமில்லை, பேற்றில் த்வரையாலே துடிக்கிறேனித்தனையல்லது ஸாதநாநுஷ்டாந க்ஷமனுமல்லேனென்னு மிடத்தை அநந்யகதிகளா யிருக்கும் பதார்த்தங்களைநிதர்ஶநமாஇவிட்டுத் தம்முடைய அநந்யகதித்வததை திருவித்துவக்கோட்டுநாயனார் திருவடிகளிலே விண்ணப்பஞ்செய்கிறார். ... ...

தருதுயரந்தடாயேலுன்சரணல்லால்சரணில்லை;
விரைகுழுவுமலர்ப்பொழில்சூழ்வித்துவக்கோட்டம்மானே!;
அரிசினத்தாலீன்றதாயகற்றிடினும்மற்றவள்தன்
அருள்நினைந்தேயழுங்குழவியதுவேபோன்றிருந்தேனே.(க)

ப-ரை.—விரைகுழவு - பரிமளம்மிக்க, மலர் - மலர்களையுடைய, பொழில் சூழ் - பொழிலாலே சூழப்பட்ட, வித்துவக்கோடு - திருவித்துவக்கோட்டி

லெழுந்தருளியிருக்கிற, அம்மானே-ஸர்வேச்வரனே, தரு-நீயேதருகிற, துயரம் - துஃகத்தை, தடாயேல் - நீயேபோக்காயாகில், உன்சரணல்லால் - தேவரீர்திருவடிகளே உபாயமல்லது, சரண் இல்லை-வேறே உபாயமில்லை; ஈன்றதாய்-பெற்றதாயாரானவள், அரி-அரிந்து பொகடவேண்டும், சினத்தால்- கோபத்தாலே, அகற்றிடினும் - தள்ளிவிட்டாலும், அவள் தன் - அந்தத்தாயாருடைய, அருள் - அருளையே, நினைந்து - நினைத்துக்கொண்டு, அழும் - அவளைக்காலைக்கட்டிக்கொண்டழுகிற, குழவியதுவேபோன்று இருந்தேன் - குழந்தையையொத்திருந்தேனென்கிறார்.

வ்யா.—முதற்பாட்டு. (தருதுயரந் தடாயேல்) நீயே தருகிற துஃகத்தை நீயே மாற்றாயாகில். தன்னாலே தனக்கு விரோதிவந்ததென்றும் தானே ஸாதநாநுஷ்டாநத்தாலே அதுபோக்கிக்கொள்வானென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லிக் கிடக்கச்செய்தே, இவர் அவனே துயர்தந்தானென்பானென்னென்னில்; ப்ராப்தா ப்ராப்த விவேகம்பண்ணி யிருப்பாரொருவ ராகையாலே சொல்லுகிறார். தானே கர்மம் பண்ணினவன் தானே ஸாதநாநுஷ்டாநம்பண்ணித் தவிர்த்துக் கொள்ளுகிறானென்று நம்மைப் பழியிட்டுத் தள்ள நினைத்தானாகிலும் நானும் தன்னைக் குறித்து பரதந்த்ரன், நான்செய்த கர்மமும் பரதந்த்ரம், நான் பண்ணும் ஸாதநாநுஷ்டாநத்துக்கு பலப்ரதன் தானாகையாலே அதுவுந் தன்னைக் குறித்துப் பரதந்த்ரமாகையாலே (தருதுயரம்) என்கிறார். முதலிகளெல்லாருங் கூடப் பெரிய திருமண்டபத்துக்குக் கீழாகவிருந்து ரஹஸ்யார்த்தங்கள் விசாரித்து எழுந்திருப்பார்களாய்த்து; ஒருநாள், நித்யஸம்ஸாரியாய்ப்போந்தவனுக்கு பகவத்விஷயத்தில் ருசி பிறக்கைக் கடியென்னென்று விசாரிக்கச்செய்தே, யாத்ர்ச்சிக ஸுக்ர்தமென்ன, அஜ்ஞாத ஸுக்ர்தமென்னப் பிறந்தது; அவ்வளவில் கிடாம்பிப் பெருமாளிருந்தவன் நமக்கு பகவத்ஸமாஶ்ரயணம்போலே ஸுக்ர்ததேவரொன்றொருவருண்டோ ஆஶ்ரயணீயன் என்றான்; பிள்ளை திருநறையூரரையர், ஸுக்ர்தமென்று சொல்லுகிற நீர் தாம் நினைத்திருக்கிறது எத்தைக்காணென்றார். அதாவது-ஒன்றை ஆராயப்புக்கால் அதுக்கவ்வருகு வேறொன்றின்றியிருப்பதிறே - அடியாவது; யாதொன்று பலப்ரதமானதிறே உபாயமாவது; அல்லது நடுவே அநேகாவஸ்தை பிறந்தால் அவற்றினளவில் பர்யவஸியாதிறே. இளைப்பாறுவது இதிலே சென்றிறே; நடுவு இளைப்பாறுதிறே; * தருதுயரமென்னலாமிறே.

(தடாயேல்) நீ விளைத்த துஃகம் நீயே போக்காயாகில். "𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾" "மமமாயாதுரத்யயா" என்றும், "𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇" "மாமேவயேப்ரபத்யந்தே மாயாமேதாந் தரந்திதே" என்றும் - நம்முடைய மாயை யொருவரால் கடக்க

வொண்ணாதுகாணென்றும், இது கடக்கவேண்டியிருந்தவன் நம்மை ப்பற்றிக் கழித்துக் கொள்வானென்றும் நீயே சொல்லி வைக்கையாலே நீயே துயர்தந்தா யென்னும்படி தோற்றப்படுகிறதிறே. துக்கத்தை விளைப்பானொருவனும் போக்குவா னொருவனு மாயன்றிறே யிருப்பது. பண்ணினவன்றானே போக்கு மித்தனையிறே. பிள்ளை திருநறையூரரையர், "ஒரு குருவி பிணைத்த பிணையல் ஒருவரால் அவிழ்க்க வொண்கிறதில்லை; ஒரு ஸர்வசக்தி பிணைத்த பிணையை எலியெலும்பனானவிவன் அவிழ்க்கவென்று ஒருகார்ய மில்லையிறே; அவன் றன்னையே கால்கட்டிப் போக்கு மித்தனையிறே" என்றார். (உன் சரணல்லால் சரணில்லை) இவ்வளவாக விளைத்துக்கொண்ட நான் எனக்கில்லை; பிறர் ரக்ஷகருண்டாகிலும் நான் அவர்களை ரக்ஷகராகக்கொள்ள மாட்டாமையாலே அவர்களுமில்லை; நான் பண்ணும் ஸாதநாநுஷ்டாநமும் எனக்குக் கழுத்துக் கட்டியாகையாலே தேவரீர்திருவடிகளல்லது வேறுபாயமில்லை.

(விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே) பரிமளப்ரசுரமான சோலையை யுடைத்தான திருவித்துவக்கோட்டிலே எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனே. (விரைகுழுவுமலர்ப்பொழில்சூழ்) "सर्वगन्धः" "ஸர்வகந்த:" என்கிற ப்ராப்யவஸ்து வந்துகிட்டின விடமென்று தோற்றியிருக்குமாய்த்து. (வித்துவக்கோட்டம்மானே) உபாயமாம்போது ஸுலபமாக வேணுமிறே. (அம்மானே) ப்ரஜை உறங்குகிறதொட்டிற்கீழே கிடக்கும்தாயைப் போலே இங்கேவந்து கிட்டினவனே. தம்முடைய பாரதந்த்ர்யத்தாலே தம்முடைய ரக்ஷணத்துக்கு தமக்கு ஆனவையும் சொன்னார்; சேஷியாகையாலே தம்முடைய ரக்ஷணத்துக்கு ப்ராப்தன் அவனென்கிறார் - இப்போது; ஒருவன்பேற்றுக்கு ஒருவன் ஸாதநமாம்போது இத்தனைப்ராப்தி யுண்டானாலல்லது ஆகாதிறே. ப்ரஜையுடைய நோய்க்குத்தாயிறே குடிநீர்குடிப்பாள். மேல் தாயை நிதர்சநமாகச்சொல்லப் புகுகிறவராகையாலே இப்போது "அம்மானே" என்று ப்ராப்திதோற்றச் சொல்லுகிறார்.

(அரிசினத்தாலித்யாதி) அவனே ரக்ஷகனென்னும் அத்யவஸாய முண்டானாலும் பேறுதாழ்த்தால் அவனைவெறுக்கவேண்டும் ப்ராப்தியுண்டிறே சேதநனாகையாலே. "தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்று-அசித்ஸமாநமாக பாரதந்த்ர்யத்தைச் சொல்லி வைத்து, "எனக்கேகண்ணனை யான்கொள்சிறப்பு" என்கிறது புருஷார்த்தஸித்தி சேதநனுக்கு ஆகவேண்டியிறே. அவனைக்குறித்து சேதநாசேதநங்க ளிரண்டுக்கும் பாரதந்த்ர்யம் அவிசிஷ்டமாயிருக்கச்செய்தே புருஷார்த்தஸித்தி இவனுக்குண்டாகிறது சேதந

னாகையாலே யிறே. (அரிசினத்தால்) அரிந்துபோகவேண்டுஞ் சினத்தையுடையளாய்க் கொண்டு. (ஈன்றதாய்) "வளர்த்ததாய்" என்னாதே "ஈன்றதாய்" என்றத்தாலே-ப்ராப்தம்சொல்லிற்று. (அகற்றிடினும்) "அகற்றிடினும்" என்கையாலே - அகற்றுகை அஸம்பாவிதமென்கிறது. "ஈன்றதாய்"என்கையாலே-பெறுகைக்குநோன்பு நோற்கையும் பத்துமாஸம் சுமக்கையும் ப்ரஸவவேதனை படுகையுமென்கிற இவையெல்லா முடையவளென்கை. (அகற்றிடினும்) இப்படி பெறுவதுக்குமுன்புள்ள வெல்லாதுக்கமும் பட்டவளாகையாலே வருகிறத்தை நினைக்குமதொழிய அகற்ற நினையாளிறே; அவள்தானே அகலவிடினும்.'இத்தால்சொல்லிற்றாய்த்து-நிருபாதிக தேவரீர் கைவிடினும் வேறெனக்குப் புகலில்லை யென்கிறார் (மற்றவள்தன் அருள் நினைந்தேயழுங்குழவி) இவள் கோபித்து விட்டாலும் வேறொருவருடைய அருளை அபேக்ஷியாதிறே ப்ரஜை. அதுக்கடியானப்ரேமத்துக்கவதியுண்டாகிலிறேகோபத்துக் கவதியுள்ளது; ஸ்நேஹமில்லாமையாலேகோபமில்லையிறே பிறர்க்கு;-நம்பிதிருவழுதிவளநாடுதாஸரை முதலியாண்டான் கோபித்து,கையாலுங்காலாலுந்துகைத்து இழுத்தவாறேதிண்ணையிலே பட்டினியே யொருநாள் போகாதே கிடந்தார்; ஆண்டான் மற்றைநாள் அமுதுசெய்யப்புகுகிறார்; "அவன் செய்ததென்" என்று கேட்டவாறே, "பட்டினியே வாசலிலே கிடந்தான்" என்று கேட்டு அழைத்து, "நீ போகாதே கிடந்ததென்" என்ன; "ஒருநாள் ஒருபிடி சோறிட்டவன் எல்லாப்படியாலும் நிந்தித்தாலும் வாசல்விட்டுப்போகிறதில்லை, நாத!நான்எங்கேபோவது"என்றார்.(அழுங்குழவியதுவேபோன்றிருந்தேனே) வேறுசிலரால்ஆற்றவொண்ணாதிறே; முன்னமுலைகொடுத்தவுபகாரத்தைநினைத்திருக்குமதாகையாலேஅவள்தானே ஆற்றவேணுமே. "ஸ்தநந்தய:" "ஶிஶுஸ்ஸ்தநந்தய:", "அளவில் பிள்ளைமை" என்று சொல்லுகிறபடியே. அதாவது - ரக்தஸ்பர்ஶமுடையாரெல்லாரையு மறியாதே மாதா வொருத்தியையு மறியுமளவேயாய்த்து அதிபால்யம்; அப்படியே எம்பெருமானைக்குறித்து இவ்வாத்மவஸ்து நித்ய ஸ்தநந்தயமாயாய்த்திருப்பது. ஆகையாலிறே இவன் பேற்றுக்கு அவன் உபாயமாகிறது. ... ...

கண்டாரிகழ்வனவேகாதலன்றான்செய்திடினும்
கொண்டானையல்லாலறியாக்குலமகள்போல்;
விண்டோய்மதிள்புடைசூழ்வித்துவக்கோட்டம்மாநீ
கொண்டாளாயாகிலுமுன்குரைகழலேகூறுவனே. (௨)

ப-ரை.—கண்டார் - பார்த்தவர்களெல்லாரும், இகழ்வனவே-இகழத்தக்க காரியங்களையே, காதலன்றான் - தன்கணவனானவன், செய்திடினும் - செய்

தாலும், கொண்டானையல்லால் - தன்னைக்கல்யாணம் செய்துகொண்ட புருஷனையொழிய, அறியா - வேறொருபுருஷனை மநஸ்ஸாலும் நினைத்தறியாத, குலமகள்போல் - பதிவ்ரதையைப்போலே; விண் - ஆகாசத்தை, தோய்-அளாவிய, மதிள் - திருமதிள்கள், புடைசூழ் - நாற்புறமும் சூழப்பட்டிருப்பதான, வித்துவக்கோட்டம்மா—, நீ - தேவரீர், கொண்டு - அடியேனை சேஷபூதனாகக் கொண்டு, ஆளாயாகிலும் - அடிமைகொள்ளாவிட்டாலும், உன்-உன்னுடைய, குரைசப்தியாநின்றுள்ள, கழலே-வீரக்கழலணிந்த திருவடிகளையே, கூறுவன் ஸ்துதிப்பே னென்கிறார்.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கண்டாரிகழ்வனவே காதலன்றான்செய்திடினும்) தானும் அவனுமறிந்ததாகப்பிறக்கும் ப்ரணய கலஹங்களுக்கும் பரிஹாரங்களுக்கும் ஓரவதியில்லையிறே. அப்படியன்றியே, இவர்கள் கார்யங்கொண்டுகார்யமில்லாத உதாஸீநரும் இகழும்படிக்கீடான அஸஹ்யங்களை அவன்பண்ணினாலும். (காதலன்) ப்ரேமத்தை யிட்டு நிரூபிக்கவேண்டி யிருக்குமவன். (கொண்டானையல்லாலறியாக்குலமகள்போல்) இவ்வருகு அவன்பண்ணும் அபகாரங்களைக் காற்கடைக்கொண்டு ஸம்பந்தத்தில் முதலடியிலே நினைத்திருக்குமவளைப்போலே. (கொண்டானையல்லா லறியாக் குலமகள்போல்)அக்நிக்கு அந்தர்யாமியான ஸர்வேஶ்வரனைஸாக்ஷியாகக்கொண்டவனையல்ல தறியாதவளைப்போலே. "கொண்டானை யல்லாலறியா" என்கையாலே - பாதிவ்ரத்யஞ் சொல்லிற்று; "குலமகள்" என்கையாலே - ஆபிஜாத்யம் சொல்லிற்று. (விண்டோய்மதிள் புடைசூழ் வித்துவக்கோட்டம்மா) பிராட்டிஸ்வயம்வரத்துக்கு ஸ்ரீமிதிலையில் புறச்சோலையிலே விட்டிருந்தாப்போலே, இவரை ஸ்வயம்வரிக்கைக்காகவிறே திருவித்துவக் கோட்டிலே நிற்கிறது. (நீகொண்டாளாயாகிலும்) இவ்வளவாக உபகாரகனானநீ குறையுந் தலைக்கட்டாதே உபேக்ஷித்தாலும். (உன்குரைகழலே கூறுவனே) உன்திருவடிகளல்லது எனக்கு வேறு புகலில்லை. உபகாரகனானநீ உபேக்ஷித்தாயென்று கைவாங்குமவனன்றுநான்; "எனதாவியார்? யானார்?" என்று-நீபண்ணின உபகாரத்துக்குத் தலைசீய்க்குமவன் நானென்கிறார். ௨

மீனோக்குநீள்வயல்சூழ்வித்துவக்கோட்டம்மா!என்
பால்நோக்காயாகிலுமுன்பற்றல்லால்பற்றிலேன்;
தானோக்காதெத்துயரஞ்செய்திடினுந்தார்வேந்தன்
கோல்நோக்கிவாழுங்குடிபோன்றிருந்தேனே. (௩)

ப-ரை.—மீன் - பலவகைப்பட்ட மத்ஸ்யங்களும், நோக்கும்-நித்யவாஸம் பண்ணத்தேடுகிற, நீள் - ஜலஸம்ருத்தியையுடைய, வயல்சூழ் - வயலாலே சூழப்பட்ட, வித்துவக்கோட்டம்மா—, என்பால் - என்விஷயத்தில், நோக்காயாகிலும் - கடாக்ஷியாதிருந்தாயே யாகிலும், உன்பற்றல்லால்-உன்னைத்தஞ்சமாகப்

பற்றுகையொழிய, பற்றிலேன்-வேறொருவரைத் துணையாகப் பற்றமாட்டேன்; தார் - ரக்ஷணத்திலே தீக்ஷித்துத் தனிமாலையிட்டிருக்கிற, வேந்தன்றன் - ராஜாவானவன், நோக்காது - ப்ரஜைகளை ரக்ஷியாமல், எத்துயரம்செய்திடினும்- எவ்வகைப்பட்ட துபங்களைச் செய்தாலும், கோல்நோக்கி - அவனுடைய ஆஜ்ஞையைப் பின்சென்று, வாழும் - வர்த்திக்கிற, குடிபோன்றிருந்தேன்- குடிகளைப்போ லிருந்தேனென்கிறார்.

வ்யா.—மூன்றாம்பாட்டு.(மீன்நோக்கும்நீள்வயல்சூழ்) மத்ஸ்யமென்று பேர்பெற்றவையடையக் கடாக்ஷிக்குந் தேசமாய்த்து.கடலில்மத்ஸ்யம்,“கடல்வற்றினால் நமக்குப்புகலிடம்”என்றுநினைத்திருக்கும்தேசமாய்த்து.(வித்துவக்கோட்டம்மா) பரமபதத்திலுள்ளாரும்சீலகுணமநுபவிக்குந் தேசமாய்த்து.உத்கர்ஷம் தர்மிப்ரயுக்தமென்று ப்ரமாணத்தாலே நாம் கேட்டறியுமாப்போலே சீலாதிகள் தர்மிப்ரயுக்தமென்றிருக்கு மித்தனையிறே பரமபதத்தில்; கண்டநுபவிக்கலாவது இங்கேயிறே. (வித்துவக்கோட்டம்மாஎன்பால் நோக்காயாகிலும்) பரமபதமாகிற வொருநாடாக நீ நோக்குகிற நோக்கை என்னையொருவனையுமேநோக்கிவந்து இப்போது என்னைக் கடாக்ஷியாதிருந்தாயாகிலும். (உன்பற்றல்லால் பற்றிலேன்) என்னுடையரக்ஷையி லுத்யுக்தனானவுன்னைவிட்டு பாதகராகஸம்ப்ரதிபந்நரானாரைப் பற்றுவேனோ. நித்யஸம்ஸாரியாய் இவ்வளவாகச் சூழ்த்துக்கொண்ட வென்னைப்பற்றவோ; என்னுடைய ரக்ஷணத்தில் என்னோபாதியும் ப்ராப்தியில்லாத பிறரைப்பற்றவோ. (தான் நோக்காதெத்துயரஞ்செய்திடினும்தார்வேந்தன்)ப்ரஜைகளுடைய ரக்ஷணத்திலே தீக்ஷித்துத் தனிமாலையிட்டிருக்கிற ராஜாவானவன், ரக்ஷணத்திலே நெகிழநிற்குமளவன்றிக்கே, எல்லா துக்கங்களையும் விளைக்கிலும். (தார்வேந்தன்கோல்நோக்கி வாழுங்குடிபோன்றிருந்தேனே) ரக்ஷகனாயிருந்துவைத்து பாதகனானாலும் அவனுடைய ஆஜ்ஞாநுவர்த்தநம் பண்ணுங்குடிபோலே யிருந்தேன். சிறியத்தைப்பெரியதுதின்னாமல் காக்கத்தான்மாட்டான்; செங்கற்சீரைகட்டி ரக்ஷிப்பித்துக்கொள்ளும் முறை அவனுக்குண்டு; என்ரக்ஷணத்தில் எனக்குஅந்வய மில்லாதாப்போலே,ஸம்பந்தமுடைய நீயே ரக்ஷிக்குமித்தனை. நான் செய்யலாவதுமில்லை, நீ மாட்டாததுமில்லை. (௩)

அ.—நாலாம்பாட்டு. “ஒருவனாலே ஹிதம்” என்றும்,“பலத்திலே அந்வயம் ஒருதலைக்கே” என்றும் அத்யவஸித்தால், ஹிதங்களையே ப்ரவர்த்தியா நின்றானென்று தோற்றினாலும்,அவனே ரக்ஷகனென்று கிடக்கவிறே கடவது. பிள்ளை திருநறையூரரையரை, பிள்ளைகள் “புகைசூழ்ந்தபடி ஸஹிக்கப்போகிறதில்லை” என்ன; “சற்றுப்போதன்றோ வ்யஸநப்படுவது, ஸ்ரீவைகுண்டநாதன் திருவடிகளிலே ஸுகமேயிருக்கவன்றோ புகுகிறது” என்றாரிறே. தான் தஞ்சமாக

ப் பற்றினவிஷயத்துக்கு அந்யதாஸித்தி பிறந்ததோவென்று மீளு ம்படியிருக்கிற தசையிலே,ஹேத்வந்தரமது அவ்வருகில் பேற்றில் குறையில்லையென்னும் அத்யவஸாய மிருந்தபடியிறே; இதிலே மஹாவிஶ்வாஸமாகிறது - தோற்றுகிற ஆபாதப்ரத்தியைக்கண்டு மீளாதே யிருக்குமதிறே.

வாளாலறுத்துச்சுடினும்மருத்துவன்பால்
மாளாதகாதல்நோயாளன்போல்;மாயத்தால்
மீளாத்துயர்தரினும்வித்துவக்கோட்டம்மா!நீ
ஆளாவுனதருளேபார்ப்பனடியேனே. (௪)

ப-ரை.—வாளால்-கத்தியாலே, அறுத்து—, சுடினும்-ஊசியைக்காய்ச்சி ச்சுட்டாலும், மருத்துவன்பால் - வைத்யனிடத்தில், மாளாதகாதல் - நீங் காத ப்ரேமத்தையுடைய, நோயாளன்போல் - நோயாளியைப்போலே; வித் துவக்கோடு-திருவித்துவக்கோட்டிலெழுந்தருளியிருக்கிற,அம்மா-ஸர்வஸ்வாமி யான, நீ—, மாயத்தால் - உன்மாயையாலே, மீளா - ஒருக்காலும் நீங்காத, துயர்தரினும்- துக்கத்தைவிளைத்தாலும், அடியேன் - சேஷபூதனான நான், ஆளா - அடிமைசெய்கைக்காக, உனதருளே - உன்னுடைய க்ருபையையே, பா ர்ப்பன் - புத்திபண்ணியிருப்பேனென்கிறார்.

வ்யா.—(வாளாலறுத்துச்சுடினும்) ஹிம்ஸகர், ஸாதநத்தைக் கொண்டு அறுப்பது சுடுவதானாலும். (மருத்துவன்பால்மாளாத காதல்நோயாளன்போல்) அஹிதங்களை மேல்மேலனை ப்ரவர்த்திப் பிக்கச்செய்தேயும் பிஷக்கு, "அவன் நமக்கு ஹிதகாமன்" என்று அவனுக்குத் தன் ஸர்வஸ்வத்தையுங் கொடுத்து அவன் பக்கலி லே ஸ்நேஹத்தைப்பண்ணும் வ்யாதியாளனைப்போலே. (மாயத் தால் மீளாத்துயர்தரினும்) "மமமாயா" "மமமாயா" என்னும் படியே உன்னுடையதான ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே அபுநராவ ர்த்தி லக்ஷணமே துக்கத்தை விளைக்கினும். (வித்துவக்கோட்டம் மாநீ - மீளாத்துயர்தரினும்) எனக்கு த்யாஜ்யமான ஸம்ஸாரத்தி லே என்னுடைய ரக்ஷணத்துக்காகக் குடியேறியிருக்கிற நீ நித்ய துக்கத்தை விளைக்கினும். பெற்றதாய் ப்ரஜைக்கு அஹிதஞ்செய்யா ளிறே நீசெய்வது; அப்படியிருக்கிற நீ செய்யினும். (ஆளா) ஸ்வ ரூபாநுரூபமான வ்ருத்தியைப் பெறுகைக்காக. (உனதருளேபார்ப் பன்) இப்போது தோற்றுகிற வ்யஸநங்களை புத்திபண்ணாதே உன் க்ருபையையே புத்திபண்ணியிருப்பன். இப்படியிருக்கைக்குநிபந்தந மென்னென்னில்; அடியேனாகையாலே. என்ஸ்வரூபத்தையும் உன் ஸ்வரூபத்தையும் நேராக வறிந்தவனாகையாலே. அன்றுகண்டாப் போலே கையும்வில்லுமாய் நிற்பன்; அவனுக்குஅச்சத்தாலே, தன க்குஉருவுவெளிப்பாட்டாலே முன்னேநிற்பர்;தீரக்கழிய அபராதஞ்

செய்தவெனக்கு அவர் க்ர்பைபண்ணுவரோவென்று அவனுக்கு நினைவாகக்கொண்டு; [ப்ருஷர்ஷப:-புருஷர்ஷப:] நீ அநுகூலனாய் ஓரடி வரநின்றால் அத்தையே நினைத்து நீ பண்ணின அபகாரமெல்லாம் புத்திபண்ணுவரோ. அவர் புருஷோத்தமன்காண். [முன்பூழிகாணான்] குற்றத்தை மறக்கும்; அன்றியே, "குற்றம்செய்தநாளை நினைக்கில் குற்றந்தோற்றுமென்று அந்நாளையும்மறக்குமவர்காண்" என்றுபிராட்டி ராவணனுக் கருளிச்செய்தபடியே இனி நீரல்லாது புகலில்லையென்கிறார். ... ... (௪)

வெங்கட்டிண்களிறடர்த்தாய்!வித்துவக்கோட்டம்மானே!
எங்குப்போயுய்கேனுன்னிணையடியேயடையலலால்;
எங்கும்போய்க்கரைகாணாதெறிகடல்வாய்மீண்டேயும்
வங்கத்தின்கூம்பேறுமாப்பறவைபோன்றேனே. (௫)

ப-ரை.—வெம் - வெவ்விய, கண் - கண்ணையும், திண் - திண்ணியநெஞ்சையுமுடைத்தான, களிறு - குவலயாபீடத்தை, அடர்த்தாய் - கொன்றவனே, வித்துவக்கோட்டம்மானே—, உன் - உன்னுடைய, இணையடியே - திருவடிகளே, அடையலலால் - தஞ்சமாமதொழிய, எங்குப்போய் - வேறுயாரிடத்திலேபோய், உய்கேன் - உஜ்ஜீவிக்கப்போகிறேன்; எங்கும்போய் - நாலுதிக்கிலும் போய்ப்பார்த்து, கரைகாணாது - கரைகாணாமையாலே, எறி - அலையெறிகிற, கடல்வாய் - ஸமுத்ரத்திலே, மீண்டு - திரும்பிவந்து, ஏயும் - அங்குவாத்தக்கிற, வங்கத்தின் - கப்பலினுடைய, கூம்பு ஏறு - கம்பத்தில் ஏறிநிற்கிற, மா - பெரிய, பறவைபோன்றேனே - பக்ஷியை யொத்திருந்தேனென்கிறார்.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வெங்கட்டிண்களிறடர்த்தாய்) வெவ்வியகண்ணையும் திண்ணியநெஞ்சையு முடைத்தான குவலயாபீடத்தைக் கொன்றவனே. ப்ரபலப்ரதிபந்தகங்களுண்டென்றிருக்கவேணுமோ தேவரீருள்ளீராயிருக்க. (வித்துவக்கோட்டம்மானே) ப்ரதிபந்தகம் போக்கிற்று அவதாரகாலத்திலேயிறே; அது தீர்த்தம் ப்ரஸாதித்ததிறேயென்று பிற்பாடர்க்கு இழக்கவேண்டாதபடி திருவித்துவக்கோட்டிலே வந்து ஸந்நிஹிதனானவனே. பரமபதம் கலவிருக்கையாக ஸ்வாம்யத்வத்தை நிர்வஹிக்கைக்காகவன்றோ இங்கு வந்தெழுந்தருளியிருக்கிறது. (வித்துவக்கோட்டம்மானே எங்குப்போயுய்கேன்) ப்ராப்தனுமாய்ப் பசியனுமானவன் வாசலிலேவந்து "சோறுசோறு" என்னுமிற்க, அந்யராய் நிரபேக்ஷரானவர்களை யுண்ண.வழைப்பாரைப்போலே, உன்னைவிட்டு பரமபதத்திலேயிருக்கிற அவாப்த ஸமஸ்த காமனைப்பற்றவோ. (எங்குப்போயுய்கேன்) உஜ்ஜீவநஹேதுவாகப் போமிடமில்லை, விநாஶஹேதுவாகப் போகில் போமித்தனையிறே. உகந்தருளின தேஶங்களைவிட்டு தேவதாந்தரங்களைப் பற்றுகையாவது - விநாஶபர்யாயமிறே. (உன்னிணையடியே

அடையலலால்) அத்யவஸாயமாவது-புத்யர்த்தமிறே. அவன்றானே வந்து கிட்டச்செய்தே, இழக்கிறார் இழக்கிறதும் பெறுகிறார் பெறுகிறதும்-அப்ரதிபத்தியாலும் விப்ரதிபத்தியாலுமிறே. (எறிகடலித்யாதி) பெரிய க்ஷோபத்தையுடைய கடலிலே ஒரு மரக்கலமாவது, அதின்கொம்பிலேயிருந்ததொருபக்ஷி நாலுதிக்கிலும் போக்கிடந்தேடிப்பறந்தாலும் கரைகாணவொண்ணாதிறே; மீண்டுவந்துகால்பாவலாவதுஇம்மரக்கலத்திலேயிறே. அப்படியேஸம்ஸாரஸாகரத்தைக் கடக்கும்போது உகந்தருளினதேசமான திருவித்துவக்கோட்டைப்பற்றிக் கடக்கலா மத்தனையல்லது வேறுபாயமில்லையிறே. கடக்கைக்கு உகந்தருளின தேசத்தை யொழிந்ததெல்லாம் அக்கடல்போலேயிறே. (மாப்பறவைபோன்றேனே) தானேவிட்டுக் கொண்ட அகலமெல்லாம் நீரிலே ஆழுகைக்குடலா மித்தனையிறே; அவன்கை நெகிழ்ந்தானென்றுதோற்ற அடிமட்டையை யுரக்கப்பற்றுமித்தனையிறே. ... ... (௫)

செந்தழலேவந்தழலைச்செய்திடினுஞ்செங்கமலம்
அந்தரஞ்சேர்வெங்கதிரோற்கல்லாலலராவால்;
வெந்துயர்வீட்டாவிடினும்வித்துவக்கோட்டம்மா! உன்
அந்தமில்சீர்க்கல்லாலகங்குழையமாட்டேனே. (௬)

ப-ரை.—செம் - சிவந்த, தழல் - நெருப்பானது, வந்து - கிட்டி, அழலைச் செய்திடினும் - உஷ்ணத்தைப் பண்ணினும், செம் - அழகிய, கமலம் - தாமரைகளானவை, அந்தரஞ்சேர் - ஆகாசத்திலே வர்த்திக்கிற வெங்கதிரோற்கல்லால் - ஸூர்யனுடைய உஷ்ணத்துக்கல்லது, அலரா - மலராவாம்; வித்துவக்கோட்டம்மா—, வெந்துயர் - என்னுடைய க்ரூரமான துக்கத்தை, வீட்டாவிடினும்-நீபோக்காவிட்டாலும், உன் - உன்னுடைய, அந்தமில்-அளவில்லாத, சீர்க்கல்லால் - கல்யாணகுணங்களுக்கல்லது, அகம்குழையமாட்டேன் - என்னெஞ்சு களிப்புறாதென்கிறார்.

வ்யா.—ஆறும்பாட்டு. (செந்தழலேவந்தழலைச் செய்திடினும்) தாஹகமான அக்நிகிட்டி உஷ்ணத்தைப் பண்ணினும். (செங்கமலமித்யாதி) தாமரையானது ஆதித்யன் தூரஸ்தனானானேயாகிலும் அவனுடைய கிரணத்துக்கு அலருமத்தனையல்லது அக்நிகிட்டிற்றென்று அதினுடையஉஷ்ணத்துக்குஅலராது. (வெந்துயர்வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா) அநுபவவிநாஶ்யமானபாபங்களைப்போக்கி அதுக்கு விகாஸத்தை விளைப்பிக்க வந்திருக்கிற நீ உபேக்ஷித்தாயாகிலும். (உன்னந்தமில் சீர்க்கல்லால்) கல்யாணயுக்தமான வுன்குணங்களுக்கல்லது. (அகங்குழையமாட்டேனே) என்னெஞ்சு நெகிழாது. ... ... (௬)

எத்தனையும்வான்மறந்தகாலத்தும்பைங்கூழ்கள்
மைத்தெழுந்தமாமுகிலேபார்த்திருக்கும்;மற்றவைபோல்,
மெய்த்துயர்வீட்டாவிடினும்வித்துவக்கோட்டம்மா!என்
சித்தமிகவுன்பாலேவைப்பனடியேனே. (எ)

ப-ரை.—பை - இளமைதங்கிய, கூழ்கள் - பயிர்களானவை, வான் - மேகமானது, எத்தனைமறந்தகாலத்தும் - பெய்யாதேமிகவும் மறுத்தகாலத்திலும், மைத்து - கறுத்து, எழுந்த - ஆகாசத்திலேயெழுகிற, மாமுகிலே - பெரியமேகங்களையே, பார்த்திருக்கும் - பார்த்தவண்ணமாயிருக்கும், அவைபோல் - அப்பயிர்களைப்போலே; வித்துவக்கோட்டம்மா—, மெய்த்துயர் - அநுபவித்தேகழியவேண்டும் மெய்யான துக்கத்தை, வீட்டாவிடினும் - போக்காவிட்டாலும், அடியேன்—, என்சித்தம் - என்னுடைய மனஸ்ஸை, உன்பால் - உன்விஷயத்திலே, மிகவைப்பன் - மிகவும் வைப்பேனென்கிறார்.

வ்யா.—ஏழாம்பாட்டு. (எத்தனையும் வான்மறந்தகாலத்தும்) கார்காலத்தில் வர்ஷியாதே மேகங்கள் மறுத்தகாலத்திலும், பைங்கூழ்களுண்டு - பயிர்கள். (மைத்தெழுந்தவித்யாதி) ஆகாஶத்திலே கறுத்தமேகங்களைப்பார்த்திருக்கு மத்தனையல்லது நீர் நிலந்தேடிப் போகவறியாதாப்போலே. (மெய்த்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா) "अवश्यमनुभोक्तव्यम्" "அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற பாபத்தைப்போக்கி ஸம்ஸாரஸம்பந்த மறுத்துக் கொடுக்கவந்திருக்கிற நீ அதுசெய்திலையாகிலும். (என்சித்தமிகவுன் பாலே வைப்பனடியேனே) என்ரக்ஷணத்திலேநெகிழ்ந்தாயென்று தோற்ற ஒருக்காலுக்கொருக்கால் உன்பக்கலிலே நெஞ்சுப்ரவணமாகாநின்றது. ... ... எ

தொக்கிலங்கியாறெல்லாம்பரந்தோடித்தொடுகடலே
புக்கின்றிப்புறம்நிற்கமாட்டாத;மற்றவைபோல்;
மிக்கிலங்குமுகில்நிறத்தாய்!வித்துவக்கோட்டம்மா!உன்
புக்கிலங்குசீரல்லால்புக்கிலன்காண்புண்ணியனே!. (அ)

ப-ரை.—ஆறெல்லாம் - நதிகளெல்லாம், தொக்கு - திரண்டு, இலங்கி-ஒளியையுடைத்தாய், பரந்து - பார்த்தவிடமெங்கும்பரந்து, ஓடி—, தொடு - ஆழமான, கடலே - கடலிலே, புக்கின்றி - சென்று புகலல்லது, புறம் - வேறேரிடத்தில், நிற்கமாட்டாத - நிற்கமாட்டாதவையா யிருக்கின்றன; அவைபோல் - அவ்வாறுகளைப்போலே; மிக்கு இலங்கு - மிகவும் விளங்காநின்றுள்ள, முகில் - மேகம்போன்ற, நிறத்தாய் - திருநிறத்தையுடையவனே, வித்துவக்கோடு - திருவித்துவக்கோட்டி லெழுந்தருளி யிருக்கிற, அம்மா - ஸர்வஸ்வாமியான, புண்ணியனே—, புக்கிலங்கு - உள்புக உள்புக உஜ்வலமாகிற, உனசீரல்லால் - உன்னுடைய கல்யாணகுணங்களை யொழிய, புக்கிலன்காண் - வேறொருபுகலுடையே னல்லேன்காணென்கிறார்.

வ்யா.—எட்டாம்பாட்டு. (தொக்கிலங்கியாறெல்லாம்பரந்தோடி) ஜலராஶியெல்லாந் திரண்டு ஒளியையுடைத்தாய் பார்த்தவிட

மெங்கும் பரந்தோடி. (தொடுகடலித்யாதி) ஆழ்ந்தகடலிலேசென்று புக்கல்லது புறம்புநிற்கமாட்டாத ஆறுகள்போலே. "ஸமுத்ரஇவஸிந்துபி:" "ஸமுத்ர இவஸிந்துபி:" என்னுமாப்போலே, இவைபுக்கால் கடல்நிறையும், இல்லையாகில் குறைபடுகிறதுமன்றிறே; இவற்றுக்குப் புறம்புதரிப்பரிதாயிறே புகுகிறன. (மிக்கிலங்குமுகில் நிறத்தாய்) மிக்கு உஜ்ஜ்வலமான காளமேகம்போலே யிருக்கிற நிறத்தை யுடையவனே. (வித்துவக்கோட்டம்மா) அம்மேகம் படிந்தமலை. (உன்புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண்) உள்புக உள்புகஉஜ்ஜ்வலமானகல்யாண குணங்களிலே யல்லது, உள்புக உள்புக மஸ்ருணமாயிருக்கும் குணங்களிலே அவகாஹித்திலேன்காண். இதுக்குநிபந்தநமென்னென்னில் (புண்ணியனே) ப்ரதமஸுக்ருதம் நீயாகையாலே. ௮

நின்னையேதான்வேண்டி,நீள்செல்வம்வேண்டாதான்
றன்னையேதான்வேண்டுஞ்செல்வம்போல்;மாயத்தால்,
மின்னையேசேர்திகிரிவித்துவக்கோட்டம்மா!
நின்னையேதான்வேண்டிநிற்பனடியேனே. (௯)

ப-ரை.—நின்னையேதான்வேண்டி - உன்னையேவேண்டி, நீள்செல்வம்-நிரவதிகமான ஸம்பத்தை, வேண்டாதான்றன்னையே - விரும்பாதவனையே, வேண்டும்-தான்மேல்விழுந்து கிட்டுகைக்கு அவஸரம்பார்க்கிற, செல்வம்போல்- ஐச்வர்யத்தைப்போலே; மின்னை - மின்போலே பளபளத்திருந்துள்ள, திகிரி-திருவாழியாழ்வானை, சேர்-இடைவிடாதேதரித்துக்கொண்டிருக்கிற, வித்துவக்கோட்டம்மா—, மாயத்தால் - உன்மாயையாலே, என்னை உபேக்ஷித்தாயாகிலும். அடியேன்- சேஷபூதனான, யான் - நான், நின்னையே-உன்னையே, வேண்டிநிற்பன் - விரும்பியிருப்பேனென்கிறார்.

வ்யா—ஒன்பதாம்பாட்டு. (நின்னையேதான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான் றன்னையே தான்வேண்டும் செல்வம்போல்) உன்னையேவேண்டி நிரவதிகஸம்பத்தைக்காற்கடைக்கொண்டவன் றன்னையே அவஸரப்ரதீக்ஷமாய்ப்பார்த்துநிற்கும் ஐஸ்வர்யம்போலே யென்னுதல்; மோக்ஷலக்ஷ்மியைப்போலே யென்னுதல். (மாயத்தால் மின்னையே சேர்திகிரிவித்துவக் கோட்டம்மா) மின்போலே பளபளத்திருந்துள்ள திருவாழியை * எப்போதுங்கைகழலா நேமியான் ஆசிலேவைத்தகையும் நீயுமாய் என்னுடைய ரக்ஷணத்துக்காக இங்கே வந்திருந்துவைத்துக் காற்கடைக்கொண்டாயாகிலும். (நின்னையே யான் வேண்டிநிற்பனடியேனே) தன்னைக் காற்கடைக் கொண்டவனை ஐஸ்வர்யம் விடாதாப்போலே நீ என்னைஉபேக்ஷிக்க உபேக்ஷிக்க உன்னையே பற்றிநின்றேன். ௯

வித்துவக்கோட்டம்மா!“நீவேண்டாயேயாயிடினும்
மற்றாரும்பற்றிலேன்”என்றுஅவனைத்தாள்நயந்த
கொற்றவேல்தானைக்குலசேகரன்சொன்ன
நற்றமிழ்பத்தும்வல்லார்நண்ணார்நரகமே. (௧௦)

ப-ரை.—வித்துவக்கோடு- திருவித்துவக்கோட்டி லெழுந்தருளியிருக்கிற, அம்மா - ஸர்வேச்வரனே, நீ—, வேண்டாயே யாயிடினும் - என்னை உபேக்ஷித்தாயேயாகிலும், மற்றாரும் - வேறொருவரும், பற்றிலேனென்று - துணையாவாரில்லையென்று; அவனை - அவனுடைய, தாள் - திருவடிகளை, நயந்த - ஆசைப்பட்டவராய், கொற்றம்-ஜயப்ரசமான, வேல் - வேலையும், தானை-ஸைந்யத்தை யுமுடையரான, குலசேகரன் - ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சொன்ன - அருளிச்செய்த, நல் - விலக்ஷணமாய், தமிழ் - த்ராவிடரூபமான, பத்தும்-பத்துப்பாட்டுக்களையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், நரகம் - ஸம்ஸாரமாகிறநரகத்தை, நண்ணார் - கிட்டார்களென்கிறார்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வித்துவக்கோட்டம்மா நீவேண்டாயேயாயிடினும்) இதுக்கென்று வந்திருக்கிறநீ என்னைஉபேக்ஷித்தாயாகிலும். (மற்றாரும்பற்றிலேனென்றவனைத்தாள்நயந்த)வேறொருபுகலில்லை நான் அநந்யகதியென்று அவன்றிருவடிகளை யாசைப்பட்டு. (கொற்றவேல்தானைக்குலசேகரன்சொன்ன) ப்ரதிபக்ஷத்தைப்பக்கவேரோடே வாங்கவற்றான வென்றியையுடைய வேலையும் ஸேநையையுமுடையபெருமாள்சொன்னவை. ப்ரதிபக்ஷத்தைவெல்லுகைக்கீடான பரிகர முடையரானாற்போலே யாய்த்து பகவத்ப்ராப்திக்கு பரிகரமாக இவருடைய அநந்யகதித்வமும். (நல்தமிழ்பத்தும்வல்லார்) கடல்போலாழமா யிருக்கச்செய்தே உள்ளுள்ள பதார்த்தங்கள் தோற்றும்படியா யிருக்குமாப்போலே அர்த்தம் மிக்கிருக்குமாய்த்து இத்திருமொழி; இவைவல்லவர்கள். (நண்ணார்நரகமே) ஸம்ஸாரஸம்பந்தத்துக் கடியான பாபத்தைப் பண்ணினார்களாகிலும் இஸ்ஸம்ஸாரத்திலே வந்து ப்ரவேசியார்கள். ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

—:0:—

அடிவரவு—தரு கண்டார் மீன் வாளால் வெங்கட்டிண்செந்தழல் எத்தனை தொக்கு நின்னை வித்து ஏர்மலர்.

ஆக திருமொழி-௫-க்கு பாட்டு-௫௫.

ஆறாந்திருமொழி-ஏர்மலர்-ப்ரவேசம்.

:0:

அ.—உகந்தருளின தேசத்தை அநுபவத்தார் - கீழ்; அவ்வநுபவம் அவதாரங்களில் அநுபவாபேக்ஷையைப் பிறப்பித்தது; அதில் தோள்நீண்டியான க்ர்ஷ்ணாவதாரத்தை அநுபவித்தவர்களுடைய பாசுரத்தாலே அநுபவிக்கிறார். இத்தலையால் வேறுசெய்யலாவ தில்லாமையாலே கிலாய்க்கத்தொடங்கினார். பகவத்விஷயத்தில் பாவபந்தத்தில் ஊற்றமிருந்தபடி பிராட்டிமார்தசையை ப்ராப்தராய்க்கூடுவது பிரிவது ஊடுவதாம்படியானார். நம்மாழ்வாருக்கு * மின்னிடை மடவாரும், திருமங்கையாழ்வார்க்கு * காதில்கடிப்பும்போலே யிருக்கிறதாய்த்துப் பெருமாளுக்கு இத்திருமொழி. நம்மாழ்வார் பகவத்விஷயத்தில் நின்ற வூற்றமெல்லாந் தோற்றவன்மையுடைத்தா யிருக்கும் * மின்னிடைமடவார்; திருமங்கையாழ்வார் தம்மார்த்தவமெல்லாந் தோற்றி மேன்மையையுடைத்தாயிருக்கும் * காதில்கடிப்பு. இவர்தம்முடைய ராஜகுலமெல்லாந் தோற்றியிருக்கும் இத்திருமொழி. க்ர்ஷ்ணாவதாரம் தோள்நீண்டி யாகையாலே "ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப்பெற்றிலோம், பல்லிலேபட்டுத் தெறித்தது" என்று பஞ்சலக்ஷம் குடியிற் பெண்களுக்கு க்ர்ஷ்ணன் பக்கலுள்ள விடாயெல்லாம் தமக்கொருவர்க்கு முண்டாகையாலே திருவாய்ப்பாடியில்பெண்கள்பேச்சாலே பேசுகிறார். ... ...

அ.—முதற்பாட்டு. ஒருபிராட்டி முனையில்மணலிலேபோய் நில்லு, நான் அங்கேவருகிறேனென்று சொல்லிவிட; அவள் அங்கேபோய் விடியுமளவும் நின்று அவன் வரக்காணாமையாலே அவனைக்கண்டபோது ஊடிச்சொல்லுகிற வார்த்தையா யிருக்கிறது.

ஏர்மலர்ப்பூங்குழலாயர்மாதரெனைப்பலருள்ளவிவ்வூரில்உன்றன், மார்வுதழுவுதற்காசையின்மை யறிந்தறிந்தே யுன்றன்பொய்யைக் கேட்டுக், கூர்மழைபோல்பனிக்கூதலெய்திக்கூசிநடுங்கியமுனையாற்றில், வார்மணற்குன்றிற்புலரநின்றேன் வாசுதேவா!உன்வரவுபார்த்தே. (க)

ப-ரை.—ஏர்-அழகிய, மலர்-மலரையுடைத்தாய், பூ-இயற்கைவாஸனையையுடைத்தான, குழல் - மயிர்முடியையுடையரான, ஆயர்மாதர் - இடைப்பெண்கள், எனைப்பலருள்ள-என்னைப்போலே, பலபேருள்ள, இவ்வூரில் - இந்ததிருவாய்ப்பாடியிலே, உன்றன் - உன்னுடைய, மார்வு - திருமார்வோடே, தழுவுதற்கு-அணைக்கைக்கு, ஆசையின்மை - ஆசையில்லாமையை, அறிந்தறிந்து-நன்றாக அறிந்துவைத்தும், உன்றன்-உன்னுடைய, பொய்யைக்கேட்டு-பொய்யான வார்த்தைகளை, கேட்டு—, வாசுதேவா - வஸுதேவபுத்ரனான, உன் - உன்னுடைய, வரவு - வருகையை, பார்த்து - எதிர்பார்த்துக்கொண்டு, கூர்மழை போல்-அடைமழைபோலேபெய்கிற, பனிக்கு-பனியையுண்டான, கூதல்எய்தி-

குளிரிலேயகப்பட்டு, கூசி - ஆர்காண்கிறூர்களோ வென்று கூசி, நடுங்கி-அச்சத்தாலும் குளிராலும நடுங்கி, யமுனையாற்றில் - பலரும் காணுமிடமான யமுநாநதியிலே, வார் - பெரிய, மணற்குன்றில் - மணற்குன்றிலே, புலரநின்றேன் - விடியுமளவும் நின்றேன்.

வ்யா.—(ஏர்மலர்ப்பூங்குழலாயர்மாதர்) அழகியமலரையுடைத்தாய் மலருக்குங் கூட நாற்றத்தைக் கொடுக்கும் மயிர்முடியையுடைய இடைப்பெண்கள். (எனைப்பலருள்ள விவ்வூரில்) அநேகம் போதிரளான விவ்வூரில் - திருவாய்ப்பாடியில். (உன்றன்மார்வு தழுவுதற் காசையின்மை யறிந்தறிந்தே) அநேகம்பெண்களுள்ள வூருமாய் நீயும் ஸர்வஸாதாரணனுமானல் உன்மார்வை யாசைப்படக்கடவதன்று என்றறிந்துவைத்து. (உன்றன்பொய்யைக் கேட்டு)உன் ஸ்வரூபத்தை உணரவொட்டாதிறே உன்வார்த்தை.நீயல்லது புகலுண்டோ. "உன்னையல்லது நானறிவேனே" என்று தாழ்ச்சிதோன ; நீசொல்லும் வார்த்தையைக்கேட்டு. (கூர்மழைபோல் பனிக்கூதலெய்தி) மிக்க மழைபோலேபெய்கிற பனியால்வந்த குளிரிலே யகப்பட்டு. (கூசி) ஆர்காண்கிறூரொன்று கூசி. (நடுங்கி) அச்சத்தாலும் குளிராலும் நடுங்கி. (யமுனையாற்றில்) அதுதான் ஏகாந்த ஸ்தலத்திலேயோ, ஸர்வஸாதாரணமான தேசத்திலே யன்றோ. (வார்மணல்குன்றில்புலரநின்றேன்) நின்றதுதான் தனியே நிற்கலாந் தேசத்திலே நின்றேனே, போகத்துக் கேகாந்த ஸ்தலத்திலேயன்றோ. எல்லாரும்வந்து ஸஞ்சரித்துக் காணும்போது ஸர்வஸாதாரணமான தேசத்திலே வந்தாளென்றிராமே போகத்துக் கேகாந்தமான மணல் குன்றிலே விடியுமளவும் நின்றாளென்னும்படி தோற்ற நின்றேன். (வாசுதேவா) நீ அங்குநிற்கிறதென்னென்னில்; உன்னை விஸ்வஸித்தன்று, உன்பிதாவை விஸ்வஸித்து; - ஒருவார்த்தை யல்ல தறியாத ஸ்ரீவஸுதேவர்பிள்ளையென்னுமத்தை விஸ்வஸித்து நின்றேன். (உன் வரவு பார்த்தே) உன்னுடைய அழகு காணவேணுமென்னும் நசையாலே. ...

அ.—இரண்டாம்பாட்டு. வேறொரு பிராட்டி வார்த்தை.

கெண்டையொண்கண்மடவாளொருத்தி கீழையகத்துத்தயிர்
கடையக், கண்டொல்லைநானுங்கடைவனென்று கள்ளவிழியைவிழித்துப்புக்கு, வண்டமர்பூங்குழல்தாழ்ந்துலாவவாண்முகம்வேர்ப்பச்
செவ்வாய்துடிப்பத், தண்டயிர்நீகடைந்திட்டவண்ணந்தாமோதரா
மெய்யறிவன்நானே. (உ)

ப-ரை.—தாமோதரா - கயிற்றின்தழும்புவயிற்றிலே காணலாம்படியான வடிவையுடையவனே, கீழையகத்து - என்னுடைய அகத்துக்குக் கீழண்டை அகத்திலே, கெண்டை - கெண்டைமத்ஸ்யத்தின்கண்போலே, ஒள்-ஒளியொரு

ந்திய, கண் - கண்களையும், மடவாள் - மடப்பத்தையுமுடையளான, ஒருத்தி- ஒருஸ்த்ரீயானவள், தயிர்கடைய - தனியேநின்று தயிர்கடையாநிற்க, கண்டு- அவளைப்பார்த்து, நானும்—, உன்னுடன்கூடவிருந்து, ஒல்லைகடையவனென்று- சீக்ரமாகக் கடைவேனென்று சொல்லி, கள்ளவிழியை விழித்து - திருட்டுவிழியைவிழித்து, புக்கு - அவளருகேசென்று புக்கு, வண்டு - வண்டுகள், அமர்-படிந்திருந்துள்ள, பூ - மலர்களணிந்த, குழல் - குழலானது, தாழ்ந்து உலாவ - சணுக்காலளவும் தாழ்ந்தசையவும், வாள் - ஒளியையுடைய, முகம்- முகமானது, வேர்ப்ப-வியர்க்கவும், செவ்வாய்-சிவந்த அதரமானது, துடிப்ப- துடிக்கவும், தண்தயிர் - உன்னெஞ்சுக்குப்பொருந்தின குளிர்ந்ததயிரை, நீ—, கடைந்திட்டவண்ணம் - கடைந்தபடியை, நான—, மெய் - மெய்யே, அறிவன் - அறிவேனென்கிறாள் ஒரு கோபஸ்த்ரீ.

வ்யா.—(கெண்டையொண்கண்மடவாளொருத்தி) முக்தமான நோக்கையுடையளாய், சொல்லிற்றெல்லாம் மெய்யென்றிருக்கும் பருவத்தையுடையாளொருத்தி. (கீழையகத்து) பாவநாப்ரகர்ஷத்தாலே திருவாய்ப்பாடியில் ஒரு அகமுமுண்டாய் அதுக்குக் கீழையகமுமாய்ச் செல்லுகிறதுகாணும் இவர்க்கு. நீநான்முலையடியேநடந்தது வேறோரிடத்தேயோ, என்னத்துக்குக்கீழையகத்தேயன்றோ. (தயிர்கடையக்கண்டு) ஊரெங்கும் அடியொத்துத்திரியுமிறே தனியே நின்று தயிர்கடைவாருண்டோவென்று; ஒருத்தி தனியே நின்று தயிர் கடையக்கண்டவாறே அலப்யலாபம் பெற்றானாய் ஓடிச்சென்றுபுக்கான். (ஒல்லை நானுங்கடைவனென்று) நீ தனியே நின்று தயிர் கடையில் ஒருக்காலும் வெண்ணெய்பட்டதாக மாட்டாது, சடக்கென வெண்ணெய்படுவது நானும் ஒருதலைப்பற்றிக் கடையிலாய்த்தென்று. "அன்று தேவாசுரர் வாங்க" என்று பிறர் கைவிட்டால் கடைவது பிறர்கார்யமாகிலிறே; இங்கும் இவனும ஒருதலைப்பற்றிலிறே தன்ப்ரயோஜநமாவது. (கள்ளவிழியை விழித்துப்புக்கு) இவன் கள்ளவிழி, அவள் கெண்டையொண்கண்மடவாள். நோக்கும் நினைவும் செயலும் சொல்லும் ஒருபடிப் பட்டிருக்கும் அவளுக்கு; இவனுக்கு நோக்கொருபடியும் நினைவொருபடியும் சொல்லொருபடியும் செயல் வேறொருபடியுமாயிருக்கும். இவன் நோக்காலே எல்லாம் மெய்யென்று அவள் விஶ்வஸித்தாளாய்த்து. (வண்டமரித்யாதி) மேல்பண்ணின வ்யாபாரங்கள் ஒருமஹாபாரதமிறே. (வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ) உன் குழலை விஶ்வஸித்த வண்டுகள் என்பட்டனவோ. (வாண்முகம் வேர்ப்ப) ஒளியையுடையமுகம் வேர்ப்ப. (செவ்வாய்துடிப்ப) அதரஸ்புரணம் பிறக்க. இவையெல்லாம் புணர்ச்சிக்குறியிறே. தமிழர் "சுனையாடல்" என்றுஒரு கலவியைச் சொல்லுமாப்போலே. (தண்டயிர் நீகடைந்திட்ட வண்ணம்) உன்னெஞ்சுக்குப் பொருந்தின தயிர் கடைந்தபடி. இவள் சொன்னவாறே இங்ஙனே யிருப்பன சில எனக்குவேண்டா

வென்ன (தாமோதரா மெய்யறிவன் நானே) உன்னுடம்பில் தழும்பை மறைக்கலாமாகிலன்றோ உன்செயல்களைமறைக்கலாவது. ௨

அ.—மூன்றாம்பாட்டு. வேறொருத்தி வார்த்தை.

கருமலர்க்கூந்தலொருத்திதன்னைக்கடைக்கணித்தாங்கேயொருத்திதன்பால், மருவிமநம்வைத்து மற்றொருத்திக் குரைத்தொரு பேதைக்குப் பொய்குறித்துப், புரிகுழல் மங்கையொருத்திதன்னைப் புணர்தி; அவருக்கும்மெய்யனல்லை; மருதிறுத்தாய்உன்வளர்த்தியூடே வளர்கின்றதாலுன்றன்மாயைதானே. (௩)

ப-ரை.—கரு - கறுத்த, மலர் - மலர்களணிந்த, கூந்தல் - மயிர்முடியையுடைய, ஒருத்திதன்னை - ஒருகோடஸ்த்ரீயை, கடைக்கணித்து - கடைக்கண்ணாற்பார்த்து, ஆங்கே - அவள்பக்கல்கண் செல்லாநிற்கச்செய்தே, ஒருத்திதன்பால் - மற்றொருத்தி பக்கலிலே, மநம் - மநஸ்ஸை, மருவிவைத்து - பொருந்தவைத்து, மற்றொருத்திக்கு - மற்றொருகோடஸ்த்ரீக்கு, உரைத்து "உனக்கடியேன்" என்றுசொல்லி, ஒருபேதைக்கு - சொன்னவார்த்தையை நம்பவல்லளானவொரு ஸ்த்ரீக்கு, இன்னவிடத்திலேபோய் நில்லு நான் அங்கே வருகிறேனென்று, பொய் - பொய்யாக, குறித்து - இடத்தைக்குறித்து, புரி - ஆசைப்படத்தக்க, குழல் - மயிர்முடியையுடையளாய், மங்கை - யௌவநவயஸ்ஸையளான, ஒருத்திதன்னை - ஒருஸ்த்ரீயை, புணர்தி - ஸம்ச்லேஷித்து, அவருக்கும்—, மெய்யனல்லை - பொய்யனாயிராநின்றாய்; மருது - யமளார்ஜுநமென்னும் மருதமரங்களை, இறுத்தாய் - முறித்தவனே, உன்வளர்த்தியூடே - உன்பிராயத்தோடே, உன்மாயை - உன்னுடைய வஞ்சனையானது, வளர்கின்றது - வளர்ந்துவாராநின்றதென்கிறாள் ஒருத்தி.

வ்யா.—(கருமலர்க் கூந்தலொருத்திதன்னைக் கடைக்கணித்து) நெய்த்திருண்டு பூவையுடைத்தாயிருக்கிற மயிர்முடியையுடையாளொருத்தியை, தான் அவள்மயிர்முடியிலே தோற்றதுமதோற்றச் சிறுநகணித்துப்பார்த்து. நேரே பார்த்தானாகிலிறே பொதுநோக்கு என்றிருக்கலாவது. (ஆங்கேயொருத்திதன்பால் மருவிமநம்வைத்து) இவள்பக்கலிலே கண்செல்லாநிற்க வேறொருத்திபக்கலிலே "அவளையல்ல தறியோன்" என்னும்படி மநஸ்ஸையங்கேவைத்து. (மற்றொருத்திக்கு உரைத்து) மநஸ்ஸு அவள்பக்கலிலே யிருக்கச் செய்தே வேறேயொருத்திக்கு "அடியேன்" என்றுசொல்லி. (ஒரு பேதைக்குப் பொய்குறித்து)சொன்னவார்த்தையை விச்வஸித்து அகவாயறியாதாளொரு முக்தைக்கு இன்னவிடத்திலே போய்நில்லு, நான் அங்கேவருகிறேனென்று இடங்குறித்து. (புரிகுழல்மங்கையொருத்திதன்னைப்புணர்தி) மயிர்முடி அலைதிகுலைதியாய்ப்பேணாதே போகயோக்யையா யிருப்பாளொருத்தியோடே ஸம்ச்லேஷித்து. (அவருக்கும் மெய்யனல்லை) அதுவும் மித்யாபரிரம்பணம். அதாவது - பொய்யே தழுவுகை. (மருதிறுத்தாய்) பருவம் நிரம்பு

வதற்குமுன்னே தீண்டினாைக் கொல்லப்புக்காய். (உன்வளர்த்தி யித்யாதி) உன்னுடைய வஞ்சநமும் நீ பிராயம்புக அதுவும் ஒக்கப் பிராயம்புகாநின்றதிறே. ... ... ௩.

அ.—நாலாம்பாட்டு. உகந்தருளினதேஶங்களையநுபவித்தார்-கீழ்; அவ்வநுபவம் அவதாரங்களை யநுபவிக்கவேணுமென்னுமபேக்ஷைபிறந்து அதில் தோள்தீண்டியான க்ர்ஷ்ணாவதாரத்தை அநுபவித்தவர்கள்பாசுரத்தாலே அநுபவிக்கிறார்.

தாய்முலைப்பாலிலமுதிருக்கத் தவழ்ந்துதளர்நடையிட்டுச்சென்று, பேய்முலைவாய்வைத்துநஞ்சையுண்டுபித்தனென்றேபிறரேசநின்றாய்; ஆய்மிகுகாதலோடியானிருப்பயான்விடவந்தவென்தூதியோடே, நீமிகுபோகத்தைநன்குகந்தாய்; அதுவுமுன்கோரம்புக்கேற்குமன்றே. (௪)

ப-ரை.—தாய் - தாயாரான யசோதைப்பிராட்டியுடைய, முலையில் - முலையிலே, அமுது - பரமபோக்யமான, பாலிருக்க - பாலிருக்கச்செய்தே, தவழ்ந்து—, தளர்நடையிட்டுச்சென்று - தள்ளம்பற்றிச்சென்று, பேய் - பூதனையுடைய, முலை - முலையிலே, வாய்வைத்து - திருப்பவளத்தைவைத்து, நஞ்சை - விஷம்கலந்தபாலை, உண்டு - விரும்பி யமுதுசெய்து, பித்தனென்று - பிச்சம்பிடித்தவனென்று, பிறர் - அயலாரெல்லாம்; ஏசநின்றாய் - ஏசும்படி நின்றாய்; யான் - நான், உன்னையணைக்கைக்கு, ஆய்மிகுகாதலோடு இருப்ப - மிகவும் ஆசைப்பட்டுக்கொண்டிருக்க, யான் - நான், விட - அனுப்ப, வந்த - உன்னிடம்வந்த, என் தூதியோடே - என்தூதியோடே, நீ—, மிகுபோகத்தை - மிகுந்தஸுகத்தை, நன்குகந்தாய் - நன்றாகஅநுபவித்தாய்; அதுவும் - அச்செய்கையும், உன்கோரம்புக்கு - உன்தீம்புக்கு, ஏற்கும் - ஏறிருக்குமெனகிறாள் ஒருகோபஸ்த்ரீ.

வ்யா.—(தாய்முலைப்பாலி லமுதிருக்க) உன்னைப் பெறுகைக்கு நோன்புநோற்றுப்பத்துமாஸம் சுமந்து நீ முலையுண்ணில் தரித்தும் முலையுண்ணாவிடில்நெறித்து ஆற்றாளாயிருக்கிறவளுடைய,உனக்கு தாரகமாயிருந்த முலைப்பாலிருக்க. (தவழ்ந்து தளர்நடையிட்டுச் சென்று) தவழ்ந்துநடக்கப்புகமாட்டாதே தள்ளம்பற்றிச்சென்று. (பேய்முலை வாய்வைத்து நஞ்சையுண்டு) உன்பக்கல் பாவபந்தமில்லாத பூதனையுடைய முலையிலே வாய்வைத்து, விநாஶத்தை விளைப்பதான நஞ்சையுண்டு. (பித்தனென்றே பிறரேசநின்றாய்) ராகத்வேஷங்களுக்கு விஷயபாகம் பண்ணமாட்டாத அடைவுகெடநின்று நாட்டாரேசும்படி நின்றாய். நான் இப்போது விழுக்காடறியாதே செய்ததென்னென்ன (ஆய்மிகுகாதலோடியானிருப்பயான் விடவந்த வென்தூதியோடே) என் தூதவாக்யங்கொண்டு வந்தவளோடே. (நீ மிகுபோகத்தை நன்குகந்தாய்.) ஆய் - ஆயபொன். உன்னை யாசைப்பட்டு வைவர்ண்யத்தையுடைய நானிருக்க. ஆய

என்று கடைக்குறைச்சலாய்க்கிடக்கிறது. என்னோடு பரிமாறும் பரிமாற்றத்துக்கு அவ்வருகே என்னினைவுங்கொண்டு பரிமாறநினைத்தாலும் அவளுக்கு அந்நினைவு இல்லாமையாலே மாந்துமவனிறே அவன். (அதுவுமுன் சோரம்புக்கேற்குமன்றே) சோரம்பமாவது - தீம்பு. அதாவது - உன் தீம்புக்கேற்கு மித்தனையிறே யென்கை. ௪

மின்னொத்தநுண்ணிடையாளைக்கொண்டுவீங்கிருள்வாயென்ற
ன்வீதியூடே, பொன்னொத்தவாடைக்குக்கூடலிட்டுப்போகின்றபோ
து நான்கண்டுநின்றேன்; கண்ணுற்றவளைநீகண்ணாலிட்டுக்கைவிளிக்
கின்றதுங்கண்டேநின்றேன்; என்னுக்கவளைவிட்டிங்குவந்தாய்;
இன்னமங்கேநடநம்பிநீயே. (௫)

ப-ரை.—மின் ஒத்த - மின்போலே, நுண் - நுண்ணிய, இடையாளை - இடையையுடையாளொருத்தியை, கொண்டு - அணைத்துக்கொண்டு, வீங்கிருள்வாய - மிக்கவிருளிலே, என்றன்வீதியூடே - என்னுடைய வீதியிலே, பொன்னொத்தவாடை - பீதாம்பரத்தை, குக்கூடலிட்டு - முட்டாக்கிட்டுக்கொண்டு, போகின்றபோது - அவளும்நீயுமாகப் போகிறபோது, நான்—, கண்டுநின்றேன் - பார்த்துக்கொண்டிருந்தேன்; அன்றியும், நீ—, கண்ணுற்றவளை - கண்ணில் புலப்பட்டமற்றொரு ஸ்த்ரீயை, அவள் அந்யார்ஹையாம்படி, கண்ணாலிட்டு - உறைக்கப்பார்த்து, கை - கையாலே இன்னவிடத்துக்கு வாவென்று, விளிக்கின்றதும் - அழைத்துக்கொண்டுபோவதையும், கண்டேநின்றேன் - பார்த்துக்கொண்டேயிருந்தேன்; அவளைவிட்டு - அந்த ஸ்த்ரீயைவிட்டு, இங்கு - என்னிடத்துக்கு, என்னுக்குவந்தாய் - எதுக்காகவந்தாய்; நம்பீ - ஸகலகுணபரிபூர்ணனே, இன்னம் - இனிமேலும், அங்கேநட - அவளிடத்திற்கே போவென்றாள் ஒருகோபஸ்த்ரீ.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு) மின்போலே நுண்ணிய இடையையுடையாளொருத்தியை அவ்விடை நுடங்காதபடி யணைத்துக்கொண்டு. (வீங்கிருள்வாய்) உன்னுடைய முன்னடிதோற்றாதே போகைக்கிடான மிக்கவிருளு முண்டாய்த்திறே. (என்றன்வீதியூடே) கொண்டு போகிறதுதான் வேறொருதெருவேயன்றே கொண்டுபோவது. இது ஆர் தெருவென்றிருந்தாய்; இதென்ன அஞ்சாமைதான். (பொன்னொத்தவாடை குக்கூடலிட்டு) மறைத்துக்கொண்டு போகிறதுதான் இருளுக்கு ப்ரகாசத்தை யிட்டன்றோ தான். போகிறது போகிறாய்தான், இன்னாளைக் கொண்டுபோகாநின்றோம், இன்னாள்தெருவே போகாநின்றோம், இன்னகாலத்திலே போகாநின்றோமென்னும் அணுக்குமின்றியிலேயன்றோபோய்த்து. (போகின்றபோது நான் கண்டுநின்றேன்) உன்னைப்போலே அந்யபரையன்றோநான், நீபோனவிடமெங்கும் அடியொத்துமவளாகையாலே கண்டு நின்றேன். (கண்ணுற்றவளை) இவளையணைத்துக்கொண்டுபோகாநிற்கச்செய்தே

வேறொருத்தி கண்ணுக்கு இலக்கானாள். (நீ கண்ணாலிட்டு) கண்ணாலே அநங்கார்ஹையாம்படி நோக்கினாய். (கைவிளிக்கின்றதும் கண்டே நின்றேன்) இவளை ஒருகையாலேயணைத்து மற்றைக்கையாலே எதிர்ப்பட்டவளை இன்னவிடத்தே வாவென்று அழைத்துக்கொண்டு போகிறபடியையும் பார்த்துக்கொண்டுநின்றேன். (என்னுக்கவளைவிட் டிங்குவந்தாய்) அப்பாவி உன்னையறியாதவளாகையாலே மெய்யென் றிருக்கிறவள் வெறுக்கும்படி அவளை விட்டு இங்கு என்செய்யவந்தாய். அங்ஙனே சில வுண்டோ வெனக்கு, அநந்யகதியன்றோவென்று அவன்சொல்ல;(இன்னமங்கே நட நம்பிநீயே)குறைவாளனைப்போலே சிலவார்த்தை சொல்லக்கடவீரோ, நீர்பூர்ணரல்லீரோ, அங்கே நடவீர். ௫

மற்பொருதோளுடைவாசுதேவா! வல்வினையேன்துயில்கொண்டவாறே,இற்றையிரவிடையேமத்தென்னையின்னணைமேலிட்டகன்றுநீபோய், அற்றையிரவுமோர்பிற்றைநாளுமரிவையரோடுமணைந்துவந்தாய்; எற்றுக்குநீயென்மருங்கில்வந்தாய்;எம்பெருமான்! நீயெழுந்தருளே. (௬)

ப-ரை.—மல் - மல்லரோடே, பொரு - பொருத, தோளுடை - திருத்தோள்களையுடைய, வாசுதேவா - வஸுதேவபுத்ரனே, வல்வினையேன் - மஹாபாபத்தைப்பண்ணின நான், துயில்கொண்டவாறே - தூங்கத்தொடங்கின உடனே, இற்றையிரவிடை - அன்றிரவில், ஏமத்து-நடுராத்ரியிலே, இன்-கலவிக்குப் பாங்காயிருப்பதொரு, அணைமேல் - படுக்கையிலே, என்னை—, இட்டு - கிடக்கவிட்டு, நீ—, அகன்றுபோய - அகன்றுபோன, அற்றையிரவும் - அன்றிரவும், ஓர் பிற்றைநாளும்-அதுக்குமறுநாளும், அரிவையரோடும்-பஞ்சலக்ஷம் குடியிற்பெண்களெல்லாரோடும், அணைந்துவந்தாய்-ஸம்ச்லேஷித்துவந்தாய்; நீ-இப்படிப்பட்ட நீ, என்மருங்கில் - என்னருகில், எற்றுக்குவந்தாய் - ஏதுக்காக வந்தாய்; எம்பெருமான் - என்னுடையஸ்வாமியே, நீ—, எழுந்தருள் - அப்பால் எழுந்தருளுமென்கிறாள் ஒரு கோபஸ்த்ரீ.

வ்யா.—ஆறும்பாட்டு. (மற்பொரு தோளுடை வாசுதேவா) உன் செயல்கள், நீ மூலையடி நடந்தாயென்ன வொண்ணாதபடி நிவாரகரில்லாதபிறப்பு. (வல்வினையேன் துயில்கொண்டவாறே) அப்போது உறங்காதிருக்கப்பெற்றிலேன் உன்மிகைச்செயல்களெல்லாங் காணும்படி, நித்ரையும்என்னைப் பகைமீளும்படி பாபத்தைப் பண்ணினேன். (இற்றை யிரவிடையேமத்தென்னை) அற்றையிரவில் நடுச்சாமத்திலே போகயோக்யமான காலத்திலேயன்றோ என்னை விட்டுப்போய்த்து. (இன்னணைமேலிட் டகன்று நீபோய்) போகயோக்யமான காலத்திலே, படுக்கைவாய்ப்பாலே இவள்உறங்கும், உறங்கினவாறே போவோமென்று,அகன்றுநீபோய். (அற்றையிரவுமோர்பிற்றைநாளும்) இங்கு நின்று நினைத்துப் போனாப்போலே

செய்யவொண்ணாதிறேயங்கு; அகன்றஅன்றிரவும் பிற்றைநாளும். (அரிவையரோடு மணைந்துவந்தாய்) பஞ்சலக்ஷம் குடியில் பெண்களெல்லாரோடும் ஸம்ஶ்லேஷித்துவந்தாய். "அரிவையரோடு மணைந்துவந்தாய்" என்றவாறே "இவளை ஆற்றும்போது அணைத்து ஆற்றவேணும்" என்று அவன் கிட்டப்புக (எற்றுக்கு நீஎன்மருங்கில் வந்தாய்) ஆரைத்தீண்டி வந்தாயென்று தெரியாது, என்னைத்தீண்டாதே கடக்கநில்லு. (எம்பெருமான் நீயெழுந்தருளே) பூர்வ வாஸனையாலே வந்தாயென்றவிடம் தப்பச்சொன்னேன் - அத்தைப் பொறுத்து, நீர் முதலிகளன்றோ, நீர் எழுந்தருளும். ... ௬

பையரவினணைப்பள்ளியினாய்! பண்டையோமல்லோநாம்; நீயுகக்கும், மையரியொண்கண்ணினாருமல்லோம்வைகியென்சேரிவராவொழிநீ; செய்யவுடையுந்திருமுகமுஞ்செங்கனிவாயுங்குழலுங்கண்டு, பொய்யொருநாட்பட்டதேயமையும்; புள்ளுவம்பேசாதேபோகுநம்பி!. (எ)

ப-ரை.—பை - படத்தையுடைய, அரவினணை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையை, பள்ளியினாய் - திருப்பள்ளியாக வுடையனாய், நம்பீ - பூர்ணனானவனே, நாம் - நாங்கள், உன்மாயையில் அகப்படுகைக்கு, பண்டையோமல்லோம் - பழையவர்களன்று; அன்றியும்; நீ உகக்கும் - நீவிரும்பத்தக்கவர்களாய், மை - மையணிந்து, அரி - செவ்வரிபடர்ந்து, ஒண் - ஒளிபொருந்திய, கண்ணினாருமல்லோம் - கண்களையுடையவர்களுமல்லோம்; நீ—, வைகி - தங்கி, என - என்னுடைய, சேரி - இருப்பிடத்தில், வராவொழி - வாராதேகொள்; செய்ய - சிவந்த, உடையும் - திருப்பரியட்டத்தையும், திருமுகமும் - திருமுகமண்டலத்தையும், செம் - சிவந்த, கனி-கோவைக்கனியையொத்த, வாயும் - திருப்பவளத்தையும், குழலும்கண்டு - திருக்குழலையும்கண்டு, பொய் - உன்னுடைய பொய்யானவார்த்தைகளை மெய்யென்றுநம்பி, ஒருநாள்பட்டதே - ஒருநாள் பட்டபாடே, அமையும் - போதும், புள்ளுவம்பேசாது - க்ர்த்ரிமமான வார்த்தைகளைச் சொல்லாமல், போகு - இவ்விடம்விட்டுப் போவென்கிறாள்.

வ்யா.—ஏழாம்பாட்டு. (பையரவினணைப்பள்ளியினாய்) நீ எனக்கு நல்லையல்லையாகிலும் நான் உனக்கு நல்லேன். ஆசைப்பட்டார்க்கு உடம்பு கொடுக்குமவன், எதிர்த்தலையினுடைய ரக்ஷண சிந்தை பண்ணுமவன் நானென்று அவன்சொல்ல (பையரவினணைப் பள்ளியினாய்) என்கிறார். (பண்டையோமல்லோம் நாம்) அகப்படுத்துகைக்காக நீமுன்புசெய்யுஞ் செயல்களறிந்தவர்களாகையாலே பழையவர்களல்லோங்காண் நாங்கள். "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றிருக்கும் நிலைதவிர்ந்தோங்காண் நாங்கள். தஞ்சமாக நினைத்திருக்கு மதிலேயும் அதிஶங்கை பண்ணும்படி அவகாஹித்தார்காணும் இவர். நீங்கள் பண்டையவர்களன்றாகிலும் நான்றான் பழையவனாகையாலே உகப்பேன் உங்களை

யென்று அவன்சொல்ல (நீயுகக்குமையரியொண் கண்ணினாருமல்லோம்) நீ இப்போது உகக்கிறவர்களுமல்லோங்காண் நாங்கள். முன்னடி தோற்றாதே உன்னை மூலையடியே நடக்கப்பண்ணுகிற அவயவஶோபையுடையவர்களல்லோங்காண் நாங்கள். ஆனால் என்னைச் செய்யச் சொல்லுகிறதென்னென்ன (என்சேரிவரவொழிநீ) எங்களுடைய இருப்பிடங்கள் எங்களுக்கே ஆஜ்ஞைசெல்லுவது, எங்களிருப்பிடத்தில்வார்த்தைகள்கேள். எல்லாரும்பரிமாறுகிற உங்களிடத்தில் நான் வாராதொழிகிறதென்னென்ன (என்சேரிவரவொழிநீ) எல்லாரும் வரும்போதில் வரவேண்டாவென்கிறோமென்று ஆளற்றபோதாகப் போகாநின்றான், இவனுக்கு ஒரு நினைவுண்டென்று ஶங்கிக்கும்போது வரவேண்டாவென்கிறோமத்தனையல்லது ஸர்வஸாதாரணமானபோது வரவேண்டா என்றிலோமே யென்ன; இவர்கள் வரவேண்டாவென்னாதபடி ஆசிலே கைவைத்தான்; இவர்கள் வார்த்தையிலே தான் செயலற்றபடியாலே இவர்கள்வாய் மாளும்படி ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம்பண்ணப் பார்த்தான் (செய்யவுடையும் திருமுகமும் செங்கனிவாயுங் குழலுங்கண்டு) திருப்பரியட்டத்தைப்பேணுவது, இவர்கள்முகங்களிலே முகத்தைக் காட்டுவது, ஸ்மிதம்பண்ணுவது, திருக்குழலைப்பேணுவதானான்; இப்படி செய்தவாறே இறாய்த்தாள். அதாவது - கண்ணைச் செம்பளித்தாள். கண்படைத்த லாபங்காணாதே கண்ணைச் செம்பளிக்கிறதென்னென்று சொல்லக்கண்டு (பொய்யொரு நாள் பட்டதேயமையும்) உன்னுடைய செயல்களெல்லாம் மெய்யென்று ஒருநாள் பட்டதேயமையுங் காணென்கிறாள். "அடியேன் குடியேன்" என்று சிலவார்த்தைகளைச்சொல்ல (புள்ளுவம்பேசாதேபோகு) தாழ்ச்சிக்கு முன்னே காண் ஶ்ரவணமும், அதுவுமெல்லாம் பண்டேசெய்தற்றது காண், இனி நீ சொல்லுகிறவற்றுக்கு ஒரு ப்ரயோஜநமில்லை. புள்ளுவமாவது - வஞ்சநம். வஞ்சநங்களெல்லாமறிந்த வெங்கள்பக்கல் ப்ரயோகியாதேபோ. என்னை "போ" என்கிறதென், உங்களையொழியப் புகலிட முண்டோவென்ன (நம்பீ) பூர்ணராயிருக்கிறநீர் குறைவாளரைப்போலே சொல்லக்கடவீரோ. சொலவுக்கும் செயலுக்கும் அடியில்லை யென்னும்படி நிரபேக்ஷரென்றறிந்தபின்பு ஸாபேக்ஷரைப்போலே சொல்லக் கடவீரோ, நடவீர். ... எ

என்னைவருகவெனக்குறித்திட்டினமலர்முல்லையின்பந்தர்நீழல்
மன்னியவளைப்புணரப்புக்குமற்றென்னைக்கண்டு ழறாநெகிழ்ந்தாய்;
பொன்னிறவாடையைக்கையில்தாங்கிப்பொய்யச்சங்காட்டிநீபோதியேலும், இன்னமென்கையகத்தீங்கொருநாள்வருதியேலென்சினந்தீர்வன்நானே. ... ... (௮)

ப-ரை.—என்னை—, வருகவென - இன்னவிடத்துக்கு வாவென்று, குறித்திட்டு - இடம் குறித்துவிட்டு, இனம் - குப்பல் குப்பலாக, மலர் - மலர்ந்திருந்துள்ள, முல்லையின்பந்தர்நீழல் - முல்லைப்பந்தலின் நிழலிலே, மன்னியவளை - குடில்கட்டிக் காத்துக்கிடந்தவளை, புணரப்புக்கு - ஸம்ச்லேஷிக்கப் புகுந்து, என்னைக்கண்டு - என்னைப்பார்த்து, உழறு - கலங்கி, நெகிழ்ந்தாய் - அப்பாலேநடந்தாய்; பொன்நிறவாடையை - திருப்பீதாம்பரத்தை, கையில் - கையிலே, தாங்கி - தாங்கிக்கொண்டு, பொய் - பொய்யே, அச்சங்காட்டி - பயப்பட்டதாக பாவித்துக்கொண்டு, நீ—, போதியேலும் - போவாயேயானாலும், இன்னம்-பின்பொருகாலத்திலாகிலும், நான் ஸம்ச்லேஷிக்கும்படி, ஈங்கு - இவ்விடத்து, என்கையகத்து - என்னிடத்தில், ஒருநாள் - ஒருநாளாகிலும், வருதியேல் - வருவாயேயானால், என்சினம் - என்கோபத்தை, நான்—, தீர்வன்- தீர்த்துக்கொள்வேனென்கிறாள்.

வ்யா.—எட்டாம்பாட்டு. (என்னை வருகவெனக் குறித்திட்டு) ப்ரணயித்வத்தாலே ஒருத்தியை அநந்யார்ஹை யாக்கினாய், அவளையின்னவிடத்திலே வாவென்று இடங்குறித்துவிட்டாய். (இனமலர் முல்லையின் பந்தர்நீழல்) பரபுமாறப்பூத்த முல்லைப் பந்தலின் கீழே. (மன்னியவளைப் புணரப்புக்கு) எக் காலத்திலே இடங்குறித்துவிட்டானென்றுதெரியாது, அவள் அங்கேகுடில் கட்டிக்காத்துக் கிடக்கிறது; அவளோடே ஸம்ஶ்லேஷிக்கப்புக்கு. (மற்றென்னைக் கண்டுழறு நெகிழ்ந்தாய்) ஒரு மஹா பாரதத்தைப் பாரித்துக்கொண்டுபுக்கு இவளைக்கண்டவாறே கலங்கி எழுந்திருந்தான். (பொன்னிற வாடையைக்கையில் தாங்கி) திருப்பரியட்டத்தைக் கையிலே தாங்கி. (பொய்யச்சங்காட்டி நீ போதியேலும்) இவளைக்கைகழியப் போய், மெய்யச்சஞ் செய்தத்தைப்பொய்யாக்கிச் சிரித்தான் போய் நின்று; மெய்யே அஞ்சினானாகில்களவும்மெய்யாமிறே; களவுபொய்யாகைக்காகப்பொய்யே அஞ்சினானாகப்பாவித்தான். (போதியேலும்) அப்போதைக்கு இவளைத் தப்பப்போமதிறே உத்தேஶ்யம். அப்படியே கைகழலப்போனான். (இன்னமென் கையகத் தீங்கொருநாள் வருதியேல்) நீ நியதஸ்வபாவ னல்லாமையாலே என் கையிலேயும் ஒருநாள்வந்து அகப்படக் கூடுமிறே; அகப்பட்டாயாகில் (என் சினம் தீர்வன்நானே) உஞ்சப்பிள்ளை பாடாநிற்க எம்பார் பார்த்தெழுந்தருளியிருக்க இவ்விடத்துக்கு அபிநயிக்கிறார்; - காலாலே பாய்ந்து தள்ளுவதாகக்காட்ட; அது கைக்கொண்டருளி, “கெடுவாய்! அங்ஙனேசெய்தாளாகில்அவனுக்குப்பொல்லாதோ, அவனுக்கு அதன்றோதேட்டம், அங்ஙனன்றுகாணும் என்று, கையையிட்டுமுகத்தை மறைத்துத் திரியவைத்தருளிக் காட்டினார்”. ... அ

அ.—ஒன்பதாம்பாட்டு. தோல்விதோற்றச் சொல்லுகிறார்கள்.

மங்கலநல்வநமாலைமார்விலிலங்கமயில்தழைப்பீலிசூடிப் [பெய்து
பொங்கிளவாடையரையிற்சாத்திப் பூங்கொத்துக் காதில்புணரப்
கொங்குநறுங்குழலார்களோடுகுழைந்துகுழலினிதூதிவந்தாய்;
எங்களுக்கேயொருநாள்வந்தூதவுன்குழலின்னிசைபோதராதே. ()

ப-ரை.—மங்கலம் - மங்களங்களுக் கெல்லாமிருப்பிடமாய், நல் - தர்சநீயமான, வநமாலை - வநமாலையானது, மார்வில் - திருமார்பிலே, இலங்க - ப்ரகாசிக்க, தழை - தழைத்த, மயில்பீலி - மயிலிறகுகளை, சூடி - திருமுடியிலே தரித்தும், பொங்கு இளவாடை - மிகவும் மெல்லிதான திருப்பரியட்டத்தை, அரையில் - திருவரையிலே, சாத்தி - சாத்திக்கொண்டும், காதில் - திருச்செவியிலே, பூங்கொத்து - பூங்கொத்துக்களை, புணரப்பெய்து - மிகவும் பொருந்தவிட்டு, கொங்கு - தேனையும், நறும் - நறுநாற்றத்தையுமுடைய, குழலார்களோடு - குழலையுடைய ஸ்த்ரீகளோடே, குழைந்து - ஸம்ச்லேஷித்து, அக்கலவியால் பிறந்த ஸந்தோஷத்தாலே, இனிது - இனிதாக, குழல் - வேய்ங்குழலை, ஊதிவந்தாய் - ஊதிக்கொண்டுவந்தாய்; எங்க... - எங்கள் விஷயத்திலே, ஒருநாள் - ஒருநாளிலே, வந்தூத - வந்து ஊதுகைக்கு, உன் - உன்னுடைய, குழலின்-வேய்ங்குழலினது, இசை - இசையானது, போதராதே-வாராதோவென்கிருள்.

வ்யா.—(மங்கல நல்வநமாலை மார்விலிலங்க) மங்களமென்று சொல்லப்பட்டவை யெல்லாமுடைத்தாய் தர்ஶநீயமாயிருக்கிறவநமாலை. "மைபோல் நெடுவரைவாய் தாழுமருவிபோல் தார்கிடப்ப" என்னுமாப்போலே, திருமார்விலே விளங்க. (மயில் தழைப்பீலி சூடி) தழைத்தபீலியைத் திருமுடியிலே சுற்றி. (பொங்கிள வாடை அரையில்சாத்தி) மிகவும்மெல்லியஆடையைத்திருவரையிலேசாத்தி. (பூங்கொத்துக்காதில்புணரப்பெய்துகொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து) பூங்கொத்தைக்காதிலே மிகவும்பொருந்தவிட்டுத்தேனையும் நறுநாற்றத்தையுமுடைய குழலையுடையவர்களோடே,குழைந்து-கலந்து. (குழலினிதூதிவந்தாய்) நெகிழ்ந்தவர்களோடே ஒருநீராகக்கலந்து அக்கலவியால்பிறந்த ஹர்ஷமெல்லாந் தோற்றும்படியாக இனிதாகக் குழலூதி வந்தாய். (எங்களுக்கே ஒருநாள்வந்தூத உன் குழலின்னிசை போதராதே) நீ ஸர்வஸாதாரண ஞானபின்பு உன்குழலும் ஸர்வஸாதாரணமாயிருக்க, ஓரோ விடங்களிலேயாய் நாங்கள் கேட்க வூதவேணுமென்றால் நீயூதினும் இசைபுறப்படாதபடியாய்த்திறே உன்குழலின் ஸ்வபாவம். குழலோசையென்றும் ஸம்ஶ்லேஷமென்றும் - பர்யாயமிறே. எங்களோடு ஸம்ஶ்லேஷம் உனக்குப் பொருந்தாதென்கிறார்கள். ... ... கூ

அல்லிமலர்த்திருமங்கைகேள்வன் றன்னைநயந்திளவாய்ச்சிமார்கள், எல்லிப்பொழுதினி லேமத்தூடியெள்கியுளைத்தவுரையதனைக்,

கொல்லிநகர்க்கிறைகூடற்கோமான் குலசேகரனின்னிசையின்மேவிச், சொல்லியவின்தமிழ்மாலைபத்துஞ் சொல்லவல்லார்க்கில்லை துன்பந்தானே. (௧0)

ப-ரை.—இளவாய்ச்சிமார்கள் - சிறிய இடைப்பெண்களானவர்கள், அல்லி - அகவிதழையுடைய,மலர் -செந்தாமரைமலரைப்பிறப்பகமாகவுடையளான, திருமங்கை - பெரியபிராட்டியார்க்கு, கேள்வன்றன்னை - வல்லபனான க்ர்ஷ்ணனை, நயந்து - ஆசைப்பட்டு, ஏமம் எல்லிப்பொழுதினில் - மத்யராத்ரத்திலே, ஊடி - பிணங்கி, அ(த்)தாலே, எள்கியுரைத்தவுரையதனை - ஈடுபட்டுச்சொன்ன பாசுரங்களை; கொல்லிநகர்க்கு - கொல்லிநகருக்கு, இறை - தலைவனாய், கூடல் - கூடலுக்கு, கோமான் - அரசனான, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப்பெருமாள், இன் - இனிய, இசையில் - பண்ணிலே, மேவி - பொருந்தி, சொல்லிய - அருளிச்செய்த, இன் - பரமபோக்யமான, தமிழ் - தமிழாலாகிய, மாலை - மாலாரூபமான, பத்தும் - இப்பத்துப்பாட்டையும், சொல்லவல்லார்க்கு- சொல்லவல்லவர்களுக்கு, துன்பமில்லை - பகவதநுபவதநுக்கு விச்சேதமாகிற துன்பம்வாராதென்கிறார்.

வ்யா.—நிகமத்தில்; (அல்லிமலர்த் திருமங்கை கேள்வன் றன்னைநயந்து) பரம ப்ரணயியான ஸ்ரீக்ர்ஷ்ணனை யாசைப்பட்டு. (இளவாய்ச்சிமார்கள்) அவனைப்போலே எறிமறிந்தபருவமன்றியே பாடாற்றமாட்டாத இளவாய்ச்சிமார்கள். (எல்லிப்பொழுதினிலேமத்து) விலக்குவாரில்லாத மத்யராத்ரத்திலே. (ஊடியெள்கியுரைத்தஉரையதனை) ஊடி அத்தாலே ஈடுபட்டு அவ்வீடுபாடுதான் சொல்லாய் வழிந்து புறப்பட்ட தென்னலாம்படியான பாசுரத்தை. (கொல்லிநகர்க்கிறை கூடல்கோமான்) கொல்லியென்று - சோழன்படைவீடு; கூடலென்று-பாண்டியன் படைவீடு; "கோழிக்கோன்" என்று முன்பே சொல்லிவைத்தார். மூன்று ராஜ்யத்துக்கும் கடவரான ஸ்ரீகுலசேகரப்பெருமாள். ஸ்ரீகோபிமார் தங்கள்ஸ்த்ரீத்வாபிமானமெல்லாமறுத்துச்சொன்னாப்போலே இவரும் பெரிய அபிமானமெல்லாமறுத்தபடி. (இன்னிசையில் மேவிச் சொல்லிய இன்தமிழ்மாலை பத்தும்) "பாட்யே கேயே ச மதுரம்" - "பாட்யேகே யேசமதுரம்" என்னும்படியான தமிழ்த்தொடைபத்தும். (சொல்ல வல்லார்க்கில்லை துன்பந்தானே)இவருடைய பாவபந்த மில்லையாகிலும் இவை கற்றவர்களுக்கு பகவதநுபவத்துக்கு விச்சேதஶங்கை பிறவாதே நிரந்தராநுபவமாய்ச் செல்லப் பெறுவர்கள். ஸம்போக மத்யே பிறக்குமதிறே - ஊடலாவது. உன்தலை பத்து என்தலை பத்து என்று முடிய உடலாய்ச்செல்லு மநுபவத்தைப் பெறுவர்கள். ... (௧0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அடிவரவு.—ஏர் கெண்டை கரு தாய் மின் மற்பொரு பை என்னை மங்கல அல்லி ஆலை.

ஆறு திருமொழி - ௬-இ பாட்டு - ௬௧.

ஏழாந்திருமொழி-ஆலைநீள்கரும்புப்ரவேசம்.

அ.—பிராட்டி, திருவடியைக்கண்டவாறே "“ப்ரணயரோஷம் தலையெடுத்து,“பிதுர்வசநபரிபாலநம்பண்ணப்போந்தார்,என்றிறே பெருமாள் உங்கள்கோஷ்டியிலே ப்ரஸித்தராயிருப்பது; இப்போது அங்ஙனன்றுகாண்;-தம்மை விஸ்வஸித்துக் கைகொடுத்த வென்னை விடுகைக்காகக் காண். ‘ரக்ஷிதா ஜீவலோகஸ்ய’ ‘ரக்ஷிதாஜீவலோகஸ்ய’ என்கிறத்தையும் விட்டாரிறே” யென்று கிலாய்த்தாப்போலேகிலாய்த்தார் இவரும் - கீழில் திருமொழியிலே; ஸர்வாத்மாக்களுக்கும் பிராட்டிமாரோபாதிப்ராப்தியுண்டென்னும்படி பகவத்விஷயத்திலே அவகாஹித்தவராகையாலே இவர் கிலாய்த்தார்; இப்படி கிலாய்த்தத்தைக்கு ப்ராப்தியுண்டாயிருக்கிறவிஷயத்தை அநாதிகாலம் இழந்தோமென்கிற இழவுவந்து தலையெடுத்து, முன் க்ர்ஷ்ணனைப்பெற்று வைத்து பால்யாவஸ்தையில் அவன்செயல்களை அநுபவிக்கப்பெறாதே இழந்திருந்து சம்ஸவதபர்யந்தமாக முன்புள்ள விரோதிகளையெல்லாம் போக்கி, தங்கள் முகத்திலே விழித்த க்ர்ஷ்ணனைக்கண்டபோது,கீழ்அநுபவிக்கப்பெறாத இழவுகளைச்சொல்லிக் கூப்பிட்ட தேவகியார்பாசுரத்தாலே அநாதிகாலம் தாம் இழந்த இழவைச்சொல்லுகிறார்-இத்திருமொழியிலே. ... ...

ஆலைநீள்கரும்பன்னவன்தாலோ! அம்புயத்தடங்கண்ணினன் தாலோ!, வேலைநீர்நிறத்தன்னவன்தாலோ! வேழப்போதகமன்னவன்தாலோ!,ஏலவார்குழலென்மகன்தாலோவென்றென்றுன்னையென் வாயிடைநிறையத்,தாலொலித்திடுந்திருவினையில்லாத்தாயரில்கடையாயினதாயே. (க)

ப-ரை.—நீள் - நன்றாகமுற்றி, ஆலை - ஆலையிலிட்டுப் பிழிதற்குத்தக்க, கரும்பன்னவன் - கரும்பையொத்தவனே, தாலோ - தாலேலோ, அம்புயம் - தாமரையிதழையொத்து, தடம் - விசாலமாயிருந்துள்ள, கண்ணினன் - கண்களையுடையவனே, தாலோ - தாலேலோ, வேலைநீர்நிறத்தன்னவன் - கடலின் நிறத்தையொத்த திருமேனியை யுடையவனே, தாலோ - தாலேலோ, வேழப்போதகமன்னவன் - யானைக்கன்றையொத்த சரிதங்களை யுடையவனே, தாலோ - தாலேலோ, ஏலம் - பரிமளிதமாய், வார் - நீண்ட, குழல் - திருக்குழலை யுடைய,என்மகன் - என்மகனே, தாலோ - தாலேலோ, என்றென்று - இப்படிப்பலகாலுஞ்சொல்லி, உன்னை—, என்வாயிடைநிறைய - என்வாயிலேநிறையும்படி, தாலொலித்திடும் திருவினையில்லா - தாலாட்டும் ஸம்பத்தில்லாத, தாயரில் - தாய்மார்களில், கடையாயின - கடையான, தாய் - தாயாயிராநின்றேனென் நானென்கிறாள்.

வ்யா.—முதற்பாட்டு. (ஆலைநீள்கரும்பன்னவன்தாலோ) சமையவளர்ந்த ஆலைக்கரும்புபோலே ஸநேரத்ரியத்துக்குஇனியனானவனே.

(அம்புயத்தடங் கண்ணினன்தாலோ) விகாஸம்செவ்வி குளிர்த்தி மென்மையுடைய தாமரைப்பூப்போலே யிருக்கிறதிருக்கண்களைக்கொண்டு என்னைக் குளிரநோக்குகிறவனேயென்று சக்ஷுரிந்த்ரியத்துக்குஇனிதாயிருக்கிறபடி சொல்லுகிறார்.(வேலைநீர்நிறத் தன்னவன்தாலோ) அவயவங்களைப் பிரித்துச் சொல்லவேணுமோ, அவயவியானமேனி ஸ்ரமஹரமான கடல்போலே யிருக்கிறவனே.(வேழப்போதகமன்னவன்தாலோ) ஆனைக்கன்றுபோலே வைத்தகண் வாங்காதே பார்த்தபடியே யிருக்கும்படியான சரிதங்களையுடையவனே. (ஏலவார்குழ லென்மகன்தாலே) இப்படி உபமாநங்களால் சொல்லவொண்ணாமையாலே "என்மகன்" என்னு மித்தனையல்லது (என்றென்றுன்னை யென்வாயிடைநிறையத் தாலொலித்திடுந் திருவினையில்லா) இப்படி பலகாலுஞ்சொல்லி வாயாரத் தாலாட்டும் ஸம்பத்தில்லாத. (தாயரில்கடையாயின தாயே) பெறுகைக்குநோன்புநோற்றுப் பெற்றுவைத்து அநுபவத்தில் குறையநிற்கையாலே பிள்ளைகளைப் பெற்று அநுபவிக்குந் தாய்மாரெல்லாரிலும் கடையானேனிறே நான். ... ... (௧)

வடிக்கொளஞ்சநமெழுதுசெம்மலர்க்கண் மருவிமேலினிதொன்றினைநோக்கி, முடக்கிச்சேவடிமலர்ச்சிறுகருந்தாள்பொலியுநீர்முகிற்குழவியேபோல, அடக்கியாரச்செஞ்சிறுவிரலனைத்துமங்கையோடணைத்தானையிற்கிடந்த, கிடக்கைகண்டிடப்பெற்றிலேனந்தோ!கேசவா!கெடுவேன்கெடுவேனே. (௨)

ப-ரா.—வடிக்கொள் - வடிக்கப்பட்ட, அஞ்சநமெழுது - மைடணிந்த, செம்மலர் - செந்தாமரைமலரையொத்த, கண் - கண்களாலே, மேல் - மேற்கட்டியில் தொங்கவிடப்பட்டிருக்கிற, ஒன்றினை - கிளிமுதலிய ரூபங்களில் ஒன்றை, இனிது - இனியனாய், மருவிநோக்கி - பொருந்திப பார்த்துக்கொண்டும், கரு-கறுத்த, தாள்-புறந்தாளையும், செம்மலர்-செந்தாமரை மலரையொத்த, சிறு - சிறுத்த, அடி - திருவடிகளையுடையனாய், நீர் - நீரையுண்டு, அத்தாலே-பொலியும் - கறுத்துவிளங்குகிற, முகில் குழவிபோல-மேகக்கன்றையொத்த, செம்-அழகிதாய், சிறு-சிறுத்திருக்குமுள்ள, விரலனைத்தும்-ஐந்துதிருவிரல்களையும், அங்கையோடு-உள்ளங்கையிலே, அடக்கியார-யடங்கும்படி, அணைந்து - மடித்துப்பிடித்துக்கொண்டு, ஆனையில்கிடந்த கிடக்கை - ஆனைகிடக்குமாப்போலே பள்ளிகொண்டருளுமழகை, கண்டிட - கண்டுகளிக்கைக்கு, கெடுவேன் கெடுவேன் - மஹாபாபியான நான், பெற்றிலேன் - பாக்யம் பெறவில்லையே, அந்தோ - ஐயோ!என்று விஷண்ணையாகிறாள்.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வடிக்கொளஞ்சநமெழுதுசெம்மலர்க்கண்) கூர்மையையுடைய செம்மலர்க் கண்ணென்னுதல்; திருக்கண்ணுக்கீடாக வடிக்கப்பட்டஅஞ்சநத்தையுடைய கண்ணென்னுதல். செம்மலர் - சிவந்ததாமரைபோலே யிருந்துள்ள. (மருவி

மேனிதோன்றினை நோக்கி) பிள்ளையைத் தொட்டிலிலே வளர்த்தி, அநந்யபரனாய்ப் பார்த்துக்கிடக்கைக்காக மேலேயொன்றைத் தூக்கி வைப்பார்களிறே, அத்தை இனியனாய்க்கொண்டு ஸதாதர்ஶநம்பண்ணிக்கிடக்குமிறே. (முடக்கிச்சேவடி மலர்ச்சிறுகருந்தாள்) அங்குக் கிடக்கும்படி சொல்லுகிறது மேல்; - புறவாய்கறுத்து அகவாய் சிவந்த திருவடிகளை முடக்கி. (பொலியும்நீர் முகிற்குழவியேபோல) கழுத்தே கட்டளையாக நீரைப் பருகிற்றொரு மேகக்கன்றுபோலே. (அடக்கியாரச்செஞ்சிறு விரலனைத்துமங்கையோடணைந்து) செறிந்து அழகிதான திருவிரற்களை உள்ளங்கையிலேயடக்கும்படி மடித்துப்பிடித்து. (ஆனையில்கிடந்தகிடக்கைகண்டிடப் பெற்றிலேனந்தோ) ஆனை தன் அவயவங்களைப் பொகட்டுக்கொண்டு ஸ்வைரமாகக் கிடந்தாப்போலே தொட்டிலிலே கிடக்கும்போது அநுபவிக்கப் பெற்றிலேனென்று ஐயோ! என்கிறாள். (கேசவா கெடுவேன் கெடுவேனே) அப்போதைத்திருக்குழலழகை அநுபவிக்கவும்பெற்றிலேன்; முன்புமலடு நின்று இழந்தேன்; பின்புபெற்றுவைத்தே அநுபவிக்கப் பெறாதொழிந்தேன். இரண்டாலும் மஹாபாபியிறேநான். ... ... (உ)

முந்தைநன்முறையன்புடைமகளிர் முறைமுறைதந்தங்குறங்கிடையிருத்தி, எந்தையே! என்றன்குலப்பெருஞ்சுடரே! எழுமுகிற்கணத்தெழில்கவரேறே!, உந்தையாவனென்றுரைப்பநின்செங்கேழ்விரலினுங்கடைக்கண்ணினுங்காட்ட, நந்தன்பெற்றனன்; நல்வினையில்லா நங்கள்கோன்வசுதேவன்பெற்றிலனே. (ங)

ப-ரை.—அன்புடை - மிக்க அன்புடையராய், முந்தை - தொன்றுதொட்டுவருகிற, நன்முறையுடைமகளிர் - தாயார் பாட்டியார் கொள்பாட்டியார் என்கிற நல்லமுறையையுடைய ஸ்த்ரீகளெல்லாரும், தம்தம் - தங்கள் தங்களுடைய, குறங்கிடை - துடைகளிலே, முறைமுறை - முறைமுறையாக, இருத்தி - வைத்துக்கொண்டு, எந்தையே - என்னுடைய தமப்பனே, என்றன்குலம் - எங்கள் குலத்துக்கு, பெருஞ்சுடரே - உஜ்ஜ்வலமான விளக்கானவனே, எழு - எழுவகைப்பட்ட, முகில்கணத்து - மேகஸமூஹங்களினுடைய, எழில் - அழகை, கவர் - கவர்ந்த, ஏறே - ஆண்சிங்கத்தையொத்தவனே என்று ஸ்தோத்ரம்பண்ணி, உந்தை - உங்கள்தமப்பனார், யாவன் என்றுரைப்ப - யாரென்றுகேட்க; நின் - உன்னுடைய, செம்கேழ் - சிவந்தநிறமுள்ள, விரலினும் - விரலாலும், கடைக்கண்ணினும் - கடைக்கண்ணாலும், காட்ட - காண்பிக்க, நந்தன் - ஸ்ரீநந்தகோபர், பெற்றனன் - பெற்றார், நல்வினையில்லா நங்கள் - பாக்யஹீநையான வென்னுடைய, கோன் - பர்த்தாவான, வசுதேவன் - ஸ்ரீவஸுதேவர், பெற்றிலன் - பெறாரில்லையென்கிறாள்.

வ்யா.—மூன்றாம்பாட்டு. (முந்தைநன்முறை அன்புடைமகளிர்) தாய்மார், அவர்களுடைய தாய்மார், பாட்டிமாரெல்லாரும். (முறைமுறைதந்தங்குறங்கிடையிருத்தி) அவ்வோ அடைவுகளிலே

குறங்குகளிலே வைத்துக்கொண்டு. (எந்தையேயென்றன் குலப்பெருஞ்சுடரே எழுமுகில் கணத்தெழில்கவரேறே) என்றன்தமப்பனே! எங்கள்குலத்துக்கு விளக்கானவனே! ஏழுவகைப்பட்ட மேகஸமூஹங்களினுடைய அழகைக்கவர்ந்த ஸிம்ஹம்போலேயிருக்கிறவனே. (உந்தையாவனென்றுரைப்ப) இப்படி ஸ்தோத்ரங்களைப் பண்ணி உங்கள் தமப்பனார் ஆரென்று கேட்க. (நின்செங்கேழ் விரலினுங் கடைக்கண்ணினுங் காட்டநந்தன்பெற்றனன்) சிவந்தவிரலாலும் கண்ணாலுங் காட்ட ஸ்ரீநந்தகோபர்பெற்றார். (நல்வினையில்லாநங்கள்கோன் வசுதேவன்பெற்றிலனே) பாக்யஹீனையான வென்னைக் கைப்பிடிக்கையாலே ஸ்ரீவஸுதேவரும் இழந்தாரே. (ங)

† களிநிலாவெழில்மதிபுரைமுகமுங்கண்ணனே திண்கைமார்வுந் திண்டோளும், தளிர்மலர்க்கருங்குழற்பிறையதுவுந்தடங்கொள்தாமரைக்கண்களும்பொலிந்த, இளமையின்பத்தையின்றென்றன்கண்ணாற்பருகுவேற்கிவள்தாயெனநினைந்த, அவ்வளவில்பிள்ளைமையின்பத்தையிழந்தபாவியேனெனதாவிநில்லாதே. (ச)

ப-ரை.—கண்ணனே - கண்ணனே சொல்லுகிற, களி - ஆஹ்லாதகரமான, நிலா - நிலாவையுடைத்தான, எழில்மதி புரை - பூர்ணசந்த்ரனையொத்த, முகமும் - திருமுகமும், திண் - திண்ணியதான, கையும் - திருக்கைகளும், மார்வும் - திருமார்பும், தோளும் - திருத்தோள்களும், தளிர் - தளிரையும், மலர் - மலரையுமுடைத்தாய், கரு - கறுத்த, குழல் - திருக்குழலின் கீழ், பிறையதுவும் - மூன்றாம்பிறையையொத்த திருநெற்றியும், தடங்கொள் - விசாலமாய், தாமரை - தாமரையிதழ்போன்ற, கண்களும் - திருக்கண்களுமாய்க்கொண்டு, பொலிந்த - விளங்குகிற, க்ருஷ்ணனுடைய, இளமையின்பத்தை - யௌவநாவஸ்தையினழகை, இன்று - இப்போது, என்றன் - என்னுடைய, கண்ணால் - கண்களாலே, பருகுவேற்கு - அநுபவிக்கிறவெனக்கு, இவள்தாயென நினைந்த அவ்வளவில் - தாயாகையொழிய வேறொருதாயறியாத தசையிலே, பிள்ளைமையின்பத்தை - இப்பிள்ளைப்பருவத்தின ஸுகத்தை, இழந்த - இழந்துவிட்ட, பாவியேனெனது - மஹாபாபியான வென்னுடைய, ஆவி - ப்ராணனானது, நில்லாது - தரியாதெனக்குள்.

வ்யா.—நாலாம்பாட்டு. (களிநிலாவெழில் மதிபுரைமுகமும்) செறிந்தநிலாவையுடைய பூர்ணசந்த்ரனைப்போலேயிருக்கிறதிருமுகமும். (கண்ணனே திண்கை மார்வும்திண்டோளும்) க்ர்ஷ்ணனே சொல்லுகிற விலக்ஷணமான திண்ணிதாயிருக்கிற திருக்கையுந் திருமார்வும் திருத்தோளும். (தளிர்மலர்க்கருங்குழல்பிறையதுவும்) தளிரையும் மலரையுமுடைத்தாய் இருண்டிருக்கிற திருக்குழலின் கீழே உந்நேயமான பிறைபோலே விளங்குகிற திருநெற்றியும். (தடங்கொள்தாமரைக்கண்களும்) ஒருதாமரைப்பூவே தடாகமெல்லாம் விழுங்கும்படி அலர்ந்தாப்போலே, திருமேனியெல்லாம் பரப்புமாறும்படி யலர்ந்த திருக்கண்களும். (பொலிந்தஇளமையின் பத்தை

† "தளிநிலா" என்று பாடம் காண்கிறது.

இன்றென்றன் கண்ணால்பருகுவேற்கு) இவ்வவயவஶோபைகளால் விளங்கா நின்றுள்ள யௌவநாவஸ்தையி லழகை என்கண்ணாலே அநுபவிக்கிறவெனக்கு. (இவள்தாயெனநினைந்தவளவில் பிள்ளைமை இன்பத்தை யிழந்தபாவியேன்) தாயொருத்தியையு மல்லது வேறொருத்தியையு மறியாத அதிஶைஶவமாயிருக்கிற பருவத்தையநுபவிக்கப்பெறாமையாலே, இப்போது கிட்டியநுபவிக்கச் செய்தேயும் இழவே தலையெடுக்கும்படியான மஹாபாபத்தைப் பண்ணினேன். (எனதாவிநில்லாதே) என்ப்ராணந் தரிக்கிறதில்லை. ... (௪)

மருவுநின்றிருநெற்றியில்சுட்டியசைதரமணிவாயிடைமுத்தம், தருதலுமுன்றன் தாதையைப்போலும்வடிவு கண்டுகொண்டுள்ள முள்குளிர,விரலைச்செஞ்சிறுவாயிடைச்சேர்த்துவெகுளியாய்நின்றுரைக்குமவ்வுரையும்,திருவிலேனொன்றும்பெற்றிலேன்;எல்லாம்தெய்வநங்கையசோதைபெற்றாளே. (௫)

ப-ரை.— நின்திருநெற்றியில்மருவு-உன்திருநெற்றியில் பிறந்தாப்போலிருக்கிற,சுட்டி-திருச்சுட்டியானது, அசைதர-அசையும்படி, மணி-அழகிய, வாயிடை முத்தம்தருதலும் - வாயில்முத்தங்கொடுக்கையும், உன்றன்தாதையைப்போலும்-உன்தமப்பனைப்போலே, வடிவு-திருவடிவழகை, கண்டுகொண்டு - கண்டு, உள்ளம் - மநஸ்ஸானது, உள்குளிர - உள்ளேகுளிரும்படி, செம் - சிவந்து, சிறு - குவிந்திருந்துள்ள, வாயிடை - திருப்பவளத்திலே, விரலை - திருவிரற்களை, சேர்த்து—, வெகுளியாய்நின்று - சீற்றத்தோடேநின்று, உரைக்கும் - சொல்லுகிற, அவ்வுரையும் - மழலைச்சொற்களுமாகிய விவைகளில், ஒன்றும் - ஒன்றையும், திருவிலேன் - பாக்யஹீனையான நான், பெற்றிலேன் - அநுபவிக்கப் பெறவில்லை; தெய்வநங்கை - தேவஸ்த்ரீக்கு ஸத்ருசையான, யசோதை - யசோதைப்பிராட்டியானவள், எல்லாம் - அவனுடைய பாலசேஷ்டிதங்களையெல்லாம், பெற்றாள - அநுபவிக்கப்பெற்றாளென்கிறாள்.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மருவுநின்திருநெற்றியில் சுட்டி அசைதர) திருநெற்றியிலே கூடப்பிறந்தாப்போலேயிருக்கும் திருச்சுட்டியானது அசையும்படி. (மணிவாயிடைமுத்தந்தருதலும்) அழகியவாயில் முத்தம். அதரமுத்தங்கொடுத்தாலும். (உன்றன் தாதையைப்போலும்) உன்தமப்பனைப்போலே. (வடிவுகண்டுகொண்டுள்ளமுள்குளிர) வடிவழகைக்கண்டு நெஞ்சமானதுகுளிர. (விரலைச்செஞ்சிறுவாயிடைச்சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்குமவ்வுரையும்) சிவந்துகுவிந்திருந்துள்ளதிருப்பவளத்திலே திருவிரலைச் சேர்த்துச் சீற்றத்தோடேநின்று சொல்லுகிற மழலைச்சொல்களும். (திருவிலேனித்யாதி) பால்யாவஸ்தையில் அநுபவங்களை யநுபவிக்க பாக்யஹீனையானநான்இழந்தேன். இழக்கைக்கு நானொருத்தி யுண்டானாப்போலே அநுபவிக்கைக்கு இட்டுப்பிறந்த யஶோதைப்பிராட்டி எல்லாம் பெற்றாளிறே. ... ...(௫)

தண்ணந்தாமரைக்கண்ணனே கண்ணா தவழ்ந்தெழுந்து தளர்ந்த தோர் நடையால், மண்ணிற்செம்பொடி யாடிவந்தென்றன்மார்பில் மன்னிடப்பெற்றிலேனந்தோ; வண்ணச்செஞ்சிறுகைவிரலனைத்தும் வாரிவாய்க்கொண்ட வடிசிலின்மிச்சில், உண்ணப்பெற்றிலேன! ஓ! கொடுவினையேன்;என்னையென்செய்யப்பெற்றதெம்மோயே. (சு)

ப-ரை.—தண் - குளிர்ந்து, அம் - அழகிதான, தாமரைக்கண்ணனே - தாமரைப்பூப்போலே அலர்ந்த திருக்கண்களையுடையனே, கண்ணா - க்ர்ஷ்ணனே, தவழ்ந்து-நீதவழ்ந்துகொண்டு, எழுந்து - எழுந்திருந்து, தளர்ந்ததோர் நடையால் - தளர்நடையாலே, செம்மண்ணின் பொடி - சிவந்தபுழுதியிலே, ஆடி - விளையாடி, வந்து - அக்கோலத்தோடேவந்து, என்றன்மார்பில்-என்னுடையமார்பிலே, மன்னிட - கட்டிக்கொண்டுகிடக்க, பெற்றிலேன் - பெறவில்லையே, அந்தோ - ஐயோ!; வண்ணம் - அழகிதாய், செம் - சிவந்த, சிறு-சிறிய, கைவிரலனைத்தும் - கையில் ஐந்துவிரலாலும்,வாரி—,வாய்க்கொண்ட-அமுதுசெய்த, அடிசிலின்மிச்சில்-ப்ரஸாதசேஷத்தை, உண்ணப்பெற்றிலேன்-உண்ணப்பெறாத, ஓ! கொடுவினையேன்-மஹாபாபியான, என்னை—, எம்மோய்-என் தாயாரானவள், என்செய்ய - ஏதுக்காக, பெற்றது - பெற்றாளென்கிறாள்.

வ்யா.—ஆறாம்பாட்டு. (தண்ணந்தாமரைக்கண்ணனே) குளிர்ந்து அழகிதான தாமரைப்பூப்போலே அலர்ந்த திருக்கண்களையுடைய க்ர்ஷ்ணனே. (தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர்நடையால்) தவழ்ந்தெழுந்திருந்து நடக்கப்புகுவது தள்ளம்பாறுவதான தளர் நடையாலே. (மண்ணிற்செம்பொடியித்யாதி) நிலப்பண்பாலே சிவந்த புழுதியை யாடிவந்து அக்கோலத்தோடே என்மார்விலே வந்து கட்டிக்கொண்டுகிடக்கப்பெற்றிலேன். (வண்ணச்செஞ்சிறு இத்யாதி) அழகிதாய்ச் சிவந்த திருமார்வி லனைத்தாலும் வாரியமுதுசெய்த ஶேஷத்தை யுண்ணப்பெறாத மஹாபாபத்தைப் பண்ணினேன். (என்னையென்செய்யப்பெற்றதெம்மோயே) ராஜமஹிஷியாய்,பிள்ளைகள் அளைந்த எச்சிலுண்ணுமைக்கோஎங்கள்தாயாரென்னைப் பெற்றது."அமுதிலுமாற்றவினிதேதமக்கள் சிறுகையளாவியகூழ்" "மக்கள் மெய்தீண்ட லுடற்கின்பம் மற்றவர்தம்சொற்கேட்ட லின்பஞ்செவிக்கு." .. .. சு

குழகனே!என்றன் கோமளப்பிள்ளாய்! கோவிந்தா!என்குடங்கையில்மன்னி, ஒழுகுபேரெழி லிளஞ்சிறுதளிர்போ லொருகையா லொருமுலைமுகம்நெருடா, மழலைமென்னகையிடையிடையருளா வாயிலேமுலையிருக்கவென்முகத்தே, எழில்கொள்நின்திருக்கண்ணிணைநோக்கந் தன்னையுமிழந்தே னிழந்தேனே. (எ)

ப-ரை.—குழகனே-எல்லாரோடும்கலந்திருப்பவனாய்,என்கோமளப்பிள்ளாய்-ஸௌகுமார்யத்தையுடையஎன்மகனாய், கோவிந்தா-கோஸம்ர்த்தியையுடை

யவனே, என்குடங்கையில் - என் உள்ளங்கையிலே, மன்னி - இருந்து, பேரொழில் - அழகுவெள்ளம், ஒழுகு - பரந்தோடும்படியான, இளம்சிறு - மிகவும் இளையதான, தளிர்போல் - தளிரையொத்த, ஒருகையால் - ஒரு திருக்கையாலே, ஒருமுலைமுகம் - ஒரு முலைக்கண்ணை, நெருடா - நெருடிக்கொண்டு, வாயிலேமுலையிருக்க - வாயிலே முலையிருக்கச்செய்தே, முலைசுரக்கும்படியாக, என்முகத்து - என் முகத்திலே, இடையிடை - இடையிடையே, மழலைமென்னகை அருளா - மழலைச்சிரிப்பாகச் சிரித்து, எழில்கொள் - அழகிய, நின் - உன்னுடைய, திருக்கண்ணிணை நோக்கந்தன்னையும் - திருக்கண்களால் பார்க்கிற பார்வையையும், அநுபவிக்கப்பெறாமல், இழந்தேன் - பெற்றவன்றே போகவிட்ட நான், இழந்தேன் - இப்போதும் இழந்தேனென்கிறாள்.

வ்யா.—ஏழாம்பாட்டு. (குழகனேயென்றன்கோமளப்பிள்ளாய்) லோகயாத்ரையிலே அந்யபரையாய்த் தனக்குமுகங்கொடுத்திருந்தால்லோகயாத்ரையைக் கைவிட்டு உன்னையே பார்க்கவல்லேனும்படி கலைக்கவல்லையாய்த்து. காணப்பெறாதஸௌகுமார்யத்தை யுடையவனே. (கோவிந்தாவென்குடங்கையில்மன்னி) கோஸம்ரக்ஷணத்தையுடையவனே! என்கையிலே யிருந்து. (ஒழுகுபேரொழிலிளஞ்சிறுதளிர் போல் ஒருகையா லொருமுலைமுகநெருடா) அழகுவெள்ளம்பரந்தோடும்படியான தளிர்போலே யிருக்கிற ஒருதிருக்கையாலே இவள் இரங்கி முலைகொடுக்கும்படி ஒருமுலைக்கண்ணை நெருடிக்கொண்டு. (மழலைமென்னகை யிடையிடையருளா வாயிலேமுலையிருக்கவென் முகத்தே) வாயிலே முலையிருக்கச்செய்தே முலைசுரக்கும்படியாகத் தன்முகத்தாலே யிடையிடையே மழலைச்சிரிப்பாகச்சிரியா. (எழில்கொள்நின்திருக் கண்ணிணைநோக்கந் - தன்னையுமிழந்தேனிழந்தேனே) அதுக்கும் இரங்காரும் இரங்கும்படி அழகிய திருக்கண்களாலே பார்க்கிறபார்வையும், பெற்றவன்றே போகவிட்டதுக்குமேலே இவ்வவஸ்தையில் சேஷ்டிதங்களையு மநுபவிக்கப்பெற்றிலேன். எ

அ.—எட்டாம்பாட்டு. (முழுதுமித்யாதி) நானிழந்த இழவெல்லாம் யசோதைப்பிராட்டி பெற்றாளென்கிறாள்.

முழுதும்வெண்ணெ யளைந்துதொட்டுண்ணும் முகிழிளஞ்சிறுத் தாமரைக்கையும், எழில்கொள்தாம்புகொண் டடிப்பதற்கெள்கு நிலையும்வெண்டயிர் தோய்ந்தசெவ்வாயும், அழுகையுமஞ்சிநோக்குமந் நோக்கு மணிகொள்செஞ்சிறுவாய்நெளிப்பதுவும், தொழுகையுமிவை கண்டவசோதை தொல்லையின்பத் திறுதிகண்டாளே. (அ)

ப-கா.—வெண்ணெய் - வெண்ணெய்க்குடத்திலே, முழுதும் - உள்ளளவும், அளைந்து—, "மாளும்" என்று, தொட்டுண்ணும் - தொட்டுத்தொட்டு உண்ணுகிற, இளம்முகிழ் - இளந்தளிர்போலேம்ருதுவாய், தாமரை - செந்தாமரை மலர்போன்ற, சிறுக்கையும் - சிறிய திருக்கைகளும், எழில்கொள் - அழகையுடை

த்தான, தாம்புகொண்டு - தாம்பாலே, அடிப்பதற்கு - அடிக்க, எள்குநிலையும்- அதுக்குப் பையாந்துநிற்கும் நிலையும், வெண்தயிர்தோய்ந்த - வெளுத்த தயிர் பூசிய, செவ்வாயும் - சிவந்த திருப்பவளமும், அழுகையும்—, அஞ்சிநோக்கும்- பயந்து பார்க்கிற, அந்நோக்கும் - அந்தப்பார்வையும், அணிகொள் - அழகிய, செம்சிறுவாய் - சிவந்த சிறியதிருப்பவளத்தை, நெளிப்பதுவும் - நெளிக்குமதையும், தொழுகையுமிவை - அஞ்சலிபண்ணுகையுமாகிற இவைகளை, கண்ட- அநுபவித்த, அசோதை - யசோதைப்பிராட்டியானவள், தொல்லை - அநாதிஸித்தமான, இன்பத்து - பேரின்பத்தினுடைய, இறுதிகண்டாள் - முடிவையநுபவித்தாளென்கிறார்.

வ்யா.—(முழுதும்வெண்ணெயளைந்து)வெண்ணெயிலுண்டான ஆதராதிஶயத்தாலே திருக்கண்களை வெண்ணெய்க்குடத்திலேயிட்டு அளையுமாய்த்து.(தொட்டுஉண்ணும்)அதிசாபலத்தாலே "மாணும்" என்று "விரலொடுவாய்தோய்ந்த" என்னுமாப்போலே தொட்டுண்ணுமாய்த்து. (முகிழிளஞ்சிறுத்தாமரைக்கையும்) இளந்தளிர் போலேயும் நிறத்துக்கு, விகாஸம் செவ்விக்குத் தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கைகளும். (எழில்கொள்தாம்பு)ஸ்பர்ஶிக்கைக்கு ஆசைப்பட்டிருக்கும் திருமேனியை ஸ்பர்ஶித்ததிறே யென்று "எழில்கொள்தாம்பு" என்கிறார். ராஜஜந்மம்வேண்டா, அசேதநமாகவமையும் அங்குத்தை ஸ்பர்ஶம்பெறில் என்றிருக்குமவரிறே. (கொண்டடிப்பதற்கு எள்குநிலையும்) இவர் அங்குத்தை ஸ்பர்ஶத்தை நினைத்து "எழில்கொள்தாம்பு" என்றார்; ஆகிலும் கைக்கெட்டிற்றொன்றையிட்டு அவள் அடிக்க; அதுக்கு ஈடுபட்டுப் பையாந்துநிற்கும் நிலையும். (வெண்தயிர்தோய்ந்தசெவ்வாயும்) "தயிர்களவுகண்டாய்" என்று அடிக்கப் புக்கவாறே இல்லை செய்கைக்காக முகத்திலே பூசிக்கொள்ளுமே. வெளுத்ததயிரும் சிவந்த திருப்பவளமுமான பரபாகமிருக்கிறபடி. (அழுகையும்) "இல்லை" என்றிருக்கச்செய்தே களவை நாடுவதே நம்மழுகையும்; அழப்புக்கவாறே "வாய் வாய்" என்னுமிறே; அத்தாலேபயப்பட்டு அச்சமெல்லாம் தன்னோக்கிலே தோற்றும்படி பார்த்துக்கொடுநிற்கும் நிலையும்.(அணிகொள் செஞ்சிறுவாய்நெளிப்பதுவும்)பின்னையும் அழாதிருக்கவுமாட்டான், அழவும்மாட்டான், அழகியதிருப்பவளத்தை நெளிக்குமித்தனையிறே. (தொழுகையும்) போக்கற்றார் செய்யும்செயலிறே. ஸாபராதரானர்க்கு அபராதம்பொறுக்குமது அஞ்சலியென்னுமிடம் தானறிந்திருக்குமதாகையாலே அஞ்சலியைப் பண்ணுமாய்த்து. (இவை கண்டவசோதை) இவற்றை யிங்கே ஸாக்ஷாத்கரிக்கக்கண்ட வசோதைப்பிராட்டி. (தொல்லையின்பத்திறுதிகண்டாளே) பரமபதத்தில் நிரவதியான அநுபவத்தைஸாவதியாக்கினவனிறே, அங்கேசென்று எல்லாருந்தொழ இருக்குமவன் தான் தொழுகையாலே அபரிச்சிந்நமானவநுபவம் பரிச்சிந்நமாய்த்திறே. ... ... அ

குன்றினாற்குடை கவித்ததுங்கோலக் குரவைகோத்ததுங்குடமாட்டும், கன்றினால்விள வெறிந்ததுங்காலாற் காளியன்றலை மிதித்ததுமுதலா, வென்றிசேர்பிள்ளை நல்விளையாட்ட மனைத்திலுமங்கென் னுள்ளமுள்குளிர, வொன்றுங்கண்டிடப் பெற்றிலேனடியேன் காணுமாறினி யுண்டெனிலருளே. (கூ)

ப-ரை.—இந்த்ரன்பெய்வித்த கல்வர்ஷத்தைத் தடுக்கைக்காக, குன்றினால்-கோவர்த்தநபர்வதத்தை, குடை-குடையாக, கவித்ததும் - தரித்துநின்றதும், கோலம் - அழகிய, குரவைகோத்ததும் - குரவைக்கூத்தாடினதும், குடமாட்டும் - குடக்கூத்தாடினதும், கன்றினால் - தேநுகாஸுரனாகிற கன்றாலே, விளவு - கபித்தாஸுரனை, எறிந்ததும - எறிந்துமுறித்ததும், காலால் - திருவடிகளாலே, காளியன் - காளியனுடைய, தலை - தலையை, மிதித்ததுமுதலா - மிதித்ததுமுதலாக; வென்றி - வீரப்பாட்டுக்கும், பிள்ளை-மௌக்த்யத்துக்கும், சேர்-சேர்ந்திருக்கிற, நல் - அதிமநோஹரமான, விளையாட்டனைத்திலும் - எல்லாவிளையாட்டுகளுள்ளும், என்னுள்ளம் - என்மநஸ்ஸானது, உள்குளிர - உள்ளேகுளிரும்படி, அடியேன் - இவைகாண்கையே ப்ரயோஜநமாயிருக்கிற நான், ஒன்றும் - இந்த சேஷ்டிதங்களில் ஒன்றையும், கண்டிடப்பெற்றிலேன் - காணப்பெறவில்லை; இனி-இப்போது, காணுமாறு-நான் இவைகளைக் காணும்வழி, உண்டெனில் - உண்டானால், அருள் - க்ருபைசெய்தருளவேணும்.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (குன்றினால் குடைகவித்ததும்) இடையரும் பசுக்களும் தொலையும்படியாக இந்த்ரன் கல்வர்ஷம் வர்ஷித்தபடியாலே மலையையெடுத்துக் குடையாகதரித்ததும். (கோலக்குரவைகோத்ததும்) தர்ஸநீயமான குரவைக்கூத்திலே கோபிமாரோடொக்கத் தன்னையுங் கோத்ததும். (குடமாட்டும் கன்றினால் விளவெறிந்ததும்) ஒருவன் கன்றாய் ஒருவன் விளாவாய்வந்த இருவரையும் சேரமுடித்ததுவும். (காலால்காளியன்றலை மிதித்ததுமுதலா) நான் ஆசைப்பட்டுப் பெறாததிருவடிகளைக்கொண்டு ஆஸுரப்ரக்ருதியான காளியன்றலையிலே மிதித்ததுமுதலாக. (வென்றிசேர்பிள்ளை நல்விளையாட்டம்) வீரப்பாட்டுக்கும் மௌக்த்யத்துக்கும் சேர்ந்திருக்கிற அதிமநோஹரமான. (அனைத்திலும் அங்கென்னுள்ள முள்குளிர ஒன்றுங் கண்டிடப்பெற்றிலே னடியேன்) இவைகாண்கையே ப்ரயோஜநமா யிருக்கிறநான் ஒன்றுங் காணப்பெற்றிலேன். (காணுமாறினியுண்டெனிலருளே) நீ நினைத்தக்கால் செய்யவொண்ணாததில்லை, நான் இவைகாணும்படி யருளவேணும். கூ.

வஞ்சமேவியநெஞ்சுடைப்பேய்ச்சி வரண்டுநார்நரம்பெழக்கரிந்துக்க,நஞ்சமார்தருசுழிமுலையந்தோ சுவைத்துநீயருள்செய்துவளர்ந்தாய்; கஞ்சனுள்கவர்கருமுகிலெந்தாய்! கடைப்பட்டேன்வெறிதே முலைசுமந்து, தஞ்சமேலொன்றிலேன்; நொந்திருந்தேன்; தக்கதே நல்லதாயைப்பெற்றாயே. (க0)

ப-ரை.—வஞ்சம் - வஞ்சநத்திலே, மேவிய - பொருந்தின, நெஞ்சுடை- மநஸ்ஸையுடையளான, பேய்ச்சி - பூதனையுடைய, மாம்ஸமும்உள்ளுண்டான உதிரமும், எழ - கொழித்துக்கொண்டுபுறப்படவும், சேஷித்தவுடம்பு, நார்நரம்பு - நாரும் நரம்பும் தோலுமாம்படி, கரிந்து - கருகி, உக்க-உதிரும்படியாக. சுழி - தன்னிலே அகப்படுத்தவற்றாய், ஆர்தரு - மிகுந்த, நஞ்சம் - விஷத்தை யுடைத்தான, முலை - முலைப்பாலை, நீ—, சுவைத்து அருள்செய்து-புஜித்தருளி, வளர்ந்தாய்-அத்தையே தாரகமாகக்கொண்டு வளர்ந்தவனாய், கஞ்சன்-கம்ஸனுடைய, நாள் - ஆயுஸ்ஸை, கவர் - அபஹரித்த, கரு - கறுத்த, முகில்மேகத்தையொத்து, எந்தாய் - என்னை யெழுதிக்கொண்டவனே, முலை - முலையை, வெறிதே-வ்யர்த்தமாக,சுமந்து—, கடைப்பட்டேன்-தண்ணியாரிலும் தாழ்ந்தவளாயிராநின்றேன்; தஞ்சம்ஒன்று - வேறொருதாரகம், இலேன் - இல்லாதவளாகையாலே, உய்ந்திருந்தேன் - ப்ராணனைவருந்தி தரித்துக்கொண்டிருந்தேன்; உனக்கு முலைப்பால் அபேக்ஷிதமானபோது, தக்கது- உனக்குத்தகுதியான, நல்லதாயை - நல்லதாயாரை, பெற்றாய் - பெற்றாயென்கிறாள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வஞ்சமேவியநெஞ்சுடைப்பேய்ச்சி) இவனைக்கண்டால் செவ்வியராக இருக்கவிறே கடவது, கண்டு வைத்து வஞ்சநத்திலே பொருந்தினபூதனை. (வரண்டுநார்நரம்பெழக் கரிந்துக்க) மாம்ஸமும்உள்ளுண்டானஉதிரமும் முலைப்பாலோடே கொழித்துக்கொண்டு புறப்பட, ஶேஷித்தவுடம்பு நார்நரம்பும் தோலுமாம்படி கரிந்துக்க. (நஞ்சமார்தருசுழிமுலையந்தோ சுவைத்துநீயருள்செய்துவளர்ந்தாய்) கிடந்த ஆஶ்ரயத்தையு மிழக்கவற்றாய் மிக்க நஞ்சையுடைத்தாய் கோபத்தையு முடைத்தாயிருக்கிற முலையாலேதாரகமாகவுண்டருளிவளர்ந்தாய். (கஞ்சன்நாள்கவர்கருமுகிலெந்தாய்) கம்ஸனுடைய ஆயுஸ்ஸை அபஹரித்து அத்தாலேயேறின புகரையுடைய வடிவையுடையாய், அச்செயலாலும் வடிவழகாலும் என்னை யெழுதிக்கொண்டவனே. (கடைப்பட்டேன்வெறிதேமுலைசுமந்து) முலைநெறித்தபோது உண்பாரொருபிள்ளையைப் பெற்றுவைத்துப் பெறாதே வ்யர்த்தமாயிருக்கையாலே எத்தனையேனும்தண்ணியாரிலும் தாழ்ந்தேன். (தஞ்சமேலொன்றிலேன் உய்ந்திருந்தேன்) வேறுதாரக மில்லாமையாலே ப்ராணங்களை வருந்தி தரித்திருந்தேன். (தக்கதே நல்ல தாயைப்பெற்றாயே) முலைப்பால் அபேக்ஷிதமானபோது உனக்கு நல்ல தாயைப்பெற்றாயே. ௧௦

மல்லைமாநகர்க் கிறையவன்றன்னை வான்செலுத்தி வந்தீங்கணமாயத், தொல்லையில்பிள்ளைசெய்வனகாணாத் தெய்வத்தேவகிபுலம்பியபுலம்பல், கொல்லிகாவலன்மாலடிமுடிமேற் கோலமாங்குலசேகரன்சொன்ன, நல்லிசைத்தமிழ்மாலைவல்லார்கள் நண்ணுவாரொல்லைநாரணனுலகே. (௧௧)

ப - ரை.—மல்லை - மிக்கஸம்பத்தையுடைய, மா - ச்லாக்யமான, நகர்க்கு - ஸ்ரீமதுரைக்கு, இறையவன்றன்னை - ராஜாவான கம்ஸனை, வான் - வீரஸ்வர்க்கத்திலே, செலுத்தி - அனுப்பிவிட்டு, ஈங்கனம்வந்து - திருவாய்ப்பாடியிலே வந்து கிட்டினவனாய், எல்லையில் - அளவில்லாத, மாயத்து - ஆச்சரியச்செய்கையை யுடையவனான க்ர்ஷ்ணனுடைய, பிள்ளைசெய்வன - பாலசேஷ்டிதங்களை, காணா - காணாமையாலே, தெய்வம் - இவனைப் பிள்ளையாகப் பெறுகைக்கீடான பாக்யத்தையுடைய, தேவகி - தேவகிப்பிராட்டி, புலம்பியபுலம்பல் - புலம்பிய பாசுரத்தை; கொல்லிகாவலன் - கொல்லியென்கிற படைவீட்டுக்கு நிர்வாஹகராய், கோலமாம் - ஸர்வேச்வரன் திருவடிகளைத் தம்முடையதிருமுடிக்கு அலங்காரமாகவுடையரான, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப்பெருமாள், சொன்ன - அருளிச்செய்த, நல் - அழகிய, இசை - இசையோடேகூடின, தமிழ்மாலைவல்லார்கள் - தமிழ்த்தொடையை வல்லவர்கள், நாரணன் - ஸர்வஸ்மாத்பரனானநாராயணனுடைய, உலகு - பரமபதத்தை, நண்ணுவார் - கிட்டப்பெறுவர்கள்.

வ்யா.—நிகமத்தில். (மல்லைமாநகர்க் கிறையவன்றன்னை) மிக்க ஸம்பத்தையுடைய ஸ்ரீமதுரைக்கு நிர்வாஹகனான கம்ஸனைத் தான் கைதொட்டு முடிக்கையாலே வீரஸ்வர்க்கத்திலேபோகட்டு. (வந்தீங்கனமாயத் தித்யாதி) கம்ஸவதம்பண்ணி இங்கேவந்து கிட்டின ஆஶ்சர்ய சேஷ்டிதங்களுக்கு அவதியின்றியிலே யிருக்கிற க்ர்ஷ்ணனுடைய பாலசேஷ்டிதங்கள் காணாமையாலே. (தெய்வத்தேவகி புலம்பிய புலம்பல்) இவன் சேஷ்டிதங்களை யநுபவிக்கப்பெறாத இழவையுமுடையளாய் இவனைப் பிள்ளையாகப் பெறுகைக்கீடான பாக்யத்தைப் பண்ணின தேவகியார் புலம்பிய பாசுரத்தை, "கொல்லி" என்கிற படைவீட்டுக்கு நிர்வாஹகரானவர். (மாலடிமுடிமேல் கோலமாம்குலசேகரன்) ஸர்வேஶ்வரன்திருவடிகளைத் தமக்கு முடிமேல் மாலையாகவுடையபெருமான். (சொன்னநல்லிசைத்தமிழ் மாலைவல்லார்கள்) அழகிய இசையோடேகூடின தமிழ்த்தொடை வல்லவர்கள். (நண்ணுவாரொல்லை நாரணனுலகே) இங்கேயிருந்து அவதாரத்திலேகதேஶத்தை யநுபவிக்கஆசைப்பட்டு அதுகிடையாதே யிருந்து புலம்பாதே உபயவிபூதிநாயகனைப் பரமபதத்திலே நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள். ... ... கக

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

———:0:———

ஆலை வடி முந்தை கனி மருவு தண்ணம் குழகன் முழுது குன்று வஞ்சம் மல்லை மன்னு.

ஆக திருமொழி - எ - இ - பாட்டு - எக.

எட்டாந்திருமொழி - மன்னுபுகழ் - ப்ரவேசம்

அ.—தேவகியார் இழந்த இழவு மாத்ரமேயோ, ஸ்ரீகௌஸல்யையாய்த்தான் காணப்பெற்றேனோ வென்று அஸ்ஸமகாலத்தில் தாமிழக்கையாலே அவளநுபவத்தைத் திருக்கண்ணபுரத்திலே யநுபவிக்கிறார்.

மன்னுபுகழ்க்கௌசலைதன்மணிவயிறுவாய்த்தவனே!
தென்னிலங்கைக்கோன்முடிகள்சிந்துவித்தாய்!செம்பொன்சேர்
கன்னிநன்மாமதிள்புடைசூழ்கணபுரத்தென்கருமணியே!
என்னுடையவின்னமுதே!இராகவனே!தாலேலோ. (க)

ப.ஸா.—மன்னு-நிலைநின்ற, புகழ்-புகழையுடைய, கௌசலைதன்-ஸ்ரீகௌஸல்யையாருடைய, மணி-அழகிய, வயிறு - வயிற்றிலே, வாய்த்தவனே-பிள்ளையாகப்பிறந்தவனாய், தென்-கட்டளைப்பட்ட, இலங்கை-லங்காநகரத்துக்கு, கோன்-அரசனானராவணனுடைய, முடிகள் - பத்துத்தலைகளையும், சிந்துவித்தாய்-சிதறும்படி பண்ணினவனாய், செம்பொன்சேர் - செம்பொன்னாற் செய்யப்பட்டதாய், கன்னி - அழிவில்லாததான, மதிள் - மதிள்களாலே, புடை - நாற்புறமும், சூழ் - சூழப்பட்டிருக்கிற, கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்குமவனாய், என்கருமணியே - எனக்கு நீலமணிபோன்றவனாய், என்னுடைய - எனக்கு, இன் - பரமபோக்யமான, அமுதே - அம்ருதமானவனாய், இராகவனே - ரகுவம்சத்தரசனே, தாலேலோ—.

வ்யா.—முதற்பாட்டு. (மன்னுபுகழ்க்கௌசலைதன்மணிவயிறுவாய்த்தவனே) "ஸர்வேஶ்வரனைப்பிள்ளையாகப்பெற்றாள்" என்ற நிலைநின்றபுகழையுடையஸ்ரீகௌஸல்யையாருடையஅழகியவயிற்றிலே அவளுக்குப் பிள்ளையாகப்பெற்றவனே. (தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய்) இத்திருமொழியிறே ராமாவதாரத்தில் மிகை; ஆகையாலேஇச்சந்தை. (செம்பொன்சேர்கன்னிநன் மாமதிள் புடைசூழ்கணபுரத்தென்கருமணியே) அழிவில்லாதமதிளாலேசூழ்ந்த திருக்கண்ணபுரத்திலே எனக்கு த்ர்ஷ்டிக்கு நிர்வாஹகனாய் நிற்கிறவனே. (என்னுடைய இன்னமுதே) தேவர்களம்ர்தம்போலன்றியே எனக்கு அம்ர்தமானவனே. (இராகவனே தாலேலோ) தேவர்களுடைய அம்ர்தம் உப்புச்சாறிறே; அதன்றிறே இவருடைய அம்ர்த மிருக்கிறபடி. ... ... க

புண்டரீகமலரதன்மேற்புவனியெல்லாம்படைத்தவனே!
திண்டிறலாள்தாடகைதனுரமுருவச்சிலைவளைத்தாய்!
கண்டவர்தம்மனம்வழங்குங்கணபுரத்தென்கருமணியே!
எண்டிசையுமாளுடையாய்! இராகவனே! தாலேலோ. (உ)

ப.ஸா.—புண்டரீகமலரதன்மேல்-திருநாபீகமலத்திலே, புவனியெல்லாம்-லோகங்களையெல்லாம், படைத்தவனே - ஸ்ருஷ்டித்தவனாய், திண் - திண்ணிய, திறலாள் - திறலையுடையளான, தாடகைதன் - தாடகையுடைய, உரம்-உரத்த மார்விலே, உருவ - உருவிச்செல்லும்படியாக, சிலைவளைத்தாய் - வில

வளைத்து அம்பெய்தவனாய், கண்டவர்தம்-ஸேவித்தவர்களுடைய, மநம்-நெஞ்சுகளை, வழங்கும் - தாங்கள் இசைந்து கொடுக்கும்படி, கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்கிற, என்கருமணியே - எனக்கு நீலமணியையொத்தவனாய், எண்டிசையும் - எட்டுதிக்கிலுள்ளாரையும், ஆளுடையாய்-அடிமைகொண்டருளுமவனான, இராகவனே தாலேலோ—.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (புண்டரீகமித்யாதி) திருநாபீகமலத்திலே லோகமெல்லாம் ஸ்ருஷ்டித்தவனே. (திண்டிறலித்யாதி) ஸ்ருஷ்டிக்கு மதன்றியே, பயிரைச்செய்து களைபிடுங்குமாப்போலே ஆஸுரவர்க்கத்தைப் போக்கினபடி. திண்ணிய திறலையுடையளான தாடகை உரத்தை மறுபாடுருவ வில்லைவளைத்தவனே. (கண்டவர் தம்மநம் வழங்கும் கணபுரத் தென்கருமணியே) கண்டவர்கள் நெஞ்சுகளைத்தாங்களுமிசைந்து கொடுக்கும்படி திருக்கண்ணபுரத்திலே நிற்கிறவனே. (எண்டிசையுமாளுடையா யிராகவனே தாலேலோ) அவதாரத்தில் பிற்பாடரான எட்டுதிக்கி லுள்ளாரும்வந்து வாழும்படி நின்றவனே. ... ... உ

கொங்குமலிகருங்குழலாள்கௌசலைதன்குலமதலாய்!
தங்குபெரும்புகழ்ச்சனகன்றிருமருகா! தாசரதீ!
கங்கையிலுந்தீர்த்தமலிகணபுரத்தென்கருமணியே!
எங்கள்குலத்தின்னமுதே! இராகவனே! தாலேலோ. (ங)

ப-ரை.—மலி - மிக்க, கொங்கு - பரிமளம் வீசாநின்றுள்ள, கரும்-கறுத்த, குழலாள் - கூந்தலையுடையளான, கௌசலைதன் - ஸ்ரீகௌஸல்யாருடைய, குலம்-குலத்துக்கு, மதலாய்-உத்தாரகனாய், தங்கு-புகழென்றுபேர்பெற்றவையெல்லாம் தங்கும்படி, பெரு - பெரிய, புகழ் - புகழையுடைய, சநகன திருமருகா - ஸ்ரீஜநகராஜனுடைய மருமகனாய், தாசரதீ-தசரதமஹாராஜன்புத்ரனாய், கங்கையிலும் - கங்காநதியைக்காட்டிலும், தீர்த்தம்மலி - பரிசுத்தம் மிக்கிருக்கிறதடாகங்களையுடைய, கணபுரத்தென்கருமணியே—, எங்கள்குலத்து - எங்கள் ராஜவம்சத்துக்கெல்லாம், இன்அமுதே -பரமபோக்யனான, இராகவனே தாலேலோ—.

வ்யா.—மூன்றாம்பாட்டு. (கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன்குலமதலாய்) மிக்க பரிமளத்தைப் புறப்படவிடுகிற இருண்ட குழலையுடைய ஸ்ரீகௌஸல்யாருடைய குலத்துக்கு உத்தாரகனானவனே. (தங்கு பெரும்புகழ்ச் சநகன் திருமருகா) புகழென்று பிறந்தவையெல்லாம் தங்கும்படி பெரிய புகழையுடைய ஸ்ரீஜநகராஜனுக்கு மருமகனானவனே. (தாசரதீ) அவனோடே ஸம்பந்தம் பண்ணலாம்படியான பிறப்பையுடையவனே. (கங்கையிலுந்தீர்த்தமலி கணபுரத் தென்கருமணியே) காதாசித்க ஸம்பந்தத்தால்வரும் ஶுத்தியோக மிறே கங்கைக்குள்ளது, ஸம்பந்தம் நித்யமாகையாலே அதிலும் ஶுத்திமிக்கிருக்கிற திருப்பொய்கையையுடைய திருக்

கண்ணபுரத்திலே ஸுலபனானவனே. (எங்கள் குலத்தின்னமுதே இராகவனே தாலேலோ) ராஜவம்ஶத்துக்காக போக்ய பூதனான வனே. ... ... (ங)

தாமரைமேலயனவனைப்படைத்தவனே! தயரதன்றன்
மாமதலாய்! மைதிலிதன்மணவாளா! வண்டினங்கள்
காமரங்களிசைபாடுங்கணபுரத்தென்கருமணியே!
ஏமருவெஞ்சிலைவலவா! இராகவனே! தாலேலோ. (ச)

ப-ரை.—தாமரைமேல் - திருநாபீகமலத்திலே, அயனவனை - ப்ரஹ்மாவை, படைத்தவனே - ஸ்ர்ஷ்டித்தவனாய், தயரதன்றன் - தசரதமஹாராஜாவின், மாமதலாய் - ஜ்யேஷ்டபுத்ரனாய், மைதிலிதன்மணவாளா - பிராட்டிக்கு வல்லபனாய், வண்டினங்கள் - வண்டினங்களானவை, காமரங்கள் இசை - காமரமென்கிற பண்ணை, பாடும் - பாடுகிற, கணபுரத்தென்கருமணியே—, ஏமருவு - அம்பிலே மீட்டத்தக்க, வெம் - வெவ்விய, சிலை - ஸ்ரீசார்ங்கத்தை வளைத்து அம்பெய்வதிலே, வலவா - வல்லவனான, இராகவனே தாலேலோ—.

வ்யா.—நாலாம்பாட்டு. (தாமரைமேலயனவனைப் படைத்தவனே) கீழ்ச்சொன்ன ஸ்ர்ஷ்டியின்றட்டினபடி. (தயரதன்தன்மாமதலாய்) அறுபதினாயிரமாண்டு மலடுநின்றசக்ரவர்த்தியினுடைய மலடுதீரப் பிறந்தவனே. (மைதிலிதன்மணவாளா) பிள்ளைபெற்றத்தின் மேலும் பிறப்பில்வந்த ஏற்றத்துக்குமேலே, “యస్యసాజనకాత్మజా” “யஸ்யஸாஜநகாத்மஜா” என்று பிராட்டியை உனக்கென்றிட்டுப் பிறந்த மேன்மையையுடையவனே. (வண்டினங்கள்காமரங்களிசை பாடுங்கணபுரத்தென்கருமணியே) வண்டினங்கள் “காமரம்” என்கிற பண்ணிலே இசைபாடுகிற திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனானவனே. (ஏமருவெஞ்சிலைவலவாஇராகவனேதாலேலோ) ஆரேனும் பிடிக்கிலும் ஏவிலே மீட்டும் ஸ்ரீசார்ங்கத்தை உன்னினைவிலே வரும்படி செலுத்த வல்லவனே. ... ...

பாராளும்படர்செல்வம்பரதநம்பிக்கேயருளி
ஆராவன்பிளையவனோடருங்கானமடைந்தவனே!
சீராளும்வரைமார்பா! திருக்கண்ணபுரத்தரசே!
தாராரும்நீண்முடியென்றாசரதீ! தாலேலோ. (ரு)

ப-ரை.—பார் - பூமிப்பரப்படைய, ஆளும் - ஆளக்கடவதான, படர்-பெரிய, செல்வம் - ஸம்பத்தை, நம்பி - பாரதந்த்ர்ய குணங்களால் பூர்ணனாயிருக்கிற, பரதனுக்கு - ஸ்ரீபரதாழ்வானுக்கு, அருளி - கொடுத்தருளி, “ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னிவழுவிலாவடிமைசெய்யவேண்டு நாம்” என்கிறபடியே-ஸர்வதேசஸர்வகாலஸர்வாவஸ்தைகளிலும்அடிமைசெய்கையில், ஆரா அன்பு - மிக்க ஆதரமுடையரான, இளையவனோடு - இளைய பெருமாளோடே, அரும்-ஒருவராலும்ஸஞ்சரிக்கவரிதான,கானம்-தண்டகமுதலானகாடுகளிலே, அடைந்தவனே - ப்ரவேசித்தவனே, சீர்ஆளும்-வீரஸ்ரீக்கு நிவாஸஸ்தாநமாய்,

வரை - மேருமலைபோலே விசாலமாய்த்திண்ணிதான, மார்பா - திருமார்பை யுடையனாய், திருக்கண்ணபுரத்தரசே - திருக்கண்ணபுரத்துக்கு நிர்வாஹக னாய், நீள் - எல்லாவுலகுக்கும் தலைவனென்கைக்குக்குறிப்பாய், தார் ஆரும்- மாலையோடுகூடின, முடி - திருவபிஷேகத்தையுடையனாய், என்தாசரதீ - என் சக்ரவர்த்தித்திருமகனே, தாலேலோ—.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பாராளும்படர்செல்வம் பரதநம்பிக்கேயருளி) பூமிப்பரப்படைய ஆளக்கடவதான பெரியஸம்பத்தை, பாரதந்த்ர்ய குணங்களால் பூர்ணனாயிருக்கிற ஸ்ரீபரதாழ்வானுக்கே அருளி. (ஆராவன்பிளையவனோடருங்கானமடைந்தவனே) அவனைப்போலே நியமித்தவிடத்தில் பிரிந்திருக்கமாட்டாதே, "குருஷ்வ மாம்" "குருஷ்வமாம்" என்னும் இளையபெருமாளோடேகூடி ஒருவராலும் இயங்கவொண்ணாத துஷ்டஸத்வ ப்ரசுரமான காட்டிலே ப்ரவேசித்தவனே. (சீராளும்வரைமார்பா) வீரஸ்ரீக்கு நிர்வாஹகனானதுவும். (தாராரும்நீண்முடியென்தாசரதீ தாலேலோ) ஆதிராஜ்யஸூசகமானமாலையோடுகூடினமுடியையுடையசக்ரவர்த்தித் திருமகனே. ... ... ரு

சுற்றமெல்லாம்பின்றொடரத்தொல்கானமடைந்தவனே!
அற்றவர்கட்கருமருந்தே! அயோத்திநகர்க்கதிபதியே!
கற்றவர்கள்தாம்வாழுங்கணபுரத்தென்கருமணியே!
சிற்றவைதன்சொற்கொண்டசீராமா! தாலேலோ. (சு)

ப-ரை.—சுற்றமெல்லாம்- பந்துக்களெல்லாரும், பின்-பின்னே, தொடர- தொடர்ந்துஸேவித்துவர, தொல்-மநுஷ்யஸஞ்சாரமில்லாமல் புதர்மூடிக்கிடக்கிற, கானமடைந்தவனே-காட்டிலே ப்ரவேசித்தவனாய், அற்றவர்கட்கு-அஹங்காரமமகாரங்களற்றவர்களுக்கு, அரு-ஒருவராலும்பெறுதற்கரிய, மருந்தே- அம்ர்தமானவனாய், அயோத்திநகர்க்கு - திருவயோத்யைக்கு, அதிபதியே-அதிபதியானவனாய், கற்றவர்கள் தாம் - வேதாந்தங்களைக்கற்று அவன் சேஷி நாம் சேஷபூதரென்று அறிந்தவர்கள், வாழும் - நித்யவாஸம்பண்ணுகிற, கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே, என்-எனக்கு அநுபவிக்கலாம்படி, கருமணியே- நீலமணிபோலே யிருப்பவனாய், சிற்றவைதன் - சிறிய தாயாரான கைகேயியுடைய, சொல் - "வநவாஸஞ்செய்" என்றசொல்லை, கொண்ட - சிரஸாவஹித்துக் காட்டுக்கெழுந்தருளின, சீராமா தாலேலோ—.

வ்யா.—ஆறும்பாட்டு. (சுற்றமெல்லாம்பின்றொடரத் தொல் கானமடைந்தவனே) எல்லாரும் போனார்களோ, சிறிதிடம்போய் மீண்டதென்றன்றோசொல்லிற்றாய்த்து;—"அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" 'அஹம்ஸர்வம்கரிஷ்யாமி' என்று சொன்ன எல்லாவடிமையும் செய்யுமிளையபெருமாள் கூடப்போகையாலே எல்லாபந்துக்களும் கூடப் போனார்களாய்த்திறே" என்று எம்பெருமானாரருளிச்செய்தருளினார். (அற்றவர்கட்கருமருந்தே); "கர்ப்பபூதாஸ்தபோதநா:" "கர்ப்ப

பூதாஸ்தபோதநா:” என்றிருக்குமவர்களுக்கு. (அருமருந்தே) “ம்ருத்ய ஸஞ்ஜீவநம் ஜநஸ்ய” “அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்” என்றிருக்கும் மருந்தானவனே. (அயோத்திநகர்க் கதிபதியே) பரமபதம்போலே அயோத்யையிறே இதுக்குப்பேர்; அப்படிப்பட்ட படைவீட்டுக்கு அதிபதியானவனே. (கற்றவர்கள்தாம்வாழுங் கணபுரத்தென்கருமணியே) கற்பது ஒருதேசத்திலே யிருந்து ஒருகாலத்திலேயாய் ப்ராப்யவஸ்துவைக் கிட்டி யநுபவிப்பது ஒரு தேசவிசேஷத்திலேயாகாமே, ப்ராப்யவஸ்து தெற்குத்திக்கிலேகாணலாம்படி திருக்கண்ணபுரத்தில் நின்றவனே. (சிற்றவைதன்சொல்கொண்ட சீராமா தாலேலோ) பெற்றதாயான நான் உம்மைப்பிரியில் தரியேனென்று ஸ்ரீகௌஸல்யார் பின்தொடரச்செய்தேயும் * மாற்றுத்தாயான கைகேயிசொல்லு மாறாதே வநத்தேபோந்தவனே. ... ... சு

ஆலினிலைப்பாலகனாயன்றுலகமுண்டவனே!
வாலியைக்கொன்றரசிளையவாநரத்துக்களித்தவனே!
காலின்மணிகரையலைக்குங்கணபுரத்தென்கருமணியே!
ஆலிநகர்க்கதிபதியே! அயோத்திமனே! தாலேலோ. (எ)

ப - ரை.—அன்று - மஹாப்ரளயம் வந்தபோது, ஆலின் இலை - ஓராலந்தளிரிலே, பாலகனாய் - குழந்தைவடிவாய்க் கொண்டு, உலகம் - ஸகலலோகங்களையும், உண்டவனே - திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தருளினவனாய், வாலியை - ராஜாவான வாலியை, கொன்று—, அரசு - வாநர ராஜ்யத்தை, இளைய வாநரத்துக்கு - ஸுக்ரீவனுக்கு, அளித்தவனே - கொடுத்தவனாய், காலின - காற்றிலே, மணி - உள்ளுக்கிடக்கிற ரத்நங்களை, கரை - கரையிலே கொடுவந்து, அலைக்கும் - ஏறிடுகிற, கணபுரத்தென் கருமணியே—, ஆலிநகர்க் கதிபதியே - திருவாலிக்கு நிர்வாஹகனாய், அயோத்தி - திருவயோத்யைக்கு, மன்னே - அரசனானவனே, தாலேலோ—.

வ்யா.—ஏழாம்பாட்டு. (ஆலினிலைப்பாலகனா யன்றுலகமுண்டவனே) லோகத்தையெல்லாம் திருவயிற்றிலேவைத்து ஒருபவனான ஆலிலையிலே அதுதான் விஞ்சுமென்னும்படி கண்வளர்ந்தருளின அகடிதகடநா ஸாமர்த்யத்தையுடையவனே. (வாலியைக்கொன்றரசிளைய வாநரத்துக்களித்தவனே) வாலி, ஆனைத்துணையாக நீ விஜயம்பண்ணின ராவணனை, வாலிலேகட்டிவைத்தான், அவ்வாலியைக் கொன்று அவனுக்கிடைந்து பர்வதகுஹைகளிலே கிடக்கிற மஹாராஜர்க்கு வாநரராஜ்யத்தைக் கொடுத்தவனே. (காலின்மணியித்யாதி) காற்றாலே உள்ளுக்கிடக்கிற ரத்நங்களைக் கரையிலே யேறிடுமென்னுதல்; கால்வாய்களில் மணிகளைக் கொடுவந்து கரையிலே யேறிடுமென்னுதல். (ஆலிநகர்க்கதிபதியே) திருவாலிக்கு நிர்வாஹகனானவனே. வாலியைக்கொன்று ஹரிதன்னைத் துணையாகக்கொள்ளப்பெற்றதே. ... ... எ

மலையதனாலணைகட்டிமதிளிலங்கையழித்தவனே!
அலைகடலைக்கடைந்தமரர்க்கமுதருளிச்செய்தவனே!
கலைவலவர்தாம்வாழுங்கணபுரத்தென்கருமணியே!
சிலைவலவா! சேவகனே! சீராமா! தாலேலோ. (௮)

ப-ரை.—மலையதனால்-மலைகளைக்கொண்டு, அணைகட்டி-ஸேதுபந்தம்பண்ணி, மதிள் - மதிளையுடைத்தான, இலங்கை - லங்கையை, அழித்தவனே-அழித்தவனாய், அலை - அலைகளையுடைய, கடலை - திருப்பாற்கடலை, கடைந்து—, அமரர்க்கு - தேவர்களுக்கு, அமுதருளிச்செய்தவனே - அம்ர்தம் கொடுத்தருளினவனாய், கலைவலவர்தாம் - ஸகலசாஸ்த்ரங்களும் கைவந்திருக்குமவர்கள், வாழும் - நித்யவாஸம்பண்ணுகிற, கணபுரத்தென்கருமணியே—, சிலைவலவா- வில்தொழிலில் வல்லவனாய், சேவகனே - ஆச்ரிதர்ஏவிற்றுச்செய்யும் ஸேவகனான, சீராமா தாலேலோ—.

வ்யா.—எட்டாம்பாட்டு. (மலையதனாலணைகட்டி மதிளிலங்கையழித்தவனே) நிலத்திலே வரமலையைக்கொண்டு அரணானமலையை யணையாகக்கட்டி நீர்தானும் மிகையென்னும்படியான அரணையுடைத்தான லங்கையை மூலையடியே வழிபோக்கினவனே. (அலைகடலைக்கடைந்தமரர்க் கமுதருளிச்செய்தவனே) அகாதமான ஸமுத்ரத்தைக் கடைந்து அம்ர்தத்தை வாங்கி அஸுரர்கள்கையிலே தேவர்கள் சாவாதபடி அவர்களுக்குக்கொடுத்தவனே. (கலைவலவர் தாம் வாழும்கணபுரத்தென்கருமணியே) ஸகல வித்யாஸ்தலங்களும்கைவந்திருக்குமவர்கள் உன்னை அநுபவிக்கும் திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனானவனே. (சிலைவலவா) ஸ்ரீஶார்ங்கம் கைவந்திருக்குமவனே. (சேவகனித்யாதி) அதுதான் மிகையென்னும்படியான வீரப்பாட்டையுடையவனே. ௮

தளையவிழுநறுங்குஞ்சித்தயரதன்றன்குலமதலாய்!
வளையவொருசிலையதனால்மதிளிலங்கையழித்தவனே!
களைகழுநீர்மருங்கலருங்கணபுரத்தென்கருமணியே!
இளையவர்கட்கருளுடையாய்! இராகவனே! தாலேலோ. (௯)

ப-ரை.—தளை அவிழும்-கட்டவிழும்படியான, நறும் - நறுநாற்றம்கமழாநின்றுள்ள, குஞ்சி - மயிர்முடியையுடையனாய், தயரதன் றன்குலம்-தசரதசக்ரவர்த்திகுலத்துக்கு, மதலாய் - உத்தாரகனாய், வளைய-ப்ராஹ்மாஸ்த்ராதிகள் வாய்மடியுமதாய், ஒரு - அத்விதீயமான, சிலையதனால் - வில்லாலே, மதிள்-மும்மதிளையுடைய, இலங்கை - லங்கையை, அழித்தவனே - அழித்தவனாய், களை - களையாகப் பறித்து, மருங்கு - பக்கத்துக்கரைகளிலே போகட்ட, கழுநீர் - செங்கழுநீர் மொட்டுகளானவை, அலரும் - மலராநின்றுள்ள, கணபுரத்தென்கருமணியே—, இளையவர்கட்கருளுடையாய் - தம்பிமார்விஷயத்தில்மிக்க அருளையுடையனாய், இராகவனே - ரகுகுலதிலகனானவனே, தாலேலோ—.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (தளையவிழுமித்யாதி) கட்டவிழும்படியான நறு நாற்றத்தை யுடைய மயிர்முடியை யுடைய

சக்ரவர்த்திகுலத்துக்கு உத்தாரகனானவனே. (வளையவொருசிலையித்யாதி) ப்ரஹ்மாஸ்த்ராதிகள் வாய்மடியுமூனை மநுஷ்யத்வத்துக்கு ஏகாந்தமான வில்லாலே அவனுடையவூனை யழியச்செய்தவனே. (களைகழுநீரித்யாதி) களையாகப்பறித்துக் கரையிலேபொகட்ட செங்கழுநீர்கள் பொகட்டவிடங்களிலேகிடந்து தன்னிலத்தில் அலருமாப்போலே செவ்விபெற்றலரும் திருக்கண்ணபுரம். (இளையவர்க ளித்யாதி) தம்பிமார்க்கு உறுப்பாகாதபோது என் ப்ராணங்களும் எனக்கு வேண்டாவென்னு மவரிறே. ... ... க

தேவரையுமசுரரையுந்திசைகளையும்படைத்தவனே!
யாவரும்வந்தடிவணங்கவரங்கநகர்த்துயின்றவனே!
காவிரிநன்னதிபாயுங்கணபுரத்தென்கருமணியே!
ஏவரிவெஞ்சிலைவலவா! இராகவனே! தாலேலோ. (க0)

ட-ரை.—தேவரையும் - தேவதைகளையும், அசுரரையும் - அவர்களுக்குப் பகைவரான அஸுரர்களையும், திசைகளையும் - திருபலக்ஷிதமான ஸகல பதார்த்தங்களையும், படைத்தவனே-ஸ்ர்ஷ்டித்தவனாய், யாவரும் - ஸகலசேதநரும், வந்து—, அடிவணங்க-ஆச்ரயிக்கும்படிக்கிடாக, அரங்கநகர் துயின்றவனே - கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனாய், நல் - நீரேறுமேடுகளிலும் ஏறிப்பாயும் நன்மையையுடைய, காவிரிநதி - திருக்காவேரியானது, பாயும் - எங்கும்பரவாநின்றுள்ள, கணபுரத்தென் கருமணியே—, ஏ - பாணத்திலே மூட்டக்கடவதாய், வரி - தர்சநீயமாய், வெம் - பிடித்தபிடியிலே சத்ருக்கள் மண்ணுண்ணும்படியான, சிலைவலவா - ஸ்ரீசார்ங்கத்தை உன் கருத்தின்படி நடத்த வல்லவனே, இராகவனே தாலேலோ—.

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேவரையு மசுரரையும் திசைகளையும் படைத்தவனே) ஸஹஜஶத்ருக்களானதேவாஸுரர்முதலான பதார்த்தங்களையும் இவர்களுக்கு அவகாசப்ரதாநம்பண்ணும்தேசங்களையும் ஸ்ர்ஷ்டித்தவனே. (யாவரும்வந்தடிவணங்க அரங்கநகர்த்துயின்றவனே) ஸ்ர்ஷ்டிப்ரயோஜநமெல்லாம் தன்னை ஆஶ்ரயிக்கையிறே; இதுக்காகக் கோயிலிலேவந்து கண்வளர்ந் தருளினவனே. (காவிரிநன்னதிபாயுங் கணபுரத் தென்கருமணியே) ஒருவர் ஏற்றிப் பாய்ச்சவேண்டாதபடி தானேவந்து எங்கும்பரக்கும் காவேரியையுடைய திருக்கண்ணபுரத்திலே ஸுலபனானவனே. (ஏவரிவெஞ்சிலைவலவா இராகவனே) ஏவிலே மூட்டக்கடவதாய் தர்ஶநீயமாய்ப் பிடித்தபிடியிலே ஶத்ருக்கள் மண்ணுண்ணும்படியான ஸ்ரீஶார்ங்கத்தை உன் கருத்திலே நடத்த வல்லவனே. க0

கன்னிநன்மாமதிள்புடைசூழ்கணபுரத்தென்காகுத்தன்
தன்னடிமேல் "தாலேலோ" என்றுரைத்ததமிழ்மாலை
கொன்னவிலும்வேல்வலவன்குடைக்குலசேகரன்சொன்ன
பன்னியநூல்பத்தும்வல்லார்பாங்காயபத்தர்களே. (கக)

ப-ரை.—கொல்நவிலும் - கொல்லுகையையே யெப்போதும்எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற, வேல் - வேல்யுத்தத்தில், வலவன் - ஸமர்த்தராய், குடை- வெண்கொற்றக்குடையையுடைய, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப்பெருமாள்; கன்னி - அழியாததாய், நல் - அழகிதான, மாமதிள் - பெரியதிருமதிளாலே, புடை - நாற்புறமும், சூழ் - சூழப்பட்டிருப்பதான, கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே நித்யஸந்நிதி பண்ணுமவனாய், என் - என்னுடைய, காகுத்தன் தன் - ககுத்ஸ்த குலோத்பவனான சக்ரவர்த்தித்திருமகனுடைய, அடிமேல் - திருவடி விஷயமாக, தாலேலோவென்றுரைத்தசொன்ன - தாலாட்டாக அருளிச்செய்ததாய், பன்னிய - பரம்பின, நூல் - லக்ஷணசாஸ்த்ரங்களால்குறைவற்றதாய், தமிழ் - த்ராவிட பாஷையாய், மாலை - மாலாரூபமான, பத்தும் - இப்பத்துப்பாட்டுக்களையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், பாங்காய - அவனை அநுபவிக்கைக்குப் பாங்கான, பத்தர்கள் - பக்திமான்களாகப்பெறுவர்கள்.

வ்யா.—நிகமத்தில். (கன்னிநன்மாமதிள் புடைசூழித்யாதி) அழியாத பெரியதிருமதிள் சூழ்ந்த திருக்கண்ணபுரத்திலே நின்றருளின க்ர்ஷ்ணனையன்றியிலே சக்ரவர்த்தித் திருமகனையாய்த்துக் கவி பாடிற்று. (தன்னடிமே லித்யாதி) சக்ரவர்த்தித் திருமகனுடைய பால்யாவஸ்தையில் ஸ்ரீகௌஸல்யையார் சொன்ன பாசுரத்தைத் திருக்கண்ணபுரத்திலே சொன்ன தமிழ்த்தொடை. (கொன்னவிலும் வேல்வலவன் குடைக் குலசேகரன்சொன்ன) வேலைப்பிடித்த பிடியிலே எல்லாரும் "வேலின்கொடுமையே!" என்று சொல்லா நின்றவேலையும் ஐஶ்வர்ய ப்ரகாஶகமான வெண்கொற்றக் குடையையுமுடைய ஸ்ரீகுலசேகரப்பெருமாள் அருளிச்செய்த.(பன்னிய நூல்பத்தும் வல்லார்) பரம்பி லக்ஷணத்தால் குறைவற்ற இப் பத்தும்வல்லார்கள், திருத்தாயாராயும் அடியாராயும் அநுபவிக்கப் பெறுவர்கள். ௧௧

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

:0:

அடிவரவு - மன்னு புண்டரீகம் கொங்கு தாமரை பார் சுற்றம் ஆலின் மலைதனை தேவர் கன்னி வன்றாள்.

ஆக திருமொழி - ௮ - ௰ - பாட்டு - ௮௰.

ஒன்பதாந்திருமொழி - வன்றாளினிணை - ப்ரவேஶம்.

அ.—ஸ்ரீகௌஸல்யையார் பெற்றபேற்றை யநுபவித்தார் - கீழில் திருமொழியில்; பால்யாவஸ்தையெல்லாம் அநுபவித்து ப்ராப்தயௌவநரானவாறே அநுபவிக்கப்பெறாதே யிழந்த சக்ரவர்த்தியோபாதியும் தமக்கு ப்ராப்தியொத்திருக்கையாலே அநுபவிக்கப்பெறாதே யிழந்தேனென்று அவன் சொல்லுகிற பாசுரத்தாலே தம்மிழவைப் பேசுகிறார். ... ... *

வன்றாளினிணைவணங்கிவளநகரந்தொழுதேத்தமன்னனாவான்
நின்றாயையரியணைமேலிருந்தாயைநெடுங்கானம்படரப்போகு
வென்றாளெம்பிராமாவோவுனைப்பயந்தகைகேசிதன்சொற்கேட்டு
நன்றாகநானிலத்தையாள்வித்தேன்நன்மகனேயுன்னைநானே. (௧)

ப-ரை.—எம் - எங்களை, இராமா - ரமிப்பிக்கவல்லவனாய், நல்-என்சொல் தவறாது நடக்குமவனான, மகனே-புத்ரனே!; வன் - வலிய, தாளினிணை - திருவடிகளை, வணங்கி - வழிப்பட்டு, வளம் - அலங்கரிக்கப்பட்டிருக்கிற, நகரம்- திருவயோத்தையிலுள்ளார், தொழுது - ஸேவித்து, ஏத்த - ஸ்தோத்ரம் பண்ணும்படி, மன்னனாவான் - பட்டாபிஷேகம்பண்ணுகைக்காக, நின்றாயை- திருக்காப்பு நாண் சாத்திநிற்கிறவனாய், அரியணைமேலிருந்தாயை - ஸிம்ஹாஸநத்திலே யிருந்தாயென்னும்படி தோற்றச்சமைந்திருக்கிற - உன்னை, நெடும் - ஒருவராலும் ப்ரவேசிக்கவரிதான, கானம்படரப்போகு என்றாள் - காட்டுவழியிலேயே போகக் கடவாயென்று சொன்னவளாய், உனைப்பயந்த - உன்னைப் பெற்ற, கைகேசிதன் - கைகேயியுடைய, சொல் - சொல்லை, நான்—,கேட்டு- கேட்டு, உன்னை—, நானிலத்தை - பூமிப் பரப்பையெல்லாம், நன்றாக ஆள்வித்தேன் - அழகிதாக ஆள்வித்தேனென்று ஆர்த்தராகிறார்.

வ்யா.—முதற்பாட்டு. (வன்றாளி னிணைவணங்கி) தானும் ராஜ்யப்பரப்பையெல்லா மாண்டானாயிருக்கச்செய்தே அவ்வளவன்றியே "வண்புகழ்நாரணன் திண்கழல்" என்னுமாப்போலே ஆஶ்ரிதனை எல்லாவவஸ்தையிலும் விடேனென்னும் திருவடிகளை வழிப்பட்டு. (வளநகரந்தொழுதேத்த) திருவபிஷேகத்துக்கு அலங்கரித்திருக்கிற திருநகரியிலே அப்படியிருக்கிற திருநகரி தொழுதேத்த. (மன்னனாவான்நின்றாயை) திருவபிஷேகத்துக்கு முன்புள்ள கர்த்தவ்யங்களெல்லாந் தலைக்கட்டித்திருவபிஷேகம் பண்ணுகைக்குத் திருக்காப்புநாண்சாத்தி நிற்கிற வுன்னை. (அரியணைமேலிருந்தாயை) ஸிம்ஹாஸநத்திலே பதஸ்தனாயிருந்தா னென்னும்படி தோற்றச் சமைந்திருக்கிறவுன்னை. (நெடுங்கானம்படரபோகுமென்றாள்) இப்படி ராஜாக்களல்லாதாரும் புகமாட்டாத காட்டை "[illegible]" "தேவநேநவநம்கத்வா" என்னுமாப்போலே இவ்வூரில் நின்றும் புறப்பட்டு வழியேபோய்க் காட்டிலே புகுமதன்றியே காட்டிலேயே போம்படியாய், நெடியகாட்டிலேயிறேபோகச்சொல்லிற்று. (எம்பிராமாவோ)நினைக்கவும்சொல்லவும்காணவும்தாபம்போம்படியான உம்மையிறே போகச்சொல்லிற்று. (உனைப்பயந்தகைகேசிதன் சொல்கேட்டு) திருவபிஷேக கல்யாணவார்த்தை ஸ்ரீகௌஸலையாரிலும் காட்டில் தனக்கு நான்சென்று சொல்லி ப்ரீதிகாணவேணுமென்னும்படி பெற்ற தாயாய்ப்போந்த கைகேயிவார்த்தை கேட்டு. (நன்றாகநானிலத்தை யாள்வித்தேன்) வஞ்சநபரையென்றறியாதே தாயென்று இவளுக்குவார்த்தை சொல்லப்புகுந்து அவள்வார்த்தையிலே யகப்பட்டு பூமிப்பரப்பையெல்லா மழகிதாக உன்னையாள்வித்

தேன். (நன்மகனே யுன்னைநானே) நான் இப்படி செய்தவிடத்தி லும் நீர் குறைநிகராம்படி நின்றீர், நான் நானும்படிசெய்தேன். க

வெவ்வாயேன்வெவ்வுரைகேட் டிருநிலத்தைவேண்டாதே வி ரைந்துவென்றி, மைவாயகளிறொழிந்து தேரொழிந்துமாவொழிந் து வநமேமேவி, நெய்வாயவேல்நெடுங்கண் நேரிழையுமிளங்கோ வும் பின்புபோக, எவ்வாறுநடந்தனையெம் மிராமாவோவெம்பெரு மா னென்செய்கேனே. (உ)

ப-ரை.—வெம்-க்ரூரமான, வாயேன் - வாக்கையுடையனானவென்னுடை ய, வெவ்வுரைகேட்டு - கடுஞ்சொற்களைக்கேட்டு, இரு - உம்மைப்பிரியில்தரியா தபெருமையையுடைய, நிலத்தை - நகரஜநங்களையெல்லாம், வேண்டாது-கை விட்டும், விரைந்து-த்வரித்து; வென்றி - ஜயத்தை விளைப்பதாய், மை - அஞ்சந கிரிபோலே, ஆய - பெரியவடிவையுடைத்தான, களிறு ஒழிந்து - யானைகளை விட்டும், தேர் ஒழிந்து - தேர்களைவிட்டும், மா ஒழிந்து - குதிரைகளைவிட்டும், வநமேமேவி - காட்டிலேயே சென்று பொருந்தி, நெய்வாய - கூர்மை மழுங் காமைக்காக நெய்பூசப்பட்டிருந்துள்ள, வேல் - வேல்போலேசண்டாளைவரு த்துமதான, நெடும் - காதளவும் நீண்ட, கண் - திருக்கண்களை யுடையளாய், நேர் - திருத்தமாகப்பண்ணப்பட்ட, இழையும் - ஆபரணங்களையுடையளான பிராட்டியும், இளங்கோவும் - இளையபெருமாளும், பின்புபோக - பின்னேஸே வித்துவர, எவ்வாறு நடந்தனை - எப்படி நடந்தாய்; எம் இராமா - என்னைஸந் தோஷிப்பிக்கவல்லனாய், எம்பெருமான் - எனக்கு உபகாரகனானவனே, என் செய்கேன் - நான் என்னசெய்யப்போகிறேன்.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வெவ்வாயேன் வெவ்வுரைகேட் டு) அநலாஸ்யனான வென்னுடைய, "காட்டேறப்போம், ராஜ்யத் தைத்தவிரும்" என்ற என்வார்த்தையைக் கேட்டு. (இருநிலத்தை வேண்டாதே) "உம்மைப்பிரியில் முடிவோம்" என்று வளைப்புக்கி டக்கிற நகரஜநங்களையெல்லாம் ஒளித்து அவர்களைக் கைவிட்டு. (விரைந்து) "போகிறோம்" என்று விளம்பிப்போமாகில் "ராஜ்யத் தில் நசையாலே நின்றோமென்று கைகேயி நினைக்கும்" என்று விரைந்து. (வென்றி மைவாய களிறொழிந்து) வென்றியை விளைப்ப தாய் அஞ்சநகிரிபோலே பெரியவடிவை யுடைத்தாயிருக்கிற ஆனை யென்ன, தேரென்ன, குதிரையென்ன, இவற்றையொழிந்து. (வந மேமேவி) இவற்றையொழிந்தால் இந்ததேசத்துக்குப் போலியா னதேசத்திலே போய்ப்புகாதே, வநமேமேவி. (நெய்வாயவேல்நெ டுங்கண் நேரிழையுமிளங்கோவும் பின்புபோக) நீர் போய்ப் புக்கா லும் புகுகைக்குத்தகாதவர்களைக்கூடக்கொண்டு. (எவ்வாறுநடந்த னை எம்மிராமா! ஓ! எம்பெருமான்! என்செய்கேனே) கால் நடை நடந்தறியாதநீர் இவர்களையுங் கூடக்கொண்டு பொல்லாத காட்டி லே போனீர், என்னையனே நானென்செய்கேன். ... ... உ

கொல்லணைவேல்வரிநெடுங்கட்கௌசலைதன்குலமதலாய்குனி வில்லேந்தும், மல்லணைந்தவரைத்தோளா! வல்வினையேன்மநமுருக்கும் வகையேகற்றாய், மெல்லணைமேல்முன்துயின்றாய் இன்றினிப் போய்வியன்கான மரத்தினீழல், கல்லணைமேல்கண்டுயிலக் கற்றனையோகாகுத்தா! கரியகோவே!. (௩)

ப-ரை.—கொல் - கொலைத்தொழிலை, அணை-மேற்கொண்டிருக்கிற, வேல்-வேல்போன்ற புகரையும், வரி - செவ்வரிகருவரிகளையும், நெடு - பரப்பையுமுடைத்தான, கண் - கண்களையுமுடையளான, கௌசலைதன் - ஸ்ரீகௌஸலையாருடைய, குலம் - குலத்துக்கு, மதலாய்-உத்தாரகனாய், குனி-வளைந்த, வில்-வில்லை, ஏந்தும் - எப்போதும் தரித்தபடியேயிருப்பதாய், வரை - மலையையொத்து, மல்லணைந்த - பெரியமிடுக்கையுடைத்தான, தோளா - திருத்தோள்களையுடையவனே, ஆயுதவழகாலும் தோளழகாலும், வல்வினையேன் - மஹாபாபியான வென்னுடைய, மநம் - மநஸ்ஸை, உருக்கும் - அழிக்கைக்கீடான, வகையே - வகையையே, கற்றாய் - அப்யஸித்தீர்; முன் - முற்காலமெல்லாம், மெல் - ம்ருதுவான, அணைமேல் - படுக்கையிலே, துயின்றாய் - கண்வளர்ந்தருளினநீர், இன்று இனி - இன்றுமுதல்மேலுள்ளகாலமெல்லாம், போய் - தண்டகாரண்யம் முதலிய காடுகளிற்சென்று, வியன் - இப்படியு மொருகாடுண்டோவென்று வெருவும்படியான, கானம் - காட்டிலே, மரத்தின் நீழல் - இலையில்லாதமரத்தினுடைய நிழலிலே, கல் அணைமேல் - பாறையாகிற படுக்கையிலே, கண்துயில - கண்வளரும்படி, கற்றனையோ - கற்றீரோ; இச்செயல்கள், காகுத்தா-உம்முடையககுஸ்தகுலத்துக்குஞ்சேராது; கரியகோவே-உம்முடைய வடிவழகுக்கும் சேராது.

வ்யா.—மூன்றாம்பாட்டு. (கொல்லணைவேல்வரிநெடுங்கண்கௌசலைதன்குலமதலாய்) கொலையிலேயணைந்த வேல்போலே புகரையுடைத்தாய், செவ்வரி கருவரியையுமுடைத்தாய் பரப்பையுமுடைத்தான கண்ணையுடைய ஸ்ரீகௌஸலையாருடைய குலத்துக்கு உத்தாரகனானவனே. (குனிவில்லேந்தும் மல்லணைந்த வரைத்தோளா) வீரர்கள்வில் ஒருக்கால் நாணி யிறங்கிடாமையாலே வளைந்தபடியேயிருக்குமிறே; அந்தவில்தானும் மிகையென்னும்படி, மலைபோலே பெரிய மிடுக்கையுடைய தோளையுமுடையவனே. (வல்வினையேன்மநமுருக்கும் வகையேகற்றாய்) ஆயுதவழகாலும் தோளழகாலும் என்னெஞ்சையழிக்கவே கற்றவனே. (மெல்லணைமேல் முன்துயின்றாய்) அழகிய படுக்கையிலே முற்காலமெல்லாம் கண்வளர்ந்தநீர். (இன்றினிப்போய்) பலமாளிகைகளிலே பலபடுக்கைகளிலே கண்வளர்ந்த நீர் இன்றாகவினிப்போய். (வியன்கானமரத்தினீழல்) காட்டில்வர்த்திப்பார்தாங்களும் வெருவும்படி காட்டிலே இலையில்லாத மரத்தின் நிழலின்கீழே. (கல்லணைமேல்கண்துயிலக் கற்றனையோ) பாறைகளையணையாகக் கண்வளரும்படி கற்றீரோ. (காகுத்தாகரிய கோவே) இச்செயல்கள் உம்முடைய குடிப்பிறப்புக்கும் சேராது, உம்முடைய வடிவழகுக்கும் சேராது. ௩

வாபோகுவாவின்னம் வந்தொருகாற்கண்டுபோ மலராள்கூந்தல், வேய்போலுமெழிற்றோளி தன்பொருட்டாவிடையோன்றன் வில்லைச்செற்றாய், மாபோகுநெடுங்கானம் வல்வினையேன்மநமுருக்கும்மகனேயின்று, நீபோகவென்னெஞ்சமிருபிளவாய்ப்போகாதே நிற்குமாறே. (௪)

ப-ரை.—வா - இங்கே வா என்றும், போது - அங்கே போ என்றும், இன்னம் - பின்னையும் போம்போது, வந்து—, ஒருகால் கண்டுபோ - ஒருதரம் கண்டுபோ என்றும்; மலர் - புஷ்பங்களை, ஆள் - இடைவிடாது தரித்துநிற்கிற, கூந்தல் - மயிர்முடியையும், வேய்போலும் - மூங்கில்போலே யிருக்கிற, எழில் - அழகிய, தோளி - தோளையுடையளான பிராட்டி நிமித்தமாக, விடையோன்றன்வில்லை - பெருமிடுக்கனான ருத்ரனுடைய வில்லை, செற்றாய் - முறித்தவனே, வல்வினையேன் - மஹாபாபத்தைப் பண்ணின வென்னுடைய, மநம் - ஹ்ருதயத்தை, உருக்கும் - நீர்ப்பண்டம்போலே யுருகப்பண்ணுகிற, மகனே—, இன்று—, நீ—நீர், மா - மிருகங்கள், போகு - ஸஞ்சரிக்கிற, நெடு - நெடிதான, கானம் - காட்டிலே, போக—, என்நெஞ்சம் - என்மநஸ்ஸானது, இருபிளவாய்ப் போகாதே - இரண்டுபிளவாய்ப் போய்விடாமல், நிற்குமாறே - வலிதாயிராநின்றதிறேயென்று ஆர்த்தராகிறார்.

வ்யா.—நாலாம்பாட்டு. (வாபோகுவித்யாதி) சற்றுப்போது காணவிட்டவாறே வரும்படி காண்கைக்காக ஸுமந்த்ரனை விட்டு அழைப்பிக்கும்; பிறகு பின்பும் பிறகுவாளியுங் காண்கைக்காகப் போவென்னும்; பின்னையும் கண்மறையப்போனவாறே வாவென்னும். (இன்னம் வந்தொருகால் கண்டுபோ) வந்தவாறே இன்னம் போம்போது ஒருக்கால் கண்டுபோவென்னும்; இப்படியாக்கும் இவன் யாத்ரைதானிருப்பது. (மலராளித்யாதி) பூமாறாதேயாளும் மயிர்முடியையும். (வேய்போலு மெழில்தோளிதன்பொருட்டா) பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் ஒழுகு நீட்சிக்கும் வேய்போலே யிருக்கிற அழகிய தோளையுடையளா யிருக்கிற பிராட்டிநிமித்தமாக. (விடையோன்றன் வில்லைச்செற்றாய்) பெருமிடுக்கனான ருத்ரனுடைய வில்லைமுறித்தவனே. (மாபோகுநெடுங்கானம்) ஆனைகள் ஸஞ்சரிக்கிறகாடு. (வல்வினையேன் மநமுருக்கும்மகனே) பால்யாவஸ்தைதொடங்கிப் பதினாலாண்டு உன் ஸௌந்தர்யாதி சேஷ்டிதங்களாலே மஹாபோகங்களை யென்னை யநுபவிப்பித்தவுன்னை முடிய வநுபவிக்கப்பெறாதே மஹாபாபத்தைப்பண்ணின வென்னுடைய ஹ்ருதயத்தை ஶிதிலமாக்குமவனே. (இன்றுநீபோக வென்னெஞ்சம் இருபிளவாய்ப்போகாதேநிற்குமாறே) உன்ஸந்நிதியி லிருக்கிற வென்னெஞ்சானது நீ போனவாறே ஶிதிலமாகாதே வலித்திராநின்றதே! இதுக்கு ஹேது வறிகிறிலேன்... ... ... ௪

பொருந்தார்கைவேல்நுதிபோல்பரல்பாயமெல்லடிக்கள் குருதி சோர, விரும்பாதகான்விரும்பி வெயிலுறைப்பவெம்பசிநோய் கூர

வின்று, பெரும்பாவியேன்மகனே போகின்றாய்கேகயர்கோன் மகளாய்ப்பெற்ற, அரும்பாவிசொற்கேட்ட வருவினையேனென்செய்கேனந்தோயானே. (௫)

ப-ரை.—பொருந்தார்கை-சத்ருக்கள் கையிலிருக்கிற, வேல்-வேலினுடைய, நுதிபோல்-நுனிபோலே, பரல்-பரற்களானவை, பாய - பாய்வதினால், மெல்-ஸுகுமாரமான, அடிக்கள் - திருவடிகளினின்றும், குருதி-ரக்தமானது, சோர இடைவிடாதேபெருக, விரும்பாத - கடிநஸ்வபாவரும் கூடப் போக இச்சியாத, கான் - காட்டை, விரும்பி - என்னுஜ்ஞையாலேவிரும்பி, வெயில் - வெய்யிலானது, உறைப்ப - மேலே உறைக்கவும், நினைத்தபோது அமுது செய்யக்கிடையாமையாலே, வெம்பசிநோய் - வெவ்வியபசியாகிறநோயானது, கூர-அதிகரிக்கவும், பெரும்பாவியேன் - மஹாபாபியானவென்னுடைய, மகனே - புத்ரனே, இன்று—, போகின்றாய் - போகிறீர்; கேகயர்கோன் - கேகயமஹாராஜன், மகளாய்ப்பெற்ற - மகளாகப்பெற்றவளாய், அரும்பாவி - மஹாபாபியானவளுடைய, சொல்கேட்ட - வார்த்தையிலே யகப்பட்டவனாய், அருவினையேன்யான் - அதுக்கு ஒருப்ரதி க்ரியை பண்ணமாட்டாதநான், அந்தோ-ஐயோ!, என்செய்கேன் - என்ன செய்யப்புகுகிறேன.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பொருந்தார்கை வேல்நுதிபோல் பரல்பாய) ஶத்ருக்கள் கையில் வேல்முனையை யிட்டிருந்தாப்போலே பரற்களானவைபாய. (மெல்லடிக்கள் குருதிசோர) இங்குத்தையில் மிதிக்க ஸஹியாத ஸுகுமாரரான திருவடிகள் பாறைகள் மேலே மிதிக்கையாலே ரக்தத்தைப்புறப்படவிட. (விரும்பாதகான் விரும்பி) ஸுகுமாரரல்லாதாரும் விரும்பாதகாட்டை நான்போகச் சொன்னேனென்னு மத்தாலேவிரும்பி. (வெயிலுறைப்ப வெம்பசிநோய்கூர) மேலே வெய்யிலானதுறைப்ப, நினைத்தபோது அமுது செய்யக் கிடையாமையாலே வெவ்விய பசியானநோய்மிக. (இன்று பெரும்பாவி யேன்மகனேபோகின்றான்) மஹாபாபியான வென் வயிற்றிலே பிறக்கையாலேயிறே ஸுகுமாரரானநீர் காட்டேறப் போகிறது. (கேகயர்கோன்மகளாய்ப் பெற்ற அரும்பாவிசொல் கேட்ட) கேகயராஜன் மகளாய்பெற்றது ஒரு மஹாபாபத்தையாய்த்து; அவள்வார்த்தையிலே யகப்பட்ட. (அருவினையேனென்செய்கே னந்தோயானே) ப்ரதி க்ரியையில்லாத செயலைச்செய்த வென்னால் செய்யலாம் பரிஹாரமில்லை. ௫

அம்மாவென்றுகந்தழைக்கு மார்வச்சொற்கேளாதே யணிசேர்மார்வ, மென்மார்வத்திடையழுந்தத் தழுவாதேமுழுசாதே மோவாதுச்சிக், கைம்மாவின்நடையன்ன மென்னடையுங்கமலம்போல் முகமுங்காணாது, எம்மானையென்மகனை யிழந்திட்டஇழித்தகையேனிருக்கின்றேனே. (௬)

ப-ரை.—அம்மாஎன்று - ஐயர் என்று, உகந்து அழைக்கும் - உகந்தழைக்கிற, ஆர்வச்சொல் - ஆசையான சொற்களை, கேளாது-கேளாமல், அணிசேர் -

ஆபரணங்களாலே அலங்க்ருதமான, மார்வம் - மார்வைக்கொண்டு, என்மார்வத்திடை - என்னுடைய மார்விலே, அழுந்த - அழுந்தும்படி, தழுவாது - தழுவாமலும், முழுசாது - முழுசாமலும், உச்சிமோவாது - உச்சியை மோந்துகொள்ளாமலும், கைம்மாவின்-மத்தகஜத்தினுடைய, நடையன்ன - நடையையொத்த, மெல்நடையும் - ம்ருதுவான நடையழகும், கமலம் போல் - தாமரைமலரையொத்த, முகமும் - திருமுகத்தினழகையும், காணாது-காணாமலும், எம்மானை - நடையழகால் என்னை யெழுதிக்கொண்ட, என்மகனை - என்னுடைய மகனை, இழந்திட்ட - இழந்துவிட்ட, இழித்தகையேன் - தண்ணியஸ்திதியையுடைய நான், இருக்கின்றேனே - இருக்கிறேனேயென்று துக்கிக்கிறார்.

வ்யா.—ஆறாம்பாட்டு. (அம்மாவென்று கந்தழைக்கு மார்வச் சொல்கேளாதே) வேறொன்றைக்கணிசியாதேகாரியப்பாடற ''ஐயர்''என்றழைக்கும் ப்ரேமம்வழிந்துபுறப்பட்டசொல்லைக்கேளாதே. (அணிசேர் மார்வம்என் மார்வத்திடையழுந்தத் தழுவாதே) ஆபரணங்களாலே அலங்க்ருதமான திருமார்வைக்கொண்டு, ''ஸாகடம்பரிஷஸ்வஜே'' ''ஸாகடம்பரிஷஸ்வஜே'' என்னும்படி - ஏக தத்வமென்னும்படி தழுவி முழுசாதே. (மோவாதுச்சி) முழுசி அநந்தரம் உச்சியை மோந்துகொள்ளாதே. (கைம்மாவின் நடையன்னமென்னடையும்) ''மத்தமாதங்ககாமிநம்'' ''மத்தமாதங்ககாமிநம்'' என்னும்படியமைந்திருக்கிற நடையழகும். (கமலம்போல்முகமுங்காணாது) விகாஸம் செவ்விக்குத் தாமரை ஒருபோலியான திருமுகத்தைக்காணாது. (எம்மானையென்மகனை) நடையழகாலே என்னையெழுதிக்கொண்ட வென்மகனை. (இழந்திட்டஇழித்தகையே னிருக்கின்றேனே) இப்படி தண்ணிய செயலைச் செய்தக்கால் முடியவுமாகாதே யிருக்கவும்வேணுமோ நான். ௬

பூமருவுநறுங்குஞ்சிப் புன்சடையாப்புனைந்துபூந் துகில்சேரல்
குல், காமரெழில்விழலுடுத்துக் கலனணியாதங்கங்க ளழகுமாறி,
ஏமருதோளென்புதல்வன்யானின்றுசெலத்தக்க வநந்தான்சேர்தல்
தூய்மறையீரிதுதகவோசுமந்திரனே! வசிட்டனே!சொல்லீர்நீரே()

ப-ரை.—பூமருவு - பூமாறாதேயிருப்பதாய், நறும் - பரிமளிதமான, குஞ்சி-திருக்குழலை, புன் - பார்க்கவொண்ணாதபடி, சடையாப்புனைந்து - ஜடையாக்கி, பூந்துகில் சேர் - அழகியவஸ்த்ரங்களை தரிக்கக்கடவ, அல்குல் - திருவரையிலே, காமர் - காண்கைக்கு ஆசைப்படத்தக்க, எழில் -அழகிய, விழல்-விச்வாமித்ரதை, உடுத்து - கயிறாக முறுக்கிச்சாத்தி, கலனணியாது - ஆபரணங்களைதரியாமையாலே, அங்கங்கள் - அத்தால் திருமேனிக்குண்டாகும், அழகுமாறி - அழகுகெட்டு, ஏமரு - சத்ருக்கள் கலங்கத்தக்க, தோள்-தோள்களையுடைய, என் - என்னுடைய, புதல்வன் - புத்ரரானவர், யான்—, இன்றுசெலத்தக்க இன்று போகத்தக்க, வநம் - காட்டிலே, தான் - போகயோக்யரானதாம்,சேர்தல் - போகை, தூய் - பரிசுத்தமான, மறையீர்-வேதத்தை நிருபகமாகவுடையவர்களே, சுமந்திரனே - சுமந்த்ரனே, வசிட்டனே - வசிஷ்டபகவானே, இது—, தகவோ - தர்மமோ, நீர் - நீங்கள், சொல்லீர் - சொல்லுங்கோள்.

வ்யா.—ஏழாம்பாட்டு. (பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப் புனைந்து) பூமாறாதே யிருப்பதாய் பரிமளத்தைப்புறப்பட விடாநிற்கும் திருக்குழலை, மநுஷ்யர்க்குப் பார்க்கவொண்ணாதபடி ஜடையாக்கி. (பூந்துகில் சேரல்குல் காமரெழில் விழலுடுத்து) அறுபதினாயிரமாண்டு தேடின திருப்பரியட்டங்களில் நல்லவையெல்லாம் சாத்தக்கடவ திருவரையிலே, கண்டார்விரும்பும்படி விஸ்வாமித்ரத்தைக் கயிறாக முறுக்கிச்சாத்தி. (கலனணியா தங்கங்க ளழகுமாறி) ஸ்வாபாவிகமான அழகொழியத் திருவாபரணங்கள் சாத்தாமையாலே அத்தால் வருமழகின்றியே. (ஏமருதோ ளென்புதல்வன்) விக்ரம் பண்ணினை அழியச்செய்து அபிஷேகம் பண்ணவல்ல என்மகன். (யானின்றுசெலத்தக்க வநம் தான்சேர்தல்) அறுபதினாயிரமாண்டு போகங்களைபுஜித்து வீதராகனான நான்போகக்கடவ காட்டிலே, ஸுகுமாரராய் போகயோக்யரான தாம்போகை. (தூமறையீ ரிதுதகவோ) "ஸத்யம்ஸத்யம்" "பதிம்விஸ்வஸ்ய" என்று ஓதியிருக்கிற ப்ராஹ்மணரோ! நீங்கள் இது சொல்லிகோள், இது தர்மமோ. (சுமந்திரனேவசிட்டனே சொல்லீர்நீரோ) ராஜதர்மத்தைப் பழகவறிந்து நடத்திப்போந்த ஸுமந்த்ரனே! சொல்லாய்; இவ்வம்ஸத்துக்குகுருவாய் ராஜதர்மங்களை உபதேசித்துப் போருகிற ஸ்ரீவஸிஷ்ட பகவானே! சொல்லாய். ... ... எ

பொன்பெற்றாரெழில்வேதப் புதல்வனையுந்தம்பியையும் பூவைபோலும், மின்பற்றாநுண்மருங்குல் மெல்லியலென்மருகியையும் வநத்திற்போக்கி, நின்பற்றாநின்மகன்மேற் பழிவிளைத்திட்டென்னையும் நீள்வானிற்போக்க, என்பெற்றாய்கைகேசீ! யிருநிலத்திலினிதாக விருக்கின்றாயே. (அ)

ப - ரை.—கைகேசீ - கேசயராஜன்புத்ரியே, பொன்பெற்றார் - வித்யாதநத்தையுடைய உபாத்யாயர் கீழிருந்த, எழில் - அழகிய, வேதம் - வேதசாஸ்த்ரங்களைக்கற்ற, புதல்வனையும் - பெருமாளையும், தம்பியையும் - அவரையல்லதறியாத இளையபெருமாளையும், பூவைபோலும் - நாகணவாய்ப்புள்ளையொத்த அழகையும், மின்பற்றா - மின்னலுங்கூட ஒப்பாகாத, நுண் - நுண்ணிதான, மருங்குல் - இடையையும், மெல்இயல் - ம்ருதுஸ்வபாவத்தையுமுடையளான, என் மருகியையும் - என் மருமகளான பிராட்டியையும், வநத்தில்போக்கி - காட்டிலே போகவிட்டு, நின் - உன்னையொழிய வேறொருவரை, பற்றா - தாயென்று புத்திபண்ணாத, நின்மகன்மேல்-உன்னுடைய பிள்ளையான பரதாழ்வானுக்கு, பழிவிளைத்திட்டு - "ப்ராதர்த்ரோஹி" என்னும்பழியை யுண்டாக்கிவிட்டு, என்னையும்—, நீள் - பெருமைபொருந்திய, வானில் - ஸ்வர்க்கத்திலே, போக்க - போம்படி செய்தத்தாலே, என்பெற்றாய் - என்ன ப்ரயோஜநத்தையடைந்தாய்; இருநிலத்தில் - இந்த மஹா ப்ருதிவியிலே, இனிதாக-ஸந்துஷ்டசித்தையாய்க்கொண்டு, இருக்கின்றாயே - இருக்கிறாயேயென்று துக்கிதராகிறார்.

வ்யா.—எட்டாம்பாட்டு. (பொன்பெற்றொழில் வேதப்புதல்வனையும் தம்பியையும) தங்யொன்று எல்லாரும் சொல்லும்படியிருக்கிற உபாத்யாயர்கள்கீழேயிருந்து அழகிய ஸகலவேத ஶாஸ்த்ரங்களையும் ஓதியிருக்கிற பெருமாளையும், அவரையல்ல தறியாத தம்பியாரையும். (பூவைபோலும் மின்பற்று நுண்மருங்குல் மெல்லியலென்மருகியையும்) பூவைபோலே யிருப்பாளுமாய் மின்னுக்கு ஒப்பான இடையையுடையாளுமாய் ம்ர்துஸ்வபாவையுமான என் மருமகளான பிராட்டியையும். (வநத்தில்போக்கி) காட்டிலேபோக விட்டு. (நின்பற்றுநின்மகன்மேல்பழிவிளைத்திட்டு)†உன்னையல்லது வேறொருவரைத் தாயென்றிராத பெருமாளையும் இளைய பெருமாளையும் வநத்தில்போகவிட்டு. (என்னையும்நீள்வானில்போக்க என்பெற்றாய்கைகேசீ) இச்செயல்களெல்லாம் செய்து நீபெற்ற ப்ரயோஜநமென். (இருநிலத்திலினிதாக விருக்கின்றாயே) ஸம்ஸார ஸுகமாகிறது-புத்ரர்களோடும் பர்த்தாவோடுங் கூடியிருக்கையாய்த்து; உனக்குப் புத்ரரான பெருமாளைக் காட்டிலேபோக்கி என்னையும் ஸ்வர்க்கத்திலே போக்குகையாலே ஸம்ஸாரஸுகம் அழகிதாக அநுபவிக்கக்கடவையிறே.... ... ... அ

முன்னொருநாள்மழுவாளி சிலைவாங்கியவன்றவத்தைமுற்றுஞ்
செற்றாய், உன்னையுமுன்னருமையையுமுன்மோயின்வருத்தமுமொன்றாகக்கொள்ளா, தென்னையுமென்மெய்யுரையும்மெய்யாகக்கொண்டுவநம்புக்கவெந்தாய்!, நின்னையேமகனாகப்பெறப்பெறுவேனேழ்பிறப்பும்நெடுந்தோள்வேந்தே!. (௯)

ப - ரை.—முன்னொருநாள் - முன்பொருகாலத்திலே, மழுவாளி - பரசுராமாழ்வானுடைய, சிலை - வில்லை, வாங்கி - வளைத்து அம்பேறிட்டு, அவன் - அவனுடைய, தவத்தைமுற்றும் - தபஸ்ஸையெல்லாம், செற்றாய் - அவ்வம்பாலே அழித்துப்பொகட்டாய்; உன்னையும் - உன்பெருமையையும், உன் அருமையையும் - உன்னை நான் பெறப்பட்ட அருமையையும், உன்மோயின் - உன்னைப் பெற்ற தாயாரான ஸ்ரீகௌஸல்யாருடைய, வருத்தமும் - வ்யஸநத்தையும், ஒன்றாகக்கொள்ளாது - ஒருபொருளாக மதியாமல், என்னையும் - உன்பக்கல் அன்புடையனானவென்னையும், என் மெய்யுரையும் - என்னுடைய ஸத்யவசநத்தையும், மெய்யாக்கக்கொண்டு-ஸத்யமாக்கவேணுமென்று நெஞ்சிற்கொண்டு, வநம்புக்க - காட்டுக்கு எழுந்தருளின, எந்தாய் - என்னுடையநாதனாய், நெடு - முழங்காலளவும் நீண்ட, தோள் - தோளையுடைய, வேந்தே-அரசனானவனே, நான் அநேகஜந்மங்கள் பிறந்து, ஏழ்பிறப்பும் - பிறந்த ஜந்மங்கள் தோறும், நின்னையே - உன்னையே, மகனாக - பிள்ளையாக, பெறப்பெறுவேன் - பெறப்பெறுவேனாகவேணும்.

---

† இவ்விடத்தில் க்ரந்தம் விட்டிருப்பதாகத் தெரிகிறபடியால் சரியானபாடத்தைக் கோசாந்தரங்களில் கண்டுகொள்க.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (முன்னொருநாள் மழுவாளிசிலை வாங்கி) முன்னொருகாலத்திலே மழுவை ஆயுதமாகவுடைய ஸ்ரீபரஶுராமன்கையில் ஸ்ரீஶார்ங்கத் திருவில்லை வாங்கி. (அவன்தவத்தை முற்றுஞ்செற்றாய்) அவன் லோகாந்தரங்களை ப்ராபிக்கக்கடவதாக ஆர்ஜித்ததபஸ்ஸை அவ்வம்பாலே யழித்துப்போகட்டாய். (உன்னையுமுன்னருமையையும்) உன் ஶ்லாக்யத்தையும், "ஸஹசாதபஸாராம:" "மஹாதாதபஸாராம:" என்று-நான் உன்னைப்பெறப்பட்ட அருமையையும்.(உன்மோயின்வருத்தமுமொன்றாகக்கொள்ளாது) "உன்னைப்பிரியில்தரியேன்" என்று பின்தொடர்ந்த ஸ்ரீகௌஸலையார்வ்யஸநத்தையும் ஒன்றாகக் கொள்ளாது. (என்னையுமென் மெய்யுரையும் மெய்யாகக்கொண்டு வநம்புக்கவெந்தாய்) உன்பக்கல் எனக்குண்டான பாவபந்தத்தை மெய்யாகவறியாதே, என்னைப் பிதாவென்றேநினைத்து, "நெடுநாள் ஸத்யம்சொல்லிப் போந்தவனை நான்தோன்றி அஸ்த்யப்ரதிஜ்ஞனாக்கவொண்ணாது" என்று எனக்கு ஸத்யத்தை ஸத்யமாக்கவேணுமென்று நெஞ்சிலேகொண்டு காட்டேறப்போனவென்னையனே. (நின்னையேமகனாகப்பெறப்பெறு வேனேழ்பிறப்பும் நெடுந்தோள்வேந்தே) அநேகஜந்மங்கள் பிறந்து, பிறந்த ஜந்மந்தோறும் நீ எனக்குப் பிள்ளையாய்ப் பிறக்கும்படி பெற்றுடையேனாவேன். (நெடுந்தோள்வேந்தே) ரக்ஷ்யவர்க்கத்தினளவல்லாத காவல்துடிப்புடைய தோளையுடையவனே. ,.. கூ

தேனகுமாமலர்க்கூந்தல்கௌசலையுஞ் சுமித்திரையுஞ்சிந்தை நோவக், கூனுருவிற்கொடுந்தொழுத்தைசொற்கேட்டகொடியவள் தன்சொற்கொண்டின்று, கானகமேமிகவிரும்பிநீதுறந்தவளநகரைத் துறந்துநானும், வானகமேமிகவிரும்பிப்போகின்றேன் மநுகுலத்தார்தங்கள்கோவே!. (க0)

ப-ரை.—மநுகுலத்தார்தங்கள் கோவே - மநுகுலத் தரசனானவனே, தேன் நகு - தேனைப்புறப்படவிடாநின்றுள்ள, மா - ச்லாக்யமான, மலர்-மலரோடுகூடின, கூந்தல் - மயிர்முடியையுடைய, கௌசலையும் - ஸ்ரீகௌஸலையாரும், சுமித்திரையும் - ஸுமித்ராயாரும், சிந்தைநோவ-மநம்வருந்த, கூன் - வளைந்த, உருவின் - வடிவையுடையளாய், கொடு - கொடிய மநஸ்ஸையுடையளுமான, தொழுத்தை - வைப்பாட்டியுடைய, சொல் - சொல்லை, கேட்ட—, கேட்டவளாய், கொடியவள் தன் - க்ரூர ஹ்ருதயையுமான கைகேசியுடைய, சொல் - சொல்லை, கொண்டு - சிரஸா வஹித்துக்கொண்டு, கானகமே - வநவாஸத்தையே, மிகவிரும்பி-மிகவும் விரும்பி, நீதுறந்த-நீ உபேக்ஷித்துவிட்ட, வளம் - அலங்க்ருதமான, நகரை - நகரத்தை, நானும்—, துறந்து - விட்டு, வானகம் - நீயில்லாத ஸ்வர்க்கத்துக்கு, மிக விரும்பிப்போகின்றேன்-மிகவும் ஆசைப்பட்டுப் போகாநின்றேன்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேனகுமாமலர்க்கூந்த லித்யாதி) தேனைப் புறப்படுவிக்கிற மலரோடேகூடின மயிர்முடியை யுடைய

ஸ்ரீகௌஸல்யாரும் ஸுமித்ரையாரும் நெஞ்சுநோவ. (கூனுருவித்யாதி) வடிவில் வக்ரம்போலேநெஞ்சும் வக்ரமாய்த் திண்ணிதான கூனியுடைய வார்த்தையைக்கேட்ட கைகேயியுடைய வார்த்தையிலே யகப்பட்டு. (கானகமேமிகவிரும்பி நீ துறந்த வளநகரைத்துறந்து) "நான்போகச்சொன்னேன்"என்று மத்தையேகொண்டு ஒருவர்க்கும்ஸஞ்சரிக்கவரிதான காட்டைவிரும்பி,திருவபிஷேகத்துக்கு அலங்கரித்திருக்கிற வூரை நீ கைவிட்டாயென்று நானும் திருவயோத்யையைத் துறந்து. (வானகமேமிகவிரும்பிப் போகின்றேன்) நீ இல்லாதநகரியிறே;அத்தாலே ஸ்வர்க்கமேயாகிலும் நீயில்லாதவூரை விட்டுப் போகின்றேன். (மனுகுலத்தார்தங்கள்கோவே) மனுகுலோத்பவனானவனே. ௧0

ஏரார்ந்தகருநெடுமாலிராமனாய்வநம்புக்கவதனுக்காற்றாத்,தாரா
ர்ந்ததடவரைத்தோட்டயரதன்றான் புலம்பியவப்புலம்பல் தன்
னைக், கூரார்ந்தவேல்வலவன்கோழியர்கோன் குடைக்குலசேகரன்
சொற்செய்த, சீரார்ந்ததமிழ்மாலையிவைவல்லார் தீநெறிக்கட்செல்
லார்தாமே. (௧௧)

ப - ரை—தாரார்ந்த-வெற்றிமாலைமாறாததாய், தடம்-விசாலமாய், வரை-மலைபோலே திண்ணிதான, தோள் - தோளையுடைய, தயரதன்தான் - தசரத சக்ரவர்த்தியானவர்; ஏர் ஆர்ந்த - ஸகல கல்யாண குணங்களாலும் பூர்ணனாய், கரு - நீலமணிபோன்ற வடிவழகை யுடையனாய், நெடுமால் - ஸர்வாதிகனான ஸர்வேச்வரன், இராமனாய் - சக்ரவர்த்தித் திருமகனாய் வந்தவதரித்து, வநம் புக்கவதனுக்கு - காட்டுக்கெழுந்தருளியதற்கு, ஆற்றா - ஸஹிக்கமாட்டாமல், புலம்பிய அப்புலம்பல் தன்னை - ப்ரலாபித்த பாசுரத்தை, கூர்ஆர்ந்த-கூர்மை மிக்க, வேல் - வேல் யுத்தத்தில், வலவன் - ஸமர்த்தராய், கோழியர்கோன்-உறையூருக்குத்தலைவராய், குடை-வெண்கொற்றக்குடையையுடையரான, குலசேகரன் - ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சொற்செய்த - அருளிச்செய்ததாய், சீர்ஆர்ந்த-பெருமைமிகுந்த, தமிழ் - த்ராவிடபாஷையாய், மாலை - மாலாரூபமான, இவை - இப்பத்துப்பாட்டுக்களை, வல்லார்தாம் - அப்யஸிக்க வல்லவர்கள், தீநெறிக்கள்-விஷயாந்தரங்களிலே, செல்லார்-போகாரென்கிறார்.

வ்யா.—நிகமத்தில். (ஏரார்ந்தகருநெடுமாலித்யாதி) எல்லா ப்ரகாரத்தாலும் பூர்ணனாய்ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன் கர்மவஶ்யரோடே இதரஸஜாதீயனாய் வந்தவதரித்து, "கர்மவஶ்யரும்போகத்தகாதகாட்டில் புக்கான்" என்றதுக்கு ஆற்றமாட்டாது. (தாரார்ந்தவித்யாதி) அறுபதினாயிரமாண்டு ராஜ்யம்பண்ணுகையாலே மாலை மாறாத திண்ணிதான மலைபோலே தோளையுடைய சக்ரவர்த்தி ப்ரலாபித்த பாசுரத்தை. (கூரார்ந்தவித்யாதி) கூர்மைமிக்க வேலையுடையருமாய் உறையூர்க்கு நியாமகருமாய் ஐஶ்வர்ய ப்ரகாஶகமான வெண்கொற்றக்குடையை யுடையருமான குலஶேகரப்பெருமா

ளருளிச்செய்த. (சீரார்ந்ததமிழ்மாலையிவைவல்லார்) "ஸுஶ்லோகஞ்ச ஸமதுரஞ்ச" "பாட்டேகேயேசமதுரம்" என்றுஇவைபூர்ணமானதமிழ்த் தொடைவல்லவர்கள். (தீநெறிக்கண் செல்லார்தாமே) பகவத் விஷயத்தைக் காற்கடைக்கொண்டு விஷயப்ரவணராகார்கள். ...கக

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

——:0:——

அடிவரவு - வன்றாள் வெவ்வாய் கொல்லனை வாபோகு பொரு ந்தார் அம்மா பூமருவு பொன்பெற்றார் முன்னொருநாள் தேன்நகு ஏரார் அங்கண்.

ஆக திருமொழி-கூ-க்குப் பாட்டு-கூஉ.

பத்தாந்திருமொழி-அங்கணெடுமதிள்-ப்ரவேசம்.

அ.—அநாதிகாலம் இழந்தஇழவை தேவகிதேவியார் பெற்று வைத்து க்ர்ஷ்ணனுடைய பாலசேஷ்டிதங்களை யநுபவிக்கப்பெறா தே யிழந்தவள் பாசுரத்தாலே பேசினார் - * ஆலைநீள்கரும்பில்; * மன்னுபுகழில்-ஸ்ரீகௌஸலையார் பெற்றபேற்றை அநுபவித்தார்; பால்யாவஸ்தையிலேயெல்லா மநுபவித்து ப்ராப்த யௌவநமானவாறே அநுபவிக்கப்பெறாதே யிழந்த சக்ரவர்த்தியோபாதி தமக்கு ப்ராப்தி யுண்டாகையாலே அவன் பாசுரத்தாலே தம்மிழவைப் பேசினார்- * வன்றாளில்; இத்திருமொழியில்-கீழ்ப்பிறந்த இழவுகளெல்லாந்தீர சக்ரவர்த்தித்திருமகன் நித்யவாஸம்பண்ணுகிறதிருச்சித்திரகூடமாகிறதிருப்பதியிலே திருவவதாரந்தொடங்கி அந்தவவதார வ்ர்த்தாந்தத்தை ஸ்ரீவால்மீகிபகவாந்பேசியநுபவித்தாப்போலே தம்முடைய ஜ்ஞாநவைஶத்யத்தாலே ஸமகாலத்திற்போலே யநுபவிக்கிறார். *

அ.—முதற்பாட்டு. தேவர்களெல்லாரும் க்ர்தார்த்தராம்படி வந்து திருவவதாரம்பண்ணினபடி சொல்லுகிறது.

அங்கணெடுமதிள் புடைசூழயோத்தியென்னுமணி நகரத்துலகனைத்தும்விளங்குஞ்சோதி, வெங்கதிரோன்குலத்துக்கோர் விளக்காய்த்தோன்றிவிண்முழுதுமுய்யக்கொண்டவீரன்றன்னைச், செங்கணெடுங்கருமுகிலையிராமன்றன்னைத்தில்லைநகர்த்திருச்சித்திரகூடந் தன்னுள், எங்கள்தனிமுதல்வனையெம்பெருமான்றன்னை யென்று கொலோகண்குளிரக்காணுநாளே. (க)

ப-ரை.—அங்கண் - ஆகாசாவகாசமெல்லாம் தானேயாம்படி, நெடு - உயர்ந்த, மதிள் - மதிள்களாலே, புடை - நாற்புறமும், சூழ் - சூழப்பட்ட, அயோ

த்தியென்னும் - அயோத்யையென்று ப்ரஸித்தமாய், அணி - அலங்காரங்களால் குறைவற்ற, நகரத்து - திருப்படை வீட்டிலே. உலகனைத்தும் - ஸகலலோகங்களையும், விளக்கும்-விளங்கப்பண்ணுகிற, சோதி-தேஜஸ்ஸானது,வெங்கதிரோன் குலத்துக்கு - ஸூர்யவம்சத்துக்கு, ஓர்-அத்விதீயமான, விளக்காய்த்தோன்றி - உஜ்வலதீபமாய் வந்தவதரித்து, விண்முழுதும் - தேவஜாதியையடைய, உய்யக்கொண்ட - உஜ்ஜீவிப்பித்தருளின, இராமன்றன்னை - யாவரையும் களிப்பிக்குமவனாய், வீரன்றன்னை - வீரனாய், நெடு - ஸர்வாதிகத்வஸூசகமான, செங்கண் - புண்டரீகாக்ஷனாய், கருமுகிலை-காளமேகத்தையொத்தவனாய், தில்லைநகர் - தில்லைநகரென்று சொல்லப்படுகிற, திருச்சித்திரகூடந்தன்னுள் - திருச்சித்திரகூடத்திலே, எங்கள் - எங்களை உஜ்ஜீவிப்பிக்கைக்கு, தனி-ஒப்பில்லாத, முதல்வனை-காரணபூதனாய், எம்பெருமான்றன்னை-நமக்குஸ்வாமியானவனை, கண்குளிரக்காணும் நாள் - என் கண்களின் விடாய்தீரக்காணும் நாள், என்றுகொலோ - என்றோவென்கிறார்.

வ்யா.—(அங்கணித்யாதி)போக்யபோகோபகரணபோகஸ்தானங்களையுடைத்தாய், ஆகாஶாவகாஶமெல்லாம் தானேயாம்படி நிமிர்ந்தமதிளாலே சூழப்பட்ட அயோத்யை. (அயோத்தியென்னும்) "𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑌾""பராஜிதை"என்றுசொல்லப்படுகிறபரமபதம்போலே ஶத்ருக்களுக்குக் கணிசிக்கவொண்ணாதவூர். (என்னும்) பரமபதம் போலே சிலரறிந்து சிலரறியாதா யிருக்கையன்றிக்கே ஸர்வலோகப்ரஸித்தமாயிருக்கை. (அணிநகரம்) அலங்காரங்களால்குறைவற்றவூரொன்னுதல். (உலகனைத்தும்விளக்குஞ்சோதி) ஸர்வலோகங்களையும் தன்தேஜஸ்ஸாலே, "𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌰𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃" "நாராயணபரோஜ்யோதிः" என்கிறபடியே-பரஞ்யோதிஸ்ஸாயுள்ளது. (வெங்கதிரோனித்யாதி) ஜகத்திலந்தகாரமெல்லாம் நீக்கக்கடவ ஆதித்யன்வம்ஶத்திலே, அவனைப்போலே இரவுகலவாதே அத்விதீயமான தேஜஸ்ஸாய் வந்துதித்து. (விண்முழுதுமுய்யக் கொண்டவீரன்றன்னை) தன்வீர்யகுணத்தாலே தேவஜாதியையடைய உஜ்ஜீவிப்பித்தவனை. (செங்கணெடுங்கருமுகிலை) தேவஜாதியன்றிக்கே ஜகத்தையடைய ரக்ஷிப்பதாகக் கடலில் மணலே ஶேஷமாகப்பருகின காளமேகத்தினுடைய வடிவையும் ஸர்வேஶ்வரத்வ லக்ஷணமான புண்டரீகாக்ஷத்வங்களையு முடையவனை. (இராமன்றன்னை) வடிவழகாலும் கண்ணழகாலும் அபிராமத்தாலும் அநுகூலப்ரதிகூல விபாகமின்றியே தோற்பிக்குமவனை. கீழில் "வீரன்" என்கிறதும் இங்கும் அந்வயிக்கக்கடவது. "𑌸𑌤𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌤𑍍" "ஸத்யேத்யாதிவத்." (தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்) அவதாரத்தில் ஸமகாலத்தில் அநுபவிக்கப்பெறாத இழவுதீர, பிற்பட்டகாலத்திலுள்ளார்க்கு முதவலாம்படி ஸந்நிஹிதனானவனை. (எங்கள்தனிமுதல்வனை) அக்காலத்திலநுபவிக்கப்பெறாத எங்களை உஜ்ஜீவிப்பிக்கைக்கு ஒப்பில்லாத காரணபூதனானவனை. (எம்பெருமான்றன்னை) வகுத்தஶேஷியானவனை.

(என்றுகொலோகண்குளிரக்காணுநாளே) இந்த ராஜ்ய துரந்தரையிலே யகப்பட்டிருக்கிற நானன்றோ, அவனைக் காணப்பெறாதே விடாய்த்த கண்களானவைகண்டு விடாய்தீர்ந்து கண்படைத்த ப்ரயோஜநம் பெறலாவதென்றோ வென்கிறார். "என்றுகொலோ" என்று. காலதத்வத்துக்கு ஒரு † அவதிபெற்றானாகில் இன்றுகண்டதோ டொக்குங்கிடீர். ... ...

அ.—இரண்டாம்பாட்டு. (வந்தெதிர்ந்த) ராக்ஷஸவதத்துக்கெல்லா மடியாகவும், ரிஷியுடைய அபிமதம் தலைக்கட்டுகைக்கும் தாடகா தாடகேயனை நிரஸித்தபடி சொல்லுகிறது.

வந்தெதிர்ந்ததாடகைதனுரத்தைக்கீறி வருகுருதிபொழிதர
வன்கணையொன்றேவி,மந்திரங்கொள்மறைமுனிவன்வேள்விகாத்து
வல்லரக்கருயிருண்டமைந்தன்காண்மின், செந்தளிர்வாய்மலர்நகை
சேர்செழுந்தண்சோலைத் தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்,
அந்தணர்களொருமூவாயிரவரேத்த வணிமணியாசனத்திருந்தவம்
மான்றானே. (உ)

வ்யா.—செந்தளிர்வாய் - சிவந்த தளிர்கள் நடுவே, நகை - விகஸியாநின்றுள்ள, மலர்சேர் - புஷ்பங்களையுடைத்தாய், செழு - அழகிதாய், தண் - ச்ரமஹரமான, சோலை-சோலையாலேசூழப்பட்ட, தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்—, அந்தணர்களொருமூவாயிரவர்-அநந்யப்ரயோஜநரான மூவாயிரம் ஸ்ரீவைஷ்ணவர்கள், ஏத்த - மங்களாசாஸநம்பண்ண, அணி - ச்லாக்யமான, மணி-மாணிக்கங்களழுத்திசமைந்த,ஆசநத்து இருந்த-ஸிம்ஹாஸநத்திலேயெழுந்தருளியிருந்த, அம்மான்-ஸர்வேச்வரன், வந்து-மிசைதுவந்து, எதிர்ந்த-எதிர்த்த, தாடகைதன் - தாடகியுடைய, உரதனை - மார்வை, கீறி - பிளந்து, அத்தாலே, வரு - புறப்பட்டுவருகிற, குருதி - ரக்தமானது, பொழிதர - மலையருவிபோலேகொழிக்கும்படி, வன்-வலிய, ஒன்று-ஒப்பில்லாத, கணை-திருச்சரத்தை, ஏவி - நடத்தி, மந்திரம் - ஸகலமந்த்ரங்களையும், கொள் - தன்னிடத்திலேயுடைத்தான, மறை - வேத வேதாந்தங்களையறிந்தவனாய், முனிவன்- மநநசீலனான விச்வாமித்ரனுடைய, வேள்வி - யாகத்தை, காத்து - ரக்ஷித்து, வல்-பெருமிடுக்கரான, அரக்கர் - மாரீசன் ஸுபாஹு வென்னும் ராக்ஷஸருடைய, உயிருண்ட - ப்ராணனைப் போக்கியருளின, மைந்தன்காண்மின் - பிள்ளைத்தனத்தை யுடையவன்கிடீ ரென்கிறார்.

வ்யா.—(வந்தெதிர்ந்த) தான்மிகைத்து வந்து மேலிட்ட தாடகையை ‡ நிக்ர்திக்கொப்பில்லாதவள். * தன்னிகரொன்றில்லாத தாடகையிறே. (தன் னுரத்தைக்கீறி) பெருமாள்பக்கல்பொல்லாங்கு நினைத்தநெஞ்சை மலைபிளந்தாப்போலே பிளந்து. (வருகுருதி

† அவதிபெற்றானாகி லென்றது - பெறக்கடவநா ளின்னநாளென்று அவதியிடப்பெற்றாராகில் என்றபடி. ‡ நிக்ர்தி-ஸந்நிவேசம்; தோற்றர வென்றபடி.

பொழிதர) † செம்பாட்டுத்தறையிலேமலையருவிவிழுந்தாப்போலே ருதிரம்வந்துகொழிக்க.(வன்கணையொன்றேவி)வலிக்குலைப்பில்லாத திருச்சரத்தைநடத்தி.(மந்திரங்கொள்மறைமுனிவன்)ரிஷிதனக்கே தனக்கென்றுதபடியிர்ப்பாராய்த் தன்னுடைய அநுஷ்டானங்களெல்லாம்அடையேவ யநுஷ்டித்து யாகத்தைத் தலைக்கட்டும்படிபண்ணி. (வல்லரக்கருயிருண்ட)யஜ்ஞவிக்நகராரானமாரீசஸுபாஹுக்களைமுடித்தபிள்ளைத்தனத்தையுடையவனை.மாரீசன்பட்டானேவென்னில்; பின்னையிருந்தவிருப்பு ம்ர்தப்ராயனென்றுகருத்து. (செந்தளிர்வாய் மலர்நகைசேர்) சிவந்த தளிர்கள்நடுவே விகஸியாநின்றுள்ள புஷ்பங்களையுடைத்தாய் தர்ஸநீயமாய் ஸ்ரமஹரமான சோலையாலே அலங்க்ர்தமானவூரிலே.(அந்தணர்களொருமூவாயிரவர்)அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர்மூவாயிரம்பேர். (ஏத்த) திரண்டுமங்கலாஸாஸநம்பண்ண. (அணிமணியாசனத்திருந்த) "கோப்புடைய சீரிய சிங்காசனம்" என்னும்படியே மஹார்க்கங்களான ரத்நங்களையுடைத்தான ஸிம்ஹாஸநத்திலே தன்மேன்மைதோற்ற விருந்த ஸர்வேஸ்வரன் கிடீரொன்கிறார். ... ... உ

அ.—மூன்றாம்பாட்டு. (செவ்வரிநல்) பிராட்டியோட்டைக் கலவி விக்குரோதியைப்போக்கினபடி சொல்லுகிறது.

செவ்வரிநற்கருநெடுங்கண் சீதைக்காகிச்சினவிடையோன் சிலையிறுத்துமழுவாளேந்தி, வெவ்வரிநற்சிலைவாங்கி வென்றிகொண்டு வேல்வேந்தர்பகைதடிந்தவீரன்றன்னை, தெவ்வரஞ்சுநெடும்புரிசையுயர்ந்தபாங்கர்த்தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள், எவ்வரிவெஞ்சிலைத்தடக்கை யிராமன்றன்னையிறைஞ்சுவா ரிணையடியேயிறைஞ்சினேனே. (ந)

ப-ரை.—செவ்வரி - செவ்வரிகள்படர்ந்து, நல் - அழகியதாய், கரு - கறுத்து, நெடு - காதளவும் நீண்டிருந்துள்ள, கண் - கண்களையுடைய, சீதைக்காகி - பிராட்டிக்காக, சினம் - கோபத்தையுடைய, விடையோன - வ்ர்ஷபவாஹநனான ருத்ரனுடைய, சிலை - வில்லை, இறுத்து - முறித்தும், மழுவாள் ஏந்தி - மழுவாகிற ஆயுதத்தையுடைய பரசுராமாழ்வானுடைய, வெம் - க்ரௌர்யத்தையுடைத்தாய். வரி-அழகியதாய், நல்-ச்லாச்யமான, சிலை-வில்லை, வாங்கி-வளைத்து அம்பெய்து,வென்றிகொண்டு-அவனைவென்று,தம்முடையகுலத்தினராய், வேல்-வேலையுடையரான, வேந்தர் - ராஜாக்களுடைய, பகைதடிந்த - விரோதிநிரஸநம்செய்தருளின, வீரன்றன்னை - வீரனாய், தெவ்வர் - சத்ருக்கள், அஞ்ச-பயப்படும்படியான, நெடும்-உயர்ந்த, புரிசை-மதிளையும், உயர்ந்த—, பாங்கர்-அட்டாலைகளையுமுடைத்தான, தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள் - திருச்சித்திரகூடத்திலே யெழுந்தருளியிருக்குமவனாய், எவ்அரி - எய்யவரிய, வெம்-க்ரூரமான, சிலை - வில்லை, தடம்-பெரிய, கை-திருக்கையிலேயுடைய, இராமன்றன்னை—, இறைஞ்சுவார் - ஸ்தோத்ரம்பண்ணுமவர்களுடைய, இணையடியே-திருவடிகளையே, இறைஞ்சினேன் - வணங்கினேனென்கிறார்.

† செம்பாட்டுச்சறை-செம்மண் தரை.

வ்யா.—(செவ்வரியித்யாதி) "ஃஸிதேக்ஷணா" "அஸிதேக்ஷணு" என்கிறபடியே கண்ணழகிலேதோற்று, சினத்தையுடைய ரிஷபத்தைத் தனக்கு வாஹநமான ருத்ரனுடைய வில்லாய், ஒருவரால் கிட்டவொண்ணுதெ யிருக்கிறவில்லை அநாயாஸேநமுறித்து அச்செயலிலேதோற்ற பிராட்டியைத் திருமணம்புணர்ந் தெழுந்தருளாநிற்க வழியிலேவந்து தோற்றின, தன்கொளர்யத்துக்குத்தக்க மழுவாகிற ஆயுதத்தையுடைய ஸ்ரீபரஶுராமாழ்வானுடைய, வெம்மையையுடைத்தாய் தர்ஶநீயமான வில்லைவாங்கி யிவனைவென்று தான் திருவவதாரம்பண்ணின க்ஷத்ரியகுலத்துக்குப் பகைதீர்ந்த வீரத்தையுடையவனை. (தெவ்வரஞ்சுநெடும்புரிசையித்யாதி) ஶத்ருக்கள் அஞ்சும்படியானஉயர்ந்தமதிளையும்† அட்டாலைகளையுமுடைத்தான வூரிலே வர்த்திக்கிற. (எவ்வரியித்யாதி) "அவஷ்டப்யமஹத்தநு:" "அவஷ்டப்யமஹத்தநு:" என்று – வேறொருத்தரால் அடக்கியாளவொண்ணுதே காணவே ப்ரதிபக்ஷம் முடியும்படியான ஸ்ரீஶார்ங்கத்தையுடைய சக்ரவர்த்தித்திருமகனை. (இறைஞ்சுவாரிணையடியே) சக்ரவர்த்தித் திருமகனுடைய வீரத்துக்கும் அழகுக்கும் தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தோற்று அவர்கள் திருவடிகளிலே. (இறைஞ்சினேனே) ஸ்ரீபரதாழ்வான்குணங்களுக்குத் தோற்ற ஸ்ரீஶத்ருக்நாழ்வானைப்போலே. ௩

தொத்தலர்பூஞ்சுரிகுழற் கைகேசிசொல்லாற்றொன்னகரந் துறந்துதுறைக்கங்கைதன்னைப், பத்தியுடைக்குகன்கடத் தவநம்போய்ப்புக்குப்பரதனுக்குப் பாதுகமுமரசுமீந்து, சித்திரகூடத்திருந்தான் றன்னை யின்றுதில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள், எத்தனையுங்கண்குளிரக் காணப்பெற்றவிருநிலத்தார்க் கிமையவர்நேரொவ்வார்தாமே. (௪)

ப-ரை.—தொத்து - கொத்துக்கொத்தாக, அலர் - அலருகிற, பூ - பூக்களையுடைத்தாய், சுரி - சுருண்ட, குழல் - குழலையுடையளான, கைகேசி - கைகேசியுடை[illegible] சொல் - சொல்லாலே, தொல் - தங்கள் முன்னோர் தொடங்கிவருகி[illegible] [illegible] - அயோத்யாநகரத்தை, துறந்து - விட்டு, பத்தியுடை - பக்தியையுடைத்தான, குகன் - ஸ்ரீகுஹப்பெருமாள், கங்கைத் துறைதன்னை - கங்கைக்கரையை, கடத்த - தாண்டுவிக்க, வநம் - துஷ்டமிர்கங்கள் ஸஞ்சரிக்கிற காட்டிலே, போய்ப்புக்கு - சென்று புகுந்து, பரதனுக்கு - ஸ்ரீபரதாழ்வானுக்கு, பாதுகமும் - திருவடிநிலைகளையும், அரசும் - ராஜ்யபாரத்தையும், ஈந்து - கொடுத்து, சித்திரகூடத்திருந்தான்றன்னை - சித்ரகூடபர்வதத்திலேயெழுந்தருளியிருந்தவனை, இன்று தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள் — கண் - உன்னைக்காணப்பெறாதே விடாய்த்தகண்கள், எத்தனையும்குளிர - நன்றாகக்குளிரும்படி, காணப்பெற்ற - கண்டநுபவிக்கப்பெற்றவர்களாய், உகந்தருளின நிலங்களையுடைத்தாகையாலே, இரு - ஶ்லாக்யமான, நிலத்தார்க்கு - பூமியிலுள்ளவர்களுக்கு, இமையவர் - நித்யஸூரிகள், நேரொவ்வார் - ஸத்ருசாகார்கள்.

† அட்டாலை - தூர்க்கசயநனை.

வ்யா.—நாலாம்பாட்டு. (தொத்தலர்) கொத்துக்கொத்தாக அலருகிற பூக்களையுடைய, சுருண்டு அழகிதான குழலையுடைய கைகேயி. இத்தால்-தன்னுடைய ஒப்பனையாலும் அழகாலும் சக்ரவர்த்தியைத் தானிட்ட வழக்காம்படி பண்ணிப்ரமிப்பிக்கவல்லளான. (கைகேயிசொல்லால்) சக்ரவர்த்திவாய்திறக்கமாட்டாதிருக்க, “பிள்ளாய்! உங்களையர், உன்னைக் காட்டேறப்போகச்சொல்லாநின்றார்” என்றுகைகேயி சொன்னவார்த்தையாலே. (தொன்னகரந்துறந்து) குல க்ரமாகதமாய்வருகிறபடைவீட்டை ஸந்ந்யஸித்து. இவள்சொன்னதென்று போகைக்கு ப்ராப்தியில்லாமையைக் காட்டுகிறது. (துறைக்கங்கைதன்னை) கங்கையின் துறைதன்னை. (பத்தியுடைக் குகன்கடத்த) தம்பிமாரைக் காட்டிலும் ஸ்நேஹத்தையுடையனாய், பிரியில் தரியாதபடி பெருமாள் நியமிக்கையாலே நின்றவனுமாய், ஸ்ரீபரதாழ்வானையுங்கூட அசிர்க்கும்படியான ஸ்ரீகுஹப்பெருமாள் கங்கையைக் கடத்த. (வநம்போய்ப்புக்கு) மநுஷ்யஸஞ்சாரமின்றியே துஷ்டம்ர்கங்களேயான காட்டிலேபோய்ப்புக்கு. (பரதனுக்குப் பாதுகமுமரசுமீந்து சித்திரகூடத்திருந்தான்றன்னை) சித்ரகூடத்திலே எழுந்தருளியிருக்கிற இருப்புத் தான் பெறாதே பிற்பட்டார்க்கு மிழவுதீர ஸர்வகாலத்திலும் அநுபவிக்கைக்காகத் திருச் சித்திர கூடத்திலே வர்த்திக்கிறவனை. (எத்தனையுங்கண்குளிர) இவனைக்காணப்பெறாதே விடாய்த்தகண் குளிரும்படி. (காணப்பெற்ற) கேட்டே போகையன்றிக்கே கண்டநுபவிக்கப்பெற்ற. (இருநிலத்தார்க்கு) உகந்தருளினதேசங்களையுடைய ஶ்லாக்யமான பூமியிலுள்ளார்க்கு, * ஸதா பஶ்யந்தி - ஸதாபஶ்யந்தி பண்ணியிருக்கையே ஸ்வபாவமான நித்யஸூரிகளும் ஒவ்வார். இங்கு, கண்ணுக்குவிஷயம் புறம்பேயுண்டாயிருக்கச்செய்தே அத்தைத்யஜித்துக் காண்கிறவர்கள்; அவர்கள், அதுவே ஆசையாக விருக்கிறவர்களிறே. ௪

வலிவணக்குவரைநெடுந்தோள்விராதைக்கொன்று வண்டமிழ்மாமுனிகொடுத்தவரிவில்வாங்கி, கலைவணக்குநோக்கரக்கி மூக்கைநீக்கிக்கரனோடு தூடணன்றனுயிரைவாங்கிச், சிலைவணக்கிமான்மரிய வெய்தான்றன்னைத்தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள், தலைவணக்கிக்கைகூப்பி யேத்தவல்லார்திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே. (௫)

ப-ஸா.—வலிவணக்கு-எதிரிகள் வலியைத் தோற்பிக்கக்கடவதாய், வரை-மலைபோலே, நெடு - திண்ணிதான, தோள் - தோள்களையுடைய, விராதை-விராதனை, கொன்று—, வண் - யாவர்க்கும் எளிதில்கற்கலான, தமிழ் - தமிழ்பாஷைக்கு நிர்வாஹகராய், மா - ரிஷிச்ரேஷ்டரான, முனி - அகஸ்த்யரிஷியானவர், கொடுத்த—, வரி - தர்சநீயமான, வில் - வில்லை, வாங்கி-வளைத்து, கலை-மானின்நோக்கை, வணக்கு - தோற்பிக்கக்கடவதான, நோக்கு - நோக்கையுடைய, அரக்கி - சூர்ப்பணகியுடைய, மூக்கை—, நீக்கி - அறுத்து, கரனோடு தூடணன்றன் - கரதூஷணர்களுடைய, உயிரை - ப்ராணனை, வாங்கி - முடி

த்து, மான் - மான்வடிவுகொண்டுவந்தமாரீசன், மரிய - முடியும்படி, சிலைவணக்கி - வில்லைவளைத்து, எய்தான்றன்னை - பாணப்ரயோகம்பண்ணினவனை, தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்—, தலைவணக்கி - தெண்டன் ஸமர்ப்பித்து, கைகூப்பி - அஞ்சலிபண்ணி, ஏத்தவல்லார் - ஸ்தோத்ரம்பண்ண வல்லவர்கள், திரிதலால் - ஸஞ்சாரம் பண்ணுகையாலே, தரணி - இந்த பூமியானது,தவமுடைத்து - பாக்யத்தையுடையது.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வலிவணக்கு) எதிரிகள்வலியைத் தோற்பிக்கக்கடவதாய் மலைபோலே திண்ணியதான தோள்களையுமுடைய விராதனைக்கொன்று. (வண்டமிழ் மாமுனிகொடுத்த) அகஸ்த்யன்கொடுத்த தர்ஸநீயமான வில்லைவாங்கி. (கலைவணக்கு நோக்கரக்கி) கலைநோக்கைத்தோற்பிக்கும்படியானநோக்கையுடைய ஸூர்ப்பணகியுடையமூக்கைவாங்கி. (கரனொடு தூடணன்றன் உயிரைவாங்கி) இவளுடையரூபவைரூப்யங்கண்டுபொறுக்கமாட்டாதே வந்த கரதூஷணர்களை ப்ராணன்களை ஹரித்து. (சிலைவணக்கிமான் மரிய வெய்தான்றன்னை) அதுகேட்டுப் பொறாத ராவணனாலே ப்ரேரிதனாய்வந்த மாரீசனான மாயாம்ர்கத்தை யெய்துகொன்றவனை. (தில்லைநகரித்யாதி) அக்காலத்தில்காணப்பெறாத இழவெல்லாந்தீரத் தலையுண்டான ப்ரயோஜநம்பெற வணங்கி, கையுண்டான ப்ரயோஜநம்பெறத் தொழுது, வாயுண்டான ப்ரயோஜநம்பெற ஏத்தவல்லார்திரிதலால். (தவமுடைத்துத்தரணிதானே) இவர்களுடைய ஸஞ்சாரத்துக்கு விஷயமாகையாலே பூமியானது பாக்யத்தையுடையது. ௫

தநமருவுவைதேகி பிரியலுற்றுத்தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்தேற்றி, வநமருவுகவியரசன் காதல்கொண்டுவாலியைக் கொன்றிலங்கைநகரரக்கர்கோமான், சினமடங்கமாருதியாற் சுடுவித்தானைத்தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள், இனிதமர்ந்தவம்மானை யிராமன்றன்னையேத்துவாரிணையடியேயேத்தினேனே. (௬)

ப - ரை.—தநம் - ஸ்தநத்தினழகாலே, மருவு - கூடி யிருப்பதற்குயோக்யையான, வைதேகி - விதேஹராஜன் திருமகளானபிராட்டியை, பிரியலுற்று - பிரிகையாலே, தளர்வெய்தி - மனம்வருந்தி, பிராட்டிக்காக ராவணனோடே எதிர்த்து யுத்தம்செய்து ப்ராணனைவிட்ட, சடாயுவை - ஜடாயுமஹாராஜனை, வைகுந்தத்தேற்றி - பரமபதத் தேறப்போகவிட்டு, வநம் மருவு - வாலிக்கு அஞ்சிக்காட்டிலே மறைந்து வர்த்திக்கிற, கவியரசன் - ஸுக்ரீவமஹாராஜர்பக்கலுண்டான, காதல்கொண்டு - ஸ்நேஹத்தாலே, வாலியைக்கொன்று—, இலங்கைநகர் - லங்காநகரத்திலிருக்கிற, அரக்கர் - ராக்ஷஸர்களுக்கு, கோமான் - அரசனான ராவணனுடைய அபிமாநமும், சினம் - கோபமும், அடங்க - அடங்கும்படி, மாருதியால் - திருவடி வாலாலே, சுடுவித்தானை - கொளுத்துவித்தவனை, தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்—, இனிது-இனிதாக, அமர்ந்த-எழுந்தருளியிருக்கிற, அம்மானை-ஸர்வேச்வரனான, இராமன்றன்னை - சக்ரவர்த்தித் திருமகனை; ஏத்துவார் - ஸ்தோத்ரம் பண்ணுமவர்களுடைய, இணையடியே-திருவடிகளையே, ஏத்தினேன் - ஸ்தோத்ரம் பண்ணப்பெற்றேனென்கிறார்.

வ்யா.—ஆறாம்பாட்டு. (தனமருவு) திருமுலைத்தடத்தி னழகாலும் ஆபிஜாத்யத்தாலும் பிரியத்தகாத பிராட்டி பிரிவாலே பெருமாள் தம்மளவிலே நோவுபட்டு, பிராட்டிக்காக ராவணனோடே யுத்தம்பண்ணி ப்ராணனைவிட்ட பெரியவுடையாரைப் பரமபதத்தேறப் போகவிட்டு. "தநமருவுவைதேகி" என்று "[illegible]" "விஷ்ணோஃஸ்ரீ" என்கிறபடியே-பெருமாளுக்கு தநமான பிராட்டியென்றுமாம். (வநமருவுகவியரசன்) வாலிக்கு அஞ்சிக் காட்டிலே மறைந்துகிடக்கிற குரங்குகளுக்கு ராஜாவான ஸுக்ரீவனைஸ்நேஹபூர்வகமாகக் கட்சிகொண்டு, அவற்காக அதிபல பராக்ரமனான வாலியை நிரஸித்து. (இலங்கைநகர்) லங்கைக்கு நிர்வாஹகனென்றும் ராக்ஷஸேஸ்வரனென்றும் மோஹித்திருக்கிறவனுடைய அபிமானமும் சீற்றமுமடங்கும்படி, திருவடிவாலிலே நெருப்பையிட்டுச் சுடுவித்தவனை. (தில்லைநகரித்யாதி) அக்காலத்தி லநுபவிக்கப் பெற்றிலோமென்னும் இழவுதீர இங்கே நித்யஸந்நிஹிதனா[illegible]யிருக்கிற ஸர்வேஸ்வரனான சக்ரவர்த்தித்திருமகனை. (ஏத்துவார்) அவனுடைய வடிவழகிலும் ஸௌலப்யத்திலு மீடுபட்டேத்துமவர்கள் திருவடிகளிலே யேத்தினேனே. ௬

குரைகடலையடலம்பால் மறுகவெய்து குலைகட்டி மறுகரையை
யதனாலேறி, எரிநெடுவேலரக்கரொடு மிலங்கைவேந்தனின்னுயிர்
கொண் டவன்றம்பிக்கரசுமீந்து, திருமகளோடினிதமர்ந்த செல்வ
ன்றன்னைத்தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள், அரசமர்ந்தா
னடிசூடு மரசையல்லாலரசாக வெண்ணேன்மற்றரசுதானே. (எ)

ப-ரை.—குரை - சப்தியாநின்றுள்ள, கடலை - ஸமுத்ரத்தை, அடல் - சத்ருக்களை வருத்தத்தக்க, அம்பால் - அம்பாலே, மறுக-கலங்கும்படி, எய்து—, குலைகட்டி - அணைகட்டி, அதனால் - அந்த அணையாலே, மறுகரையை யேறி-அந்தக்கரையிலேபோய், எரி - சத்ருக்களை யெரிக்கக்கடவதாய், நெடு-பெரிய, வேல் - வேலையுடையரான, அரக்கரொடும் - ராக்ஷஸருடைய ப்ராணனையும், இலங்கைவேந்தன் - லங்காதிபதியான ராவணனுடைய, இன் - இனிய, உயிர்-ப்ராணனையும், கொண்டு - அபஹரித்து, அவன் தம்பிக்கு - அவன் தம்பியான ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு, அரசீந்து - ராஜ்யத்தைக்கொடுத்து, பிரிவெல்லாம் மறக்கும்படி, திருமகளோடு - பிராட்டியோடே, இனிது - இனிதாக, அமர்ந்த-அமர்ந்தருளிய, செல்வன்றன்னை- ஐச்வர்யமுடையவனை, தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்—, அரசமர்ந்தான்-ராஜ்யம்பண்ணுமவனுடைய, அடிசூடும்-திருவடிகளை சிரஸ்ஸிலே தரிக்கையாகிற, அரசையல்லால்-அரசாட்சியையொழிய, மற்றரசு - இதரராஜரீகத்தை, அரசாகவெண்ணேன் - அரசாட்சியாக நினையேனென்கிறார்.

வ்யா.—ஏழாம்பாட்டு.(குரைகடலை)கோஷத்தையுடைத்தான கடலை, ஶத்ருக்களென்றால் எப்போதோவென்று மேல்விழக்கடவதான அம்பைவிட்டு மறுகும்படியாக வெய்து. (குலைகட்டி) அஞ்சின கடலானது என்மேலே தூர்த்துக்கொள்ளீ ரென்ன;

அதின்மேலேமலைகளையிட்டுத்தூர்த்துவழிசெய்து அந்தக்கரையிலே போய். (எரிநெடுவேல்) ஶத்ருக்களை எரிக்கக்கடவதாய் நெடிதான வேலையுடைய ராக்ஷஸரோடே, லங்காதிபதியான ராவணனை அவனுகந்த ப்ராணனை ஹரித்து, அவன் தம்பிக்கு ராஜ்யத்தைக்கொடுத்து, பிராட்டியோடேகூட, பிரிந்த பிரிவெல்லாம் மறக்கும்படி இனிதமர்ந்தருளிய ஐஶ்வர்ய முடையவன்றன்னை. (தில்லைநகரித்யாதி) ராஜ்யம்பண்ணி யிருக்கிறவன் திருவடிகளைக் கொடுக்கையாகிற ராஜ்யமொழிய அதுக் கெதிர்த்தட்டாக ஸ்வதந்த்ரத்தைப் பார்க்கும் ராஜ்யத்தை ராஜ்யமாகவேண்டேன். ௭

அம்பொனெடுமணிமாட வயோத்தியெய்தியரசெய்தி யகத்தியன்வாய்த் தான்முன்கொன்றான், தன்பெருந்தொல்கதைகேட்டு மிதிலைச்செல்வியுலகுய்யத் திருவயிறுவாய்த்தமக்கள், செம்பவளத் திரள்வாய்த் தன்சரிதைகேட்டான்றில்லைநகர்த் திருச்சித்திரகூடந் தன்னுள், எம்பெருமான்றன்சரிதைசெவி யாற்கண்ணாற்பருகுவோமின்னமுதமதியோமன்றே. (௮)

ப-ரை.—அம் - பட்டாபிஷேகத்துக்காக அலங்கரித்து, பொன் - தர்சநீயமாய், நெடு - உயர்த்தியையுடைத்தாய, மணி-ரத்நங்களாலே சமைக்கப்பட்ட, மாடம் - மாடங்களையுடைய, அயோத்தி - திருவயோத்யையிலே, எய்தி-மீண்டெழுந்தருளி, அரசுஎய்தி - ராஜ்யபாரத்தையடைந்து, அகத்தியன்வாய்-அகஸ்த்யாச்ரமத்திலே, வேறு பணியில்லாமையாலே, தான்—, முன் - முன்பு, கொன்றான்றன் - கொன்ற ராவணனுடைய, பெரும் - பெருமைதங்கிய,தொல்கதை-பூர்வ வ்ர்த்தாந்தங்களை, கேட்டு - கேட்டும், மிதிலைச்செல்வி - ஸ்ரீ ஜநகராஜன் திருமகளானபிராட்டி, உலகு உய்ய - லோக மடைய உஜ்ஜீவிக்கும்படி, திருவயிறுவாய்த்த-பெற்ற, மக்கள் - குசலவர்களுடைய, திரள்-திரண்டு, செம்-சிவந்த, பவளம்-பவளம்போன்ற, வாய்-வாயாலே, தன் - தன்னுடைய, சரிதை - சரித்ரமான ஸ்ரீ ராமாயணத்தை, கேட்டான் - கேட்டருளின சக்ரவர்த்தித் திருமகன் நித்யவாஸம் பண்ணுகிற, தில்லைநகர்த் திருச்சித்திரகூடந் தன்னுள்—, எம்பெருமான்றன் - என் நாதனுடைய, சரிதை-வ்ர்த்தாந்தத்தை, திருவடியைப்போலே, செவியால் - செவிகளாலும், கண்ணால் - கண்களாலும், பருகுவோம் - அநுபவிக்கப்பெற்ற நாம், இன் அமுதம் - இனிதான தேவாம்ர்தத்தை, இன்று—,மதியோம் - ஒருபொருளாக மதியோம்.

வ்யா.—எட்டாம்பாட்டு. (அம்பொன்) திருவபிஷேகத்துக்கிடாக அலங்கரித்து தர்ஶநீயமாய் ஓக்கத்தையுடைத்தாய் நல்லரத்நங்களாலேசமைக்கப்பட்ட மாடங்களையுடைய திருவயோத்யையிலே ஜகத்தையெல்லாம் உகக்கும்படி மீண்டெழுந்தருளிப் புகுந்து. (அரசெய்தி) "రాజ్యంపునరవాప్తవాన్" "ராஜ்யம்புநரவாப்தவாந்" என்னும்படியே ஜகத்தையெல்லாம் வாழும்படி ஸாம்ராஜ்யத்திலே அதிகரித்து. (அகத்தியன்) வேறு கர்த்யாம்ஶ மில்லாமையாலே போதுபோக்காகத் தான் முன்கொன்ற ராவணனுடைய பூர்வ வ்ர்த்தாந்தங்களை யடைய அகஸ்த்யபகவாந் விண்ணப்பஞ்செய்யக்

கேட்டு. (மிதிலைச்செல்வியித்யாதி) ஸ்ரீஜநகராஜன் திருமகள், ஜகடைய வுஜ்ஜீவிக்கும்படி பெற்ற குஶலவர்கள்பேசத் தம்முடைய வ்ருத்தமான ஸ்ரீராமாயணகதையைக் கேட்டருளினவர் நித்யவாஸம் பண்ணுகிற, என்னுடைய நாதனுடைய வ்ருத்தாந்தத்தைத் திருவடியைப்போலே ஸர்வேந்த்ரியங்களாலும் அநுபவிக்கப்பெற்ற நாம் தேவஜாதி யநுபவிக்கிற அம்ருதத்தை யொன்றாகமதியோமே. அ

செறிதவச்சம்புகன்றன்னைச் சென்றுகொன்றுசெழுமறையோனுயிர்மீட்டுத்தவத்தோனீந்த, நிறைமணிப்பூணணியுங்கொண் டிலவணன்றன்னைத்தம்பியால் வானேற்றிமுனிவன்வேண்டத், திறல்விளங்குமிலக்குமனைப் பிரிந்தான்றன்னைத்தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள், உறைவானைமறவாதவுள்ளந் தன்னையுடையோம் மற்றுறு துயரமடையோமன்றே. (௯)

ப-ரை.—செறிதவம் - மிக்க தபஸ்ஸையுடையனான, சம்புகன்றன்னை-ஜம்புகனென்னும் சூத்ரனை, சென்று - அவனிருக்குமிடம் தேடிச்சென்று, கொன்று - அவனை யுருவழித்துப் பொகட்டு, செழு - விலக்ஷணனான, மறையோன் உயிர் - ப்ராஹ்மணனுடைய புத்ரன் ப்ராணனை, மீட்டு—, தவத்தோன்-அகஸ்த்யபகவான், ஈந்த - கொடுத்தருளின, நிறை-ஒளிமிக்கிருந்துள்ள, மணிப்பூணணி - ரத்நஹாரத்தை, கொண்டு - சாத்தியருளி, திருவயோத்யையிலே புகுந்து, இலவணன்றன்னை - லவணாஸுரனை, தம்பியால்-ஸ்ரீசத்ருக்நாழ்வானையிடுவித்து, வான்ஏற்றி - வீரஸ்வர்க்கத்திலே யேற்றுவித்து, முனிவன்வேண்ட-துர்வாஸச்சாபத்தாலே, திறல்விளங்கும் - பகைவரைவெல்லுகையில் மிக்க ஸாமர்த்யமுடையரான, இலக்குமனை - இளையபெருமாளை விட்டு, பிரிந்தான்றன்னை - பிரிந்த சக்ரவர்த்தித் திருமகனை, தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள் உறைவானை - திருச்சித்திரகூடத்திலே நித்யவாஸம்பண்ணுமவனை, மறவாதவுள்ளந் தன்னையுடையோம் - மறவாத மநஸ்ஸையுடையரான நமக்கு, மற்று - இனிமேல், உறு - எம்பெருமானை யநுபவிக்கப் பெறாமையால் வரக்கடவ, துயரமடையோம் - துக்கத்தையடையமாட்டோமென்கிறார்.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (செறிதவச்சம்புகனித்யாதி) மிக்க தபஸ்ஸை யுடையனாய் ஶூத்ரனான ஜம்புகனைத் தலையறுத்து. (செழுமறையோனுயிர்மீட்டு) விலக்ஷணனான ப்ராஹ்மணனுடைய புத்ரன்ப்ராணனைமீட்டு, அகஸ்த்யபகவான் கொடுத்த பெருவிலையனான ஹாரத்தையுஞ் சாத்தியருளித் திருவயோத்யையிலே புகுந்து, லவணாஸுரனை ஸ்ரீஶத்ருக்நாழ்வானையிடுவித்து வீரஸ்வர்க்கத்திலே குடியேற்றுவித்து. (முனிவனித்யாதி) துர்வாஸாவினுடைய ஶாபத்தாலே, «விஸர்ஜயே த்வாம்» "த்விதீயம்மேந்தராத்மாநம்" என்கிறபடியே-தம்முடைய ப்ராணபூதரான இளையபெருமாளுக்கு விடைகொடுத்து, அப்படிப்பட்ட தன்னைப் பின்புள்ளார் காணப்பெறாத இழவுதீரத் திருச்சித்திரகூடத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவனை. (மறவாதவுள்ளந்தன்னையுடையோம்) இப்படிப்பட்ட ஸௌலப்யத்தை அநவரதபாவனைபண்ணியிருக்கிறநமக்கு "எம்பெருமானை யநுபவிக்கப் பெற்றிலோம்" என்கிற இழவு இனியில்லை. ... ௯

அன்றுசராசரங்களைவைகுந்தத் தேற்றியடலரவப்பகையேறி
யசுரர்தம்மை, வென்றிலங்குமணிநெடுந்தோள் நான்குந்தோன்ற
விண்முழுது மெதிர்வரத்தன்றாமமேவி, சென்றினிதுவீற்றிருந்த
வம்மான்றன்னைத்தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள், என்று
நின்றானவனிவனென் றேத்திநாளுமிறைஞ்சுமினோ வெப்பொழு
துந்தொண்டீர்நீரே. (௧0)

ப-ரை.—அன்று - தீர்த்தம் ப்ரஸாதித்தருளுகிறவன்று, சராசரங்களை—, வைகுந்தத்து - பரமபதத்திலே, ஏற்றி - போகவிட்டு, அடல்-வலியையுடைய, அரவம் - ஸர்ப்பஜாதிக்கெல்லாம், பகையேறி - சத்ருவான பெரியதிருவடியை மேற்கொண்டு, அசுரர்தம்மை - அஸுரவர்க்கத்தை, வென்று - ஜயிக்கையாலே, இலங்கு - விளங்குகிற, மணி - அழகிய, நெடும்-நீண்ட, தோள்நான்கு-நான்கு திருத்தோள்கள், தோன்ற - தோன்றவும், விண்முழுதும் - பரமபதத்திலுள்ளாரெல்லாம், எதிர் வர - எதிர் கொண்டுவர, தன் - தன்னுடைய, தாமம்-ஸ்தாநத்திலே, மேவிச்சென்று-போய்ப்புக்கு, இனிது - இனிதாக, ஸிம்ஹாஸநத்திலே, வீற்றிருந்த - தன்பெருமைதோற்ற எழுந்தருளியிருந்த, அம்மான்றன்னை-ஸர்வேச்வரனை, தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள்—, என்றும் நின்றான் - நித்யவாஸம்பண்ணுகிறான்; தொண்டீர்நீர் - அநந்யப்ரயோஜநரான நீங்கள், அவன் - அப்படிப்பட்டவன், இவன் - இப்படிப்பட்டவன், என்று ஏத்தி - என்று ஸ்துதித்து, நாளும் - நாள்தோறும், இறைஞ்சுமின் - ஆச்ரயித்துக்ருதார்த்த ராகுங்கோ ளென்கிறார்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (அன்று சராசரங்களை) "అపివృక్షాః పరిమ్లానాః" "அபிவ்ர்க்ஷா: பரிம்லாநா:" என்று-வ்யதிரேகத்திலே அவைபட்ட தறிந்தருளுகையாலே "నాచాసక్తమయోధ్యాయామ్ సుసూక్ష్మమపి దృశ్యతే । తిర్యగ్యోనిగతాశ్చాపి సర్వే రామమనువ్రతాః" "நாசாஸக்தமயோத்யாயாம் ஸுஸூக்ஷ்மமபித்ர்ஸ்யதே । திர்யக்யோநிகதாஸ்சாபி ஸர்வேராமநுவ்ரதா:" என்கிறபடியே - இவையபெருமாளோபாதி பரமபதத்துக்குப் போகவிட்டு. (அடலரவப் பகையேறி) ஸர்ப்பஜாதிக்கு ஜந்மஸத்ருவான பெரியதிருவடியை மேற்கொண்டு அஸுரவர்க்கத்தைவென்று அந்த வீரஸ்ரீ விளங்குகிற திருத்தோள்கள்நாலோடுங்கூட அங்குள்ளாருகக்கும்படி எழுந்தருளி பரமபதத்திலேபோய்ப் புக்கு தன் மேன்மையெல்லாம் தோற்றும்படியான ஈஸ்வரனை. (தில்லைநகரித்யாதி) அவ்விருப்பிலொன்றுங் குறையாமே காலதத்வமுள்ளதனையுமிங்கே நமக்காக நித்யவாஸம் பண்ணுமவனை அநந்ய ப்ரயோஜநரான நீங்கள் அவனை ஆஸ்ரயித்து க்ருதார்த்த ராகுங்கோள். ௧0

தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுட் டிறல்விளங்கு மாருதி
யோடமர்ந்தான்றன்னை, எல்லையில்சீர்த்தயரதன்றன் மகனாய்த்தோ
ன்றிற்றது முதலாத்தன்னுலகம்புக்கதீறாக், கொல்லியலும்படைத்
தானைக் கொற்றவொள்வாள்கோழியர்கோன் குடைக்குலசேகரன்
சொற்செய்த, நல்லியலின்றமிழ்மாலை பத்தும்வல்லார் நலந்திகழ்
நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. (௧௧)

ப-ரை.—தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்—, திறல்விளங்கு-திறல் விளங்காநின்றுள்ள, மாருதியோடு - சிறியதிருவடியோடே, அமர்ந்தான்றன்னை - நித்யவாஸம்பண்ணுகிறவனை, எல்லையில் - அளவில்லாத, சீர்-நல்லகுணங்களையுடையனான, தயரதன்றன் - தசரதசக்ரவர்த்திக்கு, மகனாய்த் தோன்றிற்றதுமுதலா - பிள்ளையாகப்பிறந்ததுமுதலாக, தன்னுலகம்புக்கதீறு - தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளினதுமுடிவாக, கொல்லியலும்-கொலையைமுயலாநின்றுள்ள, படை -வேலையுடைய, தானை - ஸேனையையுடையராய், கொற்றம்-வெற்றியையும், ஒள் - அழகையுமுடைய, வாள் - வாளையுடையராய், கோழியர் - உறையூரிலுள்ளார்க்கு, கோன் - தலைவராய், குடை-வெண்கொற்றக்குடையையுமுடையரான, குலசேகரன் - ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சொற்செய்த-அருளிச்செய்ததாய், நல்இயல்-அழகிய இயலையுடைத்தாய், இன் - இனியதாய், தமிழ் - த்ராவிடபாஷையாய், மாலை - மாலாரூபமான, பத்தும் - இப்பத்துப் பாட்டுக்களையும், வல்லார்-சொல்லவல்லவர்கள், நலந்திகழ் - நன்மைவிளங்காநின்றுள்ள, நாரணனடிக்கீழ் - ஸர்வேச்வரன்திருவடிகளை, நண்ணுவார் - கிட்டப்பெறுவர்கள்.

வ்யா.—நிகமத்தில். (தில்லைநகரித்யாதி) "[Telugu-script quotation]" "பாவோநாந்யத்ரகச்சதி" என்று அங்குப்போகேனென்ற திருவடியை விடமாட்டாமே இங்கேவந்து நித்யவாஸம் பண்ணுகிறவனை. (எல்லையில்சீரித்யாதி) பஹுகுணனான சக்ரவர்த்திக்கு, "[Telugu-script quotation]" "பிதரம்ரோசயாமாஸ" என்று பிள்ளையாய்ப்பிறந்தது தொடக்கமாகப் பரமபதம்புக்கது முடிவாகவுண்டான ஸ்ரீராமாயணகதையை.(கொல்லியலும்படைத்தானை)கொலையை முயலாநின்றுள்ள வேலையுடைய படையையுடையராய். (கொற்றவொள்வாள்) வெற்றியையும் அழகையுமுடைய வாளையுடைய. (கோழியர்கோன்) கோழியர்க்குக்கோன். கோழி - உறையூர். சோழராஜாவானவன். (குடைக்குலசேகரன்சொற்செய்த) வெண்கொற்றக்குடையை யுடையரான ஸ்ரீகுலசேகரப்பெருமாளருளிச்செய்த. (நல்லியலின்தமிழ்மாலை பத்தும்வல்லார்) அழகிய இயலையுடைய தமிழ்மாலை பத்தும்வல்லார். (நலந்திகழ்நாரணனடிக்கீழ் நண்ணுவாரே) பரமபதத்திலே விளங்காநின்றுள்ள ஸர்வேச்வரன்திருவடிகளைக் கிட்டப்பெறுவர்கள். ... ... கக

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

———:0:———

அடிவரவு - அங்கணெடு வன்றெதிர்ந்த செவ்வரிநற் தொத்தலர்பூம் வலிவணக்கு தனமருவு குரைகடலை அம்பொன் செறிதவ அன்றுசராசரம் தில்லைநகர் பூநிலாய.

ஆ திருமொழி - ௧௦ - இ - பாட்டு - ௧௦௫.

பெருமாள் திருமொழிவ்யாக்யாநம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த திருச்சந்தவிருத்தத் தனியன்களுக்கு

பிள்ளைலோகஞ்சீயரருளிச்செய்த

வ்யாக்யாநம்.

அவதாரிகை.—(தருச்சந்தப்பொழில்) இதில்-திருச்சந்தவிருத்தஞ்செய்தருளின திருமழிசைப்பிரான் அவதாரஸ்தலமான *திருமழிசைவளம்பதியும் ஒருதேசமே! என்று அதிலே ஆழங்காற்படும்படி சொல்லுகிறது.

தருச்சந்தப்பொழில்தழுவுதாரணியின் துயர்தீரத்
திருச்சந்தவிருத்தஞ்செய்திருமழிசைப்பரன்வருமூர்
கருச்சந்துங்காரகிலுங்கமழ்கோங்குமணநாறும்
திருச்சந்தத்துடன்மருவுதிருமழிசைவளம்பதியே.

வ்யா.—(தருச்சந்தப்பொழில்தழுவுதாரணியின்துயர்தீர) தரு-கல்பகத்தரு. சந்து-சந்தநம். * சந்தநப்பூமலர்சோலையிறே; இரண்டு சோலையாலும் சூழப்பட்ட. தாரணி-பூமி. பொழில்தழுவியிருக்கிற பூமியிலுண்டான மநுஷ்யர் துக்கம்தீர. அவர்கள் பகவத்விஷயத்தை யிழந்திருக்கிற துக்கம்தீர. அவர்கள்தான்போக்ய போகோபகரண போகஸ்தாநங்களைவிரும்பி பகவத்விமுகராயாய்த் திருப்பது. அதுக்குமேலே "அறியார்சமணரயர்த்தார்பவுத்தர்சிறியார்சிவப்பட்டார்" என்றிறே அவர்கள் அந்யஶேஷபூதராய் அநர்த்தப்படுகிறது; அவற்றை நிவர்த்திப்பித்து ஸத்வ்ர்த்தராக்குகைக்காக வாய்த்து-"திருச்சந்தவிருத்தம்"என்கிற திவ்யப்ரபந்தம் செய்தருளிற்று. அதிலே "புண்டரீகபாதபுண்ணியகீர்த்தி நும்செவிமடுத்துண்டு நும்முறுவினைத்துயருள்நீங்கியுய்மினோ" என்றும், "நன்மாலைவாழ்த்திவாழ்மினோ" என்றும்-பகவத்பஜநத்தையும் தேவதாந்தராஜ்ஞாநாஶக்திகளை, *காணில் * கொந்தம் * வண்டு * போதுகளிலே ஸுவ்யக்தமாக தர்ஶிப்பித்தும் திருத்தியருளிற்று. (திருச்சந்தவிருத்தம்) சந்தோரூபமான வ்ர்த்தமென்றபடி. "கலித்துறை, விருத்தம், வெண்பா" என்றாப்போலே சொல்லக்கடவதிறே. ஏவம்வித ப்ரபந்தநிர்மாணகராய்த் திருமழிசைக்கு நாதரான ஆழ்வாரவதரித்தவூரிருக்கும்படி சொல்லுகிறது (கருச்சந்தும்காரகிலும்கமழ்) ஆகரத்தில் சந்தநாகருக்களாலும் பரிமளிதமாய்.

(கோங்குமணநாறும்) கோங்கென்கிற வ்ருக்ஷத்தினுடைய புஷ்பபரிமளத்தையு முடைத்தாய் எல்லாவற்றாலும் மிக்க பரிமளத்தை யுடைத்தாகையாலே * வேரிமாறாதபூமேலிருப்பாளாய் ஸ்ரீ என்று திருநாமத்தை யுடையளான பெரியபிராட்டியாருடன் பொருந்தி யிருக்கும் திருமழிசை. (வளம்பதியே) இந்த விபூதியிலே இதொரு தேஶமே! கோங்கு என்று - பரிமளமாகவுமாம் - வளம் - அழகும், ஸம்பத்தும். ஆழ்வாராலே ஊரும் உத்தேஶ்யமாயிருக்கிறது. ... க

அ.—(உலகுமழிசையும்) "இதில் திருமழிசை - மஹீஸாரக்ஷேத்ரம்" என்று மஹத்தையைச் சொல்லுகிறது.

> உலகுமழிசையு முள்ளுணர்ந்து தம்மில்
> புலவர்புகழ்க்கோலால் தூக்க - உலகுதன்னை
> வைத்தெடுத்தபக்கத்தும் மாநீர்மழிசையே
> வைத்தெடுத்தபக்கம் வலிது.

வ்யா.—(உலகுமழிசையும்) லோகங்களையும் விலக்ஷணமான திருமழிசையையும். (உள்ளுணர்ந்து) மாஹாத்ம்யங்களை மநஸ்ஸிலே மநநம்பண்ணி. (தம்மில்புலவர்) பார்க்கவாதி மஹர்ஷிகளான மஹாகவிகள். (புகழ்க்கோலால்தூக்க) இவற்றின்புகழை யென்னுதல்; புகழ்க்கோலாலே யென்னுதல். தூக்க - துலைப்படுத்திநிறுக்க. (உலகுதன்னைவைத்தெடுத்தபக்கத்தும்) லோகத்தைவைத்தெடுத்த துலையைக்காட்டிலும். (மாநீர்மழிசையே வைத்தெடுத்தபக்கம்வலிது) மிக்க ஜலஸம்ருத்தியையுடைய மஹீஸாரக்ஷேத்ரத்தை வைத்தெடுத்த துலையே அதுலமாயிருந்தது. அகஸ்த்ய துர்வாஸாதிகளிருந்த பக்கம்போலே ஆழ்வாரவதரண ஹேதுவானதேஶமும் தாழ்ந்துகாட்டிற்றிறே. ஜகந்நாதனிறே அங்கேநித்யஸந்நிதிபண்ணுவது. "చిన్తయేత్సజగన్నాథం విష్ణుంజిష్ణుంసనాతనమ్" "சிந்தயேத் ஸஜகந்நாதம் விஷ்ணும்ஸநாதநம்" என்றிறே தத்யாநபரராய் அங்குள்ளதபோதநரிருப்பது; அத்தாலே வைத்தெடுத்தபக்கம் வலிதாய்த்து. "ధాత్రాతు లిఖితాలఘుమహీ" "தாத்ராதுலிதாலகுமஹீ" என்னக்கடவதிறே. மாநீர் மழிசை-தீர்த்தம் திருமண்ணுண்டானஸ்தலம். "மழசாடுகண்டீர்மருந்து" என்னக்கடவதிறே. * பத்தியான பாசனமான பக்திஸாராவதரணத்துக்கு அநுகுணமாயிருக்குந் தேஶமென்று அந்த திவ்யதேஶ வைபவம்சொல்லிற்றாய்த்து.

> "తులయామలవేనాపి నస్వర్గంనపునర్భవమ్।
> భగవత్సఙ్గిసఙ్గస్య మర్త్యానాంకిముతాశిషః॥"
> "துலயாம லவேநாபி நஸ்வர்க்கம் நபுநர்ப்பவம்।
> பகவத்ஸங்கி ஸங்கஸ்யமர்த் யாநாம்கிமுதாஶிஷ:"

என்றிறே ததீயவைபவ மிருப்பது.

பிள்ளைலோகஞ்சீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த

திருச்சந்தவிருத்தத்திற்கு

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

வ்யாக்யாநாவதாரிகை.

:o:

ஆழ்வார்திருமழிசைப்பிரானுகிறார் க்ர்ஷ்ணாவதாரம்போலே யாய்த்துப் பிறந்தபடியும் வளர்ந்தபடியும்;—யதுகுலத்திலே பிறந்து கோபகுலத்திலே வளர்ந்தாப்போலே, ரிஷிபுத்ரராய்ப் பிறந்து தாழ்ந்தகுலத்திலே யாய்த்து வளர்ந்தது. க்ர்ஷ்ணனாய் யதுகுலத்திலேபிறந்தாப்போலே அங்கே வளர்ந்தருளினானாகில் ராமாவதாரத்தோபாதியா மித்தனையென்று பார்த்தருளி, இடையரும் இடைச்சிகளும் பசுக்களும், "நம்மிலே யொருத்தன்" என்னும்படி தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காகவாய்த்து கோபஸஜாதியனாய் வளர்ந்தருளிற்று; அப்படியே ஆழ்வாரும் பகவதபிப்ராயத்தாலே தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காகத் தாழ்ந்தகுலத்திலே வளர்ந்தருளினாராய்த்து. இவ்வாழ்வாருக்கு ஸர்வேஶ்வரன் நிர்ஹேதுகமாக * மயர்வறமதிநலமருளி, தன்னுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும், ததாஶ்ரயமான ஜ்ஞாநஶக்த்யாதிகல்யாணகுணங்களையும், உபயத்துக்கும் ப்ரகாஶகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், அதுக்கலங்காரமான கிரீடாதிபூஷணவர்க்கத்தையும், அத்தோடு விகல்பிக்கலாம்படியான சங்கசக்ராதி திவ்யாயுதங்களையும், இதடங்கக் காட்டிலெறித்த நிலாவாகாமே அநுபவிக்கிற லக்ஷ்மீப்ரப்ர்தி மஹிஷீவர்க்கத்தையும், அச்சேர்த்தியே தங்களுக்கு தாரகாதிகளாக வுடையரான பரிஜநபரிபர்ஹத்தையும், இப்போகத்துக்கு வர்த்தகமான பரமபதத்தையும் ஸாக்ஷாத்கரிப்பித்து ப்ரக்ர்திபுருஷாத்மகமான லீலாவிபூதியினுடைய ஸ்ர்ஷ்டி ஸ்திதிஸம்ஹாரங்களை லீலையாகவுடையனாயிருக்கிறபடியையுங்காட்டிக்கொடுத்து, இப்படிஉபயவிபூதிநாதனான எம்பெருமான் தன்பெருமையைக்காட்டிக்கொடுக்கையாலேபகவதநுபவைகபோகராய், "నోపజనంస్మరన్నిదంశరీరమ్" "நோபஜநம்ஸ்மரந்நிதம் ஶரீரம்" என்கிறபடியேஸம்ஸாரதோஷத்தை அநுஸந்திக்க இடமில்லாதபடி ஈஶ்வரன் தம்மை அநுபவிக்கையாலே மார்க்கண்டேயாதிகளைப்போலே சிரகாலம் ஸம்ஸாரத்திலே யெழுந்தருளியிருந்தவிவர், ப்ராப்தமுமாய் ஸுலபமுமான விஷயத்தை ஸம்ஸாரிகளிழக்கைக்கு ஹேதுவென்னென்று அவர்கள்பக்கலிலே கண்வைத்தார்.

தாம்பகவத்விஷயத்திலப்ரவணராயிருக்கிறப்போலேரஜஸ்தமஸ்ஸுக்களாலேபிறந்த அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களாலே, "యోబ్రహ్మాణంవిదధాతిపూర్వమ్" "யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்" என்றும் "యుగకోటిసహస్రేషు విష్ణుమారాధ్యపద్మభూః । పునస్త్రైలోక్యధాతృత్వం ప్రాప్తవానితిశుశ్రుమః" "யுககோடிஸஹஸ்ரேஷு விஷ்ணுமாராத்யபத்மபூ:। புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதிஶுஶ்ரும:" என்றும் "వేదామేపరమంచక్షుర్వేదామేపరమంధనమ్" "வேதாமேபரமம்சக்ஷுர்வேதாமேபரமம்தநம்" என்றும் "మహాదేవస్సర్వమేధేమహాత్మా" "மஹாதேவஸ்ஸர்வமேதேமஹாத்மா" என்றும்-குருபாதகாதிகளாலும்க்ஷேத்ரஜ்ஞதயாஸம்ப்ரதிபந்நரானப்ரஹ்மருத்ராதிகள்பக்கலிலே, "ఏకఏవరుద్రః" "హిరణ్యగర్భస్సమవర్తతాగ్రే" "ஏகஏவருத்ர:" "ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே" என்று இத்யாதிப்ரஶம்ஸா வாக்யங்களாலும் தாமஸ புராணங்களாலும் பரத்வ புத்தியைப்பண்ணி, சேதநர் பகவத் விமுகராய் அநர்த்தப் படுகிறபடியைக்கண்டு பராநர்த்தம் பொறுக்கமாட்டாமையாலே நிர்த்தோஷ ப்ரமாணங்களாலும் ஸம்யஜ்ஞ்யாயங்களாலும் பாஹ்யகுத்ருஷ்டி நிரஸநபூர்வகமாக பகவத் பரத்வத்தை உபதேசித்தவிடத்திலும் அவர்கள் அபிமுகீகரியாமையாலே, நாம் இவர்களைப்போலன்றியே ஜகத்காரண பூதனாய் பரமபத நிலயனான ஸர்வேஶ்வரனே ப்ராப்யனென்று அவன் ப்ரஸாதத்தாலே அறியப்பெற்றோம். இனி இவனை ஆஶ்ரயிக்குமிடத்தில் பரவ்யூஹங்கள் தேசவிப்ரக்ர்ஷ்டத்வத்தாலே அஸ்மதாதிகளுக்கு ஆஶ்ரயணீயமாகமாட்டாது; அவதாரங்கள் காலவிப்ரக்ர்ஷ்டதையாலே ஆஶ்ரயணீயங்களாகமாட்டாது; இரண்டுக்கும் தூரஸ்தரான பாக்யஹீநர்க்கும் இழக்கவேண்டாதபடி அர்ச்சகபராதீநனாய் ஸர்வாபராதஸஹனாய் ஸர்வாபேக்ஷிதப்ரதனாய் வர்த்திக்கும் அர்ச்சாவதாரத்தின் நீர்மையை அநுஸந்தித்து ஆகிஞ்சந்யத்தை அதிகாரமாக்கி, ப்ரபத்தியை அதிகாரிவிசேஷணமாக்கி, பகவத்க்ர்பையை நிரபேக்ஷோபாயமென்று அத்யவஸித்து அவனையாஶ்ரயித்து அவன் க்ர்பைபண்ணி முகங்காட்ட இவ்விஷயத்தை லபிக்கப்பெற்றேனென்று தமக்குப் பிறந்த லாபத்தைச்சொல்லித் தலைக்கட்டுகிறார். ... ...

அ.—முதற்பாட்டு. "భూతేభ్యోఽణ్డమ్" "பூதேப்யோ஽ண்டம்" என்கிறபடியே - அண்டகாரணமாய் ஸகுணமானப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களுக்கு அந்தராத்மாவாய் நிற்கிறநீயே ஜகத்துக்கு உபாதாந காரணம். இவ்வர்த்தம் வேதாந்தப்ரமேயம் கைப்படாத பாஹ்யகுத்ருஷ்டிகளால் நினைக்கவொண்ணாதென்கிறார்.

பூநிலாயவைந்துமாய்ப்புனற்கணின்றநான்குமாய்த்
தீநிலாயமூன்றுமாய்ச்சிறந்தகாலிரண்டுமாய்
மீநிலாயதொன்றுமாகிவேறுவேறுதன்மையாய்
நீநிலாயவண்ணநின்னையார்நினைக்கவல்லரே. (க)

ப-ரை.—பூ - பூமியிலே, நிலாய - வர்த்திக்கிற, ஐந்துமாய் - சப்தஸ்பர்ச ரூபரஸகந்தங்களைந்துமாய், புனற்கணின்ற-ஜலத்திலேவர்த்திக்கிற, நான்குமாய் - சப்தஸ்பர்ச ரூபரஸங்கள் நான்குமாய், தீநிலாய - அக்நியிலேவர்த்திக்கிற, மூன்றுமாய் - சப்தஸ்பர்சரூபங்கள் மூன்றுமாய், சிறந்த - சேதநர்க்கு ஆதாரமாயிருக்கும் பலத்தையுடைய, கால்நிலாய - காற்றிலேவர்த்திக்கிற, இரண்டுமாய் - சப்தஸ்பர்சங்களிரண்டுமாய், மீநிலாயது - ஆகாசத்திலே வர்த்திக்கிற, ஒன்றுமாகி - சப்தகுணமொன்றுமாகி, வேறுவேறு தன்மையாய்-தேவாதிகளுக்கு அந்தராத்மாவாய், நீ - சிதசிச்சரீரியானநீ, நிலாயவண்ணம்-கார்யகாரணவர்க்கத்திலே நிற்கும் ப்ரகாரத்தையுடையனாய், நின்னை - சிதசித்விசிஷ்டமாய்க்கொண்டு ஜகதுபாதாந காரணமாய்நிற்கிற வுன்னை, ஆர்நினைக்கவல்லரோ - நினைக்கவல்லாரார்.

வ்யா.—(பூநிலாயவைந்துமாய்)பூமியிலேவர்த்திக்கிறஶப்தாதிகுணங்களைந்துமாய். "गन्धवती पृथिवी" "तस्या गन्धो गुणो मतः" "கந்தவதீ ப்ருதிவீ" "தஸ்யாகந்தோகுணோமதஃ" என்று-ப்ருதிவிகுணம்கந்தமாயிருக்க, ஶப்தாதிகளைந்தும் அதுக்குகுணமாகச்சொல்லுவானென்னென்னில்; "शब्दादिभिर्गुणैर्ब्रह्मन् संयुक्तान्युत्तरोत्तरः" "சப்தாதிபிர்குணைர்ப்ரஹ்மந் ஸம்யுதாந்யுத்தரோத்தரை:" என்கிறபடியே காரணகுணாநுவ்ருத்தியாலே ஶப்தஸ்பர்ஶ ரூபரஸகந்தங்களையுங் கூட்டிச்சொல்லுகிறது. (புனற்கணின்றநான்குமாய்) அப்பிலேவர்த்திக்கிறஶப்தஸ்பர்ஶரூபரஸங்களுமாய். "सम्भवन्ति ततोऽम्भांसि रसाधाराणि तानि तु" "ஸம்பவந்திததோம் பாம்ஸி ரஸாதாராணிதாநிது" என்கிறபடியே தக்குணம்ரஸமாயிருக்க, அதிலும்காரணகுணாநுவ்ருத்தியாலே ஶப்தஸ்பர்ஶ ரூபங்களையும் கூட்டிச்சொல்லுகிறது. (தீநிலாயமூன்றுமாய்) "ज्योतिरुत्पद्यते वायोस्तद्रूपं गुण उच्यते" "ஜ்யோதிருத்பத்யதே வாயோஸ்தத்ரூபம்குணஉச்யதே" என்கிறபடியே அக்நிகுணமான ரூபத்தோடே ஶப்தஸ்பர்ஶங்களைக் கூட்டி "மூன்றுமாய்" என்கிறது.

(சிறந்தகாலிரண்டுமாய்) ஸ்வஸஞ்சாரத்தாலே சேதநர்க்காதாரமான பலத்தையுடைய வாயுவினுடையகுணமிரண்டுமாய். "बलवान् भगवान् वायुस्तस्य स्पर्शो गुणो मतः" "பலவாந்பகவாந்வாயுஸ் தஸ்ய ஸ்பர்ஶோகுணோமதஃ" என்கிறபடியே வாயுகுணமான ஸ்பர்ஶத்தோடே ஆகாஶகுணமான ஶப்தத்தையுங் கூட்டிச்சொல்லுகிறது.

(மீநிலாயதொன்றுமாகி)மீதிலேவர்த்திக்கிறஶப்தகுணமொன்றுமாய். "आकाशं शब्दलक्षणम्" "ஆகாஶம் ஶப்தலக்ஷணம்" என்கிறபடியே ஆகாஶகுணமொன்றையும்சொல்லுகிறது. உத்தமமான பூதபஞ்சகங்களுக்குக் காரணமான ஏற்றத்தாலும் ஸ்வவ்யதிரிக்தங்களுக்கு அவகாஶப்ரதாநம்பண்ணு மேற்றத்தாலும் "மீது" என்று - ஆகாஶத்தைச்சொல்லுகிறது.

முதற்பாட்டு.—காரணகுணாநுவ்ருத்தியாவது - பூமிக்கு பரம்பரையா மற்றநாலுபூதங்களும் காரணமாகையாலே அந்த நாலு பூதங்களுடைய குணங்களும் கார்யமான பூமியிலே வர்த்திக்குமென்றபடி.

அண்டகாரணம் ப்ருதிவ்யாதிகளாயிருக்க ஶப்தாதி குணங்களோடே ஸமாநாதிகரித்தது ப்ருதிவ்யாதிகளோபாதி தத்குணங்களும் ஸ்வாதீநமா யிருக்கையாலே சொல்லுகிறது. ப்ருதிவ்யாதிகளோடு ஸாமாநாதிகரண்யம் ஶரீராத்மபாவ ஸம்பந்த நிபந்தநம்; குணங்களோடு ஸாமாநாதிகரண்யம் அவற்றினுடையஸத்தாதிகள் ஸ்வாதீநமாயிருக்கையாலே. அண்டத்துக்கு மஹதஹங்காரங்களும் காரணமாயிருக்க பூதங்களைச்சொல்லுவானென்னென்னில்; "తస్మాద్వా ఏతస్మాదాత్మన ఆకాశస్సంభూతః" "தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூதঃ" என்கிற ஶ்ருதிச்சாயையாலேயருளிச்செய்கிறார். "భూతేభ్యోఽణ్డమ్" "பூதேப்யோऽண்டம்" என்று ரிஷிகள் சொல்லுகிற பஞ்சீகரணத்தாலே - ஸூக்ஷ்மசிதசித்விஶிஷ்டப்ரஹ்மகாரணமாகையாலே சிதந்தர்ப்பூதமான புருஷஸமஷ்டியையும் நினைக்கிறது. இவ்வளவாக ப்ராக்ருதஸ்ருஷ்டி சொல்லிற்றாய்த்து.

(வேறுவேறுதன்மையாய்) அண்டாந்தர்வர்த்திகளாய் ஒன்றுக்கொன்று விலக்ஷணமான தேவாதிபதார்த்தங்களுக்கும் ஆத்மாவாய். ஆத்மாக்களுடையஸ்வரூபம் ஏகரூபமாயிருக்க "வேறுவேறு" என்கிறது கர்மத்தால்வந்த தேவாதிரூப பேதங்களைப்பற்ற. (நீநிலாயவண்ணம்) சிதசிச்சரீரியானநீ கார்யகாரணவர்க்கத்திலேநிற்கிற ப்ரகாரம். அதாகிறது - அசித்கதமான பரிணாமமென்ன, சேதநகதமான அஜ்ஞாநதுঃகாதிகளென்ன இவை, உன்பக்கல்ஸ்பர்ஶியாதபடிநிற்கை. (நின்னை) சிதசித்விஶிஷ்டமாய்க்கொண்டு ஜகதுபாதாந காரணமானவுன்னை. (ஆர்நினைக்கவல்லர்) நினைக்கவல்லாரார். பரமாணுக்கள் உபாதாநகாரணமென்னும் வைஶேஷிகர் நினைக்கவோ; ப்ரதாநம் உபாதாநகாரணம், சிதசித்ஸம்ஸர்க்கத்தாலே ஜகந்நிர்வாஹணமென்னும் ஸாங்க்யர் நினைக்கவோ; நிமித்தோபாதாநங்களுக்குபேதஞ்சொல்லும் ஶைவர் நினைக்கவோ; சிதசிதீஶ்வர தத்வத்ரயங்களும் ப்ரஹ்மபரிணாமமென்னும் பேதாபேதிகள் நினைக்கவோ; நிர்விஶேஷவஸ்துவ்யதிரிக்தங்கள் அபரமார்த்தமென்னும் மாயாவாதிகள் நினைக்கவோ; வேதாந்த ப்ரமேயம் கைப்பட்டாலொழிய ஆர்நினைக்கவல்லர் என்கிறார். (க)

அ.—இரண்டாம்பாட்டு. "సహయజ్ఞైః ప్రజాస్సృష్ట్వా" "ஸஹயஜ்ஞைঃப்ரஜாஸ் ஸ்ர்ஷ்ட்வா" என்கிறபடியே-காரணபூதனானவுன்னாலேஸ்ருஷ்டமான சேதநர்க்குகர்மயோகம்முதலாகபரமபக்திபர்யந்தமான பகவத்ஸமாராதநத்துக்கும் ஶுபாஶ்ரயமாகைக்கும் அந்த பரபக்தியுக்தர்க்கு ஸர்வவித போக்யமாகைக்கும் க்ருஷ்ணனாய்வந்து ரக்ஷிக்கும் உன்னுடைய நீர்மையை * யார் நினைக்கவல்லரென்கிறார்.

ஸத்தாதிகள்-குணங்களுடைய ஸத்தாதிப்ரவர்த்திகள்.

இரண்டாம்பாட்டு —ஶுபாஶ்ரயம் - விஷயம்.

ஆறுமாறுமாறுமாயோரைந்துமைந்துமைந்துமாய்
ஏறுசீரிரண்டுமூன்றுமேழுமாறுமெட்டுமாய்
வேறுவேறுஞானமாகிமெய்யினோடுபொய்யுமாய்
ஊறொடோசையாயவைந்துமாயவாயமாயனே. (உ)

ப-ரை.—ஆறும் - அத்யயநாதிஷட்கர்மங்களாறும், ஆறும் - வஸந்தாதிருதுக்களாறும், ஆறுமாய் - ஆக்நேயம்முதலான யாகங்களாறுமாய், ஓரைந்து - பஞ்சமஹாயஜ்ஞத்துக்கும், ஐந்தும் - பஞ்சாஹுதிக்கும் ஆராத்யனாய், ஐந்துமாய் - பஞ்சாக்நிக்கு அந்தராத்மாவுமாய், ஏறு - ச்லாக்யமான, சீர்இரண்டும்-உபாஸநரூப பகவத்ஜ்ஞாநமும் இதரவிஷயவைராக்யமுமாகிற இரண்டு குணங்களும்,மூன்றும்-ஐச்வர்ய கைவல்ய பகவத்ப்ராப்திகள்மூன்றும்,ஏழும்-விவேகவிமோகம் முதலான ஏழுகர்மங்களும், ஆறும் - ஜ்ஞாநபலைச்வர்யம் முதலான ஆறும், எட்டுமாய் - அபஹதபாப்மத்வாதி எண்குணங்களுமாய், வேறுவேறுஞாநமாகி - நிர்மலாந்தகரணரல்லாத பாக்யஹீநர்க்கும் பாஹ்யகுத்ருஷ்டிஸ்ம்ருதிகளுக்கும் பரவர்த்தகனாய், மெய்யுமாய் - முமுக்ஷுக்களுக்கு மெய்யனாய், பொய்யுமாய் - ப்ரயோஜநாந்தரபரர்க்கு க்ஷுத்ரப்ரயோஜநங்களைக்கொடுத்துத் தான் அகலநிற்கையாலே பொய்யனாய், ஊறொடோசையாய வைந்துமாய - சப்தஸ்பர்சரூபரஸகந்தங்களைந்துமாய், ஆயன் - கோபஸஜாதியனாய் வந்து திருவவதரித்த, மாயனே - ஆச்சர்யபூதனே !, உன்னை உள்ளபடி பரிச்சேதித்தறிய வல்லாரொன்கிறார்.

வ்யா.—(ஆறுமாறுமாறுமாய்) அத்யயநாதி ஷட்கர்மங்களும், அத்யயநத்தால் ஜ்ஞாதவ்யமான கர்மாநுஷ்டாநத்துக்கு யோக்யமான வஸந்தாதிருதுக்களாறும், அநுஷ்டேயமான ஆக்நேயாதிஷட்யாகங்களும். இது ஸர்வகர்மங்களுக்கு முபலக்ஷணம். இவை ஆறு என்றது - இவற்றோடே ஈச்வரனை ஸமாநாதிகரித்தது. அத்யயநாதிகளிலே, "ददामि बुद्धियोगं तम्" "ததாமிபுத்தியோகந்தம்" என்கிறபடியே - சேதநனைமூட்டியும் அவற்றுக் கேகாந்தங்களான காலங்களுக்கு நிர்வாஹகனாயும், அநுஷ்டேய கர்மங்களுக்கு ஆராத்யனாயு மிருக்கையாலே ஸமாநாதிகரித்துச் சொல்லுகிறது. (ஓரைந்து மைந்துமைந்துமாய்) கீழ்ச்சொன்ன கர்மத்துக்கு அதிகாரஸம்பத்துக்குடலாய், ப்ரதாநமான பஞ்சமஹாயஜ்ஞத்துக்கும், பஞ்சாஹுதிக்கும் ஆராத்யனாய், பஞ்சாக்நிக்கு அந்தராத்மாவாயுமிருக்குமவன். பஞ்சமஹாயஜ்ஞமாவது - "देवयज्ञः पितृयज्ञो भूतयज्ञो मनुष्ययज्ञो ब्रह्मयज्ञः" "தேவயஜ்ஞோ பித்ருயஜ்ஞோ பூதயஜ்ஞோ மநுஷ்யயஜ்ஞோ ப்ரஹ்மயஜ்ஞ:" என்கிறவை. பஞ்சாஹுதிகளாவன - ப்ராணாஹுதிகள். பஞ்சாக்நிகளாவன - கார்ஹபத்யாஹவநீயதக்ஷிணாக்நிகளும் ஸப்யாவஸத்யங்களும். (ஏறுசீரிரண்டும்) "धर्मेण पापमपनुदति" "தர்மேணபாபமபநுததி" என்னும்படியே-விஹிதகர்மாநுஷ்டாநத்தாலே மோக்ஷவிரோதிபாபம்போனால்

அத்யயநாதிஷட்கர்மங்கள் - அத்யயந அத்யாபந யஜந யாஜந தாந ப்ரதிக்ரஹங்களாகிற ஆறு கர்மங்கள். ... ... உ

இவன்பக்கலிலே [பிறக்கும்] உபாஸநரூப பகவத்ஜ்ஞாநமும் தத் கார்யமான இதர விஷயவைராக்யமு மென்கிற இரண்டு குணமும். * மாற்பால் மனஞ்சுழிக்கையும், மங்கையர்தோள் கைவிடுகையும். (மூன்றும்) உபாஸநபலமான ஐஸ்வர்ய கைவல்ய பகவத் ப்ராப்தி கள். அன்றிக்கே, ஜ்ஞாநவைராக்ய ஸாத்யமான பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் மூன்றும். (ஏழும்) உக்தமானகர்மயோகாதி பரபக்தி பர்யந்தமான அளவுகளை பலிக்கக்கடவ மநோநைர்மல்யத்துக் கடி யான விவேகாதி ஸப்தகமும். அதாகிறது - விவேக விமோகாப்யா ஸக்ர்யாகல்யாண நவஸாதாநுத் தர்ஷங்கள். அதாகிறது – மநோ நைர்மல்ய ஹேதுவான விவேகாதி நியமஸப்தகயுக்தமாகிய க்ரியா ரூப்த வாச்யமான விஹித கர்மாநுஷ்டாநத்தாலே உபாஸநநிஷ் பத்தியைச் சொல்லுகிறது. (ஆறும்) உக்தபக்தி வர்த்தகமாய் ஸ்வ யம் ப்ராப்யமான ஜ்ஞாந பலைஸ்வர்ய வீர்யஶக்தி தேஜஸ்ஸுக்களா றும். (எட்டுமாய்) * அபஹத பாப்மத்வாதி குணாஷ்டகமுமாய் "స్వేనరూపేణాభినిష్పద్యతే" "ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்கிற படியே இது ப்ராப்யாநு தர்க்கதமிறே.

(வேறுவேறுஞாநமாகி) நிர்மலாந்தக்கரணரல்லாதபாக்யஹீநர்க் கும் பாஹ்யகுத்ர்ஷ்டி ஸ்ம்ர்திகளுக்கும் ப்ரவர்த்தகனும். (மெய்யி னோடுபொய்யுமாய்) கீழ்ச்சொன்ன முமுக்ஷுக்களுக்கு மெய்யனும். ப்ரயோஜநாந்தரபரரான க்ஷுத்ரர்க்கு ப்ரயோஜநங்களைக்கொடுத்து தான் அகல நிற்கையாலே பொய்யனும். (ஊறொடோசையாய வை ந்துமாய) பரமபக்தி யுக்தராயிருப்பார்க்கு ஸர்வவித போக்யமான வன். "ஊறொடோசை" என்று - ரூப்தாதிகளைந்துக்கும் உபலக்ஷ ணம். "உண்ணுஞ்சோறு பருகுநீர்" என்றும், "சேலேய் கண்ணி யரும் பெருஞ்செல்வமும்" என்னக்கடவதிறே. (ஆயமாயனே) கோபஸஜாதீயனுயவதரித்த ஆஸ்சர்யபூதனே. அதாவது - தான் நின்ற நிலையிலேநின்று ஆஸ்ரிதர்க்கு உபகரிக்கையன்றிக்கே, திவ்ய மங்களவிக்ரஹத்தை ஸம்ஸாரிஸஜாதீயமாக்கிவந்தவதரித்து, உபா ஸகர்க்கு ரூபாஸ்ரயமாய் ஸித்தோபாய பரிக்ரஹம் பண்ணினார்க்கு விஷயாந்தரங்களில் நின்றும்மீட்டு, தானே போக்யமுமாய், * காண வாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்திருக்கும் பரமபக்தி யுக்தர்க்கு ஸர்வவித போக்யமுமானவனென்கை. அவதாரந்தான் * ஸாதுபரித்ராணத்துக்கும் தர்மஸம்ஸ்தாபநத்துக்கு மாகவிறே.உ

அ.—மூன்றாம்பாட்டு. முதற்பாட்டிற் சொன்ன ஜகத்காரண த்வப்ரயுக்தமான லீலாவிபூதியோகமென்ன, இரண்டாம்பாட்டிற் சொன்ன உபாயத்துக்கு பலமான நித்ய விபூதியோகமென்ன, ஆக இந்த உபய விபூதியோகத்தை நிர்ஹேதுக க்ருபையாலே தேவரீர் காட்ட வருத்தமற நான் கண்டாப்போலே வேறு ஸ்வஸாமர்த்யத் தால் காணவல்லாரில்லை யென்கிறார்.

ஐந்துமைந்துமைந்துமாகியல்லவற்றுளாயமாய்
ஐந்துமூன்றுமொன்றுமாகிநின்றவாதிதேவனே!
ஐந்துமைந்துமைந்துமாகியந்தரத்தணைந்துநின்
றைந்துமைந்துமாயநின்னையாவர்காணவல்லரே. (௩)

ப-ரை.—ஐந்தும் - ஆகாசாதிபூதங்களைந்தும், ஐந்தும்-ச்ரோத்ராதிஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், ஐந்துமாகி - வாய்முதலிய கர்மேந்த்ரியங்களைந்துமாகி, ஐந்தும் - ஆகாசாதிபூதங்களைந்துக்கும் காரணமான தந்மாத்ரைகளைந்தும், மூன்றும் - அஹங்காரம் மஹாந் ஸூக்ஷ்மமூலப்ரக்ருதி என்கிற மூன்றும், ஒன்றுமாகி-மநஸ்ஸுமாய், அல்லவற்றுள்-இப்படி இருபத்துநாலாகப் பிரிக்கப்பட்டிருக்கிற ப்ரக்ருதியிலே ஸ்ருஷ்டமான ஜீவாத்மாக்களுக்கு, ஆயமாய்- அந்தர்யாமியாய், நின்ற-இவை யழிந்தகாலத்திலும் ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்டனாய்க் கொண்டுநின்ற, ஆதிதேவனே - காரணபூதனே, ஐந்தும் - அப்ராக்ருதமாய் திவ்ய சக்திமயமான திவ்யவிக்ரஹமும், ஐந்தும் - அதுக்கு இருப்பிடமான ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், ஐந்தும் - கர்மேந்த்ரியங்களைந்துமாகிற இவற்றுக்கு, ஆகி- நிர்வாஹகனாய், ஐந்தும் - சப்தாதிபோக்யங்களைந்தும், ஐந்துமாய - போகஸ்தாநம் போகோபகரணம் வைகுந்தத்தமரர்முனிவர் கூழுமூக்கள் என்கிற ஐந்துசோதியுமாய், அந்தரத்து - பரமபதத்திலே, அணைந்துநின்று - பொருந்திநின்று, நின்னை - உபயவிபூதி யுக்தனா யிருக்கிற வுன்னை, யாவர்காணவல்லரே - ஸ்வஸாமர்த்யத்தாலே காணவல்லாரார்.

வ்யா.—(ஐந்துமைந்துமைந்துமாகி) ஆகாஶாதி பூதங்களைந்தும், ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், வாகாதி கர்மேந்த்ரியங்களைந்துமாகி. (ஐந்துமூன்றும்) ஆகாஶாதிபூதங்களைந்துக்கும் காரணமான தந்மாத்ரைகளைந்தும், ஒன்றுக்கொன்று காரணமான அஹங்காரமென்ன மஹானென்ன ஸூக்ஷ்ம மூலப்ரக்ருதியென்ன இவை மூன்றும். (ஒன்றுமாகி) "மநஏவ" "மநஏவ" என்கிறபடியே- உக்தமான ஸகல பதார்த்தங்களுக்கும் பந்த ஹேதுவாகைக்கும் மோக்ஷ ஹேதுவாகைக்கும் ஹேதுவான மநஸ்ஸுமாய். (அல்லவற்றுளாயமாய்) இப்படி சதுர்விம்ஶதியாக விபக்தமான ப்ரக்ருதியிலே ஸம்ஸ்ருஷ்டரான ஜீவாத்மாக்களுக்கு அந்தர்யாமியாய். (அல்லவற்றுள்) அசித் வ்யாவர்த்தரான சேதநர்பக்கலிலே. (நின்றவாதி தேவனே) ஸ்தூலசிதசித்விஶிஷ்டனாய் நின்றாப்போலே, இவை அழிந்த காலத்திலும், ஸூக்ஷ்ம சிதசித்விஶிஷ்டனாய்க் கொண்டு நின்ற காரணபூதனானவனே. (ஐந்துமைந்துமைந்துமாகி) இதுக்குக்கீழே லீலாவிபூதியோகத்தைக்காட்டித்தந்தபடியைச் சொன்னாராய், மேல் திவ்யமங்கள விக்ரஹத்தையும் நித்யவிபூதியோகத்தையும் காட்டித் தந்தபடியைச் சொல்லுகிறார். அப்ராக்ருதமாய் பஞ்ச ஶக்திமயமான திவ்ய விக்ரஹத்தையும், ததாஶ்ரயமானஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும் கர்மேந்த்ரியங்களைந்து மென்கிற இவற்றுக்கு நிர்வாஹகனாய். இத்தால் - திவ்ய விக்ரஹயோகஞ்சொல்லிற்று.

மூன்றாம்பாட்டு.— பஞ்சஶக்தி - "[illegible]" என்கிறவை.

(அந்தரத்தணைந்துநின்றுஐந்துமைந்துமாய)ஶப்தாதிபோக்யங்களைந்தும்,போகஸ்தாநமென்ன,போகோபகரணமென்ன,"வைகுந்தத்தமரரும்முனிவரும்" என்றஇரண்டுகோடியும்,முக்தரும் என்ற அஞ்சுகோடியுமாய். (அந்தரத் தணைந்துநின்று) "பரமவ்யோமந்" "பரமவ்யோம" என்றும், "பரமாகாஶம்" "பரமாகாஶம்" என்றும் ஶ்ருதி ப்ரஸித்தமான பரமபதத்திலே பொருந்திநின்று. இப்படி உபயவிபூதி யுக்தனான (நின்னையாவர் காணவல்லரே) ஸ்வஸாமர்த்யத்தால் காணவல்லாரார். மநுஷ்யரிற்காட்டில் ஜ்ஞாநாதிகரென்று தேவர்கள் காணவோ; உபயபாவநாநிஷ்டரென்று ப்ரஹ்மாதிகள் காணவோ; ப்ரஹ்மபாவநா நிஷ்டரென்று ஸநகாதிகள் காணவோ. ... ... ந

அ.—நாலாம்பாட்டு. ஜ்ஞாபகமான வேதங்களையும் மந்த்ர ரஹஸ்யங்களையும் தேவரீருண்டாக்கி வைக்கச்செய்தேயும் அவ்வழியாலேயறிந்து உபாஸியாதேயிருக்க,நீயேவந்து என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்த விது என்ன நீர்மை! என்கிறார்.

மூன்றுமுப்பதாறினோடொரைந்துமைந்துமைந்துமாய்
மூன்றுமூர்த்தியாகிமூன்றுமூன்றுமூன்றுமூன்றுமாய்
தோன்றுசோதிமூன்றுமாய்த்துளக்கமில்விளக்கமாய்
ஏன்றெனாவியுள்புகுந்ததென்கொலோவெம்மீசனே. (௪)

ப-ரை.—ஸகலவேதத்துக்குமடியான, மூன்றமுப்பது - ககாராதி ஹகாராந்தமான முப்பத்துமூன்று மெய்யெழுத்துக்களும், ஆறினோடொரைந்துமைந்தும் - பதினாறு உயிரொழுத்துக்களும், இரண்டிலும் - அநுபாத்தமான, ஐந்துமாய் - ளகாரம் முதலான ஐந்தெழுத்துக்களுமாகிய ஐம்பத்துநாலு அக்ஷரங்களுக்கும் நிர்வாஹகனாய், மூன்றுமூர்த்தியாகி - வேதாத்மாவான மூன்றுரூபத்தையு முடையையாய், மூன்று மூன்று மூனறு மூன்றுமாய் - த்ருத்வாதசாக்ஷர ப்ரதிபாத்யனாய், தோன்றுசோதி மூன்றுமாய் - மூன்றக்ஷரங்களாலாகிய ப்ரணவத்தாலே ப்ரதிபாதிக்கப்படுமவனாய், துளக்கமில் - அசைவின்றிக்கேயிருக்கிற, விளக்கமாய - அகாரவாச்யனாய், எம்மீசனே - நீ சேஷி நான்சேஷபூதன் என்கிற ஸம்பந்தத்தை உணர்த்தினவனே!, ஏன்று - என்கார்யத்தை உனக்கு பரமாகவறிட்டுக்கொண்டு, என் ஆவியுள் புகுந்தது - என்மநஸ்ஸிலே புகுந்து எனைனப்ரகாசிப்பித்தது, என் - என்ன நீர்மை!, என்று ஈடுபடுகிறார்.

வ்யா.—(மூன்றுமுப்பதாறினோடொரைந்து மைந்து மைந்துமாய்) ஸகலவேதங்களுக்குமடியான ஐம்பத்துநாலு அக்ஷரத்துக்கும் நிர்வாஹகனாய். (மூன்றுமுப்பது) ககாராதி ஹகாராந்தமான ஹல்லுக்களான முப்பத்துமூன்று அக்ஷரமும். (ஆறினோடொரைந்துமைந்தும்) அச்சுக்களான பதினாறு அக்ஷரமும். (ஐந்துமாய்) இரண்டிலும் அநுபாத்தமான ளகாராதிகள் அஞ்சக்ஷரமும்.

போகோபகரணம் - சத்ரசாமராதிகள். ... ...ந

நாலாம்பாட்டு.—அகாரம்முதலானதுக்கு"அச்சு"என்றுபேர்.

(மூன்றுமூர்த்தியாகி)வேதாத்மாவானமூன்றுருபத்தையுமுடை யனாய்.அக்ஷரங்கள்ஜ்ஞாநஹேதுவாவதுவேதஶரீரமானவிறே.(மூன்றுமூன்று மூன்றுமூன்றுமாய்) அந்த வேததாத்பர்யமான திருத் வாதஶாக்ஷரப்ரதிபாத்யனாய். (தோன்றுசோதிமூன்றுமாய்) மூன்றிலே தோன்றுகிற சோதியாய். "ஓங்காரோ பகவாந் விஷ்ணு:" என்கிறபடியே-அக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவ ப்ரதிபாத்யனாய். (துளக்கமில்விளக்கமாய்) ஸகலவேதகாரண ப்ரணவத்துக்குங் காரணமாய். தனக்கொரு காரணமில்லாமையாலே, சலநமின்றிக்கேயிருக்கிறஅகாரவாச்யனாய்.(ஏன்றெனாவியுள்புகுந்த தென்கொலோ) இவ்வழியாலே நானறிந்து உபாஸிக்கைக்கு விஷயபூதனுகையன்றிக்கே, என்கார்யத்தை உனக்கு பரமாக ஏறிட்டுக் கொண்டு என்மநஸ்ஸிலே புகுந்து என்னை உள்ளபடி ப்ரகாஶிப்பித்த விதுஎன்னநீர்மை. (எம்மீசனே) ப்ரகாஶிப்பித்த ப்ரகாரமென்னென்னில்; நீ ஶேஷியாய் நான்ஶேஷபூதனாயிருக்கிற இம்முறையுணர்த்தினையென்னுதல்; இப்படி எனக்கு ப்ரகாஶிப்பிக்கைக்கடி இழவுபேறுகள் உன்னதாம்படியான ஸம்பந்தத்தை யுடையவனென்னுதல். ௪

அ.—அஞ்சாம்பாட்டு. நம்மை உள்ளபடி அறிவிக்கவற்றான வேதங்களும் மந்த்ரரஹஸ்யங்களுமுண்டாயிருக்க, "யாவர்காணவல்லரோ" என்பானென்னென்னில்; அந்தர்யாமித்வத்தாலும் ஜகதேககாரணத்வத்தாலும் ஸகலாதாரனாயிருக்கிற ஸ்வபாவத்தைத் திரளவறியு மித்தனையொழிய, தேவரீர்காட்ட நான் கண்டாப்போலே ஏவம்விதனென்று ஒருவர்க்கு மறியவொண்ணாதென்கிறார்.

நின்றியங்குமொன்றிலாவுருக்கடோறுமாவியாய்
ஒன்றியுள்கலந்துநின்றநின்னதன்மையின்னதென்
றென்றும்யார்க்குமெண்ணிறந்தவாதியாய்!நின்னுந்திவாய்
அன்றுநான்முகற்பயந்தவாதிதேவனல்லையே. (௫)

ப-ரை.—நின்று-ஸ்தாவரமாய்நின்றும், இயங்கும்-ஜங்கமமாய்ஸஞ்சரித்தும், ஒன்றிலா - உஜ்ஜீவநப்ரகாரங்களில் ஒன்றுக்கும் உறுப்பன்றிக்கேயிருக்கிற, உருக்கள்தோறும் - ஸகலசரீரங்கள்தோறும்,ஆவியாய் - ஆத்மாவாய், ஒன்றி- எதிர்த்தலையில் ஹேயதையைப்பாராதே பொருந்தி, உள்கலந்துநின்ற - ஏகதத்வமென்னும்படி கலந்துநின்ற, நின்னதன்மை - உன்னுடையஸ்வபாவம், இன்னதென்று-இப்படிப்பட்டதென்று, என்றும் - நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும், யார்க்கும் - பேரளவுடையாரான ப்ரஹ்மாதிகளுக்கும், எண் இறந்த-

வேதாத்மாவான - வேதஶரீரமான. மூன்று ரூபமாவது - கீழ் "ஹல்" என்றும், "அச்சு" என்றும் இரண்டு மன்றியிலே யிருக்கிற ளகாராதியுமாகிற மூன்று ரூபத்தையு மென்றபடி. அக்ஷரங்கள் வேதஶரீரமாக வேண்டுவானென்னென்ன ; அருளிச்செய்கிறார் (அக்ஷரங்களித்யாதி.) ௪

மநஸ்ஸால் நினைக்கைக்குமெட்டாத, ஆதியாய் - ப்ரதாநனானவனே, அன்ற-தேவாதி ஸகலபதார்த்தங்களும் அழிந்துகிடந்தவன்று, நின்உந்திவாய்-உன்னுடைய திருநாபீகமலத்திலே, நான்முகன்பயந்த - ப்ரஹ்மாவை ஸ்ர்ஷ்டித்த, ஆதிதேவனல்லேயே-ஜகதேககாரணனல்லேயோ, உன் ஸ்வரூபத்தை உள்ளபடி காணவல்லாரார்.

வ்யா.—(நின்றியங்குமொன்றிலா வுருக்கள்தோறும்) ஸ்தாவர ஜங்கமாத்மகமாய், தந்தாமுடைய உஜ்ஜீவநப்ரகாரங்களில் ஒன்றுக்கு முறுப்பன்றிக்கேயிருக்கிற ஸகல ஶரீரங்கள்தோறும். ஒருபடிப்பட்டிராத ஶரீரங்களென்றுமாம். (ஆவியாயொன்றியுள்கலந்துநின்ற)ஆத்மாவாய்,எதிர்த்தலையில் ஹேயதையைப் பாராதேபொருந்தி, ஸமாப்ய-உள்புகுந்து,ஏகத்ரவ்யமென்னும்படிகலந்துநிற்கிற. (நின்னதன்மை)உன்னுடைய ஸ்வபாவம். அதாகிறது-தத்கததோஷங்கள்தட்டாதேநிற்கையும், விபுவானதான்இவற்றிலேஸமாப்யவ்யாபிக்கையுமாகிறஇவ்வாஶ்சர்யம்.(இன்னதென்று)ஏவம்விதமென்று. த்ர்ஷ்டாந்தமுகத்தாலே உபபந்நமென்று. (என்றும்யார்க்கும்)வர்த்தமாநகாலத்தோடுபவிஷ்யத்காலத்தோடுவாசியறஅதிஶயிதஜ்ஞாநராணப்ரஹ்மாதிகளுக்கும்.(எண்ணிறந்த)மநோரதத்துக்கும்அவ்வருகாய்நின்ற. (ஆதியாய்) ப்ரதீதிவ்யவஹாரங்களிலேவந்தால் ப்ரதாநனானவனே. ஸாக்ஷாத்கரிக்கும்போது, "நிற்கின்றதெல்லாம்நெடுமால்" என்கிறபடியேவிஶேஷ்யமானதேவரீர்ப்ரதாநராய்சேதநாசேதநங்கள் விஶேஷணமாத்ரமாயிருக்கையும், வ்யவஹாரத்தில்வந்தால் "[Telugu-script quotation]" "வசஸாம்வாச்யமுத்தமம்" என்கிறபடியே ஶப்தவாச்யங்களில் ப்ரதாநனாய் நிற்கையும். (நின்னுந்திவாயன்று நான்முகற்பயந்த வாதிதேவனல்லையே)இதுகிடக்க,ஜகதேககாரணனாய் நிற்கிறநிலைதான் ஒருவர்க்குமறிய நிலமோ. * ஒன்றுந்தேவில் படியே தேவாதி ஸகலபதார்த்தங்களும் அழிந்துகிடந்தவன்று உன்னுடைய திருநாபீகமலத்திலே, "[Telugu-script quotation]" "யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்" என்கிறபடியே ப்ரஹ்மாவை ஸ்ர்ஷ்டித்த ஜகதேககாரணனல்லையோ. திருநாபீகமலோத்பத்தியைப்பார்த்தால் ப்ராக்ர்தமென்னவொண்ணாது, க்ஷேத்ரஜ்ஞனான ப்ரஹ்மாவுக்கு உத்பாதகமாகையாலே அப்ராக்ர்தமென்னவொண்ணாது, இவ்வாஶ்சர்யத்தை ஏவம்விதமென்று, கர்மவஶ்யராய் பரிமிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளறியவோ. ௫

அஞ்சாம்பாட்டு.—ஸமாப்ய-விபுவானஸ்வரூபமெல்லாவற்றோடும் வ்யாபிக்கை. உபபந்நமாகாதிருக்கைபூரிப்பது .சொல்லக்கூடாதிருக்கையென்றபடி. ப்ரதீதி வ்யவஹாரங்களேதென்ன; அருளிச்செய்கிறார் (ஸாக்ஷாத் இத்யாதி.) இப்பாட்டுக்கு "யாவர்காணவல்லர்" என்று கீழ்ப்பாட்டோடே க்ரியை. ௫

அ.—ஆறும்பாட்டு. ஸகலாந்தர்யாமித்வத்தால் வந்த ஸகலாதாரத்வம் சொல்லிற்றாய் நின்றது-கீழ்; லோகத்திலே யொன்றுக்கொன்று தாரகமாயும் தார்யமாயும் போருகிற தில்லையோவென்று பகவதபிப்ராயமாக; அந்த பதார்த்தங்களுக்கும் தேவரீரோ தாரகமென்று வேதாந்த ப்ரஸித்தமான இவ்வர்த்தம் தேவரீர் பக்கலிலே வ்யவஸ்திதமன்றோ, இஸ்ஸர்வாதாரத்வமும் ஸ்வஸாமர்த்யத்தாலே வேறொருவர்க்கும் காணமுடியாதென்கிறார்.

நாகமேந்துமேருவெற்பைநாகமேந்துமண்ணினை
நாகமேந்துமாகமாகமாகமேந்துவார்புனல்
மாகமேந்துமங்குல்தீயோர்வாயுவைந்தமைந்துகாத்
தேகமேந்திநின்றநீர்மைநின்கணேயியன்றதே. (௬)

இருபதாம்பாட்டு. ஆமையாயிருக்கச்செய்தேயும், "கேசவா" என்கையாலே - மேன்மைக்கெல்லை நிலமென்கிறது. மாசுணம்-பெரும்பாம்பு. பேசநின்ற - ப்ரஶம்ஸாபரமாகப் பேசநின்ற. கடல்வருணனுக்கு இருப்பிடமாகையாலே அவனுடைய ஆயுதத்தை யுடைத்தாயிருக்கை. பாசம் - ஆயுதம். ப்ரஹ்மாதிகள் ஸ்தோத்ரம் பண்ணக்கிடக்கிற மேன்மையிலே அசேதநமான ஸமுத்ரகோஷத்தைக் கேட்டுக்கொண்டு கிடக்கையாலே நீர்மை ப்ரகாசிக்கிறது. (௨0)

அரங்கனேதரங்கநீர்கலங்கவன்றுகுன்றுசூழ்
மரங்கள்தேயமாநிலங்குலுங்கமாசுணஞ்சுலாய்
நெருங்கநீகடைந்தபோதுநின்றசூரரென்செய்தார்
குரங்கையாளுகந்தவெந்தைகூறுதேறவேறிதே. (உக)

ப-ரை.—அன்று - துர்வாஸச்சாபத்தாலே தேவதைகள் வெறுமியரான வன்று, தரங்கம் - திரைக்கிளர்த்தியை யுடைத்தான, நீர் - கடலானது, கலங்க - குளப்படிபோலே கலங்கும்படியாகவும், குன்றுசூழ் - மந்தரபர்வதத்தைச்சூழ்ந்த, மரங்கள் - மரங்களானவை, தேய - வாஸுகி யுடல்பட்டுத்தேயவும், ஸமுத்ரகோஷத்தாலே, மாநிலம் - புஷ்கரத்வீபங்களாகிற மஹாப்ருதிவிகள், குலுங்க - அசையவும், மாசுணம் - வாஸுகியை, நெருங்கச்சுலாய் - நெருங்கச்சுற்றி, நீகடைந்தபோது - தேவரீர் கடைந்தருளினபோது, நின்றசூரர் - அதிபலபராக்ரமராய் நின்றதேவாகளும் அஸுரர்களும், என்செய்தார் - செய்ததென்; குரங்கை - சிறியதிருவடியை, ஆள் உகந்த - அடிமைகொண்டு உகந்தருளின, எந்தை - என்ஸ்வாமியாய், அரங்கனே - கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறதேவரீர், இது-இத்தை, வேறு - விசேஷித்து, தேற - தெரியும்படி, கூறு- அருளிச்செய்யவேணும். (உக)

வ்யா.—(அரங்கனே) என்கிற விது விஶேஷ்யமாகையால் க்ரியையோடே அந்வயிக்கக்கடவது. (தரங்கநீர்கலங்க) "అప్రమేయం మహోదధిః" "அப்ரமேயமஹோததி." என்கிறபடியே-அத்யகாதமான கடலாகையாலே தன்னையநுபவிக்க விழுந்தாரைக் கரையிலே யேறிட வல்ல திரைக்கிளர்த்தியையுடைத்தானகடல் குளப்படிபோலே கலங்க. (அன்று) ஸகலதேவதைகளும் துர்வாஸஶ்ஶாபத்தாலே நஷ்டஸ்ரீகராய்த் தங்க ளைச்வர்யத்துக்கு தேவரீர் கைபார்த்து நின்ற வன்று. (குன்றுசூழ்மரங்கள்தேய) மந்தரத்தைச்சூழ்ந்த மரங்கள் வாஸுகியுடல் பட்டுத்தேய. (மாநிலங் குலுங்க) ஸமுத்ர கோஷத்தினுடைய அதிசயத்தாலே அத்தோடேசேர்ந்த புஷ்கரத்வீபங்களாகிற மஹாப்ருதிவி குலுங்க. (மாசுணம் சுலாய்நெருங்க) (நெருங்க - மாசுணம்சுலாய்) வாஸுகியை நெருகச்சுற்றி. சுலாய் - சுலாவி - சுற்றியென்றபடி. ஸ்வதேஜஸ்ஸாலே உபப்ருஹ்மிதமானபடியாலே கூசாதே மந்தரத்திலே வாஸுகியை நெருங்கச்சுற்றி. ''మన్దరాద్రేరధిష్ఠానం మత్తేభూత్'' "மந்தராத்ரேரதிஷ்டானம் மதநேபூத்" என்று மந்தரத்துக்கு அதிஷ்டானமும் தானேயென்றும், "తేజసా నాగరాజానం తథాప్యాయితవాన్ ప్రభుః" "தேஜஸா நாகராஜானம் ததாப்யாயிதவாந்ப்ரபு:" என்று வாஸுகிக்கு பலகரனும் தானேயென்றும் சொல்லக்கடவதிறே. (நீகடைந்தபோது) "త్వో మథితుమారేభ్య" "ததோமதிதுமாரப்ய" என்று - தேவர்களுக்கு ஆரம்பமாத்ரமேயாய், "ஆயிரந்தோளா லலைகடல்கடைந்தான்" என்கிறபடியே அக்கடலை தேவரீரேகடைந்தபோது.

இருபத்தோராம்பாட்டு. ஸர்வஸாதாரணம் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கு மொத்திருக்க நெருங்கக்கட்டிக்கடைகைக்கு வாஸுகிக்கு சக்தியுண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (ஸ்வதேஜஸ்ஸாலே யித்யாதி.) உபப்ர்ம்ஹிதம் - பெருக்கப்படுகை.

(நின்றசூரனென்செய்தார்) அதிபலபராக்ரமரான தேவர்களும் அஸுரர்களும் செய்ததென். அம்ர்தமதநஸாமர்த்யத்தை தேவர்களபக்கலிலே யேறிட்டு கொண்டாடுகைக்கு அவர்கள்செய்த கார்யமென். கூர்மரூபியாய் மந்தராத்ரிக்கு அதிஷ்டாநமானார்களோ; "𑌉𑌪𑌰𑍍𑌯𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌶𑍈𑌲𑌂 𑌬𑍃𑌹𑌦𑍍𑌰𑍂𑌪𑍇𑌣 𑌕𑍇𑌶𑌵𑌃" "உபர்யாக்ராந்தவாச்சைலம் ப்ர்ஹத்ரூபேணகேஶவ:" என்று மந்தரம்சலியாதபடி நோக்கினார்களோ; தேஜஸ்ஸாலேவாஸுகிக்கு பலகரரானார்களோ; பலபோக்தாக்களாய் நின்ற விதுஹேதுவாக அவர்களையே கர்த்தாக்களுமாக்கினவித்தனையன்றோ. "𑌦𑍇𑌵𑌦𑌾𑌨𑌵𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌮𑍃𑌤𑌮𑌨𑍍𑌥𑌨𑍇" "தேவதாநவயத்நேநப்ரஸூதாம்ர்தமந்தநே" என்று-அம்ர்தமதநவ்யாபாரம் அஸுரர்களுக்கு மொத்திருக்க அவர்களைக்லேஶபாகிகளாக்கி தேவர்களை அம்ர்தபாகிகளாக்கின விதுவும் அதுக்குமேலேயொருபக்ஷபாதமிறே. ப்ரயோஜநாந்தர பரரொன்று பாராதே தேவர்கள்பக்கல் பக்ஷபாதத்துக்கடி, "𑌶𑌰𑌣𑌂 𑌤𑍍𑌵𑌾𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌃" "ஶரணம்த்வாமநுப்ராப்தா:" என்று சரணமென்ற வதிலேயிறே. (குரங்கையாளுகந்தவெந்தை) கீழ்ச்சொன்ன பக்ஷபாதத்துக்குத்ர்ஷ்டாந்தம் சொல்லுகிறது. ராவணனை தேவரீரே யழியச்செய்து, ப்ரதிபக்ஷத்தை வென்று தந்தார்களாக ஸ்ரீவாநரவீரர்களை ஆதரித்தாப் போலே, "எந்தை" என்று - நித்யஸூரிகளை அடிமைகொள்ளு மேற்றத்தை யுடையனுய்வைத்து, "திர்யக்குக்கள்" என்று இகழாதே அடிமைகொண்ட வித்தைத் தன்பேறுகநினைத் திருக்கையாலே என்னுதனே யென்கிறார். (அரங்கனே - கூறுதேறவேறிதே) "ஈஶ்வரன் ஒருவனுளன்" என்று அறியாத ஸம்ஸாரத்திலே இவ்வாஶ்ரித பக்ஷபாதத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக அர்த்தியாய் வந்துகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற தேவரீர் இத்தைவிஶேஷித்துத் தெரியவருளிச் செய்யவேணும். கீழ் - வ்யூஹத்திலும் விபவத்திலும் சொன்னபக்ஷபாதங்கள்காணலாவது பெரியபெருமாள் பக்கலிலே யென்றுகருத்து. ... ... (உக)

அ.—இருபத்திரண்டாம் பாட்டு. ப்ரளயாபத்திலே வரையாதே யெல்லாரையும், வடதளஶாயியாய், ஸர்வஶக்தித்வந்தோற்றச் சிறிய திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்ததேவரீருக்கு "ஆச்ரிதவிஷயத்தில் வத்ஸலர்" என்னுமிது ஓரேற்றமோ வென்கிறார்.

பண்டுமின்றுமேலுமாயோர்பாலனாகிஞாலமேழும்
உண்டுமண்டியாலிலைத்துயின்றவாதிதேவனே!
வண்டுகிண்டுதண்டுழாயலங்கலாய்! கலந்தசீர்ப்
புண்டரீகப்பாவைசேருமார்ப! பூமிநாதனே! (உஉ)

நின்றசூரர் - பராக்ரமமாதல்; சூரராதல். அதுக்குமேலே - தான்கடைந்து அவர்கள்மேலே ஏறிட்டதுக்குமேலே. (உக)

ப-ரை.—பண்டுமாய் - ஸ்ருஷ்டிக்கு முன்பு அசித்தாய்க்கிடந்த ஸகலபதார்த்தங்களையும் தன்மேலே யேறிட்டுக்கொண்டு நோக்கியும், இன்றுமாய் - ஸ்ருஷ்டிவேளையில் கர்மாநுரூபமாக ஸ்ருஷ்டித்து-ததநுரூபமாக ரக்ஷித்தும், மேலுமாய் - ப்ரளயங்கொள்ளுமளவில், ஓர் அத்விதீயமான, பாலனாகி - முக்தச்சிசுவாய், ஞாலமேழும் - ஸகலலோகங்களையும், மண்டி - தன்பேறாகவிரும்பி, உண்டு - அமுதுசெய்து, ஆலிலை - ஓராலந்தளிரிலே, துயின்ற - கண்வளர்ந்தருளின, ஆதிதேவனே - ஜகத்காரணபூதனாய், வண்டு-வண்டுகளானவை, கிண்டு-கிளராநின்றுள்ள, தண்-குளிர்ந்த, துழாயலங்கலாய் - திருத்துழாய்மாலையையுடையனாய், கலந்த - நித்யஸம்ச்லேஷஸ்வபாவையாய், சீர் - ச்லாக்யமான, புண்டரீகம் - தாமரைப்பூவை ஜந்மபூமியாக வுடையளாய், பாவை - நிருபாதிகஸ்த்ரீத்வத்தை யுடையளான பெரியபிராட்டியார், சேரும் - நித்யவாஸம் பண்ணுகிற, மார்ப - திருமார்பையுடையனாய், பூமி - ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு, நாதனே - நாதனானவன், ப்ரளயத்தில் ஒருவரில்லாதாரைப் போலே தனியே கண்வளர்ந்தருளாநின்றானென்கிறார். (௨௨)

வ்யா.— (பண்டுமின்று மேலுமாய்) "பண்டு" என்கிறது-ஸ்ருஷ்டேஃபூர்வகாலத்தை; "இன்று" என்கிறது - ஸ்ருஷ்டிகாலத்தை; "மேல்" என்கிறது - ப்ரளயவேளையை. "𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍" "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்கிறபடியே நாமரூபங்களை இழந்து அசிதவிசேஷிதமாய் சோச்யதசாபந்நமான ஸகல பதார்த்தங்களையும், "𑌤𑌮𑌃-𑌏𑌕𑍀𑌭𑌵𑌤𑌿" "தம:ஏகீபவதி" என்கிறபடியே தன் பக்கலிலேயிட்டு நோக்கியும்; ஸ்ருஷ்டிவேளையில் கர்மாநுரூபமாக ஸ்ருஷ்டித்து ததநுரூபமாக ரக்ஷித்தும் ப்ரளயங்கொள்ளுமளவில் வயிற்றிலே வைத்து நோக்கியும் போருமவனாகையாலே. "ஆய்" என்றது-ஆகையாலே யென்று ஹேதுகர்ப்பமாய்க்கிடக்கிறது. (ஓர் பாலனாகி) அத்விதீயமான முக்தஶிஶுவாய். (ஞாலமேழுமுண்டுமண்டி) ஸகலலோகங்களையும் தன்பேறாகவிரும்பி யமுதுசெய்து சிறியவயிற்றிலே ஸகலலோகங்களையு மடக்கின அகடிதகடநாஸாமர்த்யத்தால் தேவரீருடைய ஐஶ்வர்யமான ஶக்தியை ப்ரகாஶிப்பித்தபடியிறேயிது. (ஆலிலைத்துயின்ற வாதிதேவனே) ஒருபவனான வாலிலையிலே ஜகத்காரணவஸ்து வென்று தோற்றும்படி கண்வளர்ந்தருளினவனே. (வண்டுகிண்டு தண்டுழாயலங்கலாய்) இப்படிப்ரளயார்ணவத்திலே பரிவரொருவரின்றிக்கே தனியே கண்வளர்ந்தருளுகிறவன் ஸர்வாதிகனென்கிறது இப்பாட்டில் விஶேஷத்வமும். செவ்வியாலே வண்டுகள் புக்குப்பருகும் ஶ்ரமஹரமான திருத்துழாய்மாலையை யுடையவனே. கிண்டல்-கிளர்தலும்,கிழித்தலும். இத்தால்-ஆதிராஜ்யஸூசகமான திருத்துழாய்மாலையையுடையவனென்கை. (கலந்தசீர்ப்புண்டரீகப் பாவைசேருமார்ப) ஸ்வரூபநிரூபக பூதையாகையாலே நித்யஸம்ஶ்லேஷஸ்வபாவையாய், தாமரைப்பூவை ஜந்மபூமியாக வுடையளாய், நிருபாதிகஸ்த்ரீத்வத்தையுடைய பிராட்டி, "அகலகில்லேனிறையும்" என்று அவன் ஆதரிக்கும் திருமார்பையுடையவனே.

(பூமிநாதனே) ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு நாதனானவனே. இத்தால்- "ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ" "ஹ்ரீஸ்சதேலக்ஷ்மீஸ்சபத்ந்யௌ" என்கிறபடியே ஸ்ரீபூமிஸஹிதனான ஏற்றத்தையுடையவனென்கை. இப்படி ஸர்வாதிகன் இவர் ப்ரளயார்ணவத்திலே ஒருவரில்லாதாரைப் போலே தனியே கண்வளர்ந்தருளுகிறானென்கை. ... (௨௨)

அ.—இருபத்து மூன்றாம்பாட்டு. ப்ரளயாபத்ஸகனுகைக்கு வடதளஸாயியான அகடிதகடநா ஸாமர்த்யத்யதனை வன்றியே தேவரீருடைய அஸாதாரண விக்ரஹத்தை, "நராஸ்யார்த்ததநும் க்ருத்வா ஸிம்ஹஸ்யார்த்ததநும் ததா" "நரஸ்யார்த்ததநும் க்ர்த்வா ஸிம்ஹஸ்யார்த்ததநுந்ததா" என்கிறபடியே ஏகதேஸத்தை மநுஷ்யஜாதீயமாக்கியும் ஏகதேஸத்தை திர்யக்ஜாதீயமாக்கியும் இப்படி யோநித்வயத்தை ஏகவிக்ரஹமாக்கி, அர்த்தித்வ நிரபேக்ஷமாக பிதாவாலே புத்ரனுக்குப்பிறந்த ஆபத்தை தேவர்பொறுக்க மாட்டாமையாலே தூணிலே தோற்றின அகடிதகடநாஸாமர்த்யத்தை அநுஸந்தித்து இத்தை யாவர் பரிச்சேதித்து அறியவல்லாரென்கிறார்.

வாணிறத்தொர்சீயமாய்வளைந்தவாளெயிற்றவன்
ஊனிறத்துகிர்த்தலமழுத்தினாயுலாயசீர்
நானிறத்தவேதநாவர்நல்லயோகினால்வணங்கு
பாணிறக்கடற்கிடந்தபற்பநாபனல்லையே. (௨௩)

ப-ரை.—வால்நிறத்து - வெளுத்தநிறத்தையுடைத்தாய், ஓர் - அத்விதீயமான, சீயமாய் - நாஸிம்ஹாவதாரஞ்செய்தருளி, வளைந்த - வளைந்து, வாள்- ஒளியையுடைத்தான, எயிற்றவன் - பற்களையுடைய ஹிரண்யனது, ஊன் நிறத்து - சரீரத்தில் மார்பிலே, உகிர்த்தலம் - திருவுகிரை, அழுத்தினாய் - அழுத்தினவனே, உலாய - ஸர்வலோகப்ரஸித்தமான, சீர் - ப்ராமாண்யத்தையுடைத்தாய், நால்நிறத்த - உதாத்தாநுதாத்தஸ்வரித ப்ரசயரூபமான நாலுவகைப்பட்ட ஸ்வரத்தையுடைய, வேதம் - வேதத்தை, நாவர் - நாவிலேயுடைய வைதிகர், நல்லயோகினால் - பக்தியோகத்தாலே, வணங்கு - ஆச்ரயிக்கிற, பால்நிறக்கடல் - க்ஷீராப்தியிலே, கிடந்த - கண்வளர்ந்தருளின, பற்பநாபனல்லையே- பத்மநாபனன்றோ வென்கிறார். (௨௩)

வ்யா.—(வாணிறத்தொர் சீயமாய்) புருஷோத்தமன் தன்னை அழியமாறி ஸிம்ஹஜாதீயனுைப்போலே ஸ்வாபாவிகமான நிறத்தையும் மாறுவதேயென்கிறார். வால்நிறம் - வெளுத்தநிறம். (ஓர் சீயமாய்) "பஹுதா விஜாயதே" "பஹுதாவிஜாயதே" என்றும், "பஹூநி" "பஹூநி" என்றும் சொல்லுகிற அஸங்க்யாதமான அவதாரங்களிலே இங்ஙனிருப்பதொன்றில்லாமையாலே அத்விதீயமென்கிறார். "அழகியான்றானே" என்கிறபடியே போக்யதையில் அத்விதீயத்வத்தைச் சொல்லவுமாம். சீயம் - சிங்கம். (வளைந்தவாளெயிற்றவன்) வளைந்து ஒளியையுடைத்தான எயிற்றையுடைய ஹிரண்யன்.

இத்தால் - வரபலத்திலே அந்தர்ப்பவியாத ஆஸுரமான புஜ பலத்தைச் சொன்னபடி. (ஊன்நிறத்து உகிர்த்தலமழுத்தினாய்) ஶரீரத்தில்மர்மத்திலே திருவுகிரை அழுத்தினவனே. "உகிர்த்தலமழுத்தினாய்" என்று - அவன்வரத்திலே அந்தர்ப்பவியாத வதஸாதநத்தாலே அநாயாஸேந அழித்தபடி சொல்லிற்றாகிறது. (உலாயசீர் நால்நிறத்த வேதநாவர்) ஸர்வலோக ப்ரஸித்தமான ப்ராமாண்யத்தையுடைத்தாய், உதாத்தாநுதாத்த ஸ்வரிதப்ரசயரூபமான நாலுவகைப்பட்ட ஸ்வரத்தையுடைய வேதத்தை நாவிலே யுடையவர்கள். நிறம்-மேனி. இத்தால் - அநுமாநாதிகளாலே தத்வஹிதங்களை நிர்ணயிக்குமவர்கள். அன்றியே, வைதிகர் ஆஶ்ரயிக்குமவனென்கை. (நல்லயோகினால் வணங்கு) பக்தியோகத்தாலே ஆச்ரயிக்குமவர்களென்னுதல்; விலக்ஷணமான ப்ரபத்தியாலே ஆஶ்ரயிக்குமவர்களென்னுதல். யோகு - யோகம்-உபாயம். (பால்நிறக்கடல் கிடந்த பற்பநாபனல்லையே) தேவரீர் திருமேனிக்கு பரபாகரூபமான நிறத்தை யுடைத்தான கடலிலே ஜகத்துக்கு உத்பாதகனென்று தோற்றும் வடிவோடே கண்வளர்ந்தருளுகிற பற்பநாபனல்லையோ. "நல்லயோகினால்" என்கையாலே - வாக்யார்த்த ஜ்ஞாநமென்ன, கர்மஜ்ஞாந ஸமுச்சயமென்ன, இவற்றைமோக்ஷஸாதநமென்கிற குத்ருஷ்டிகளில் வைதிகருக்குண்டான வ்யாவர்த்தி சொல்லுகிறது. "உலாயசீர்" என்று-அதிகாரிவிசேஷணமாகவுமாம். "உலாயசீர்-பற்பநாபன்" என்று அந்வயிக்கவுமாம். அப்போது, "ஸத்ய:" "விதித:" என்கிறபடியே கல்யாணகுண யுக்தனான ஜநகனென்கிறது. (உங)

அ.—இருபத்துநாலாம்பாட்டு. பரமபாவநனுமாய் நிரதிஶயபோக்யனுமாய், போக்தாக்களைக்காத்தூட்டவல்ல பரிகரத்தையுமுடைய தேவரீர், ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு அநுரூபமாகதிவ்யவிக்ரஹத்தை அழியமாறிவந்து தோற்றின இவ்வேற்றத்தை நித்யஸூரிகளறிதல், பிராட்டியறிதலொழிய வேறறியவல்லாராரொன்று பின்னையும் அந்த நரஸிம்ஹவ்ருத்தாந்தத்திலே ஈடுபடுகிறார்.

கங்கைநீர்பயந்தபாதபங்கயத்தெம்மண்ணலே!
அங்கையாழிசங்குதண்டுவில்லும்வாளுமேந்தினாய்!
சிங்கமாயதேவதேவதேனுலாவுமென்மலர்
மங்கைமன்னிவாழுமார்பவாழிமேனிமாயனே. (உச)

ப-ரை.—கஙகைநீர் - கங்காதீர்த்தத்தை, பயந்த - பெற்ற, பாதபங்கயம்-திருவடித்தாமரைகளையுடைய, எம்மண்ணலே - எனக்குநாதனாய், அங்கை - அழகியதிருக்கைகளிலே, ஆழியும் - திருவாழியையும், சங்கும் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், தண்டு - கௌமோதகியென்னும் கதையையும், வில்லும் - சார்ங்க

இருபத்துமூன்றாம்பாட்டு. சீர் - ப்ராமாண்யஸ்ரீ. மேனி - ஸ்வரம். "ஸத்யம்" "தத்த்வமஸி" என்கிற வாக்கியார்த்த ஜ்ஞாநம். அந்தர்குளகமாய் மேலேக்ரியை. (உங)

மென்னும் திருவில்லையும், வாளும் - நந்தகமென்னும்வாளையும், ஏந்தினாய்- தரித்தருளினவனாய், சிங்கமாய - ந்ருஸிம்ஹாவதாரஞ்செய்தருளி ஹிரண்யனை நிரஸிக்கையாலே, தேவதேவ - நித்யஸூரிகளை யெழுதிக்கொண்டவனாய், தேன் உலாவு - மதுவெள்ளமிடாநின்றதாய், மெல் - ம்ருதுவான, மலர் - தாமரைமலரைப் பிறப்பகமாகவுடைய, மங்கை - நவயௌவநஸ்வபாவையான பெரியபிராட்டியார், மன்னிவாழும் - நித்யவாஸம்பண்ணுகிற, மார்ப - திருமார்பையுடையனாய், ஆழி - கடல்போலே ச்ரமஹரமான, மேனி - திருமேனியையுடைய, மாயனே - ஆச்சர்யபூதனே. (௨௪)

வ்யா.—(கங்கைநீர்பயந்தபாத பங்கயத்தெம்மண்ணலே) குருபாதகனை ருத்ரனுக்கும் சுத்தியைப்பிறப்பிக்கும் அக்கங்கைக்கும் உத்பாதகனாய், முமுக்ஷுக்களுக்கு நிரதிசயபோக்யமான திருவடிகளையுடையவென்னாதனே.*அபராதாநாமாலயரான ஸம்ஸாரிகளுக்குப்பாவநமாய், * அஸ்ப்ருஷ்டஸம்ஸாரதோஷரான நித்யர்க்கும் முக்தர்க்கும் நிரதிசயபோக்யமான திருவடிகளையுடையவனென்கை. இப்போது "அண்ணல்" என்று-இவ்வர்த்தைத்தமக்கு நிர்ஹேதுகமாக ப்ரகாசிப்பித்த உபகாரஸ்ம்ருதியாலே என்னாதனே யென்கிறார். (அங்கையாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்தினாய்) அத்திருவடிகளை அநுபவிக்கவிழிந்தார்க்கு விரோதிகளை யழியச்செய்யும் திவ்யாயுதங்களை எப்போது ஆர்க்கு என்வருகிறதோவென்று ஸர்வதாதரித்து நிற்குமவனே. தனக்குத்தானே ஆபரணமான திருக்கையிலே திருவாழி தொடக்கமான ஸ்ரீபஞ்சாயுதங்களை தரித்தவிதுவும் திருவடிகளோபாதி தமக்கு போக்யமாயிருக்கிறதாய்த்து. (சிங்கமாய தேவதேவ) அத்திவ்யாயுதங்கள் அஸத்ஸமமாம்படி வரங்கொண்ட ஹிரண்யனை, நகாயுதமான ஸிம்ஹமாயழியச்செய்த ஆஸ்ரித பக்ஷபாதத்தாலே நித்யஸூரிகளை யெழுதிக்கொண்டவனே. திவ்யமங்கள விக்ரஹத்தின் சுவடறியும் நித்யஸூரிகளுக்கிறே அவ்வடிவையும் அழியமாறிரக்ஷித்த ஆஸ்ரிதபக்ஷபாதத்தின் எல்லைதெரிவது. (தேனுலாவுமென்மலர்மங்கைமன்னிவாழுமார்ப) செவ்வியையும்மென்மையையுமுடைத்தான தாமரையில் பிறப்பாலும் பருவத்தாலும் நிரதிசய போக்யையான பிராட்டி நித்யவாஸம்பண்ணி யநுபவிக்கும் திருமார்பையுடையவனே. இப்போது, "அகலகில்லேன்" என்கிற ஸாமாந்யமன்றிக்கே ஹிரண்யனை யழியச்செய்த வீரத்தாலே, "[illegible]" "ஸர்த்தாரம்பரிஷஸ்வஜே" என்கிறபடியே இவ்வடிவிலே பிராட்டி அத்யாதரம்பண்ணினபடியைச் சொல்லுகிறது. இத்தால்- நித்யஸூரிகளளவுமன்றிக்கே தலைநீர்ப்பாட்டிலே அநுபவிக்கும் பிராட்டியும் இவ்வாஸ்ரித பக்ஷபாதத்துக்குத் தோற்றிருக்கும்படியைச்சொல்லிற்றாய்த்து. "என்னடியாரது செய்யார்" என்றிறே அவன்படியிருப்பது. (ஆழிமேனிமாயனே) கடல்போலே ச்ரமஹரமான திருமேனியையுடைய ஆஸ்சர்யபூதனே. ஹிரண்யனுக்கு அநபிபவநீயமான அவ்வடிவுதானே ஆஸ்ரிதர்க்கு ச்ரமஹரமானபடியைச்சொல்லுகிறது. ... ... (௨௪)

அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. அநங்யப்ரயோஜநனான ப்ரஹ்லாதனுடைய விரோதியைப்போக்கினபடியை அநுபாஷித்துக்கொண்டு, அவனுடையவளவன்றிக்கே ப்ரயோஜநாந்தரபரனான இந்த்ரனுக்காக அர்த்தியாயும் அவ்வளவும் புகுரவில்லாதேவிமுகரான ஸம்ஸாரிகளை ப்ரளயாபத்திலே திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்த இவ்வாபத்ஸகத்வத்தை அறியவல்லாரரரென்கிறார்.

வரத்தினிற்சிரத்தைமிக்கவாளெயிற்றுமற்றவன்
உரத்தினிற்கரத்தைவைத்துகிர்த்தலத்தையூன்றினாய்
இரத்திநீயிதென்னபொய்யிரந்தமண்வயிற்றுளே
கரத்தியுன்கருத்தையாவர்காணவல்லர்கண்ணனே. (உடு)

ப-ரை.—வரத்தினில் - ப்ரஹ்மா தனக்குத்தந்தவரத்திலே, மிக்கசிரத்தை - மிகவும் விச்வாஸமுடையனாய், வாள் - வாள்போன்ற, எயிறு - பற்களையுடையனான, மற்றவன் - சத்ருவானஹிரண்யனுடைய, உரத்தினில்-மார்விலே, கரத்தைவைத்து - திருக்கைகளைவைத்து, உகிர்த்தலத்தை-திருவுகிராலே, ஊன்றினாய் - ஊன்றிக் கிழித்துப்போகட்டாய், நீ - வாமநாவதாரஞ்செய்தருளின நீ, தத்ஸந்தாநஜாதனான மஹாபலியிடத்தில்சென்று, இரத்தி - மூவடிமண்தாவென்று இரந்தாய்; இதென்னபொய்—; இரந்தமண் - அர்த்தித்துப்பெற்ற பூமியென்று ப்ரளயத்திலே, வயிற்றுளே - திருவயிற்றிலேவைத்து, கரத்தி - ஒளித்துவைத்துரக்ஷித்த, கண்ணனே- க்ருஷ்ணனே, உன்-உன்னுடைய, கருத்தை- நினைவை, யாவர்காணவல்லர் - அறியவல்லாரரரென்கிறார். (உடு)

வ்யா.—(வரத்தினில் சிரத்தைமிக்க) ப்ரஹ்லாதனுக்குத்தந்த வரத்திலே அத்யாதரத்தைப்பண்ணி, வரப்ரதனான ப்ரஹ்மாவுக்கு உத்பாதகனானவனோடே விரோதித்து, அவனாலே உத்பந்நனான ப்ரஹ்மா தனக்குத்தந்த வரத்திலேயிறே மிக்க ஶ்ரத்தையைப்பண்ணிற்று. "ஸோ஽யம் விஷ்ணுः" "சோயம்விஷ்ணுः" என்றானிறே. தன்வரத்துக்குப்புறம்பான வடிவுகொள்ளவல்லையென்று உன்னையறியாதே வரத்தையே விஶ்வஸித்திருந்தவன். (வாளெயிறு) வாள்போலேயிருக்கிற எயிற்றையுடையவன். இத்தால் - ஹிரண்யனுடைய புஜபலத்தைச்சொல்லிற்று. வரபலத்துக்குப்புறம்பானவடிவுகொண்டாப்போலே புஜபலத்தை யழிக்க வல்ல ஸர்வஶக்தியென்றறிந்திலன். உன்னையறியாதே தன் வரபலபுஜபலங்களை விஶ்வஸித்திருந்தமதிகேடன். (மற்றவன்) ஶத்ருவானவன். ஸம்பந்தமொத்திருக்க, "மற்றவன்" என்கிறது - ஆஶ்ரிதஶத்ருவே தனக்கு ஶத்ருவென்னும் நினைவாலே. (உரத்தினில்) துர்மாம்ஸங் கிடந்த விடத்தைகொட்டமிடுவாரைப்போலே துர்மாநங்கிடந்தமார்விலே. (கரத்தைவைத்து) "[Sanskrit quotation]" "அப்யேஷபர்ஷ்டே மம ஹஸ்தபத்மம்கரிஷ்யதி" என்று அக்ரூராதிகளுக்கு ஜீவநஹேதுவாய், "அடிச்சியோந்தலைமிசைநீயணியாய்" என்று - ப்ரணயிநிக்கு போக்யமாயிருக்கும் திருக்கையை துஷ்ப்ரக்ருதியான வவனுடைய திண்ணியமார்விலேவைத்து.

(உகிர்த்தலத்தையூன்றிஞய்) வரபலத்துக்குப் புறம்பானவத
ஸாதநமாய் அத்யந்தம் ஸுகருபமான வுகிராலே அநாயாஸேநக்
கொன்றாய். தலம்-நிலமும், இதழும். (இரத்திநீ) ஹிரண்யனிற்கா
ட்டில் தத்ஸந்தாநஜஞன மஹாபலிபக்கலிலே ஔதார்யகுணமென்ப
தொருகுணமுண்டாகையாலே அர்த்திக்வத்திலேயிழிந்தாய். (இரத்
திநீ)ஸர்வஶக்தியாய் அவாப்த ஸமஸ்தகாமஞனநீ* அலம்புரிந்தநெ
டுந்தடக்கையாலே யிரப்பதே!. ஹிரண்யனுக்காக உடம்பை அழிய
மாறிஞய், ப்ரயோஜநாந்தர பரஞன இந்த்ரனுக்காக உனக்குநிருபக
மான ஔதார்யத்தை அன்றழியமாறிற்று. (இத்தென்னபொய்) உ
ன்னதல்லாத தொன்றை அர்த்தித்தாயாகிலிறே உன்னர்த்திக்வம்
மெய்யாவது, தன்னதொன்றைத் தந்தானுகிலிறேமஹாபலி ஔதா
ர்யம் மெய்யாவது. இதுபொய்யென்றதே "இத்தென்னபொய்" என்
று - அர்த்திக்வபலமான த்ரைவிக்ரமபதாநத்தைஶ்ருதி ஓதாநின்
றது. "𑌯𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯" "யத்ராம்புவிந்யஸ்ய" என்று- ஔதார்யத்
துக்கு பலமாகமஹாபலிக்கு இந்த்ரபதத்தைச் சொல்லாநின்றது.
ஆக, ப்ரமாணங்களாலே பொய்யென்னவொண்ணுது, தன்னத்தை
அவனதாக்கிக்கொண்டு யிரக்கையாலும், மஹாபலி அவனத்தைத்
தன்னதாக்கிக் கொடுக்கையாலும்மெய்யென்னவொண்ணுது. ஆகை
யாலே"இத்தென்னபொய்" என்கிறார். (இரந்தமண்வயிற்று ளேகரத்
தி)அர்த்தித்துப்பெற்ற பூமியென்று ப்ரளயாபத்திலே ஆபத்தேஹே
துவாகத்திருவயிற்றிலே ஒளித்துவைத்து ரக்ஷித்து. (உன்கருத்தை
யாவர்காணவல்லர்) உன்னினைவை யாவர்காணவல்லார். அநந்யப்ர
யோஜநஞனப்ரஹ்லாதனேடு,ப்ரயோஜநாந்தரபரஞன இந்த்ரனே
டு, விமுகரான ஸம்ஸாரிகளோடு வாசியற ரக்ஷிக்கிற உன்னினைவை
ஜ்ஞாநாதிகரார்தான் அறியவல்லார். (கண்ணனே)க்ருஷ்ணஞய் வந்
தவதரித்து இடக்கையும் வலக்கையுமறியாத இடயரையும் பசுக்க
ளையும் ரக்ஷித்து உன்னை யொழியச்செல்லாதபடி பண்ணி, அவர்க
ளுக்கு நியாம்யஞன நீயேயருளிச்செய்ய வேணுமென்றுகருத்து. ()

அ.—இருபத்தாறும்பாட்டு. ஸர்வநிர்வாஹகஞனநீ ஸுஶரி
போக்யமான வடிவை ஆஶ்ரிதார்த்தமாக தேவஸஜாதீயமாக்கியும்
கோபஸஜாதீயமாக்கியும் அவதரித்துப்பண்ணின ஆஶ்சர்யங்களை
ஆரறிய வல்லாரென்கிறார்.வாமநாவதாரத்தோடே க்ருஷ்ணவதாரத்
துக்கு ஒருவகையாலே ஸாம்யம் சொல்லலாயிருக்கையாலே இரண்
டவதாரத்தையுஞ்சேர்த்தநுஸந்திக்கிறார்.

· இருபத்தஞ்சாம்பாட்டு. "𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌪𑌦𑌾 𑌵𑌿𑌚𑌕𑍍𑌰𑌮𑍇" "த்ரீணிபதாவிசக்ர
மே" என்கிற ச்ருதி ப்ரயோஜநாந்தர பரஞன இந்த்ரனேடுவாசிய
ற என்றபடி,

ஆணிஞேடுபெண்ணுமாகியல்லவோடுநல்லவாய்
ஊஞெடோசையூறுமாகியொன்றலாதமாயையாய்ப்
பூணிபேணுமாயனுகிப்பொய்யிஞேடுமெய்யுமாய்க்
காணிபேணுமாணியாய்க்கரந்துசென்றகள்வனே, (உகூ)

ப-ரை.—ஆணிஞேடு பெண்ணுமாகி - ஸ்த்ரீயும் விபாகத்தாலே ஸ்ருஷ்டித்து அவற்றுக்கு நிர்வாஹகனுய், அல்லவோடு - நபும்ஸகபதார்த்தத்துக்கு நிர்வாஹகனுய், இந்த லிங்கத்ரய பதார்த்தங்களில், நல்லவாய் - விலக்ஷணபதார்த்தங்களுக்கு நிர்வாஹகனுய், ஊஞெடோசையூறுமாகி - ஐம்புலன்களுக்கும் அந்தராத்மாவாய், ஒன்றலாதமாயையாய் - பலவகையாய்பரிணமிக்கிற ப்ரக்ருதிதத்வத்துக்கு நிர்வாகஹனுய், இப்படி ஸங்கல்பத்தாலே ஸகலமும் நிர்வஹிக்கிற நீ, பூணிபேணும் - பசுக்களை ஆதரித்துப்போரும், ஆயனுகி - இடையனுய், பொய்யுமாய் - அநாச்ரிதரான துர்யோதநாதிகளுக்குப் பொய்யனுய், மெய்யுமாய் - ஆச்ரிதரான பாண்டவர்களுக்கு மெய்யனுய், காணிபேணும் - பூமியை நீரேற்றுவாங்கத்தக்க, மணியாய்- ப்ரஹ்மசாரியாய், கரந்துசென்ற-மறைந்துசென்ற, கள்வனே - க்ர்த்ரிமனே. (உகூ)

வ்யா.—(ஆணிஞேடுபெண்ணுமாகி) ஜந்யஜநக பாவத்தாலே ஜகத்துவிஸ்ம்ர்தமாகவேணுமென்று ஸ்த்ரீயும் விபாகத்தாலே ஸ்ருஷ்டித்தும் அந்யோந்யம் ஸம்பந்தித்தும் ஸம்ஸர்க்கிப்பித்தும் இப்படி அந்தராத்மதயாநின்று நிர்வாஹகனுய். (அல்லவோடு) ஒன்றுக்கு முடலன்றிக்கேயிருக்கிற நபும்ஸகபதார்த்தத்துக்கு நிர்வாஹகனுய். (நல்லவாய்) இந்த லிங்கத்ரயவிஶிஷ்ட பதார்த்தங்களிலே விலக்ஷணபதார்த்தங்களுக்கு நிர்வாஹகனுய். வைலக்ஷண்யமாவது-புருஷார்த்த ருசியுண்டாகை. அவர்களுக்கு நிர்வாஹகனுகையாவது- “ददामि बुद्धियोगं तम्” “ததாமிபுத்தியோகந்தம்” என்கிறபடியே புருஷார்த்தஸாதநப்ரதனுகை. (ஊஞெடோசையூறுமாகி) புருஷார்த்த ருசியில்லாதார்க்கு போக்யமான சப்தாதிகளுக்கு சர்மாநுகூலமாக நியாமகனுய். ரஸரூபதஸ்பர்ஶமான இவைமூன்றும் - அஞ்சுக்கும் உபலக்ஷணம். (ஒன்றலாதமாயையாய்) இவற்றினுள்ளே ஒன்றுக்கு காரணமானவளவன்றிக்கே, உத்தங்களோடு அநுக்தங்களோடு வாசியற ஸர்வமுமாய்க்கொண்டு பரிணமிக்கவல்ல ப்ரக்ருதி தத்வத்துக்கு நிர்வாஹகனுய். “मायां तु प्रकृतिं विद्यात्” “மாயாந்துப்ரக்ருதிம்வித்யாத்” என்னக்கடவதிறே. “மாயை” என்று- ஆஶ்சர்யவாசியாய், ஒன்றுக்கு நிர்வாஹகனுமளவன்றிக்கே ஸகலபதார்த்தங்களையும் சேதநனுடையகர்மாநுகூலமாகநிர்வஹிக்கவல்ல ஆஶ்சர்யத்தையுடையாயென்னவுமாம். (பூணிபேணுமாயனுகி) இப்படி ஸங்கல்பத்தாலே ஸகலமும் நிர்வஹிக்கிற நீ ஆச்ரிதபரித்ராணுர்த்தமாக அஸாதாரண விக்ரஹத்தை ஸ்வாபஸஜாதீயமாக்கிக்கொண்டவதரித்து உன்னைப்பேணுதே பசுக்களைப்பேணும் இடையனுகி. பூணி-பசு. (பொய்யிஞேடுமெய்யுமாய்) அவதரித்து ரக்ஷிக்கும்போது அநாஶ்ரிதரான துர்யோதநாதிகள்பக்கலிலே பொய்யையும், ஆஶ்ரிதரான பாண்டவர்கள்பக்கலிலே மெய்யையுமுடையையாய்.

(காணிபேணுமாணியாய்) மஹாபலியாலே அபஹ்ர்தமாய் நோவுபடாதபடி பூமியைப் பேணித்தன்னைப்பேணாதே ப்ரஹ்மசாரியாய். (கரந்துசென்றகள்வனே) மறைத்துக்கொண்டு சென்ற க்ர்த்ரிமனே. மறைத்துக்கொண்டு செல்கையாவது - ஐஶ்வர்யமான வைபவம் தோற்றாமே பூமியை மஹாபலியதாக்கி அர்த்தியாய்ச்செல்லுகை. க்ர்த்ரிமனாகையாவது - சுக்ரன்வார்த்தை செவிப்படாதபடி அழகாலும் சீலத்தாலும் மஹாபலியை வசீகரித்து சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே அளந்துகொள்ளுகை. (கரந்துசென்ற கள்வனே) "உன்னை யார்மதிக்கவல்லர்" என்று மேல்பாட்டோடே அந்வயம். ... ... (௨௬)

அ.—இருபத்தேழாம்பாட்டு. சேதநாசேதந விலக்ஷணமான உன்னுடைய அபரிச்சிந்நவைபவத்தை பரிச்சேதிக்கிலும் குணப்போதனாய் பூமியை அளந்துகொண்ட வடிவை பரிச்சேதிக்கவல்லாராரென்கிறார்.

விண்கடந்தசோதியாய்! விளங்குஞானமூர்த்தியாய்!
பண்கடந்ததேசமேவுபாவநாசநாதனே!
எண்கடந்தயோகினோடிரந்துசென்றமாணியாய்!
மண்கடந்தவண்ணநின்னையார்மதிக்கவல்லரே. (௨௭)

ப-ரை.—விண்-விபுவானமூலப்ரக்ர்தி, கடந்த-உனக்குள்ளேயாம்படியான ஸ்வரூபத்தையுடைய, சோதியாய் - ஸ்வயம்ப்ரகாசவஸ்துவாய், விளங்கு- ப்ரகாசியாநின்றுள்ள, ஞானமூர்த்தியாய்-ஜ்ஞாநசப்தவாச்யமானஆத்மஸ்வரூபத்தைசரீரமாகவுடையனாய், பண்கடந்த-வேதத்தாலேபரிச்சேதிக்கவொண்ணாத, தேசமேவு - தேஜஸ்ஸையேஸ்வரூபமாகவுடையனாய், பாவநாசநாதனே - ஹேயப்ரத்யநீகனானஸர்வேச்வரனே, எண்கடந்த - அஸங்க்யாதமான, யோகினோடு - கல்யாணகுணங்களோடேகூட, மாணியாய்இரந்துசென்று-வாமநவேஷத்தைக்கொண்டு அர்த்தியாய்ச்சென்று, மண்கடந்தவண்ணம்நின்னை-பூமியையளந்துகொண்ட ப்ரகாரத்தையுடையவுன்னை, யார்மதிக்கவல்லர்-பரிச்சேதிக்கவல்லாரார். (௨௭)

வ்யா.—(விண்கடந்தசோதியாய்) விபுவான மூலப்ரக்ர்தி உனக்குள்ளே யாம்படியான ஸ்வரூபவைபவத்தை யுடைய ஸ்வயம்ப்ரகாஶவஸ்துவாய். "சுடரினுருவிலேவிண்" என்று - மூலப்ரக்ர்தியை "விண்" என்கிற ஶப்தத்தாலே சொல்லிற்றிறே. இது தனக்கடி கார்க்ய வித்யையிலே, "[illegible]" "ஆகாஶ ஓதஞ்சப்ரோதஞ்ச" என்று மூலப்ரக்ர்தியை ஆகாஶ ஶப்தத்தாலே சொல்லிற்று. (விளங்குஞானமூர்த்தியாய்) ஸ்வயம்ப்ரகாசமாய், ஜ்ஞாநகுணஸாரமாகையாலே ஜ்ஞாந ஶப்தவாச்யமான ஆத்மஸ்வரூபத்தை ஶரீரமாகவுடையையாய். ஆக இரண்டாலும், "[illegible]" "அணோரணீயாந்மஹதோமஹீயாந்" என்கிறபடியே விபுத்வ ஸௌக்ஷ்மத்வங்களைச் சொல்லிற்று.

இருபத்தாறாம்பாட்டு. காச்யப ப்ரஜாபதி தேவகோடியிலே அந்தர்ப்பவிக்கையாலே வாமநனையும் "தேவன்" என்கிறது. (௨௬)

(பண்கடந்ததேசமேவு பாவநாசநாதனே) வேதத்தாலே பரிச்சேதிக்கவொண்ணாத தேஜஸ்ஸையே ஸ்வரூபமாக வுடையையாய், ஹேயப்ரத்யநீகனான ஸர்வேஶ்வரனே. வேதம் ஸ்வரப்ரதாநமாகையாலே தத்வாசிசப்தத்தாலே வேதத்தைச் சொல்லுகிறது. இதுதான் சேதநாசேதநங்களை வ்யாபித்து நிற்கச்செய்தேயும் தத்கததோஷை ரஸம்ஸ்ப்ர்ஷ்டனாகையாலும் அசித்ஸம்ஸர்க்கத்தாலே சேதநனுக்கு வந்த தோஷத்தைப் போக்கவல்லனாகையாலும் ஹேயப்ரத்யநீகனென்கிறது.

(எண்கடந்தயோகினோடு) அஸங்க்யாதமான கல்யாணகுணங்களோடேகூட. யோகு - யோகம். அதாகிறது - கல்யாணகுணயோகம். "పశ్యమే యోగమైశ్వరమ్" "பஶ்யமேயோக மைஶ்வரம்" என்று-யோகஶப்தத்தாலேகுணயோகத்தைச்சொல்லிற்றிறே. (இரந்து சென்று மாணியாய்) இரப்பிலே தகணேறினவனென்றுதோற்றவாமநவேஷத்தைக்கொண்டு அர்த்தியாய்ச்சென்று. (மண்கடந்த வண்ணம்) பூமியையளந்துகொண்ட ப்ரகாரத்தை. அதாகிறது- "இந்த்ரனுக்கு மஹாபலியாலே அபஹ்ர்தமான ராஜ்யத்தை வாங்கிக்கொடுக்க" என்கிற வ்யாஜத்தாலே வஸிஷ்டசண்டாள விபாகமறசதுர்த்தஶபுவநாந்தர்க்கதமான சேதநர் தலைகளிலும் திருவடிகளை வைக்கை. (நின்னை) சேதநாசேதநவிலக்ஷணமாய், வேதத்தாலும் பரிச்சேதிக்கவொண்ணாத ஸ்வரூபவைலக்ஷண்யவைபவத்தையுடையையாய், அதுக்குமேலே குணப்ரேரிதனாய்க்கொண்டு பூமியை யளந்துகொண்டவுன்னை. (ஆர்மதிக்கவல்லரே)பரிச்சேதிக்கவல்லாரார். வேதங்களாலே பரிச்சேதிக்கலாமோ, ஜ்ஞாநாதிகரான வைதிகரால்தான் பரிச்சேதிக்கலாமோ, அம்மேன்மையை பரிச்சேதிக்கவோ, அந்நீர்மையை பரிச்சேதிக்கவோ, எத்தை யார் பரிச்சேதிக்கவல்லார்.

அதவா; (விண்கடந்தசோதியாய்) பரமபதத்துக்கவ்வருகாய் ஸ்வயம்ப்ரகாஶமானதிவ்யாத்மஸ்வரூபத்தையுடையையாய்.இத்தால்-த்ரிபாத்விபூதியும்தனக்குள்ளே யாம்படியான ஸ்வரூபவைபவத்தைச்சொல்லுகிறது. (விளங்குஞாநமூர்த்தியாய்) ஜ்ஞாநம் விளங்குகிறமூர்த்தியையுடையையாய். திவ்யாத்மஸ்வரூபத்தை ஆஶ்ரயமாகவுடைய ஜ்ஞாநத்துக்குப்ரகாஶகமான திவ்யவிக்ரஹத்தை யுடையையாய். இந்த ஜ்ஞாநம் ஷட்குணங்களுக்கு முபலக்ஷணம். "షాడ్గుణ్యవిగ్రహం దేవమ్" "ஷாட்குண்யவிக்ரஹம்தேவம்" என்னக்கடவதிறே. (பண்கடந்ததேசமேவுபாவநாசநாதனே) ஶ்ருதியால் பரிச்சேதிக்கவொண்ணாத பரமபதத்திலே நித்யவாஸம்பண்ணுமவனாய், ஸம்ஸாரிகளுடைய தோஷத்தைப்போக்க வல்ல ஹேயப்ரத்ய நீகத்வத்தையுடைய ஸர்வேஶ்வரனே.

(எண்கடந்தயோகினோடு) "பராஸ்ய ஸக்திர் விவிதைவ ஸ்ரூயதே" "பராஸ்யஸக்திர் விவிதைவஸ்ரூயதே" என்கிறபடியே அபரிச்சிந்நமாய் அஸங்க்யாதமான ஆஸ்சர்ய சக்தியோகத்தை யுடையையாய்க்கொண்டு. (மாணியாய் - இரந்துசென்று) அதீந்த்ரியமாய் அபரிச்சிந்நமான திவ்யமங்கள விக்ரஹத்தை பரிச்சிந்நமாக்கி, மஹாபலியுடைய சக்ஷுர்விஷயமாக்கி அர்த்தியாய்ச்சென்று.(மண்கடந்தவண்ணம்) மூன்றடியை அர்த்தித்து இரண்டடியாலே ஸகலலோகங்களையும் அளந்து கொள்ளுகையும், சிறுக்காலைக்காட்டிப் பெரியகாலாலே அளந்துகொள்ளுகையுமாகிற இப்ரகாரத்தை. (நின்னை) அபரிச்சிந்நமான ஸ்வரூபவைபவத்தையுடையையாய், அந்த ஸ்வரூபத்துக்கும் ஸ்வரூப ஆஸ்ரயமான குணங்களுக்கும் ப்ரகாஸகமான திவ்யவிக்ரஹயுக்தனாய், வேதத்தாலும் பரிச்சேதிக்கவொண்ணாத பரமபதத்தை வாஸஸ்தாநமாகவுடையையாய், உன்னுடைய ஆஸ்சர்யஸக்திப்ரேரிக்க, அத்தாலே ப்பேரிதனாய்வந்து பூமியையளந்துகொண்ட வுன்னை. (ஆர்மதிக்கவல்லரோ) இவற்றிலே யொன்றை ஒருத்தராலே பரிச்சேதிக்கப்போமோ. (உஎ)

அ.—இருபத்தெட்டாம்பாட்டு. ஸங்கல்பலேஸத்தாலே அண்டகாரணமான ஜலஸ்ர்ஷ்டிமுதலான ஸகலஸ்ர்ஷ்டியையும் பண்ணக்கடவநீ, ஸ்ர்ஷ்டமான ஜகத்திலே ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக உன்னையழியமாறி அநேகாவதாரங்களைப்பண்ணியும், ஆச்ரிதவிரோதிகளான துர்வர்க்கத்தை திவ்யாயுதங்களாலே கைதொட்டு அழிக்கையுமாகிற இவ்வாஸ்சர்யங்களை ஒருவருமறியவல்லாரில்லையென்கிறார். "ஒருத்தரும் நினைது தன்மையின்னதென்னவல்லரோ" என்கிற மேலிற்பாட்டில் க்ரியை இதுக்கும் க்ரியை.

> படைத்தபாரிடந்தளந்ததுண்டுமிழ்ந்துபௌவநீர்
> படைத்தடைத்ததிற்கிடந்துமுன்கடைந்தபெற்றியோய்!
> மிடைத்தமாலிமாலிமான்விலங்குகாலனூர்புகப்
> படைக்கலம்விடுத்தபல்படைத்தடக்கைமாயனே. (உஅ)

பதா.—பௌவநீர் - அண்டகாரணமான ஏகார்ணவத்தை, படைத்த - ஸ்ர்ஷ்டித்து, பார் - ப்ரளயார்ணவத்திலே அந்தர்ப்பூதையானபூமியை இடந்து - வராஹமாய்அண்டபித்தியிலேபுக்கு இடந்தெடுத்து, மஹாபலியாலே அபஹ்ருதமானபூமியை, அளந்து - வாமநாவதாரஞ்செய்தருளி எல்லைநடந்துமீட்டு, நைமித்திகப்ரளயத்திலேவடதளசாயியாய், அது -அநதலோகத்தை, உண்டு-தன்திருவயிற்றிலேவைத்து, உமிழ்ந்து-பின்புவெளிநாடுகாணப்புறப்படவிட்டு, பௌவநீர்-அண்டாந்தர்வர்த்திகளானஸமுத்ரங்களிலேஒருஸமுத்ரத்தை, வருணனைச்சரணம்புக்கு, படை - படைகளைத்திரட்டி, தடைத்து-அணைகட்டி, முன-ப்ரஹ்மாதிகள் ஆர்த்தரானதஸையிலகிட்டி உதவுகைக்காக, அதில் - திருப்பாற்கடலிலே, கிடந்து-கண்வளர்ந்தருளி, தேவர்கள், இழந்தபொருள்களை அவர்களுக்குக்கொடுக்கைக்கா, கடைந்த - அக்கடலைக்கடைந்தருளின, பெற்றியோய் - ஸ்வபாவத்தையுடையவனே, மிடைத்த - கோபித்துவந்த, மாலி - மால்யும், மான் -

பிடிச்சனை, மாலிவிலங்கு - ஸுமாலியென்னும்மர்சமும், காலனூர்புக - யம புரத்தேபோம்படிக்கீடாக, படைக்கலம்விடுத்த - ஆயுதத்தையேவினவனாய். பின்னும்விரோதிநிரஸநத்துக்காக, பல்படை - அநேக ஆயுதங்களைதரித்த, தடம் - விசாலமான, கை-திருக்கைகளையுடைய, மாயனை - ஆச்சர்யபூதனை என்று அநுபவிக்கிறார். (௨௮)

வ்யா.—(படைத்தபாரிடந்து)“பௌவநீர்படைத்து-பாரிடந்து” என்று அந்வயமாகக்கடவது. “𑌅𑌪𑌏𑌵𑌸𑌸𑌰𑍍𑌜𑌾𑌦𑍌” “அபஏவ ஸஸர்ஜாதௌ”என்கிறபடியே-அண்டகாரணமான ஏகார்ணவத்தை ஸங்கல்பலேசத்தாலே ஸ்ர்ஷ்டித்து, ஜகத்கார்யமான அண்டத்தையும் அண்டாதிபதியான ப்ரஹ்மாவையும் ஸ்ர்ஷ்டித்து, ப்ரஹ்மாவாலே ஸ்ர்ஷ்டமான ப்ரளயார்ணவத்திலே அந்தர்ப்பூதையான பூமியை ஸௌரிபோக்யமான திவ்யவிக்ரஹத்தை வராஹஸஜாதீயமாக்கி அண்டபித்தியிலே புக்கு இடந்தெடுத்து. இது ஸங்கல்பத்தாலேசெய்யமுடியாததொன்றன்றே,“ஸம்ஸாரப்ரளயாபத்தினின்றும் எடுப்பானிவனே!” என்று ஆஸ்ரிதர்விச்வஸிக்கைக்காகவிறே. (அளந்து) அதுக்குமேலே, மஹாபலியாலே அபஹ்ருதமான பூமியை, ஸ்ரீவாமநனாய் எல்லை நடந்து மீட்டுக்கொண்டு. இதுவும் தன்னுடைமைபெறுகைக்குத் தானே அர்த்தியாய் வருமவனென்று ஆஸ்ரிதர்விஸ்வஸிக்கைக்காக. (அதுண்டுமிழ்ந்து) நைமித்திக ப்ரளயம்வர வடதளஸாயியாய், தன்னுடைய சிறியவயிற்றிலே த்ரிலோகத்தையும் வைத்து ரக்ஷித்து, உள்ளேயிருந்து நோவுபடாமல் அவற்றை உமிழ்ந்து. இதுவும் ஸங்கல்பத்தாலே செய்யலாயிருக்க அப்படிசெய்ததும்ஸர்வசக்தியென்றும், உருவழிந்தபதார்த்தங்களை உண்டாக்குமவனென்றும் ஆஸ்ரிதர்விஸ்வஸிக்கைக்காக. “பௌவநீர் படைத்தடைத்து” என்று இங்கேயும் அந்வயிக்கக்கடவது. அண்டகாரணமான ஏகார்ணவத்தை ஸங்கல்பலேசத்தாலே ஸ்ர்ஷ்டித்த நீ அண்டாந்தர்வர்த்திகளான ஸமுத்ரங்களிலே ஒருஸமுத்ரத்தை, வருணனைச்சரணம்புக்குபடைதிரட்டியும் அடைத்தஇதுவும் ப்ரணயினியுடைய விஸ்லேஷத்தில் தேவரீருடைய ஆற்றாமையை ப்ரகாஸிப்பித்த வித்தனையிறே. (முன் அதில்கிடந்து) ப்ரஹ்மாதிகள் ஆர்த்தரானதசையிலே நூரஸ்தராகவொண்ணாது என்றும், அபிமுகீகரித்தார்க்கு அவதரித்து சுபாச்ரயமாகைக்கும் திருப்பாற்கடலிலேகண்வளர்ந்தருளி.

இருபத்தெட்டாம்பாட்டு. பௌவநீருக்கு கீழ்மேலத்திலே அர்த்தமாக்கி, மேலுக்கருளிச் செய்கிறார் (𑌅𑌪𑌏𑌵 - அப ஏவ இத்யாதி) (முன்னதில் - கிடந்து) இடந்ததுமுதலான வ்யாபாரங்களுக்குமுன்னே திருப்பாற்கடலிலே கிடந்ததென்றபடி. ()

"ஜ்யோதிம்ஷிவிஷ்ணு:" "ஜ்யோதிம்ஷிவிஷ்ணு:" என்கிறபடியே ஸர்வர்க்கும் ஸந்நிஹிதரானதேவரீர் இப்படி செய்தருளிற்று, ஆச்ரிதரக்ஷணத்திலே ஸத்யோத்யுக்தரென்று தோற்றுகைக்காக விறே. (கடைந்தபெற்றியோய்) தூர்வாஸ சாபத்தாலே தேவர்களிழந்த பதார்த்தங்களடங்கக் கடலிலே யுண்டாக்கிக் கொடுக்கைக்காக அக்கடலைக்கடைந்த மஹாப்ரபாவத்தை யுடையவனே. "பெற்றி" என்று - ஸ்வபாவம். இதுவும் ஆச்ரிதருடைய இழவுகளைத் தானேவ்யாபரித்துத்தீர்க்குமென்று தோற்றுகைக்காக.

(மிடைத்தமாலி) கோபித்தமாலி. (மாலிமான்விலங்கு) பெருமிடுக்கனான ஸுமாலியான திர்யக்கு. திர்யக்ப்ரவர்த்தனான ஸுமாலியென்னவுமாம். (காலனூர்புகப் படைக்கலம்விடுத்த) அவர்களையும் அப்புறத்திலே புகும்படி ஆயுதத்தை யேவினவன். இத்தால் - ஆச்ரித விரோதிகளை அழியச்செய்யுமிடத்தில் ஸங்கல்பத்தாலன்றிக்கே கைதொட்டு ஆயுதத்தாலே அழிக்குமவனென்கிறது. (பல்படைத் தடக்கை மாயனே) பின்பு விரோதி நிரஸநத்துக்கீடான அநேக ஆயுதங்களை யுடைத்தாய், அவ்வாயுதங்களுக்கு ஸத்ர்சமான சுற்றுடைத்தான திருக்கையையுடைய ஆஸ்சர்யபூதனே. ... (௨அ)

அ.—இருபத்தொன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டில் "மநஸைவ ஜகத்ஸ்ருஷ்டிம்" "மநஸைவஜகத்ஸ்ர்ஷ்டிம்" என்கிறபடியே - ஸங்கல்ப லேஸத்தாலே ஜகத்ஸ்ர்ஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணவல்லவன், ஆச்ரிதாநுக்ரஹத்தாலே எளியகாரியங்களுக்கு அநேகவிக்ரஹபரிக்ரஹங்களைப் பண்ணி ரக்ஷிக்குமென்கிறது; இதில் - இவ்வநுக்ரஹத்துக்கு ஹேது ஸர்வாதிகத்வத்தால்வந்த பூர்த்தியும், ச்ரிய:பதித்வத்தால்வந்த நீர்மையும், அவர்ஜநீயமானஸம்பந்தமுமென்றும், அநுக்ரஹகார்யம் வ்யூகவிபவாத்யவதாரங்களென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வநுக்ரஹம் ஏவம்விதமென்று பரிச்சேதிக்கவொண்ணாதென்கிறார்.

பரத்திலும்பரத்தையாகிபௌவநீரணைக்கிடந்
துரத்திலுமொருத்திதன்னைவைத்துகந்ததன்றியும்
நரத்திலும்பிறத்திநாதஞானமூர்த்தியாயினாய்
ஒருத்தருமினைத்துதன்மையின்னதென்னவல்லரோ. (௨௯)

ப-ரை.—பரத்திலும் - த்ரிவிதாத்மவர்கத்துக்கும், பரத்தையாகி - மேலானவை லக்ஷண்யத்தையுடையையாய், ஒருத்திதன்னை - அதவிதீயையான பெரியபிராட்டியாரை, வைத்து - பிரியாமல்வைத்து, உகந்து - ஸம்ச்லேஷ ரஸங்களையநுபவிக்கிறநீ, ஆச்ரிதரக்ஷணத்துக்காக அநிருத்தரூபியாய்க்கொண்டு, பௌவம்-

"ஜ்யோதிம்ஷிவிஷ்ணு:" "ஜ்யோதிம்ஷிவிஷ்ணு:" என்று ஸர்வாந்தர்யாமித்வம் சொல்லுகையாலே ஸர்வர்க்கும் ஸந்நிஹிதரென்கிறது, மாலிமானை ராக்ஷஸனை, க்ஷுத்ரனாகையாலே விலங்கென்னுதல்; பசுவர்த்தியாலே விலங்கென்னுதல். (௨அ)

க்ஷீராப்தியிலே, நீர் உணை - நீரோபடுக்கையாக, கிடந்து - கண்வளர்ந்தருளி, சேதநர் விஷயத்தில் செய்த அநுக்ரஹம்பர்யவஸியாமையாலே, அன்றியும்- அதற்குமேலே, ரகுக்கிலும் - மநுஷ்யயோநியிலும், பிறந்து-ராமக்ருஷ்ணதிரு வேணவதாரித்தவனும், நாத - ஸகலஆத்மாக்களுக்கும்நாதனும், ஞாநமூர்த்தியாயினும் - ஜ்ஞாநஸ்வரூபனானவனே!, ஒருத்தரும் - வேதவைதிகர்களில் ஒருவரும், நின்றன்மை - உனதநுக்ரஹத்தைசொல்லமாட்டுதில்லையே, இன்னதென்னவல்லரோ- ஏவம்விதமென்று பரிச்சேதிக்கவல்லரோ. (உக)

வ்யா.—(பரத்திலும் பரத்தையாதி) "పరాత్పరాణాంపరమః" "பராத்பராணாம்பரமஃ" என்கிறபடியே - த்ரிவிதாத்ம வர்கத்துக்கு மவ் வருகான ஸ்வரூபவைலக்ஷண்யத்தையுடையையாய். அநந்தரம் "உரத்திலும் ஒருத்திதன்னைவைத்துகந்து" என்கிறவிது அந்விதமாகக் கடவது. கீழ்ச்சொன்ன ஸ்வரூப வைலக்ஷண்யத்துக்கும் அவ்வருகான உத்கர்ஷத்துக்கும் ஹேதுவாயிறே ச்ரிய:பதித்வமிருப்பது. (உரத்திலும்) சமுப்ததத்தாலே – ஸ்வரூபாந்தர்ப்பாவத்தையும் ஸமுச்சயிக்கிறது. அதுக்குமேலே, மஹிஷீவர்க்கத்தையும் வ்யாவர்த்திக்கிறது. (ஒருத்தி) அத்விதியை. "வடிவிணையில்லாமலர் மகள்." அதாகிறது - த்ரிவிதாத்மவர்க்கத்துக்கும் ஸ்வாமிநியாய் ஸர்வேஶ்வரனுக்கு ப்ரதாந மஹிஷியாயிருக்கை. (தன்னைவைத்து) "அகலகில்லேனிறையும்" என்று – மேல்விழக்கடவ விவள்தன்னை, தான் "இறையுமகலகில்லேன்" என்று திருமார்விலேவைத்து.(உகந்து)* துல்யஶீலவயோவர்த்தையாயிருந்துள்ளவளோடே ஸம்ஶ்லேஷரஸங்களை யநுபவிக்கிற நீ. (பௌவநீரணைக்கிடந்து) ரக்ஷ்யவர்க்கத்தினுடையரக்ஷணம்,பிராட்டிபக்கல்ப்ரீதிக்குப்போக்கு வீடாயிறே யிருப்பது. ஆர்த்தரக்ஷணதத்துக்காக அநிருத்தரூபியாய்க் கொண்டு க்ஷீராப்தியிலே நீரோபடுக்கையாகக் கண் வளர்ந்தருளி. "ஆர்த்தாநாம் ஶரணம்" "தாபார்த்தோஜலஶாயிநம்" என்கிறபடியே- தாபார்த்தர்க்குப் புகலாய்க்கொண்டு அபேக்ஷா நிரபேக்ஷமாகக் கண்வளர்ந்தருளுகிற நீர்மையைச் சொல்லுகிறது. இது – ஸங்கர்ஷணப்ரத்யும்ந வ்யூகங்களுக்கும் உபலக்ஷணம்.

இருபத்தொன்பதாம்பாட்டு. "பரத்தையாதி"என்றது, "பரத்தையாகி"என்றுபாடமாக வேணும்; கண்டுகொள்வது.சேஷசாயித்வம் உத்கர்ஷஹேது வாயிருக்க,"உரத்திலும" என்கிற இப்பதத்தை நடுவே வைக்கவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (கீழ்ச்சொன்னஸ்வரூபேத்யாதி.) மஹிஷ்யந்தரத்துக்கு மார்பிலே அந்வயமில்லாவிட்டவாறே அவர்களையும் வ்யாவர்த்திக்கிறது. ரக்ஷணத்துக்காகக் கிடந்தால் ஸம்ஶ்லேஷத்துக்குக் கொத்தைவாராதோவென்ன; அருளிச்செய்கிறார் (ரக்ஷ்யவர்க்கத்தினித்யாதி.)

(அதன்றியும்) ஸம்ஸாரத்தில் அசித்கல்பமாய்க்கிடந்தசேதநர்க்கு ரூபநாமங்களைக்கொடுத்தும், ஶாஸ்த்ரப்ரதாநாதிகளைப்பண்ணியும், ப்ரஹ்மாதிகளுடைய ஆர்த்திகளைப்பரிஹரித்தும், இப்படிரக்ஷித்துப்போந்த வ்யூஹாவதாரங்களாலே தேவரீருடைய அநுக்ரஹம் பர்யவஸியாமையாலே, அதுக்குமேலே. (நரத்திலும் பிறந்தி) "सर्वगन्धः" "ஸர்வகந்த:" என்கிறநீ ப்ரஹ்மாதிகளுக்கு ருத்ஸாவிஷயமான மநுஷ்யயோநிகளிலே தத்ஸஜாதியனாய்க் கொண்டு ராமக்ர்ஷ்ணாதிருபத்தாலேவந்தவதரித்து. இது, தேவயோநியிலும்திர்யக்யோநியிலுமுண்டான அவதாரங்களுக்கு முபலக்ஷணம். "सुरनरतिर्यगवतारान्" "ஸுரநரதிர்யக்ஸ்வாவதாந்" என்னக்கடவதிறே. (நாத) இப்படி விஸத்ர்ஶமானஹேயயோநியிலே வந்து அவதரிக்க வேண்டுகிறது இவற்றையுடையனுகையாலேயென்கை. (ஞானமூர்த்தியாயினாய்) ஜ்ஞாநஸ்வருபனாயினாய். இப்போது ஜ்ஞாநாதிசயம் சொல்லுகிறது ரக்ஷிக்கைக்கு விரகறியுமவனென்கைக்காக. ப்ராப்தியுண்டானாலும் விரகறியாதவன்று ரக்ஷிக்கப்போகாதிறே. சாஸ்த்ரப்ரதாநமென்ன, ஆசார்யோபதேசமென்ன, அழகென்ன, ஶீலமென்ன, ஏவமாதிகளாலே ஆச்ரயாநுகூலமாகருசியைப் பிறப்பிக்க வேண்டும்படியிறே சேதநனுடைய ப்ரக்ர்திபேதமிருப்பது. (ஒருத்தரும் நினைதுதன்மையின்னதென்னவல்லரோ) வேதங்களென்ன, ஜ்ஞாநாதிகரான வைதிகரென்ன, இவர்களொருத்தரும் உன்னுடைய அநுக்ரஹத்தினுடைய எல்லையை ஏவம்விதமென்று பரிச்சேதிக்கவல்லரோ. தன்னையழியமாறி பகவத்ஸம்பந்தத்தை யறுத்துக்கொள்ளும் ஸம்ஸாரிகளை, தன்னை யழியமாறி ரக்ஷிக்கிறஅநுக்ரஹத்தை எவரறியவல்லார். ... ... (௨௯)

அ.—முப்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-"நரத்திலும்பிறந்தி" என்று-மநுஷ்யயோநியில் அவதாரங்கள் ப்ரஸ்துதமாகையாலும், அதுக்குக்கீழ்ப்பாட்டிலே, "அதுமண்டுமீழ்ந்து" என்று - வடதளசாயியவதாரம் ப்ரஸ்துத மாகையாலும், வடதளஶாயியுடைய மௌக்த்யத்திலும் ஶக்தியிலும், சக்ரவர்த்தித்திருமகனுடைய வவதாரத்தின் மெய்ப்பாட்டால் வந்த மௌக்த்யத்திலும் வீரஸ்ரீயிலு மீடுபடுகிறார்.

வானகமுமண்ணகமும்வெற்புமேழ்கடல்களும்
போனகஞ்செய்தாலிலைத்துயின்றபுண்டரீகனே !
தேனகஞ்செய்தண்ணறுமலர்த்துழாய்நன்மாலையாய்
கூனகம்புகத்தெறித்தகொற்றவில்லியல்லையே. (௩0)

விரகறியவேண்டுவா னென்னென்ன; ருசிபேதத்தாலேயென்கிறார் (ஶாஸ்த்ரப்ரதாநமித்யாதி.) நினைது - உன்னுடைய. (௨௯)

ப-ரா.—வானகமும் - ஸ்வர்க்கலோகத்தையும், மண்ணகமும்-பூலோகத்தையும்-வெற்பும் - அந்த பூமிக்கு ஆதாரமான ஸப்தகுலபர்வதங்களையும், ஏழ்கடல்களும் - ஸப்தஸமுத்ரங்களையும், போனகஞ்செய்து- அமுதுசெய்தருளி, ஆலிலை-ஆலந்தளிரிலே, துயின்ற-கண்வளர்ந்தருளினவனாய், புண்டரீகனே-தாமரைமலரையொத்தஅவயவங்களையுடையனாய்,ஊடெல்லாம், தேன்அகம் செய்-வண்டுகள் நெருங்கியிருப்பதாய், தண் - குளிர்ந்திருக்கின்ற, நல் - விலக்ஷணமான, மாலையாய்-திருமாலையையுடையவனே, கூன்-கூனியுடையகூன், அகம்புக-உள்ளேயடங்கும்படி, தெறித்த-சுண்டுவில்லைத்தெறித்தவனாய்,சொற்றவில்லியல்லையே - ஜயப்ரதமானவில்லையுடையவனல்லையோ! என்று ஈடுபடுகிறார், (௯0)

வ்யா.—(வானகமும்மண்ணகமும்) ஸ்வர்க்கவாஸிகளான இந்த்ராதிதேவர்களும் அவர்களுக்கு போக்ய போகோபகரண போகஸ்தாநமான ஸ்வர்க்கந்தானும், பூமியிலுள்ளமநுஷ்யாதிகளும் அவர்களுக்கு வாஸஸ்தாநமான பூமியும். “నఞ్చ్ఛిక్రోశన్తి” “மஞ்சாக்ரோஶந்தி” என்கிறபடியே தேஶவாசிசப்தத்தாலே - தேஶிகளையும் சொல்லுகிறது; ப்ரளயத்தில் ஆபந்நரானார்தேஶிகராகையாலே. இத்தால் - பூமியிலுள்ளார்க்கு ஆராத்யராய அவர்களுக்கு அபிமத பலப்ரதருமானஇந்த்ராதிகளோடுஆராதகரான மநுஷ்யாதிகளோடு வாசியறப்ப்ரளயாபத்தில் வந்தால் எல்லாருமொக்க ஈஶ்வரரக்ஷ்ய பூதரென்கிறது. (வெற்பும்) அந்தபூமிக்காதாரமாயிருந்துள்ளஸப்தகுலபர்வதங்களும். இத்தால் - ஆதாரமான குலபர்வதங்களோடு ஆதேயமான பூமியோடுவாசியற தத்காலத்தில் ஈஶ்வரனே ஆதாரமென்கை. “வெற்பு” என்று - ஸ்தாவர ஜாதிக்கு முபலக்ஷணம். (ஏழ்கடல்களும்) த்வீபங்களுக்கு பேதகமான ஸப்த ஸமுத்ரங்களும். அத்தாலே - ஜலவாஸிஸத்வங்களைம் சொல்லுகிறது. ஆக, ஆராத்யரான இந்த்ராதிகளோடு, ஆராதகரான மநுஷ்யர்களோடு, தாரகங்களான பர்வதங்களோடு, தார்யையான பூமியோடு, ஸமுத்ரங்களோடு, ஜலசரஸத்வங்களோடு வாசியற ஸர்வேஶ்வரனேரக்ஷகனென்றதாய்த்து. “போனகஞ்செய்து” என்றது - ரக்ஷகனுக்கு ரக்ஷணதர்மம் பசியர்க்குச் சோறுபோலே அபிமதமாயிருக்குமென்கை. “యస్యబ్రహ్మచక్షత్రం చోభేభవతఓదనమ్” “అత్తాచరాచరగ్రహణాత్” “யஸ்யப்ரஹ்மசக்ஷத்ரஞ் சோபே பவதஓதநம்,” “அத்தாசரா சரக்ரஹணாத்.” (ஆலிலைத்துயின்ற) அவ்வடிவுக்களவாய் தன்ஸௌகுமார்யத்துக்குச் சேர்ந்த ஆலந்தளிரிலே கண் வளர்ந்தருளின. (புண்டரீகனே) புண்டரீகாவயவனே. “செங்கனிவாய்ச் செங்கமலம் கண்பாதங்கைகமலம்” என்கிறபடியே-த்வ்யாவயவங்கள்அப்போதலர்ந்த செந்தாமரைகள்போலே யிருக்கையாலே புண்டரீகசப்தவாச்யனென்கிறது. த்ரைலோக்ய ரக்ஷணத்தால் வந்த ப்ரீதி திருவடிவிலே தோற்றி யிருக்கிறபடி.

(தேனகஞ்செய்) ஊரெல்லாம் வண்டுகளாலே மிடைந்திருக்குமென்னுதல்; மதுவாலே பூர்ணமாயிருக்குமென்னுதல். (தண்ணறுமலர்த்துழாய்) ச்ரமஹரமாய் பரிமளிதமாய்ச் செவ்வியையுடைத்தான திருத்துழாய். (நன்மாலையாய்) அவயவசோபையிற்காட்டில் ஆகர்ஷகமாயிருக்கும்மாலையென்னுதல்; ரக்ஷணத்துக்கிட்ட தனிமாலை யாகையாலே விலக்ஷணமென்னுதல். ஆக, ஸத்தாப்ரயுக்தமான சக்த்யாதிசயத்தையும், அவயவசோபையையும், அலங்கார சோபையையம் அநுபவிக்கிறார். (கூன் அகம்புகத்தெறித்த) கூனியுடைய கூன் உள்ளே யடங்கும்படியாகச் சுண்டுவில்லைத் தெறித்த. இத்தால் - அவதாரத்தில் மெய்ப்பாட்டால்வந்த மௌக்த்யமும் ரக்ஷகமாயிருக்குமென்கை. ரக்ஷகவஸ்துவாகில் அதிலுள்ளதெல்லாம் ரக்ஷகமாயிறேயிருப்பது. (கொற்றவில்லியல்லையே) வில்பிடித்தபோது ஆக்கையையும் வில்லையும் கண்டபோதே ராவணாதிகள் குடல்குழம்பும்படியான வீரஸ்ரீயைச் சொல்லுகிறது. கொற்றம் - வென்றியும்; வலியும். "புண்டரீகனே - கொற்றவில்லியல்லையே" என்று-அவதாராந்தரமா யிருக்கச்செய்தேயும் தர்மைக்யத்தாலே பால்யயௌவநாத்யவஸ்தாவிசேஷங்கள்போலே தோற்றுகிறதாய்த்து இவர்க்கு. இப்பாட்டுத்தொடங்கி, மேல் "மாயமென்னமாயம்" என்கிறபாட்டளவும் வர அதுவே க்ரியையாகக்கடவது. ... ... (ஙo)

அ.—முப்பத்தோராம்பாட்டு. கீழ்ப்பாட்டில் - அவதாரங்களிலுண்டான ரக்ஷகத்வத்தை யநுபவித்தார்; இதில் - ஆச்ரயணீயமுகரானவர்கள்திறத்தில் அவதாரகார்யமான உபகாரபரம்பரைகளை யநுபவிக்கிறார்.

> காலநேமிகாலனே! கணக்கிலாதகீர்த்தியாய!
> ஞாலமேழுமுண்டுபண்டோர்பாலனாயபண்பனே!
> வேலைவேவவில்வளைத்தவெல்சினத்தவீரநின்
> பாலராயபத்தர்சித்தம்முத்திசெய்மூர்த்தியே. (ஙக)

ப-ரை.—காலநேமி-காலநேமியாகிற அஸுரனுக்கு, காலனே-ம்ருத்யுவாய், கணக்கிலாத - அஸங்க்யேயமான, கீர்த்தியாய்-ஸௌலப்யாதிகல்யாணகுணங்களையுடையனாய், ஞாலமேழும் - ஸகலலோகங்களையும், உண்டு. திருவயிற்றிலேவைத்து, பண்டு - பூர்வகல்பாவஸாநத்திலே, ஓர் பாலனாய - அத்விதீய பாலனான, பண்பனே - ஆச்சர்ய சக்தியையுடையனாய், வேலை-கடல், வேவ-தக்தமாம்படி, வில்வளைத்த-வில்வளைத்தவனாய், வெல்சினத்த-பகைவரைவெல்லும் சினத்தையுடைய, வீர-வீரனே, நின்பாலராய - உன்விஷயத்தில் அநந்யப்ரயோஜநராய், பத்தர்சித்தம் - பக்திமான்களாயிருப்பவர்களுடைய மநஸ்ஸில், முத்திசெய்யும் - "உன்னையொழிய வேறு ப்ராப்யப்ராபகங்களுண்டென்னும் நசையறுக்கவல்ல, மூர்த்தியே-மஹாப்ரபாவத்தையுடையவனே! இதென்னாச்சர்யமென்கிறார். (ஙக)

முப்பதாம்பாட்டு. தேன் - வண்டாகவுமாம். கூன்நிமிர்ந்து ரூபிணியாகையாலே ரக்ஷகமென்கிறது. (ஙo)

வ்யா.—(காலநேமிகாலனே) காலநேமியாகிற அஸுரனுக்கும் ம்ர்த்யுவானவனே. இத்தால்-முமுக்ஷுக்களாய் தேவரீரை ஆஸ்ரயிக்கையிலே உத்யுக்தரானவர்களுடைய ஆச்ரயண விரோதிபாபங்களை, காலநேமியை நசிப்பித்தாப்போலே நசிப்பிக்குமவனென்கை. பிராட்டி பொறுப்பிக்க ஈஶ்வரன் பொறுக்குமாயிருக்கச்செய்தேயும், தாம் அதுக்கு அஞ்சினபடியாலே காலநேமியை த்ர்ஷ்டாந்தீகரிக்கிறாரிறே. (கணக்கிலாத கீர்த்தியாய்) ஆச்ரயணத்துக்குறுப்பாய் எண்ணிறந்த ஸௌலப்யாதி கல்யாண குணங்களையுடையையென்னும் குணவத்தாப்ரதையையுடையவனே. "குடந்தையன் கோவலன்" என்று - இந்த ஸௌலப்யாதிகள் பரத்வத்திலும் ப்ரஸித்தமிறே. * அபாரகாருண்யந்தொடங்கி, "ஸௌந்தர்யமஹோததே" என்னக்கடவதிறே. (ஞாலமேழுமுண்டு பண்டோர் பாலனாய பண்பனே) ஆச்ரயித்தால் பண்ணுமுபகாரத்தைச் சொல்லுகிறது. ஸப்தத்வீபவதியான பூமியையுண்டு பூர்வகல்பாவஸாநத்திலே அத்விதீயபாலனான ஆச்சர்யசக்தியைநிரூபகமாக வுடையவனே. பண்பு-இயல்வு. இது-த்ரைலோக்யத்துக்குமுபலக்ஷணம். இத்தால்-ஸ்வாதந்த்ர்யமே நிரூபகமாயப்போந்த ஸம்ஸாரியை சேஷத்வமே நிரூபகமென்னும்படி பண்ணவல்ல சக்தியையுடையவனென்கை. அதாகிறது-"ద్విధాభజ్యేయమప్యేవం న నమేయమ్" "த்விதாபஜ்யேயமப்யேவம் நநமேயம" என்றிருக்குமவனை, "ముహూర్తమపి జీవావః" "முஹூர்த்தமபிஜீவாவ," என்றும், "நின்னலாலிலேன்காண்" என்றும் சொல்லும்படிபண்ணுகை.

(வேலைவேவவில்வளைத்த வெல்சினத்தவீர) கடல் சுஷ்கத்ர்ணஸமூஹம்போலே தக்தமாம்படி. வில்வளைத்தவனாய், ப்ரதிபக்ஷத்தை வெல்லுஞ் சினத்தையுடைய வீரனே. இத்தால் - ஆச்ரிதர்க்கு ஸ்வாநுபவ விரோதிவர்க்கத்தை அநாயாஸேநப் போக்குமவனென்கை. (நின்பாலராயபத்தர் சித்தம் முத்திசெய்யும் மூர்த்தியே) உன்திறத்தில் அநந்யப்ரயோஜநராய், "ఛాయా వా సత్త్వమనుగచ్ఛేత్" "சாயாவாஸத்வ மநுகச்சேத்" என்கிறபடியே - உன்பார்ஶ்வத்தை விடமாட்டாத பக்தர்களுடைய மநஸ்ஸு உன்னையொழிய வேறுப்ராப்யப்ராபகங்களுண்டென்னும் நசையறுக்கவல்ல மஹாப்ரபாவத்தை யுடையவனே. இதென்ன வாச்சர்யமென்று வாக்யசேஷம். ஆச்ரிதவிஷயத்தில் கீழ்உக்தமான தன்படிகளையநுஸந்தித்தால் அது தன்னையொழிய வேறொன்றை யறியாதபடிபண்ணுமவனென்கை. ... ... (௩௧)

அ.—முப்பத்திரண்டாம்பாட்டு. ஆச்ரிதவிரோதிநிரஸநம்பண்ணுமிடத்தில் சக்ரவர்த்தித்திருமகன் செவ்வைப்பூசலாலே ராக்ஷஸரையழியச் செய்தாப்போலே விரோதிவர்க்கத்தைப் போக்கவுமாம், மஹாபலிபக்கலிலே வாமநனாய் அர்த்தித்துச் சென்று வஞ்சித்தழித்தாப்போலே யழிக்கவுமாம், ஆச்ரிதவிரோதி நிரஸநத்தில் ஸ்வபாவநியதியில்லையென்கிறார்.

குரக்கினப்படைகொடுகுரைகடலின்மீதுபோய்
அரக்கரங்கரங்கவெஞ்சரந்துரந்தவாதிநீ
இரக்கமண்கொடுத்தவற்கிரக்கமொன்றுமின்றியே
பரக்கவைத்தளந்துகொண்டபற்பபாதனல்லையே. (௩௨.)

ப-ரை.—குரக்கினப்படைகொடு - ஸமூஹமான வாநர ஸேனையைக்கொண்டு, குரை - கோஷியாநின்றுள்ள, கடலின்-கடலில் அணைகட்டி, மீதுபோய்-அதின் மேலேபோய், லங்கையில் ப்ரவேசிக்க, அங்கு-அந்த வாநரஸேனையைக் கண்டு, அரக்கர்-ராக்ஷஸர், அரங்க-அஞ்சும்படியாக, வெம்சரம் - அக்நிஜ்வாலைசங்களான திருச்சரங்களை, துரந்த - நடத்துகையாலே, ஆதிநீ-வீரர்களில் ப்ரதாநனானநீ, இரக்க - வாமநாவதாரஞ்செய்தருளி யஜ்ஞவாடத்திலே சென்று இரக்க, மண்கொடுத்தவற்கு-பூமியைத்தந்த மஹாபலிவிஷயத்திலே, ஒன்றும் இரக்கமின்றி - சற்றேனும் இரக்கமில்லாமல், பரக்கவைத்து - திருவடிகளைப் பரப்பிவைத்து, அளந்துகொண்ட - பூமியையெல்லா மளந்துகொண்ட, பற்பபாதனல்லையோ-தாமரைமலரையொத்த திருவடிகளையுடையவனல்லையோ! இதென்ன ஆச்சர்யமென்கிறார். (௩௨)

வ்யா.—(குரக்கினப்படைகொடு) வாநர ஸமூஹமானஸேனையைக்கொண்டு. (குரைகடலின்மீதுபோய்) கடலின் கிளர்த்தியையும்கோஷத்தையுங்கேட்டு, "இக்கடலையெங்ஙனே கடக்கக்கடவோம்" என்று அந்தஸேனை பயப்படும்படி கோஷத்தையுடைத்தான கடலைத் தூர்த்து அதின்மேலேபோய். இத்தால் - ப்ரபலபதார்த்தங்களை க்ஷுத்ரபதார்த்தங்களைக் கொண்டு அழிக்கவல்லவனென்கை. (அரக்கரங்கரங்க) அவ்வபதாநத்தைக் கண்டு, "வரபலபுஜபலங்களால் நமக்கெதிரில்லை" என்றிருக்கும் ராக்ஷஸர், போக்கடிதேடி அஞ்சும்படியாக. அரக்கல்-கரத்தல். "அரங்க" என்று மெல்லொற்றாய்க்கிடக்கிறது. (வெஞ்சரந்துரந்த) "[illegible]" "பாவகஸங்காசை:" என்கிறபடியே அக்நிஸத்ர்ஶங்களான திருச்சரங்களை நடத்தின. (ஆதிநீ) லங்கைக்கு அரணான ஸமுத்ரத்தைத் தூர்த்து, அரணையழித்து, ராக்ஷஸருடைய ஹ்ருதயங்களை யழித்து, திருச்சரங்களாலேஉடல்களைத்துணித்துச்செய்த ஆணைத்தொழில்களாலேவீரர்களில் ப்ரதாநனான வீரன் நீயென்கிறார். ஆதிஶப்தம் - ப்ரதாநத்தைச் சொல்லுகிறது.

(இரக்க மண்கொடுத்தவற்கு) நீ அர்த்தியாய்ச் செல்ல ப்ரத்யாக்யாநம் பண்ணுதல், சுக்ரனுடைய உபதேஶங் கேட்டல் செய்யாதே, பூமியைத்தந்த மஹாபலிக்கு. (இரக்கமொன்றுமின்றியே) பூமியில் அவனுக்கு ஒருபதந்யாஸமும் ஶேஷியாதபடி. (பரக்கவைத்தளந்துகொண்ட) சிறுக்காலைக் காட்டி மூன்றடியிரந்து, இரண்டடியாலே பூமிப்பரப்படையவளந்துகொண்ட.

முப்பத்திரண்டாம்பாட்டு. ப்ரத்யாக்யாநம் - இல்லையென்கை. ஔதார்யமுங் கொடுத்தவனன்றோவென்றுபாராமை. (௩௨)

(பற்பபாதனல்லையே) புஷ்பஹாஸஸுகுமாரமான திருவடிகளைக் கொண்டுகாடுமோடையுமளந்துகொண்டவனல்லையோ. திருவடிகளின் ஸௌகுமார்யமும்பார்த்திலை, மஹாபலிபக்கல் ஔதார்யமும் பார்த்திலை, அர்த்திக்கிறவன் ப்ரயோஜநாந்தர பரனென்றும் பார்த்திலை, அந்த விந்த்ரனுடைய இரப்பையே பார்த்த வித்தனையிறே. இதென்ன ஆச்சர்யமென்று வாக்யசேஷம். ... ... (௩௨)

அ.—முப்பத்து மூன்றாம்பாட்டு. ஆச்ரிதரக்ஷணத்தில் ஸ்வபாவஸித்தியில்லாதவோபாதி ஆச்ரயிப்பார்க்கும் ஜாதிநியதியில்லை யென்கிறார்.

மின்னிறத்தெயிற்றரக்கன்வீழவெஞ்சரந்துரந்து
பின்னவற்கருள்புரிந்தரசளித்தபெற்றியோய் !
நன்னிறத்தோரின்சொலேழைபின்னைகேள்வ! மன்னுசீர்
பொன்னிறத்தவண்ணனாயபுண்டரீகனல்லையே. (௩௩)

ப-ரை.—மின் - மின்னலைப்போன்ற, நிறத்து - ஒளியையுடைத்தான, எயிறு - எயிற்றையுடைய, அரக்கன் - ராக்ஷஸனான ராவணன், வீழ - முடியும்படியாக, வெம் - க்ரூரமான, சரம் துரந்து - சரங்களையெய்து, பின்னவற்கு - அவன் தம்பியான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு, அருள்புரிந்து - க்ருபைசெய்து, அரசளித்த - ராஜ்யத்தைக்கொடுத்த, பெற்றியோய் - சீலவத்தையையுடையவனே, நல் நிறத்து - நல்லநிறத்தையும், ஓர் இன்சொல் - மிகவுமினிதான சொல்லையுமுடையளாய், ஏழை - தேவரீர்பக்கல் அதிசபலையான, பின்னை - நப்பின்னைப்பிராட்டிக்கு, கேள்வ - வல்லபனானவனே. மன்னு - நித்யமான, சீர் - ஔதார்யாதிகுணங்களையும், பொன்னிறத்த வண்ணனாய - ஸ்ப்ருஹணீயமான விக்ரஹத்தையுமுடைய, புண்டரீகனல்லையே - புண்டரீகாக்ஷனல்லையோ. (௩௩)

வ்யா.—(மின்னிறத்தெயிற்றரக்கன்) மின்போலே யொளியையுடைத்தான எயிற்றோடே கூடின ராக்ஷஸனான ராவணன். "மின்னிறத்தெயிறு" என்று - புஜபலத்தால் வந்த செருக்குக்கு ஸூசகமாயிருக்கிறது. "அரக்கன்" என்கையாலே - அத்தோள்வலி பரஹிம்ஸைக்கேயாகை ஜாதிஸ்வபாவமாயிருக்கை. ஸத்ப்ரக்ருதிகளுடைய தோள்வலியிறே ஸாத்விகர்க்கு ஒதுங்க நிழலாயிருப்பது. (வீழவெஞ்சரம்துரந்து) அவன் முடியும்படியாக * பாவகஸங்காசங்களான சரங்களையெவி. (பின்னவற்கருள்புரிந்தரசளித்த பெற்றியோய்) அவன் தம்பிக்கு ப்ரஸாதத்தைப் பண்ணி ராஜ்யத்தைக்கொடுத்த ஶீலவத்தையையுடையவனே. "राघवं शरणं गतः" "ராகவம்ஶரணங்கத:" என்ற அத்தையே கொண்டு ஸ்ரீவிபீஷணாழ்வானை அவன்தம்பியென்று பாராதே, "वध्यतां वध्यताम्" "வத்யதாம், வத்யதாம்" என்ற மஹாராஜ ப்ரப்ருதிகள்வார்த்தையையுங்கேளாதே, "न त्यजेयम्" "एतद्व्रतं मम" "நத்யஜேயம்" "ஏதத்வ்ரதம்மம" என்று - ப்ரஸாதத்தைப்பண்ணி, ராஜ்யஸ்ப்ருஹை அவனுக்கின்றிக்கேயிருக்க, "दासवच्चावमानितः" "தாஸவச்சாவமாநித:" என்று-புறப்படவிட்டானென்று அந்த லங்காராஜ்யத்தைக் கொடுப்பதே!, இதென்ன ஸ்வபாவமென்கிறார். பெற்றி-ஸ்வபாவம்.

அ

(நன்னிறத்தோரின்சொலேழை பின்னைகேள்வ) நல்லநிறத்தையும், இனியபேச்சையுமுடையளாய், தேவரீர்பக்கல் அதிசபலையான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனே. இத்தால்-நப்பின்னைப்பிராட்டியுடைய ரூபகுணங்களும் ஆத்மகுணங்களும் தேவரீர்க்கு போக்யமா யிருக்குமாப்போலே, ஸ்ரீவிபீஷணாழ்வான்தேவரீர்க்குபோக்யனாயிருக்கும்படியைச்சொல்லுகிறது.(மன்னுசீர்ப்பொன்னிறத்த வண்ணனாய புண்டரீகனல்லையே) நித்யமான ஔதார்யாதி குணங்களையும், "[illegible]" "அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருஶ்யதே" என்றும், "[illegible]" "ருக்மாபம்" என்றும் சொல்லுகிற ஸ்ப்ருஹணீயவிக்ரஹத்தையுமுடையையாய், "[illegible]" "யதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிறபடியே புண்டரீகாக்ஷனாயிருக்கிறவனல்லையோ. இதென்ன வாஶ்சர்யமென்று வாக்யஶேஷம். நிறம்-வடிவு. வண்ணம் - நிறம். ஆக, அவயவஶோபையையும் வர்ணசோபையையும் சொல்லுகிறது. இத்தால் - ஆதித்யமண்டல மத்யாவதாரத்தின் ஆத்மகுணங்களும் ரூபகுணங்களும் மஹர்ஷிவர்க்கத்துக்கு போக்யமா யிருக்குமாப்போலே, ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு போக்யபூதனா யிருக்கிறபடியைச் சொல்லுகிறது. ... (௩௩)

அ.—முப்பத்துநாலாம்பாட்டு. கீழ்ப்பாட்டில் - ருசியுடைய விபீஷணாழ்வானை ஜந்மத்தால்தாழ்வுபாராதே விஷயீகரிக்கும் சக்ரவர்த்தித்திருமகனுடைய நீர்மையையநுபவித்தார்; இதில் - கார்ய காரணங்களென்ன, ப்ரமாண ப்ரமேயங்களென்ன, ஸகலமும் ஸ்வாதீநமாம்படியிருக்கிற நீ புருஷார்த்தருசியில்லாதார்க்கு ருசிஜநகனாய்க்கொண்டு கோபஸஜாதீயனாய்வந்தவதரித்த விதென்னவாச்சர்யமென்கிறார்.

ஆதியாதியாதிநீயோரண்டமாதியாதலால்
சோதியாதசோதிநீயதுண்மையில்விளங்கினாய்;
வேதமாகிவேள்வியாகிவிண்ணினோடுமண்ணுமாய்
ஆதியாகியாயனாயமாயமென்னமாயமே. (௩௪)

ப-ரை.—ஆதியாதியாதிநீ-த்ரிவிதகாரணமும்நீ;ஒரண்டமாதி-ஏகரூபமான அண்டஜாதியுமாகிறாய்; ஆதலால்-இப்படி ஸகலஜகத்காரணபூதனாகையாலே, சோதியாத-பரீக்ஷிக்கவேண்டாத, சோதிநீ - தேஜஸ்தத்வம்நீ; அது - அந்த தேஜஸ்தத்வம் நித்யநிர்தோஷமாகையாலே, உண்மையின்—இதரஸஜாதீயனாய்க்கொண்டு, விளங்கினாய்-விளங்கினவனே, வேதமாகி - நித்யநிர்தோஷமானவேதத்துக்கு நிர்வாஹகனாய், வேள்வியாகி - ததர்த்தமான யாகத்துக்கு நிர்வாஹகனாய், மண்ணும்-போக பூமிக்கும், விண்ணினோடு - மோக்ஷபூமிக்கும், ஆய்-நிர்வாஹகனாய், ஆதியாகி - இந்த ருசிஜநகனாய்க்கொண்டு, ஆயனாயமாயம்-கோபஸஜாதீயனாய் அவதரித்த ஆச்சர்யம், என்னமாயம்-என்ன ஆச்சர்யமென்று ஈடுபடுகிறார். (௩௪

வ்யா.—(ஆதியாதியாதி) "[illegible]" "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத், ஏகமேவாத்விதீயம்" என்கிறபடியே த்ரிவிதகாரணமுமநீ. எதுக்குக்காரணமாகிறதென்னில்; மஹதாதிவிசேஷாந்தமான ப்ராக்ர்தஸ்ர்ஷ்டிக்கு "[illegible]" பஹுஸ்யாம்" என்கிற ஸங்கல்பத்தாலே காரணபூதன். (ஓரண்டமாதி) மஹதாத்யவஸ்தனான நீயே ஏகரூபமான வண்டஜாதியுமாவுதி. "[illegible]" "ஈத்ர்சாநாம்ததா" என்கிறபடியே அண்டங்கள் ஏகரூபமாயிறேயிருப்பது. ஏகவசநம்-ஜாத்யபிப்ராயத்தாலே. அதாகிறது - அண்டத்தில் உத்பந்நமான ப்ரஹ்மாதி பிபீலிகாந்தமான ஸகலபதார்த்தங்களையும் ஸ்ர்ஷ்டித்து, ததநுப்ரவேசத்தாலே ஸகலாந்தர்யாமியாய் நிற்கை. (ஆதலால் சோதியாதசோதிநீ) இப்படி ஸகலஜகத்காரணபூதனுகையாலே பரிக்ஷிக்க வேண்டாத உபாஸ்யதேஜஸ்தத்வம்நீ. உபாஸ்யமான தேஜஸ்தத்வம் - த்ரிவித மஹாபூதமோ, தேவதையோ, ஆதித்யனோ, வைச்வாநராக்நியோ வென்று சங்கித்து, ஸர்வநிர்வாஹகமான தேஜஸ்தத்வமே யுபாஸ்யமென்று நிர்ணயிக்கவேண்டாதிருக்கை. "[illegible]" "[illegible]" "[illegible]" "அதயாதத: பரோதிவோஜ்யோதி" "ததேவஜ்யோதிஷாஞ்ஜ்யோதி" "நாராயணபரோஜ்யோதி" என்கிற தத்வமல்லையோநீ. (அதுண்மையில் விளங்கினாய்) அந்ததேஜஸ்தத்வம் நித்யநிர்த்தோஷப்ரமாணஸித்தமாகையாலே, இதரவிஸஜாதீயனாய்க்கொண்டு விளங்கினவனே.

(வேதமாகி) வேதத்திறுடைய நித்யநிர்த்தோஷத்வத்துக்கு நிர்வாஹகனாய். அதாவது - ஸம்ஹாரவேளையில் திருவுள்ளத்திலே ஸம்ஸ்காரத்தாலே வைத்து, "[illegible]" "யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதிதஸ்மை" என்கிறபடியே ஆதியிலே வேதத்துக்கு அத்யாபகனுகை. (வேள்வியாகி) ததர்த்தமான யாகத்துக்கு நிர்வாஹகனானவனே. அதாவது - ஆராத்யனுகை. (விண்ணின்றுடுமண்ணுமாய்) ஆராதநபலமான போகமோக்ஷபூமிகளுக்கு நிர்வாஹகனாய். "விண்" என்று-பரமபதம். "மண்" என்று-சதுர்த்தசபுவநத்துக்கு முபலக்ஷணம். யாகம் அந்யோந்ய விருத்தங்களான போகமோக்ஷங்களிரண்டுக்கும் ஸாதநமாமோ வென்னில்; ஜீவபரயாதாத்ம்யஞ்ஞாநபூர்வகமான யாகம் மோக்ஷத்துக்கும், கேவலயாகம் போகத்துக்கும் ஸாதநமாகையாலே அவிருத்தம். (ஆதியாகி) இதெல்லாம் ருசியுடையவனுக்குகங்கம்றே; அந்தருசிஜநகனாய்க்கொண்டு. (ஆயனாயமாய மென்னமாயமே) அதீந்த்ரியமான இவ்விக்ரஹத்தை கோபஸஜாதீயமாக்கி ருசியில்லாதார்க்கு ருசிஜனகமாய்க்கொண்டு வந்தவதரித்த விது என்ன வாச்சர்யம். (௩௪)

முப்பத்துநாலாம்பாட்டு. த்ரிவித மஹாபூதம் - ஆகாசமும், அக்நியும், வாயுவும். ... ... (௩௪)

அ.—முப்பத்தஞ்சாம்பாட்டு. அதீந்த்ரியமான திவ்யவிக்ரஹத்தை கோபஸஜாதீயமாக்கி, ருசியில்லாதார்க்கு ருசிஜநகனாய்க்கொண்டு அவதரித்த வேற்றத்தை யநுபவித்தார்-கீழ்ப்பாட்டில்;இதில்-ஒரு கோபஸ்த்ரீக்குக் கட்டவும் அடிக்கவும் விடவுமாம்படி நியாம்யனான குணாதிக்யத்தை யநுஸந்தித்து, திரியவும் க்ர்ஷ்ணாவதாரத்திலே யீடுபடுகிறார்.

அம்புலாவுமீனுமாகியாமையாகியாழியார்
தம்பிரானுமாகிமிக்கதன்புமிக்கதன்றியும்
கொம்பராவுநுண்மருங்குலாயர்மாதர்பிள்ளையாய்
எம்பிரானுமாயவண்ணமென்கொலோவெம்மீசனே. (௩௫)

ப-ரை.—ஆழியார் தம்பிரானுமாகி - திருவாழியையுடைய ஸர்வாதிகனானவன், அன்புமிக்கு - சேதநாபசகல ஸங்காதிசயத்தாலே, அம்பு - ஜலத்திலே, உலாவு-வர்த்திக்கிற, மீனுமாகி-மத்ஸ்யமாய், அம்ர்தமதநவேளையிலேமந்தரதாரணார்த்தமாக, ஆமையாகி-கூர்மமாய்,மிக்கது-கைகழியவவதரித்து; அன்றியும்—,கொம்பு-பூங்கொம்புபோலேயும், அரவு-ஸர்ப்பம்போலேயும், நுண்-ஸூக்ஷ்மமான, மருங்குல் - இடையையுடைய, ஆயர்மாதர் பிள்ளையாய்-யசோதைப்பிராட்டிக்குப்பிள்ளையாய், எம்பிரானுமாயவண்ணம்-எங்களை அநந்யார்ஹமாக்கிக்கொண்டது, என்கொல் - என்ன ஆச்சர்யம், எம்மீசனே - எங்களுக்கு நிர்வாஹகனானவனே! என்று ஈடுபடுகிறார். (௩௫)

வ்யா.—"ஆழியார் தம்பிரானுமாகி - அம்புலாவுமீனுமாகி யாமையாகி - மிக்கது" என்றந்வயமாகக் கடவது. "తమసః పరమో ధాతా శఙ్ఖచక్రగదాధరః" "தமஸ:பரமோதாதா ஶங்கசக்ரகதாதர:" என்கிறபடியே ஸர்வேஶ்வரத்வஸூசகமான திருவாழியையுடைய ஸர்வாதிகனுமாய் வைத்து. (அம்புலாவுமீனுமாகி) அம்பிலே வர்த்திக்கிற மத்ஸ்யமாய. அப்பை, "அம்பு" என்று மெலித்துக்கிடக்கிறது. "முதுகில் மலைகளை மீதுகொண்டு வருமீனை" என்கிறபடியே ப்ரளயார்ணவத்திலே நோவுபட்டதேவர்களுடைய ஆபத்தைப் போக்குகைக்காகத் தன்னிலமான நீரிலே ஸஞ்சரிக்கக்கடவதான மத்ஸ்யமுமாய். சஹப்தத்தாலே - தேவயோநி மநுஷ்யயோநிகளில் பண்ணின வவதாரங்களால் பர்யவஸியாத அநுக்ரஹாதிசயத்தைச் சொல்லுகிறது. (ஆமையாகி) அம்ர்தமதநவேளையிலே மந்தரதாரணார்த்தமாக கூர்மமாய். "కూర్మం భూతం సర్పన్తమ్" "கூர்மம் பூதம் ஸர்ப்பந்தம்" என்கிறபடியே ப்ரளயவேளையில் கூர்மவிக்ரஹத்தைச் சொல்லிற்றாகவுமாம். (மிக்கது) க்ஷுத்ரயோநியென்றும் பாபயோநியென்றும் பாராதே கைகழியவவதரித்து.(அன்புமிக்கு) ஆபந்நராய், அவதாரங்களுக்குநிமித்தபூதரான சேதநர்பக்கலுண்டான ஸங்காதிசயத்தாலே யவதரித்த வித்தனையிறே. ஒருகூர்மம்ப்ரேரிக்கவாதல், ஒருகர்த்தாப்ரேரிக்கவாதலன்றிறே; "மீனோடாமை முந்தானானனில் தானுயசங்கு" என்னக்கடவதிறே. (அன்றியும்) அதுக்குமேலேஸூரிபோக்யமானவடிவைஜலசரஸஜாதீயமாக்குவதே! என்று அதிலேயீடுபட்டாய்த்து இவர்தாமிருப்பது.

அதிற்காட்டிலும் க்ருஷ்ணாவதாரத்தில் ஸௌலப்யம் தம்மை யீடுபடுத்தினபடியைச் சொல்லுகிறார்மேல் (கொம்பராவுநுண் மருங்குலாயர்மாதர்பிள்ளையாய்) கொம்புபோலேயும் அரவுபோலேயும் நுண்ணிய இடையையுடைய அசோதைப்பிராட்டிக்குப்பிள்ளையாய். மத்ஸ்யாத்யவதாரங்களில் ரக்ஷணத்திலே தன்ஸ்வாதந்த்ர்யங்கள் குலைந்ததில்லை; இதில் ஒருகோபஸ்த்ரீக்குக்கட்டவும் அடிக்கவுமாம்படி நியாம்யனாய்வந்தவதரித்தஸௌலப்யமுண்டிறே, "ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம்" என்கிற ஸ்வரூபமும் அழிந்ததிறே இதில். அவதாரங்களில் ஸ்வரூபத்தையுமழியமாறின வித்தனையிறே. (எம்பிரானுமாயவண்ணமென்கொலோ) அவர்களுக்குக் கட்டவுமடிக்கவுமாம்படியான நீர்மையைக்காட்டி எங்களை அநந்யார்ஹமாக்கிக்கொண்டதென்செய்தபடி. பஹுவசநத்தாலே - மற்ற ஆழ்வார்களையும் கூட்டிக்கொள்ளுகிறார். (எம்மீசனே) அறிந்தோம் - எங்களுடைய விழவுபேறுகள் உன்னதென்னும்படியான ஸம்பந்தத்தாலே.(௩௫)

அ.—முப்பத்தாறும்பாட்டு. கீழ்ச்சொன்ன பாரதந்த்ர்யத்தை அநுபாஷித்து அவ்வவதாரங்களின் ஆச்சர்ய சேஷ்டிதங்களிலே யீடுபடுகிறார்.

ஆடகத்தபூண்முலையசோதையாய்ச்சிபிள்ளையாய்ச்
சாடுதைத்தோர்புள்ளதாவிகள்ளதாயபேய்மகள்
வீடவைத்தவெய்யகொங்கையையபாலமுதுசெய்
தாடகக்கைமாதர்வாயமுதமுண்டதென்கொலோ. (௩௬)

ப-உ.—ஆடகத்த - பொன்னாற்செய்த, பூண் - ஹாரத்தாலே அலங்க்ருதமான, முலை - ஸ்தநங்களையுடையளான, ஆய்ச்சி - இடைச்சியான, அசோதை - யசோதைப்பிராட்டிக்கு, பிள்ளையாய் —, முலைவரவுதாழ்க்கச் சீறி நிமிர்ந்த திருவடிகளாலே, சாடு - சகடாஸுரனை, உதைத்து - உதைத்து முறித்து, ஓர் - ஒப்பற்ற, புள்ளதாவி - புள்ளின் கருத்தையுடையனான, கள்ளதாய - க்ருத்ரிமத்தாயான, பேய்மகள் - பூதனையானவள், வீட - நீயழியும்படிக்காக, வைத்த - உள்திருப்பவளாக்கிலேவைத்த, வெய்யகொங்கை - க்ரூரமானமுலையிலுள்ள, ஐய - ஸூக்ஷ்மமான ப்ராணனை க்ரஹிக்கவல்ல, பால் - பாலை, அமுதுசெய்து - அமுது செய்தருளி, ஆடகம் - ஸ்வர்ணாபரணங்களாலே அலங்க்ருதமான, கை - கைகளையுடையரான, மாதர்வாயமுதம் - ஸ்த்ரீகளின் அதராம்ருதத்தை, உண்டது - புஜித்தது, என்கொலோ - இவ்விஷத்துக்கு பரிஹாரமாகவோவென்கிறார். (௩௬)

வ்யா.—(ஆடகத்தபூண்முலையசோதையாய்ச்சிபிள்ளையாய்) "கொம்பராவுநுண்மருங்குலாயர் மாதர்பிள்ளையாய்" என்றதுதன்னையே முகபேதத்தாலேயநுபவிக்கிறார். (ஆடகத்தபூண்முலை) பொன்னாலே செய்த ஹாரத்தாலே அலங்க்ருதமான முலையை யுடையவள். "க்ருஷ்ணன் அமுதுசெய்யக்கடவன்" என்று முலையை யொப்பித்துக்கொண்டு நிற்கிறாளாய்த்து-அவள்; அந்தப்ரேமத்தை யநுபவிக்கிறாரிறே-இவர். "ஆயர்மாதர் பிள்ளையாய்" என்ற ஸாமாந்யத்தை, "அசோதையாய்ச்சிபிள்ளையாய்" என்று விசேஷிக்கிறார்.

முப்பத்தாறும்பாட்டு. "ஆடகம்" என்றது - ஹாடகமாய், அத்தால் - பொன்னைச் சொல்லுகிறது.

ஸர்வநியந்தாவானவன், ஓரிடைச்சி, "என்மகன்" என்று நியமிக்கலாம்படியிருக்கிற ஆச்சர்யத்தில்நின்றும் கால்வாங்கமாட்டுகிறிலர். (சாடுதைத்து) ஸ்தந்யார்த்தியாய்த்திருவடிகளை நிமிர்த்து ஶகடாஸுரனை நிரஸித்து. "[illegible]" "தநம்மதீயம் தவபாத பங்கஜம்" என்றும், "கோலமாமென் சென்னிக்கு" என்றும்-அநந்யப்ரயோஜநர்க்குப்ராப்யமான திருவடிகளை துஷ்ப்ரக்ருதிகளுக்குவத ஸாதநமாக்குவதே! என்கை. (ஓர்புள்ளதாவிகள்ளதாயபேய்மகன்) பிள்ளைகளுங்கஸஞ்சரிக்கும்புள்ளின் கருத்தையுடையளாய், அபூர்வையென்றுசங்கித்து விலங்கவொண்ணாதபடி க்ருத்ரிமஜநநியான பேய்ப்பெண். "ஓர்புள்" என்று - தப்பவொண்ணாதபடி யனுங்கப்பண்ணும் புள்ளென்றபடி.

(வீடவைத்த வெய்யகொங்கை) ஜகஜ்ஜீவநமான வுன்திறத்திலே தீங்கை விளைப்பாளாகத் திருப்பவளத்திலே வைத்த க்ரூரமான முலையில். (ஐயபால் அமுதுசெய்து) ஸூக்ஷ்மமான ப்ராணனைப்புக்ரஹிக்கவல்ல அதிஸூக்ஷ்மமானபாலை யமுதுசெய்து. அவள் தன்னுடையக்ரௌர்யத்தையும், ஸ்தநத்திலுடையக்ரௌர்யத்தையும்பிரித்துப்பேசுகிறாராய்த்து தம்முடைய பயாதிசயத்தாலே. "ஐய" என்று ஸம்போதநமாகவுமாம். பூதனையைத் தாயென்று மௌக்த்யத்தாலே அவள்முலையை யமுது செய்தான். ப்ரகாசஸந்நிதியில் தமஸ்ஸுப்போலே துஷ்ப்ரக்ருதிகள் நசிக்கும் தர்மி ஸ்வபாவத்தாலே. அத்தலையித்தலையான வித்தனை. (ஆடகக்கைமாதர்வாயமுதமுண்டதென்கொலோ) அப்பருவத்திலே "உன்னையுமொக்கலையில் கொண்டு" என்னுமாப்போலே, அவ்வூரில கந்நிகைகள் தங்கள்க்ருஹத்திலே கொண்டுபோக, யௌவநதசையைப் பரிக்ரஹித்து விதக்தனாய்க்கலந்து அவர்கள் வாகம்ர்தத்தையுண்டவிதுவென்னோ. (ஆடகக்கைமாதர்) பொன்னாலே யலங்கரித்த கைவளையையுடைய பெண்கள். அவனைப் பிடிக்குங்கையென்றும், அவனணைக்கும் கொங்கையென்றும் அலங்கரிக்கிறார்களாய்த்து. "என்கொலோ" என்றது - அவ்விஷத்துக்கு இவ்வாகம்ர்தம் பரிஹாரமோ, ஸர்வாதாரனாய் வேறுதாரகாந்தரமின்றிக்கே யிருக்கிற உனக்கு ப்ரதிகூலர் ப்ராணனும் அநுகூலர்ப்ரேமமும் தாரகமாயிருக்கிறதோ. பால்யாவஸ்தையிலே யுவாவாயும், யுவாவான நீபாலனாயுமிருந்த விது என்னவாச்சர்யமென்கிறார்... ... . (௩௬)

அ.—முப்பத்தேழாம்பாட்டு. பின்பு க்ருஷ்ணாவதாரத்தில் விதக்த சேஷ்டிதங்களையும் முக்தசேஷ்டிதங்களையும் அநுபவிக்கிறவர், மௌக்த்யத்தாலும ஸௌலப்யத்தாலும் வரையாதே எல்லாரையும் தீண்டினபடியாலும் க்ருஷ்ணாவதார ஸத்ருசமான வடதளசாயியையும், ஸ்ரீவராஹவாமந ப்ராதுர்ப் பாவங்களையும், க்ருஷ்ணாவதாரத்தோடொக்க வநுபவிக்கிறார்.

(புள்ளதாவி) ஆவி-மநஸ்ஸு. புள்ளாவது-பறவை. "[illegible]" "ததாஷம்" என்கிற பக்ஷியிலே ஒருகொக்குவிசேஷம். ... (௩௬)

காய்த்தநீள்விளங்கனியுதிர்த்தெதிர்ந்தபூங்குருந்தம்
சாய்த்துமாபிளந்தகைத்தலத்தகண்ணனென்பரால்
ஆய்ச்சிபாலையுண்டுமண்ணையுண்டுவெண்ணெயுண்டுபின்
பேய்ச்சிபாலையுண்டுபண்டோரேனமாயவாமநா. (௩௭)

ப-ரை.—க்ருஷ்ணன்மேலே விழுகைக்குறுப்பாக, சாய்த்த - பரப்புமாறக் காய்த்து, நீள்-ஓங்கிநின்ற, விளங்கனி-விளாவான அஸுரனுடைய கனிகளை, உதிர்த்து-கன்றைவிட்டெறிந்து உதிர்த்து, எதிர்ந்த-போராதே நின்ற, பூ-புட்டாக்கிடப் பூத்துக்கிடக்கிற, குருந்தம்-குருந்தமரத்தை, சாய்த்து-வேரோடே பறித்து விழ விட்டு, மா-குதிரையை, பிளந்த-இருகூறாகப் பிளந்துபோகட்ட, கைத்தலத்த-திருக்கையையுடைய, கண்ணன் என்பர்-க்ருஷ்ணனென்று வ்யாஸபராசராதிகள் சொல்லாநின்றார்கள்; ஆய்ச்சி-யசோதைப்பிராட்டியுடைய, பாலையுண்டு-பாலையமுது செய்து, வெண்ணெயுண்டு - வெண்ணெயையமுதுசெய்து, பேய்ச்சி - தாய் வடிவுகொண்டு வஞ்சகையாய்வந்த பூதனையுடைய, பாலையுண்டு-முலைப்பாலையமுது செய்து, பின் - கல்பாவஸாநத்திலே, சிறிய திருவயிற்றிலே, மண்ணையுண்டு - ஜகத்தையடைய அமுதுசெய்து, பண்டு-கல்பாதியிலே, ஓர்-அத்விதீயமான, ஏனமாய - வராஹாவதாரஞ்செய்தருளி பூமியை யெடுத்து ரக்ஷித்து, அந்த பூமியை மஹாபலி அபஹரிக்க, வாமநா - வாமநாவதாரஞ் செய்தருளி அளந்துகொண்டவனே! என்று சொல்லுகிறார். (௩௭)

வ்யா.—(காய்த்தநீள் விளங்கனியுதிர்த்து) க்ருஷ்ணன்மேலே விழுகைக்குறுப்பாகப் பரப்புமாறக்காய்த்து ஓங்கிநின்ற விளாவான அஸுரனுடைய கனிகளை, கன்றைவிட்டெறிந்து உதிர்த்து. (எதிர்ந்த பூங்குருந்தம் சாய்த்து) விளாவான அஸுரனையழியச் செய்து, க்ருஷ்ணன் கிட்டின பின்பும் போராதே நின்ற பூங்குருந்தை ஊசி வேரோடே பறித்து விழவிட்டு. இதுவும் அவன்மேலே விழுந்து புஷ்பாபசயம்பண்ணுகைக் குறுப்பாகப்பரப்புமாறப் பூத்துநின்ற தாய்த்து. இவை யிரண்டாலும் - அநுகூல வேஷராய் நலியவந்த அஸுரர்களை யழியச்செய்தபடி சொல்லிற்று. (மாபிளந்த) ப்ரதிகூலரூபே வாய்பாறி ஊரையழிக்கவந்த கேசியை அநாயாஸேந இருகூறாகப்பிளந்து அவ்வாபத்தைப்போக்கினவன். (கைத்தலத்தகண்ணனென்பரால்) ஓராயுதத்தாலன்றிக்கே லீலையாகவழித்த திருக்கையையுடைய க்ருஷ்ணனென்று ஜ்ஞாநாதிகரான வ்யாஸபராசராதிகள் சொல்லாநிற்பர்கள். (ஆய்ச்சிபாலை யுண்டு மண்ணை யுண்டு வெண்ணெயுண்டு பின்பேய்ச்சிபாலையுண்டு) (ஆய்ச்சிபாலையுண்டு-வெண்ணெயுண்டு) யசோதைப்பிராட்டியுடைய பாலையும் வெண்ணெயையும் அமுதுசெய்து. இத்தால் - "ஜிஷ்ணு:" என்கிறதத்வத்துக்கு ஆச்ரிதஸ்பர்ஶமுள்ளதொரு த்ரவ்யத்தாலன்றிக்கே செல்லாதிருக்கிறபடியைச் சொல்லிற்று. (பேய்ச்சிபாலையுண்டு) தாய் வடிவுகொண்டு விநாசகையாய் வந்த பூதனையினுடைய முலையையமுது செய்து அவ்வழியாலே அவளைமுடித்து. யஶோதையினுடையபாலோபாதி பூதனையுடைய ப்ராணனும் தாரகமாயிருக்கிறபடி.

(பின்மண்ணையுண்டு)க்ர்ஷ்ணனுடைய மௌக்த்யத்தை யநுபவித்தஸமநந்தரம்தத்ஸத்ர்சமான வடதளஶாயியுடைய மௌக்த்யத்தையநுபவிக்கிறார். கல்பாவஸாநத்திலே சிறியதிருவயிற்றிலே ஜகத்தையடைய வமுதுசெய்தால் ஸாத்மியாதென்றறியாதமௌக்த்யமிறே வடதளஶாயியுடைய மௌக்த்யம். (பண்டேனமாய வாமனா)கல்பாதியிலே ஸ்ரீவராஹமாய், ஒருத்தர் அர்த்தியாதிருக்க பூமியையெடுத்துரக்ஷித்து, அந்தபூமியை மஹாபலியபஹரிக்க ஸ்ரீவாமநனாயளந்துகொண்டவனே. தன்னையழியமாறி ரக்ஷித்தஸௌலப்யத்துக்கும், வரையாதே எல்லாரையுந்தீண்டின சீலத்துக்கும் க்ர்ஷ்ணாவதாரத்தோடு ஸாம்யமுண்டாகையாலே இவ்வவதாரங்களையநுபவிக்கிறார்.... ... ... (கூள)

அ.—முப்பத்தெட்டாம்பாட்டு. “[illegible]” “பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய சதுஷ்க்ர்தாம்” என்கிறபடியே - ப்ரதிகூலரை யழியச்செய்தும் அநுகூலரை யுகப்பித்தும்செய்தருளின க்ர்ஷ்ணாவதாரசேஷ்டிதங்களையநுபவிக்கிறார்.

கடங்கலந்தவன்கரிம ருப்பொசித்தோர்பொய்கைவாய்
விடங்கலந்தபாம்பின்மேல்நடம்பயின்றநாதனே!
குடங்கலந்தகூத்தனாயகொண்டல்வண்ணதண்டுழாய்
வடங்கலந்தமாலைமார்பகாலநேமிகாலனே. (கூஅ)

ப-ரை.—கடம் கலந்த - மதஜலம் வ்யாப்தமானவுடம்பையுடைய, வன - அதிப்ரபலமாயிருந்த, கரி-குவலயாபீடமென்னும் யானையினுடைய, மருப்பு-கொம்பை, ஒசித்து - முறித்து, ஓர் - அதிபயங்கரமானகையாலே அத்விதீயமான, பொய்கைவாய்-பொய்கையிலே, விடம்கலந்த - மிக்கவிஷத்தையுடைய, பாம்பின்மேல்-காளியனுடைய பணங்களின்மேலே, நடம்பயின்ற - நர்த்தநஞ்செய்தருளி, அத்தாலே, நாதனே - உனனுடையநாதத்வத்தை ப்ரகாசிப்பித்தவனாய், கலந்த-கையில்பொருந்தின, குடம்-குடத்தையுடையனாய், கூத்தனாய-ஜாதிப்ரயுக்தமான கூத்தை யுடையனாய், கொண்டல் வண்ண - காளமேகஶ்யாமமான வடிவையுடையனாய், தண்-குளிர்ந்த, துழாய்வடம் - திருத்துழாய்வடத்தோடும், மாலைகலந்த-வநமாலையோடுங்கூடின, மார்ப - திருமார்பையுடையவனாய, காலநேமி-தேவர்களுக்கு விரோதியான காலநேமிக்கு, காலனே-ம்ர்த்யுவானவனே! என்று அவனுடைய ஆச்ரிதபக்ஷபாதாதிசயத்தில் ஈடுபடுகிறார். ()

வ்யா.—(கடங்கலந்தவன் கரிமருப்பொசித்து) குவலயாபீடத்தை மதிப்பித்தபடியாலே அம்மதஜலம் உடம்பிலே வ்யாப்தமாய் அதிப்ரபலமாயிருந்தவதின் கொம்பைமுறித்து. இத்தால்-ஸ்வாபாவிகமானபலத்தாலும் மதபலத்தாலும் துர்ஜயமான குவலயாபீடத்தை அநாயாஸேந வழித்தானென்கை. கடம்-ஆனைமதம். (ஓர்பொய்கைவாய்விடங்கலந்தபாம்பின்மேல்நடம்பயின்றநாதனே) “[illegible]” “வாதாஹதாம்புவிக்ஷேபஸ்பர்ஶதக்தவிஹங்கமம்” என்கிறபடியே அதிபீஷணமாகையாலே அத்விதீயமான பொய்கையிலே.

முதலைகிடந்த பொய்கையும் இதுக்கு ஸத்ரஶமன்றென்னைகை. விஷமே யிவனுக்கு உபாதாந மென்னும்படி விஷப்ரசுரமான காளியனுடைய பணங்களிலே வல்லாராடினாப்போலே திருவடிகளை மாறியிட்டு, அவ்வழியாலே அவனை தமித்துப் போகவிட்டு, யமுனையை ஸர்வோபஜீவநமாம்படி பண்ணி, உன்னுடைய நாதத்வத்தை ப்ரகாஶிப்பித்தவனே. "[illegible]" "துஷ்டவ்ர்முதிதாகோபாத்ர்ஷ்டவாஶீவஜலாம்நதிம்" என்னக்கடவதிறே. இவ்வளவால் துஷ்க்ர்த்விநாஶஞ்சொல்லி, மேல் ஸாது பரித்ராணஞ்சொல்லுகிறது (குடங்கலந்தகூத்தனாய கொண்டல்வண்ண) கையில் திருவாழி பொருந்தினாப்போலே பொருந்தின குடத்தையுடையனாய், ஜாதிப்ரயுக்தமான கூத்தையாடி, மன்றிலே யுன்னுடைய வழகை ஸர்வஸ்வதாநம் பண்ணினவனே. ப்ரயோஜநாந்தர நிரபேக்ஷமாக ஜலஸ்தலவிபாகமன்றிக்கே வர்ஷிக்கும் மேகஸ்வபாவனே. குடக்கூத்தாடினபோதை காளமேகஶ்யாமமான நிறத்தைச்சொல்லிற்றாகவுமாம். (தண்டுழாய் படங்கலந்த மாலைமார்ப) இப்படி சுசரித்ரரான இடையருடைய சேஷ்டிதத்திலே யீடுபட்ட ஸர்வேஶ்வரனாய், "[illegible]" "அவாக்யநாதர:" என்கிற பூர்ணனென்கிறார். ஐச்வர்யஸூசகமான திருத்துழாய்வடத்தோடும் வநமாலையோடுங்கூடின திருமார்வை யுடையவனே. வடம்-தொடை. மாலை-வநமாலை. (காலநேமிகாலனே) ஆபந்நராய்த்திருவடிகளிலேவிழுந்த தேவர்களுக்கு விரோதியான காலநேமிக்கு ம்ர்த்யுவானவனே. இத்தால்-ஸர்வஸாதாரணனாயிருக்கச் செய்தேயும் தன்திருவடிகளிலே தலைசாய்த்தார்க்கு விரோதிகளானார், தனக்கு ஶத்ருவென்கை. ... ... (௩௮)

அ.—முப்பத்தொன்பதாம்பாட்டு. ஸாதுபரித்ராணமும் துஷ்க்ர்த்விநாஶமும் சொல்லிற்று - கீழ்ப்பாட்டில்; இதில் - இவ்வளவு புகுரநில்லாத விந்த்ராதிகளுடைய விரோதிகளான ராக்ஷஸவர்க்கத்தை யழியச்செய்து அவர்கள் குடியிருப்பைக் கொடுத்த படியையும், அவ்விந்த்ரன்றான் ஆச்ரிதனைக்குறித்து ப்ரதிகூலனானபோது அவனை யழியச்செய்யாதே முகாந்தரத்தாலே ஆச்ரிதனை ரக்ஷிக்கும் நீர்மையையும் அநுபவிக்கிறார்.

வெற்பெடுத்துவேலைநீர்கலக்கினாயதன்றியும்
வெற்பெடுத்துவேலைநீர்வரம்புகட்டிவேலைசூழ்
வெற்பெடுத்தவிஞ்சிசூழிலங்கைகட்டழித்தநீ
வெற்பெடுத்துமாரிகாத்தமேகவண்ணனல்லையே. (௩௯)

ப-ரை.—இந்த்ராதி தேவர்களபேக்ஷிதம் செய்கைக்காக, வெற்பெடுத்து-மந்தரபர்வதத்தை பரிகரமாகக்கொண்டு, வேலைநீர்-திருப்பாற்கடலை, அவர்களபேக்ஷிதங்களைக்கடைந்து, ...

மேலே, குரங்குகள் காலாலே நடந்துபோம்படி, வரம்புகட்டி-பூமியிலே அணைகட்டுமாப்போலே அணைகட்டி, வேலைசூழ் - கடலை அகழாகவுடைத்தாய்,]வெற்பு - த்ரிகூடபர்வதத்திலே விச்வகர்மாவாலே சமைக்கப்பட்டிருப்பதாய், எடுத்த-கடக்கவரிதான, இஞ்சிசூழ் - மதிளாலே சூழப்பட்ட, இலங்கை - லங்கையிலே, கட்டு-தர்மம் தங்காதபடியான ஸ்வபாவத்தை, அழித்த - மாற்றியருளின, நீ-தேவரீர், வெற்பெடுத்து - கோவர்த்தநபர்வதத்தையெடுத்து, மாரிகாத்த-வர்ஷாபத்தைப்போக்கி யருளின, மேகவண்ணனல்லையே - காளமேக நிபச்யாமமான வடிவையுடையவனல்லையோ என்கிறார்.

வ்யா.—(வெற்பெடுத்து வேலைநீர்கலக்கினாய்) துர்வாஸஶ் ஶாபத்தாலே இந்த்ராதிகள் ஐச்வர்யத்தையிழந்து, "[illegible]" "ஶரணம்த்வாமநுப்ராப்தா:" என்கிறபடியே-திருவடிகளிலே சரணம்புக, கடல்கொண்டு முழுகும் மந்தரத்தைப் பரிகரமாகக்கொண்டு ஸமுத்ரஜலத்திலே அவர்களிழந்தவையடங்கலும உத்பந்நமாம்படி கலக்கினாய். "[illegible]" "ரத்நாகரம், மத்ஸ்யாகரம்" என்று லோகப்ரஸித்தமாயிருந்துள்ள ஸமுத்ரஸ்வபாவத்தைத்தவிர்த்து ஸ்வர்க்கத்திலுள்ள பதார்த்தங்களுக்கு உத்பாதகமாக்கினாய். "[illegible]" "ஏதத்கதம் கதயகந்மதிதஸ்த்வயா ஸௌஹ்ருத்வாஸ்வபாவ நியமம் ப்ரதிதம்த்ரிலோக்யாம்। அஶ்வாப்ஸரோ விஷஸுதாவிது பாரிஜாத லக்ஷ்ம்யாத்மநாபரிணதோ ஜலதிர்ப்பபூவ" என்னக் கடவதிறே. "ப்ரயோஜநாந்தரபரன்" என்று அவன்சிறுமைபாராதே, மோக்ஷப்ரதனாயிருக்கிற தன்பெருமை பாராதே, "ஈஶ்வரோஹம்" என்றிருக்குமவனென்று அவனுடைய பூர்வவ்ருத்தம்பாராதே, "சரணமென்று நின்றான்" என்றத்தையே பார்த்துபகரித்தருளினாய். (அதன்றியும்) இதுதானே போருமாய்த்து ஆச்ரிதர் உன்னைத் தஞ்சமென்றுவிச்வசித்திருக்கைக்கு, அதுக்குமேலே. (வெற்பெடுத்து வேலைநீர் வரம்புகட்டி) கண்டமலைகளைப்பிடுங்கி, ஸமுத்ரஜலத்தின்மேலே, பூமியிலேவரம்புகட்டுமாப்போலே, ப்லவங்கங்கள காலாலேநடந்துபோம்படி அணைகட்டி. இதொரு அதிமாநுஷமான ஆஶ்சர்யம். அகாதமான ஸமுத்ரத்தில் மலையமிழ்ந்ததில்லை, திரைக்கிளர்த்தியில் மண்கரையப்பெற்றதில்லை. (வேலைசூழ் வெற்பெடுத்தவிஞ்சிசூழிலங்கை கட்டழித்தநீ) கடலை அகழாக வுடைத்தாய, த்ரிகூடபர்வதத்திலே விச்வகர்மாவாலே சமைக்கப்பட்டதாய், கடக்க வரிதான மதிளாலே சூழப்பட்ட லங்கையினரணை, "[illegible]" "யதாஸைகதமம்பஸி" என்னும்படியே அநாயாஸேந வழித்தநீ. இஞ்சி-மதிள். கட்டு-அரணும்; இயல்வும்.

தர்மந்தொங்கக்கடவதன்றிக்கே யிருக்கிற லங்காஸ்வபாவத்தையழித்து, "[illegible]" "விபீஷணஸ்துதர்மாத்மா" என்கிறபடியே தார்மிகனை நிர்வாஹகனாக்கி, தர்மமே ஸஞ்சரிக்கும்படியைச் சொல்லிற்று;

இனி இந்த்ரன்றான் ஆச்ரிதர்க்கு துஷ்கர்த்தானால் அவனை யழியச்செய்யாதே முகாந்தரத்தாலே ஆச்ரிதனை ரக்ஷிக்கும்படி சொல்லுகிறது (வெறிபெடுத்துமாரிகாத்த மேகவண்ணனல்லையே) "இடையர் க்ர்ஷ்ணனையண்டை கொண்டு நம்முடைய மகபங்கம் பண்ணினார்கள்" என்று ஸம்வர்த்தகக்ஷணத்தையேவி வர்ஷிப்பிக்க; அவனை அழியச்செய்கை ப்ராப்தமாயிருக்க ப்ராதிகூல்யத்தில் நியதனல்லாமையாலும், "ஸக்ருதேவ" "நமேயம்" என்கிறபடியே திருவடிகளில் தலைசாயேனென்கிற நியதியில்லாமையாலும், கோவர்த்தநகிரியை யெடுத்து வர்ஷத்தால் வந்த அநர்த்தத்தை பரிஹரித்த மஹோதாரனல்லையோ. காளமேகநிபஶ்யாமமாய் ச்ரமஹரமான விக்ரஹத்தைச் சொல்லவுமாம். ஒருமேக ஸமூகம் பாதககோடியிலேயாய் நிற்க ஒருமேகத்தாலே வந்த ஆபத்தைப்பரிஹரித்தாப்போலே யிருந்ததென்கை ... . (௩௯)

அ.—நாற்பதாம்பாட்டு. ஈஶ்வராபிமாநிகளான தேவதைகளுடைய ரக்ஷணப்ரகாரஞ் சொல்லிற்று - கீழ்; இப்பாட்டில் - அநந்ய ப்ரயோஜநனை ரக்ஷிக்குமிடத்தில் நித்ய ஸூரிகளுக்கு மேலெல்லையான பிராட்டிமாரோடுஸம்ஸாரிகளுக்குக் கீழான திர்யக்குக்களோடு வாசியறத் தன்னையொழியச்செல்லாமை யொன்றுமே ஹேதுவாக விரோதிநிரஸநபூர்வகமாக ரக்ஷிக்கும்ஆச்சர்யங்களையநுபவிக்கிறார்.

ஆனைகாத்தோரானைகொன்றதன்றியாயர்பிள்ளையாய்
ஆனைமேய்த்தியானெயுண்டியன்றுகுன்றமொன்றினால்
ஆனைகாத்துமையரிக்கண்மாதரார்திறத்துமுன்
ஆனையன்றுசென்றடர்த்தமாயமென்னமாயமே. (௪0)

ப-ரை.—ஆனை-முதலையாலே யிடர்பட்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானை, காத்து-ரக்ஷித்து, அதன்றி அதுக்குமேலே, ஆயர்பிள்ளையாய்-இடைச்சாதிக்கு நியாமயனாயவதரித்து, ஓர்-அத்விதீயமான, ஆனை-குவலயாபீடமென்கிற யானையை, கொன்று-அநாயாஸேநக்கொன்று, அதன்றி-அதுக்குமேலே, அந்தஜாதிக்குசிதமாக, ஆனை-பசுக்களை, மேய்த்து-புல்லுள்ளவிடம் தேடி மேய்த்து, ஆநெய்-பசுக்களின்நெய்யை, உண்டி - அமுதுசெய்யாநிற்றி; அதுக்குமேலே, அன்று-இந்த்ரன் ஸப்தமேகங்களையும் வர்ஷிப்பித்தபோது, குன்றமொன்றினால் - கைக்கெட்டிற்றொருமலையை யெடுத்து, ஆனைகாத்து - பசுக்களை ரக்ஷித்து, மை-அஞ்சநத்தாலே அலங்க்ருதமாய், அரி - செவ்வரிகருவரிகளோடே கூடின, கண்-திருக்கண்களையுடைய, மாதரார்திறத்து - நப்பின்னைபிராட்டிக்காக, முன்-ஸம்ச்லேஷார்த்தமாக ஒப்பித்திருக்கிற தசையிலே, சென்று-அவள் ஸந்நிதியிலேசென்று, ஆனை - ரிஷபங்களேழையும், அடர்த்த - ஸம்ஹரித்த, மாயம் - ஆச்சர்யம், என்னமாயம்-என்ன ஆச்சர்யமென்கிறார். (௪0)

வ்யா.—(ஆனைகாத்து) அநந்யப்ரயோஜநத்வமொழிய இவ்வருகுஜந்மாதிகளாலே யொருயோக்யதையில்லாத ஸ்ரீகஜேந்த்ராழ்வானை ரக்ஷித்து. இன்னவானை யென்னாதே, "ஆனைகாத்து" என்கிறாராய்த்து அவனுடைய ஆபத்ப்ரஸித்தியாலும் அவனைரக்ஷித்த

ரக்ஷணப்ரகாரத்தின் ப்ரஸித்தியாலும். "ग्राहग्रस्ते" "[illegible]" கஜ ஆகர்ஷதே தீரே" "பரமாபதமாபந்ந:" என்றும் படியிறே அவனுடைய ஆபத்து. "[illegible]" "அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம்" "தவளுசெய்தார் வெள்கிநிற்பவிண்ணுளார்வியப்ப" என்னக்கடவதிறே. "அதன்றியாயர் பிள்ளையாய்-ஓரானைகொன்று" என்றந்வயம். (அதன்றியாயர் பிள்ளையாய்) தேவரீரைத் தஞ்சமன்றிருக்கைக்கு ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ரக்ஷணப்ரகாரமே யமையும், அதுக்குமேலே, இடைச்சாதிக்கு நியாம்யனு யவதரித்து. கீழ் "அசோதையாய்ச்சி பிள்ளையாய்" என்றத்தை வ்யாவர்த்திக்கிறது. (ஓரானைகொன்று) ஸ்ரீவஸுதேவர் தேவகிப்பிராட்டி, "[illegible]" "நஸமம்யுக்தமித்யாஹ:" என்கிற ஸ்ரீமதுரையில் பெண்களாக இவ்வருகூலவர்க்கமடைய பயப்படும்படி மதிப்பித்து கம்ஸன் நிறுத்தின அத்விதீயமான குவலயாபீடத்தை அநாயாஸேனக்கொன்று. ஸ்வாபாவிகமான பலமும் மதபலமுமாய அத்விதீயமாயிறே யிருப்பது. "கடங்கலந்தவன்கரி" என்றுரிமே. (அதன்றியானைமேய்த்து) அதுக்குமேலே, அந்த ஜாதிக்கு உசிதமாகப் பசுக்களை ரக்ஷித்து. "விளையாடுசூழலைச் சூழவே நின்று காலிமேய்க்கவல்லாய்" என்கிறபடியே தன்னழகாலே வயிறுநிரம்பும்படி யிறே பசுக்களை ரக்ஷித்தது. (ஆநெயுண்டி) பசுக்களின் நெய்யை யமுதுசெய்யாநிற்றி. ஸத்யகாமனாய் விஜிகித்ஸனாயிருக்கிற நீ ஆச்ரிதஸ்பர்ஶமுடையதொருத்ரவ்யத்தை யொழியச் செல்லாமையாலே யிறே அத்தைவிரும்பி யமுதுசெய்தது.

(அன்றுகுன்றமொன்றினாலானைகாத்து) அதுக்குமேலே இந்த்ரன், "ஸம்வர்த்தககணம்" என்கிற மேகஸமூஹத்தைக்கொண்டு ஊரையழியச்செய்கிற தசையிலே கைக்கெட்டிற்றொருமலையையெடுத்து பசுக்களை ரக்ஷித்து. ஆன்-பசு. கீழ்ப்பாட்டிலும் இவ்வபதாநம் சொல்லிற்று, அதுக்கும் இதுக்கும் வாசியென்னென்னில்; ப்ராதிகூல்யத்தில் நியதனல்லாமையாலே இந்த்ரனை யழியச்செய்யமாட்டாதநீர்மையைச் சொல்லிற்று-அங்கு; இங்கு - தன்னை யொழியச் செல்லாத பசுக்களை ரக்ஷித்தபடியைச்சொல்லுகிறது. (மையரிக்கண்மாதரார்திறத்து) அஞ்ஜநத்தாலே அலங்க்ருதமாய், செவ்வரிகருவரிகளோடே கூடின திருக்கண்களையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக. (முன்னுலையன்று சென்றடர்த்தமாயம்) ஸம்ஶ்லேஷார்த்தமாக ஒப்பித்து நிற்கிறதசையிலே அவள்ஸந்நிதியிலே சென்று ரிஷபங்களேழையு மடர்த்த ஆஶ்சர்யம். (என்னமாயமே) முன்புசெய்த செயல்களுக்கும் அவ்வருகே யொன்றாயிருந்ததீ!. ... (௪௦)

அ.—நாற்பத்தோராம்பாட்டு. நீஉகந்தாரை, தத்ஸஜாதீயனாய் வந்தவதரித்து ஸ்வரூபாநுரூபமாக ரக்ஷிக்கும்படியையும், விமுகரான ஸம்ஸாரிகளை ஸங்கல்பத்தாலே கர்மாநுகூலமாக ரக்ஷிக்கும்படியையும், அநுஸந்திக்கப்புக்கால் பரிச்சேதிக்க முடியாதாயிருந்ததீ! யென்கிறார்.

ஆயனாகியாயர்மங்கைவேய்தோள்விரும்பினாய்;
ஆயநின்னையாவர்வல்லரம்பரத்தொடிம்பராய்
மாயமாயமாயைகொல்லதன்றிநீவகுத்தலும்
மாயமாயமாக்கினாயுன்மாயமுற்றுமாயமே. (௪௧)

ப-ரை.—ஆயனாகி-இடைச்சாதியிலேபிறந்து, ஆயர்மங்கை - நவயௌவநஸ்வபாவையான நப்பின்னைப்பிராட்டியுடைய, வேய-மூங்கில்போலேஸ்பர்ஹணீயமான, தோள்விரும்பினாய்-திருத்தோளோடே ஸம்ச்லேஷித்தாய்; அம்பரத்தொடு-ப்ரஹ்மாதிதேவர்களிலும், இம்பராய் - விசேஷஜ்ஞரான மநுஷ்யர்களிலும், நின்னை - ஸர்வசக்தியுக்தனானவன்னை, யாவர்-யார், ஆயவல்லா-ஆராய்கைக்கு ஸமர்த்தர்; மாய-ஆச்சர்யசக்தியுக்தனே, மாயம்-ப்ரக்ருதி ஸம்பந்தத்தால்பிறந்த, மாயைகொல் - அஜ்ஞாநத்தாலேயோ; அதன்றி - அந்த அவதார வைபவத்தை யொழிய, நீ-நயாளுவானநீ, வகுத்தலும்-மஹதாதிகளை விபஜித்திருந்தபோதிலும், அவன தந்த கரணங்களை பரங்களைக்கொண்டு தங்களுக்கு ஹிதம்பார்க்க மாட்டாதே, மாயும் - விஷயாந்தரப்ரவணராய் நசியாநிற்பர்கள்; அவ்வளவிலும் உபேக்ஷியாதே, மாயமாக்கினாய் - ஸ்வசரீரமான ப்ரக்ருதியவஸ்தமாக்கினாய், உன்-உன்னுடைய, மாயமுற்றம்-மாநஸவ்யாபாரமான ஸங்கல்பஜ்ஞாநமடங்கலும், மாயமே-ஆச்சர்யாவஹமே யாயிராநின்றதீ! யென்கிறார். (௪௧)

வ்யா—(ஆயனாகி ஆயர்மங்கை வேயதோள் விரும்பினாய்) இடைஜந்மத்திலே யவதரித்து நவயௌவநஸ்வபாவையான நப்பின்னைப்பிராட்டியுடைய, சுற்றுடைமையாலும் பசுமையாலும் செவ்வையாலும் வேயபோலே ஸ்பர்ஹணீயமான திருத்தோளோடே ஸம்ச்லேஷித்தாய். நித்யமங்கள விக்ரஹத்தை கோபஸஜாதீயமாக்கிக்கொண்டவதரித்து அத்யாதரத்தைப் பண்ணினாய். "ஆனையன்று சென்றடர்த்த" என்று கீழ்ப்பாட்டிலும் இவ்வபதாநத்தைச் சொல்லிற்று, இதுக்கு மதுக்கும் வாசியென்னென்னில்; விரோதி நிரஸநத்திலே நோக்கு. அதில்-ஸௌரிபோக்யமான விக்ரஹத்தை கோபஸஜாதியமாக்கி வந்தவதரித்தபடியைச் சொல்லுகிறது; இது-அநந்யப்ரயோஜநரான ஆச்ரிதரக்ஷணத்துக்கு முபலக்ஷணம். (ஆய நின்னையாவர் வல்லரம்பரத் தொடிம்பராய்) உபரிதநலோகங்களிலுண்டான ப்ரஹ்மாதிகளிலும், பூமியில் விசேஷஜ்ஞரான மநுஷ்யாதிகளிலும் ஸர்வசக்தியுக்தனான உன்னை யாவர் காணவல்லார். அப்ராக்ருத விக்ரஹத்தை ப்ராக்ருத ஸஜாதீயமாக்கின வித்தை எவர் பரிச்சேதிக்கவல்லார்; ஒருவருமில்லையென்கை. (மாய) ஆச்சர்ய சக்தியுக்தனே.

நாற்பத்தோராம்பாட்டு. "ஆனையன்று சென்றடர்த்த" என்று-ரிஷபத்தைச்சொல்லுகைக்கு அவதரித்தபடி சொல்லுகிறதென்று சங்காபிப்பராயம்.

(மாயமாயைகொல்) "மமமாயாதுரத்யயா" "மமமாயாதுரத்யயா" என்கிறபடியே ப்ரக்ருதி ஸம்பந்தத்தால்பிறந்த அஜ்ஞாநத்தாலேயோ, அன்றிறே. கிம், க்ஷேபே "மாயாவயுநம்ஜ்ஞாநம்" "மாயாவயுநம்ஜ்ஞாநம்" என்கிறபடியே மாயாசப்தம் ஜ்ஞாநவாசியாகிறது. அஜ்ஞாநமும் ஜ்ஞாநவிஶேஷம்றே. அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தனானதான், அப்ராக்ருதமாய் அதீந்த்ரியமான திவ்யவிக்ரஹத்தை ப்ராக்ருதஸஜாதீயமாக்கி சக்ஷுர்விஷயமாக்கின வித்தையறியலாமோ. "அவாப்தஸமஸ்தகாம:" "அவாக்யநாதர:" என்கிறபடியே ஸ்வயம் பூர்ணனானவன் ஒருகோபஸ்த்ரீயுடைய வடிவழகிலே அத்யாதரத்தைப்பண்ணின வித்தைத்தான் எவர்பரிச்சேதிக்க.(அதன்றி) அந்தவவதார வைபவத்தையொழிய. ஸகலஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளால் பண்ணின வுபகாரங்களை பரிச்சேதிக்க வொண்ணாதென்கிறதுமேல் (நீவகுத்தலும) ஸம்ஸாரிகளுடைய விழவிலே * தயமாநமநாவாயிருந்துள்ள நீ, உன்னை லபிக்கைக்கு ஹேதுவானஜ்ஞாநமுண்டாய் நல்வழிபோகைக்குக் கரணகளே பரங்களைக்கொடுக்கச்செய்தேயும், மஹதாதிவிஶேஷாந்தமான வகுப்பு, தத்கார்யமான வண்டங்களாகிற வகுப்பு, அண்டாந்தர்க்கதமான சதுர்த்தஶ புவநாத்மகமான வகுப்பு,ததந்தர்க்கத தேவாதிகளாகிற வகுப்பு. (மாய)நஶிக்க. அந்த சரீரங்களைக் கொண்டு தந்தாம் ஹிதம் பார்க்கமாட்டாதே விஷயாந்தரப்ரவணராய் நஶிப்பார்கள். (மாயமாக்கினாய்) அவ்வளவிலு முபேக்ஷியாதே இவர்களுக்கு இனி ஸம்ஹாரமே ஹிதமென்று பார்த்து ஸ்வசரீரமான ப்ரக்ருதிய வஸ்தமாக்கினாய். (உன்மாயமுற்றுமாயமே) உன்னுடைய மாநஸவ்யாபாரரூபமான ஸங்கல்பஜ்ஞாநமடங்கலும் ஆஶ்சர்யாவஹமாகாநின்றதீ!. ... ... (சக)

பரிச்சேதிக்கப் போகாமைக்கு அருளிச்செய்கிறார் (மாயமாயைகொல்என்று.) மாயமாயை - ப்ரக்ருதி ஸம்பந்தத்தால்வந்த அஜ்ஞாநமென்னுதல்; "கொல்" என்கிற கிம் - க்ஷேபத்திலேயாய், அஜ்ஞாநமென்று ஜ்ஞாநமென்னுதல். * மாயசப்தம் ஜ்ஞாநத்தைச் சொல்லுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (மாயாவயுநம்ஜ்ஞாநம் - மாயாவயுநம் ஜ்ஞாநமித்யாதி.) மாயையை அஜ்ஞாந வாசகமாகச் சொல்லிற்றே யென்ன; அருளிச்செய்கிறார் (அஜ்ஞாநமுமித்யாதி.) (அறியப்போகாமை) ப்ராக்ருதராயிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கேயன்றிக்கே, அப்ராக்ருதராயிருக்கிற நித்யஸூரிகளுக்கு மறியப்போகாதென்னுமத்தை, அம்சத்தொன்கிறது அர்த்தாந்தரமாக வருளிச் செய்கிறார் (அஸ்ப்ருஷ்டேத்யாதி.) இத்தால் - ப்ரக்ருதிஸம்பந்தத்தால் வந்த அஜ்ஞாநத்தாலே அறியப்போகாதாப்போலே, ப்ரக்ருதிஸம்பந்த ரஹிதராயிருக்கிற ஜ்ஞாநாதிகர்க்கும் அறியப்போகாதென்றதாய்த்து. மாய - நசிக்க. ... ... (சக)

அ.—நாற்பத்திரண்டாம்பாட்டு. "நீவருத்தலும் மாயமாய மாக்கினாய்" என்று - ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள் சேரப்ரஸ்துதமாகை யாலே, "[illegible]" "ஏகஏவருத்ர:ஸர்வோஹ்யேஷ ருத்ர," என்று ஶ்ருதிப்ரஸித்தராயிருப்பாரு முண்டாயிருக்க, நம்மையே அபரிச்சிந்ந ஸ்வபாவராகச் சொல்லக்கடவீரோ வென்று பகவதபிப்ராயமாக; அந்தருத்ரனுக்குவந்த ஆபத்தை, அவதரித்துத் தாழநின்று அந்நிலையிலே போக்கின தேவரீர்க்கு இதுபரிஹரிக்கை பரமென்கிறார்.

வெறிசைந்தசெக்கர்மேனிநீறணிந்தபுன்சடைக்
கீறுதிங்கள்வைத்தவன்கைவைத்தவன்கபாலமிசை
ஊறுசெங்குருதியால்நிறைத்தகாரணந்தனை
ஏறுசென்றடர்த்தவீசபேசுகூசமின்றியே. (சஉ)

ப-ரை.—வெறு-வேறாக, இசைந்த-தன்னுடையஸம்ஹார்த்ருத்வத்துக்குச்சேர்ந்த, செக்கர்மேனி-க்ருத்தமானவேஷத்தையும், நீறணிந்த - பஸ்மந்தரித்த சரீரத்தையும்,புன்-கோரமாயிருந்துள்ள,சடை-ஜடையையுமுடையனாய்,அந்த ஜடையிலே, கீறுதிங்கள் வைத்தவன்-கலாமாத்ரமான சந்த்ரனைதரித்தவனாய், கைவைத்த-கையிலேவைத்த, வன்-வலிய, கபாலமிசை-கபாலத்திலே, ஊறு-உன திருமேனியிலே யூறாநின்றுள்ள, செங்குருதியால்நிறைத்த-சிவந்த ரக்தமாகிற ஜலத்தாலே நிறைத்த, காரணந்தனை - ஹேதுவை; ஏறு - ரிஷபங்களினுடைய க்ரௌர்யத்தையும், தன்னுடைய ஸௌகுமார்யத்தையும்பார்த்து, கூசமின்றி-கூசாமல், சென்று - அவற்றி னருகேசென்று, அடர்த்த - நிரஸித்த, ஈச-நியாமகனே, பேசு-எனக்கருளிச்செய்யவேணும். (சஉ)

வ்யா.—(வெறிசைந்தசெக்கர்மேனி) வேறாகத்தன்னுடைய ஸம்ஹாரத்வத்துக்குச் சேர்ந்த க்ருத்தமான வேஷத்தையுடையனாய். செக்கர்-சிவப்பு. சிவத்தல் - கோபித்தல். ஸ்ருஷ்ட்யாதித்ரயத்துக்கும் தேவரீர்க்கு தனையேயிறே ஸ்வபாவம். (நீறணிந்தபுன்சடை) பஸ்மோத்தூளிதஸர்வாங்கனாய்க்ர்பணமான ஜடையையுடையனாய். புன்மை-பொல்லாமை. இத்தால் - ப்ராயஶ்சித்தத்துக்கும் ஸாதகத்வத்துக்கும் ஏகாந்தமான லிங்கத்தையுடையவனென்கை. (கீறுதிங்கள் வைத்தவன்) அந்த ஜடையிலே கலாமாத்ரமான சந்த்ரனை வைத்தவன். ஆக, ஸம்ஹர்த்ருத்வமாத்ரமேதொழிலென்றும், சாஸ்த்ர வஶ்யதையை ஸூசிப்பிக்கிற ஜடாநிகளையுடையவனென்றும், சந்த்ரதாரணத்தாலே-போகப்ரதாநனென்றும் சொல்லிற்றாய்த்து. (கைவைத்தவன் கபாலமிசை) கையில்வைத்த வலியகபாலத்திலே. பாதகித்வப்ரகாஶகமான கபாலதாரணம், பாதகம் போனாலல்லது போகாத ப்ராபல்யத்தை யுடைத்தான கபாலமென்றும் சொல்லிற்றாய்த்து. ஶாஸ்த்ரவஶ்யனுக்கிறே இப்பாதகமுண்டாவது.

நாற்பத்திரண்டாம்பாட்டு. பாதகமுண்டாவது - பாதகமிதியுண்டாவதென்பது.

(ஊறுசெங்குருதியால்நிறைத்தகாரணந்தனை)உன்திருமேனியிலே யூறுநின்றுள்ளரக்தஜலத்தாலேநிறைத்தஹேதுவை.(பேசு)உன்னுடைய ஈஶ்வரத்வமும் அவனுடைய ஈசிதவ்யத்வமுமொழிய வேறு ஹேதுவுண்டாகில்அருளிச்செய்யவேணும்.உன்னுடையரக்ஷகத்வமும் அவனுடைய ரக்ஷ்யத்வமுமொழிய ஹேதுவுண்டோ.இங்கே, "செங்குருதி" என்றும்,மேலே,"அலங்கல் மார்வில் வாசநீர்கொடுத்தவன்" என்றுமருளிச்செய்யாநின்றார்,இரண்டுக்கும்பேதமென்னென்னில்; அப்ராக்ருதஸம்ஸ்தானத்தை இதரஸஜாதீயமாக்கின மெய்ப்பாட்டைச்சொல்லுகிறது-இங்கு;"సర్వగన్ధః" "ஸர்வகந்த:" என்கிற அப்ராக்ருத ஸம்ஸ்தாநத்தை இதரஸஜாதீயமாக்கிற்றென்று தோற்றுகைக்காகவந்த வைலக்ஷண்யத்தைச்சொல்லுகிறது-அங்கு.(கூசமின்றியே-ஏறுசென்றடர்த்தவீசபேசு) ரிஷபங்களினுடைய க்ரௌர்யத்தையும் தன்ஸௌகுமார்யத்தையும்பார்த்துக்கூசாதே, மேல்விழுந்தடர்த்து உன்னீச்வரத்வம் நிறம்பெறும்படி நின்றவனே! எனக்கருளிச்செய்யவேணும். சாஸ்த்ரவஶ்ய ஜந்மத்திலே பிறந்து ஏழுகோஹத்யையைப்பண்ணச்செய்தேயும் ஈஶ்வரத்வம் நிறம்பெறநின்றாய்நீ; ருத்ரன் ஈச்வரத்வத்தால் வந்த மேன்மை குலையாதே கிற்கிறவிளவிலே பாதகியானான், அப்பாதகத்தை யவதரித்து தாழநின்றநிலையிலேபோக்கியருளினாய், இந்நெடுவாசியைத்தேவர்களே எதிரிகளாயழிக்கப்புக்கால்தான் அழியுமோ. "கூசமின்றியே-பேசு" என்னவுமாம். "అహం వో బాన్ధవో జాతః" "அஹம்வோ பாந்தவோஜாத:" என்று-சிலர்க்கு தேவரீருடைய மேன்மையை மறைத்துப் பரிமாறுகிறபடியை நினைத்துக்கூசாதே, "జన్మకర్మ చ మే దివ్యమ్" "ஜந்மகர்மசமேதிவ்யம்" என்கிறபடியே அவதாரத்தினுடைய அப்ராக்ருதத்வத்தையுள்ளபடி யறிகிற வெனக்கு அருளிச்செய்யவேணும்.(௪௨)

அ.—நாற்பத்துமூன்றாம்பாட்டு. ருத்ரனுடை பாதகத்தைப் போக்கினவனாவேயன்றிக்கே, க்ருஷ்ணனாய்வந்தவதரித்து பூபாரமான கம்ஸனைபரிகரமாகநிரஸிக்கையாலும்,அந்தருத்ராதிகளோடு க்ருமிகீடாதிகளோடு வாசியற ஸ்ரீவாமநனாய் எல்லார்தலைகளிலும் திருவடிகளைவைத்து உன்ஸர்வஶேஷித்வத்தை ப்ரகாஶிப்பித்தபடியிலும் ஜகத்காரணபூதன் நீயேயென்கிறார். "కాలనేమిర్హతో యోఽసౌ" "காலநேமிர்ஹதோயோஸௌ" என்று - பூமிகம்ஸனை பூபாரமாகச் சொன்னாரிறே.

இந்தநெடுவாசியை அவனாலும் இல்லை செய்யப் போகாமையாலே அழிக்கப்போகாதென்கிறது. ... ... (௪௨)

வெஞ்சினத்தவேழவெண்மருப்பொசித்துருத்தமா
கஞ்சனைக்கடிந்துமண்ணளந்துகொண்டகாலனே
வஞ்சனத்துவந்தபேய்ச்சியாவிபாலுள்வாங்கினாய்
அஞ்சனத்தவண்ணனாயவாதிதேவனல்லையோ. (௩௫)

ப-ரை.—வெம்சினம் - மிக்ககோபத்தையுடைய, வேழம்-குவலயாபீடத்தினுடைய, வெள்-வெளுத்த, மருப்பு-கொம்பை, ஒசித்து-அநாயாஸேநமுறித்து, அந்தச்செய்தியைக்கேட்டு, உருத்த-கோபித்தவனாய், மா-மிக்கவலிமையையுடையனான, கஞ்சனை-கம்ஸனை, கடிந்து-நிரஸித்து, தாய்வடிவுகொண்டு, வஞ்சநத்து வந்த-வஞ்சகையாய்வந்த, பேய்ச்சி-பூதநையினுடைய, ஆவி-ப்ராணனை, பால்-பாலோடேகூட, உள்வாங்கினாய் - அமுதுசெய்தருளினவனாய், வாமநாவதாரஞ்செய்தருளி-திரிவிக்ரமனாய், மண்-பூமியை, அளந்துகொண்ட - திருவடிகளாலே யளந்துகொண்ட, காலனே - ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுவானவனே. அஞ்சனத்தவண்ணனான-மைபோன்ற திருநிறத்தை யுடையனாய்,-ஆதிதேவனல்லையோ - ஜகத்காரணனானவனே! என்று அநுபவிக்கிறார். (௩௫)

வ்யா.—(வெஞ்சினத்த வேழவெண் மருப்பொசித்து) வெவ்வியசினத்தையுடைய குவலயாபீடத்தினுடையவெளுத்தகொம்பை அநாயாஸேந முறித்து. வெவ்வியசினம்-அதிகோபம். அதினுடையசினமும் ஹிம்ஸாபரிகரமானகொம்பும் பயஹேதுவானவைபோலத்தான் கொம்பினுடையவர்ணமும் பயஹேதுவாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. (உருத்தமா கஞ்சனைக்கடிந்து) அதுகேட்டுக்ருத்தனாய்ப்ரக்ருத்யாபலோத்தரனான, கம்ஸனுடைய நினைவைக்கடிந்து-அவன் நினைத்த நினைவையவன்றன்னோடே போக்கி. "[illegible]" "கிமிந்த்ரேணா ப்யாவீர்யேண." "வஞ்சனத்துவந்தபேய்ச்சியாவிபாலுள் வாங்கினாய்-மண்ணளந்துகொண்டகாலனே" என்றந்வயம். குவலயாபீடத்தைப்போலேயும கம்ஸனைப்போலேயும் எதிரியாய்த்தோன்றுகையன்றிக்கே, தாய்வடிவுகொண்டு * வஞ்சனையால்வந்த பூதனையினுடைய ப்ராணனைப் பாலோடேகூட வாங்கினாய். அவளும தாயாய் முலைகொடுக்கவந்தாள்; இவனும் பிள்ளையாய ஆகாரத்தோடே அம்முலைப்பாலை யமுதுசெய்தான். துஷ்ப்ரக்ருதிகளுக்கு நாஶகரமான தர்மிஸ்வபாவத்தாலே அவள்நினைவு அவள்தன்னோடேபோம்படி பண்ணினான். முலைவழியாலே ப்ராணனைவாங்கின ஆஶ்சர்யத்தாலும், அர்வாக்கத்துக்கு ஜ்ஞாதயாவன்றிக்கே ஸத்யாநாஶகனாகையாலும், ஸர்வாதிகனென்கையென்கை. "[illegible]" "ஸ்தந்யம்தத்விஷஸம்மிஶ்ரம் ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோ." என்னக்கடவதிறே.

காற்பாத்தழுமன்றாம்பாட்டு. கம்ஸன் பூபாரமோவென்ன; அருளிச்செய்கிறார் (காலநேமியித்யாதி.) விஷ்ணுவாலே கொல்லப்பட்ட "காலநேமி" என்கிற அஸுரன் கம்ஸனாய் வந்து பிறக்கையாலே தனக்குபாரமென்று பூமிசொன்னாளென்றபடி. உரு-மிடுக்கு. தமன்-மிடுக்கிலே அதிகனென்றபடி. மிடுக்கனோவென்ன; அருளிச்செய்கிறார் ([illegible]-ப்ரதிந்த்ரேணேத்யாதி.) மிடுக்கனாகையாலேயன்றோ "அப்யவீர்யேணஇந்த்ரேணாபி" என்று கம்ஸன்சொன்னானென்றபடி.

“ உருத்து ” என்று பாடமானபோது - குவலயாபீடநிரஸநத்தாலும் திருவுள்ளத்திலே சினம் மாறாமையைச் சொல்லிற்றாகக்கடவது. (மண்ணளந்துகொண்டகாலனே) பூபாரமானகம்ஸநிரஸநமேயன்றிக்கே, தன்சேஷித்வத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக ப்ரஹ்மாதி ஸகலஜந்துக்கள்தலையிலும் வைத்த திருவடிகளையுடையவனே. “காலனே” என்று - ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுவானவனே யென்றுமாம். (அஞ்சநத்தவண்ணனாய ஆதிதேவனல்லையே) “నీతోయదమధ్యస్థా ద్విద్యుల్లేఖేవ భాస్వరా” “ நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவபாஸ்வரா” என்கிறபடியே - விலக்ஷணவிக்ரஹயுக்தனாய் ஜகத்துக்கு உத்பாதகனாய், அத்தாலே யுஜ்வலனானவனல்லையோ. ஜகத்காரணத்வத்தோபாதி அப்ராக்ருததிவ்யவிக்ரஹமேயோகமும் ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணமென்கை. (௪௩)

அ.— நாற்பத்துநாலாம்பாட்டு. “ மண்ணளந்துகொண்ட காலனே” என்று - முறையறிவித்தபடியும் “அஞ்சநத்தவண்ணன்” என்று முறையறிந்தவர்கள ஆச்ரயிக்கைக்கு ஸுபாச்ரயமானவடிவும் ப்ரஸ்துதமாய்நின்றது-கீழ்; க்ருதாதியுகங்களில் சேதநர்ஸத்வாதிகுணாநுகூலமாக ச்வேதாதிவர்ணங்களை விரும்புகையாலே அந்த காளமேகநிபச்யாமமான நிறத்தை யழியமாறி அவர்களுக்குவர்ணங்களைக்கொண்டு அவ்வவகாலங்களிலே முகங்காட்டச்செய்தேயும் ஸம்ஸாரிகள் காற்கடைக்கொள்ளுவதே! இதென்னதுர்வாஸநாபலம்! என்கிறார்.

பாலினீர்மைசெம்பொனீர்மைபாசியின்பசும்புறம்
போலுநீர்மைபொற்புடைத்தடத்துவண்டுவிண்டுலாம்
நீலநீர்மையென்றிவைநிறைந்தகாலநான்குமாய்
மாலினீர்மைவையகம்மறைத்ததென்னநீர்மையே. (௪௪)

ப-ரை.—பாலின்நீர்மை-பால்போலே வெளுத்ததிருநிறமும், செம்பொன்நீர்மை-செம்பொன்னின்நிறமும், த்வாபரயுகத்தில், பாசியின்-பாசியினுடைய, புறம்-புறத்திலுண்டான, பசுமைபோலும் நீர்மை-பசுமையையொத்த திருநிறமும், பொறபுடை – அழகிதான, தடத்து - தடாகத்திலே, வண்டு - வண்டுகள் நெருங்கப்படிந்து மதுபாநத்தைப் பண்ணி அதனால்வந்தஹர்ஷத்தாலே, விண்டு-சிறகுவிரித்து, உலாம்-உலாவாநின்றுள்ள, நீலநீர்மை - கருநெய்தல்மலரின் நிறமும், என்றிவை - என்கிற நான்குநிறங்களும், நிறைந்த - குறையற்றிருந்துள்ள, காலம்நான்குமாய் - சதுர்யுகமாய், மாலின்நீர்மை-இப்படியிருக்கிற ஸர்வேச்வரனுடைய, நீர்மையை - ஸௌலப்யத்தை, வையகம் - பூமியிலுள்ளார், மறைத்து-அவனை ஆச்ரயியாதே அசட்டைசெய்து, என்னநீர்மை-என்ன துர்வாஸநையோவென்கிறார். (௪௪)

வ்யா.—(பாலின்நீர்மை) க்ர்தயுகத்திலுள்ளார் ஸத்வப்ரசுரராய் வெளுப்புகக்குமவர்களாகையாலே அவர்களுக்குப் பால்போன்ற நிறத்தைக்கொள்ளும்ஸ்வபாவம். அதாகிறது-நிறம். “வளையுருவாய்த்திகழ்ந்தான்” என்றும், “சங்கவண்ணமன்னமேனி” என்றும்சொல்லுகிறஸ்தாநத்திலே “பாலின்நீர்மை” என்றது-இவ்வெளுப்புக்கு ஆச்ரயம் “[illegible]” “ஸர்வாஸ:” என்கிறவிஷயமென்று தோற்றுகைக்காக. (செம்பொன்நீர்மை) த்ரேதாயுகத்தில்வந்தால் “[illegible]” “ருக்மாபம்” என்றும், “சுட்டுரைத்த நன்பொன் உன்திருமேனி யொளி யொவ்வாது” என்றும் சொல்லுகிறபடியே - சிவந்த திருநிறத்தைக்கொள்ளும். “சேயனென்றுந் தீயனைக்கண்” என்கிறஸ்தாநத்திலே “செம்பொனீர்மை” என்றது-அந்நிறத்துக்கு ஆச்ரயமான விக்ரஹம் மஹார்க்கமென்று தோற்றுகைக்காக. (பாசியின் பசும்புறம்போலும் நீர்மை) த்வாபரயுகத்திலே வந்தால் பாசியினுடைய புறத்தில் பசுமைபோலே ஶ்ரமஹரமான திருநிறத்தையுடையனாய. (பொற்புடைத்தடத்து வண்டுவிண்டுலாநீலநீர்மை) கலியுகத்திலே வந்தால் எல்லாவடிவுங் கொண்டாலும் அபிமுகீகரிப்பாரில்லாமையாலே ஸ்வாபாவிகமான நீலநிறமாயிருக்கும். “நிலைநின்ற பின்னைவண்ணங்கொண்டல் வண்ணம்” என்னக்கடவதிறே. “[illegible]” “கமலஜந்தபதிம.” அழகியதடாகத்திலே வண்டுகள் நெருங்கப்படிந்து மதுபாநத்தைப்பண்ணி, அத்தால்வந்த ஹர்ஷத்தாலே சிறகுவிரித்து உலாவாநின்றுள்ள நீலப்பூவின் நிறம்போலேயிருக்கிற நிறத்தையுடையனாய். இத்தால் – ச்ரமஹரமான செவ்வியையுடைத்தான நீலப்பூவென்கை. பொற்பு - அழகு. விண்டல் - அலர்தல். (என்றிவை நிறைந்த காலநான்குமாய்) ஆச்ரிதார்த்தமாகக்கொள்ளும் அந்நிறங்கள் குறைவற்றிருந்துள்ள சதுர்யுகமாய். இந்நிறங்கள் நாலுயுகத்திலும் குறைவற்றிருக்கை. (மாலின்நீர்மை) இப்படியிருக்கிற ஸர்வேஶ்வரனுடைய, நீர்மையை - இஸ்ஸௌலப்யத்தை. (வையகம் மறைத்ததென்ன நீர்மையே) பூமியிலுள்ளார் ஆச்ரயியாதே காற்கடைக்கொண்டது என்ன துர்வாஸநையினாலேதான். “[illegible]” “மந்தாநக்ரோசந்தி” என்கிறபடியே ததந்தர்ப்பூதரைச்சொல்லுகிறது. “மறைத்தது” என்கிறது “[illegible]” “குணமாயாஸமாவ்ர்த:” என்றுமாப்போலே பகவதநுக்ரஹத்தையும் அதிஶயித்திருப்பதே! அநாதிகால துர்வாஸநையென்கை. (௪௪)

அ.—நாற்பத்தஞ்சாம்பாட்டு. பகவத்ஸௌலப்யத்தையும் அதிஶயித்திருந்துள்ள ஸம்ஸாரிகளுடைய துர்வாஸநையால்வந்த இழவைச்சொன்னார்-கீழ்; இதில்-அவர்களிலே அந்யதமனானவெனக்கு தேவரீருடைய பரத்வஸௌலப்யங்களையும், ஆஶ்ரிதர்க்கெளியனாய் அநாச்ரிதர்க்கரியனாயிருக்கிறபடியையுங்காட்டி என்னை அநந்யார்ஹனாக்குவதே! இதென்ன ஆஶ்சர்யமென்கிறார்.

மண்ணுளாய்கொல்விண்ணுளாய்கொல்மண்ணுளேமயங்கிநின்
றெண்ணுமெண்ணகப்படாய்கொலென்னமாயைநின்றமர்
கண்ணுளாய்கொல்சேயைகொலனந்தன்மேற்கிடந்தவெம்
புண்ணியாபுனந்துழாயலங்கலம்புனிதனே. (சரு)

ப-ரை.—* ஆதியஞ்சோதியுருவானதேவரீர் ஆச்ரிதரை அடிமைகொள்ளுகைக்காக, மண்ணுளாய்-இங்கேவந்தவதரித்து ஸுலபராய், விண்ணுளாய்-நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாய், ப்ரக்ர்திஸ்பர்சத்தாலும் ப்ரயோஜநாந்தரபரதையாலும், மயங்கிநின்று-மயங்கிநிற்கிற, மண்ணுள்-பூமியிலுள்ள மநுஷ்யர்கள், எண்ணும்எண்-நினைச்சும் நினைவுக்கு, அகப்படாய் - எட்டாதவனாய், நின்தமர் - உன்திருவடிகளைப்பற்றி அநந்ய ப்ரயோஜநராயிருப்பார்க்கு, கண்ணுளாய்-ஸாக்ஷாத்கரிக்கும்படி நிற்குமவனாய், ஆச்ரிதவிரோதிகள் உன்னை அறியாதபடி, சேயை-தூரஸ்தனாய், அவையெல்லாங்கிடக்க, அநந்தன்மேல் - திருவநந்தாழ்வான்மேலே, கிடந்த-கண்வளர்ந்தருளினபடியைக்காட்டி, எமபுண்ணியா-எனக்கு உபகாரகனானவனாய், புனம்-தன்னிலத்திலுண்டான, துழாயலங்கல்-திருத்துழாய்மாலையாலே அலங்க்ர்தனாய், அம்புனிதனே-பரமபாவநனானவனே!, என்னமாயை-இதென்ன ஆச்சர்யமென்கிறார். (சரு)

வ்யா.—(மண்ணுளாய்கொல்) "அவாப்தஸமஸ்தகாம:" "அவாக்யநாதர:" என்கிறபடியே பூர்ணரானதேவரீர் ஸர்வஸமாச்ரயணீயராகைக்காக ஸாமிபஸ்தராய், அப்ராக்ர்தமாய் அதீந்த்ரியமானவிக்ரஹத்தை ப்ராக்ர்தஸஜாதீயமாக்கிக்கொண்டு அவதரித்து சக்ஷுர்விஷயமானாய். "கொல்" என்று - ஏகாச்ரயத்திலே விருத்ததர்மங்கள் காண்கையாலே, இதென்னாயிருக்கிறதென்கிறார். அதாகிறது - ஸீதாவியோகத்தில் கலக்கமும், ஒருநிர்யாக்ருக்கு மோக்ஷப்ரதாநமும். "ப்ரச்சாமிஜ்ஞா:" "ப்ரச்சாமிஜ்ஞச ந." (விண்ணுளாய்கொல்) அஸ்ப்ர்ஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுக்கும் பரிச்சேதிக்கவொண்ணாத பெருமையையுடையையாய். (கொல்) நித்யஸூரிகளுக்கும் நிர்வாஹகனாயிருக்கையும், குஹபரி ஸுக்ரீவாதிகளுக்கு நிர்வாஹ்யனாயிருக்கையுமாகிறவிதென்னாயிருக்கிறதோ! வென்கிறார். (மண்ணுளே மயங்கிநின்றெண்ணுமெண்ணகப்படாய்கொல்) இப்பரத்வஸௌலப்யங்கள்ப்ரக்ர்திஸ்பர்சத்தாலேவந்தவிபரீதஜ்ஞாநத்தையுடையராய் ப்ரயோஜநாந்தரபரரான ஸம்ஸாரிகள் மநோரதிக்கும்மநோரதத்துக்கும் அவ்வருகாம்படி யிருத்தி. (என்னமாயை) என்கிற விது, இப்பாட்டின் முடிவிலே க்ரியையாகக்கடவது. (நின்தமர்கண்ணுளாய்கொல்) உன்திருவடிகளிலே அநந்ய ப்ரயோஜநரா யிருப்பார்க்கு, "பரித்ராணாய ஸாதூநாம்" "பரித்ராணயஸாதூநாம்" என்கிறபடியே உள்ளபடியை ஸாக்ஷாத்கரிப்பியாநிற்றி.

நாற்பத்தஞ்சாம்பாட்டு. இரண்டும் ஏகாச்ரயத்திலேயுண்டென்றுசொன்னவிடமுண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (ப்ரச்சாமிஜ்ஞசவென்று.) ... ... (சரு)

(சேயைகொல்) ஆச்ரிதவிரோதிகளுக்கு உன்னை யறியவொண்ணாதே எதிரிட்டு முடிந்துபோம்படி தூரஸ்தனாயிருப்புதி. "விநாசாய ச துஷ்க்ருதாம்" "விநாஶாயசதுஷ்க்ர்தாம்" என்னக்கடவதிறே. (கொல்) ஸம்பந்தம் ஸமாநமாயிருக்க அநந்யப்ரயோஜநர் பக்கலிலும் தத்விரோதிகள் பக்கலிலுமுண்டான இஸ்ஸ்வபாவங்கள் என்னாயிருக்கிறதோ. இவ்விருத்த தர்மாச்ரயமாகிற தேவரீருடைய ப்ரபாவம் ப்ரமாணஸித்தமாகையாலே பொய்யென்னவொண்ணாது, விருத்தஸ்வபாவங்களாகையாலேமெய்யென்னவொண்ணாது. (அனந்தன்மேல் கிடந்தவெம்புண்ணியா) அதெல்லாங்கிடக்க, திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளினவடிவைக்காட்டி, தேவரீருடைய ஆஸ்ரித ஸம்ஸ்லேஷ ஸ்வபாவத்தையும் என்னுடைய அநந்யார்ஹ சேஷத்வத்தையும் எனக்கு உணர்த்தினவனே. "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" "பும்ஸ்த்வம் நயத்திபுண்ய" என்கிறபடியே இவருடைய ஸ்வரூபத்தையும் ப்ரகாஶிப்பிக்கைக்கு உபாயமானவனே. (புனந்துழாயலங்கலம்புனிதனே) தோளும் தோள்மாலையுமான வழகைக்காட்டி, விஷயாந்தரருசியென்ன, "ஸர்வகந்த ஸர்வரஸ" "சோரயந்தமபஹாரிணம்" என்கிற ஆத்மாபஹாரமென்ன, இவ்வஶுத்திகளைத் தவிர்த்த பரமபாவநனே. (என்னமாயை)இதென்ன ஆஶ்சர்யம். என்திறத்தில் நீசெய்தருளின விவை யொன்றும் பரிச்சேதிக்கலா யிருந்ததில்லையென்கிறார். ... ... (சரு)

அ.—நாற்பத்தாறும்பாட்டு. "அனந்தன்மேல்கிடந்த வெம்புண்ணியா" என்று - ஸ்வரூபத்தை யறிவிக்கையாலே ஸம்ஸாரத்திலே வந்து ஆவிர்ப்பவித்தும் அவதரித்தும் பெரியதிருவடிதோளிலேயேறி ஆச்ரித ரிருந்தவிடத்திலேசென்று ரக்ஷிக்கு காலமெல்லாம் இழந்தேன, இனி இழவாதப்படி விரோதி நிவர்த்தி பூர்வகமாக நான் உன்னைப்பெறும் விரகு அருளிச்செய்யவேணுமென்கிறார்.

தொடுமெய்ம்மறந்துழாயலங்கலாடுசென்னியாய்
கொடுப்பற்றியாழியேந்தியஞ்சிறைப்புள்ளூர்தியால்
நாடுபெற்றநன்மைநண்ணமில்லையேனுநாயினேன்
வீடுபெற்றிறப்பொழிந்துபிறப்பறுக்குமாசொலே. (சஅ)

ப-ரை.—உனதிருமேனிஸ்பர்சத்தாலே, தோடுபெற-தளிர்த்துக்கொழுக்கு, தண்-குளிர்ந்திருந்துள்ள, துழாயலங்கல்-திருத்துழாய்மாலையையுடைய, தயனுடைய, சென்னியாய்-திருமுடியையுடையவனாய், கோடு-ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, பற்றி-இடத்திருக்கையிலேதரித்து, ஆழி-திருவாழியை, ஏந்தி-வலத்திருக்கையிலே, ஏந்தி-தரித்து, அம்-அழகுபெற்றிருக்கிற, சிறை-சிறகையுடைய, புள்-பெரியதிருவடியை, ஊர்தி-நடத்தாநிற்கும்; நாடு-லோகத்திலுள்ளாரெல்லாரும் காணும்படி, பெற்ற - பெரியதிருவடியை மேற்கொண்டு ஸஞ்சரித்த, நன்மை-இந்த நன்மையை, நண்ணமில்லையேனும்-நானகிட்டப்பெறாதிலேனாகிலும், நாயினேன-அநந்யார்ஹனான நான், வீடுபெற்று-கைங்கர்யத்ருபமோக்ஷத்தைப்பெற்று, இறப்பொழிந்து - இச்சரீரவிமோசநமாய், பிறப்பு-இனியொரு சரீரஸம்பந்தமுண்டாகாதபடி, அறுக்குமா - ஸம்ஸாரத்தை அறுக்கும் விரகு, சொல்-அருளிச்செய்யவேணும். (சஅ)

வ்யா.—(தோடுபெற்றதண்டுழாயலங்கலாடுசென்னியாய்) உன் திருமேனியில் ஸ்பர்சத்தாலே தழைத்துக்குளிர்ந்திருந்துள்ள திருத்துழாய்மாலையை யுடையையாய், ப்ரணதஜநங்கள்பக்கல் முகப்ரதாநத்தாலே யசைந்துவருகிற திருமுடியையுடையையாய். ஸர்வேஸ்வரஸ்பர்ஶமிறே- சேதநர்க்கு ஸங்கோசத்துக்கும் தாபஶாந்திக்கும் ஹேது. இத்தால்-கண்டபோதே ருசிபிறக்கும்படியான வொப்பனையழகையும், ஆபிமுக்யம்பண்ணினார்பக்கல் முகப்ரதாநம் பண்ணும் நீர்மையையும் சொல்லிற்று. தோடு - பூவிதழ். (கோடுபற்றியாழியேந்தி) ஆச்ரித விரோதிகளை த்வநியாலே மண்ணுண்ணும்படி பண்ணுகைக்கு ஸ்ரீபாஞ்சஜந்யத்தைப்பற்றி, "கருதுமிடம் பொருது" என்கிறபடியே எதிரிகளைச்சென்றழிக்கைக்குத்திருவாழியையேந்தி. ஆச்ரிதர்க்கு முகங்கொடுக்குமளவன்றியே அவர்கள்விரோதிகளையும் அழியச்செய்யும் பரிகரங்களை யுடையவனென்கை. (அஞ்சிறைப்புள்ளூர்தியால்) ஸ்பர்ஶத்தாலே யழகுபெற்ற திருச்சிறகை யுடைய பெரியதிருவடியைநடத்தாநிற்றி. அவனை மேற்கொண்டால் ஈஶ்வரனுக்கு அலங்காரமாயிருக்கும்படியான அழகைச்சொல்லிற்றாகவுமாம். இத்தால்-ஆச்ரிதரிருந்தஸம்ஸாரத்திலே ஆபத்தசைகளிலே சென்று முகங்காட்டி ரக்ஷிக்கும் நீர்மையைச் சொல்லிற்று. இப்படி தன்னை தூளிதாநம்பண்ணின காலமெல்லா மிழந்தேனென்கிறார். "ஆல்" என்று - விஷாதாதிஶயஸூசகம். (நாடுபெற்ற நன்மை நண்ணமில்லையேனும்) இருந்தபே குடியாகக்காணலாம்படி பெரியதிருவடியை மேற்கொண்டு ஸஞ்சரித்த விந்த நன்மையை நான் கிட்டப்பெற்றிலேனாகிலும். நான் விமுகனானகாலமெல்லா மிழந்தாலும் எனக்கு ருசிபிறந்தவின்றும் தேவருள்ளீராயிருக்க இழக்கவேணுமோவென்கை. (நாயினேன்வீடுபெற்று) அநந்யகதியான நான் பகவத் ப்ராப்திரூபமோக்ஷத்தைப்பெற்று. (நாயினேன்) அநாதிகாலம் திறந்துகிடந்தவாசலெல்லாம் நுழைந்து ஸர்வராலும் பரிபூதனானநான். உகந்து தொட்டாலும்எதிர்த்தலைக்கு அஶுத்தியைவிளைப்பிக்கும் நிஹீநதையையுடையநான். (வீடுபெற்று) இப்படிப்பட்டிருந்துள்ளநான், உனக்குஸத்ருஶராயிருந்துள்ள நித்யஸூரிகள்பேற்றைப்பெற்று. அகிஞ்சநனான நான், பூர்ணனுடைய பேற்றைப்பெற்று. (இறப்பொடும்பிறப்பறுக்குமாசொலே) இச்சரீரத்தினுடைய விமோசநத்தோடே இனியொரு சரீரபரிக்ரஹம் பண்ணாதபடி ஸம்ஸாரத்தை யறுக்கும் விரகு அருளிச்செய்யவேணும். சிறைக்கூடத்திலிருந்த ராஜகுமாரன்தலையிலே அபிஷேகத்தை வைத்து, பின்பு சிறையை வெட்டிவிட்டாப்போலே, ப்ராப்திமுன்பாக விரோதியைப் போக்கும் விரகு அருளிச்செய்யவேணும். ... ... (௪௬)

நாம்பத்தாறாம்பாட்டு. ஸ்பர்சத்தாலே திருத்துழாய்தழைக்கக் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (ஸர்வேச்வரஸ்பர்சமித்யாதி.) கோடு-ஸ்ரீபாஞ்சஜந்யம். ... ... (௪௬)

அ.—நாற்பத்தேழாம்பாட்டு. பரவ்யூஹவிபவங்களடங்கஆஶ்ரயணீயஸ்தலமன்றோ, அதிலே ஓரிடத்தைப்பற்றியாஶ்ரயித்து நம்மைப்பெறமாட்டீரோவென்ன; அவ்விடங்களெங்கும்நிலமல்ல,இனி எனக்கு ப்ரதிபத்திபண்ணி யாஶ்ரயிக்கலாவதோ ரிடத்தை யருளிச் செயயவேணுமென்கிறார்.

காரொடொத்தமேனிநங்கள்கண்ணவிண்ணிணாதனே
நீரிடத்தராவணைக்கிடத்தியென்பரன்றியும்
ஓரிடத்தையல்லையெல்லையில்லையென்பராதலால்
சேர்விடத்தைநாயினேன்தெரிந்திறைஞ்சுமாசொலே. (சஎ)

ப-ரை.—காரொடொத்த-காளமேகத்தோடுஸத்ருசமான, மேனி-வடிவை யுடையையாய், நங்கள்-ஆச்ரிதர்க்கு உன்னை உடைமையாக்கிவைதத, கண்ண-க்ருஷ்ணனாய்அவ்வடிவை, விண்ணின்நாதனே-* அயர்வறுமமரர்களதிபதியான வுன்னை, நீரிடத்து-க்ஷீராப்தியிலே, அராவணை - திருவநந்தாழ்வானாகிற திருப் படுக்கையிலே, கிடத்தியென்பர் - பள்ளிகொண்டருளாநிற்கிறாயென்று ஜ்ஞாநாதிகரான வைதிகர்கள் சொல்லாநின்றார்கள்; அன்றியும்—, ஓரிடத்தையல்லை-நீ ஓரிடத்திலே வர்த்திக்கிறாயல்லை; தஹராசாண்டில்யம் முதலிய வித்யைகளிலே, எல்லையில்லையென்பர் - உன் ஆச்ரயணீயஸ்தலங்களுக்கு எல்லை யில்லையென்று சொல்லப்படுகிறது; ஆதலால்-இப்படி ஒருவகையாலும் உன்னைக் கிட்டவொண்ணாதிருப்பதினாலே, நாயினேன் - அயோக்யனான நான், தெரிந்து - இப்படிப்பட்டதென்று அறிந்து, இறைஞ்சுமா-ஆச்ரயிக்கலாம்படி, சேர்விடத்தை-ஆச்ரயணீயஸ்தலத்தை, சொல்-அருளிச்செய்யவேணும். (சஎ)

வ்யா.—(காரொடொத்தமேனிநங்கள்கண்ண)காளமேகத்தோடு ஸத்ருஶமாய் ஆகர்ஷகமானவடிவையுடையையாய், அத்தை ஆச்ரிதர்க்கு ஸ்வமாக்கிவைத்த க்ர்ஷ்ணனே. இத்தால்-காலவிப்ரகர்ஷத்தால் எனக்கு ஆச்ரயிக்கவிரகில்லையென்கிறார். அந்தகாலவிப்ரகர்ஷமாகிற குற்றமின்றிக்கே நித்யமாயிருக்கிற பரமபதத்தில் வடிவைப்பற்றிஆச்ரயிக்கமாட்டீரோவென்ன (விண்ணின்நாதனே) அவ்வடிவை நித்யஸூரிகள் நித்யாநுபவம்பண்ணுமத்தனையொழிய தேஶவிப்ரகர்ஷத்தாலே எனக்காஶ்ரயிக்க விரகில்லையென்கை (நீரிடத்தராவணைக்கிடத்தி) தேஶகாலவிப்ரகர்ஷங்களாகிற குறையின்றிக்கேக்ஷீராப்தியிலே நித்யஸூரி ஸந்நிஹிதரல்லோமோவென்ன; அவ்விடமும் ச்வேதத்வீபவாஸிகளுக்குக் காதாசித்கமாகக் காணலாமித்தனை யல்லது அஸ்மதாதிகளுக்கு வரவுமொண்ணாது. (என்பர்) இவ்வர்த்தம் வேதங்களும் ஜ்ஞாநாதிகரான வைதிகர்களும்சொல்லக்கேட்டோமித்தனை. "అజాయమానో బహుధా విజాయతే" "యత్రావతీర్ణః కృష్ణాఖ్యః పరం బ్రహ్మ నరాకృతిః" "அஜாயமாநோபஹுதாவிஜாயதே" "யத்ராவதீர்ணக்ர்ஷ்ணாக்ய: பரம்ப்ரஹ்மநராக்ர்தி:" என்று க்ர்ஷ்ணாவதாரமும்கேட்டே போருமித்தனை.

“ தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதாபஶ்யந்தி ஸூரய: ” “ தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதாபஶ்யந்திஸூரய: ” என்று பரமபதத்திலிருப்பும் ஶ்ருதிகள் சொல்லக்கேட்ட வித்தனை; “ ஏஷநாராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: ” “ஏஷநாராயணஶ் ஶ்ரீமாந்க்ஷீரார்ணவநிகேதந:”என்று-க்ஷீராப்தியில்வாஸமும் ஜ்ஞாநாதிகர்சொல்லக்கேட்ட வித்தனை. நீரிடத்து-கடலிடத்து. அராவணை - அரவணை. அன்றியும்-அதொழியவும். (ஓரிடத்தையல்லை) ஓரிடத்திலேவர்த்திக்கிறாயல்லை. ஸர்வகதனென்கை. இதுவும் “ஸமுபாஸ்வ” “ஸாமேவமிஜாநீஹி” “மாமுபாஸ்வ” “மாமேவவிஜாநீஹி”என்றித்யாதிகளிலே ஸாபாச்ரயமாக உபாஸநாத்ரவித்யத்திலே சொல்லப்பட்டதிறே. (எல்லையில்லை என்பர்) தஹர சாண்டில்ய ஸ்ம்ருதி வைஶ்வாநரோபகோஸலாதிவித்யைகளிலே ஆச்ரயணீயஸ்தலங்களுக்கு எல்லை யில்லையிறே; அவையும் “யஸ்ஸர்வஜ்ஞ:” “யஆத்மாநமேவத” என்று - ப்ரதிபத்தி விஷயமல்லாமையாலும் த்ரைவர்ணிகாதிகாரமாகையாலும் நிலமல்ல. (ஆதலால்) பரமபதம் தேஶத்தால் விப்ரக்ருஷ்டமாகையாலும், அவதாரம் காலத்தால் விப்ரக்ருஷ்டமாகையாலும், க்ஷீராப்தி அதிக்ருதாதிகாரமாகையாலும், அந்தர்யாமித்வம் ப்ரதிபத்திக்கு அரூபமாகையாலும், த்ரைவர்ணிகாதிகாரமாகையாலும், நிலமல்ல. (சேர்விடத்தை நாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே) அயோக்யனான நான் “இதம்” “இதம்” என்று புத்திபண்ணி ஆச்ரயிக்கலாம்படி ஆஶ்ரயணீயஸ்தலத்தை யருளிச்செய்யவேணும். (சஎ)

அ.—நாற்பத்தெட்டாம்பாட்டு. ஆச்ரயணீயஸ்தலங்களை ஸாமாந்யேந பரித்துவைத்தோமாகில் அவற்றிலே யொன்றைப்பற்றியாச்ரயிக்கும் ஆச்ரிதபூதர்க்கு ஆச்ரயணாநுகூலமாக பலப்ரதராயிருக்குமதொழிய, உமக்கு ஆஶ்ரயணீயஸ்தலத்தை விசேஷித்துச் சொல்லுகை நமக்கு பரமோவென்ன; ஆச்ரிதாநாசரிதவிபாகமன்றிகேத நின்ற நின்ற நிலைகளிலே பரஹிதமே செய்யும்ஸ்வபாவனாயின்பு என்னபேக்ஷிதம் செய்கைஉனக்கே பரமன்றோ வென்கிறார்.

குன்றில்நின்றுவானிருந்துநீள்கடற்கிடந்துமண்
ஒன்றுசென்றதொன்றையுண்டதொன்றிடந்துபன்றியாய்
நன்றுசென்றநாளவற்றுணல்லுயிர்படைத்தவர்க்
கன்றுதேவமைத்தளித்தவாதிதேவனல்லையே. (சஅ)

ப-ரை.— நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணும்படி, வான்இருந்து-பரமபதத்திலே யிருக்கிறதீ, தாழ்ந்தார்க்கு முகம் கொடுக்கைக்காக, குன்றில் நின்று-திருமலையிலே நின்றருளி, ஆர்த்தரான ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கைக்காக, கடல்-திருப்பாற்கடலிலே, நீள்-நெடுங்காலம், கிடந்து-கண்வளர்ந்தருளி, மண்-பூமியை, ஒன்று - அத்விதீயமாக, சென்று-அளந்தருளி, அதொன்று-அந்த ப்ரதாநமான பூமியை, உண்டு - திருவயிற்றிலே வைத்துரக்ஷித்து,பன

றியாய்-மஹாவராஹமாய், அதொன்று-ப்ரளயங்கொண்டபூமியை,இடந்து-இடந்தெடுத்து, நன்றுசென்ற-நன்றாகச்சென்ற, நாளவற்றுள்-அந்தநாள்களிலே, நல் - சாஸ்த்ராதிகாரத்தாலே ச்ரேஷ்டரான, உயிர்-மநுஷ்யர்களை, படைத்து-ஸ்ருஷ்டித்து, அன்று-ராஜஸ்தமஸ்ஸுக்கள் மேலிட்டு பகவத்விமுகரானவன்று, அவர்க்கு-அந்தமநுஷ்யர்களுக்கு, ஆச்ரயணீயமாக,தேவு-தேவஜாதியை,அமைத்தளித்த-ஸ்ருஷ்டித்தளித்த,ஆதிதேவனல்லையே-ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரனல்லையோ வென்கிறார். (௬அ)

வ்யா.—(குன்றில்நின்று) "கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்கிறபடியேதாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காகச் சில ரபேக்ஷியாதிருக்கத்திருமலையிலே நின்றநிலை. (வான்இருந்து) அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுக்கு நித்யாநுபவம் பண்ணுகைக்குப் பரமபதத்திலே யிருக்கிற பெரியமேன்மையை யுடையையா யிருக்கச்செய்தே யன்றோ திருமலையிலே வந்துநின்றது.'(நீள்கடல் கிடந்து)வானரங்களையும் வேடரையும்போலன்றிக்கே"ஈச்வரோஹம்"என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்குஆபத்துவந்தபோது கூக்குரல்கேட்கைக்காகவன்றோ "தானுந்தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி" என்கிறபடியே - அஸங்குசிதமாகக் கண்வளர்ந்தருளுகைக் கீடாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளிற்று.'(மண்ணொன்றுசென்று) இந்த்ரன்இழந்ததும் மஹாபலி அபஹரித்ததும் த்ரைலோக்யத் தளவாயிருக்க,ப்ரஹ்மலோகபர்யந்தமாக, ஒருத்தரபேக்ஷியா திருக்க எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்திலையோ. ப்ரதாநமான பூமியை யளந்து. "சென்று" என்று-பதவிக்ஷேபமாய், அளந்தென்றபடி. பூமியிலே ஓரிடங்களிலேசென்றுஅவதரித் தென்னவுமாம். (அதொன்றையுண்டு) அந்தப்ரதாநமான பூமியை ப்ரளயங்கொள்ளப்புக அர்த்தித்வ நிரபேக்ஷமாகத் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்திலையோ. (அதொன்றிடந்து பன்றியாய்) மஹாவராஹமாய் ப்ரளயங்கொண்ட பூமியை உத்தரித்து.

(நன்றுசென்ற நாளவற்றுள் நல்லுயிர்படைத்து) நன்றாகச்சென்ற நாள்களிலே மநுஷ்யர்களை ஸ்ருஷ்டித்து. "நன்றுசென்ற நாள்" என்று - மஹாவராஹ வேஷத்தைக் காணலாங் காலமென்னுமத்தாலே வராஹகல்பத்தைக் கொண்டாடுகிறார். "நல்லுயிர்" என்று - சாஸ்த்ராதி காரத்தாலே ச்ரேஷ்டரான மநுஷ்யர்களைச் சொல்லுகிறது. "దుర్లభో మానుషో దేహః" "துர்லபோமாநுஷோதேஹ:" என்னக்கடவதிறே. (அவர்க்கன்று தேவமைத்தளித்த) அம்மநுஷ்யர்களுக்கு ரஜஸ்தமஸ்ஸுக்கள் மேலிட்டு பகவத்விமுகரான வன்று ஆச்ரயணீயராக தேவஜாதியை ஸ்ருஷ்டித்து அளித்த. (ஆதிதேவனல்லையே) இப்படி நின்றநின்ற நிலைகளிலே பரஹிதங்களை ப்ரவர்த்திப்பிக்கிறஜகத்காரணபூதனை ஸர்வேச்வரனல்லையோ.

ஆராதகரான மநுஷ்யர்களையும் ஆராத்யரான தேவர்களையும் ஸ்ர்ஷ்டிக்கையாலே ஜகத்காரணபூதனான நிருபாதிக தேவனாகையாலே ஸர்வஸமாச்ரயணீயனல்லையோ. "సహస్రశీర్షం దేవమ్" 'ஸஹஸ்ரசீர்ஷம்தேவம்'' என்றும், "సాక్షాద్దేవః పురాణోసౌ" 'ஸாக்ஷாத்தேவ: புராணோஸௌ'' என்றும் சொல்லக்கடவதிறே. ... (சஅ)

அ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. ''சேர்விடத்தைநாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே'' என்று இவர்க்கு இவரிருந்த பூமியிலே சக்ஷுர்விஷயமாய், அவதாரங்களிலுண்டான நீர்மைகளும் இழக்கவேண்டாதபடி குணபூர்த்தியோடே கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற ஸம்ர்த்தியைக் காட்டக் கண்டநுபவிக்கிறார்.

கொண்டைகொண்டகோதைமீதுதேனுலாவுகூனிகூன்
உண்டைகொண்டரங்கவோட்டியுண்மகிழ்ந்தநாதனூர்
நண்டையுண்டுநாரைபேரவாளைபாயநீலமே
அண்டைகொண்டுகெண்டைமேயுமந்தணீரரங்கமே. (சகூ)

ப-ரை.—கொண்டைகொண்ட - மயிர்முடியிலேயுண்டான, கோதைமீது - மாலையின்மேலே, தேன் உலாவு - வண்டுகள் ஸஞ்சரிக்கும்படியான ஒப்பனையழகையுடையளான, கூனி - கூனியுடைய, கூன் - முதுகில் கூனை, லீலார்த்தமாகவில்லிலே, உண்டைகொண்டு - உண்டையைவைத்து, அரங்க - கூனையுள்ளேபுகும்படி, ஓட்டி - ஓட்டித்தெறித்து, ஆச்ரிதர்க்கு அநர்த்தாவஹமான அஹங்காரத்தை அநாயாஸேநப்போக்குகையாலே, உள்மகிழ்ந்த - ஹர்ஷித்தவனாய், நாதன் - அச்செயலாலேஎனக்குநாதனான சக்ரவர்த்தித்திருமகன் வர்த்திக்கிற, ஊர் - தேசமாவது; நாரை - நாரையானது, நண்டையுண்டு - நண்டைவிழுங்கி, பேர - மலைபேர்ந்தாற்போலே பெயர, வாளை - வாளைமத்ஸ்யமானது, பாய - துள்ள, நீலம் - கருநெய்தல் பூவின் இருட்சியை, அண்டைகொண்டு - ஸஹாயமாகக்கொண்டு, கெண்டை - கெண்டைமத்ஸ்யமானது, மேயும் - பயம்கெட்டுமேய்கிற, அம் - அழகிதாய், தண் - குளிர்ந்த, நீர் - ஜலஸம்ர்த்தியையுடைய, அரங்கமே - ஸ்ரீரங்கமேயாம். (சகூ)

வ்யா.—(கொண்டை கொண்டகோதைமீதுதேனுலாவுகூனி) மயிர்முடியிலே யுண்டான மாலையின்மேலே வண்டுகள் ஸஞ்சரிக்கும்படியான வொப்பனையாலே ஸ்ப்ருஹணீய வேஷையான கூனி. இத்தால் - சேதநனுடைய நிஷ்க்ர்ஷ்டஸ்வரூபம் ஸ்ரீகௌஸ்துபம்போலே ஈஸ்வரனுக்கு ஸ்ப்ருஹணீயமென்று கருத்து. (கூனிகூன்) கீழ்ச்சொன்ன வடிவுக்கும் ஒப்பனைக்கும் சேராதே அவளுக்கு நிரூபகமாய்ப் போந்தகூனை. இத்தால்-ஸ்வரூபவிரோதியாய்,

---

நாற்பத்தொன்பதாம்பாட்டு. கொண்டைகொண்ட கோதை- கொண்டையிலே உண்டாயிருக்கிறகோதை. கொள்கை - உடைத்தாகை. கோதை-மாலை.

“தேவோஹம், மநுஷ்யோஹம்” என்று நிரூபகமுமாய் ஸ்வரூபத்துக்கு அவத்யமுமா யிருந்துள்ள அஹங்காரத்தை நினைக்கிறார்.(உண்டைகொண்டரங்கவோட்டி) லீலார்த்தமாக வில்லிலே யுண்டையைவைத்துக் கூனேஉள்ளே புகும்படியோட்டித் தெறித்து. அவத்யமான அஹங்காரத்தை அநாயாஸேநப்போக்கவல்லசக்தியை நினைக்கிறார்.(உண்மகிழ்ந்த நாதனூர்) ஆச்ரிதர்க்குஅவத்யமான அஹங்காரத்தை அநாயாஸேநப் போக்குகையாலே ஹ்ருஷ்டனாய்,அச்செயலாலே என்னை யெழுதிக்கொண்ட சக்ரவர்த்தித் திருமகன் வர்த்திக்கிற தேசம். இத்தால் - ஆச்ரிதருடைய அவத்யங்களைப்போக்கி யுகப்பானுந்தானே யென்கை. ஆக, சக்ரவர்த்தித் திருமகனுடைய நீர்மையும் நம்பெருமாள் பக்கலிலேகாணலா மென்கிறார்.

(நண்டையுண்டு நாரைபேர)நண்டைவிழுங்கின நாரையானது விழுங்கின கனத்தாலே மலைபேர்ந்தாப்போலேபேர.இத்தால்-பாதக பதார்த்தத்தினுடைய கனம்சொல்லிற்று. (வாளைபாய)அந்நாரைக்குத் தன்மேலே நோக்கென்று நினைத்து பயப்பட்டு வாளையானது துள்ள. (நீலமேயண்டைகொண்டு கெண்டைமேயும்)அதின் மிகுதியைக்கண்டு, கெண்டையானது பயத்தாலே பரப்புமாறப் பூத்த நீலத்தி னிருட்சியை யண்டைகொண்டு, அரணுக்குள்ளே வர்த்திப்பாரைப்போலே, பயங்கெட்டு மேய்ந்து வர்த்திக்கிற தேசம். இத்தால் - ஸம்ஸாரிகளை நலிகிற அஹங்காரத்தைக்கண்டு பீதராய், முமுக்ஷுக்களாய் உபாஸநத்திலே இழிந்த ஸாதகரைக்கண்டு இவையிரண்டும் பயஸ்தாநமென்று ஸர்வேச்வரனையேயுபாயமாகப் பற்றி நிர்ப்பரராய், ஸ்வரூபாநுரூபமான பகவத்குணாநுபவமே யாத்ரையாய் வர்த்திக்கும் ப்ரபந்நர்க்குஸ்மாரகமாயிருக்கிறதாய்த்து-கெண்டைகளினுடையயாத்ரையென்கை. (அந்தண்நீரரங்கமே) அழகிதாய்ச்ரமஹரமான ஜலஸம்ருத்தியையுடைத்தானகோயில். தாபத்ரயாதுரர்க்கு தாபஹரமான தேசமென்கை. “நீலமேயண்டைகொண்டு” என்று, ச்யாமமாய் ஸுகுமாரமான நீலத்தை யண்டைகொண்டு என்கையாலே – பெருமாளுடைய ஸௌந்தர்யமே அபாச்ரயமும்,அத்தைஆச்ரயித்திருப்பார்க்குபோக்யமுமதுவே யென்று கருத்து. இப்பாட்டில் சொன்ன ஸ்வாபதேசங்கள் இவர்க்கு நிலமல்லாதபோது தேசத்தை யாச்ரயித்தநுபவிக்க இழிந்தவர்க்கு இப்பாட்டால் ஒருப்ரயோஜந மில்லை. ... ... (௪௧)

அரங்க - மறைய. நீலம் - கருநெய்தல். அதின்மிகுதி-நாரை, வாளை இவற்றின்திரள்.சப்தத்துக்கு அர்த்தம்வேறாயிருக்க, இப்படி ஸ்வாபதேசத்திலே ஒதுக்குவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (இப்பாட்டிலித்யாதி.) நிலமல்லாதபோது-விவக்ஷையல்லாதபோது.

அ.—ஐம்பதாம்பாட்டு. ஆந்தரவிரோதத்தைப் போக்கவல்ல வவதார வைபவத்தையும், பாதகபதார்த்த ஸகாஸத்திலே நிர்ப்பயராய் வர்த்திக்கலாம்படி அபாச்ரயமான தேசவைபவத்தையும் சொன்னார் - கீழ்ப்பாட்டில்; இதில் - பாஹ்யவிரோதத்தைப் போக்கவல்ல வவதார வைபவத்தையும் ஸர்வஸமாச்ரயணீயமான தேசவைபவத்தையும் அருளிச்செய்கிறார்.

வெண்டிரைக்கருங்கடல்சிவந்துவேவமுன்னொருநாள்
திண்டிறற்சிலைக்கைவாளிவிட்டவீரர்சேருமூர்
எண்டிசைக்கணங்களுமிறைஞ்சியாடுதீர்த்தநீர்
வண்டிரைத்தசோலைவேலிமன்னுசீரரங்கமே. (௫0)

ப-ரை.—வெள் - வெளுத்த, திரை - திரைகளையுடைத்தாய், கரு-கறுத்த, கடல் - கடலானது, சிவந்துவேவ - சிவந்துவேம்படியாக, முன்னொருநாள் - இருபத்தெட்டாம் சதுர்யுகத்தில் த்ரேதாயுகத்திலே, திண்திறல்-மிக்கவலியையுடைய, சிலை-ஸ்ரீசார்ங்கத்தை, கை-கையிலேவாங்கி, வாளிவிட்ட-அம்புகளையேவின, வீரர்-ஆண்பிள்ளையான சக்ரவர்த்தித் திருமகன், சேரும்-நித்யவாஸம்பண்ணுகிற, ஊர் - ஊராவது; எண்திசைக்கணங்கள - எட்டுத்திக்கிலுள்ள ஸமூஹங்களும் வந்து, இறைஞ்சி - பெருமானைத் திருவடித்தொழுது, ஆடு - தீர்த்தமாடி, தங்களபிமத விரோதியான ஸர்வபாபங்களையும் போக்கும், தீர்த்தம்-சுத்தியையுடைய, நீர் - நீரையுடைத்தாய், வண்டு - மதுபானமத்தமான வண்டுகள், இரைத்த - ப்ரீதிஉள்ளடங்காமே சப்திக்கிற, சோலைவேலி-சோலையாலே சூழப்பட்டிருப்பதாய், சீர் - இப்பாவநத்வ போக்யத்வங்களாகிற இந்நன்மை, மன்னும் - நித்யமாய்ச்செல்லும், அரங்கம் - கோயிலேயாம். (௫0)

வ்யா.—(வெண்டிரைக்கருங்கடல்) வெளுத்ததிரைகளையுடைத்தான கருங்கடல். திரைக்கிளர்த்தியின் மிகுதிசொல்லிற்று. (சிவந்துவேவ) கறுத்தகடலோடு வெளுத்ததிரைகளோடு வாசியற அக்நியின்நிறமான சிவப்பே நிறமாய் மறுகும்படி தக்தமானபடி. இத்தால் - ஆச்ரிதரக்ஷணத்துக்கு வருணன் விரோதியாக அவனுக்கு இருப்பிடமான கடலை யழியச்செய்தபடி. (முன்னொருநாள் திண்டிறல் சிலைக்கைவாளிவிட்ட வீரர்சேருமூர்) இருபத்தெட்டாம் சதுர்யுகத்திலே மிக்கவலியையுடைய ஸ்ரீஸார்ங்கத்தை, "சாபமாநய" "சாபமாநய" என்கிறபடியேவாங்கி அம்புகளையேவின வாண்பிள்ளை சேருமூர். "உண்மகிழ்ந்தநாதனூர்" என்று ஆச்ரிதரக்ஷணம்ஸ்வயம் ப்ரயோஜநமாகப் பண்ணும் நீர்மையைச் சொல்லிற்று - கீழ்ப்பாட்டில்; இதில் - விரோதிநிரஸந ஸக்தியைச்சொல்லுகிறது. இத்தால்— அவதாரத்துக்குப் பிற்பாடரான ஆச்ரிதர்க்கு ஸ்வரூபவிரோதியான ஸப்தாதிகளில் ப்ராவண்யத்தைப் போக்குகைக்குக் கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிறபடி யென்கை. திண்மைஎன்றும், திறல் என்றும் வலியைச் சொல்லுகையாலே - மிக்கவலியென்றபடி.

(எண்டிசைக்கணங்களு மிறைஞ்சியாடுதீர்த்தநீர்) எட்டுதிக்கிலுமுள்ள ஸமூஹங்கள் வந்து பெருமாளைத் திருவடித்தொழுது தீர்த்தமாடி, தங்களபிமத விரோதியான ஸர்வபாபங்களையும் போக்கும் சக்தியையுடைய நீரையுடைத்தாய். "సర్వశక్తిమయం ధామ స్సర్వతీర్థమయస్సరః। సర్వపుణ్యమయో దేశః సర్వదేవమయో హరిః" "ஸர்வஶக்திமயந்தாமஸ்ஸர்வதீர்த்தமயம்ஸர:। ஸர்வபுண்யமயோதேஶ: ஸர்வதேவமயோஹரி:" என்னக்கடவதிறே. ஸமூஹங்களாவன - ஐச்வர்யார்த்திகள், முமுக்ஷுக்கள், ஜந்மவர்த்தங்களால் யோக்யாயோக்யர் இவர்கள். (வண்டிரைத்த சோலைவேலி) மதுபாந மத்தமான வண்டுகள், ப்ரீதிஉள்ளடங்காமேசப்திக்கிறசோலையைச் சூழவுடைத்தாய். (மன்னுசீராங்கமே) இப்பாவநத்வ போக்யத்வங்களாகிற இந்நன்மைகள் நித்யமாய்ச்செல்லும்கோயில். அநாத்மகுணோபேதர்க்கு பாவநமுமாய்,ஆத்மகுணோபேதர்க்கு போக்யமுமான தேசமென்கை. ... ... (ருo)

அ.—ஐம்பத்தோராம்பாட்டு. கடலையமித்து அக்கரையிலேயேறி ராவணனையழியச்செய்தவீரன் நித்யவாஸம் பண்ணுகிற தேசமாய், சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவான சதுர்முகன் தன் அதிகாரஸித்திக்காக ஆஸ்ரயித்ததேசம் கோயிலென்கிறார்.

சரங்களைத்துரந்துவில்வளைத்திலங்கைமன்னவன்
சிரங்கள்பத்தறுத்துதிர்த்தசெல்வர்மன்னுபொன்னிடம்
பரந்துபொன்னிரந்துநுந்திவந்தலைக்கும்வார்புனல்
அரங்கமென்பர்நான்முகத்தயன்பணிந்தகோயிலே. (ருக)

ப-ரை.—வில்வளைத்து-ஸ்ரீசார்ங்கத்தை வளைத்து,சரங்களைத் துரந்து-அம்புகளை யெய்து, இலங்கைமன்னவன் - லங்காதிபதியான ராவணனுடைய, சிரங்கள் பத்து - பத்துத்தலைகளையும், அறுத்து - அறுக்க, பின்பு வரபலத்தாலே முளைக்க, உதிர்த்த - பனங்கனிகள் உதிர்த்தாப்போலே யுதிர்த்து, செல்வர்-வீரஸ்ரீயால் பூர்ணரானவர், மன்னு - நித்யவாஸம்பண்ணுகிற, பொன் - ஸ்ப்ருஹணீயமான, இடம் - ஸ்தாநமாவது; பரந்து பரந்து - எங்குமொக்கப்பரந்து, வந்து - மாருதேவருது, பொன்-பொன்களை, நுந்து-தள்ளி, அலைக்கும்-அலையாநின்றுள்ள, வார்புனல்-ப்ரவாஹரூபமான காவேரியால் சூழப்பட்டதாய், நான்குவேதங்களையும ஒருக்காலே உச்சரிக்கைக்கீடான, நான்முகத்து - நான்கு முகங்களையுடையனுப், அயன்-அஜனென்னும் பேரையுடையனான ப்ரஹ்மா, பணிந்த - பக்தாபிமாநனுய் வந்தாச்ரயிக்குமகோயில் - கோயிலை, அரங்கமென்பர் - ஸ்ரீரங்கமென்று சொல்லாநின்றார்கள்புராணவித்துக்கள். (ருக)

வ்யா.—(சரங்களைத்துரந்து வில்வளைத்து) ஸ்ரீசார்ங்கத்தை வளைத்து, அம்புகளையெய்து. துரத்தல் - போக்கல். ஐச்வரமான ஸங்கல்பத்தாலன்றிக்கே ஆச்ரிதவிரோதியான ராவணனை அம்பாலே,பெறுப்பேறுபெற்றுனுக்கைதொட்டுக்கொன்றபடி.(இலங்கை

மன்னவன்) லங்கையையண்டைகொண்டால் ஸ்த்ரீகளுக்கும் எதிரிகளைஜெயிக்கலாம்,வெளிநிலத்திலும்எதிரிகளைஜயிக்கவல்லவாண்பிள்ளை ராவணன். அத்யக்ஷனானவன். "లఙ్కాం రావణపాలితామ్" "லங்காம்ராவணபாலிதாம்." (சிரங்கள் பத்தறுத்துதிர்த்த செல்வர்) அவன்தலைகள் பத்தையும் அறுத்தபின்பு வரபலத்தாலே சதசாகமாக முளைக்க முளைக்க, பனங்கனியுதிர்த்தாப்போலே யுதிர்த்த வீரஸ்ரீயால் பூர்ணரானவர். (மன்னுபொன்னிடம்) அவன் நித்யவாஸம்பண்ணுகிற ஸ்ப்ருஹணீயமான ஸ்தாநம். ரக்ஷாபேக்ஷையுடைய சேஷபூதனுக்கும் ரக்ஷ்யாபேக்ஷையுடைய சேஷிக்கும் ஸ்ப்ருஹணீயமான விடம். இத்தால் - அவதாரத்துக்குப் பிற்பாடரான அநந்ய ப்ரயோஜநர்க்கு ப்ரபலப்ரதிபந்தகமாய், விஷயாந்தரப்ரவணமான மநஸ்ஸைபரிகரமான இந்த்ரியங்களோடே யழியச்செய்கைக்கு வர்த்திக்கிற தேசமென்கை. "దశేన్ద్రియానసం ఘోరం యో మనోరజనీచరమ్। వివేకశరజాలేన శమం నయతి యోగినామ్" "தசேந்த்ரியாநநம் கோரம் யோமநோரஜநீசரம்| விவேகஶரஜாலேந ஶமம்நயதியோகிநாம்" என்னக்கடவதிறே. "అత్రైవ రిపురాత్మనః" "ஆத்மைவரிபுராத்மநஃ."

(பரந்துபொன் னிரந்து நுந்திவந்தலைக்கும்வார்புனல்) தன்னபிநிவேசமெல்லாம் கொண்டு எங்குமொக்கப்பரந்து மாறுதேவந்து பொன்களைக்கோயிலிலே தள்ளி அலையெறியாநின்றுள்ள காவேரி. வார்புனல் - ப்ரவாஹ ரூபமான ஜலம். அதாகிறது - காவேரி. (அரங்கமென்பர் நான்முகத்தயன்பணிந்த கோயிலே) உபயபாவநிஷ்டனான ப்ரஹ்மாவானவன் தன்னதிகாரத்துக்குவரும் விரோதிகளைப்பரிஹரிக்கைக்குப்ரஹ்மபாவனைக்கும் பலமானமோக்ஷத்துக்குமாக சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவென்றும், நாலுவேதங்களையும் ஒருக்காலே உச்சரிக்கைக்கிடான நான்கு முகத்தையுடையனென்றும், அஜனென்றும், தன்னைஸர்வாதிகனாகவபிமாநித்திருக்கிறவன் பக்நாபிமாநனாய் வந்தாச்ரயிக்குங் கோயிலை "ஸ்ரீரங்கம்" என்று நின்றார்கள் புராணவித்துக்கள். "రతిఙ్గత ఇతిరఙ్గమ్" "ரதிஙகத இதிரங்கம்." "క్షీరాబ్ధేర్మణ్డలాద్భానోర్యోగినాం హృదయాదపి। రతిఙ్గతో హరిర్యత్ర రఙ్గమిత్యభిధీయతే" "க்ஷீராப்தேர் மண்டலாத்பாநோர்யோகிநாம் ஹ்ருதயாதபி| ரதிங்கதோஹரிர்யத்ரரங்க மித்யபிதீயதே." ... ... (௫௧)

அ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு. ராமாவதாரத்துக்குப்பிற்பாடர்க்குக் கோயிலிலே வந்து உதவினபடிசொல்லிற்று - கீழ்மூன்று

ஐம்பத்தோரா்ம்பாட்டு. மநஸ்ஸு சத்ருவோவென்ன; அருளிச்செய்கிறார் (అత్రైవ రిపురాత్మనః- ஆத்மைவரிபுராத்மநஃ என்று.) நிரந்து-நிறைந்தென்றாய் (மாறுதேயென்கிறது.) ... ... (௫௧)

பாட்டாலே; இனியிரண்டுபாட்டாலே - க்ர்ஷ்ணவதாரத்துக்குப்பிற்பாடர்க்குதவும்படி சொல்லுகிறது. அநந்தரம் கீழ்ப்பாட்டோடு ஸங்கதியென்னென்னில்; சதுர்த்தசபுவநாத்யக்ஷனாய் ஜ்ஞாநாதிகனான ப்ரஹ்மாவுக்கு ஆச்ரயணீயமானவளவே யன்றிக்கே, அநந்யப்ரயோஜநராய் அநந்யஸாதநராயிருந்துள்ளவர்களுக்கு அநுபவஸ்தாநம் கோயிலென்கிறார்.

பொற்றையுற்றமுற்றல்யானைபோரெதிர்ந்துவந்ததைப்
பற்றியுற்றுமற்றதன்மருப்பொசித்தபாகனூர்
சிற்றெயிற்றுமுற்றன்மூங்கில்மூன்றுதண்டரொன்றினர்
அற்றபத்தர்சுற்றிவாழுமந்தணீரரங்கமே. (ருஉ)

ப-ரை.—பொற்றையுற்ற - கற்பாறையிலே வர்த்திக்கையாலே, முற்றல்- திண்ணிதான, யானை-ஆனையாய், போரெதிர்ந்துவந்ததை- யுத்தத்திலே யெதிர்த்துவந்தத்தை, பற்றி - மதியாதே சென்று பற்றி, உற்று - நாலுகாலுக்கு முள்ளான அதினுடம்பிலே புக்குநுழைந்து, மற்று - அதுக்குமேலே, அதன் - அதினுடைய, மருப்பு-கொம்பை, ஒசித்த-அநாயாஸேந முறித்த, பாகனூர்-பாகன்வர்த்திக்கிறதேசமாவது; சிறு-சிறுகின, எயிறு-கண்களையுடைத்தாய், முற்றல்-திண்ணிதான, மூங்கில் மூன்றுதண்டர் - மூங்கில்தண்டு மூன்றுதரித்த ஸந்யாஸிகளும், ஒன்றினர் - இத்தேசமே பரமப்ராப்யமென்று வாஸஞ்சேர்ந்தவர்களும், அற்ற - புருஷார்த்தாந்தரங்களில் பற்றற்று, பத்தர் - பெருமாளே ப்ராப்ய ப்ராபகமென்றிருக்குமவர்களும், சுற்றிவாழும் - கோயில்வாஸமே வாழ்வாக வர்த்திக்கிற, அம் - தர்சநீயமாய், தண் - சரமஹரமான, நீர் - ஜலஸம்ர்த்தியையுடைய, அரங்கம் - கோயிலாம். (ருஉ)

வ்யா.—(பொற்றையுற்றமுற்றல் யானை) கற்பாறையிலே வர்த்திக்கையாலே திண்ணிதான ஆனை. மநுஷ்யஸஞ்சார மின்றிக்கே மரங்களாலே நெருங்கின காட்டிலே வர்த்திக்கையாலே மநுஷ்யரைக்கண்டு கண்கலங்கிவர்த்தித்தவானை யென்றுமாம். பொற்றை- கற்பாறையும், கரிக்காடும். (போரெதிர்ந்துவந்ததை) ரஜகனைப் போலன்றியே யுத்தத்திலே யெதிர்த்து வந்தத்தை. (பற்றியுற்று) மதியாதேசென்று பற்றி, நாலுகாலுக்கு முள்ளான வதினுடலிலே புக்குநுழைந்து. (மற்றதன் மருப்பொசித்தபாகனூர்) அதுக்குமேலே, அதினுடைய ஹிம்ஸாபரிகரமான கொம்பை அநாயாஸேந முறித்தபாகன் வர்த்திக்கிறதேசம். "பாகன்" என்று - அதுக்கு ரக்ஷகனானவன், அதினளவறிந்து இடம்கொள்ளுமாப்போலே இடங்கொண்டு அத்தை யழித்தபடியாலே சொல்லுகிறது. இத்தால்-க்ர்ஷ்ணவதாரத்தில் பிற்பாடரானார்க்குப்பெருமாள்ஸ்வரூபவிரோதிவர்க்கத்தை குவலயாபீடத்தையழித்தாப்போலேயழியச்செய்யுமவனென்கை.

ஸ்ரீ வஸுதேவரும் தேவகிப் பிராட்டியும் ஸ்ரீமதுரையில் பெண்களும் ரங்கமத்யத்திலேக்ருஷ்ணனைக்காணவாசைப்பட்டிருக்க வாசலிலே இடைச்சுவராயிறேகுவலயாபீடம் நின்றது. "సఖ్యేనపశ్యత యువేవ వసుదేవో భూత్ ప్రాదురాసీజ్జనార్దనః" "ஸக்யேநபஶ்யதயுவேவவஸுதேவோபூத்ப்ராதுராஸீஜ்ஜநார்த்தந:."

(சிற்றெயிற்றுமுற்றல் மூங்கில் மூன்றுதண்டர்) சிறுகின கண்களையுடைத்தாய்த் திண்ணிதானமூங்கில்தண்டுமூன்றுதரித்த ஸந்ந்யாஸிகள். "மூங்கில் மூன்றுதண்டர்" என்கிறவித்தால்-கீழுள்ள ஆச்ரமத்ரயத்தையும் வ்யாவர்த்திக்கிறது. "சிற்றெயிற்றுமுற்றல்" என்கிறவித்தால்-"ఏకేన బ్రహ్మదణ్డేన సర్వాస్త్రాణి హతాని మే" "ஏகேநப்ரஹ்மதண்டேநஸர்வாஸ்த்ராணிஹதாநிமே" என்கிறந்யாயத்தாலேஎதிர்த்தவிரோதிவர்க்கத்தைத் தானே யழியச்செய்யவற்றாய், தனக்கழிவின்றிக்கே யிருக்குமென்னு மத்தை நினைக்கிறார். (ஒன்றினர்) பகவத்விஷயத்திலே ஏகாந்தஹ்ர்தயரானவர்கள் என்னுதல், தேசாந்தரங்களைவிட்டு இத்தேசமே ப்ராப்யமென்று வந்து சேர்ந்தவர்களென்னுதல். (அற்றபத்தர்) புருஷார்த்தாந்தரங்களிலும் ஸாதநாந்தரங்களிலும் பற்றற்றுப் பெரியபெருமாளே ப்ராப்யமும்ப்ராபகமுமென்று இருக்குமவர்கள். த்ரிதண்டதாரிகளாய் பகவத்விஷயத்திலே ஏகாந்தஹ்ர்தயராய்பகவத்வ்யதிரிக்தங்களைத்ர்ணமாகபுத்திபண்ணும்ஸந்ந்யாஸிகளென்றுமாம். (சுற்றிவாழும்) ஸர்வாவஸ்தையிலும் விடாதே கோயிலில்வாஸமே வாழ்வாகஇருக்குமவர்களென்னுதல்; தேசஸம்ர்த்தியைமநோரதித்து அதுவேபோக்யமாகவிருக்குமவர்களென்னுதல். சுற்றல் - எண்ணல். (அந்தண்நீரரங்கமே) தர்சநீயமாய்ச்ரமஹரமான ஜலஸம்ர்த்தியையுடையகோயில். (ருஉ)

அ.—ஐம்பத்துமூன்றாம்பாட்டு. அநிருத்தாழ்வானுடைய அபிமதவிரோதியாய்ப்ரபலமானபாண ப்ரமுகவர்க்கத்தைப் போக்கினாப்போலே,இன்றுஆச்ரிதருடைய போகவிரோதியைப்போக்குகைக்கு அந்தக்ர்ஷ்ணன்நித்யவாஸம்பண்ணும்தேசம் கோயிலென்கிறார்.

ஐம்பத்திரண்டாம்பாட்டு. குவலயாபீடம் அநுபவவிரோதியாயிருந்ததோவென்ன;அருளிச்செய்கிறார்(ஸ்ரீவஸுதேவருமித்யாதி.) "மூங்கில்" என்கையாலே - பலாசதண்டத்தை யுடையப்ரஹ்மசாரியையும், "மூன்றுதண்டர்" என்கையாலே - ஒருதண்டுடைய க்ர்ஹஸ்தாஶ்ரமத்தையும் வ்யாவர்த்திக்கிறது. வஸிஷ்டனுடைய ஏகதண்டத்தாலே விச்வாமித்ரனுடைய அஸ்த்ரங்கள் நசிக்கையாலே (సర్వాస్త్రాణి హతాని - ஸர்வாஸ்த்ராணிஹதாநி என்கிறது) "ஒன்றினர் அற்றபத்தர்" என்று - தனித்தனியேயாதல்; ஸந்ந்யாஸிகளுக்கு விசேஷணமாதல். பற்றுகை - த்ர்ணமாக விசாரிக்கை. ()

மோடியோடிலச்சையாயசாபமெய்திமுக்கணான்
கூடுசேனைமக்களோடுகொண்டுமண்டிவெஞ்சமத்
தோடவாணனாயிரங்கரங்கழித்தவாதிமால்
பீடுகோயில்கூடுநீரரங்கமென்றபேரதே. (௫௩)

ப-கா.—சாபமெய்தி - ப்ரஹ்மாவாலே சபிக்கப்பட்டு, கையும் கபாலமுமாய் இரந்த திரிகையாலே, இலச்சையாய - லஜ்ஜாவிஷ்டனாய், முக்கணான்-த்ரிநேத்ரதாரியான ருத்ரன், மோடியோடு - காளியோடே, மக்களோடு கூடு-மக்களோடேதிரண்ட, சேனைகொண்டு - ஸேனையையுங்கொண்டு, வெஞ்சமத்து - க்ரூரமான யுத்தத்திலே, மண்டியோட - அரைகுலையத் தலைகுலைய ஓட, வாணன - பாணாஸுரனுடைய, ஆயிரம் கரம் கழித்த - ஆயிரம் தோள்களையும் கழித்த, ஆதிமால் - ஜகத்காரண பூதனான ஸர்வேச்வரனுடைய, பீடுகோயில்-பெரிய கோயிலாவது, கூடு - ஸஹ்யத்தினின்றும் வந்ததும் வர்ஷஜலத்தோடு கூடினதுமான, நீர் - நீரையுடைத்தான, அரங்கமென்றபேரது-திருவரங்கமென்னும் திருநாமத்தையுடையது. (௫௩)

வ்யா.—(மோடியோடிலச்சையாயசாபமெய்தி) ஸாத்விகர்க்கு தர்சநமேதொடங்கி லஜ்ஜையாம்படி அவர்களால் அபரிக்ராஹ்யையான சாபத்தைப்ராபித்தகாளியோடே. தமஃப்ரசுரையாகையாலும், துராசாரையாகையாலும், ஸாத்விகரால் உபேக்ஷணீயையாயிறே அவளிருப்பது. (சாபமெய்தி-இலச்சையாய-முக்கணான்) ‘‘కపాలిత్వం భవిష్యసి’’ ‘‘கபாலீத்வம் பவிஷ்யஸி’’ என்றுப்ரஹ்மாசபிக்கையாலே லஜ்ஜாவிஷ்டனான லலாடநேத்ரனென்றுமாம். ஆகமாதிமுகத்தாலேதன்னைஸர்வேச்வரனாக வுபதேசித்து, லலாடநேத்ரத்வ கங்காதரத்வாதிகளாலே தன்னுடையஶக்திகளையு மாவிஷ்கரித்து, லோகத்தை யடங்கக் குமிழ்டு கொள்ளுகிறவனுக்கு ப்ரஹ்மசாபத்தாலே க்ஷேத்ரஜ்ஞத்வமும் ஶாஸ்த்ரவச்யதையும் ப்ரகாஶித்தால் லஜ்ஜாவிஷ்டனாகச்சொல்லவேணுமோ. (கூடுசேனைமக்களோடு கொண்டுமண்டிவெஞ்சமத்தோட) மக்களோடே திரண்ட ஸேனையையுங்கொண்டு அரைகுலையத்தலைகுலைய யுத்தத்திலேயோட. நம்பிமூத்தபிரானும் க்ர்ஷ்ணனும் விஜயத்திலே மண்டினவாறே ருத்ரனும்பரிகரமும் ஓடுகையிலேமண்டினபடி.

(வாணனாயிரங்கரங்கழித்த) பாணனுடைய ஆயிரந்தோள்களையும் கழித்த. பாணனுடைய ரக்ஷணத்திலே ப்ரதிஜ்ஞைபண்ணின ருத்ரனுடைய அபிமாநத்தைக்கழித்தான்; தோள்வலிகொண்டாடின பாணனுடைய தோள்களையும் கழித்தான். (ஆதிமால்) ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன். ‘‘కృష్ణ ఏవ హి లోకానా ముత్పత్తిరపి చాప్యయః’’ ‘‘க்ர்ஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்திரபிசாப்யய:’’ என்னக்கடவதிறே. (பீடுகோயில்) பெரியகோயில். பீடு-பெருமை. (கூடுநீரரங்கமென்றபேரதே) ஸஹ்யத்தினின்றும் வந்ததும் இப்பாலுண்டானவர்ஷத்தாலு மாகக்கூடின நீரையுடைத்தான திரு

வரங்கமென்னும் திருநாமத்தையுடைத்து. ‘‘சாபமெய்தி - இலச்சையாய-மூக்கனுன் - மோடியோடும் - மக்களோடும் - கூடுசேனை-கொண்டு - வெஞ்சமத்து - மண்டி - ஓடவாணனுயிரங்கரங் கழித்த வாதிமால் - கூடுநீர் - அரங்கமென்றபேரதான-பீடுகோயில்’’ என்றங்வயம். ஆக இரண்டுபாட்டாலும் செய்ததாய்த்து - ஆச்ரிதர்க்கு விரோதிகளாயித்தனையேவேண்டுவது, எதிர்த்தலை திர்யக்காகவுமாம்,ஸர்வாதிகனானருத்ரனாகவுமாம்,அழியச்செய்கைக்குருவலயாபீடம் *கொலையானையாய்த்தோற்றுகையாலேகொன்றருளினான். க்ர்ஷ்ணனைத் தோற்பித்து பாணனைரக்ஷிக்கக்கடவோமென்று வந்த ருத்ரன் தோற்றுப்போம்படி பண்ணினான். ‘‘[illegible]’’ ‘‘பாராயமமகிம்புஜை:’’ என்று தோள்வலிகொண்டுவந்த பாணனுடையதோள்களைக்கழித்தான். ஆக அவர்களுடையநினைவு அவர்கள்தலையிலே யாக்குமவனென்னை. ... ... (ருங)

அ.— ஐம்பத்துநாலாம்பாட்டு. ஸாத்விகர்க்கு துஷ்ப்ராபமாம்படியான அரணையுடையலங்கையை அம்பாலே யழித்த தசரதாத்மஜன், பிற்பாடர்க்கு ஸ்வபோகவிரோதியான ஸ்வாதந்த்ர்யமாகிற அரணையழிக்கைக்கும், லங்கையிலே பண்ணின ஆயாஸத்தாலே வந்த ச்ரமந்தீரச் சாமரி சிசிரோபசாரம் பண்ணுகைக்காகவும் வந்து கண்வளர்ந்தருளுகிறதேசம் கோயிலென்கிறார். கீழிரண்டுபாட்டால் – பாஹ்யமான ஸ்வபோகவிரோதிகளையழியச்செய்தபடி சொல்லிற்று; இதில்-ஸ்வபோகத்தில் ‘‘[illegible]’’ ‘‘மமேதம்’’ என்றுவரும் ஆந்தரமான ஸ்வாதந்த்ர்யத்தை லங்கையிலரணையழித்தாப்போலே யழிக்குமென்கிறது.

இலைத்தலைச்சரந்துரந்திலங்கைகட்டழித்தவன்
மலைத்தலைப்பிறந்திழிந்துவந்துநுந்துசந்தனம்
குலைத்தலைத்திறுத்தெறிந்தகுங்குமக்குழம்பினோ
டலைத்தொழுகுகாவிரியரங்கமேயவண்ணலே. (ருச)

ப-ரை.—இலை - இலைபோலேயிருக்கிற, தலை - தலையையுடைத்தான, சரம் - திருச்சரங்களை, துரந்து - ஏவி, இலங்கைகட்டு - லங்கையின் அரணை, அழித்தவன - அழித்ததசரதாத்மஜனாய்; மலைத்தலைப்பிறந்து-ஸஹ்யபர்வதத்திலேபிறந்து, வர்ஷத்திலே வேரோடே பறியுண்டு, இழிந்து வந்து - அந்நேரோடே யிழிந்துவந்து, நுந்து - தள்ளாநின்றுள்ள, சந்தனம் - சந்தனமரங்கள், குலைத்து - குங்குமப்படர்கொடியை நீர்வந்து குலைத்து, அலைத்து - சுற்றுமலைத்து, இறுத்து - முறித்து, எறிந்த - வீசின, குங்குமக்குழம்பினோடு - குங்குமரஜஸ்ஸுக்களைக் குழம்பாக்கி அத்தோடே கூட, அலைத்தொழுகு - அலைத்துக்கொண்டுவாரா நின்றுள்ள, காவிரி - திருக்காவேரியால் சூழப்பட்ட, அரங்கம் மேய - கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிற, அண்ணல் - ஸ்வாமி, தன்பக்கல்ருசியில்லாதார்க்கு ருசியையுண்டாக்குகைக்கும், ருசிபிறந்தார்க்கு ஆச்ரயணீயனாகைக்கும் உரியனென்கிறார். (ருச)

வ்யா.— (இலைத்தலைச்சரந் துரந் திலங்கைகட்டழித்தவன்) இலைபோலேயிருக்கிற தலையையுடைத்தான திருச்சரங்களையேவி லங்கையி லரணையழித்த தசரதாத்மஜன். இலைத்தலைச்சரம்-வாயம்பு. கட்டு - அரண். இவ்வபதாநத்தால் - ராமாவதாரத்தைச் சொல்லிற்று, ஸ்வபோகத்தை "ஸகேயம்" "மமேதம்" என்ற சூர்ப்பணகியை யழியச்செய்தவனே அழியச்செய்யவேணுமென்று நினைத்து. (மலைத்தலைப் பிறந்திழிந்து வந்து நுந்து சந்தநம்) ஸஹ்யத்திலே பிறந்து வர்ஷத்திலே வேரோடேபறியுண்டு அந்நீரோடே யிழிந்து வந்து தள்ளாநின்றுள்ள சந்தநம்.

(குலைத்தலைத்திறுத் தெறிந்த குங்குமக் குழம்பினோடலைத்து ஒழுகுகாவிரி) குங்குமப்படர்கொடியை நீர்வந்து குலைத்துச் சுற்று மலைத்துமுறித்தெறிந்த குங்குமரஜஸ்ஸுக்களைக் குழம்பாக்கி அத்தோடேகூட அலைத்துக்கொண்டுவாராநின்ற காவேரி. இதனால்- லங்கையையழித்த ச்ரமந்த்ரவும், அவன் திருமேனியில் ஸௌகுமார்யத்துக்கு ஸத்ர்சமாகவும், சந்தநகுங்குமங்களாலே ப்ரீதிப்ரேரிதையாய்க்கொண்டு காவேரி அடிமை செய்யும்படியைச் சொல்லிற்று. (அரங்கமேயவண்ணலே) கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிற ஸ்வாமீ. காவேரிஸஹ்யத்தில்நின்றும் அடிமை செய்கைக்கு வந்த தூரத்தோபாதி போருமாய்த்து - க்ஷீராப்தியில்நின்று மடிமை கொள்ளுகைக்கு வந்ததூரம். அண்ணல்-ஸ்வாமி. ஸம்ஸாரத்தில் தன்பக்கலில் ருசியில்லாதார்க்கு ருசிஜநகனுகைக்கும், ருசிபிறந்தார்க்கு ஆச்ரயணீயனுகைக்கும், ஆச்ரிதனை அஹங்காரரஹிதமாகவடிமை கொள்ளுகைக்கு முரியவனென்னை ... ... (௫௪)

அ.—ஐம்பத்தஞ்சாம்பாட்டு. இப்படி ஆச்ரிதார்த்தமாகக்கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறபடியைக்காட்டி, லக்ஷ்மீ பூமி நீளாநாயகனுயிருந்துவைத்து எனக்கு மறக்கவொண்ணுதபடி என்னை அங்கீகரித்தருளினுனென்கிறார்.

மன்னுமாமலர்க்கிழத்திவையமங்கைமைந்தனுய்ப்
பின்னுமாயர்பின்னைதோண்மணம்புணர்ந்ததன்றியும்
உன்னபாதமென்னசிந்தைமன்னவைத்துநல்கினுய்
பொன்னிசூழரங்கமேயபுண்டரீகனல்லையே. (௫௫)

ப-ரை.—மன்னு-மென்மைகுளிர்த்தி நாற்றங்களையுடைத்தாகையாலே,மாச்லாக்யமான,மலர்க்கிழத்தி-தாமரைமலரைப்பிறப்பகமாகவுடைய பெரியபிராட்டியாருக்கும், வையமங்கை - ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும், மைந்தனுய் - இஷ்டனுய், பின்னும் - அதுக்குமேலே, ஆயர் - இடைக்குலத்தில் பிறந்த, பின்னை

ஐம்பத்துநாலாம்பாட்டு. ஸ்வபோக்த்ர்த்வ விரோதி போக்குகைக்கு, வேறொரு அவதாரமாகாதோ,ராமாவதாரமாகவேணுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (இவ்வபதாநத்தாலித்யாதி.) குங்குமரஜஸ்ஸு - குங்குமதூளென்றபடி. ... ... (௫௫)

தோள் - நப்பின்னைப் பிராட்டி திருத்தோளோடே, மணம் புணர்ந்து - ஸம்ச்லேஷித்து, அதன்றியும் - அதுக்குமேலேயும், உன்னபாதம் - ஸூரிபோக்யமான உன திருவடிகளை, என்னசிந்தை - நித்யஸம்ஸாரியான வென்னுடைய ஹ்ருதயத்திலே, மன்னவைத்து - பொருந்தும்படி வைத்து, நல்கினாய் - பக்ஷபதித்தாய்; பொன்னி - காவேரியாலே, சூழ் - சூழப்பட்ட, அரங்கம் - கோயிலிலே, மேய - நித்யவாஸம் பண்ணின, புண்டரீகனல்லையே - புண்டரீகாவயவனல்லையோ. (௫௫)

வ்யா.—(மன்னுமாமலர்க்கிழத்தி) மென்மை குளிர்த்தி நாற்றமென்கிற விவற்றால் ச்லாக்யமான தாமரைப்பூவில் பிறப்பையுடையளான பெரியபிராட்டியாராகிற மஹிஷி. "कृताभिषेका महिषी" "க்ர்தாபிஷேகாமஹிஷீ" என்கிறபடியே ஜகத்ரக்ஷணத்துக்கு முரியவளென்கை. கிழத்தி - உரியவள். (வையமங்கைமைந்தனாய்) ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு அபிமதனாய். "युवतिश्च कुमारिणी" "யுவதிஶ்ச குமாரிணீ" என்கிற விவள்பருவத்தோடே சேர, "युवा कुमारः" "யுவாகுமார:" என்கிற பருவத்தையுடைய காந்தனாய். மைந்தன் - இளையோன். (பின்னும்) அதுக்குமேலே. ஸர்வாதிகத்வத்துக்கும் போகபௌஷ்கல்யத்துக்கும் இவர்களிருவருமே யமைந்திருக்க அதுக்குமேலே. "अस्येशाना जगतो विष्णुपत्नी" "ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ" "அஸ்யேஶாநாஜகதோ விஷ்ணுபத்நீ" "ஹ்ரீஶ்சதேலக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" "தேவிமாராவார் திருமகள்பூமி." (ஆயர்பின்னை தோள் மணம்புணர்ந்து) அபிஜாதையான நப்பின்னைப் பிராட்டியோடே கலந்து போரும் போகபௌஷ்கல்யத்தையுடையனாய்.

(அதன்றியும்) உனக்கபிமத விஷயங்கள் குறைவற்றிருக்கச் செய்தே அதுக்குமேலேயும். (உன்னபாதமென்ன சிந்தைமன்ன வைத்து நல்கினாய்) "அமரர்சென்னிப்பூ" என்கிறபடியே ஸூரி போக்யமான உன்திருவடிகளை நித்யஸம்ஸாரியா யிருக்கிற வென்னுடைய ஹ்ருதயத்திலே க்ஷணகாலம் விஶ்லேஷமில்லாதபடி வைத்து என்பக்கலிலே பக்ஷபதித்தாய். வாத்ஸல்யம் தந்தாமுடைய வைலக்ஷண்யத்தையும் எதிர்த்தலையில்தண்மையையும் பார்க்க வொட்டாதிறே. (பொன்னிசூழரங்கமேயபுண்டரீகனல்லையே) ச்ரமஹரமான காவேரியாலே சூழப்பட்டகோயிலிலே நித்யவாஸம்பண்ணின புண்டரீகாவயவனல்லையோ. புண்டரீகாவயவ ப்ராசுர்யத்தாலேபுண்டரீகவ்யபதேசம் "आनन्दो ब्रह्म" "विज्ञानं ब्रह्म" "ஆநந்தோப்ரஹ்ம" "விஜ்ஞாநம்ப்ரஹ்ம" இதிவத், திவ்யாவயவங்களுக்கு ச்ரமஹரமான தேசவாஸத்தால் பிறந்த செவ்விக்குமேலே என்னோட்டை ஸம்ஶ்லேஷத்தாலேயும் புதுக்கணித்ததென்கை. ... (௫௫)

ஐம்பத்தஞ்சாம்பாட்டு. மன்னுமாமலர் - மாமலரிலே மன்னுகிற கிழத்தி. இவர்களிருவரும் ஆதிக்யத்துக்கும் போகத்துக்கும் அமைந்திருப்பார்களென்கிறதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார், (अस्येशाना - அஸ்நேசாநேத்யாதி.) ... ... (௫௫)

அ.—ஐம்பத்தாறாம்பாட்டு. இனி மேலாறுபாட்டாலே-திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுபவிக்கிறார். இதில் முதற்பாட்டால்-ஆச்ரிதவிரோதியான ராவணனையழியச்செய்தசக்ரவர்த்தித்திருமகன்,பின்புள்ளாரான அநந்யப்ரயோஜநர்க்குஸ்வப்ராப்திவிரோதிகளைப்போக்கி அநுகூலவ்ர்த்தி கொள்ளுகைக்குத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுபவிக்கிறார்.

இலங்கைமன்னனைந்தொடைந்துபைந்தலைநிலத்துகக்
கலங்கவன்றுசென்றுகொன்றுவென்றிகொண்டவீரனே
விலங்குநூலர்வேதநாவர்நீதியானகேள்வியார்
வலங்கொளக்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. (௫௬)

ப-ரை.—அன்று - வரங்கொடுத்த தேவதைகளும் குடியிருப்பு இழக்கும்படியானதசையிலே, சென்று - ஸேதுபந்தநத்தைப் பண்ணிச்சென்று, இலங்கைமன்னன் - லங்கைக்கு நிர்வாஹகனான ராவணன், கலங்க-பயப்படும்படிக்கீடாக, அவனுடைய, பை-வலிதான, ஐந்தொடைந்து தலை - பத்துத்தலைகளும், நிலத்து-பூமியிலே, உக-உதிர்ந்து உருமாய்ந்தபோம்படி,கொன்று—, வென்றி கொண்ட - ஜயத்தை லபித்த, வீரனே - வீரத்தன்மையையுடையவனே; வைதிககர்மாநுஷ்டாதாக்களென்று தோற்றும்படியான, நூல் - யஜ்ஞோபவீதத்தை, விலங்கர் - சரீரத்திலே யுடையவர்களாய், வேதநாவர் - ஸர்வகாலமும் வேதமோதுகிற நாக்கையுடையராய், நீதியான - ஸர்வகர்ம ஸமாராத்யன்ஸர்வேச்வரனென்று, கேள்வியார் - ஸதாசார்யோபதேச முடைய ப்ராஹ்மணருடைய, வலங்கொள - அநுகூலவ்ர்த்தியை அங்கீகரிக்கைக்காக, குடந்தையுள் - திருக்குடந்தையிலே, கிடந்த - கண்வளர்ந்தருளுகிற, மாலல்லையே-ஸர்வாதிகனல்லையோ. (௫௬)

வ்யா.—(இலங்கைமன்னன்) குளவிக்கூடுசேர்த்தாப்போலே ஹிம்ஸகர் சேரவர்த்திக்கும் லங்கைக்கு நிர்வாஹகனான ராவணன். "𑌰𑌾𑌵𑌣𑍋 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌶𑍍𑌵𑌰𑌃" "ராவணோராக்ஷஸேஶ்வர:" என்கிறபடியே அந்ததுர்வர்க்கத்துக்கடையநிழலாயிருக்குமவனிறே.(ஐந்தொடைந்து பைந்தலைநிலத்துக) அறுக்கவரிதான பத்துத்தலையையும் பூமியிலேயுதிர்த்து உருமாய்ந்துபோம்படி. பைந்தலை-வலியதலை. "ஐந்தொடைந்து"என்று-"𑌦𑌶𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑌨𑌮𑍍""தசேந்த்ரியாநநம்"என்கிறபடியே அநந்யப்ரயோஜநர்க்கு பாதகமான சிலவஞ்சகங்களைநினைக்கிறாராய்த்து. (கலங்கவன்றுசென்றுகொன்று வென்றிகொண்ட வீரனே)பயமிருக்கும்படி யறியாதவன் பயத்தாலே போக்கற்றுக் கலங்கும்படி,இவனுக்கு வரங்கொடுத்த தேவதைகளும் குடியிருப்பிழக்கும்படியானதசையிலே ஜநஸ்தாநவதத்தையும் ஸேதுபந்தநத்தையும் பண்ணிச் சென்றுஅவனைக்கொன்று விஜயத்தை லபித்த ஆண்புலியானவனே.

ஐம்பத்தாறாம்பாட்டு. சிலவஞ்சகங்கள் - மநஸ்ஸு முதலான தசேந்த்ரியங்களை நினைக்கிறாரென்றுஸ்வாபதேசம்.

(விலங்குநூலர்) ஸர்வகாலமும் வைதிக கர்மாநுஷ்டாதாக்களென்று தோற்றும்படியான யஜ்ஞோபவீதத்தை சரீரத்துக்கு நிரூபகமாக வுடையராய். விலங்கு - உடம்பு. (வேதநாவர்) ஸர்வகாலமும் வேதபாராயணம் பண்ணுகையாலே வேதோச்சாரணத்தை நிரூபகமாக வுடையராய். (நீதியானகேள்வியார்) ஸர்வ கர்மஸமாராத்யன் ஸர்வேஶ்வரனென்று ஸதாசார்யோபதேசமுடைய ப்ராஹ்மணர். (வலங்கொளக் குடந்தையுள் கிடந்த மாலுமல்லையே) அவர்களுடைய அநுகூலவ்ர்த்தியை ஸ்வீகரிக்கைக்காகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வாதிகனல்லையோ. வலம் - அநுகூலம். சக்ரவர்த்தித் திருமகனுடைய ஆண்பிள்ளைத் தனத்தை ஆராவமுதாழ்வார்பக்கலிலே யநுபவித்தபடி சொல்லிற்றாய்விட்டது. ... ... (௫௬)

அ.—ஐம்பத்தேழாம்பாட்டு. ப்ராப்திவிரோதியைப் போக்கி அநுகூலவ்ர்த்தி கொள்ளுமளவன்றியே, நித்யாநபாயிநியான பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு இடைச்சுவரான ராவணனை யழியச்செய்தாப்போலே, பிற்பாடரான ஆச்ரிதர்க்கு அநுபவ விரோதிகளைப் போக்குகைக்காகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுபவிக்கிறார்.

சங்குதங்குமுன்கைநங்கைகொங்கைதங்கலுற்றவன்
அங்கமங்கவன்றுசென்றடர்த்தெறிந்தவாழியான்
கொங்குதங்குவார்குழல்மடந்தைமார்குடைந்தநீர்
பொங்குதண்குடந்தையுட்கிடந்தபுண்டரீகனே. (௫௭)

ப-ரை.—சங்கு - சங்குவளைகள், தங்கு - கழலாதே யிருந்துள்ள, முன்கை - முன்கையையுடையளாய், நங்கை- ரூபகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும் பூர்ணையான பிராட்டியுடைய, கொங்கை தங்கல்-ஸ்தநங்களோடே ஸம்ஶ்லேஷிக்கையை, உற்றவன் - விருப்புற்ற ராவணனுடைய, அங்கம் மங்க - சரீரம் அழிகைக்காக, அன்று - பிராட்டி தலைப்பின்னலாலே உச்சுளுக்கிட்டுக்கொண்டு முடிய நினைத்தகாலத்திலே, சென்று - அவனிருந்த விடத்தே சென்று, அடர்த்து - அடைமதிள் படுத்தி, எறிந்த - அவன் தலையை யறுத்து, அந்தஹர்ஷத்தாலே, ஆழியான் - கடல்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன்; கொங்குதங்கு - பரிமளம் மாறுத, வார் - நீண்ட, குழல் - குழலையுடைய, மடந்தைமார் - ஸ்த்ரீகள், குடைந்த - அவகாஹித்த, நீர்-நீரானது, பொங்கு - இவர்களுடைய நெருக்கத்தாலே ப்ரவ்ர்த்தமாய், அத்தாலே, தண் - குளிர்ந்த, குடந்தையுள் - திருக்குடந்தையிலே, கிடந்த-கண்வளர்ந்தருளுகிற, புண்டரீகனே- புண்டரீகாக்ஷனே. (௫௭)

வ்யா.—(சங்குதங்குமுன்கை) வளை கழலாதேயிருந்துள்ள முன்கையை யுடையவள்.

வலம்-ப்ரதக்ஷிணமாகையாலே (அநுகூலமென்கிறது.) (௫௬)

அவன் கொண்டாடும்வளை முன்கைவளையாகையாலே வ்யதிரேகத்தில் கழலுவதும் அதுவேயிறே. இத்தால் - நித்யாநபாயிநியென்கை. (நங்கை) ரூபகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும் பூர்ணையானவள். "తుల్యశీలవయోవృత్తాం తుల్యాభిజనలక్షణామ్" "துல்ய ஶீலவயோவ்ர்த்தாம் துல்யாபிஜநலக்ஷணாம்" என்கிற பிராட்டி பக்கலிலே. (கொங்கைதங்கலுற்றவனங்கம் மங்க) திருவடிகளிலே தங்கப்ராப்தமாயிருக்க, மாத்ர்விஷ்யமென்று பாராதே அதிக்ரமத்தை நினைத்த ராவணனுடைய ஶரீரமழிகைக்காக. தங்கல்-தொங்கல். இந்த துர்ப்புத்திக்கடி தேஹாத்மாபிமாநமாகையாலே அதுக்கடியான சரீரத்தை யாய்த்து அழிக்க நினைத்தது. (அன்று) உடலையுமுயிரையும் பிரித்தாப்போலே, இருவரையும் கடலுக்கக்கரையு மிக்கரையுமாம்படி பண்ணினவன்றென்னுதல்; வேண்யுத்க்ரதந தஶையிலே யென்னுதல். (சென்று) "అభియాతా ప్రహర్తా చ" "அபியாதாப்ரஹர்த்தாச" என்கிறபடியே அவனிருந்தவிடத்தே சென்று. (அடர்த்தெறிந்தஆழியான்) அடைமதிட்படுத்தி அவன்தலையையறுத்து அந்த ஹர்ஷத்தாலே கடல்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன். எறிதல் - அறுத்தல்.

(கொங்குதங்குவார்குழல் மடந்தைமார்) பரிமளம் மாறாத நீண்ட குழலையுடைய ஸ்த்ரீகள். (குடைந்தநீர்பொங்கு தண்குடந்தையுள்) அவகாஹித்தநீரானது இவர்களுடைய நெருக்கத்தாலே ப்ரவ்ர்த்தமாய், அத்தாலே ச்ரமஹரமானதிருக்குடந்தையிலே. இத்தால் - ஆராவமுதாழ்வாரை யநுபவிக்கச்சொல்லுமவர்களை, "శ్రితం మాలాహస్తాః" "ஶ்ரிதம்மாலாஹஸ்தா:" என்கிறபடியே எதிரேற்றுக்கொள்ளுமவர்களையு மங்குத்தைக்கு பரிசாரகைகளாயும் நிற்குமவர்களென்கை. (கிடந்தபுண்டரீகனே) தாமரைக்காடு பரப்புமாறப் பூத்தாப்போலே யிருக்கிற திவ்யாவயவங்களோடே தன்னை யநுபவிப்பிக்கைக்காகக் கண்வளர்ந்தருளுகிறவன். ஆகஇரண்டுபாட்டாலே-சக்ரவர்த்தித்திருமகனுடைய ஆண்பிள்ளைத்தனத்தையும் அழகையுமநுபவித்து, மேலிரண்டு பாட்டாலே - க்ர்ஷ்ணனுடைய வீரசரித்தையும் அழகையும் ஆராவமுதாழ்வார்பக்கலிலே யநுபவிக்கிறார். ... ... (ருஎ)

அ.—ஐம்பத்தெட்டாம்பாட்டு. ஆச்ரிதார்த்தமாக யமளார்ஜுநங்கள் தொடக்கமானப்ரதிகூலவர்க்கத்தைப்போக்கினநீ, அக்காலத்துக்குப் பிற்பாடர்க்குதவுகைக்காக ஆச்ரிதவாத்ஸல்யத்தாலே வந்து கண்வளர்ந்தருளினையல்லையோ வென்கிறார்.

ஐம்பத்தேழாம்பாட்டு. "தங்கு" என்று விசேஷிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (அவன்கொண்டாடுமித்யாதி.) ()

மரங்கெடநடந்தடர்த்துமத்தயானைமத்தகத்
துரங்கெடப்புடைத்தோர்கொம்பொசித்துகந்தவுத்தமா
துரங்கம்வாய்பிளந்துமண்ணளந்தபாதவேதியர்
வரங்கொளக்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. (௫௮)

ப-ரை.—மரம் - யமளார்ஜுநமென்னும் மருதமரங்கள், கெட - முறியும்படி, நடந்து - தளர்நடையிட்டு, மத்தயானை - மதிக்கப்பண்ணிக்கொண்டுவந்த குவலயாபீடத்தின்செருக்குப்போம்படி, அடர்த்து-நெருக்கி, ஓர்- அத்விதீயமான, கொம்பு - கொம்பை, ஒசித்து - முறித்து, உரங்கெட - அதின் மிடுக்கழியும்படி, மத்தகத்து - தலையிலே, புடைத்து - புடைத்துக்கொன்றருளி, உகந்த - ஆச்ரிதவிரோதிபோகப்பெற்றதென்று உகந்த, உத்தமா - புருஷோத்தமனே!; துரங்கம்வாய் பிளந்து - கேசியுடைய வாயைக்கிழித்து, வாமநனாய் மஹாபலியஜ்ஞவாடத்தில் சென்றிரந்து நீரேற்றுப் பெற்ற, மண்-பூமியை, அளந்த - அளந்தருளிய, பாத - திருவடிகளையுடையனாய், வேதியர் - வேதார்த்த தாத்பர்யம் கைப்பட்டவர்கள், வரம்கொள - தந்தாமபேக்ஷிதங்களை உன்பக்கலிலே அபேக்ஷிக்கலாம்படி, குடந்தையுள்கிடந்த - திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற, மாலல்லையே - வ்யாமுக்தனல்லையோ. (௫௮)

வ்யா.—(மரங்கெடநடந்து) மருதுகள் முடியநடைகற்று.நடக்கையாவது - தவழுகையும், தளர்நடையிடுகையும். (அடர்த்து மத்தயானை) மதிக்கப்பண்ணிக்கொண்டுவந்த குவலயாபீடத்தைச் செருக்குப்போம்படி நெருக்கி. (மத்தகத்துரங்கெடப்புடைத்தோர் கொம்பொசித்து) ஆனைவீழக் குத்துமிடத்தில் அத்விதீயமான கொம்பைமுறித்து, அதினுடைய மிடுக்கழியும்படி மஸ்தகத்திலேபுடைத்து. மதத்தாலே வந்த செருக்கை அதினுடைய நாலுகாலுக்கு முன்னே புக்கு நின்று உழைப்பித்துக்கொடுத்து அதினுடைய ஹிம்ஸாபரிகாரமான கொம்பைமுறித்துக் கொன்றருளினானென்றதாய்த்து. (உகந்தவுத்தமா) ஆச்ரிதவிரோதிபோகப் பெற்றதென்று உகந்த புருஷோத்தமனே. இங்குபுருஷோத்தமனென்கிறது-ஸ்வரூபத்தால் வந்த உத்கர்ஷத் தளவன்றியே ஆச்ரிதபக்ஷபாதத்தால் வந்த உத்கர்ஷத்தைநினைத்து. குணாதிக்யமிறே வஸ்துவுக்கு உத்கர்ஷஹேது.

(துரங்கம் வாய்பிளந்து) ஸந்த்யாகாலத்திலே திருவாய்ப்பாடியை யழிக்கவந்த கேசியுடைய வாயைக்கிழித்து. (மண்ணளந்த பாத) ஸ்ரீவாமநனாய் எல்லார்தலையிலும்வைத்த திருவடிகளையுடையவனே. த்ரிவிக்ரமாபதாநம், கேசிவதஸமநந்தரத்திலே க்ருஷ்ணனுடைய சேஷ்டிதமாகப் பேசலாம்படியிறே இரண்டவதாரத்துக்கு முண்டான ஸௌப்ராத்ரம். அதாகிறது-எல்லாரையும் வரையாதே தீண்டுகையும் எதிரிகளை யழகாலே யழிக்கையும்.

ஐம்பத்தெட்டாம்பாட்டு. நடைதருகை யாவதென்னென்ன; அருளிச்செய்கிறார் (தவழுகையுமித்யாதி.) உழப்பி - தடுமாறப் பண்ணி. ... ...(௫௮)

(வேதியர்வரங்கொளக் குடந்தையுட்கிடந்த மாலுமல்லையே) வேதார்த்ததாத்பர்யம் கைப்பட்டவர்கள் தந்தா மபேக்ஷிதங்களை உன்பக்கலிலே யபேக்ஷிக்கலாம்படிதிருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவ்யாமுக்தனல்லையோ. வஞ்சகராய் வந்த யமளார்ஜுநங்களை தன்மௌக்த்யத்தாலேயழித்துளதிரிகளாகக்கண்முகப்பேதோற்றவந்த குவலயாபீடத்தையும் கேசியையும் அநாயாஸேநவழியச்செய்து,தான் வஞ்சகனாய் எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்து முறையுணர்த்தினபுருஷோத்தமன் தன்வாத்ஸல்யத்தாலே பிற்பாடர்க்குதவவந்துகிடக்கிறதேசம்திருக்குடந்தையென்றதாய்த்து.()

அ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.பண்டு ஆச்ரிதவிரோதிகளைப் போக்கின மிடுக்கனாய்வைத்து, அழகாலும் சீலத்தாலும் ஆச்ரிதரை யெழுதிக்கொள்ளுகைக்காக வவதரித்த க்ர்ஷ்ணன்,பிற்பாடருடைய இழவுதீர ஸர்வப்ரகாரத்தாலும்புஷ்கலமான திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுபவிக்கிறார்.

சாலிவேலிதண்வயல்தடங்கிடங்குபூம்பொழில்
கோலமாடநீடுதண்குடந்தைமேயகோவலா
காலநேமிவக்கிரன்கரன்முரன்சிரமவை
காலனோடுகூடவிற்குனித்தவிற்கைவீரனே. (ருகூ)

ப-ரா.—சாலி - செந்நெலை, வேலி - சுற்றுமுடைத்தாய், தண் - குளிர்ந்த, வயல் - வயலையும், அதுக்குள்ளாக, தடம் - பெரிய, கிடங்கு-அகழையும், அதுக்குள்ளாக, பூ - பூத்த, பொழில் - பொழிலையுமுடைத்தாய், கோலம்-அழகிதாய், நீடு - ஓக்கத்தையுடைத்தான, மாடம் - மாடங்களையுடைத்தாய்,தண்-குளிர்ந்த, குடந்தை - திருக்குடந்தையிலே, மேய - நித்யவாஸம் பண்ணுகிற, கோவலா - க்ர்ஷ்ணனாய்; காலநேமி - காலநேமியும், வக்கிரன் - தந்தவக்ரனும், கரன் -க்ரூரனான,முரன்-முராஸுரனுமாகிற இவர்களுடைய,சிரமவை-தலையையறுத்து,காலனோடு கூட-அவர்களுடைய ப்ரணன்காலனோடே கூடும்படிக்கீடாக, வில்வளைத்த - வில்வளைத்து அம்பெய்தவனாய், விற்கை வீரனே - வில்பிடித்த பிடியிலே அவர்கள் முடியும்படியான ஆண்பிள்ளைத்தனத்தையுடையவனே. (ருகூ)

வ்யா.—(சாலிவேலிதண்வயல் தடங்கிடங்கு பூம்பொழில்) செந்நெலைச்சுற்றுமுடைத்தாய், ச்ரமஹரமானவயலையும் அதுக்குள்ளாகப்பெரியஅகழையும் அதுக்குள்ளாகப்பூத்த பொழிலையுமுடைத்தாய். இத்தால் - ஆராவமுதாழ்வாருடைய ஸௌகுமார்யத்துக்கு அநுரூபமாக ஸர்வப்ரகார போக்யதையையுடைய தேசமென்கை. (கோலமாடநீடு தண்குடந்தைமேயகோவலா)தர்சநீயமுமாய், ஓக்கத்தையுமுடைய மாடங்களை யுடைத்தாய்,ச்ரமஹரமான திருக்குடந்தையிலேநித்யவாஸம்பண்ணுகிற க்ர்ஷ்ணனே. இத்தால்—ஆராவமுதாழ்வாருடைய ரஸிகத்வத்துக்கு ஏகாந்தமான போகஸ்தாநமென்கை. "கோவலா" என்கிறது - க்ர்ஷ்ணனுடைய அழகும்

ஸௌலப்யமும் ஶீலமும் ஆராவமுதாழ்வார் பக்கலிலே காணலாம் படி யிருக்கையாலே. அவதாராந்தரங்களென்னவொண்ணாது ஸர்வ தாஸாத்ர்ஶ்யத்தாலே. * "குடந்தையன் கோவலன் குடியடியார்" என்று ஒருதேசவிசேஷத்திலும் ப்ரஸித்தமிறே.

(காலநேமி வக்கரன் கரன்முரன்சிரமவை) காலநேமி தந்த வக்ரன் க்ரூரனான முரன் இவர்களுடைய தலைகளையறுத்து. (காலனோடுகூட வில்குனித்த) இவர்கள்பேர்கேட்கவஞ்சுங்காலன் இவர்களுக்கு நிர்வாஹகனாய், இவர்களஞ்சிச் சென்று கூப்பிடும்படியாக, ஸங்கல்பத்தா லன்றியே, வில்லாலே யழியச்செய்தவனே. (விற்கைவீரனே) ஆச்ரிதவிரோதிகளை யழியச்செய்கைக்கு வில்வளைக் கவும் வேண்டாதே, "ஶக்ரசாபநிபே சாபே க்ருஹீத்வா ஶத்ருநாஶநே" "ஶக்ர சாப்நிபே சாபே க்ர்ஹீத்வா ஶத்ருநாஶநே" என்னும்படியே வில் பிடித்தபிடியிலே அவர்கள் முடியும்படியான ஆண்பிள்ளைத்தனத்தை யுடையவனே. ... ... (௫௯)

அ.—அறுபதாம்பாட்டு. உகந்தருளினநிலங்கள் ஆச்ரயணீயஸ்தலம், போகஸ்தானம் ஒருதேஶவிஶேஷமென்றிராதே, "நிலையார நின்றான்" என்று-நிலையழகிலே துவக்குண்பார்க்குத் திருமலையிலே நின்றருளியும், "கிடந்ததோர் கிடக்கை" என்று – கிடையழகிலே துவக்குண்பார்க்குத்திருக்குடந்தையிலேகண்வளர்ந்தருளியும், இப்படிசெய்தருளிற்று, போக்தாக்களான ஆச்ரிதர்பக்கலுள்ளவ்யாமோஹமிறேயென்கிறார்.

செழுங்கொழும்பெரும்பனிபொழிந்திடவுயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்துவிண்புடைக்கும்வேங்கடத்துள்நின்று
எழுந்திருந்துதேன்பொருந்துபூம்பொழிற்றழைக்கொழும்
செழுந்தடங்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. (௬0)

ப-ரை.—செழும் - பருத்து, கொழும் - தாரைகளாய் விழுகிற, பெரும்பனி - மூடுபனியானது, பொழிந்திட - சொரிய, உயர்ந்த - ஓங்கின, வேய்-மூங்கில்கள், விழுந்து - பனியின்கனத்தாலே தரையளவும் சாய்ந்து, உலர்ந்து-ஸூர்யகிரணத்தாலே பனி உலருகையாலே, எழுந்து - தலையெடுத்து, விண்புடைக்கும் - ஆகாசத்தி னெல்லையிலே முட்டும், வேங்கடத்துள் நின்று - திருமலையிலே நின்றருளி, தேன் - வண்டுகள், எழுந்திருந்து - கிளர்ந்து பரவி, பொருந்து - திரியவும்படிந்து வர்த்திக்குமதாய், தழை - தழைத்து, கொழும்-சிரத்தையையுடைத்தாய், பூ - பரப்புமாறப் பூத்த, பொழில - பொழிலையுடைத்

ஐம்பத்தொன்பதாம்பாட்டு. அழகுமுதலானவற்றை அவதாரங்களுக்கு இல்லையென்ன; அருளிச்செய்கிறார் (அவதாராந்தரமித்யாதி.) க்ர்ஷ்ணனே யென்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன; அருளிச்செய்கிறார் (குடந்தையன்கோவலனித்யாதி.) ... (௫௯)

தாய், செழும் - அழகிய, தடம் - தடாகத்தை யுடைத்தான, குடந்தையுள்-திருக்குடந்தையிலே, கிடந்த - கண்வளர்ந்தருளுகிற, மாலல்லையே - வ்யாமுக்தனல்லையோ. (சுo)

வ்யா.— (செழுங்கொழும்பெரும்பனிபொழிந்திட) பருத்து தாரைகளாய் விழுகிற மூடுபனிசொரிய. செழுமை-பெருமை. கொழுப்பு – கொழுமை. இடைவிடாதேதாரைகளாய் விழுகை. செழுமை-வண்மை. பெரும்பனி - மூடுபனி. இப்படி பனியை வர்ணிக்கிறது-ஏதேனுமாகத் திருமலையிலே ஸம்பந்தித்தவை தமக்கு மநோஹரமா யிருக்கையாலே. (உயர்ந்தவேய்விழுந்து) ஓங்கினமூங்கில்கள் பனியால்வந்த கனத்தாலே தரையளவும் சாய்ந்து. "செழுங்கொழும் - உயர்ந்தவேய் - பெரும்பனிபொழிந்திட - விழுந்து" என்றுமாம். அப்போது – பெருத்து ச்ரத்தையை யுடைத்தாய் உயர்ந்த மூங்கில்களென்றாகக் கடவது. திருவேங்கட முடையானுடைய விசேஷகடாக்ஷமே விளைநீராக வளருகிறவை யென்கை. (உலர்ந்தெழுந்து விண்புடைக்கும் வேங்கடத்துள் நின்று) ஆதித்யகிரணங்களாலே பனியுலருகையாலே, பனியுலர்ந்தவாறே தலையெடுத்து ஆகாசத்தினெல்லையிலே முட்டுந் திருமலையிலேநின்றருளி. இத்தால்-திருவேங்கடமுடையானுடைய விசேஷகடாக்ஷத்திலே தலையெடுக்கையும் வ்யதிரேகத்தில் தரைப்படுகையும் அத்தேசிகமான பதார்த்தங்களுக்கு ஸ்வபாவமென்னுமிடத்துக்கு த்யோதகமென்கை.

(எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழும்) வண்டுகள்கிளர்ந்துபரவாத்திரியவும்படிந்துவர்த்திக்குமதாய், தழைத்துச்ரத்தையையுடைத்தாய், பரப்புமாறப்பூத்த பொழிலையுடைய தேசம். இத்தால் – வண்டுகள் பொழிலின்மதுவெள்ளத்தாலே அவகாஹிக்கமாட்டாதே அலமாக்குமென்கை. (செழுந்தடங்குடந்தையுள்) விடமாட்டாதே அப்பொழிலுக்குள்வாயில் அழகிய தடாகத்தையுடைத்தானதிருக்குடந்தையிலே. இத்தால்-அத்தேசத்தில்திர்யக்குக்களும்போக்யத்தாலேவந்துகளித்துவர்த்திக்கும்படியாயும்தாபத்ரயாதுரர்க்குக்கண்டபோதே ச்ரமஹரமாயுமிருக்கும்தேஶமென்கிறது. (கிடந்தமாலுமல்லையே) "கிடையழகிலே துவக்குண்டு அநுபவிப்பாராரோ" என்று அவஸரப்ரதீக்ஷனாய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகிற வ்யாமுக்தனல்லையோ. ... ... (சுo)

அ.—அறுபத்தோராம்பாட்டு. இப்படி போகஸ்தாநமாகையாலே ஆராவமுதாழ்வார்திருவடிகளிலேதாமநுபவிக்க விழிந்தவிடத்தில், வாய்திறத்தல் அணைத்தல் செய்யாதே ஒருபடியேகண்வளர்ந்தருளக்காண்கையாலே, ஸுகுமாரமான இவ்வடிவைக்கொண்டு த்ரைவிக்ரமாதி சேஷ்டிதங்களைப்பண்ணுகையாலேதிருமேனிநொந்து

கண்வளர்ந்தருளுகிறாராகத் தம்முடையபரிவாலே அதிசங்கித்து என்பயம்கெடும்படி ஒன்றை நிர்ணயித்து எனக்கருளிச் செய்ய வேணுமென்கிறார். இதொழியப்ராங்ந்யாயத்தாலே அர்ச்சாவதார ஸங்கல்பமென்னவொண்ணாதிறே இவர்க்கு.

நடந்தகால்கள்நொந்தவோநடுங்கஞாலமேனமாய்
இடந்தமெய்குலுங்கவோவிலங்குமால்வரைச்சுரங்
கடந்தகால்பரந்தகாவிரிக்கரைக்குடந்தையுள்
கிடந்தவாறெழுந்திருந்துபேசுவாழிகேசனே. (௬௧)

ப-ரை.—நடந்த - திருவுலகளந்தருளின, கால்கள் - திருவடிகள், நொந்தவோ-நொந்த ஆயாஸம் பொறுமையாலேயோ; நடுங்க - பூமிப்பிராட்டி தன்னை உத்தரிக்கைக்கு ஒருவழிகாணாதே நடுங்குகிறதசையிலே, ஞாலம்-பூமியை, ஏனமாய் - மஹாவராஹமாய், இடந்த - அண்டபித்தியிலே புக்கு இடந்தெடுத்தது பொறாமே, மெய்குலுங்கவே - திருமேனியிலுண்டான ஆயாஸத்தாலேயோ; விலங்கு - நீர்வரவொண்ணாதபடி இருவிலங்கான, மால்வரை - பெரியமலைகளையும், சுரம்-மணற்காடுகளையும், கடந்த-கடந்த நீரோடு, கால்பரந்த-கால்பரந்து வருகிற, காவிரி-காவேரி யடிமைசெய்ய, கரை - அதன்கரையிலுள்ள, குடந்தையுள்-திருக்குடந்தையிலே, கிடந்தவாறு-கண்வளர்ந்தருளுகிறபடியை விட்டு, எழுந்திருந்துபேசு-எழுந்திருந்து அருளிச்செய்யவேணும்; வாழி - இக்கிடையழகு நித்யமாய்ச்செல்லவேணும்; கேசனே-முழுலைப்பேணி என்க்லேசத்தைத்தீர்த்தருளவேணுமென்கிறார். (௬௧)

வ்யா:—(நடந்தகால்கள்நொந்தவோ) "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்கிறபடியே ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு திருவுலகளந்த விது பொறாமே நொந்துகண்வளர்ந்தருளுகிறதோ. சக்ரவர்த்தித் திருமகனாய்க்காட்டிலும் மலையிலும் ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு திரிந்தவது பொறாமேநொந்து கண்வளர்ந்தருளுகிறதோ. "எவ்வாறுநடந்தனை யெம்மிராமாவோ!" என்று - ஸௌகுமார்யத்தை யறியுமவர்கள் கூப்பிடும்படியாயிறேயிருப்பது. நடந்ததுபொறாமேகண்வளர்ந்தருளுகிறதாகில் நான் திருவடிகளைப்பிடிக்க. (நடுங்க ஞாலமேனமாயிடந்த மெய்குலுங்கவோ) அன்றிக்கே, பூமிக்கபிமாநிநியான பிராட்டி, பாதாளகதையாய்த் தன்னுடைய உத்தரணத்துக்கு ஒருவழிகாணாதே நின்றுநடுங்குகிற தசையிலே,பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணையான பூமியை மஹாவராஹமாய்அண்டபித்தியிலேபுக்கிடந்தவதுபொறாமே திருமேனியில்ஆயாஸத்தாலே கண்வளர்ந்தருளுகிறதோ!;அதுவாகில் நான்திருமேனியைப்பிடிக்க.(விலங்குமால்வரைச்சுரம் கடந்தகால்பரந்த காவிரிக்கரை) நீர்வரவொண்ணாதபடி இரு

அறுபத்தோராம்பாட்டு. ப்ராங்ந்யாயம் - திருவெஃகாவிலும் அர்ச்சாவதார ஸமாதிகுலைந்து கார்யம் செய்கை.

விலங்கான பெரியமலைகளையும் சுரங்களையும் கடந்த நீரோடு கால்பரந்துவருகிறகாவேரிக்கரையிலே.சுரம்-காடும்;அருநெறியும்.இத்தால்-ஆராவமுதாழ்வாருடைய ஸௌகுமார்யத்துக் கநுகூலமாக சிசிரோபசாரம் பண்ணுகைக்கு, காவேரி, மலையென்ன அருநெறியென்ன இவற்றைக்கடந்து தன்னபிநிவேஶம் தோற்றப்பாய்ந்து வந்தபடியைச் சொல்லிற்றென்கை. (குடந்தையுள் கிடந்தவாறு) காவேரி அடிமைசெய்யத் திருக்குடந்தையிலே ச்ரமம்தோற்றக் கண்வளர்ந்தருளுகிறபடியை. காவேரி சிசிரோபசாரம்பண்ணக் காண்கையாலும், திருவெஃகாவில் கிடையில், "छायावा सत्त्वमनुगच्छेत्" "சாயாவா ஸத்த்வமநுகச்சேத்" என்கிறபடியே தொடர்ந்துபோரக்காண்கையாலும், கோயிலிலும் "உன்னபாதமென்னசிந்தைமன்னவைத்து நல்கினாய்" என்று தன்னபிமதம் பெறுகையாலும், திருக்குடந்தையில் முகந்தாராதேகண்வளர்ந்தருளுகைக்குஹேது ச்ரமமென்றிருக்கிறார். ஆராவமுதாழ்வாரும் இவருடைய பரிவினெல்லையையநுபவிக்கைக்காகவும் படுக்கைவாய்ப்பாலும் கண்வளர்ந் தருளுகிறார். (எழுந்திருந்துபேசு) இதுக்கு ஹேதுவை, கண்வளர்ந்தருளாநிற்க அருளிச்செய்ய வொண்ணாது, என்பயங்கெட எழுந்திருந்து அருளிச்செய்யவேணும். எழுந்திருக்கும்போதை சேஷ்டிதத்தாலும், அருளிச்செய்யும் போதை ஸ்வரத்தாலும் எனக்கு பயங்கெடவேணும்.(வாழி) அப்படி யருளிச்செய்யாமையாலே, 'आयुष्मन्' "ஆயுஷ்மந்" என்னுமாப்போலே யொருநீங்கின்றிக்கே கண்வளர்ந்தருளுகிற இவ்வழகு நித்யமாய்ச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுகிறார். (கேசனே) கேசவசப்தமாய்இடைக்குறைத்தலாய்க்கிடக்கிற தென்னுதல்; கேசத்தை யுடையவனென்னுதல். இரண்டுக்கும் * ஸ்நிக்தநீலகுடிலகுந்தளனென்றர்த்தம். இத்தால்-"केशवः क्लेशनाशनः" "கேஶவக்லேஶநாஶந:"என்கிறபடியே-திருக்குழலைப்பேணி என்னுடைய க்லேசத்தைத் தீர்த்தருளவேணுமென்கை. ... ... (௬௧)

அ.—அறுபத்திரண்டாம்பாட்டு. திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளின விதுக்கு ஹேதுநிஶ்சயிக்கமாட்டாதே பீதரானவர்க்கு,ஹிரண்யனை யழியச்செய்த வீரத்தோடே திருக்குறுங் குடியிலே நின்றருளினபடியைக் காட்டக்கண்டு தரித்து, நம்பியுடைய ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்து முரட்டுஹிரண்யனை யழியச்செய்தாயென்பது உன்னையே யென்று விஸ்மிதராகிறார்.

ச்ரமத்தாலேகண்வளர்ந்தருளுகிறானென்பானென், அர்ச்சாவதாரஸமாதியாலே கண்வளர்கிறானென்னவொண்ணாதோவென்ன; அருளிச்செயகிறார் (காவேரிசிசிரோபேத்யாதி.) ... ... (௬௧)

கரண்டமாடுபொய்கையுட்கரும்பனைப்பெரும்பழம்
புரண்டுவீழவாளைபாய்குறுங்குடிநெடுந்தகாய்
திரண்டதோளிரணியன்சினங்கொளாகமொன்றையும்
இரண்டுகூறுசெய்துகந்தசிங்கமென்பதுன்னையே. (சுஉ)

ப-ரை.—கரண்டம் - நீர்க்காக்கைகள், ஆடு-முழுகாநின்றுள்ள, பொய்கையுள் - பொய்கையிலே, பனை-பனையினுடைய, கரு-கறுத்து, பெரு - பெரிதான, பழம்—, அதினின்றும் விழுந்து, புரண்டு—, வீழ-நீரிலேவிழ, அத்தை நீர்க்காக்கையாகக்கருதி, வாளை - வாளைகள், பாய் - அஞ்சிப்பாயாநின்ற, குறுங்குடி-திருக்குறுங்குடியிலே, அழகு முதலிய ஸ்வபாவங்கள் குறைவற்றிருக்கிற, நெடுந்தகாய் - மஹாப்ரபாவனே, திரண்ட - திரட்சிபெற்ற, தோள் - தோளையுடையனான, இரணியன்-ஹிரண்யனுடைய, சினம்கொள்-சினம்மிக்க, ஒன்று-அத்விதீயமான, ஆகத்தை - சரீரத்தை, இரண்டு கூறுசெய்து - இருகூறாகப்பிளந்து, உகந்த - சிறுக்கனுடைய விரோதிபோக்கப்பெற்றோமென்று உகந்த, சிங்கம் என்பது - நரஸிம்ஹமாக ப்ரமாணங்கள் சொல்லுவது, உன்னையே - அத்யந்த ஸௌகுமாரனையுள்ளையே. (சுஉ)

வ்யா.—(கரண்டமித்யாதி)நீர்க்காக்கை ஸஞ்சரிக்கும்பொய்கையிலே, பனையினுடைய கறுத்தபெரிய பழம் அதினின்றும் விழுந்து புரண்டு நீரிலேவிழ, நீர்க்காக்கையாகக் கருதி வாளைகள் அஞ்சிப்பாயாநின்ற திருக்குறுங்குடியிலே, அழகும் ஸௌகுமார்யமும் ஶீலமும் மேன்மையுமாகிறஇஸ்ஸ்வபாவங்கள் குறைவற்றிருக்கிறமஹாப்ரபாவனே. கரண்டம்-நீர்க்காக்கை. ஆடுகை-நடையாடுதலென்னுதல்; முழுகுதலென்னுதல். தகை - இயல்வு. போலியைக்கண்டு வாளையானது அதிசங்கைபண்ணுகிறவிது, அத்தேசஸ்தரென்பதார்த்தங்கள் நம்பிபக்கல் அஸ்தாநேபயசங்கை பண்ணுகிறபடிக்கு ஸூசகமாயிருக்கிறது.

(திரண்டதோளிரணியன்) திரட்சிபெற்ற தோளையுடைய ஹிரண்யன். அவன் வலியைக் கோட்சொல்லித் தருகிறதோளென்கை. அதவா, தேவர்களுடைய வலியடங்கத் திரண்டதோளென்றுமாம். "इन्द्रत्वमकरोद्दैत्य" "இந்த்ரத்வமகரோத்தைசத்ய" இத்யாதி. (சினங்கொளாகம்) நெஞ்சில்க்ரோதம் வடிவிலே தோற்றியிருக்கிறபடி. சினம்மிக்கவடிவு. (ஒன்றையுமிரண்டுகூறுசெய்து) இஸ்ஸௌகுமாரமான வடிவைக்கொண்டு அத்விதீயமான ஹிரண்யன்சரீரத்தை இரண்டுகூறாகப்பிளந்து. (உகந்த சிங்கமென்பதுன்னையே) சிறுக்கனுடைய விரோதி போக்கப்பெற்றோமென்று உகந்த நரஸிம்ஹமாக ப்ரமாணங்கள் சொல்லுவது அத்யந்த ஸௌகுமாரனை வுன்னையே. "उग्रंवीरंमृत्युमृत्युम्"

அறுபத்திரண்டாம்பாட்டு. இந்த்ரத்வம் - அஸுரர்களெல்லாருங்கூடி ஹிரண்யனை இந்த்ரனாக ப்ரதிபத்திபண்ணினார்கள்.

"உக்ரம்வீரம்மர்த்யும்ர்த்யும்" என்றுசொல்லுவதுன்னையே. "క్వాయం వత్సస్సుకుమారతనుర్హరిః। క్వ వజ్రకఠినాభోగశరీరోఽయం మహాసురః" "க்வ யௌவநோந்முகீ பூதஸுகுமாரதநுர்ஹரிஃ। க்வவஜ்ரகடிநாபோக ஶரீரோயம் மஹாஸுரஃ" என்கிறபடியே உன்ஸௌகுமார்யங் கண்டபடிக்கு அவ்வபதாநம் அநுபபந்நமென்று கருத்து. ஸர்வா திகனுய் அத்யந்த ஸுகுமாரனுன வவன், விமுகரான ஸம்ஸாரி கள்நடுவே திருக்குறுங்குடியிலே வந்து தாழ்ந்தார்க்கு முகங்கொ டுக்க நிற்கிற நிலையாய்த்து, அவ்வூரில் பதார்த்தங்களுக்கு அதி சங்கை மாறுதே செல்லுகைக்கும் இவ்வாழ்வார்க்கு நம்பியுடைய ஸௌகுமார்யத்தையே யநுஸந்திக்கைக்கும் ஹேது. ... (௬௨)

அ.— அறுபத்துமூன்றும்பாட்டு. தேவரீர்ஸௌகுமார்யத் தைப் பாராதே, ஸ்ரீப்ரஹ்லாதன்பக்கல் வாத்ஸல்யத்தாலே ப்ரேரி தராய், ஹிரண்யனை யழியச்செய்யலாம், விமுகரான ஸம்ஸாரிக ளுடைய ஆபிமுக்யத்தை யபேக்ஷித்துஉன்மேன்மையைப்பாராதே கோயில்களிலே நிற்பது, இருப்பது, கிடப்பதாகிற விதென்ன நீர் மையென்று தாம் ஈடுபடுகிறுர்.

நன்றிருந்துயோகநீதிநண்ணுவார்கள்சிந்தையுள்
சென்றிருந்துதீவினைகள்தீர்த்ததேவதேவனே
குன்றிருந்தமாடநீடுபாடகத்துமூரகத்தும்
நின்றிருந்துவெஃகணைக்கிடந்ததென்னநீர்மையே. (௬௩)

ப-ரை.—குசாஜிநங்களாகிற ஆஸநத்தையிட்டு, நன்றிருந்து-அதிலே ஏகா க்ரசித்தனுயிருந்து, யோகநீதி - யோகமாகிற உபாயத்தாலே, நண்ணுவார்கள்- உன்னை லபிக்க விருக்கிறவர்களுடைய, சிந்தையுள் சென்று - ஹ்ருதயத்திலே சென்று, இருந்து-பொருந்தி நின்று, தீவினைகள் - அநுபவவிரோதிகளான துக் கங்களை, தீர்த்த-போக்குகிற, தேவதேவனே-தேவாதிதேவனுனவனே; குன்று இருந்த-மலைசேரவிருந்தாப்போலே, நீடு-ஓங்கின, மாடம்-மாடங்களையுடைய, ஊரகத்து - திருவூரகத்திலே, நின்றும் - நின்றருளியும், பாடகத்து - திருப்பா டகத்திலே, இருந்தும்-இருந்தருளியும், வெஃகணை - திருவெஃகாவிலே, கிடந் தது-கண்வளர்ந்தருளினவிது, என்னநீர்மை-என்னஸ்வபாவமென்கிறுர். (௬௩)

வ்யா.—(நன்றிருந்து) "చేలాజినకుశోత్తరం స్థిరమాసనమాత్మనః శుచౌ దేశే ప్రతిష్ఠాప్య" "சேலாஜிநகுஶோத்தரம் ஸ்திரமாஸநம் ஶுசௌதேஶே ப்ரதிஷ்டாப்ய" என்கிற ஶுத்தமான தேஶத்திலே குஶாஜிநசே லோத்தரமான ஆஸநத்தையிட்டு அதிலே ஏகாக்ரசித்தனுயிருந்து. "ఆసీనస్సమ్భవాత్" "ஆஸீநஸ்ஸம்பவாத்" இத்யாதி. (யோகநீதிநண்ணு வார்கள்)யோகமாகிறஉபாயத்தாலேயுன்னை லபிக்கவிருக்கிறவர்கள். நீதி-வழி.(சிந்தையுட்சென்றிருந்துதீவினைகள்தீர்த்ததேவதேவனே)

அவ்வபதாநம் - நரஸிம்ஹாவதாரம். ... ... (௬௨)

* அயர்வறுமமரர்க ளதிபதியான உன்மேன்மை பாராதே அவர்களுடைய ஹ்ர்தயத்திலே சென்று சுபாச்ரயமாய்க்கொண்டு, அநாதி காலம் விஷயாந்தர ப்ரவணமாய்ப் போந்த ஹ்ர்தயமென்று குத்ஸியாதே ஆஸநபலத்தாலே ஐயிப்பாரைப்போலே ஸ்தாவரப்ரதிஷ்டையாக விருந்து, ஆந்தரமாயும் பாஹ்யமாயுமிருந்துள்ள அநுபவ விரோதிகளான துக்கங்களைப்போக்கும் ஸ்வபாவத்தையுடையவனே. அநந்யப்ரயோஜநரானவர்கள் ஸாதநாந்தர நிஷ்டரோயாகிலும் அவர்கள்ஹ்ர்தயத்திலே செல்லுகையும், நெடுநாள் விஷயாந்தரப்ரவணமான ஹ்ர்தயமென்று குத்ஸியாதே அதிலே நற்றரிக்கவிருக்கையும், ஸ்வப்ராப்தி விரோதிகளான அவித்யாகர்ம வாஸநாதிகளைப் போக்குகையும் தேவரீர்க்கே பரமிறே. "யோகீ யோகவிதாம் நேதா" "யோகோயோக விதாந்நேதா" என்னக்கடவதிறே.

ஸாதநாந்தர நிஷ்டனென்று பாராதே அநந்யப்ரயோஜநனென்கிற விவ்வளவேபார்த்து அவர்களுடைய ஹ்ர்தயத்திலேசென்று, உன்னைப்பெறுகைக்கு க்ர்ஷிபண்ணின விவ்வௌதார்யம் பொறுமே உன்பக்கல் த்வேஷம் பண்ணியிருக்கிற ஸம்ஸாரிகள்திறத்திலே பண்ணினவிவை என்னநீர்மை யென்கிறார்மேல் (குன்றிருந்த வித்யாதி) மலைகள் சேரவிருந்தாப்போலே ஓங்கின மாடங்களையுடைய திருப்பாடகத்திலும், அப்படியே யிருந்துள்ள திருவூரகத்திலும்; "முகங்காட்டுவாருண்டோ" என்று திருவூரகத்திலே நின்றருளியும்,"ஒருத்தரையும்கண்டிலோம்"என்று சோம்பாதே திருப்பாடகத்திலே யிருந்தருளியும், அவ்விடத்திலும் ஆதரிப்பா ரில்லாமையாலே ருசிபிறந்தவன்று கிடையழகைக்கண்டு ஆதரிக்கிறார்களென்று திருவெஃகாவிலே கண்வளர்ந்தருளியும்,இப்படிசெய்தருளின விது என்ன நீர்மையென்கிறார். உன்னைப் பிரியமாட்டாத நித்யஸூரிகளுக்கும் நித்யாநுபவவிஷயமாகலாம், உன்வாசியறியாதார் பக்கலிலே மேல்விழுந்து அவர்களைத் திருத்தி யநுபவிக்க நினைக்கவுமாம், "உன்னைநோக்கோம்"என்றிருந்தஸம்ஸாரிகளுடை வுகப்பையாசைப்பட்டு வளைப்புக்கிடக்கிற விதென்னநீர்மை யென்கிறார். (சுங)

அ.—அறுபத்துநாலாம்பாட்டு. கீழ்ச்சொன்னநீர்மையையுடையவன், எனக்கு ருசிஜநகனுகைக்காகத் திருவூரகந்தொடக்கமான

அறுபத்துமூன்றும்பாட்டு. ஸாதநாந்தரநிஷ்டர் தங்கள் ஸத்கர்மத்தாலே விரோதியைப்போக்கிக் கொள்ளுகையொழிய அவர்களுக்கு நாம் வேணுமோவென்ன; அருளிச்செய்கிறார் (அநந்யப்ரயோஜநரித்யாதி.) ஸாதநாந்தரநிஷ்டர்க்கும் அவன்வேணுமென்னுமதுக்குப்ரமாணமருளிச்செய்கிறார் (யோகீ யோக – யோகோயோ கேத்யாதி.) ... ... (சுங)

திருப்பதிகளிலே வர்த்தித்து ருசிபிறந்தபின்பு, என்பக்கல் அதிவ்யாமோஹத்தைப் பண்ணுகையாலே கீழ்ச்சொன்ன நீர்மைபலித்தது என்பக்கலில் என்கிறார்.

நின்றதெந்தையூரகத்திருந்ததெந்தைபாடகத்
தன்றுவெஃகணைக்கிடந்ததென்னிலாதமுன்னெலாம்
அன்றுநான்பிறந்திலேன்பிறந்தபின்மறந்திலேன்
நின்றதுமிருந்ததுங்கிடந்ததுமென்னெஞ்சுளே. (௬௪)

ப-ரை.—எந்தை-எனக்கு ஸ்வாமியானவன், ஊரகத்து - திருவூரகத்திலே, நின்றது-நின்றருளினதும், எந்தை-என்னுடையஸ்வாமி, பாடகத்து-திருப்பாடகத்திலே, இருந்தது-இருந்தருளினதும், அன்று-இவ்விரண்டு திருப்பதிகளிலும் எனக்கு ருசிபிறவாதவன்று; வெஃகணை - திருவெஃகாவிலே, கிடந்தது - கண் வளர்ந்ததும், என்னிலாதமுன்னெலாம்-நான் அபிமுகீகரிப்பதற் முன்பெல்லாம்; அன்று-ஸாஷ்டிகாலத்திலே நாமரூபங்களைத்தந்தருளினவன்று, நான்—, பிறந்திலேன-அஜ்ஞனாய்ப்போனேன்; பிறந்தபின் - அவன்சேஷி நானசேஷம் என்னும் அறிவு பிறந்தபின்பு, மறந்திலேன்-மறந்தறியேன்; எனக்கு மறக்கவொண்ணாதபடி ருசிபிறந்தபின்பு, நின்றதும் - நின்றருளினதும், இருந்ததும் - இருந்தருளினதும், கிடந்ததும்-கண்வளர்ந்தருளினதும், என்னெஞ்சுள் - என் மநஸ்ஸிலேயாம். (௬௪)

வ்யா.—(நின்றதெந்தையூரகத்து) த்ரைவிக்ரமம் பண்ணின தூளிதாநந் தோற்றத் திருவூரகத்திலே நின்றருளிற்று, எனக்கு ஸ்வாமியென்று நானிசைகைக்காக. நிலையழகைக்காட்டி ருசியைப் பிறப்பித்து, த்ரைவிக்ரமாபதாநத்தை ப்ரகாஶிப்பித்து முறையை யுணர்த்துகைக்காக வென்கை. அதவா, எனக்குஇசைவின்றிக்கே யிருக்கச்செய்தேயும் வந்து நின்றருளுகிறது உடையவன் உடைமையை யிழக்கமாட்டாமையாலே நின்றருளுகிறானென்றுமாம். (இருந்த தெந்தைபாடகத்து) அந்தநிலையழகிலும் எனக்கு ஆபிமுக்யம் பிறக்கக்காணாமையாலே இருப்பழகைக்காட்டி, ‘‘[illegible]’’ ‘‘குணைர்தாஸ்யமுபாகத:’’ என்கிறபடியே-‘‘நீஎனக்கு ஸ்வாமி, நான் அடியேன்’’ என்னும்முறையுணருகைக்காகத் திருப்பாடகத்திலே யிருந்தருளினான். (அன்று வெஃகணைக்கிடந்தது) கீழ்ச்சொன்னவிரண்டு திருப்பதிகளிலும் எனக்குருசிபிறவாதவன்றாகத்திருவெஃகாவிலே கண்வளர்ந்தருளிற்றும். அத்திருப்பதிகளை ஆச்ரயித்த காலத்துக் கவதியென்னென்னில் (என்னிலாத முன்னெலாம்) நானில்லாத முற்காலமெல்லாம். நான் அபிமுகீகரிப்பதற்குமுன்பெல்லாம். ‘‘என்னாகிநானாகி’’ என்னக்கடவதிறே. உபயவிபூதிநாதனை தான்

அறுபத்துநாலாம்பாட்டு. ‘‘என்னிலாத’’ என்றதுக்கு, ‘‘நானிலாத’’ என்றவிடமுண்டோவென்ன; அருளிச்செய்கிறார். (என்னாகிநானாகியென்று.)

ஸம்ஸாரியானவெனக்கு ருசிபிறவாதகாலமெல்லாம் ருசிபிறக்கைக்காக நிற்பது இருப்பது கிடப்பதாவதே!. என்னுடையஸத்தைதன்னுடையகடாக்ஷாதீநமாயிருக்க, இத்தலையில்கடாக்ஷம்தனக்குத்தேட்டமாவதே!.

அக்காலத்தில் நீர்செய்ததென்னென்னில் (அன்றுநான்பிறந்திலேன்) தன்திருவடிகளிலே தலைசாய்க்கைக்காக ஸ்ருஷ்டிகாலத்திலே நாமரூபங்களைத் தந்தருள விஷயாந்தர ப்ராவண்யத்தாலே அநுபவிக்கப் பெற்றிலேன். (நான்பிறந்திலேன்) ஆத்மாவுக்கு ஜந்மமாகிறது அஜ்ஞாநலாபமாகையாலே அஜ்ஞனாய்ப்போனேன். "[illegible]" "அஸத்ப்ரஹ்மேதி வேதசேத்- அஸந்நேவஸபவதி" என்னக்கடவதிறே. "[illegible]" "கரீயாந்ப்ரஹ்மதஃபிதா." (பிறந்தபின் மறந்திலேன்) அவன் க்ர்ஷியாக வெனக்குஅறிவு பிறந்தபின்பு மறந்தறியேன். "[illegible]". "மத்தஸ்ம்ர்திஜ்ஞாநமபோஹநஞ்ச." அவனடியாகப் பிறந்த ஜ்ஞாநம், "மதிநலம்" என்கிறபடியே- பக்திரூபாபந்நஜ்ஞாநமாகையாலே விஸ்ம்ர்திப்ரஸங்கமில்லையிறே. ஆக, தன்னுடையஸத்பாவா உஸத்பாவங்களாகிறன- பகவத்விஷயத்திலே ருசிபிறக்கையும், அதின்றிக்கே யொழிகையும். (நின்றதுமிருந்ததுங் கிடந்ததுமென்னெஞ்சுளே) எனக்கு மறக்கவொண்ணாதபடி ருசிபிறந்த பின்பு, அவன், திருப்பதிகளில்பண்ணினசெயல்களெல்லாவற்றையும், திருப்பதிகளைக் காற்கடைக்கொண்டு என்னுடைய ஹ்ர்தயத்திலே பண்ணியருளாநின்றான். முதலிலே தான் என்பக்கலிலே அபிநிவிஷ்டனாய், அஸத்ஸமனா யிருந்துள்ள வென்னையும் உளனாம்படி பண்ணி, தன்னை மறக்கவொண்ணாதபடியான ப்ரேமத்தை விளைத்து, அதுக்கு விஷயபூதனாய்த்தன்னுடையவிடாயுந் தீர்த்தானென்றதாய்த்து. "சிந்தையுட் சென்றிருந்து தீவினைகள் தீர்த்த" என்றார் - கீழ்; "நின்றது மிருந்ததும கிடந்ததுமென்னெஞ்சுளே" என்று அநுபவத்தைச் சொன்னார் - இங்கு. இவை யிரண்டாலும் - ஸாதநாந்தரநிஷ்டரிற்காட்டில் தம்முடையவதிகாரத்துக் குண்டான வேற்றத்தை யருளிச் செய்துவிட்டாராய்த்து. ... ... (கூச)

அ.—அறுபத்தஞ்சாம்பாட்டு. தம்திருத்தில் ஈச்வரன் பண்ணின வுபகாரமானது தம்திருவுள்ளத்தில்நின்றும் பேராமையாலே பின்பும் அதிலே கால்தாழ்ந்து, திருமலையில் நிலையும், பரமபதத்திலிருப்பும், க்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளின விதுவும், எனக்குத் தன்திருவடிகளிலே ருசிபிறவாத காலமிறே யென்கிறார்.

க்ர்ஷியாக - க்ர்ஷியடியாக. ... ... (கூச)

நிற்பதுமோர்வெற்பகத்திருப்புவிண்கிடப்பதும்
நற்பெருந்திரைக்கடலுள்நானிலாதமுன்னெலாம்
அற்புதனனந்தசயனாதிபூதன்மாதவன்
நிற்பதுமிருப்பதுங்கிடப்பதுமென்னெஞ்சுளே. (௯௫)

ப-ரை.—ஓர்-அத்விதீயமான, வெற்பகத்து-திருமலையிலே, நிற்பதும்-நின்றருளினதும், விண் இருப்பும் - பரமபதத்திலிருந்தருளினதும், நல்-தெளிந்து குளிர்ந்திருக்கிற, திரை-திரைகளையுடைத்தாய், பெரு - பரப்பையுடைத்தான, கடலுள் - திருப்பாற்கடலிலே, கிடப்பதும் - கண்வளர்ந்தருளினதும், நான் இலாத முன்னெல்லாம் - நான் அஸத்கல்பனாய்க்கிடந்த காலமெல்லாம்; அற்புதன்-ஜ்ஞாநசக்த்யாதி குணபரிபூர்ணனாய், அநந்தசயநன் - திருவநந்தாழ்வான் மேலே பள்ளிகொண்டருளுகையாலே ஸர்வேச்வரனாய், ஆதிபூதன் - ஜகத்காரணபூதனாய், மாதவன் - ச்ரிய:பதியான ஸர்வேச்வரன், நிற்பதும்-நின்றருளுவதும், இருப்பதும் - இருந்தருளுவதும், கிடப்பதும் - பள்ளிகொண்டருளுவதும், என்னெஞ்சுள் - என் ஹ்ருதயத்திலேயாம். (௯௫)

வ்யா.—(நிற்பதுமோர் வெற்பகத்து) அத்விதீயமான திருமலையிலே நிற்பதுவும். திருமலைக்கு அத்விதீயத்வம்—"கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்கிறபடியே தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கும் நீர்மைக்கு எல்லைநிலமாயிருக்கை. ஸ்தாவரங்களுக்கும் திர்யக்குக்களுக்கும் தத்ப்ராயரானவேடர்க்கும் திருவடிகளிலேருசியைப்பிறப்பிக்கைக்கு நிற்கிறநிலையிறே. (இருப்புவிண்) ருசிபிறந்தாரை அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளோபாதி முகங்கொடுத்து அநுபவிப்பிக்கைக்காக வெழுந்தருளியிருக்கிற பரமபதத்திலிருப்பும் (கிடப்பதும் நற்பெருந்திரைக்கடலுள்) தெளிந்து குளிர்ந்திருக்கிற திரைகளையுடைத்தாய், "தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி" என்கிறபடியே விஸ்த்ருதமாகக் கண்வளர்ந்தருளுகைக்கு வேண்டும் பரப்பையுடைத்தாய், திரையாகிற கைகளாலே திருவடிகளைவருட க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளுவதும். (நான் இலாத முன்னெலாம்) தன்னோடுண்டான முறைமையையறியாதே நான் அஸத்ஸமனாயிருந்த காலமெல்லாம்.

இப்படிஎன்பக்கலிலே அத்யபிநிவேசத்தைப்பண்ணுகிறவன் ஸர்வப்ரகாரபரிபூர்ணன் கிடீரென்கிறது மேல் (அற்புதனனந்தசயனாதிபூதன்மாதவன்) ஆச்சர்யமானஜ்ஞாநசக்த்யாதி குணபரிபூர்ணனாய், அநந்தசாயியாகையாலே ஸர்வேச்வரனாய,ஜகத்காரணபூதனாய்,உபயவிபூதிநாதத்வத்துக்கும் அவ்வருகானச்ரிய:பதித்வத்தையுமுடையவன் கிடீரென்னுதல். என்னைப்பெற்றபின்பு அவனுக்கு இவையெல்லாம் நிறம்பெற்றதென்னுதல். (நிற்பது மிருப்பதுங் கிடப்பதுமென்னெஞ்சுளே) "கல்லும் கனைகடலும்வைகுந்தவானாடும்புல்லென்றொழிந்தன கொலே பாவம்" என்கிறபடியே அத்திருப்பதி

ப-ரை.—நன்மைசேர் - அழகிதான, பனங்கனிக்கு-பனம்பழம் உதிருகைக் கீடாக, வாசியாகி - வாஜிவேஷத்தையுடையனாய், நேசமின்றி-அபிமுகனானை யன்றிக்கே, வந்தெதிர்ந்த - வந்தெதிர்த்த, தேனுகன் - தேனுகாஸுரனை, நாச மாகி-மர்தப்ராயனாக்கி, நாள் உலப்ப - ஆயுஸ்ஸுமுடிக்கைக்காக, வீசி - சுற்றி யெறிந்து, அத்தாலே, மேல்நிமிர்ந்த-எதிரியைக்காட்டிலும்விஞ்சின,தோளின்- தோள்வலியாலே, இல்லையாக்கினாய் கழற்கு - அவனையழியச்செய்த வுன்திரு வடிகளிலே, ஆசையாமவர்க்கலால் - ப்ரேமமுடையார்க்கல்லது, அமரராகலா குமே-நித்யஸூரிகளோடு ஸத்ர்சராய் தேவரீரை யநுபவிக்கப்போமோ. (அ0)

வ்யா.—(வாசியாகிநேசமின்றி வந்தெதிர்ந்த தேநுகன்) கால யவநாதிகளைப்போலே ஸ்வரூபேணவந்து தோற்றுமே வாஜிவேஷ த்திலேவந்து தோற்றினாய்த்து - க்ர்ஷ்ணன் அவதாரம்பண்ணி மேல்விழுகைக்காக. நேசமின்றி வருகையாவது - "மருண்டுமான்க ணங்கள் மேய்கைமறந்து மேய்ந்தபுல்லும் கடைவாய்வழிசோர" என்று - க்ர்ஷ்ணசேஷ்டிதங்களாலே திர்யக்குக்களும் ப்ரேமபரவச மாய்ச்செல்லாநிற்க, துஷ்ப்ரக்ர்தியாகையாலே அத்துறையி லிழியா தொழிகை. எதிர்ந்துவருகையாவது - ஆதரமில்லையானாலு முபே க்ஷகனாகலாமிறே; அதுவுமின்றிக்கே பாதகனாய்வருகை. (நாசமாகி நாளுலப்ப) இப்படிப்பட்டதேநுகனை மர்தப்ராயனாக்கி ஆயுஸ்ஸை முடிக்கைக்காக. நாசம் - துன்பம். (நன்மைசேர்பனங்கனிக்கு வீசி) தர்ஶநீயமாய்ப்பழுத்துநின்ற பனம்பழமுதிரும்படி, பனைத்த லையிலே சுழற்றியெறிந்து. "గృహీత్వాభ్రామణేనైవ సోప్యుద్గతజీవితమ్ । తస్మి న్నేవ సచిక్షేప ధేనుకస్తృణరాజని। తతః ఫలాన్యనేకాని తాలాగ్రాన్నిపతన్ఖరః। పృథి వ్యాంపాతయామాస మహావాతో ఘనానివ" "க்ர்ஹீத்வாப்ராமணேநைவஸோ ம்பரோகதஜீவிதம்। தஸ்மிந்நேவஸசிக்ஷேப தேநுகந்த்ர்ணராஜநி। ததஃபலாந்யநேகாநிதாலாக்ராந்நிபதந்கர:। ப்ர்திவ்யாம்பாதயாமா ஸமஹாவாதோகநாநிவ" என்னக்கடவதிறே.

(மேல்நிமிர்ந்ததோளினில்லை யாக்கினாய்கழற்கு) எதிரியளவன் றிக்கே விஞ்சினதோள்வலியாலே அவனையழியச்செய்த உன்திரு வடிகளுக்கு ஸங்கல்பத்தாலே யழித்தல், ஆயுதத்தாலேயழித்தலன் றிக்கே, கைதொட்டுத் தோள்வலியாலே யழியச்செய்தபடி. (ஆசை யாமவர்க்கலாலமரராகலாகுமே) உன்னுடைய விரோதி நிரஸந ஶீலதையை யநுஸந்தித்து உன்பக்கலிலே ப்ரேமமுடையார்க் கல்லது நித்யஸூரிகளோடு ஸத்ர்சராய் தேவரீரை யநுபவிக்கப் போமோ வென்கிறார். ... ... (அ0)

அ.—எண்பத்தோராம்பாட்டு. வ்யூஹவிபவங்கள் தேசகால விப்ரக்ர்ஷ்டத்தாலே நிலமன்றென்ன வேண்டாதபடி பிற்பாடரிழவாமைக்குத் திருமலையிலேவந்து நின்றருளினான், அவன் திருவடிகளையாச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோளென்று உபதேசத்தைத் தலைக்கட்டுகிறார்.

கடைந்தபாற்கடற்கிடந்துகாலநேமியைக்கடிந்
துடைந்தவாலிதந்தனுக்குதவவந்திராமனாய்
மிடைந்தவேழ்மரங்களுமடங்கவெய்துவேங்கடம்
அடைந்தமாலபாதமேயடைந்துநாளுமுய்மினோ. (௮௧)

ப-ரை.—துர்வாஸச்சாபத்தாலே ப்ரஷ்டைச்வர்யனான இந்த்ரனுக்கு ஐராவதம் கல்பகவ்ருக்ஷம் முதலியவற்றை யுண்டாக்கிக் கொடுக்கைக்காக, கடைந்தருளின, பாற்கடல்-க்ஷீராப்தியிலே, ஆர்த்தரக்ஷணத்துக்காக, கிடந்து-கண்வளர்ந்தருளியும், அத்தேவதைகளை புஜபலத்தாலே நலிந்த, காலநேமியை-காலநேமியாகிற வஸுரனை, கடிந்து - வென்று, உடைந்த - பகைமீளப்பெறாத நாம் என்னராஜ்யம்பண்ணுகிறோமென்று நெஞ்சழிந்த, வாலிதந்தனுக்குஉதவ, வாலியின் தம்பியாகிய மஹாராஜருக்குண்டான ஆபத்தைத் தீர்க்கைக்காக, இராமனாய்வந்து - சக்ரவர்த்தித்திருமகனாய்த்திருவவதரித்து, மிடைந்த-இலக்குக்குறிக்கவொண்ணாதபடி நெருங்கநிற்கிற, ஏழ்மரங்களும் - மராமரங்களேழையும், அடங்க-கிரிரஸாதலங்களையுமடங்க, எய்து-துளைத்து, வேங்கடமடைந்த-திருமலையை ஆச்ரயித்துநிற்கிற, மாலபாதமே-வ்யாமுக்தனுடைய திருவடிகளையே, அடைந்து-அநந்யப்ரயோஜநரா யாச்ரயித்து, நாளும்-நாள்தோறும்-உய்மின்-உஜ்ஜீவிக்கப்பாருங்கோள். (௮௧)

வ்யா.—(கடைந்தபாற்கடல்கிடந்து) துர்வாஸச்சாபத்தாலே இந்த்ராதிகளுக்குவந்த ஆபத்தை, கடலைக்கடைந்து பரிஹரித்து, இன்னம் ஆபத்துக்களிலே ப்ரஹ்மாதிகள் வந்தபேக்ஷிக்கலாம்படி அதிலே கண்வளர்ந்தருளி. (காலநேமியைக்கடிந்து) அத்தேவதைகளை புஜபலத்தாலே நலிந்தகாலநேமியாகிற வஸுரனைவென்று. கடத்தல் - வெற்றி. (உடைந்தவாலிதந்தனுக்குதவவந்திராமனாய்) வலியாலேயுடைந்த தம்பி தனக்கு. (தன் தம்பி) ப்ரம்ஹாதிகளளவல்லாத திர்யக்குக்களுடைய ரக்ஷணத்துக்காக சக்ரவர்த்தித்திருமகனாய் வந்தவதரித்து. தேவதாந்தர ஸ்பர்சத்தாலே ஸ்வரூபமழிந்தவாலிக்கு, "ராமபாணாஸநக்ஷிப்த மாவஹத்பரமாங்கதிம்" "ராமபாணாஸநக்ஷிப்த மாவஹத்பரமாங்கதிம்" என்கிறபடியே ஸ்வஹஸ்தவதத்தாலே மோக்ஷப்ரதானைக்காக தசரதாத்மஜனாய்வந்து. உடைதல்-அழிதல். அதவா, தனக்கு துஷ்ப்ராபமான ரிச்யமூகத்திலே பகையான மஹாராஜரிருக்கையாலே, "பகைமீளப்பெறாத நாம் என்னராஜ்யம் பண்ணுகிறோம்" என்று நெஞ்சழிந்தவாலியாலே மஹாராஜர்க்குப் பிறந்த ஆபத்தைத் தீர்க்கைக்காக வந்தென்றுமாம்.

(உடைந்தவாலிதந்தனுக்கு) “(தம்பி தனக்கு) மவ்வுக்கு ந ஆதேசமமாய், ‘தம்பி’ என்றத்தை ‘தந்’ என்று கடைக்குறைத்த தாய்க் கிடக்கிறது” என்று ஒருதமிழன்.

(மிடைந்தவேழ்மரங்களுமடங்கவெய்து) ஆபத்திலே ரக்ஷிக்கவரக்கொண்டு ரக்ஷணத்திலே அதிசங்கைபண்ணின மஹாராஜர் விச்வஸிக்கைக்காக இலக்குக்குறிக்கவொண்ணுதபடி மிடைந்துநிற்கிற மராமரங்களேழையும், அருக்தமான கிரிஸாதலங்களேழையுமடங்கத்துளைத்து. வாலி, ஸ்வபலபரீக்ஷைபண்ணுவது ஒரு மராமரத்தளவிலேயாயிருக்க, மஹாராஜருடைய வதிசங்கையை ஸவாஸநமாகப் போக்குகைக்காக ஏழென்று பேர்பெற்றதடைய எய்தாராய்த்து. (வேங்கடமடைந்த மூலபாதமே யடைந்து) ப்ரயோஜநாந்தரபரர்க்கு முகங்கொடுத்த சீலமும், அவதாரத்தில் தாழ்ந்தார்க்குமுகங்கொடுத்தஸீலமும், பிற்பாடரானவர்க ளிழவாமைக்குத் திருமலையை யாச்ரயித்துநிற்கிற வ்யாமுக்தன்திருவடிகளை அநந்யப்ரயோஜநரா யாச்ரயித்து நாளுமுய்மினே. “நாளும்-அடைந்துய்மின்” என்றுமாம். கைங்கர்யமென்றும் உஜ்ஜீவநமென்றும்-பர்யாயம். “சூடாடிதொழுதெழு” என்னக்கடவதிறே. ஆச்ரிதர்க்குத் திருவேங்கடமுடையான்திருவடிகளே ஆச்ரயணீயஸ்தலம்; திருவேங்கடமுடையானுக்கு ஆச்ரயணீயஸ்தலம் திருமலை. (அக)

அ.—எண்பத்திரண்டாம்பாட்டு. இதுககு முன்பு பரோபதேசம்பண்ணினராய், மேல் ஈச்வரனைக்குறித்து தேவரீர்திருவடிகளிலே ப்ரேமயுக்தர் நித்யஸுகிகளென்கிறார். இதுக்கடி-பிறர்க்கு ஸாதநமாகத் தாமுபதேசித்தபக்தி தமக்கு ஸ்வயம் ப்ரயோஜநமாகையாலே, தமக்கு ரஸித்தபடியைப் பேசுகிறார். இப்பரபக்திதான் ஸாதகனுக்கு உபாயத்தில் மேலெல்லையாய், ப்ரபந்நனுக்கு ப்ராப்யத்திலே முதலடியாயிருக்குமிறே. இதில் முதற்பாட்டில்-மநுஷ்யத்வே பரத்வத்தையும் அவதாரகந்தமான க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளுகிற நீர்மையையும் அநுஸந்தித்து, தேவரீர்திருவடிகளிலே ப்ரவணரானர்க்கு ஸர்வதேசத்திலும் ஸுகமேயாமென்கிறார்.

எத்திறத்துமொத்துநின்றுயர்ந்துயர்ந்தபெற்றியோய்
முத்திறத்துமூரிநீரராவணைத்துயின்றநின்
பத்துறுத்தசிந்தையோடுநின்றுபாசம்விட்டவர்க்
கெத்திறத்துமின்பமிங்குமங்குமெங்குமாகுமே. (அஉ)

அ.—எண்பத்தோராம்பாட்டு. “வ்ாலிதனக்கு” என்று முழுச்சொல்லாய் - வாலிபரமாதல்; வாலியுடைய, தந்தனுக்கு - தம்பிதனக்கென்றாய் மாஹாராஜர்பரமாதல். ... ...(அக)

ப-ரை.—எத்திறத்தும் தேவமநுஷ்யதிர்யக் ஸ்தாவரங்களாகிற நான்கு ஜாதிகளிலும் - ஒத்துநின்று-ஸஜாதீயனாய் அவதரித்து, உயர்ந்து - அஜஹத்ஸ்வ பாவனாகையால் வந்தவுத்கர்ஷத்தையும், உயர்ந்த - குணாதிக்யத்தால்வந்த உத்கர்ஷத்தையும், பெற்றியோய் - ஸ்வபாவமாகவுடையவனே, முத்திறத்துநீர்-மூன்றுவகைப்பட்ட நீரையுடையகடலை, மூரி-இடமாகக்கொண்டு, அந்நீர் உறுத்தாமைக்காக, அராவணை - திருவநந்தாழ்வான்மேலே, துயின்ற - கண்வளர்ந்தருளின, நின் - தேவரீர்திருவடிகளிலே, பத்து உறுத்த-பக்திமிகுந்த, சிந்தையோடுநின்று - மநோரதத்தோடே நின்று, பாசம்விட்டவர்க்கு - இதரவிஷய ஸங்கம் விட்டவர்களுக்கு, இங்கும் - சரீரத்தோடே யிருக்குமிருப்பிலும், அங்கும் - பரமபதத்திலிருக்குமிருப்பிலும், எங்கும் - உத்க்ரமணதசையிலும் அர்ச்சிராதிமார்க்கத்திலும், எத்திறத்தும்-ஆகிய இவ்வவஸ்தைகளிலெல்லாம், இன்பமாகும்-ஸுகமேயாயிருக்கும். (அஉ)

வ்யா.—(எத்திறத்துமொத்துநின்றுயர்ந்துயர்ந்த பெற்றியோய்) தேவஜாதியிலும் மநுஷ்யஜாதியிலும் திர்யக்ஜாதியிலும் ஸ்தாவர ஜாதியிலும் ஸஜாதீயனாயவதரித்து, அக்ஜாதியிற்காட்டில் அஜஹத் ஸ்வபாவனாகையாலேவந்த வுத்கர்ஷத்தையும், "ஸ்ரேயாந் பவதி ஜாயமாந:" "ஸ உ ஸ்ரேயாந்பவதிஜாயமாந:" என்கிறபடியே குணாதிக்யத்தால்வந்த வுத்கர்ஷத்தையும் ஸ்வபாவமாகவுடையவனே. பெற்றி-இயல்வு. திறம்-திரள். ப்ரஹ்மருத்ரமத்யாவதாரத்தோடு மத்ஸ்யாவதாரத்தோடு வாசியற ஸஜாதீயபாவத்தில் புரையறுகையும், அதிமாநுஷ சேஷ்டிதங்களாலே ஸர்வாதிகத்வந் தோற்றுகையும், தூத்யஸாரத்யங்களாலே குணாதிக்யம் தோற்றியிருக்கையும். (முத்திறத்துமூரிநீரராவணைத்துயின்ற) அவதாரத்தில் சொன்னமேன்மைக்கும் நீர்மைக்கும் ஊற்றாய், மூன்றுவகைப்பட்ட நீரையுடைத்தானகடலையிடமாகக்கொண்டு, அந்நீருறுத்தாமைக்குத்திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளின. முத்திறத்துநீர் - ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷஜலம் இவை. மூரி - இடம்.

(நின்பத்துறுத்தசிந்தையோடுநின்றுபாசம்விட்டவர்க்கு) உன் திருவடிகளிலே பக்திமிக்க மநோரதத்தோடே நின்று,இதரவிஷயத்தில் ஸங்கத்தைவிட்டவர்க்கு. "பத்து" என்று - பக்தி. உறுதல்-அழுந்தல். அதாவது - மிகுதி. ஆச்ரிதபரித்ராணார்த்தமாக வவதரித்த வவதாரத்தின்மேன்மையும் நீர்மையும் அதுக்கூற்றானக்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளுகிற நீர்மையையும் அநுஸந்தித்து பரபக்தியுக்தராய்,அப்பக்தி பாரவச்யத்தாலே இதரவிஷயங்களிலே வைராக்யத்தையுடையராயிருக்கிறவர்களுக்கென்கை.

(எத்திறத்துமின்பமிங்கு மங்குமெங்குமாகுமே) சரீரத்தோடே யி ருக்குமிருப்பிலும், பரமபதத்திலிருக்குமிருப்பிலும், உத்க்ரமணத சையிலும், அர்ச்சிராதிமார்க்கமென்கிற அவஸ்தாவிசேஷங்களிலு ம் ஸுகமேயாயிருக்கும். எத்திறத்து மின்பமான ஸர்வேச்வரனு டைய உன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை யநுபவித்து, ப்ரகார பேதங்களிலும் த்வதநுபவத்தால் வந்த ஸுகமேயல்லதில்லை. விஷ யாந்தரப்ராவண்யம் எங்ஙனுமாகிலும் துக்கமேயானவோபாதி பக வத்ப்ராவண்யம் எங்ஙனுமாகிலும் ஸுகமேயாயிருக்குமென்கை.

அ.—எண்பத்துமூன்றாம்பாட்டு. “అనన్తక్లేశభాజనమ్” “அநந்த க்லேசபாஜநம்” என்கிறபடியே-துக்கப்ரசுரமான இஸ்ஸம்ஸாரத்தி லே ஸுகமுண்டாகக்கூடுமோவென்னில்; ப்ராப்திதசையில் ஸுக மும், ஸம்ஸாரத்தேயிருந்துவைத்து தேவரீர்திருவடிகளில் விச்சே தமில்லாத ப்ரேமத்தால் பிறக்கும் ஸுகத்துக்குப் போராதென் கிறார்.

மட்டுலாவுதண்டுழாயலங்கலாய்புலன்கழல்
விட்டுவீள்விலாதபோகம்விண்ணினண்ணியேறினும்
எட்டினோடிரண்டெனுங்கயிற்றினான்மநந்தனைக்
கட்டிவீடிலாதுவைத்தகாதலின்பமாகுமே. (௮௩)

ப-ரை.—மட்டுஉலாவு - தேன்மாறாத, தண்-குளிர்ந்த, துழாயலங்கலாய்-திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனானவனே, புலன்கழல் - தர்சநீயமான தேவரீர் திருவடிகளை, விட்டு—, வீள்விலாதபோகம்-அழிவில்லாதபோகத்தை, விண்ணில் ஏறி நண்ணினும்-பரமபதத்திலே யேறிக்கிட்டினாலும், எட்டினோடிரண்டெனும் கயிற்றினால்-பக்தியென்கிறகயிற்றாலே, மநந்தனை-ஸர்வேந்த்ரியங்களுக்கும் ப்ரதாநமானமநஸ்ஸை, கட்டி-விஷயங்களில்போகாதபடி பந்தித்து, வீடிலாது-விச்சேதமில்லாதபடி, வைத்த-தேவரீர்திருவடிகளிலேவைத்த, காதலின்பம் - ப்ரேமமானது, ஸுகத்துக்கு ஸாதநமாயிருக்கையன்றிக்கே, ஆகும்-அதுதானே ஸுகமாயிருக்கும். (௮௩)

வ்யா.—(மட்டுலாவுதண்டுழாயலங்கலாய்) தேன்மாறாத செவ்வித்திருத்துழாய் மாலையாலே யலங்க்ருதனானவனே. இத்தால்-திருத்துழாயோட்டை ஸம்பந்தத்தாலே ஸர்வாதிக வஸ்து வென்னுமிடமும், உபயவிபூதி நிர்வஹணத்துக்கிட்ட தனிமாலை யென்னுமிடமும், ஒப்பனையழகும் சொல்லித்தாய்த்து.(புலன்கழல் விட்டு

அ.— எண்பத்திரண்டாம்பாட்டு. “இங்குமங்குமெங்குமான-எத்திறத்தும்” என்றாய்-முமுக்ஷுசரீரம், முக்தசரீரம், ஸூக்ஷ்மசரீரம் இவையெல்லாவற்றிலும் ஸுகமாயிருக்குமென்கை. திறம்-ப்ரகாரமாய், அத்தால் - சரீரத்தைச்சொல்லுகிறது. எல்லாவவஸ்தையிலுமென்றபடி. ... ... (௮௨)

வீள்விலாதபோகம்) தர்சநீயமாய் நித்யஸூரிகளுக்கு ஸதா தர்சநீயமுமான தேவரீர்திருவடிகளைவிட்டு, வேறுபோக்கில்லாத போகத்தை. புலன்கழல்-புலப்படும் திருவடிகளை. (விண்ணில்நண்ணியேறினும்) பரமபதத்தேயேறிக்கிட்டிலும்.

(எட்டினோடிரண்டெனுங்கயிற்றினால்) எட்டுமிரண்டுங்கூடி-பத்தாய், அத்தைபக்தியென்கிறது. பகவத்பக்தியில் தமக்குள்ள கௌரவாதிசயத்தாலே மறைத்துச்சொல்லுகிறார். "கயிறு" என்று-பந்தகமென்றபடி. (மநந்தனைக்கட்டி) ஸர்வேந்த்ரியங்களுக்கும் ப்ரதாநமான மநஸ்ஸை விஷயாந்தரங்களில் போகாதபடிபந்தித்து. (வீடிலாதுவைத்தகாதலின்பமாகுமே) விச்சேதமில்லாதபடி தேவரீர்திருவடிகளிலே வைத்த ப்ரேமம், ஸுகத்துக்கு ஸாதநமாயிருக்கையன்றிக்கே தானே ஸுகமாயிருக்கும். ... (௮௩)

அ.—எண்பத்துநாலாம்பாட்டு. "வீடிலாதுவைத்த காதலின்பமாகும்" என்று - கீழ்ப்ரஸ்துதமானபக்தி தம்பக்கல் காணாமையாலும், தம்மை ப்ரக்ருதியோடேயிருக்கக் காண்கையாலும், ஈச்வரன் ஸ்வதந்த்ரனாகையாலும், அவன்நினைவாலே பேறாகையாலும், என்திறத்தில் என்னாதன், தன் திருவடிகளிலே பரமபக்தியுக்தனாம்படி பண்ண நினைத்திருக்கிறானோ, நித்யஸம்ஸாரியாய்ப்போக நினைத்திருக்கிறானோ, திருவுள்ளத்தில் நினைத்திருக்கிறதென்னோவென்கிறார்.

பின்பிறக்கவைத்தனன்கொலன்றிநின்றுதன்கழற்
கன்புறைக்கவைத்தநாளறிந்தனன்கொலாழியான்
தன்திறத்தோரன்பிலாவறிவிலாதநாயினேன்
என்திறத்திலென்கொலெம்பிரான்குறிப்பில்வைத்ததே. (௮௪)

ப-ரை.—இந்தசரீராவஸாநத்துக்குமேலே, பின்பிறக்கவைத்தனன் கொல்-இன்னமும் சிலசரீரபரிக்ரஹம்பண்ணும்படியாக நினைத்திருக்கிறானோ; அன்றி-அன்றிக்கே, நின்று - இடைவீடில்லாமல், தன்கழற்கு - தன் திருவடிகளுக்கு, அன்பு-அன்பை, உறைக்கவைத்தநாளறிந்தனன்கொல் - உறைக்கவைத்து அநுபவிக்கும்நாள் எனக்குண்டாம்படி நினைத்திருக்கிறானோ; ஆழியான்தன்திறத்து-ஸர்வாத்மகத்வஸூசகமான திருவாழியையுடையனானவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளிலே, ஓரன்பிலா-ப்ரேமகந்தமில்லாதவனாய், ஓர் அறிவிலாத-ஜ்ஞாநலேசமில்லாதவனாய், நாயினேன் - ஹேயனான, என்திறத்தில் - என் விஷயத்திலே, எம்பிரான் - எனக்கு உபகாரகனான ஸர்வேச்வரன், குறிப்பில்வைத்தது என்கொல் - திருவுள்ளத்தில் கொண்டிருக்கிறது என்னோ. (௮௪)

வ்யா.—(பின்பிறக்கவைத்தனன்கொல்) இந்த சரீராவஸாநத்துக்குமேலே இன்னமும் சிலசரீரபரிக்ரஹம்பண்ணும்படியாக என்னை நினைத்திருக்கிறானோ. அன்றிக்கே (பின்புஇறக்கவைத்தனன்கொல்)

அ.—எண்பத்துநாலாம்பாட்டு. பின் பிறக்க என்னுதல்; பின்பு இறக்கவென்னுதல்.

தன்பக்கலிலே ஜ்ஞாநம்பிறந்தபின்பும் தன்னைவிஸ்மரித்துநசிக்க நினைத்திருக்கிறானோ. நித்யமான வாத்மாவுக்கு பகவத் ஜ்ஞாந லாபாலாபங்களேயிறே ஸதஸத்பாவஹேதுக்கள். "𑌅𑌸𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌵𑍇𑌦 𑌚𑍇𑌤𑍍-𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵 𑌸 𑌭𑌵𑌤𑌿-𑌅𑌸𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑍇𑌦𑍍𑌵𑍇𑌦, 𑌸𑌨𑍍𑌤𑌮𑍇𑌨𑌂 𑌤𑌤𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃" "அஸத் ப்ரஹ்மேதிவேதசேத் - அஸந்நேவஸபவதி, அஸ்திப்ரஹ்மேதிசேத்வேத,ஸந்தமேநந்ததோவிதுரிதி" என்னக்கடவதிறே. (அன்றி) அன்றிக்கே.(நின்று தன்கழற்கன்புறைக்கவைத்தநாளறிந்தனன் கொல்) விச்சேதமில்லாதபடி தன்திருவடிகளுக்குஅன்பையுறைக்கவைத்து அநுபவிக்கும்நாள் எனக்குண்டாம்படி நினைத்திருக்கிறானோ. அன்புறைக்கையாவது - பரமபக்தியுக்தனாகை. வைத்தநுபவிக்கும் நாளென்கிறது - ஒருதேசவிசேஷத்தி லநுபவத்தை. இத்தால் - இச்சேதநனுக்கு ஜந்மமும் விஸ்ம்ர்தியும் விநாசமும் பக்தியில்லாமை; உஜ்ஜீவநம் பரமபக்தியுக்தனாகை யென்றதாய்த்து. ஜந்மமாகிறது-விஷயாந்தர ப்ராவண்யஹேது. விஸ்ம்ர்தியாகிறது - விஷயாந்தர ப்ராவண்யகார்யமாகையாலே ஆத்மாவுக்கு உபயமும்விநாசமிறே.

(ஆழியான்றன்திறத்து) ஸர்வாதிகனை தன்னிடை யாட்டத்து. (ஓரன்பிலாவறிவிலாதநாயினேன்) அவன்ஸ்வரூப ரூப குண விபூதிகளில் ப்ரேமகந்தமின்றிக்கே, அதுக்கடியான ஜ்ஞாநலேசமுமின்றிக்கே, ஹேயனான நான். ப்ரேமகந்தமின்றிக்கே, அதில்லையென்கிற வறிவுமில்லாதவென்றுமாம். "நாயினேன்" என்கிறது - திறந்துகிடந்த வாசல்கள்தோறும் நுழைந்து திரிகையும், எல்லாராலும் பரிபூதனாகையும், உகந்து தொட்டார்க்கும் ஸ்நாநம் பண்ணவேண்டும்படிஅமேத்ய பதார்த்தமாகையும்.(என்திறத்தில்) ஸம்ஸாரிகளைப்போலே விமுகனுதல், முக்தரைப்போலே போகப்ரவணனுதலன்றிக்கேயிருக்கிற வென்னிடையாட்டத்தில். (எம்பிரான் குறிப்பில் வைத்தது-என்கொல்) என்னுதன் திருவுள்ளத்தில் கொண்டிருக்கிறதென்னோ. "பிறந்தபின்மறந்திலேன்" என்கிற ஜ்ஞாநத்தையும், "நடந்தகால்கள்நொந்தவோ" என்கிற ப்ரேமத்தையும் உபாயமென்றிருக்கிறிலர், ஈச்வரன்நினைவே தமக்கு உபாயமென்றிருக்கிறார். "வரந்தரும் திருக்குறிப்பில்வைத்ததாகில்" என்று-ஸாமாந்யேநவுபாயமாகச்சொல்லுவதுமதுவே, தமக்குஉபாயமாகவிசேஷித்துச்சொல்லுவதுமதுவே. இப்பாட்டால்-என்னுடைய பூர்வ வ்ர்த்தத்தைப் பார்த்து உபேக்ஷிக்கிறானோ, இத்தலையில்விநாசம் தன்னிழவாம்படியானகுடம்றுடக்கை நினைத்து உஜ்ஜீவிப்பிக்க நினைத்திருக்கிறானோவென்றதாய்த்து. ... ... (௮௪)

அவன்நினைவேஸாதநமென்பானென், தம்முடைய ஜ்ஞாநம் ஸாதநமாகாதோவென்ன; அருளிச்செய்கிறார்(பிறந்தபின் இத்யாதி.)

அ.—எண்பத்தஞ்சாம்பாட்டு. என்னை இப்ப்ரக்ருதியோடே வைத்தபோதே தேவரீர்நினைவின்னதென்றறிகிலேன், முந்துற முன்னம்உன்ப்ரஸாதத்தாலே திருவடிகளில்பிறந்த ருசியைமாற்றி இதரவிஷய ப்ரவணனாக்காதொழியவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

நச்சராவணைக்கிடந்தநாதபாதபோதினில்
வைத்தசிந்தைவாங்குவித்துநீங்குவிக்கநீயினம்
மெய்த்தன்வல்லையாதலாலறிந்தனன்னின்மாயமே
உய்த்துநின்மயக்கினில்மயக்கலென்னைமாயனே. (௮௫)

ப-ரை.—உகவாதார்க்குக்கிட்டவொண்ணாதபடி, நஞ்சு - விஷத்தையுமிழுகிற, அராவணை - திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளியிலே, கிடந்த - கண்வளர்ந்தருளுகிற, நாத - ஸர்வேச்வரனே, பாதம் - தேவரீருடைய திருவடிகளாகிற, போதினில் - புஷ்பத்திலே, வைத்த - வைக்கப்பட்ட, சிந்தை - மநஸ்ஸை, வாங்குவித்து - அவைகளினின்றும் மீளும்படி பண்ணி, நெடுங்காலம் அகன்றிருந்ததுபோராமே, இன்னம் நீங்குவிக்க - இன்னும் அகலும்படி பண்ணுகைக்கு, நீ - ஸர்வசக்தியானநீ, மெய்த்தன்வல்லை - மெய்யே ஸமர்த்தன்; ஆதலால் - ஆகையாலே, அறிந்தனன் - உன்னை ஸ்வதந்த்ரனென்று அறிந்துகொண்டேன்; மாயனே - ஆச்சர்யமான சேஷ்டிதங்களையுடையவனே, நின்மாயம் - தேவரீரிட்டவழக்கான ப்ரக்ருதியோடே, உய்த்து - நித்யஸம்ஸ்ருஷ்டனாம்படி பண்ணி, நின் - உனக்கு பரிகரமான, மயக்கினில் - சப்தாதிவிஷயங்களிலே மூட்டி, என்னை - உன்னைபார்த்திருக்கிறவென்னை, மயக்கல் - அறிவுகெடுக்கப்பாராதொழியவேணும். (௮௫)

வ்யா.—(நச்சராவணைக்கிடந்தநாத) உகவாதார்க்குக் கிட்டவொண்ணாதபடி விஷத்தையுமிழுகிற திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனே. நீ உகந்தாரை நித்யகைங்கர்யம் கொள்ளும் ஸ்வதந்த்ரனென்றபடி. (பாதபோதினில்வைத்தசிந்தை) உன்திருவடிகளாகிற செவ்விப்பூவிலே வ்யவஸ்திதமான மநஸ்ஸை. ப்ராப்தமுமாய் நிரதிசய போக்யமுமாயிருந்துள்ள திருவடிகளிலே பொருந்தின மநஸ்ஸை யென்கை. (வாங்குவித்து) திருவடிகளில்நின்றும் மீளும்படிபண்ணி. "𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌗𑌤𑌮𑌨𑍍𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌤𑌿" "நிவேஶிதாத்மாகதமந்யதிச்சதி" என்று மநஸ்ஸையும் விமுகமாம்படிபண்ணி. (நீங்குவிக்கநீயினம்மெய்த்தன்வல்லை) நெடுங்காலம் அகன்றதுபோராமே யின்னமகலும்படிபண்ணவல்ல ஸர்வசக்தியானநீ மெய்யே வல்லை.

(ஆதலாலறிந்தனன்) ஒருத்தனைக் கேள்விகொண்டு கார்யம் செய்யவேண்டாதபடிவஸ்துவை வஸ்த்வந்தரமாக்கவல்ல சக்தியையுடையையாகையாலே உன்னை ஸ்வதந்த்ரனென் றறிந்துகொண்டேன். (நின்மாயமேயுய்த்து நின்மயக்கினில்மயக்கல்) உமக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; "𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾" "மமமாயா" என்கிறபடியேதேவரீரிட்டவழக்கானப்ரக்ருதியோடேநித்யஸம்ஸ்ருஷ்ட

ளும்படி பண்ணி, உனக்கு பரிகரமான சப்தாதிவிஷயங்களிலே மூட்டி என்னை யறிவுகெடுக்கப் பாராதொழியவேணும். சேதநரை யறிவுகெடுக்குமவையாகையாலே, "மயக்கு" என்று - சப்தாதிவிஷயங்களைச்சொல்லுகிறது. (என்னை) உன்பக்கலிலே ந்யஸ்தபரனாய் உன்கைபார்த்திருக்கிறவென்னை. (மாயனே) நம்மை யொழியச் செல்லாதாரை சப்தாதிகளிலேமூட்டி யறிவுகெடுப்புதோமோ, ஸ்வதந்த்ரனையன்றோ நாம் அங்ஙன் செய்வதென்ன; ஆச்சர்ய மான சேஷ்டிதங்களையுடையவனே. "ఉపమానమశేషాణాం సాధూనామ్', "உபமாநமஶேஷாணாம்ஸாதூநாம்" என்கிறபடியே ப்ரஹ்லாதனை எதிரம்புகோக்கப்பண்ணவல்லை,ப்ராதிகூல்யத்தில் வ்யவஸ்திதனான சிசுபாலனுக்கு ஸாயுஜ்யப்ரதனாகவும் வல்லை, இதுவன்றோ தேவரீருடைய ஸ்வாதந்த்ர்யமென்கிறார். ... ... (௮௫)

அ.—எண்பத்தாறும்பாட்டு. உம்மை நம்பக்கல்நின்றுமகற்றி ப்ரக்ருதிவச்யராக்குவோமாக நம்பக்கலிலே அதிஶங்கை பண்ணுவானென்னென்ன; விரோதிநிரஸநஸமர்த்தனானநீ என்ப்ரக்ருதிஸம்பந்தத்தையறுத்து என்னினைவைத் தலைக்கட்டாதொழிந்தால் அதிசங்கைபண்ணாதே செய்வதென்னென்கிறார்.

சாடுசாடுபாதனேசலங்கலந்தபொய்கைவாய்
ஆடரவின்வன்பிடர்நடம்பயின்றநாதனே
கோடுநீடுகையசெய்யபாதநாளுமுள்ளினால்
வீடனாகமெய்செயாதவண்ணமென்கொல்கண்ணனே. (௮௬)

ப-ரை.—சாடு-சகடாஸுரன்முடியும்படி, சாடு-உதைத்த, பாதனே - திருவடிகளையுடையனாய், விஷமேமிக்கு, சலம்கலந்த - அத்தோடேயமுநாஜலமும் கலந்திருந்துள்ள, பொய்கைவாய்-பொய்கையிலே, ஆடு-வர்த்திக்கிற, அரவின்-காளியனுடைய, வன்-திண்ணிதான, பிடர் - பிடரியிலே, நடம்பயின்ற - நர்த்தநம்செய்தவனாய், நாதனே-எங்களுக்கு வகுத்தஸ்வாமியாய், நீடு-ஸர்வகாலத்திலும்,கோடு-ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, கைய-திருக்கையிலே யுடையவனாய், கண்ணனே-ஆச்ரிதஸுலபனானவனே, செய்ய - அழகிதான, பாதம்-உன் திருவடித்தாமரைகளை, நாளும்-ஸர்வகாலமும்,உள்ளினால்-அநுஸந்தித்தால்,வீடனாக-ப்ரக்ருதிஸம்பந்தமற்றுத்திருவடிகளைப்பெறுமவனாக, மெய்செயாதவண்ணம் - மெய்செய்யாதொழிகின்ற ப்ரகாரம், என்கொல்-என்னோவென்கிறார். (௮௬)

வ்யா.—(சாடுசாடுபாதனே) சகடாஸுரன்முடியும்படி திருவடிகளை நிமிர்த்தவனே. அநுகூலர்க்கு உத்தேஶ்யமானதிருவடிகளேயாய்த்து ப்ராதிகூலர்க்குநாசகரமாய்த்து. இதிறே வஸ்துஸ்வபாவம். "விடமுமமுதமுமாய்" என்னக்கடவதிறே. இத்தால்-விரோதிநிரஸநத்தில் உனக்கு வருத்தமுண்டாய்த்தானிழக்கிறேனோவென்கை.

(சலங்கலந்தபொய்கைவாய்)விஷமேப்ரசுரமாய்அத்தோடேயமுநா ஜலமும் மிச்ரமாயிருந்துள்ள பொய்கையிலே. "𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌤𑌿𑌮𑌹𑌾𑌭𑍀𑌮𑌂 𑌵𑌿𑌷𑌾𑌗𑍍𑌨𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑌵𑌾𑌰𑌿𑌣𑌮𑍍। 𑌹𑍍𑌰𑌦𑌂 𑌕𑌾𑌲𑍀𑌯𑌨𑌾𑌗𑌸𑍍𑌯 𑌦𑌦𑌰𑍍𑌶𑌾𑌤𑌿𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌮𑍍" "தஸ்யாஶ்சாதிமஹாபீமம்விஷாக்நிஶ்ரிதவாரிணம் | ஹ்ரதம்காளியநாகஸ்யததர்ஶாதிவிபீஷணம்" என்னக்கடவதிறே. (ஆடரவின்வன்பிடர்நடம்பயின்ற) அப்பொய்கையிலே வர்த்திக்கிற காளியனுடைய திண்ணிய பிடரியிலேநின்று ஸஞ்சரிக்கிற ஸஞ்சாரம் வல்லாராடினுப்போலேயிருக்கை. "ஆடரவு" என்று-க்ரோதத்தாலே யாடுகிற அரவென்றுமாம். "ஆடல்" என்று - நடையாட்டமும், கூத்தும். (நாதனே) வகுத்தஸ்வாமியானவனே. விரோதிநிரஸந முகப்பாகைக்கடியான ஸம்பந்தத்தைச்சொல்லுகிறது. இத்தால் - என்விரோதியைப்போக்குகைக்கு உகப்பல்லாரையிழக்கிறேனே, ஸம்பந்தமில்லாமே யிழக்கிறேனோவென்கை. பகவத்ஸமாச்ரயணத்துக்கும் அநுபவத்துக்குமாக ஸ்ருஷ்டமான சரீரத்திலே அஹங்காரலேச முண்டானல் அதுநிரஸநீயமென்று தோற்றுகைக்காக, சகடாஸுரநிரஸநத்தையருளிச்செய்தார். தனக்கு போக்யமான வாத்மாவுக்கு, விஷ ஸம்ஸர்க்கம்போலே நிரஸநீயம் தேஹஸம்பந்தமென்று தோற்றுகைக்காகக் காளியமர்த்தநத்தை யருளிச்செய்தார். அநுகூலமாகவைத்ததொன்றிறே சகடம், உபஜீவ்யமாயிருப்பதொன்றிறே யமுநா ஜலம்.

(கோடுநீடுகைய) ஸர்வகாலமும் திருக்கைக்கு நிரூபகமென்னும்படி அத்தைப்பிரியாத ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடையவனே. என் விரோதியைப் போக்குகைக்கு உன்கையில் பரிகரமில்லாமே யிழக்கிறேனோ, என்கையில் பரிகரமுண்டாயிழக்கிறேனோவென்கை. (செய்யபாதம் நாளுமுள்ளினல்) உன்திருமேனிக்கு பரபாகமாய் ஆகர்ஷகமான திருவடிகளை ஸர்வகாலமும் அபாச்ரயமாக வநுஸந்தித்தால். இத்தால்-நான் அந்யபரனாய்த்தானிழக்கிறேனோ வென்கை. (வீடனுகமெய்செயாதவண்ணமென்கொல்) இப்படி சக்தனாயிருக்க, ப்ரக்ருதி ஸம்பந்தமற்றுத் திருவடிகளைப்பெறுமவனாக மெய்செய்யா

அ.— எண்பத்தாறும்பாட்டு (ஆடரவு) ஆடல் - ஸஞ்சாரமாய், அத்தால் - வர்த்திக்கிற அரவென்னுதல். மெய்செய்கை - சரீரமிருக்கச்செய்தே ஒருஜ்ஞாநவிஷயத்தாலேமெய் போலேதோற்றியிருக்கையை சரீரநிவ்ர்த்திபூர்வகமாக யதாவானபகவதநுபவத்தைச்செய்கை. நான்இச்சங்கைக்குஹேது சொல்லாதபடி என்னபிமதம் செய்யாமைக்கு ஹேதுவைச்சொல்லலாகாதோ என்கிறுனென்று வாக்யத்தை அந்வயித்துக்கொள்வது. ... ... (௮௬)

தொழிகிற ப்ரகாரமென்னே. மெய்செய்கையாவது - விஷயீகாரமாத்ரத்திலே, "முடியாததென்னெனக்கேலினி" என்னப்பண்ணுதல், ஜ்ஞாநலாபத்தாலே, "யாவர்நிகரகல்வானத்தே" என்னப்பண்ணுதல் செய்யுமிவ்வளவுகளாலேவந்த ஆஸ்வாஸமொழிய தேஹஸம்பந்தத்தை அறுக்கையும், நித்யஸூரிகள் பரிமாற்றத்தைப் பண்ணித் தருகையும். (கண்ணனே) ஸம்ஸாரிகளுக்கு இச்சையே தொடங்கி பரமபக்தி பர்யந்தமாக வெல்லா வவஸ்தைகளையு முண்டாக்கி முக்தராக்குகையன்றோ வவதாரத்துக்குபலம், அநுபாவ்யமாயிருப்பதொரு கர்மமோக்ஷமுண்டாயோ வவதரித்தது; ஆக, நீர் நம்பக்கலிலே அதிசங்கை பண்ணுகைக்கு ஹேதுவென்னென்ன; நீ சக்தனாய் வைத்து என்னபிமதஞ்செய்யாமைக்கு ஹேதுவைச் சொல்லலாகாதோ நான் அதிசங்கைபண்ணினதுக்கு ஹேதுசொல்லும்படி யென்கிறார். ... ...(அசு)

அ.—எண்பத்தேழாம்பாட்டு. "செய்யபாதம் நாளுமுள்ளினால்" என்று நீயே எனக்கு அபாச்ரயமென்கையாலே நம்மையொழிய வுமக்கு வேறொரு பற்றில்லையோவென்ன; அபாச்ரயமாக ஸம்பாவனையுள்ள ப்ரஹ்ம ருத்ரர்கள் ஸ்வாதிகாரஸித்திக்கு தேவரீர் கைபார்த்திருக்கும்படியாய் இழிந்தபின்பு,ஸர்வாதிகாரனதேவரீரை யொழிய வேறொரு பற்றையுடையே னல்லேனென்று தம்முடைய வதிகாரத்துக்கு அபேக்ஷிதமான அநந்யகதித்வ க்யாபநம் பண்ணுகிறார் மேல்.

நெற்றிபெற்றகண்ணன்விண்ணினாதனோடுபோதின்மேல்
நற்றவத்தநாதனோடுமற்றுமுள்ளவானவர்
கற்றபெற்றியால்வணங்குபாதநாதவேதநின்
பற்றலாலோர்பற்றுமற்றதுற்றிலேனுரைக்கிலே. (அஎ)

ப-ரை.—நெற்றிபெற்றகண்ணன் - நெற்றியிலே கண்ணையுடையனான ருத்ரனும், விண்ணின்நாதனோடு-ஸ்வர்க்கத்துக்கு நிர்வாஹகனான இந்த்ரனும், போதின்மேல் - திருநாபீகமலத்தைப் பிறப்பிடமாகவுடையனாய், நல்தவத்தநாதனோடு-ஒருவராலும் செய்யமுடியாத தபஸ்ஸைப்பண்ணுகையாலே பதினான்கு உலகங்களுக்கும் ஸ்ரஷ்டாவாய் அவற்றுக்கு நாதனான சதுர்முகனும், மற்றுமுள்ளவானவர்-ஹவிர்ப்பாகபுக்குக்களான மற்ற தேவதைகளும், கற்றபெற்றியால்-தந்தாம்கற்ற ப்ரகாரங்களாலே, வணங்கு - ஆச்ரயிக்கும், பாத-திருவடிகளையுடையனாய், நாதவேத-ஸர்வலோகநாதனாக வேதப்ரதிபாத்யனானவனே, உரைக்கில் - உண்மைசொல்லப்புகில், நின்பற்றலால்-உன் திருவடிகளே அபாச்ரயமாயிருக்குமதொழிய, மற்றோர்பற்றது -வேறோர் பாச்ரயத்தை, உற்றிலேன் - உடையேனல்லேன். (அஎ)

வ்யா.—(நெற்றிபெற்றகண்ணன்)நெற்றியிலே கண்ணையுடைய ருத்ரன். தன்னுடைய ஸௌகத்யதிசயத்துக்கு ப்ரகாசகமாகையாலே லலாட நேத்ரத்தைத் தனக்குப்பேறாக நினைத்திருக்கிறானாய்த்து.

(விண்ணின்நாதனோடு போதின்மேல் நற்றவத்தநாதனோடுமற்றுமுள்ளவானவர்) ஸ்வர்க்கத்துக்குநிர்வாஹகனான இந்த்ரனோடே, திருநாபீகமலத்தைப் பிறப்பாகவும் ஸ்தாநமாகவுமுடையனாய் துஷ்கரமான தபஸ்ஸாலே சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவுமாய் அதுக்கு நிர்வாஹகனுமானப்ரஹ்மாவோடே, ஹவிர்ப்பாகபுக்குக்களான ஸகலதேவதைகள். ஸம்ப்ரதிபந்ந க்ஷேத்ரஜ்ஞரான தேவர்களோடும் இந்த்ரனோடுங்கூட ப்ரம்ஹ ருத்ரர்களைச் சொல்லிற்று, அவர்களோபாதி இவர்களும் க்ஷேத்ரஜ்ஞரென்று தோற்றுகைக்காக.

(கற்றபெற்றியால்வணங்குபாத) தாந்தாங்கற்ற ப்ரகாரங்களாலே யாச்ரயிக்கும் திருவடிகளையுடையவனே. கற்றப்ரகாரங்களென்கையாலும், ஆச்ரயணத்தைச் சொல்லுகையாலும்-இவர்களுடைய சாஸ்த்ரவஶ்யதையையும் ஜ்ஞாநஶக்திகளுடைய வைஷம்யங்களையும் சொல்லுகிறது. (நாதவேத) நாதனாக வேதப்ரதிபாத்யனானவனே. தேவர்களுடைய ஆச்ரயணத்துக்கடியான ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. “తమీశ్వరాణాం పరమం మహేశ్వరమ్” “పతింవిశ్వస్య” “தமீஶ்வராணாம்பரமம்மஹேஶ்வரம்” “பதிம்விஶ்வஸ்ய” என்னக்கடவதிறே. (நின்பற்றலாலோர்பற்றுமற்றதுற்றிலேன்) உன்திருவடிகளே அபாச்ரயமாகவிருக்குமதொழிய எனக்கு வேறொரு அபாச்ரயஸ்பர்சமில்லை. உறுதல்-நீண்டுதல். (உரைக்கிலே) தேவதாந்தரஸ்பர்சமில்லையென்று சொல்லுகையும் எனக்கவத்யமென்கை. (௮௭)

௮.—எண்பத்தெட்டாம்பாட்டு. ப்ரஹ்மருத்ராதிகளுடையவதிகாரம் ஈஶ்வரனாலேயென்றார்-கீழ்; இதில் - அவர்கள் தங்களாபந்நிவ்ருத்திக்கு தேவரீர்கைபார்த்திருக்கும்படி பரமோதாரரான தேவரீரையொழிய வேறொருவரை தேவதையாக மதிப்பனோவென்கிறார்.

வெள்ளைவேலைவெற்புநாட்டிவெள்ளெயிற்றராவளாய்
அள்ளலாய்க்கடைந்தவன்றருவரைக்கோராமையாய்
உள்ளநோய்கள்தீர்மருந்துவானவர்க்களித்தவெம்
வள்ளலாரையன்றிமற்றோர்தெய்வம்நான்மதிப்பனே. (௮௮)

ப-ரை.—வெள்ளைவேலை - வெளுத்தகடலானக்ஷீராப்தியிலே, வெற்புநாட்டி-மந்தரபர்வதத்தைநாட்டி, வெள் - வெளுத்த, எயிறு - தந்தபங்க்தியைக்காட்டுகிற, அராவு - வாஸுகியாகிற பாம்பை, அளாய்-சுற்றி, அள்ளலாய்-திரைகள் எதிரேவந்து செறியும்படி, கடைந்தவன்று-மதநம்பண்ணின காலத்திலே, அருவரைக்கு - அரிதான அம்மலை அமிழ்ந்தாதபடி முதுகிலேநின்று சுழலுகைக்கு, ஓர்-அத்விதீயமான, ஆமையாய-ஆமையாய்தரித்து, வானவர்க்குஉள்ள நோய்கள்-இந்த்ராதி தேவர்களுக்குண்டான துரிதங்களை, தீர்-தீர்க்கத்தக்க, மருந்து-அம்ர்தத்தை, அளித்த - அவர்களுக்குக்கொடுத்தருளுகையாலே, எம்வள்ளலாரையன்றி - எனக்கு ஔதார்யத்தை ப்ரகாஶிப்பித்தவனையொழிய, நான்-அநந்யப்ரயோஜநனாய் அநந்யசரணனானநான், மற்றோர்தெய்வம் - வேறொருதைவத்தை, மதிப்பனே-ஆச்ரணீயமாகமதிப்பேனோ. (௮௮)

வ்யா.—(வெள்ளைவேலைவெற்புநாட்டி) வெளுத்தகடலிலேமந்தரபர்வதத்தைநாட்டி.காளமேகநிபஶ்யாமமானதான் க்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளும்போதை அந்த பரபாகரஸம் அநந்யப்ரயோஜநர்க்கு அநுபாவ்யமாயிருக்க, அத்தைக்குலைத்து ப்ரயோஜநாந்தரபரர்க்காக அக்கடலிலே கொடுபுக்கு மந்தரத்தைநாட்டி. (வெள்ளெயிற்றராவளாய்) வெளுத்த தந்தபங்க்தியைக்காட்டுகிற வாஸுகியை அதிலேசுற்றி. தன்னை மந்தரபர்வதத்திலே சுற்றிவலிக்கப்புக்கவளவிலே தன்பலஹாநிதோற்றப் பல்காட்டுகிற வாஸுகிக்கு பலஸாதநத்தைப்பண்ணி அந்த மந்தரத்திலேசுற்றி. "తేజసానాగరాజానం తథాప్యాయితవాన్ ప్రభుః" "தேஜஸாநாகராஜாநம் ததாப்யாயிதவாந் ப்ரபுః" என்னக்கடவதிறே. எயிறு - பல்லு. அரவு-பாம்பு. அளாய்-அளாவி-சுற்றி. (அள்ளலாய்க்கடைந்தவன்று) "అప్రమేయోమహోదధిః" "அப்ரமேயோமஹோததி." என்கிறபடியே அம்மஹார்ணவத்தை, "கடல்மாறுசுழன்றழைக்கின்றவொலி" என்னும்படி திரைகள் எதிரோவந்து செறியும்படி கடைந்தவன்று. அள்ளல் - செறிவு. "அன்று" என்கிறது-ஈஶ்வராபிமாநிகளான ஸகலதேவதைகளும் தங்களாபந்நிவ்ருத்திக்கு அவன்கைபார்த்திருந்தவன்றென்கை. (அருவரைக்கோராமையாய்) அம்மந்தரம் ஆழங்கால்படாமே தன்முதுகிலேநின்று சுழலும்படி அத்விதீயமானவாமையாய்தரித்து. அஜ்ஜாதியிலே அந்யதமனுமென்றுமாம். "క్షీరోదమధ్యే భగవాన్ కూర్మరూపీ స్వయం హరిః। మన్థరాద్రేరధిష్ఠానం భ్రమతో భూన్మహామునే" "க்ஷீரோதமத்யேபகவாந் கூர்மரூபீஸ்வயம்ஹரிः। மந்தராத்ரேரதிஷ்டாநம் ப்ரமதோபூந்மஹாமுநே" என்னக்கடவதிறே.

(உள்ளநோய்கள்)"ஈச்வரோஹம்" என்றிருக்கிறவர்களுக்குஒரு ப்ராஹ்மணசாபமாத்ரத்தாலே தன்னையும்தன்விபூதியையும் அஶ்ரீ ப்ரவேஶிக்கையும், அத்தாலே ஸத்வம் குடிபோகையும், அத்தாலே ஜ்ஞாநஹாநியும் பலஹாநியும்,அந்த பலஹாநியாலே வந்த அஸுரபரிபவமும், இவற்றால்வந்ததுக்கபரம்பரைகளும்நோய்களிறே.(தீர்மருந்துவானவர்க்களித்த) இவர்கள்துரிதங்கள்போக அம்ருதத்தையும் பிராட்டியுடைய விஶேஷகடாக்ஷத்தையும் கொடுத்த. அம்ருதப்ரதாநத்தாலே பலத்தையும், பிராட்டியுடைய விஶேஷகடாக்ஷத்தாலே ஐச்வர்யத்தையும் கொடுத்தானென்கை. "ప్రీతేమృతేచబలిభిర్దైత్యైశ్చాపి తదా। వక్ష్యమాణాతతో దేవా హరివక్షస్థలస్థయా। లక్ష్మ్యా మైత్రేయసహసా పరాం నిర్వృతిమాగతాః" "பீதேம்ர்தேசபலிபிர்த்தைத்ய ஸமூஸ்ததா। வத்யமாநாததோதேவா ஹரிவக்ஷஸ்தலஸ்தயா। லக்ஷ்ம்யாமைத்ரேயஸஹஸா பராந்நிர்வ்ருதிமாகதாः" என்னக்கடவதிறே.(எம்வள்ளலாரையன்றி மற்றோர்தெய்வம்நான்மதிப்பனே) "ఉదారాస్సర్వ ఏవైతే"

"உதாராஸ்ஸர்வஏவைதே" என்கிற ஔதார்யத்தை எனக்கு ப்ரகாசிப்பித்தவனையொழிய அநந்யப்ரயோஜநனாய் அநந்யசரணனாயிருந்துள்ள நான் வேறொருதைவத்தை ஆச்ரயணீயமாகநினைப்பனோ.

அ.—எண்பத்தொன்பதாம்பாட்டு. ப்ரஹ்மாதிகளையும் மேன்மைகுலையாதபடி நின்று ரக்ஷித்தவளவன்றிக்கே, "కృష్ణాశ్రయాః కృష్ణబలాః కృష్ణనాథాశ్చ పాణ్డవాః" "க்ர்ஷ்ணாச்ரயாꣳக்ர்ஷ்ணபலாঃ க்ர்ஷ்ணநாதாஶ்சபாண்டவா:" என்கிறபடியே பாண்டவர்களுக்கு தூத்ய ஸாரத்யங்களைப்பண்ணித்தாழநின்று ஸத்யஸங்கல்பனாய்க்கொண்டு அவர்கள் விரோதிவர்க்கத்தை யழியச்செய்து ராஜ்யத்தைக்கொடுத்தவுன்னையொழிய ஒருதைவமுண்டென்றுநான் நினைத்திருப்பனோ வென்கிறார்.

பார்மிகுத்தபாரமுன்னொழிச்சுவானருச்சுநன்
தேர்மிகுத்துமாயமாக்கிநின்றுகொன்றுவென்றிசேர்
மாரதர்க்குவான்கொடுத்துவையமைவர்பாலதாம்
சீர்மிகுத்தநின்னலாலோர்தெய்வநான்மதிப்பனே. (அகூ)

ப-ரை.—பார் - எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளும்பூமி, என்னால் ஸஹிக்கவொண்ணாதென்று சொன்ன, மிகுத்தபாரம் - மிக்கபாரத்தை, முன்-தான் முற்பாடனாய்நின்று, ஒழிச்சுவான் - அத்தைத்தவிர்ப்பிக்கைக்காக, அருச்சுநன்-அர்ஜுநனுடைய, தேர்-தேரை, மிகுத்து - பார்த்தபார்த்த விடமெல்லாம் நடத்தி, மாயமாக்கி - பகலையிரவாக்குவது முதலிய ஆச்சர்யங்களையுண்டாக்கி, நின்று - முகம் தோற்றாமே நின்று, கொன்று - எதிரிகளைக்கொன்று, வென்றிசேர் - தங்களுக்குவெற்றியுண்டாவதாக நினைத்திருந்த, மாரதர்க்கு - மஹாரதரான துர்யோதநாதிகளுக்கு, வான்கொடுத்து - வீடஸ்வர்க்கத்தைக்கொடுத்து, அவர்கள் "ஒருகோல்குத்துநிலமும்கொடோம்" என்றிருந்த, வையம்-பூமியை, ஐவர்பாலதாம் - பாண்டவர்கள் பக்கலிலேயாம்படி, சீர்மிகுத்த-புகழ்மிகுந்த, நின்னலால் - உன்னையொழிய, நான்-நீ ஆச்ரிதபக்ஷபாதியென்றறிந்தநான், ஓர் தெய்வம் - வேறொருதைவத்தை, மதிப்பனே-ஆச்ரயணீயமாக நினைப்பேனோ வென்கிறார். (அகூ)

வ்யா.—(பார்மிகுத்தபாரம்) ஸர்வம்ஸஹையான பூமிதன்னால் பொறுக்கவொண்ணாதென்று சொன்ன மிக்கபாரத்தை. "కాలనేమిహతో యోఽసౌ" "காலநேமிஹதோயோஸௌ" என்று தொடங்கி, "తథాన్యేచ మహావీర్యాః నృపాణాంభవనేషుతే । సముత్పన్నాదురాత్మాన స్తాన్నసంఖ్యాతుముత్సహే" "ததாந்யேஷமஹாவீர்யா ந்ர்பாணாம்பவநேஷுதே । ஸமுத்பந்நாதுராத்மா நஸ்தாந்நஸங்க்யாதுமுத்ஸஹே." (முன்னொழிச்சுவானருச்சுநன்தேர்மிகுத்து) தான்முற்பாடனாய் அத்தைத்தவிர்ப்பிக்கைக்காக அர்ஜுநனுடையதேரைப் பார்த்தபார்த்தவிடமெல்லாம் நடத்தி. அர்ஜுநனுக்குத் தான் முற்பாடனானமையாவது - "విసృజ్య సశరంచాపమ్" "விஸ்ர்ஜ்யஸஶரஞ்சாபம்" என்று இருந்த அர்ஜுநனை, "కరిష్యే వచనంతవ" "கரிஷ்யேவசநந்தவ" என்னப்பண்ணுகையும்,

யுத்தமத்யத்தில் விஜயபரிகரங்களில் உத்க்ர்ஷ்டபரிகரம் தேரொன்று எதிரிகள் மதிக்கும்படி தேரைநடத்துகையும், ஆயுதமெடுக்கக்கடவதன்றாக பதிஜ்ஞைபண்ணுகையாலே ஸாரத்யவேஷத்திலே யதிகரித்துத் தேரைக்கொண்டே விஜயவ்யாபாரங்களடையப் பண்ணிறுைய்த்து. (மாயமாக்கி) ஆச்சர்யங்களை யுண்டாக்கி. அதாவது-பகலை யிரவாக்குகையும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும்; ஆச்ரிதார்த்தமாகக் காலவ்யவஸ்தையையும் தன்ஸ்வபாவ வ்யவஸ்தையையும் அழித்தானென்கை. (நின்றுகொன்று) அர்ஜுநன் செய்தானென்னும்படி முகந்தோற்றாமே நின்று எதிரிகளைக்கொன்று.

(வென்றிசேர் மாரதர்க்கு வான்கொடுத்து) நாம் யுத்தோந்முகரானவன்று விஜயமும் நம்மது, அத்தாலே பூமியும் நம்மதாகக் கடவதென்றிருந்த மஹாரதரான துர்யோதநாதிகளென்ன, அவர்களுக்குத் துணையாய்வந்தத்ரோணாதிகளென்ன, இவர்களுக்கு வீரஸ்வர்க்கத்தைக்கொடுத்து. (வையமைவர்பாலதாஞ் சீர்மிகுத்தநின்னலால்) அவர்களுக்கு "ஒருபதந்யாஸமுங்கொடோம், ஸாகல்யேந எங்களதாக வேணும்" என்றிருந்த பூமியை பாண்டவர்கள் பக்கலிலேயாம்படி புகழைமிகுத்த வுன்னையொழிய. சீர் - புகழ். பாண்டவர்கள் விஜயிகளாய் பூமியை ஸாகல்யேநலபித்தார்களென்னும்படி புகழ்மிகுத்த வென்னுதல்; "ஆச்ரிதபக்ஷபாதி" என்னும்தன்புகழை மிகுத்தானென்னுதல். (ஓர்தெய்வம் நான் மதிப்பனோ) ஆச்ரிதபக்ஷபாதியென்றறிந்த நான் வேறொரு தைவத்தை ஆச்ரயணீயமாக நினைப்பேனோ. ... ... (அ௯)

அ.—தொண்ணூறாம்பாட்டு. உன்னையொழிந்தாரொருவரை ஆச்ரயணீயரென்றிரோ மென்று தம்முடைய அநந்யகதித்வம் சொன்னார் - கீழ்; இப்பாட்டில் - ஆச்ரயணீயர் தேவரீரேயாகிலும் தேவரீரை லபிக்கைக்கு தேவரீர்திருவடிகளையொழிய என்பக்கல் உபாயமென்று சொல்லலாவ தில்லையென்றுதம்முடையஆகிஞ்சந்யத்தை யருளிச்செய்கிறார்.

குலங்களாயவீரிரண்டிலொன்றிலும்பிறந்திலேன்
நலங்களாயநற்கலைகள்நாலிலும்நவின்றிலேன்
புலன்களைந்தும்வென்றிலேன்பொறியிலேன்புனிதநின்
இலங்குபாதமன்றிமற்றோர்பற்றிலேனெம்மீசனே. (௯0)

ப - ரை.—பொறியிலேன் - கண்ட கண்ட விஷயங்களிலே வீழ்த்தும் சப்தாதிவிஷயங்களுக்கு வசப்பட்டு நடக்குமவனாய், புலன்களைந்தும் வென்றிலேன் - பஞ்சேந்த்ரியங்களையும் நானிட்டவழக்காய் நடத்த சக்தியற்றவனாய், நலங்களாய - சேதநருடைய குணாநுகூலமாக நல்வழி போகைக்குடலாய், நற்கலைகள் நாலிலும்-மோக்ஷஸாதநங்களான நான்குவேதங்களிலும், நவின்றி

லேன் - அப்யஸிக்கப்பெற்றிலேனாய், குலங்களாய வீரிரண்டில்ஒன்றிலும் - நான்குவர்ணங்களில் ஒருவர்ணத்திலும், பிறந்திலேன் - பிறவாதவனுயிரா நின்றேன; புநித - ஸ்வஸ்பர்சத்தாலே யாவரையும் சுத்தராக்கவல்ல சுத்தியோக முடையனாய், எம்மீசனே - அகதிகளான எங்களுக்கு நிர்வாஹகனானவனே, நின் - தேவரீருடைய, இலங்கு - விளங்கா நின்றுள்ள, பாதமன்றி - திருவடிகளையொழிய, மற்றோர்பற்றிலேன் - வேறொரு ஜீவநோபாயத்தை யுடையேனல்லேனென்கிறார். (கூ0)

வ்யா.—(குலங்களாயவித்யாதி) இப்பாட்டு "பொறியிலேன்" என்கிற பதந் தொடங்கிக் கீழ்நோக்கிக் காரணபரம்பரையாலேயும் பாடக்ரமத்தாலே கார்யபரம்பரையாலேயும் இரண்டுமுகமாக நிர்வஹித்துப்போரும். நம்மை லபிக்கைக்கு உம்முடைய பக்கலுள்ளதென்னென்ன; ஸம்ஸாரபீஜமான சப்தாதிவிஷயங்களிலே யகப்பட்டு நின்றேன், இதிறே என்பக்கலுள்ளது. "பொறி" என்று-சப்தாதிவிஷயங்களைச் சொல்லுகிறது, வறல்நாற்றத்தைக் காட்டியகப்படுத்திக்கொள்ளுமதாகையாலும், அகப்பட்டால்பின்பு புறப்படவிரகற்றிருக்கையாலும்,விநாசத்தோடேதலைக்கட்டுகையாலும்.

சப்தாதிவிஷயங்களே புருஷார்த்தமென்று ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிற ஸம்ஸாரத்திலே இது அகப்படத் தகாதென்றறிந்த நீர் அவ்விஷயங்களிலே இந்த்ரியங்கள் போகாமே நோக்க மாட்டிற்றிலீரோவென்ன (புலன்களைந்தும் வென்றிலேன்) இந்த்ரியங்கள் ஸ்வவசத்திலே யென்னைக்கொடுபோக அவையிட்ட வழக்காய்த் திரிந்தேனித்தனைபோக்கி அவற்றிலே யோரிந்த்ரியத்தை நியமிக்க க்ஷமனாய்த்திலேன். "ఇన్ద్రియాణి ప్రమాథీని హరన్తి ప్రసభం మనః" "இந்த்ரியாணிப்ரமாதீநி ஹரந்திப்ரஸபம்மந:" என்னக்கடவதிறே. "ధర్మేణ పాపమపనుదతి" "தர்மேண பாபமபநுததி" என்றும், "శాన్తో దాన్త ఉపరతః" "ஶாந்தோதாந்தஉபரத:" என்றுமித்யாதிகளாலே வேதங்கள் இந்த்ரியஜயத்துக்கு வழிசொல்லாநின்றன, அவ்வேதங்களிலே யிழிய மாட்டிற்றிலீரோ வென்ன (நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன்) நலங்களாயகலைகளாவது - "త్రైగుణ్య విషయా వేదాః" "த்ரைகுண்யவிஷயாவேதா:" என்கிறபடியே சேதநருடைய குணாநுகூலமாக நின்றநின்ற நிலைகளிலே நல்வழிபோக்கும்படி மாதாபித்ருசதங்களிற் காட்டில் வத்ஸலதரங்களாகை. நற்கலைகளாவது-மோக்ஷதத் ஸாதநங்களிலே நோக்கையுடைத்தாகை.

அ.— தொண்ணூறும்பாட்டு. பாடக்ரமம் * பொறியிலேன் தொடங்கி பதம் பேதியாமல் கீழ்நோக்கி அவரோஹணமாகவருகை. கார்யபரம்பரையாவது - ஒன்றினுடையகார்யம் ஒன்றினுக்காகக்கொண்டு அடிதொடங்கி மேல்நோக்கி ஆரோஹணமாகப் போருகை.

இப்படிப்பட்ட நாலுவேதங்களிலும் இகலிக்கப் பெற்றிலே ன். கவிலுதல் - பயிலுதல். கலை - வேதம். ப்ரதமத்திலே அத்யயநம் பண்ணினார்க்கிறே தத்பலமான வநுஷ்டாநம், அதிறே இந்த்ரியஜயத்துக்கு ஸாதநம். ஆக இப்படி இந்த்ரியஜயத்தில் நான் தூரஸ்தனென்கை.

இந்த இந்த்ரியஜயத்துக்கு ப்ரதமஸாதநமான அத்யயநாதிகளில் இழியாதொழிவானென்னென்னில்(குலங்களாயவீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்) உபேக்ஷையாலே இழியாதொழிந்தேனல்லேன், அயோக்யனாகையாலே யிழியப்பெற்றிலேன். அத்யயநம் த்ரைவர்ணிகாதிகாரமிறே. சதுர்த்தவர்ணத்திலே ஜநித்தவனுக்கும் பாகயஜ்ஞாத் யதிகாரமுண்டு, த்ரைவர்ணிக சுச்ரூஷணத்திலே யதிகாரமுண்டு,அத்தாலே விரோதிபாபம்போகையாலே இந்த்ரியஜயத்துக்கு ஸாதநமாகலாம், அந்நாலுவர்ணத்திலும் பிறக்கப்பெற்றிலேன். இவ்வுத்க்ருஷ்ட வர்ணத்திலே ரிஷிபுத்ரராய்த்திருவவதரித்த விவர் நாலுவர்ணத்திலே பிறந்திலே னென்பானென்னென்னில்; யதுகுலத்திலே யவதரித்தக்ருஷ்ணன் வளர்ந்தருளின கோபகுலத்தையே தனக்குக் குலமாக நினைத்திருந்தாப்போலே, இவரும் வளர்ந்தருளினபடியை நினைந்தருளிச் செய்கிறார்."గోపాలయాదవంవంశం మగ్నమభ్యుద్ధరిష్యతి" "கோபாலேயாதவம்வம்ஶம்மக்நமப்யுத்தரிஷ்யதி" என்று அவதரித்த குலம் கோபகுலம், ரக்ஷ்யகுலம் யதுகுலமாகச் சொல்லாநின்றதிறே. "పితాయస్తుపోషకః" "ஸபிதாயஸ்துபோஷகஃ" என்னக்கடவதிறே. அதவா, நாலுவர்ணத்திலும்எனக் கந்வயமில்லாதபடியாலே த்ரைவர்ணிகர்க்கே விஹிதமான அத்யயநத்துக்கு அயோக்யனானேன், அத்யயநம் பண்ணப்பெறுமையாலே வேதார்த்தஜ்ஞாநமில்லையாய்,அதின்பலமான வேதார்த்தாநுஷ்டாந மில்லாமையாலே இந்த்ரியஜயம் பண்ணப்பெற்றிலேன். அஜிதேந்த்ரியனாகையாலே விஷயங்களின்கையிலே யகப்பட்டு நின்றே னென்கிறாரென்னவுமாம். ஸம்ஸாரபீஜமான விஷயாந்தர ப்ராவண்யமொழிய உம்முடைய பக்கலொருமுதலில்லையாகில் உமக்குஉஜ்ஜீவந ஹேதுவாக நீர்நினைத்திருந்த தென்னென்ன (புநித)விஷயாந்தரப்ராவண்யத்தாலே அசுத்தராய்த் தந்தாம் பக்கல்சுத்திஹேதுவின்றிக்கேயிருக்கும் குறைவாளரையும்ஸ்வஸ்பர்சத்தாலே சுத்தராக்கவல்ல சுத்தியையுடையவனல்லையோ.

(அதிகாரமிறே) நாலுவர்ணத்திலு மென்பானென்ன என்று பூரிப்பது. பாகயஜ்ஞம்-யாகத்துக்கு உபசிக்கைக்கு காஷ்டாதி சுச்ரூஷைபண்ணுகை. அநுஷ்டாநகார்யமாக என்றது-அநுஷ்டாநத்தாலே யுண்டான சுத்திக்கு ஹேதுவான கீழ்ச்சொன்னஜந்மாதிகளில்லாத குறைவளரையுமென்றபடி. ... ... (௯0)

அதாவது-உத்க்ர்ஷ்டஜந்மமென்ன, வேதஸ்பர்சமென்ன, வேதார்த்தாநுஷ்டாநமென்ன, இவற்றினுடைய ஸ்தாநத்திலேபகவதநுக்ரஹம்நின்றுவிஷயாந்தரப்ராவண்யத்தைத் தவிர்த்துத்தருகை. (நின்னிலங்கு பாதமன்றி மற்றோர்பற்றிலேன்) இருட்டு மிக்கதனையும் விளக்கொளி வீறுபெறுமாப்போலே, குறைவாளர்க்கு முகங்கொடுக்கையாலே விளங்காநின்றுள்ள திருவடிகளை யொழிய வேறு ஜீவநோபாயத்தை யுடையே னல்லேன். (எம்மீசனே) வேறுமுதலின்றிக்கே அகதிகளான எங்களுக்கு நிர்வாஹகனானவனே. (கூ0)

அ.—தொண்ணூற்றோராம்பாட்டு. "𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌫𑌲𑌂𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑌰𑌿" "ஶாஸ்த்ரபலம்ப்ரயோக்தரி" என்றுபேறு உம்மதானால் உமமுடையவிரோதிநிவ்ர்த்திக்கு நீரேகடவீராகவேண்டாவோ, "நின்னிலங்குபாதமன்றிமற்றோர்பற்றிலேன்" என்கிறதெத்தாலேயென்ன ; ப்ராங்ந்யாயத்தாலே. அதென்னென்னில்; அசோகவநிகையிலேயிருந்தபிராட்டிதேவரீரைலபிசைகுராக்ஷஸவதத்திலே அவள்யத்நம் பண்ணுமன்றன்றோநாம என்னுடையவிரோதியைப்போக்குகைக்குயத்நம்பண்ணுவது, ஆனபின்பு அநந்யகதியாய் அகிஞ்சநனான என்னை ஸ்வரக்ஷணத்திலேமூட்டி அகற்றுதொழியவேணுமென்கிறார்.

பண்ணுலாவுமென்மொழிப்படைத்தடங்கணாள்பொருட்டு
எண்ணிலாவரக்கரைநெருப்பினால்நெருக்கினாய்
கண்ணலாலோர்கண்ணிலேன்கலந்தசுற்றம்மற்றிலேன்
எண்ணிலாதமாயநின்னையென்னுள்நீக்கலென்றுமே. (கூக)

ப-ரை.—பண்ணுலாவு - பண்ணோடே சேர்ந்த, மெல் - ம்ருதுவான, மொழி - பேச்சையுடையளாய், படை - வாள்போலே ஒளியையும், தடம்-வைசால்யத்தையுமுடைத்தான, கண்ணாள் பொருட்டு - திருக்கண்களை யுடையளான ஸ்ரீஜநகராஜன்திருமகள்நிமித்தமாக, எண்ணிலா - அஸங்க்யாதரான, அரக்கரை - ராக்ஷஸர்களை, நெருப்பினால் - சராக்நியாலே, நெருக்கினாய் - அழியச்செய்தநீயே, கண் அலால் - எனக்கு நிர்வாஹகனல்லாமல், ஓர்கண்ணிலேன் - வேறொரு நிர்வாஹகனையுடைத்தாகாதவனாய், கலந்த - நெஞ்சுக்குப் பொருந்தின, சுற்றம் - பந்துவர்க்கத்தை, மற்றிலேன் - வேறேயுடைத்தாகாதவனுமாயிராநின்றேன்; எண்ணிலாதமாய - அஸங்க்யேயமான ஆச்சர்யசக்தியையுடையவனே, நின்னை - ஸர்வசக்தியா யிருந்துள்ளவுன்னை, என்னுள் - அகிஞ்சநனானவென்பக்கல் நின்றும், என்றும் - நான் கலங்கினவன்றும்; நீக்கல் - அகற்றுதொழியவேணும். (கூக)

வ்யா.—(பண்ணுலாவுமென்மொழி) பண்ணோடேசேர்ந்த ம்ருதுவான பேச்சையுடையவள். "𑌮𑌧𑍁𑌰𑌾𑌮𑌧𑍁𑌰𑌾𑌲𑌾𑌪𑌾 𑌕𑌿𑌮𑌾𑌹𑌮𑌮𑌭𑌾𑌮𑌿𑌨𑍀" "மதுராமதுராலாபாகிமாஹமமபாமிநீ" என்றுசக்ரவர்த்தித்திருமகன் வாய்ப்புலத்தும்படி வார்த்தைப்பாடுடையவளிறே. "பண்ணைவென்றவின்சொல்மங்கை" என்றவளிறே. (படைத்தடங்கணாள் பொருட்டு) வாள்போலேயொளியையும்' இடமுடைமையையு முடைத்தான திருக்கண்களையுடைய ஸ்ரீஜநகராஜன் திருமகள் பொருட்டு.

“𑌨 𑌜𑍀𑌵𑍇𑌯𑌂 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌵𑌿𑌨𑌾 𑌤𑌾𑌮𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍” “நஜீவேயம் க்ஷணமபிவிநாதாம ஸிதேக்ஷணாம்” என்று அவர் வ்யதிரேகத்தில் தரிக்கமாட்டாதகண்களிறே. ஆகஎதிர்த்தலையை “அகலகில்லேன்” என்னப்பண்ணும்பேச்சழகையும் கண்ணழகையு முடையவளென்கை. தம்முடைய வெறுமைசொல்ல விழிந்தவர் பிராட்டியுடைய வேற்றங்களைச்சொல்லுகிறது, நிக்ர்ஷ்ச்ர்ஷ்டமான விவ்வாத்மஸ்வரூபம்பிராட்டியோபாதியும் ஸ்ரீகௌஸ்துபத்தோபாதியும் விலக்ஷணமென்கைக்காக. ஜ்ஞாநம் பிறந்தபின்பு பிராட்டி அசோகவநிகையிலே யிருந்தாப்போலே, அஸஹ்யமிறே சேதநனுக்கு சரீரவாஸமும். (எண்ணிலாவரக்கரை) அவளைப்போலே விரோதிகள் அஸங்க்யாதராகவேணுமோ, அஞ்சாவலாகாதோ. (நெருப்பினால்நெருக்கினாய்கண்) சராக்நியாலே யழியச்செய்தநீ எனக்கு நிர்வாஹகனென்னுதல். ‘𑌯𑌥𑌾 𑌰𑌾𑌘𑌵𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑌰𑌃” “யதாராகவநிர்முக்தஶ்ஶர:” என்கிறபடியே ஶராஸ்தாநீயனான திருவடியையிட்டு லங்கையைதஹித்து, ராக்ஷஸரைக் கண்கலங்கும்படிபண்ணினநீ எனக்கு நிர்வாஹக னென்னுதல். இத்தால் - என்னுடைய விரோதிவர்க்கத்தையும் பஸ்மமாகப் பண்ணவேணுமென்கை.

(அலாலோர்கண்ணிலேன்) “𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃” “லோகாநாம்த்வம்பரோதர்ம்ம:” என்கிற தேவரீரையொழிய வேறொரு நிர்வாஹகரை யுடையேனல்லேன். “தயரதற்குமகன்றன்னை யன்றி மற்றிலேன்றஞ்சம்” என்கிறார். “𑌨𑌤𑍍𑌵𑌾𑌕𑍁𑌰𑍍𑌮𑌿 𑌸𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌭𑌸𑍍𑌮” “நத்வாகுர்ம்மி தஸுக்ரீவபஸ்ம” என்று - பிராட்டிக்கு சக்தியுண்டாயிருக்க ப்ராப்தியில்லாதே தவிர்ந்தாள், எனக்கு ஶக்தியுமில்லை யென்கிறார். (கலந்தசுற்றமமற்றிலேன்) நெஞ்சுக்குப்பொருந்தின பந்துவர்க்கத்தை வேறுடையேனல்லேன். உத்பாதகரான மாதா பிதாக்கள் தைவம் ரக்ஷிக்கிறதென்று காட்டிலேவிட்டுப் போனார்கள், வளர்த்தவர்களை “𑌪𑌿𑌤𑌰𑌂 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌦𑌾𑌰𑌾𑌨𑍍” “பிதரம்மாதரம்தாராந்” என்கிறபடியே நான்விட்டேன். ‘𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌚 𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍍𑌚 𑌪𑌿𑌤𑌾 𑌚 𑌮𑌮 𑌰𑌾𑌘𑌵𑌃” “ப்ராதாபர்த்தாச பந்துஶ்ச பிதாச மமராகவ:” என்கிறபடியே ஸர்வவிதபந்துவும் தேவரீரேயென்கிறார். பிராட்டிக்குத் தனியிருப்பிலே திருவடி வந்து முகங்காட்டினார், அப்படியேயிருப்பதொரு குளிர்ந்தவிழியும் தேவரீரை யொழிய எனக்கில்லை யென்கிறார். ஜநககுலத்தில் பிறந்தவாபிஜாத்யமுண்டு அவளுக்கு. “குலங்களாயவீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்” என்றிரோ நீரொன்ன

தொண்ணூற்றோராம்பாட்டு. பிராட்டியோட்டை ஸாம்யமுண்டானால் அசோகவநிகைஸ்தாநம் இவனுக்கேதென்ன; அருளிச்செய்கிறார் (ஜ்ஞாநம்பிறந்தபின் இத்யாதி.) ... ... (கூக)

(எண்ணிலாதமாய) அஸங்க்யேயமானவாஶ்சர்ய சக்தியையுடைய வனல்லேயோ. இத்தால் - திர்யக்ஜந்மாவாய் சாஸ்த்ராதிகாரியுமன்றிக்கே யிருந்துள்ள பக்ஷிக்கு மோக்ஷங்கொடுத்த சக்தியன்றோ தேவரீருடைய ஶக்தியென்கை. ராவணன்குடியழியாமே யிருக்க இக்கரையிலே அவன்தம்பியை லங்காராஜ்யத்துக்கு அபிஷேகம் பண்ணிற்று அவன் ஜந்மம்பார்த்தோ. "[illegible]" "அபிஜ்ஞோராஜதர்மாணாம்" என்கிறபடியே அவன் ஜ்ஞாநாதிகயென்ன; * அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றிற்று ஜ்ஞாநாஜ்ஞாநங்களில் உள்மானம் புறமானம் பார்த்தோ. (நின்னையென்னுள் நீக்கல்) ஸர்வசக்தியாயிருந்துள்ள வுன்னை, அகிஞ்சநனாயிருந்துள்ள வென்பக்கல்நின்றும், க்ஷுத்ரமான வுபாயாந்தரங்களைக்காட்டியகற்றுதொழியவேணும். (என்றுமே) நான்கலங்கினவன்றும் என்னை விடாதொழியவேணும். ... ... (கூக)

அ.—தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. "நின்னையென்னுள் நீக்கல்" என்றீர், நாம் உம்மையகலாதொழிகைக்கு நம்மளவிலே நீர் செய்ததென், நாம் உமக்குச்செய்யவேண்டுவதென்னென்ன; நிருபாதிகசரண்யரான தேவரீர்திருவடிகளிலே ப்ரவணனான என்னை "உன்னுடையகார்யம் எனக்குபாரம், நீ பயப்படவேண்டா" என்று என் பயந்தீர "[illegible]" "மாஶுச:" என்னவேணுமென்கிறார்.

விடைக்குலங்களேழடர்த்துவென்றிவேற்கண்மாதரார்
கடிக்கலந்ததோள்புணர்ந்துகாலியாய! வேலைநீர்
படைத்தடைத்ததிற்கிடந்துமுன்கடைந்தநின்றனக்கு
அடைக்கலம்புகுந்தவென்னையஞ்சலென்னவேண்டுமே. (கூஉ)

ப - ரை.—முன் - முதல் முதலில், வேலைநீர்படைத்து - ஏகார்ணவத்தை ஸ்ருஷ்டித்து, அதில் கிடந்து - க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளி, அடைக்கலம் புகுந்த இந்த்ராதி தேவர்களுக்காக, கடைந்து - அத்தைக்கடைந்து அம்ருதத்தைக் கொடுத்து, ராவணாதிகளால் குடியிருப்பிழந்த தேவர்கள் நிலைநிற்கைக்காக, அடைத்து - ஸேதுபந்தம்பண்ணி, குலம் - நாநாவர்ணமான, விடையேழடர்த்து - ரிஷபங்களேழையும் ஊட்டியாக நெரித்து, ஸர்வரையும் கண்களாலே தோற்பிக்கும் தேவரீரையும், வென்றி - வென்றிகொள்ளத்தக்கதாய், வேல் - வேல்போன்ற, கண் - நோக்கையுடையளான, மாதரார்- நப்பின்னைப்பிராட்டியுடைய, கடிக்கலந்த - பரிமளிதமான, தோள்புணர்ந்து - தோளையநுபவித்து, அவளுக்குப்ப்ரியமாக, காலி - பசுக்களை மேய்க்கும், ஆய - இடையனே, நின்றனக்கு - தேவரீர் திருவடிகளை, அடைக்கலம் புகுந்த வென்னை - சரணமாகப்பற்றினவென்னை, அஞ்சலென்னவேண்டும் - பயப்படாதேயென்று ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும். (கூஉ)

வ்யா.—(விடைக்குலமித்யாதி) "முன் - வேலைநீர்படைத்து அதிற்கிடந்து-கடைந்து-அடைத்து - விடைக்குலங்களேழடர்த்து வென்றிவேல்கண் மாதரார் கடிக்கலந்ததோள்புணர்ந்த காலியாய - நின்மனக்கடைக்கலம் புகுந்தவென்னை யஞ்சலென்னவேண்டும்" என்றந்வயம். (முன்வேலைநீர்படைத்து)"అప ఏవ ససర్జాదౌ""அபஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே ஏகார்ணவ ஸ்ருஷ்டியைப்பண்ணி. "வேலைநீர்" என்று - எல்லையான கடலென்னுதல்; திரைக்கிளர்த்தியை யுடைத்தான கடலென்னுதல். "வேலை" என்று - எல்லையும், திரையும். "நீர்" என்று - கடல். (அதில்கிடந்து) - அதிலே கிடந்து. ஸ்ருஷ்டமான ஜகத்திலே சேதநர்க்கு ஆச்ரயண ருசிபிறந்தவன்று சரண்யரானநாம் தூரஸ்தராகவொண்ணாதென்று க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளி. (கடைந்து) அக்கிடைபலித்து தேவதைகள் ஐச்வர்யத்தை யிழந்து, "శరణం త్వామనుప్రాప్తాః సమస్తా దేవతాగణాః" "ஶரணம்த்வாமநுப்ராப்தாஸ் ஸமஸ்தாதேவதா கணா:" என்கிறபடியே சரணம்புகுர; அவர்கள்இழந்தவற்றை, கடலைக்கடைந்து அக்கடலிலே யுண்டாக்கிக்கொடுத்தவனென்கை. (அடைத்து) அந்ததேவதைகளைக் குடியிருப்பழியும்படி அதிக்ரமத்திலே நடந்த ராவணாதிகண்டக நிரஸநார்த்தமாக, தசரதாத்மஜனாய் வந்தவதரித்து லவணார்ணவத்தை யடைத்து. (விடைக்குலமித்யாதி) ப்ரஹ்மாதிகளுக்கு சரண்யனாய் அவர்களாபத்திலே யுதவினவளவன்றிக்கே, தாழ்ந்தார்க்கு முகம்கொடுக்கைக்காக கோபஸஜாதீயனாய்வந்தவதரித்து ரக்ஷித்தபடி சொல்லுகிறது மேல் (விடைக்குலங்களேழடர்த்து) விடையேழடர்த்தென்னுதல், விடைக்குலமடர்த்தென்னுதல் செய்யாதே இப்படி சொல்லுகிறது, "చాతుర్వర్ణ్యం మయా సృష్టం" "சாதுர்வர்ண்யம்மயாஸ்ருஷ்டம்" என்கிறபடியே கோஜாதியிலும் வர்ணபேதமுண்டாகையாலே, நாநாவர்ணமான ரிஷபங்களேழையுமடர்த்து. நப்பின்னைப்பிராட்டியோட்டை போகத்துக்கு இடைச்சுவராகையாலே நாநாஸ்வபாவங்களானவிடையேழையு மூட்டியாகநெரித்து. குலம்-வர்ணம். "குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்" என்றாரிறே. (வென்றிவேல்கண் மாதரார் கடிக்கலந்ததோள்புணர்ந்த காலியாய) "జితంతే పుండరీకాక్ష" "ஜிதந்தேபுண்டரீகாக்ஷ" என்றும், "தூதுசெய்கண்கள்" என்றும் சொல்லுகிறபடியேஸர்வரையும்கண்களாலேதோற்பிக்கும்தேவரீரையும் தோற்பிக்கவல்லநோக்கையுடைய நப்பின்னைப்பிராட்டி

தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. இழந்தவற்றை-இழந்தபதார்த்தத்தை. (கடிக்கலந்த) கலக்கை—எங்கும் வ்யாபிக்கையாய், அத்தால் - மிகுதிசொல்லுகிறது.

யுடைய பரிமளிதமான தோளையநுபவித்து, அவளுக்குப்ப்ரியமாக ரக்ஷகாபேக்ஷையுடைய பசுக்களுடைய ரக்ஷணமே ப்ரயோஜந மாயிருக்குமவனை. "సర్వగన్ధః" "ஸர்வகந்தஃ" என்கிற அவன் திருமேனியையும் பரிமளிதமாக்கும் தோளென்கை. "యువతిశ్చ కుమారిణీ" "யுவதிஶ்சகுமாரிணீ" என்கிறபடியே ஸ்வஸத்ர்ஶமான பருவத்தை யுடையவளாகையாலே செவ்வியையுடைய தோளென்னவுமாம். (வென்றிவேல்கண்) வென்றியை விளைக்கும் வேல்போலே நோக்கையுடைய கண். "கடி" என்று - செவ்வியும், நாற்றமும். (நின்றனக்கடைக்கலம் புகுந்தவென்னை) "యో బ్రహ్మాణం విదధాతి పూర్వమ్" "ముముక్షుర్వై శరణమహం ప్రపద్యే" "யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்" "முமுக்ஷுர்வை சரணமஹம்ப்ரபத்யே" என்று-ஜகத்காரண வஸ்து சரண்யமென்னுமிடம் ச்ருதிஸித்தம். "శరణం త్వామనుప్రాప్తాః" "ஶரணம்த்வாமநுப்ராப்தாஃ" என்றும், "లోకానాం త్వం పరో ధర్మః" "லோகாநாந்த்வம்பரோதர்ம:" என்றும்-வ்யூஹவிபவங்களில் ஶரண்யதை ஆப்தவாக்யஸித்தம். அங்ஙனன்றிக்கே, "మామేకం శరణం వ్రజ" "மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்று, தேவரீர்திருவடிகளிலே ப்ரவணனான வென்னை. (என்னை) அநந்யஶரணனான வென்னை. அடைக்கலம்புகுருகையாவது - என்கார்யம் தேவரீர்க்கே பரமென்று பற்றுகை. "తవైవాస్మి హి భరః" "தவைவாஸ்மிஹிபர:" என்னக்கடவதிறே. (அஞ்சலென்னவேண்டுமே) தேவரீர்பூர்த்தியையும் என் சிறுமையையும் இடைச்சுவரான விரோதியின்கநத்தையும்பார்த்து நானஞ்சாதபடி "మా శుచః" "மாஶுச:" என்று ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும். "మామేకం శరణం వ్రజ" "மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்றதேவரீர்க்கு, "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கைஅரிதோ. ... ... (கூ௨)

அ.—தொண்ணூற்றுமூன்றாம்பாட்டு. "அடைக்கலம் புகுந்தவென்னை யஞ்சலென்னவேண்டும்" என்று-என்பயங்கெட "మా శుచః" "மாஶுச:" என்னவேணுமென்றார் - கீழ், இவ்வளவமையுமேயென்ன; உபாயாந்தரங்களைக் காட்டி என்னை யகற்றுதொழிகைக்காகச் சொன்ன வார்த்தையன்றோவது, தேவரீருடைய நிரதிஶய போக்யதையைக்கண்டு அநுபவிக்க ஆசைப்படுகிறவெனக்கு விஷயாந்தர நிவ்ர்த்திபூர்வகமாக தேவரீரையே நான் அநுபவிக்கும்படி என்பக்கலிலே யிரங்கியருளவேணுமென்று பெரியபெருமாள் திருவடிகளி லநுபவத்தை யபேக்ஷிக்கிறார்.

"நின்றனக்கு" என்கையாலே – வ்யூஹவிபவாந்தரங்களை வ்யாவர்த்திக்கிறது. ... ... (கூ௨)

சுரும்பரங்குதண்டுழாய்துதைந்தலர்ந்தபாதமே
விரும்பிநின்றிறைஞ்சுவேற்கிரங்கரங்கவாணனே
கரும்பிருந்தகட்டியேகடற்கிடந்தகண்ணனே
இரும்பரங்கவெஞ்சரந்துரந்தவில்லிராமனே. (௯௩)

ப - ரை.—கரும்பிருந்தகட்டியே - ஸ்வாபாவிகமான ரஸத்தையுடையகன்னல்போலே நிரதிசயபோக்யனானவனாய், கடல்கிடந்த கண்ணனே - திருப்பாற்கடலிலே அபேக்ஷாநிரபேக்ஷமாகக்கணவளர்ந்தருளுமவனாய், இரும்பு அரங்க - இரும்புபோன்ற எதிரிகள் சரீரத்திலே யழுந்தும்படி, வெஞ்சரம் - க்ரூரமான அம்புகளை, துரந்த - விட்ட, வில் இராமனே - வில்லையுடைய தசரதாத்மஜனாய், அரங்கவாணனே - கோயிலுக்கு நிர்வாஹகனாய்க்கொண்டுகண்வளர்ந்தருளுமவனாய், சுரும்பு - வண்டுகளானவை, அரங்கு - படிந்த, தண் - குளிர்ந்த, துழாய் - திருத்துழாய்த்தாரானது, துதைந்து - நெருங்கி, அலர்ந்த - விகஸியாநின்றுள்ள, பாதமே - திருவடிகளிலே, விரும்பி நின்று - அநுபவருசிபிறந்து, இறைஞ்சுவேற்கு - அநுபவிக்கையிலே யிழிந்தவென் விஷயத்திலே, இரங்கு - க்ருபை பண்ணியருளவேணுமென்கிறார். (௯௩)

வ்யா.—(சுரும்பரங்குதண்டுழாய்த்துதைந்தலர்ந்தபாதமே) வண்டுபடிந்து ச்ரமஹரமான திருத்துழாய்த் தாரானது அலர்ந்து வருகிற திருவடிகளையே. இத்தால் - திருத்துழாயோட்டை ஸம்பந்தத்தாலே ஸர்வாதிக வஸ்துவென்னு மிடத்தையும், திருவடிகளோட்டைச் சேர்த்தியாலே திருத்துழாய்க்குச் செவ்வியும் விகாஸமு முண்டாகையாலே, திருவடிகளோடே சேர்ந்ததற்கு செவ்வியும் விகாஸமுமுண்டாமென்னு மிடத்தையும், திருத்துழாயாலே அலங்க்ருதமா யிருக்கையாலே நிரதிசயபோக்யமென்னு மிடத்தையும் சொல்லிற்று.(விரும்பிநின்றிறைஞ்சுவேற்கிரங்கு) அநுபவருசி பிறந்து அநுபவிக்கையிலே யிழிந்த வெனக்கு இரங்கு. இவன் நாசகரமான விஷயாந்தரத்தில்நின்றும் மீளுவான், நிரதிசயபோக்யமானநம்மை யநுபவிப்பானென்று க்ருபைபண்ணி யருளவேணும். தேவரீர்க்கு ஒருஇரக்கமாத்ரம், அது இவ்வாத்மாவுக்கு உஜ்ஜீவநம்; ஆனபின்பு இத்தனையும்செய்தருளவேணும்.(அரங்கவாணனே) கோயிலுக்கு நிர்வாஹகனாய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனே. தந்தாம்பக்கல் முதலின்றிக்கே யிருக்க வநுபவத்திலே யிழிந்தவர்களுக்கும் தேவரீரழகாலே விஷயாந்தரப்ராவண்யத்தைத் தவிர்த்து, தேவரீர்பக்கல் ஆதரத்தைப்பிறப்பித்து அநுபவிப்பிக்கைக்காகவன்றோ கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. "போதரேயென்று சொல்லிப்புந்தியில்புகுந்து தன்பாலாதரம்பெருகவைத்த வழகன்" என்னக்கடவதிறே.

தொண்ணூற்றுமூன்றும்பாட்டு. (துதைந்து) செவ்வியாய், இரக்குமெனக்கு ஜீவநமென்று பூரிப்பது.

(கரும்பிருந்தகட்டியே) இவர்க்கு ருசிபிறப்பித்த வுபாத்யாயனைச் சொல்லுகிறது. கோதுண்டாதல் கழிக்குமம்சமுண்டாதலின்றிக்கே ஸர்வதோமுகமாய் ஸாரஸ்யத்தையுடைத்தாய், பாகவிசேஷத்தால் வந்த ஸாரஸ்யமின்றிக்கே ஸ்வாபாவிகமான ஸாரஸ்யத்தை யுடைத்தாயிருப்பதொரு கன்னல்போலே நிரதிசயபோக்யனானவனே. (கடல்கிடந்த கண்ணனே) பெரியபெருமாளுடைய அகந்தத்தைச் சொல்லுகிறது. திருப்பாற்கடலிலே அபேக்ஷாநிரபேக்ஷமாகக் கண்வளர்ந்தருளுகிற ஸௌலப்யத்தையுடையவனே. ப்ராஹ்மாவுக்கு க்ஷீராப்திநாதன் உகந்தருளினபடியாலே அங்குத்தை ஸௌலப்யமும் வடிவழகும் பெரியபெருமாள்பக்கலிலே ப்ரத்யபிஜ்ஞை பண்ணலாம்படியிறே யிருப்பது. (இரும்பரங்க வெஞ்சரந்துரந்த வில்விராமனே) எதிரிகள்சரீரத்திலே யழுந்தும்படி *தீப்தபாவக ஸங்காசமான அம்புகளைவிட்ட வில்லையுடைய தசரதாத்மஜனே. இத்தால் - "நஞ்சேவகனார் மருவிய பெரியகோயில்" என்கிறபடியே சக்ரவர்த்தித்திருமகனுடைய வீரமும்அபிராமதையும் பெரியபெருமாள்பக்கலிலே அநுபவிக்கலாயிருக்கை. "మేఘశ్యామం మహాబాహుం సర్వసత్త్వమనోహరమ్" "மேகஶ்யாமம் மஹாபாஹும் ஸர்வஸத்வமநோஹரம்" என்னக்கடவதிறே, ப்ராப்தராய் ஸந்நிஹிதராய் நிரதிஶய போக்யபூதராய் விரோதிநிரஸந ஶீலராய் தேவரீரிருக்க இத்தலையில் ருசியுண்டாயிருக்க நான் இழக்கவேண்டுகிறதென்? இரங்கி யருளவேணுமென்கை. "கரும்பிருந்தகட்டியே - கடல்கிடந்தகண்ணனே - இரும்பரங்கவெஞ்சரந்துரந்தவில்விராமனே - அரங்கவாணனே-சுரும்பரங்குதண்டுழாய் துதைந்தலர்ந்தபாதமேவிரும்பிநின்று இறைஞ்சுவேற்கிரங்கு" என்றந்வயம்(௩௩)

அ.— தொண்ணூற்றுநாலாம்பாட்டு. த்வதநுபவ விரோதிகளைப் போக்கவும், அதுக்கநுகூலங்களானவற்றை யுண்டாக்கவும், அநுபவந்தன்னை அவிச்சிந்நமாக்கவும் வேணுமென்றபேக்ஷிக்க ப்ராப்தமாயிருக்க, "இரங்கு" என்று - இவ்வளவபேக்ஷிக்கவமையுமோ வென்ன; உனக்கு ப்ரகாரமாயிருக்குமதொழிய ஸ்வதந்த்ரமாயிருப்பதொருபதார்த்தமில்லாமையாலே என்னபிமதஸித்திக்கு உன்னிரக்கமே யமையுமென்கிறார்.

ஊனின்மேயவாவிநீயுறக்கமோடுணர்ச்சிநீ
ஆனின்மேயவைந்துநீயவற்றுள்நின்றதூய்மைநீ
வானினோடுமண்ணுநீவளங்கடற்பயனுநீ
யானுநீயதன்றியெம்பிரானுநீயிராமனே. (௩௪)

ஆடிக் கட்டியாகையன்றிக்கே, "இருந்தகட்டி" என்று-இருந்தபடியே கட்டியென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (கோதுண்டாதலித்யாதி.) கந்தம்—அவதாரமூலம். ... (௩௩)

ப - ரை.—உறக்கமோடு - தமோகுணப்ரபவத்தால்வந்த நித்ரையும், உணர்ச்சியோடு - ஸத்வகுணகார்யமான வுணர்த்தியும், நீ - உன்னதீநமாயிராநின்றது; வளம் - கண்டார்க்கு ஆகர்ஷகமான, கடல் பயனும் - கடலிலுண்டாகும் அம்ர்தமும் ரத்நாதிகளும், நீ - உன்னதீநமாயிராநின்றது; ஆனில்மேயவைந்தும்-பசுக்களிடத்திலுண்டாகும் சுத்திகரமான பஞ்சகவ்யமும், நீ-நீயிட்டவழக்காயிராநின்றது; அவற்றுள் நின்றதூய்மை-அந்தபஞ்சகவ்யங்களுக்குண்டானசுத்தியும், நீ - உன்னதீநம்; வானினோடு - நிராலம்பமான ஆகாசத்திலே வாய்வாதிகள் ஸஞ்சரிக்கிறதும், மண்ணும் - நீரிலேகிடக்கிற பூமிகளை யாதே ஸகலாதார பூதையாகிறதும், நீ - உன்னாலே; யானும் - பக்தனானானும், நீ-உனக்குப்ரகாரபூதன்; அதன்றி - அதுவொழிய, இராமன் - சக்ரவர்த்தித் திருமகனான நீயே, எம்பிரான் - அஞ்ஜநநான வெங்களுக்குஸ்வாமி. (௧௪)

வ்யா.—(உறக்கமோடுணர்ச்சி நீ - வளங்கடல் பயனும் நீ - ஆனில்மேயவைந்தும் நீ, அவற்றுள் நின்ற தூய்மைநீ - வானில் மேயவாவிநீ - வானினோடு மண்ணும்நீ-யானும் நீ, அதன்றியெம்பிரானும்நீ இராமனே" என்றந்வயம். (உறக்கமோடுணர்ச்சிநீ) தமோகுணப்ரபவத்தால் வந்த நித்ரையும், ஸத்வகுணகார்யமான வுணர்த்தியுமுன்னதீநம். இத்தால் - சேதநர்க்கு விஷயப்ராவண்ய ஹேதுவான அஜ்ஞாநமும், பகவத்ப்ராவண்ய ஹேதுவான ஜ்ஞாநமும் நீயிட்டவழக்கென்கை. "అనాదిమాయయాసుప్తః" "அநாதிமாயயாஸுப்த:" என்று அஜ்ஞாநத்தை நித்ரையாகச் சொல்லக்கடவதிறே. (வளங்கடல்பயனும்நீ) கண்டார்க்கு ஆகர்ஷகமான கடலில் அம்ர்தமும் ரத்நாதிகளும் உன்ஸங்கல்பாதீநம். இது-ப்ரயோஜநாந்தரங்களுக்கும் உபலக்ஷணம். இத்தால் - உன்பக்கல் ப்ராவண்யத்துக்கு விரோதியாய் அஜ்ஞாநகார்யமான பந்தகபதார்த்தங்களெல்லாம் நீயிட்டவழக்கென்கை. (ஆனில்மேயவைந்தும்நீ) பசுக்களில் சுத்திகரமாகச்சொல்லுகிறபஞ்சகவ்யமும் உன்னதீநம். (அவற்றுள் நின்றதூய்மைநீ) அந்த பஞ்சகவ்யங்களுக்குண்டான சுத்தியும் உன்ஸங்கல்பாதீநம். பரமபாவநரான தேவரீரோட்டை ப்ரத்யாஸத்தியிறே பதார்த்தங்களுக்கு சுத்திஹேது. கோப்ராஹ்மணர்க்கு பகவத்ஸமாராதநோப கரணங்களாகையாலேயிறே சுத்திஹேதுத்வம். "బ్రాహ్మణానాంగవాశ్చైవ కులమేకంద్విధాకృతం। అన్యత్రమన్త్రాస్తిష్ఠన్తి హవిరన్యత్రతిష్ఠతి" "ப்ராஹ்மணாநாம்கவாஞ்சைவ குலமேகந்த்விதாக்ர்தம்। அந்யத்ரமந்த்ராந்திஷ்டந்தி ஹவிரந்யத்ரதிஷ்டதி" என்னக்கடவதிறே. கர்மத்துக்கு சுத்திஹேதுத்வம் பகவத்ஸமாராதநமாகையாலே ஜ்ஞாநத்துக்கு சுத்திஹேதுத்வம் பகவத்விஷயமாகையாலே, "క్షేత్రజ్ఞస్యేశ్వరజ్ఞానాద్విశుద్ధిఃపరమామతా" "க்ஷேத்ரஜ்ஞஸ்யேஶ்வரஜ்ஞாநாத் விஶுத்தி: பரமாமதா" என்னக்கடவதிறே. "పావనస్సర్వలోకానాంత్వమేవ" "పవిత్రాణాంహిగోవిన్దః పవిత్రంపరముచ్యతే" "பாவநஸ்ஸர்வலோகாநாம் த்வமேவ" "பவித்ராணாம்ஹிகோவிந்த: பவித்ரம் பரமுச்யதே."

இத்தால் - அநாதிகாலம் விஷயாந்தரப்ராவண்யத்தால் வந்த அசுத்திபரிஹாரமான பாவநபதார்த்தங்களும் நீயிட்டவழக்கென்கை. (ஊனில்மேயஆவிநீ) சரீரத்திலே தாரகமாக வர்த்திக்கிற பஞ்சவ்ர்த்திப்ராணனும் நீயிட்டவழக்கு. இத்தால்-சரீரஸ்திதியும் ஶரீரவியோகமும் நீயிட்டவழக்கென்கை. (வானிளோடு மண்ணும்நீ) நிராலம்பநமான ஆகாசத்திலே வாய்வாதிகள் ஸஞ்சரிக்கிறதும், நீரிலே கிடக்கிற பூமிகளையாதே ஸகலாதாரபூதையாகிறதும் உன்னாலே. அதவா, பந்தகமான ஸம்ஸாரமும் முக்தப்ராப்யமான நித்யவிபூதியும் நீயிட்டவழக்கென்றுமாம். (யானும்நீ) பத்தனான நானும் உனக்குப்ரகாரபூதன். இத்தால் - எனக்குருசியில்லாதவன்றும், “దదామి బుద్ధియోగం తమ్” “ததாமிபுத்தியோகந்தம்” என்கிறபடியே என்னுடைய ருசி நீயிட்டவழக்கு. (அதன்றி) அதொழிய. (எம்பிரானும் நீயிராமனே) நினைத்தார்க்கு நினைத்ததைக் கொடுக்கவல்லவனென்கைக்கு உதாஹரணம் சொல்லுகிறது. சக்ரவர்த்தித் திருமகனான நீயே அகிஞ்சநரான வெங்களுக்குஸ்வாமி. “అపివృక్షాః పరిమ్లానాః” “அபிவ்ர்க்ஷா:பரிம்லாநா:” என்கிறபடியே-ஸ்தாவரபர்யந்தமாக அழகாலும் சீலத்தாலும் பிரிந்து தரிக்கமாட்டாதபடி பண்ணின நீயே எங்களுக்கு நிர்வாஹகன். “అలమద్యప్రహుక్తేన పరమార్థైరలఞ్చనః। యథాపశ్యామినిర్యాన్తం రామం రాజ్యే ప్రతిష్ఠితమ్” “அலமத்யஹிபுக்தேந பரமார்த்தை ரலஞ்சந:| யதாபஶ்யாமிநிர்யாந்தம் ராமம்ராஜ்யேப்ரதிஷ்டிதம்.” [புற்பாமுதலாவித்யாதி] “యా గతిర్యజ్ఞశీలానామ్” “யாகதிர்யஜ்ஞஶீலாநாம்” என்று ஒருபக்ஷிக்கு மோக்ஷங்கொடுத்தவனே எங்களுக்கு நிர்வாஹகன்; * அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றினவனே எங்களுக்கு நிர்வாஹகன். (கூசு)

அ.—தொண்ணூற்றஞ்சாம்பாட்டு. “எம்பிரானும் நீயிராமனே” என்று நினைத்தார்க்கு நினைத்தத்தைக்கொடுக்கவல்ல சக்தனுமாய் ஸ்வதந்த்ரனுமான சக்ரவர்த்தித்திருமகனே யுபாயமென்றார் - கீழ்; இதில் - உபாயத்தில் தமக்குண்டான அத்யவஸாயத்தை யருளிச்செய்கிறார். பாஹ்யவிஷயருசியைத் தவிர்த்து, உன்பக்கலிலே ருசியைப்பிறப்பித்து, கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கும்படி புகுர நிறுத்தினநீ, என்னை யுபேக்ஷித்து விஷயாந்தர ப்ரவணனும்படி கைவிட்டாலும் உன்னையொழிய வேறொருசதியில்லையென்று தம்முடைய அத்யவஸாயத்தை யருளிச்செய்கிறார்.

தொண்ணூற்றுநாலாம்பாட்டு. “రామః - ராம:”என்கையாலே-நினைத்தார்க்கு நினைத்தத்தைக் கொடுக்குமென்கிறது. அழகாலும் சீலத்தாலும் மோக்ஷபர்யந்தம் வேண்டினார்க்கு வேண்டினது கொடுப்பானென்கைக்கு ப்ரமாணங்கள் பலவுமருளிச்செய்கிறார் (అలమద్యప్రహుక్తేన - அலமத்புஹிசிக்தேநஎன்றுதொடங்கி.) (கூசு)

அடக்கரும்புலன்களைந்தடக்கியாசையாமவை
துடக்கறுத்துவந்து நின்றொழிற்கணின்றவென்னைநீ
விடக்கருதிமெய்செயாதுமிக்கோராசையாக்கிலும்
கடற்கிடந்தநின்னலாலோர்கண்ணிலேனெம்மண்ணலே. (௯௫)

ப-ரை.—அடக்கரும் - அடக்கவரிதான, புலன்களைந்து - செவிமுதலிய வைம்புலன்களையும், அடக்கி - விஷயங்களில் போகாதபடி மீட்டு, ஆசையாமவை - அவ்விஷயங்களிலுண்டான ருசியை, துடக்கறுத்து - வாஸனையோடே போக்கி, வந்து - மோக்ஷேச்சையாலேவந்து, நின்தொழிற்கண்நின்ற வென்னை-உன்திருவடிகளிலே கைங்கர்யத்தை ஆர்த்தித்து நின்றவென்னை, எம்மண்ணலே - எனக்கு நிருபாதிகஸ்வாமியாய், நீ - இந்த்ரிய ஜயமேதொடங்கி இவ்வளவும் புகுரநிறுத்தின நீ, விடக்கருதி - உபேக்ஷிக்கும்படி நினைத்து, மெய்செயாது - ஆரம்பித்த ஆத்மோஜ்ஜீவநத்தை முடிய நடத்தாதே, மிக்கோராசையாக்கிலும் - விஷயாந்தரங்களில் மிக்கருசியையுண்டு பண்ணிலும், கடல்கிடந்தநின்னலால் - என்நிமித்தமாகத் திருப்பாற் கடலிலே கண்வளர்ந்தருளினவுன்னையொழிய, ஓர் கண்ணிலேன் - வேறொரு நிர்வாஹகனையுடையேனல்லேனென்கிறார். (௯௫)

வ்யா.—(அடக்கரும்புலன்களைந்தடக்கி) ஆசார்யோபதேசத்தாலும் சாஸ்த்ரவாஸனையாலும் இந்த்ரியங்களை நியமிக்கவிழிந்தால் நியமிக்கவரிய ச்ரோத்ராதிகளைந்தையும், ஆகர்ஷகமான தன்வடிவைக்காட்டி விஷயங்களில் போகாதபடி மீட்டு, அவற்றுக்குத் தானே விஷயமாம்படி நியமித்து. ஈச்வரன் வடிவழகைக்காட்டி மீட்டானென்கைக்கு இங்கு சப்தமுண்டோவென்னில்; கீழே - "புலன்களைந்தும்வென்றிலேன் பொறியிலேன்" என்றவராகையாலே இங்குச்சொன்ன இந்த்ரியநியமநம் ஈச்வரனாலேயென்னுமிடம் அர்த்தாத்ஸித்தம். தபோபங்கம்பண்ணவந்த ஊர்வசியை மாத்ர்புத்தியாலே நமஸ்கரித்துநின்ற அர்ஜுநனும், "𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑌾𑌯𑍋𑌰𑌿𑌵 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍" "தஸ்யாஹம்நிக்ரஹம் மந்யேவாயோரிவஸுதுஷ்கரம்" என்னும்படியிறே இந்த்ரியநியமநத்தினருமையிருப்பது. (ஆசையாமவைதுடக்கறுத்து) அவ்வடிவில் பாவநத்வத்தாலே விஷயங்களில் ருசியை வாஸனையோடேதவிர்த்து. விஷயாந்தரருசிக்கடி பாபமேயிறே. (வந்துநின்றொழில்கண்நின்றவென்னை) புருஷார்த்தத்தின் மேலெல்லையிலேவந்து உன்திருவடிகளிலே கைங்கர்யத்தை அர்த்தித்து நின்றவென்னை.

(நீவிடக்கருதி) இந்த்ரியஜயமேதொடங்கி இவ்வளவும் புகுரநிறுத்தினநீ உபேக்ஷிப்பாயாக நினைத்து. (மெய்செயாது) ஆரம்பித்த கார்யத்தை முடியநடத்தாதே. மெய்செய்யாதொழிகையாவது-ஆத்மோஜ்ஜீவநத்தை யாரம்பித்து தத்விபரீதமாக ஆசரிக்கும் மித்யாவ்யாபாரம். "𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍍𑌯 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾𑌚𑌰𑌤𑌿 𑌸 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌸𑍍𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇" "அந்யதாஸங்கல்ப்யாந்யதாசரதி ஸமித்யாசாரஸ்ஸஉச்யதே" என்னக்கடவதிறே.

(மிக்கோராசையாக்கிலும்) விஷயாந்தரங்களிலே ருசியைப் பிறப்பித்தாயாகிலும். ஸ்வவிஷயத்தில் ருசிக்குக்ருஷிபண்ணினவன் சப்தாதிவிஷயங்களில் ருசிக்குஉத்பாதகனாகக்கூடாது, அப்படிகூடினாலும். (கடல்கிடந்தநின்னலாலோர்கண்ணிலேன்) நான் அபேக்ஷியாதிருக்க என்னுடைய ஹிதார்த்தமாக த்ரிபாத்விபூதியிலிருப்பை விட்டு விஸத்ர்சமான ஸம்ஸாரத்திலே திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற வுன்னையொழிய வேறொரு நிர்வாஹகனையுடையேனல்லேன். (எம்மண்ணலே) அபேக்ஷாநிரபேக்ஷமாக என்னுடைய ஹிதத்தை ப்ரவர்த்திப்பிக்கைக்கடி எனக்கு நிருபாதிகஸ்வாமியாகையாலே யென்கிறார். உபேக்ஷித்தாலும் விடமாட்டாமைக்கடி நிருபாதிகஸ்வாமியாகையாலே. அண்ணல் - ஸ்வாமி. ... (கூரு)

அ.—தொண்ணூற்றைம்பாட்டு. தம்முடையவ்யவஸாயத்தையருளிச்செய்தார் - கீழ்ப்பாட்டில்; இதில் - "அஞ்சலென்னவேண்டுமே" என்றும், "இரங்கரங்கவாணனே" என்றும் பலபடியாக அபேக்ஷியாநின்றீர், உம்முடையப்ராப்யத்தை நிர்ணயித்துச்சொல்லிரென்ன; நான் ஸம்ஸாரத்தையறுத்து உன்திருவடிகளிலேபொருந்தும்படியாக ப்ரஸாதத்தைப் பண்ணியருளவேணுமென்று தம்முடைய ப்ராப்யத்தை ப்ரார்த்திக்கிறார்.

வரம்பிலாதமாயைமாயவையமேழுமெய்ம்மையே
வரம்பிலூழியேத்திலும்வரம்பிலாதகீர்த்தியாய்
வரம்பிலாதபல்பிறப்பறுத்துவந்துநின்கழல்
பொருந்துமாதிருந்தநீவரஞ்செய்புண்டரீகனே. (கூசு)

ப-ரை.—வரம்பிலாத-அளவிறந்தஸ்வரூபத்தையும் அளவிறந்த மஹதாதிபரிணாமங்களையுமுடைத்தான, மாயை - ப்ரக்ருதிதத்வத்தை ஸ்வாதீநமாகவுடையனாய், மாய - ஆச்சர்யமான ஜ்ஞாந சக்த்யாதி கல்யாணகுணங்களை யுடையனாய், வையமேழும் - ஸப்தலோகங்களிலுள்ளவர்களும, மெய்ம்மையே-அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு, வரம்பில் ஊழி - அஸங்க்யாதமான கல்பங்களெல்லாம், ஏத்திலும் - ஸ்தோத்ரம் பண்ணினாலும், வரம்பிலாத - எல்லைகாணவொண்ணாத, கீர்த்தியாய் - ரக்ஷகத்வ ப்ரஸித்தியையுடையனாய், புண்டரீகனே - தாமரைமலரையொத்த அவயவங்களை யுடையவனே, வரம்பிலாத-அளவில்லாத, பல்பிறப்பு அறுத்து-பலவகைப்பட்ட பிறப்பையறுத்து, வந்து-அர்ச்சிராதி மார்க்கத்தாலே ஒருதேச விசேஷத்திலேவந்து, நின்கழல் - ஸுநிரபோக்யமான வுன்திருவடிகளை, பொருந்துமா - பொருந்தும்படியாக, திருந்த-கைங்கர்ய ஸுகமே ஸுகமாம்படி, நீ-என்னுடைய உஜ்ஜீவநார்த்தமாக * ஆள்பார்த்து ஸஞ்சரிக்கிறநீ, வரம்செய்-ப்ரஸாதத்தைப்பண்ணியருளவேணுமென்கிறார். (கூசு)

வ்யா.—(வரம்பிலாதமாயை) அளவிறந்த ஸ்வரூபத்தையும் அளவிறந்த மஹதாதிபரிணாமங்களையுமுடைத்தான ப்ரக்ருதி தத்வத்தை ஸ்வாதீநமாகவுடையவனே. மாயை-ப்ரக்ருதி.

"𑌅𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨 𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇" "அநந்தஸ்யநதஸ்யாந்தம்ஸங்க்யாநம்வாபிவித்யதே" என்னக்கடவதிறே. இத்தால்-பந்தகமான ப்ரக்ருதிநீயிட்ட வழக்கென்கை. (மாய) ஆச்சர்யமானஜ்ஞாநசக்த்யாதிகல்யாணகுணங்களை யுடையவனே. மாயம்-ஆஶ்சர்யம். இத்தால்-கீழ்ச்சொன்ன ப்ரக்ருதியிலே பத்தராய் தந்நிவ்ருத்த்யர்த்தமாக தேவரீரை யாச்ரயித்த சேதநர்க்கு தத்ஸம்பந்தத்தை யறுத்துக்கொடுக்கைக்கடியான ஜ்ஞாநசக்த்யாதி குணங்களையுடையவனென்கை. (வையமேழும்மெய்ம்மையே வரம்பிலூழியேத்திலும் வரம்பிலாதகீர்த்தியாய்) ஸப்தலோகங்களும் ஸ்தோதாக்களாக, தந்தாமுடைய சேஷத்வத்தை யுணர்ந்து ஸ்வரூபாநுரூபமாக அநந்யபரராய்க்கொண்டு அஸங்க்யாதமான கல்பங்களெல்லா மேத்தினாலும் எல்லைகாணவொண்ணாத ரக்ஷகத்வப்ரதையையுடையவனே. இத்தால் - அசித்ஸம்ஸர்க்கத்தையறுத்துத் திருவடிகளோடேசேர்த்து ரக்ஷித்துப்போந்த ரக்ஷகத்வ ப்ரதையை பரிச்சேதிக்கவொண்ணாதென்கை. "𑌵𑌰𑍍𑌷𑌾𑌯𑍁𑌤𑍈𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌗𑍁𑌣𑌾 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌾 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌸𑌮𑍇𑌤𑍈𑌰𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍈𑌃। 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌾𑌯𑍁𑌰𑍍𑌯𑌦𑌿 𑌕𑍋𑌟𑌿𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌃" "வர்ஷாயுதைர்யஸ்யகுணாநஶக்யா வக்தும்ஸமேதைரபிஸர்வலோகை:| சதுர்முகாயுர்யதிகோடிவக்த்ர:."

(வரம்பிலாதபல்பிறப்பறுத்து) நம்மைப்புகழாதே அபேக்ஷிதத்தைச்சொல்லீரென்ன ; அஸங்க்யேயமான பலவகைப்பட்ட பிறப்பையறுத்து. பலவகையாவது-தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவரங்கள். அஸங்க்யாதமாவது-ஒருஜாதியிலேபிறக்கும் ஜந்மத்துக்குந்தொகையற்றிருக்கை. காலம் அநாதி, ஆத்மாநித்யன், பண்ணிவைக்கவல்லகர்மங்களுக்கு அவதியில்லாமையாலே கர்மாநுகுணமாகப்பிறக்கவிருக்கிற பிறவிக்குத் தொகையில்லை, ஜந்மங்களையறுத்து. (வந்துநின்கழல்பொருந்துமா) அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஒருதேஶவிஶேஷத்திலேவந்து, ஸுரிபோக்யமான திருவடிகளிலே, "𑌛𑌾𑌯𑌾𑌵𑌾 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍" "சாயாவாஸத்வமநுகச்சேத்" என்கிறபடியே ப்ரதக்ஸ்திதயநர்ஹமாகப் பொருந்தும்படியாக. (திருந்த) "𑌨𑍋𑌪𑌜𑌨𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌨𑌿𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍" "நோபஜநம்ஸ்மரந்நிதம்ஶரீரம்" என்கிறபடியே திருவடிகளுக்குப் புறம்பானவற்றை ஸ்மரியாதே கைங்கர்யஸுகமே ஸுகமாம்படி. (நீவரஞ்செய்) என்னுடைய உஜ்ஜீவநார்த்தமாக *ஆள்பார்த்துழிதருகிற நீ ப்ரஸாதத்தைப்பண்ணி யருளவேணும். (புண்டரீகனே.) புண்டரீகாவயவனே. புண்டரீகாக்ஷனே. திருக்கண்களே ப்ரசுரமாயிருக்கையாலே புண்டரீகனென்கிறார். "𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌤𑌨𑍁𑌤𑍇" "விஜ்ஞாநம்யஜ்ஞம்தநுதே" என்னக்கடவதிறே. இத்தால்-ப்ரஸாதத்தைப் பண்ணுகையாவது- ஒருவிஶேஷகடாக்ஷமென்கை.

அ.—தொண்ணூற்றேழாம்பாட்டு. "வாஞ்செய்புண்டரீகனே" என்றுநின்றீர், நம்முடையவிசேஷகடாக்ஷத்துக்கு உம்முடையபக்கலிலே யொருமுதல் வேண்டாவோவென்ன; திருமார்விலே பிராட்டியெழுந்தருளியிருக்கத் திருக்கையிலே திவ்யாயுதங்களிருக்க ஒருமுதல்வேணுமோ, அங்ஙனேயொருநிர்ப்பந்தம் தேவரீர்க்குண்டாகில்என்விரோதியைப்போக்கியுன்னைக்கிட்டியடிமைசெய்கைக்கு ஹேதுவாயிருப்பதொருவுபாயத்தை தேவரீரே தந்தருளவேணுமென்கிறார். அகிஞ்சநனாய் தேவரீர்கைபார்த்திருக்கிற வெனக்கு ப்ராப்யமான கைங்கர்யத்தோடுததுபாயத்தோடுவாசியறதேவரீரே தந்தருளவேணு மத்தனையன்றோவென்கிறார்.

வெய்யவாழிசங்குதண்டுவில்லும்வாளுமேந்துசீர்க்
கையசெய்யபோதில்மாதுசேருமார்ப! நாதனே!
ஐயிலாயவாக்கைநோயறுத்துவந்துநின்னடைந்
துய்வதோருபாயநீயெனக்குநல்கவேண்டுமே. (௯௭)

ப-ரை.—வெய்ய - எதிரிகள் குடல்குழம்பும்படி வெவ்விதான, ஆழி - திருவாழியையும், சங்கு - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், தண்டு - கௌமோதகியென்னும் கதையையும், வில்லும்-ஸ்ரீசார்ங்கமென்னும்திருவில்லையும், வாளும்-நந்தகமென்னும் திருக்குற்றுடைவாளையும், ஏந்து - எப்போதும் தரித்த, சீர் - அழகிய, கைய - திருக்கைகளையுடையனாய், செய்யபோதில் - சிவந்த தாமரை மலரைப்பிறப்பகமாகவுடைய, மாது - பெரியபிராட்டியார், சேரும் - நித்ய வாஸம் பண்ணுகிற, மார்ப - திருமார்வையுடையனாய், நாதனே - ஸர்வஸ்வாமியானவனே; ஐயிலாய - ச்லேஷ்மத்தை ப்ரக்ருதியாக வுடைத்தான, ஆக்கை நோயறுத்து - சரீரமாகிறநோயை யறுத்து, வந்து - ஒருதேச விசேஷத்திலே வந்து, நின் அடைந்து - நிரதிசயபோக்யனான வுன்னை ப்ராபித்து, உய்வதோருபாயம் - அடிமைசெய்து உஜ்ஜீவிப்பதொருவழியை, நீ - எனக்கு இல்லாதவையெல்லாம் தரக்கடவநீ, எனக்கு - உன்கைபார்த்திருக்கிறவெனக்கு, நல்கவேண்டும் - தந்தருளவேணுமென்கிறார். (௯௭)

வ்யா.—(வெய்யவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்துசீர்க்கைய) காணவே யெதிரிகள் தறைப்படும்படியான ஸ்ரீபஞ்சாயுதங்களையும் அநவரதம் வாத்ஸல்யத்தாலே திருக்கையிலே யேந்தினவனே. வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படி யிருக்கிற கையிலே திவ்யாயுதங்களை யேந்தினவனே யென்றுமாம். திவ்யாயுதங்களை யேந்தினபடியேயிருக்கிறது தேவரீர்க்கு ஒருவிரோதியுண்டாயோ, என்விரோதியைப்போக்குகைக்காகவன்றோவென்கை. "எப்போதுங்கைகழலாநேமியான்நம்மேல்வினைகடிவான்" என்னக்கடவதிறே. (செய்யபோதில்மாதுசேருமார்ப) சிவந்ததாமரைப் பூவைப்பிறந்தகமாகவுடையளாயிருக்கையாலே ஸுகுமாரையாய்த் திருமேனிக்கு பரபாகரூபத்தாலே ஆபரணபூதையான பிராட்டி " அகலகில்லேனிறையும் " என்று சொல்லப்படும் திருமார்வையுடையவனே.

தொண்ணூற்றேழாம்பாட்டு. சீர்-வாத்ஸல்யமாதல்; அழகாதல்.

இத்தால்-ஆச்ரயண விரோதிபாபத்தைப் பொறுப்பிக்கைக்குப் பிராட்டி ஸந்நிதியுண்டாயிருக்க அநுபவவிநாஶ்யமாய் பகவத்ப்ராப்தி விரோதிகளை யழியச்செய்கைக்கு பரிகாரமுண்டாயிருக்க,மாத்ர்பித்ர்ஸந்நிதியிலே நோவுபடுவாரைப்போலே, சரீரஸம்பந்தத்தாலே நோவுபடக்கடவேனோ வென்கை. (நாதனே) ஸர்வஸ்வாம்யானவனே. இத்தால்-இவள் புருஷகாரமாகாதே கையிலே பரிகாரமுமின்றிக்கே யொழிந்தவன்றுதான் ஆருடைமை நோவுபடுகிறது.

இப்படியிருக்க, புருஷார்த்த ஸித்திக்கு என்தலையிலேயுமோருபாயம் வேணுமென்று தேவரீர்க்கு நிர்ப்பந்தமுண்டாகில் அத்தை தேவரீரோ தந்தருளவேணுமென்கிறார் மேல்(ஐயிலாயவாக்கை நோயறுத்து) ச்லேஷ்மத்தை ப்ர்க்ர்தியாகவுடைய சரீரமாகிற நோயையறுத்து. தேஹாத்மாபிமாநிகளுக்குப்ரார்த்தநீயமானசரீரம் ஜ்ஞாநம்பிறந்தால்வ்யாதியாயிறேயிருப்பது.“வெய்ந்ததம்மெய்குந்தமாகவிரும்புவர்” என்னக்கடவதிறே. (வந்துநின்னடைந்து) ஒருதேசவிஶேஷத்திலேவந்து நிரதிசயபோக்யனானவுன்னைப்ராபித்து. (உய்வதோருபாயம்) அடிமைசெய்து உஜ்ஜீவிப்பதொருவழியை. (நீயெனக்குநல்கவேண்டுமே) ச்ரியஃபதியாய் திவ்யாயுதோபேதனாய் எனக்கில்லாதவையெல்லாம் தரக்கடவநீயே, எல்லாவற்றுக்கு முன்கைபார்த்திருக்கிற வெனக்குத் தந்தருளவேணும். நல்குதல்-கொடுத்தல். அதாகிறது-தருதல். ... ... (கூஎ)

அ.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு. நம்முடைய விஶேஷகடாக்ஷத்துக்கு உம்முடைய தலையிலே ஒருமுதல்வேணுமே, என்னை நீயே தரவேணுமென்னக்கடவீரோ வென்று பகவதபிப்ராயமாக; புருஷார்த்தருசியாலே வந்த ப்ராதிகூல்ய நிவ்ர்த்தியும் புருஷார்த்த ருசியுமே ஆலம்பநமாக நான் ஸம்ஸாரதுரிதத்தைத் தப்பும்படி நீயேபண்ணி யருளவேணுமென்கிறார்.

மறந்துறந்துவஞ்சமாற்றியைம்புலன்களாசையும்
துறந்துநின்கணாசையேதொடர்ந்துநின்றநாயினேன்
பிறந்திறந்துபேரிடர்சுழிக்கணின்றுநீங்குமா
மறந்திடாதுமற்றெனக்குமாயநல்கவேண்டுமே. (கூஅ)

ப-ரை.—மாய - ஆச்சர்யமான சக்தியையுடையவனே; மறம்துறந்து-பிறர்மினுக்கம் பொறாதொழிகையும் பிறருக்குத் தீங்கை நினைக்கையுமாகிறவிவற்றைவிட்டு, வஞ்சம்மாற்றி - க்ர்த்ரிமத்தைத் தவிர்த்து, ஐம்புலன்களாசையும் துறந்து - இந்த்ரியங்களுக்கு இதரவிஷயங்களிலுண்டான ஆசையைவிட்டு, நின்கண் ஆசையே தொடர்ந்து நின்ற - உன்பக்கலாசையையே

மெய்குந்தமாக - சரீரத்தை குத்ஸிதமாக. (கூஎ)

ஆதரித்துநின்ற, நாயினேன் - தண்ணியனான நான், பிறந்திறந்து - பிறப்பது சாவதான, பேரிடர் - மஹாதுக்கமாகிற, சுழிக்கண்நின்று - சக்ரத்தினின்றும், நீங்குமா - நீங்கும்படி, மறந்திடாது - ஸம்ஸாரத்தில நான்பட்ட துக்கத்தை மறவாமல், எனக்கு - விரோதிநிரஸநத்திலே அசக்தனான வெனக்கு, நல்க வேண்டும் - புருஷார்த்தத்தைத் தந்தருளவேணுமென்கிறார். (௯அ)

வ்யா.—(மறந்துறந்து) மறமாது - கோபம். அதினெல்லை-பரஸம்ர்த்தி பொருதொழிலையும், பராநர்த்தசிந்தையும். அத்தை விட்டு. (வஞ்சம்மாற்றி) க்ர்த்ரிமத்தைத் தவிர்த்து. அதாகிறது-அநுகூலனாய்த்தோற்றி ப்ராதிகூல்யத்தோடே தலைக்கட்டுகை. வஞ்சம் - பொய். (ஐம்புலன்களாசையும் துறந்து) இந்த்ரியங்களுக்கு இதரவிஷயங்களிலுண்டான ஸங்கத்தையும் விட்டு. கீழ்-"பொறியிலேன்" என்றத்தை யகப்பாடாகச் சொன்னார்; இதிலே - கீழ்ச் சொன்ன கோப க்ர்த்ரிமங்களுக்கு ஹேதுவான விஷயாந்தர ஸங்கத்தையும் விட்டு. அவைதான் புருஷார்த்தருசி பிறந்தார்க்கு அஸம்பாவிதங்கள். (நின்கணாசையேதொடர்ந்துநின்ற) உன்பக்கலாசையையே ஆதரித்துநின்ற. அதாகிறது-பகவத்ப்ரேமம் வேணுமென்றிருக்கிற ஆதரம். தொடர்வு - உறவு. (நாயினேன்) ப்ராதிகூல்ய நிவ்ர்த்தியும் புருஷார்த்த ருசியுமொழிய, புருஷார்த்த ஸித்திக்கு முதலொன்றுமின்றிக்கே யிருக்கிற அநந்யகதி.

(பிறந்திறந்து பேரிடர் சுழிக்கண் நின்று நீங்குமா) பிறப்பது சாவதான மஹாதுக்க சக்ரத்தினின்றும் நீங்கும்படி. "பிறந்து" என்கிறவிது - ஷட்பாவவிகாரத்துக்கும் உபலக்ஷணம். "இறந்து" என்கிற விது - நரகாதிகளுக்கும் உபலக்ஷணம். (மறந்திடாது மற்றெனக்கு மாயநல்கவேண்டுமே) ஸம்ஸாரத்திலேநான்பட்ட துக்கத்தையுமென்னுடைய பூர்வவ்ர்த்தத்தையும் தேவரீருடைய ஸ்வாதந்த்ர்யத்தையும்பார்த்து விஸ்மரியாதே, அபேக்ஷாமாத்ரத்தையும் ஸம்பந்தத்தையும் பார்த்து, விரோதிநிரஸநத்திலே அசக்தனானவெனக்கு தந்நிவ்ர்த்தி பூர்வகமாக புருஷார்த்தத்தைத் தந்தருளவேணும். "மற்று" என்கிறது - விரோதிநிவ்ர்த்தி ஸமநந்தரத்திலேலபிக்குமதாகையாலே. (மாய) "மமமாயா" "மமமாயா" என்கிறபடியே ஸம்ஸாரசக்ரத்தை யறுத்து நித்யஸூரிகளோடே யொருகோவை யாக்கவல்ல வாச்சர்யசக்தியுக்தனே. (௯அ)

தொண்ணூற்றெட்டாம்பாட்டு. (விட்டு) அவன் விடுவிக்கவிட்டபடி சொல்லுகிறதொன்று பூரிப்பது. அவைதான் - ப்ராதிகூல்யநிவ்ர்த்திதான். மற்றெனக்கு - விரோதிக்கு. மற்று - புருஷார்த்தம். ... ... (௯அ)

அ.—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. புருஷார்த்தருசிபிறந்த பின்பு அத்தால்வந்த ப்ராதிகூல்ய நிவ்ர்த்தியை உம்முடையபக்கல் முதலாகச் சொல்லாநின்றீர், அநாதிகாலம் நரகஹேதுவாகப் பண்ணின ப்ராதிகூல்யங்களுக்கு போக்கடியாகநீர் நினைத்திருந்ததென்னென்ன; நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக ‘‘𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿’’ ‘‘ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி’’ என்றவுன்திருவடிகளிலே ந்யஸ்தபரனான விதுவொழிய வேறுபோக்கடியுண்டோ, ஆனபின்பு கீழ்ச்சொன்ன கர்மமடியாக வருகிற யமவஶ்யதையைத் தவிர்த்து, எனக்கு உன்திருவடிகளிலே அவிச்சின்னமானபோகத்தைத் தந்தருளவேணுமென்கிறார்.

காட்டிநான்செய்வல்வினைப்பயன்றனால்மனந்தனை
நாட்டிவைத்துநல்லவல்லசெய்யவெண்ணினாரெனக்
கேட்டதன்றியென்னதாவிபின்னைகேள்வநின்னொடும்
பூட்டிவைத்தவென்னைநின்னுள்நீக்கல்பூவைவண்ணனே. (௯௯)

ப-ரை.—பின்னை - நப்பின்னைப்பிராட்டிக்கு, கேள்வ - வல்லபனாய், பூவைவண்ணனே - காயாம்பூப்போன்ற திருநிறத்தையுடையவனே; நான்செய் - நான்செய்த, வல்வினை - ப்ரபலமானபாபங்களை, காட்டி - யமபடர்களுக்குக் காட்டி, “இந்த பாபபலம் நமக்கு அநுபவிக்க ப்ராப்தம்” என்று, பயன்றனால் - பலத்திலே, மனந்தனை - மனஸ்ஸை, நாட்டிவைத்து - பூட்டிவைத்து, நல்லவல்ல செய்யவெண்ணினாரென - கொடியசெயல்களைச் செய்யவெண்ணினாரென்று, கேட்டதன்றி - கேட்டுப்போந்தவற்றையகற்றி, என்னதாவி - பாபப்ரசுரனாய் அகிஞ்சநனான வென்னுடைய ஆத்மாவை, நின்னொடும் - உன்விஷயத்திலே, பூட்டிவைத்தவென்னை - ஸமர்ப்பித்தவென்னை, நின்னுள் - உன்பக்கல்நின்றும், நீக்கல் - அகற்றுதொழியவேணும். (௯௯)

வ்யா.—(காட்டிநான்செய்வல்வினை) நான்செய்த ப்ரபலமான பாபங்களை யமபடர் எனக்குக்காட்டி. வாசிகமாயும் மாநஸமாயுமுள்ள பாபங்களையொழிய, செய்தவையாய், நரகப்ரவேசம் பண்ணி அநுபவிக்கவேண்டும் ப்ரபலபாபங்களை. இத்தால் - இவர்கள் என்னை நலிகிறார்களென்று நான் நினையாதபடி பண்ணுமவர்களென்கை. (பயன்றனால்மனந்தனைநாட்டிவைத்து) இந்தபாபபலம் நமக்கு இவ்வளவும் அநுபவிக்க ப்ராப்தமென்று பலத்திலேயும் என் மனஸ்ஸைப்பூட்டிவைத்து. (நல்லவல்லசெய்யவெண்ணினார்) கொடியசெயல்களைச்செய்ய வெண்ணினார். இவனுக்கு முதலிலேபண்ணின பாபத்தை யறிவித்து இப்பாபபலம் நாம் இவ்வளவு மநுபவிக்க வேணுமாகாதே! என்று நெஞ்சைசப்பிறப்பித்துப் பின்னையாய்த்து க்ரூரமான செயல்களை யவர்கள்செய்ய நினைப்பது.

தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. பாபத்தைக்காட்டி நலிகையாலே, நான் நினையாதபடி - நான் வெறுக்காதபடி பண்ணுமவர்களென்கை. “நல்லவல்லசெய்யவெண்ணினார்” என்றபதத்தையும் கூட்டி அருளிச்செய்கிறார். (இந்தபாபபலமித்யாதி.) ... (௯௯)

(எனக்கேட்டதன்றி) என்று கேட்டுப்போந்தவற்றையகற்றி. இப்படி சாஸ்த்ரத்திலே கேட்டுப்போந்த யமவச்யதையைத் தவிர்த்து. (என்னதாவிபின்னைகேள்வ நின்னொடும்பூட்டிவைத்தவென்னை) நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனாகையால் வந்த நீர்மையையுடைய க்ர்ஷ்ணனே! பாபப்ரசுரனாய் அகிஞ்சநனான என்னுடைய ஆத்மாவை உன்பக்கலிலே ஸமர்ப்பித்த வென்னை. "காலியாய-நின்றனைக் கடைக்கலம்புகுந்தவென்னை" என்றத்தை ஸ்மரிப்பிக்கிறார். பூட்டிவைக்கையாவது - நீவிடக்கருதி மெய்செயாது மிக்கோராசையாக்கிலும்-நின்னலாலோர்கண்ணிலேன்" என்றத்தைஸ்மரிப்பிக்கிறார். (நின்னுள்நீக்கல் பூவைவண்ணனே) பூவைப்பூப்போலேநிறத்தையும்ஸௌகுமார்யத்தையுமுடைய வடிவையுடையவனே! நின்பக்கல்நின்றும் அகற்றொழியவேணும். புஷ்பஹாஸஸுகுமாரமான வடிவழகை ஸர்வகாலமும் விச்சேதியாதே யநுபவிக்கும்படிபண்ணியருளவேணும். "பின்னைகேள்வ - என்னதாவி நின்னொடும் பூட்டிவைத்த வென்னை - காட்டி நான்செய்வல்வினைப் பயன்றனில்மநத்தனை நாட்டிவைத்து நல்லவல்லசெய்யவெண்ணினாரெனக்கேட்டதன்றி - பூவைவண்ணனே-நின்னுள் நீக்கல். (௯௯)

அ.—நூறாம்பாட்டு. இப்படிஅவிச்சிந்நமான அநுபவத்துக்கு பரபக்தி யுக்தனாகவேண்டாவோவென்ன; அப்பரபக்தியைத் தந்தருளவேணுமென்கிறார்.

பிறப்பினோடுபேரிடர்ச்சுழிக்கணின்றுநீங்குமஃ
திறப்பவைத்தஞானநீசரைக்கரைக்கொடேற்றுமா
பெறற்கரியநின்னபாதபக்தியானபாசனம்
பெறற்கரியமாயனேயெனக்குநல்கவேண்டுமே. (௧00)

ப-ரை.—பிறப்பினோடு - ஜந்மத்தோடேகூடின, தாபத்ரயரூபமான, பேரிடர்-மஹாதுக்கத்தை விளைக்கக்கடவதான, சுழிக்கண்நின்று - ஸம்ஸாரமாகிற சக்ரத்தினின்றும், நீங்குமஃது-நீங்குகைக்குறுப்பானதத்வஹிதங்களை, இறப்பவைத்த-மறைத்துவைத்த, ஞானநீசரை-ஸர்வோத்தமராகத்தங்களை அபிமானித்திருக்கும்நீசரை, கரைக்கொடேற்றுமா - கரையிலேகொண்டேற்றுகைக்கு உபாயமாக,பெறற்கரிய-பெறுதற்கு அரிய, நின்னபாதம்-உன்திருவடிகளைவிஷயமாகவுடைத்தான, பக்தியான-பக்தியாகிற, பாசனம்-டஜநத்தை, உன்க்ர்பையாலேயொழிய, பெறற்கரிய - வேறொருவழியாலே பெறக்கூடாத, மாயனே-ஆச்சர்யசக்தியுக்தனே,எனக்கு - உன்க்ர்பையல்லதறியாதவெனக்கு, நல்கவேண்டும்-பக்தியைத்தந்தருளவேணும். (௧00)

வ்யா.—(பிறப்பினோடுபேரிடர் சுழிக்கண்நின்று நீங்குமஃதிறப்பவைத்த) ஜந்மத்தோடேகூடின தாபத்ரயரூபமான மஹாதுக்கத்தைவிளைக்கக்கடவதான ஸம்ஸாரசக்ரத்தில் நின்றும் நீங்குகைக்குறுப்பான தத்வஹிதங்களை மறைத்துவைத்தவர்கள்.

தத்வஹிதங்களை "அஃது" என்றது-ச்ருதிப்ரஸித்தியாலே. அதாவது-ஸ்வர்க்கதத்ஸாதநங்களை வேதார்த்தமென்றிருக்கை. "వేద వాదరతాః పార్థ నాన్యదస్తీతివాదినః" "வேதவாதரதா꞉ பார்த்தநாந்யதஸ்தீதிவாதிந꞉" என்றிறே அவர்கள் நிர்ணயம். இறக்கையாவது - நசிக்கை. அதாகிறது - "నశ్యత్యహే" "நஶ்யதர்ஶநே" என்கிறபடியே மறைக்கை. (ஞாநநீசரை) ஸர்வஜ்ஞராகத் தங்களை யபிமாநித்திருக்கும் நீசரை. "யாரும்வையகத்தொன்றிநின்று வாழ்தலின்மைகண்டுநீசர்" என்றவர்கள் கேவலநீசர்; இவர்கள் ஜ்ஞாநநீசர். (கரைக்கொடேற்றுமா) இவர்களைக் கரையிலேகொண்டேற்றுகைக்குபாயமாக. "సోధ్వనః పారమాప్నోతి తద్విష్ణోః పరమంపదమ్" "ஸோத்வந꞉பாரமாப்நோதி தத்விஷ்ணோ꞉பரமம்பதம்" என்கிறபடியே - ஸம்ஸாராத்வாவுக்குக் கரையாவது - பகவத்விஷயமிறே. அத்தை லபிக்கைக்கு உபாயமாக வேதாந்தங்களில் சொல்லிவைத்த.

(பெறற்கரியநின்னபாத பத்தியானபாசநம்) பெறுதற்கரிய உன்திருவடிகளை விஷயமாகவுடைத்தான பரமபக்தியாகிற பாஜநத்தை. ப்ராப்யனானவனிற் காட்டில் தத்விஷயபக்தி துர்லபமிறே. "యాప్రీతిరవివేకానామ్" "யாப்ரீதிரவிவேகாநாம்" என்றும், "ముక్తిస్తస్య కరేస్థితా" "முக்திஸ்தஸ்யகரேஸ்திதா" என்றும், "సమస్తజగతాంమూలే యస్యభక్తిస్థిరాత్వయి" "ஸமஸ்தஜகதாம்மூலேயஸ்யபக்திஸ்திராத்வயி" என்றும்சொல்லக்கடவதிறே. பாசநம்-மரக்கலம். அத்தாலே-தநத்தைலக்ஷிக்கிறது. "தநமாயதானேகைகூடும்" என்னக்கடவதிறே. "యమేవైషవృణుతేతేనలభ్యః" "யமேவைஷவ்ருணுதேதேநலப்ய꞉" என்றும், "హృదామనీషామనసాభిక్లృప్తః" "ஹ்ருதாமநீஷாமநஸாபிக்லுப்த꞉" என்று - வேதாந்தங்கள் உன்திருவடிகளைப்பெறுகைக்கு ஸாதநமானபக்தியை யுபதேசித்துவைத்ததிறே; அந்தபக்தியை (பெறற்கரியமாயனே) உன்கேவலக்ருபையையொழிய வேறொருவழியாலே யுன்னைப்பெற விருப்பார்க்கு ஸித்தியாத ஆச்சர்யபூதனே. லோகத்தில் ஸாத்யங்களுக்கெல்லாம் ஸாதநமுண்டாயிருக்க அநந்யஸாத்யனான ஆச்சர்யபூதனே. (எனக்குநல்கவேண்டுமே) பெறவேண்டுமவையெல்லாவற்றுக்கும் உன்க்ருபையையல்லதறியாத வெனக்கு அந்த பக்தியைதேவரீர்தந்தருளவேணும்.

நூறும்பாட்டு.—அஃது-தத்வஹிதங்கள். அதாவது - மறக்கையாவது. ப்ரயோஜநாந்தரபரரான ஸ்வர்க்காதிபோக பரரைக் கரையேற்றுகைக்காக வேதாந்தங்களிலே பக்தியை உபாயமாகச் சொல்லிவைத்ததென்றபடி. பாசநம்-பாஜநமென்றாய், பக்திரூபமான ஸமாச்ரயணமென்றபடி. உபதேசிக்கை - ஸ்ரீ கீதையிலே. (௧00)

ப்ரயோஜநாந்தரபரர்க்குமோக்ஷருசியைப் பிறப்பித்து தத்ஸாதநமானபக்தியைக் கொடுத்தருளக்கடவ தேவரீர், அநந்யப்ரயோஜநனாய் அநந்யஸாதநனாயிருந்துள்ள வெனக்கு த்வதநுபவபரிகரமான அந்தபக்தியைத் தந்தருளுகை தேவரீர்க்கு அபிமதமன்றோ, அத்தைத் தந்தருளவேணுமென்றதாய்த்து. ... (௧௦௦)

அ.—நூற்றோராம்பாட்டு. நீர் நம்மை ப்ரார்த்திக்கிற பரபக்தி விஷயாந்தரங்களினின்றும் நிவ்ர்த்தமான இந்த்ரியங்களைக் கொண்டு நம்மைஅநவரதபாவனைபண்ணுமத்தாலே ஸாத்யமன்றோவென்ன; அங்ஙனேயாகில் ஜிதேந்த்ரியனாய்க்கொண்டு அநவரதபாவனை பண்ணுமவனாக தேவரீர் திருவுள்ளமாகவேணுமென்கிறார்.

இரந்துரைப்பதுண்டுவாழியேமநீர்நிறத்தமா
வரந்தருந்திருக்குறிப்பில்வைத்ததாகில்மன்னுசீர்ப்
பரந்தசிந்தையொன்றிநின்றுநின்னபாதபங்கயம்
நிரந்தரம்நினைப்பதாகநீநினைக்கவேண்டுமே. (௧௦௧)

ப - ரை.—திருவடிகளிலேவிழுந்து, இரந்து - தேவரீரை தலையாலே யிரந்து, உரைப்பதுண்டு-விண்ணப்பம் செய்யப்புகுகிற தொருகார்யமுண்டு; வாழி- உன்வடிவழகுக்கு மங்களமுண்டாகக்கடவது; ஏமம் நீர்-அபரிச்சிந்நமான கடல்போலே யிருக்கிற, நிறத்த-திரு நிறத்தையுடைய நிருபாதிகபந்துவே; மன்னு - இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமான, சீர் - நன்மைகளையும், வரம் - ஆச்ரிதரபேக்ஷிதவரங்களையும, தரும்-தந்தருளுகிற, திருக்குறிப்பில்-திருவுள்ளத்திலே, வைத்ததாகில் - எனக்குத்தர நினைத்ததாகில், பரந்த-சப்தாதி விஷயங்களிலே பரந்த, சிந்தை - என்னுடைய மநஸ்ஸு, ஒன்றி நின்று - உன்பக்கலிலேபொருந்தி நின்று, நின்னபாதபங்கயம் - ப்ராப்யமுமாய் நிரதிசயபோக்யமுமானவுன் திருவடித்தாமரைகளை, நிரந்தரம்நினைப்பதாக-நிரந்தரமாகநினைக்கும்படி, நீநினைக்கவேண்டும் - நீதிருவுள்ளம்பற்றியருளவேணும். (௧௦௧)

வ்யா.— (இரந்துரைப்பதுண்டு) "శిరసా యాచతస్తస్య" "ஶிரஸாயாசதஸ்தஸ்ய" என்கிறபடியே திருவடிகளிலே பக்நாபிமாநனாய்க்கொண்டுவிழுந்து, தலையாலே தேவரீரையிரந்துவிண்ணப்பம் செய்யப்புகுகிறதொருகார்யமுண்டு. வகுத்தவிஷயத்திலே ஸ்வரூபப்ரயுக்தமான அநவரதபாவனையேஅர்த்திக்கிறாராகில்இப்படிகூசிச் சொல்லுகிறதென்னென்னில்; தம்முடையபூர்வ வ்ர்த்தத்தைப்பார்த்தும்,தத்வத்தினுடைய உத்துங்கதையைப்பார்த்துமருளிச்செய்கிறார். பூர்வவ்ர்த்தத்தைப் பார்த்தால் கிட்டக்கூசவேணும், கிட்டினாலும் உத்துங்கதையைப்பார்த்தால் அநாதரிக்கிறானோவென்று கூசவேணும். (வாழி) அவன்முகம் பார்க்கைக்காக மங்களாசாஸநம்பண்ணுகிறாரொன்னுதல்;அநவரதபாவனைக்கு விஷயமான வடிவழகை யநுஸந்தித்து மங்களாசாஸநம்பண்ணுகிறாரொன்னுதல்.

(ஏமநீர்நிறத்தமா) "अप्रमेयो महोदधिः" "அப்ரமேயோமஹோததி:" என்கிறபடியே-அபரிச்சிந்நமான கடல்போலேயிருக்கிறதிருநிறத்தையுடைய நிருபாதிகபந்துவே.ஏமம்-உறவு."सम्बन्धः" "ஸம்போபந்து:" என்றும், "अहं सम्बन्धो जातः" "அஹம்வோபாந்தவோஜாத:" என்றும் சொல்லக்கடவதிறே.இத்தால்-இரந்தல்லது நிற்வொண்ணாதபடியையும் மங்களாசாஸநம்பண்ணியல்லது நிற்கவொண்ணாதபடியான வடிவழகையும், ப்ராப்தியையும் சொல்லுகிறது.(வரந்தருந்திருக்குறிப்பில்வைத்ததாகில் மன்னுசீர்) இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமான நன்மைகளை, அபேக்ஷித்தார் அபேக்ஷித்த வரங்களைத்தந்தல்லது நிற்கமாட்டாத திருவுள்ளத்திலே வைத்ததாகில். சீர்-நன்மை. அதாகிறது கைங்கர்யஸாம்ராஜ்யம்.

இந்தகைங்கர்யத்துக்கடியாயிருந்துள்ள அநவரதபாவனையை அபேக்ஷிக்கிறார்மேல் (பரந்தசிந்தையொன்றிநின்று) சப்தாதிவிஷயங்களிலேபோந்த வென்னுடைய மநஸ்ஸு, மற்றொன்றில்போகாதே உன்பக்கலிலே யொன்றிநின்று. (நின்னபாதபங்கயம்) ப்ராப்தமுமாய் நிரதிசய போக்யமாகையாலே ஆகர்ஷகமுமானஉன்திருவடிகளை. (நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கவேண்டும்) அம்மநஸ்ஸு நிரந்தரமாக நினைக்கவற்றாம்படி நீ திருவுள்ளமாகவேணும். என் நினைவும் என்செயலும் அகிஞ்சித்கரம், உன் நினைவுக்கே பலவ்யாப்தியுள்ளதென்கை. ... ... (௧௦௧)

அ.—நூற்றிரண்டாம்பாட்டு. விச்சேத ப்ரஸங்கமில்லாத அநவரதபாவனைக்கு ஶரீரஸம்பந்தமறவேணுங்காணுமென்ன; எனக்கு ருசியுண்டாயிருக்க தேவரீர் ஸர்வசக்தியாயிருக்க அநுவர்த்திக்கிற விவ்வசித் ஸம்ஸர்க்கத்தை தேவரீரறுத்துத்தந்தருளு மளவும் நான் தரித்திருக்கும்படி இன்னபடி செய்கிறோமென்று ஒரு வார்த்தை யாகிலும் அருளிச்செய்யவேணுமென்கிறார்.

விள்விலாதகாதலால்விளங்குபாதபோதில்வைத்து
உள்ளுவேனதூனநோயொழிக்குமாதெழிக்குநீர்
பள்ளிமாயபன்றியாயவென்றிவீரகுன்றினால்
துள்ளுநீர்வரம்புசெய்ததோன்றலொன்றுசொல்லிடே. (௧௦௨)

ப-ரை.—தெழிக்கும் - கோஷிக்கிற, நீர் - கடலிலே, பள்ளி - ஆச்ரிதார்த்தமாகக்கண்வளர்ந்தருளுகிற, மாய - ஆச்சர்ய பூதனே, பன்றியாய - மஹாவராஹமாய் பூம்யுத்தரணம்பண்ணி, வென்ற - ஹிரண்யனைவென்ற, வீர - வீரத்தையுடையனாய், துள்ளுநீர் - திரைக்கிளர்த்தியையுடைய கடலிலே, குன்றினால் - நீரிலே ஆழக்கடவ மலைகளைக்கொண்டு, வரம்புசெய்த - அணைசெய்த, தோன்றல் - சக்ரவர்த்திதிருமகனே; விள்விலாத - விச்சேதமில்லாத,

---

நூற்றோராம்பாட்டு. ஏம நீர் - ஏமம்-நெடுமை. ... (௧௦௧)

காதலால்-ப்ரேமத்தாலே, விளங்கு-உஜ்வலமான, பாதபோதில்-திருவடித்தாமரைகளிலே, வைத்து - நெஞ்சைவைத்து, உள்ளுவேனது - அத்திருவடிகளையே தஞ்சமாக நினைத்திருக்கிறவெனக்கு, ஊனம் - ஊனத்தைவிளைக்கும், நோய்-ஸம்ஸாரமாகிற நோயை, ஒழிக்கும் ஆவொன்று-போக்கநினைத்திருக்கிறதோருபாயம், சொல்லு - அருளிச்செயயவேணும். (௧௦௨)

வ்யா.—(விள்விலாதகாதலால்) ப்ரயோஜநாந்தரங்களைப்பற்றி நெகிழாதே அநந்ய ப்ரயோஜநனாய்க்கொண்டு திருவடிகளில் பண்ணின ப்ரேமத்தாலே. “விள்கை விள்ளாமைவிரும்பி” என்னக்கடவதிறே. (விளங்குபாதபோதில்வைத்து) அந்த ப்ரேமத்தாலே உஜ்வலமான திருவடித்தாமரைகளிலே நெஞ்சைவைத்து. அநந்ய ப்ரயோஜநரான ஆச்ரிதருடைய ஸந்நிதியிலே அலருமதிறே திருவடித்தாமரைகள். இத்தால் - நான் ப்ரயோஜநாந்தரபரனாய் அசித்ஸம்பந்த மநுவர்த்திக்கிறதோ, தேவரீர் ஆச்ரிதவத்ஸலரல்லாமையநுவர்த்திக்கிறதோவென்கை. (உள்ளுவேனதூனநோயொழிக்குமா) அத்திருவடிகளையே தஞ்சமென்று நினைத்திருக்கிறவெனக்கு ஊனத்தை விளைக்கும் சரீரஸம்பந்தமாகிற நோயைப்போக்க நினைத்திருக்கிற விரகும். ஊனமாகிறது – ஸ்வஸ்வரூபவிஷயமான ஜ்ஞாநஸங்கோசமும், பகவத்ஜ்ஞாநஸங்கோசமும், பகவதநுபவ சங்கோசமும். இவற்றை விளைக்குமதிறே தேஹஸம்பந்தம். “சரீரம்” என்றும், “வ்யாதி” என்றும்-பர்யாயமிறே. இத்தால்-வேறொன்றைத்தஞ்சமென்றிழுக்கிறேனோ, சரீரத்திலாதரமுண்டாயிழுக்கிறேனோ.

(தெழிக்குநீர்ப்பள்ளிமாய) தேவரீரோட்டை ஸ்பர்சத்தாலே கோஷிக்கிறகடலிலே ஆச்ரிதாநுக்ரஹார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிற ஆச்சர்யமான ஸௌலப்யாதிகுணயுக்தனே. தெழிக்கை—முழங்குகை. (பன்றியாயவென்றிவீர) விஸத்ர்ஶமான ஸம்ஸாரத்திலே ஆச்ரிதாநுக்ரஹார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிற விவ்வளவேயன்றிக்கே, நீருக்கும் சேற்றுக்குமிறாயாத மஹாவராஹமாய் பாதாளகதையான பூமியை யெடுத்து ஹிரண்யாக்ஷனை வென்ற வீரத்தை யுடையவனே. (குன்றினல்துள்ளுநீர்வரம்புசெய்ததோன்றல்) தன்னில்கிடக்கும்பதார்த்தங்களைக்கரையிலே பொகடுந்திரைக்கிளர்த்தியையுடைய கடலிலே யழுந்தக்கடவ மலைகளைக்கொண்டு அணைசெய்த சக்ரவர்த்தித்திருமகனே. தோன்றல் – அரசன். பரமபதநிலயனான தேவரீர் ஆச்ரிதார்த்தமாக ஸம்ஸாரத்திலேவந்து ஸாலபராயும் தேவரீரையறிய மாறி நஷ்டோத்தாரணம்பண்ணியும், ஆச்ரிதவிரோதிகளை யழியச்செய்தும், அதிமாநுஷசேஷ்டிதங்களைப் பண்ணியும், இப்படி நீர்மையாலும் சக்தியாலும் குறைவற்றதேவரீர்க்கு, என்சரீரஸம்பந்தத்தை யறுக்கைக்கு என்கையில் பொருளுண்டோவென்கை.

(ஒன்றுசொல்லிடே) இரண்டு தலையிலும் குறைவற்ற பின்பு இது அநுவர்த்திக்கிறது நீ நினையாமையிறே. தேவரீர் நினைக்குமளவும் தரிக்கும்படி "இன்னவளவிலேசெய்கிறோம்" என்று ஒரு வார்த்தை யருளிச்செய்யவேணும்.

தெழிக்குநீர்ப்பள்ளிமாய பன்றியாய வென்றிவீர குன்றினால் துள்ளுநீர்வரம்புசெய்ததோன்றல்—விள்விலாதகாதலால் விளங்குபாதபோதில் வைத்து உள்ளுவேனதூனநோயொழிக்குமா-ஒன்றுசொல்லிடே" என்றந்வயம். ... ... (௧௦௨)

அ.—நூற்றுமூன்றாம்பாட்டு. அசித்ஸம்பந்தம்தேஹாவஸாநத்திலே போக்குகிறோம், நீர் பதறுகிறதென்னென்ன; அங்ஙனேயாகில் தேவரீருடைய மேன்மைக்கும் நீர்மைக்கும் வடிவழகுக்கும் வாசகமான திருநாமங்களை நான் இடைவிடாதே மநநம்பண்ணிப் பேசுகைக்கு ஒருப்ரகார மருளிச்செய்யவேணுமென்கிறார்.

திருக்கலந்துசேருமார்பதேவதேவதேவனே
இருக்கலந்தவேதநீதியாகிநின்றநின்மலா
சருக்கலந்தகாளமேகமேனியாயநின்பெயர்
உருக்கலந்தொழிவிலாதுரைக்குமாறுரைசெயே. (௧௦௩)

ப-ரை.—திரு-பெரிய பிராட்டியார், கலந்து-தேவரீரோடே ஸம்ச்லேஷித்து, "அகலகில்லேனிறையும்" என்று, சேரும்-நித்யவாஸம் பண்ணுகிற, மார்ப-திருமார்பையுடையனாய், தேவதேவதேவனே-நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாய், இருக்கலந்த-ரிக்ப்ரசுரமான, வேதம்-வேதத்தாலே ப்ரதிபாத்யனையே, நீதியாகிநின்ற-ஸ்வபாவமாகவுடையனாய் நின்ற, நின்மலா-ஹேயப்ரத்யநீகனாய், சருக்கலந்த-பொன்போலே புகர்த்து, காளமேகம்-கறுத்தமேகம்போலே யிருக்கிற, மேனி-திருமேனியையுடைய, ஆய-க்ருஷ்ணனே, ச்ரியாபதி * அயர்வறுமமரர்களதிபதி ஹேயப்ரத்யநீகன விலக்ஷணவிக்ரஹயுக்தன் ஆச்ரிதவாத்ஸல்யன் என்று, நின்பெயர் உருக்கலந்து-உன் திருநாமங்களை மநநம்பண்ணி, ஒழிவிலாது-இடைவிடாதே, உரைக்கும் ஆறு-பேசும் வழியை, உரைசெய்-அருளிச்செய்யவேணும். (௧௦௩)

வ்யா.—(திருக்கலந்துசேருமார்ப) பிராட்டி தேவரீரோடே ஸம்ச்லேஷித்து, அந்த ஸம்ச்லேஷத்தில் அதிசங்கித்து "அகலகில்லேனிறையும்" என்று நித்யவாஸம்பண்ணுகிற திருமார்பையுடையவனே. பத்தரோடு முக்தரோடு நித்யரோடு வாசியற, "ఈశ్వరీం సర్వభూతానామ్" "ஈச்வரீம்ஸர்வபூதாநாம்" என்கிறபடியே - ஸர்வர்க்கும் அபாச்ரயபூதையான பிராட்டி தான் நித்யஸாபேக்ஷையாம்படியன்றோ தேவரீருடையபெருமை. (தேவதேவதேவனே) "యత్ర పూర్వే సాధ్యాస్సన్తి దేవాః" "யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவா:" என்கிறபடியே ப்ரஹ்மாதிகளுக்கு மோக்ஷருசி பிறந்தவன்று ப்ராப்யரான நித்யஸூரிகளுக்கு நித்யாநுபாவ்யனாய் கொண்டு நிர்வாஹகனானவனே. தேவரீரும் பிராட்டியும் சேர்ந்த

சேர்த்தியிலே யெடுத்துக் கைநீட்டுகையே யாத்ரையாயிருக்கும் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனென்கை. (இருக்கலந்த வேதநீதி யாகிநின்ற நிம்மலா) நிஷ்ப்ரசுரமான வேதத்தாலே ப்ரதிபாதிக்கை யே ஸ்வபாவமாகவுடையையாய்நின்ற ஹேயப்ரத்யநீகனே. நீதி-ஒழு க்கம். அதாகிறது - ஸ்வபாவம். "श्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ" "ஹ்ரீஸ்ச தேலக்ஷ்மீஸ்சபத்ந்யௌ" "तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः" "தத்விஷ்ணோ:பரமம்பதம்ஸதாபஸ்யந்திஸூரய:" "अपहतपाप्मा" "அபஹதபாப்மா" இத்யாதிவாக்யங்களாலேச்ரியःபதித்வமென்ன, ஸூரிபோக்யதையென்ன, ஹேயப்ரத்யநீகதையென்ன, இப்படிக ளாலே வேதைக ஸமதிகம்யனென்கை.

(கருக்கலந்த காளமேகமேனியாய) பொன்போலே புகர்த்துக் கறுத்து மேகம்போலே யிருக்கிற திருமேனியையுடைய க்ர்ஷ்ண னே. கரு-பொன். "नीलतोयदमध्यस्था विद्युल्लेखेव भास्वरा" "நீலதோய தமத்யஸ்தா வித்யுர்லேகேவபாஸ்வரா" "अजायमानो बहुधा विजायते" "அஜாயமாநோபஹுதாவிஜாயதே" என்று - விக்ரஹத்தை யும் அவதாரஸௌலப்யத்தையும் சொல்லிற்றிறே. "नवमासधृतं गर्भं" "நவமாஸத்ர்தம்கர்ப்பம்" என்னுமாப்போலேநீரையுள்ளே யுடைய காளமேகமென்னவுமாம். கரு - கர்ப்பம். இத்தால் - தாப ஹரமாய் ஆகர்ஷகமுமானவடிவோடேக்ர்ஷ்ணனாய்வந்தவதரித்து ஆச்ரிதர்க்கு ஸுலபனானவனென்கை. (நின்பெயருருக்கலந்தொழி விலாது உரைக்குமாறுரைசெயே) ச்ரியःபதி, அயர்வறுமமரர்க ளதிபதி, ஹேயப்ரத்யநீகன், விலக்ஷண விக்ரஹயுக்தன், ஆச்ரித ஸுலபனென்று நிர்த்தோஷப்ரமாண ப்ரதிபாத்யனான வுன்குணங் களுக்கு வாசகமானதிருநாமங்களை வடிவழகோடே இடைவிடாதே நான்பேசுகைக்கு வழியை யருளிச்செய்யவேணும். ... (க0௩)

அ.—நூற்றுநாலாம்பாட்டு. "यत्करोषि यदश्नासि" "யத்கரோஷி யதஸ்நாஸி" என்றும், "द्रव्ययज्ञास्तपोयज्ञाः" "த்ரவ்யயஜ்ஞாஸ் தபோயஜ்ஞா:" என்று மிதயாதிகர்மத்தாலே விரோதிபாபத்தைப் போக்கி, "सततं कीर्तयन्तः" "ஸததம்கீர்த்தயந்த:" என்கிறபடியே நம் மை யநுபவிக்கும்வழி சொல்லிவைத்திலோமோ, "உரைசெய்" என்கிறதென்னென்ன; நீ ப்ரதிபந்தக நிரஸநஸமர்த்தனா யிருக்க நான் கர்மத்தாலே விரோதியைப்போக்கவென்பதொன்றுண்டோ, நீயே என் விரோதியைப்போக்கி உன்னை நான் மேல்விழுந்து இ டைவிடாதே யநுபவிக்கும்படி பண்ணித் தந்தருளவேணுமென் கிறார்.

நூற்றுமூன்றும்பாட்டு. (கருக்கலந்த) கரு - பொன்னுதல்; கர்ப்பமாதல். ... ... (க0௩)

கடுங்கவந்தன்வக்கரன்கரன்முரன்சிரமவை
இடந்துகூறுசெய்தபல்படைத்தடக்கைமாயனே
கிடந்திருந்துநின்றியங்குபோதுநின்னபொற்கழல்
தொடர்ந்துவீள்விலாதவோர்தொடர்ச்சிநல்கவேண்டுமே. (க0ச)

ப-ரை.—கடும்-மிகக்கொடியனுன, கவந்தன் - கபந்தனுடையவும், வக்கரன் - தந்தவக்ரனுடையவும், கரன் - கரனுடையவும், முரன் - முரனுடையவும், சிரமவை - தலைகளை, இடந்து - தள்ளி, கூறுசெய்த - சின்னம் பின்னமாக்கின, பல்படை - பலவகைப்பட்ட ஆயுதங்களை, தடம் - ஆச்ரிதரைக் குளிரும்படி தடவக்கடவ, கை - திருக்கைகளிலே தரித்த, மாயனே - ஆச்சர்ய சக்தியுக்தனே; கிடந்திருந்து நின்றியங்குபோதும் - கிடக்கும்போதும் இருக்கும்போதும் நிற்கும்போதும் ஸஞ்சரிக்கும்போதும், நின்ன - வகுத்த சேஷியான தேவரீருடைய, பொற்கழல் தொடர்ந்து - ஸ்ப்ருஹணீயமான திருவடிகளைப் பின்சென்று, வீள்விலாதவோர்தொடர்ச்சி - இடைவிடாதபடியான ஸ்வபாவத்தை, நல்கவேண்டும் - எனக்குத் தந்தருளவேணும். (க0ச)

வ்யா.—(கடுங்கவந்தன் வக்கரன் கரன்முரன் சிரமவை) அற வெட்டியனான கபந்தன், தந்தவக்ரன், கரன், முரன், இவர்களுடைய தலைகளை. அல்லாதாரிற்காட்டில் கபந்தனுக்கு வெட்டிமையாவது - பிராட்டியைப்பிரிந்து கடலும் மலையும் விசும்பும் தேடுகிறதசையிலே எதிரம்புகோக்கவந்த வெட்டிமையைநினைத்து வெறுக்கிறார். (இடந்துகூறுசெய்த) அவர்கள் தலைமண்டையை யிடந்து சரீரங்களை "ఛిన్నం భిన్నం శరైర్దగ్ధం" "சின்னம்பின்னம்ஶரைர்தக்தம்" என்கிறபடியே சகலமாக்கினவனே. அஸுரராக்ஷஸர்களை யழியச்செய்தாப்போலே என்னுடைய பாபரூபமான ப்ரதிபந்தகங்களையழியச்செய்யவேணுமென்கை. (பல்படைத்தடக்கைமாயனே) அவர்களை யழியச்செய்கைக்குப் பலவகைப்பட்ட ஆயுதங்களை, ஆச்ரிதரைக் குளிரத்தடவக்கடவ திருக்கையிலேதரித்த ஆச்சர்ய சக்தியுக்தனே. ஒன்றே ப்ரதிகூலர்க்கு பாதகமாய் அதுதானே யநுகூலர்க்கு ரக்ஷகமாயிருக்கை ஆச்சர்யமிறே. என்னுடைய விரோதியைப்போக்குகைக்கு திவ்யாயுதங்கள்வேண்டா, இரங்கவமையுமென்கை. "అప్యేష పృష్ఠే మమహస్తపద్మం కరిష్యతి శ్రీమదనన్తమూర్తిః" "அப்யேஷப்ருஷ்டே மமஹஸ்தபத்மம் கரிஷ்யதிஸ்ரீம தநந்தமூர்த்தி:" என்றும், "அணிமிகுதாமரைக்கையை யந்தோவடிச்சியோந்தலைமிசை நீயணியாய்" என்றும் - ஆச்ரிதரை உஜ்ஜீவிப்பிக்குங் கையிறே. தடம்-குளிர்த்தி. ஆனாலும் உமக்குச் செய்யவேண்டுவதென்னென்ன (கிடந்திருந்து நின்றியங்குபோதும்) "ఆసీనో వా శయానో వా తిష్ఠన్నో యత్రకుత్రవా" "ஆஸீநோவாஸயாநோவாதிஷ்டந்தோ யத்ரகுத்ரவா" என்கிறபடியே - கிடந்தும் இருந்தும் நின்றும் ஸஞ்சரித்தும் இப்படிகளாலே தேஹயாத்ரை நடக்கும்போதும். (நின்னபொற்கழல்) வகுத்த சேஷியான தேவரீருடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை.

தேஹயாத்ராசேஷமான காலமும்விடவொண்ணாத திருவடிகளென்கை. (தொடர்ந்து வீள்விலாத தோர்தொடர்ச்சி நல்கவேண்டுமே) மேல்விழுந்து இடைவிடாதபடியான ஸ்வபாவத்தை யெனக்குப் பண்ணித் தந்தருளவேணும். தொடர்ச்சி - செறிவு. இத்தால்-அநுபவ விரோதிகளைத் தேவரீரேபோக்கவும், ஸர்வகாலமும் ஸ்ப்ர்ஹணீயமான தேவரீர் திருவடிகளை இடை விடாதே யநுபவிப்பேனாகவும் பண்ணித் தந்தருளவேணுமென்றதாய்த்து. ... (௧0௪)

அ.—நாற்றஞ்சாம்பாட்டு. நான்சொன்ன உபாயங்களி லிழியாதொழிகைக்கும் நான்செய்தபடி காண்கையொழிய போகத்திலே த்வரிக்கைக்கும் ஹேதுவென்னென்ன; பிராட்டி புருஷகாரமாக குணாதிகரான தேவரீர் விஷயீகாரத்தையே தஞ்சமென்றிருக்குமவனாகையாலே உபாயாந்தராபேக்ஷையில்லை, தேவரீர் வடிவழகிலந்வயமே போகத்தில த்வரிக்கைக்கடியென்கிறார்.

மண்ணையுண்டுமிழ்ந்துபின்னிரந்துகொண்டளந்தமண்
கண்ணுளல்லதில்லையென்றுவென்றகாலமாயினாய்
பண்ணைவென்றவின்சொல்மங்கைகொங்கைதங்குபங்கயக்
கண்ணநின்னவண்ணமல்லதில்லையெண்ணும்வண்ணமே. (௧0௫)

ப-ரை.—மண்ணையுண்டு - ப்ரளயாபத்திலே லோகங்களை யடையத்திருவயிற்றிலே வைத்து, உமிழ்ந்து - ஸ்ருஷ்டிகாலத்திலே வெளிநாடு காணப்புறப்படவிட்டு, பின் - ஸ்ருஷ்டமானபின்பு, அஜ்ஜகத்தை மஹாபலி அபஹரிக்க, இரந்து - அவன் பக்கலிலே அர்த்தியாய்ச்சென்றிரந்து, கொண்டு - நீரேற்றுப்பெற்றுக்கொண்டு, அளந்த - திருவடிகளாலே அளந்தருளின, மண் - பூமியானது, கண்ணுளல்லதில்லையென்று - நம்கடாக்ஷத்தில் நிலைநிற்குமதொழிய வேறு ஸ்திதியில்லை யென்று, வென்ற — ஸகலபதார்த்தங்களும் தன்னுடைமையிலே அகப்படும்படி ஸகலபரிணாமத்துக்கும் நிர்வாஹகமான, காலமாயினாய் - காலத்துக்கு நிர்வாஹகனாய், பண்ணை - இசைகளை வென்றுகொண்ட, இன்சொல் - இனிய பேச்சையுடையளாய, மங்கை - மங்கைப்பருவத்தையுடையளான பெரியபிராட்டியாருடைய, கொங்கை - திருமுலைத்தடத்திலே, தங்கு - பொருந்தி வர்த்திக்கிற, பங்கயக்கண்ண - புண்டரீகாக்ஷனே, எண்ணும் வண்ணம் - தேவரீரையிடைவிடாதே அநுபவிக்கவேணுமென்கிற மநோரதப்ரகாரத்துக்கு ஹேது, நின்னவண்ணமல்லது இல்லை — உன் வடிவழகல்லது வேறொன்றில்லை. (௧0௫)

வ்யா.—(மண்ணையுண்டுமிழ்ந்து) ப்ரளயாபத்திலே அபேக்ஷியாதிருக்க ஆபத்தே முதலாக வரையாதே இஜ்ஜகத்தைத்திருவயிற்றிலேவைத்துரக்ஷித்து,உள்ளிருந்துநோவுபடாதபடிஸ்ருஷ்டிகாலத்திலே உமிழ்ந்து. இத்தால்-தன்பக்கல் விமுகராநாரளவிலும் வத்ஸலனென்கை. (பின் இரந்துகொண்டளந்து) ஸ்ருஷ்டமானபின்பு அஜ்ஜகத்தை மஹாபலியபஹரிக்க அவன்பக்கலிலே அர்த்தியாய்ச் சென்றுஇரந்து,இந்த்ரனுக்குத்த்ரைலோக்யராஜ்யத்தைக்கொடுத்து,

அவ்வளவுக்கு மேலே சதுர்த்தசபுவநத்தி லுண்டான ஸகல சேதநர்தலையிலும் உன்திருவடிகளைவைத்து. இத்தால் - விமுகரானா ரளவிலும் சீலவானுமாய் ஸுலபனுமாயிருக்குமவனென்கை. தன்னை யழியமாறித்தாழ நிற்கையிறே-சீலம், எல்லார்தலையிலும் திருவடிகளை வைக்கையிறே - ஸௌலப்யம். (மண்கண்ணுளல்லதில்லையென்று) விமுகரான ஸம்ஸாரிகளைக்குறித்து இப்படி செய்தருளுகைக் கடியென்னென்னில்; இஜ்ஜகத்துக்கு நம்கடாக்ஷமொழிய வேறு ஸ்திதியில்லையென்று. (வெம்மகாலமாயினாய்) ஸகல பதார்த்தங்களும் தன்னையிலே யகப்படும்படி ஸகலபரிணாமத்துக்கும் நிர்வாஹகமான காலத்துக்கும் நிர்வாஹகனானவனே. இத்தால் - ஸ்ர்ஷ்ட்யாதிகளுக்கு கர்ம்பவித்தும் அநயபேக்ஷத்வத்தால் முறையழிந்தும், இப்படிகாலவச்யரான சேதநர்க்கு தேவரீரல்லது காலத்தை ஜயிக்க விரகில்லையென்கை. "కాలసంపచ్ఛేయత్రనకాలస్త త్రైప్రభుః" "காலஸம்பசதேயத்ரநகாலஸ்தத்ரவைப்ர பு:" என்னக் கடவதிறே. "மண்கண்ணுளல்லதில்லையென்றுவென்ற" என்று கீழே அந்வயிக்கவுமாம். அப்பக்ஷத்தில், மஹாபலி, ப்ரயளயம் முதலான விரோதிகளை உன் பேறாகவென்றவென்கை.

(பண்ணைவென்றவின்சொல்மங்கைகொங்கைதங்குபங்கயக்கண்ண) "మధురామధురాలాపా" "மதுராமதுராலாபா" - என்கிறபேச்சையும்பருவத்தையுமுடைய பிராட்டியுடைய திருமுலைத்தடத்தையே அபாச்ரயமாகவுடைய புண்டரீகாக்ஷனே. இத்தால்-பருவத்தாலும் பேச்சாலும்அவயவசோபையாலும்விலக்ஷணையான பிராட்டிக்கு வல்லபனாகையாலே பூர்வவ்ர்த்தத்தை விஸ்மரித்து, என்பக்கலிலே கீழ்ச்சொன்ன ஆபத்ஸகத்வாதிகுணப்ரேரிதமான விசேஷ கடாக்ஷத்தைப் பண்ணினவனென்கை. (நின்னவண்ண மல்லதில்லையெண்ணும் வண்ணமே) தேவரீரை இடைவிடாதே யநுபவிக்க வேணுமென்கிற மநோரதப்ரகாரத்துக்குஹேது உன்வடிவழகல்லது வேறொன்றில்லை. உன்னுடைய விசேஷகடாக்ஷத்துக்கடியான வாத்ஸல்யாதி குணங்களொழிய உன்வடி வழகே யெனக்கு இம் மநோரதத்துக்கும் ஹேதுவென்கை. ... ... (௧௦௫)

அ.—நூற்றாறாம்பாட்டு. "நின்னவண்ணமல்லதில்லை" என்று-தாம் வடிவழகிலே துவக்குண்டபடி சொன்னார் - கீழ்; இதில் - தேவரீருடைய ஆபத்ஸகத்வத்துக்கல்லது நான்நெகிழிலும் என்னெஞ்சுவேறொன்றில் ஸ்நேஹியாதென்கிறார்.

கறுத்தெதிர்ந்தகாலநேமிகாலனோடுகூடவன்
றறுத்தவாழிசங்குதண்டுவில்லும்வாளுமேந்தினாய்
தொறுக்கலந்தவூனமஃதொழிக்கவன்றுகுன்றமுன்
பொறுத்தநின்புகழ்க்கலாலோர்நேசமில்லைநெஞ்சமே. (௧௦௬)

ப - ரை.—கறுத்து - க்ருத்தனாய், எதிர்ந்த - எதிரிட்ட, காலநேமி - காலநேமியாகிற அஸுரன், காலனொடுகூட - ம்ருத்யுவோடேகூடும்படி, அன்று - அக்காலத்திலே ப்ரஹ்மாதிகளுக்கு ஆபத்துவந்த வன்று, அறுத்த - அவனதலையையறுத்த, ஆழிசங்கு தண்டு வில்லும் வாளுமேந்தினாய் - திருவாழிதொடக்கமான திவ்யாயுதங்களை தரித்தவனே, தொறுகலந்த - பசுக்களுக்குண்டான-ஊனம் ஒழிக்க - அநுபவவிநாசமான ஆபத்தைப்போக்குகைக்காக, அன்று-பசுக்களும் இடையரும் வருந்துகிறகாலத்திலே, முன் - அவைகளுக்கு நாசம்வருவதற்கு முன்னமே, குன்றம்பொறுத்த - கோவர்த்தநத்தை யெடுத்து ரக்ஷித்த நின்புகழ்க்கலால் - உன்கல்யாணகுணத்துக்கல்லது, நெஞ்சம் - என்மநஸ்ஸுக்கு, ஓர் நேசமில்லை - ப்ராவண்யலேசமுமுண்டாகாது. (௧௦௬)

வ்யா.—(கறுத்தெதிர்ந்தகாலநேமிகாலனொடுகூட) க்ருத்தனாய் எதிரிட்ட காலநேமியாகிறவஸுரன் ம்ருத்யுவோடே கூடும்படி. இந்த்ராதிகளுடைய ஐச்வர்யத்தையும் அவர்கள்பக்கல் ஈச்வராநுக்ரஹத்தையும்பொறுதே க்ருத்தனானாய்த்து. "𑌸𑍁𑌹𑍃𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍" "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" என்கிறவிஷயத்திலேகிடீர் க்ருத்தனாய்த்து. "𑌸 𑌨𑍋 𑌬𑌨𑍍𑌧𑍁𑌃" "𑌅𑌹𑌂 𑌵𑍋 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑍋 𑌜𑌾𑌤𑌃" "ஸநோ பந்து:" "அஹம்வோபாந்தவோஜாத:" என்கிறபடியே நிருபாதிகபந்துவின் பக்கலிலேயிறே கோபித்தது. ஓரஞ்சலியாலே பொருநீராகக்கலக்கலாமவிஷயத்திலே துஷ்பரக்ரியாகையாலே எதிரம்பு கோத்து நமஸித்தானென்னை. அநுகூலித்தாரை யுன்னோடே கூட்டுகையும் ப்ரதிகூலித்தாரை யமனோடேகூட்டுகையுமிறே தேவரீர்க்கு ஸ்வபாவம். (அன்று) காலநேமியாலே இந்த்ராதிகளுக்கு ஆபத்து வந்தவன்று. (அறுத்தவாழிசங்குதண்டுவிலலும்வாளுமேந்தினாய்) ஸபரிகரனான காலநேமியைத் தலையையறுத்த திருவாழி தொடக்கமான ஸ்ரீபஞ்சாயுதங்களை தரித்தவனே. திருவாழியாலே அவன்தலை யறுப்புண்டபின்னும் தேவர்களுக்கு என்னவிரோதம் வருகிறதோ! என்று, "கைகழலாநேமியான்" என்கிறபடியே திவ்யாயுததரனாயிருக்கிறபடி.

(தொறுக்கலந்த வூனமஃதொழிக்க) இந்த்ராதிகளுக்கு அஸுரனால் வந்த ஆபத்தைப்போக்கினபடி சொல்லிற்று-கீழ், இந்த்ரனால் பசுககளுக்கும் இடையர்க்கும்வந்த ஆபத்தைப்போக்கின படி சொல்லுகிறதுமேல். பசுக்களுக்கு அநுபவவிநாசமான ஆபத்தைப்போக்குகைக்காக. அஸுரர்களால் வந்த ஆபத்துக்கு ரக்ஷயமான இந்த்ரனால் வந்த ஆபத்தாகையாலே அநுபவித்தேயறுமாய்த்து. (அன்று) "𑌗𑍋𑌗𑍋𑌪𑍀𑌜𑌨𑌸𑌙𑍍𑌕𑍁𑌲𑌮𑌤𑍀𑌵𑌾𑌰𑍍𑌤𑌮𑍍" "கோகோபீஜநஸங்குலமதீவார்த்தம்" என்கிறதசையிலே. தொறு - பசு. (குன்றமுன் பொறுத்த நின்புகழ்க்கலால்) கோவர்த்தநத்தை தரித்து ரக்ஷித்த வுன்கல்யாண குணத்துக்கல்லது.

இந்த்ரன் ப்ராதிகூல்யத்தில் வ்யவஸ்திதனல்லாமையாலே, அழிச்செய்யும், திவ்யாயுதங்களுண்டாயிருக்கத் தன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்தை மலையெடுத்து நோக்கினானென்கை. "முன்" என்கிறது - ஒருத்தருக்கு நோவுவருவதற்கு முன் பென்கை. "வரை முனேந்தும்" என்று - அவன் அநாயாஸேந தரிக்கச்செய்தேயும், அவன் ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்து "பொறுத்த" என்கிறார் இவர். (ஓர்நேசமில்லை நெஞ்சமே) வ்யத்யந்தரத்திலாதல், குணாந்தரத்திலாதல் எனக்கு ப்ராவண்யம் ஸம்பவிக்கிலும் என் மநஸ்ஸுக்கு ப்ராவண்யலேசமில்லை. ஆக, ப்ரயோஜநாந்தரபரரான இந்த்ராதிகளுடைய ஆபத்தை ஆயுதத்தாலே யழித்தும், ஸ்வாபிமாநத்துக்குள்ளே கிடக்கிற பசுக்களுக்கு மிடையருக்கும் வந்தவாபத்தை மலையையெடுத்து ரக்ஷித்தும், இப்படியால் வந்த உன்னாபத்ஸகத்வத்துக்கல்லது என்னெஞ்சுக்கு வேறொரு ஸ்நேஹமில்லையென்ற தாய்த்து. ... ... (ச0கூ)

நூற்றேழாம்பாட்டு.கீழிரண்டுபாட்டாலே-தமக்கும்தம்முடையதிருவுள்ளத்துக்கு முண்டானபகவத்ப்ரேமத்துக்கடியான வடிவழகையும் ஆபத்ஸகத்வத்தையும் பேசினார்; இதில் - அந்தஸங்கவிரோதியான ப்ரபல ப்ரதிபந்தகங்களை ப்ரபலரான அஸுரர்களை யழியச்செய்தாப்போலே போக்கின வுன்திருவடிகளுக்கல்லது வேறொருவிஷயத்தில் நான் ஸங்கம் பண்ணேனென்கிறார்.

காய்சினத்தகாசிமன்னன்வக்கரன்பவுண்டிரன்
மாசினத்தமாலிமான்சுமாலிகேசிதேநுகன்
நாசமுற்றுவீழநாள்கவர்ந்தநின்கழற்கலால்
நேசபாசமெத்திறத்தும்வைத்திடேனெம்மீசனே. (க0எ)

ப - ரை.—எம்மீசனே - எனக்கு நிர்வாஹகனானவனே; காய் - ஸாத்விகரைக்கொன்றல்லது நில்லாத, சினத்த-கோபத்தையுடைய, காசிமன்னன்-காசிராஜனும், வக்கரன் - தந்தவக்ரனும், பவுண்டிரனும் - பௌண்டகவாஸுதேவனும், மாசினத்தமாலி - மிக்ககோபத்தை யுடையனானமாலியும், மான்சுமாலி - மஹானான ஸுமாலியும், கேசி-ஸ்வர்க்கவாஸிகளான தேவர்களுக்குபாதகனான கேசியும், தேநுகன் - பசுக்களுக்கும் இடையர்க்கும் பயங்கரனானதேநுகாஸுரனும், நாசமுற்று - துக்கத்தை யநுபவித்து, வீழ - ம்ருதராய் விழும்படி, நாள் கவர்ந்த - ஆயுஸ்ஸைவாங்கின, நின்கழற்கலால் - உன்திருவடிகளி லல்லது, நேசபாசம் - பக்தியாகிற கயிற்றை, எத்திறத்தும் - எந்ததசையிலும், 'வைத்திடேன் - வையேனென்கிறார். (க0எ)